In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சம்பந்தர்

திருநெறி



பி.எஸ். சோமசுந்தரம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இந்த நூலைப் பற்றி...

திருஞானசம்பந்தர் ஒரு மெய்ஞ்ஞானக் குழந்தை; உவமையிலாக் கலை ஞானமும் திருப்பெருகு சிவஞானமும் வாய்க்கப் பெற்றவர்.

அவரது பாடல்களில் மிளிரும் மெய்ஞ் ஞானக் கருத்துகளும் சமயச் சிந்தனைகளும் இந்த நூலில் நுணுகி ஆராயப்பட்டிருக் கின்றன.

சம்பந்தரது பாடல்கள் எழுதா மறைகள். திருமறைகள் எவ்வாறு பல விளக்கங்களுக்கு இடம் தருகின்றனவோ அதுபோலச் சம்பந்தரது தேவாரமும் ஒன்றுக்கு மேற்பட்ட கோட்பாடுகளுக்கு ஊக்கமும் உரமும் அளிக்கின்றது.

"சம்பந்த வாரணத்தில் ஆழங்கால் பட்டு, ஊறித்திளைத்து ஒளிபெற்று, அதன் பின்னர் இந்நூலை ஆசிரியர் அழகிய தமிழில் வடித்திருக்கிறார்.''

"நீள நினைந்து நன்முறையில் உரு அமைத்து இவ்வாசிரியர் படைத்திருக்கும் இந்நூல், இதுவரையில் இதுவே முதலானது என்று அமரர் சிவராமன் கூறி யிருப்பதிலிருந்தே இவ்வாசிரியர் பெருமை நமக்குப் புலனாதல் வேண்டும்.''

- சேக்கிழார் அடிப்பொடி
திரு. டி.என். ராமச்சந்திரன்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

C.S.S.

சம்பந்தர்

திருநெறி



பேராசிரியர் டாக்டர் பி.எஸ். சோமசுந்தரம்,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சம்பந்தர் திருநெறி

பேராசிரியர் டாக்டர் பி.எஸ். சோமசுந்தரம்,
எம்.ஏ; பி.எச்.டி; டிப்ளமோ (மானிடவியல்)
முதல்வர் (ஓய்வு),
து. கோ. வைணவக் கல்லூரி, சென்னை,
சி.டி.எம். கலை, அறிவியல் கல்லூரி, சென்னை.

வர்ஷன் பிரசுரம்
33/4 (15/4), ராமநாதன் தெரு,
தி. நகர், சென்னை – 600 017.
தொலைபேசி : 24340599

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நூற்குறிப்பு

நூற்பெயர்	:	சம்பந்தர் திருநெறி
ஆசிரியர்	:	டாக்டர் பி.எஸ். சோமசுந்தரம்
உரிமை	:	ஆசிரியருக்கு
வர்ஷன் முதற்பதிப்பு	:	அக்டோபர், 2009
பொருள்	:	தத்துவமும், சமயமும்
மொழி	:	தமிழ்
அளவு	:	டெம்மி 1 × 8
பக்கம்	:	xxx + 282 = 312
விலை	:	ரூ.140.00
அட்டைப்பட ஓவியம் பிற ஓவியங்கள்	:	ஓவியர் ஜெ. பாலாஜி
நூலாக்கம் கட்டமைப்பு	:	எல்.கே.எம். கம்ப்யூட்டர் பிரிண்டர்ஸ், சென்னை - 17 ✆ 24361141
அச்சு	:	ஸ்வாதி கிரியேஷன்ஸ், சென்னை-5
வெளியீடு	:	வர்ஷன் பிரசுரம் 33/4, ராமநாதன் தெரு, தி.நகர், சென்னை – 600 017. தொலைபேசி : 24340599

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

காணிக்கை

என்னுடைய பேராசிரியப் பெருந்தகை.

பன்மொழிப்புலவர்,

அமரர் டாக்டர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார்
அவர்களின்

பசுமை நினைவுகளுக்குப் படைக்கும்

நன்றிக் காணிக்கை.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



‘புஜங்கராக மா நடத்தன்’

—சம்பந்தர் (1.53.8)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முன்னுரை

கனடாவின் மெக்மாஸ்டர் பல்கலைக்கழகம் சமய ஆராய்ச்சித்துறையின் முன்னாள் பேராசிரியர், அமரர் டாக்டர் கிருஷ்ண சிவராமன்
Tirujñāna Sambandhar, Philosophy and Religion
என்னும் ஆங்கில நூலுக்கு அளித்த முன்னுரையின் சில பகுதிகள் இங்கு தமிழில் தரப்பட்டுள்ளன.

இந்தப் புத்தகம் 'திருஞான சம்பந்தர்: மெய்ஞ்ஞானமும் சமயமும் என்ற தலைப்பில் ஆராய்ச்சி நிகழ்த்தியிருக்கிறது. அதற்கு வேண்டிய ஆதாரங்களை நாடித் தேடுவதோடு சம்பந்தரின் மெய்ஞ்ஞானச் சமயச் சிந்தனைகளைத் தெரிந்துணர்ந்து கூறமுற்படுகிறது.

பக்தி இலக்கியங்கள் சமயச்சார்புள்ளவை. அவைகளை வரலாற்று முறையிலும் ஆராயலாம்; சமுதாய இயல் வழியாகவும் அணுகலாம். பெரும்பாலும் மேலைநாடுகளில் இந்த முறைகள் பின்பற்றப்படுகின்றன. ஆனால் இங்கே வழங்கும் இலக்கிய, மொழி மரபுகள் வழியாக ஆராய்ந்தால் அவைகளைப் புரிந்து கொண்டு சுவைக்க முடியும். இந்தப் புத்தகம் அவ்வாறு ஆராய்வதற்கே முயலுகிறது.

இங்கே ஒன்றைக்குறிப்பிட வேண்டும். இதன் ஆசிரியர் எதையெல்லாம் சொல்லக் கூடாதோ அதைச் சொல்லுவதைத் தவிர்த்திருக்கிறார். எதைச் சொல்லித்தான் ஆக வேண்டுமோ அதைத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார். அதற்காக அவரது முயற்சியைப் பாராட்டவேண்டும்.

புத்தகத்தின் மையப்பொருளாக விளங்குபவர் திருஞானசம்பந்தர். அவர் தம்மைப் பற்றியும் தமது சிந்தனைகள் குறித்தும் நூற்றுக்கணக்கான பாடல்களில் கூறிச் சென்றிருக்கிறார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சங்கரர் சம்பந்தரைத் 'திராவிட சிசு' என்றே விவரித்துள்ளார். சம்பந்தரும் தம்மைத் 'தமிழ் ஞானசம்பந்தன்' என்றே அழைத்துக் கொள்கிறார்.

இந்தப் புத்தக ஆசிரியரின் அணுகுமுறை பெரும்பாலும் 'மெய்ஞ்ஞான – மெய்யுணர்வு இயல்முறையையே பின்பற்றி நடக்கிறது. ஆசிரியரின் உள்ளுணர்வுச் சிந்தனைகள் பல மிகச் சிறப்பாக வெளியிடப்பட்டிருக்கின்றன. அவற்றைக் கண்டுணர்ந்து படிப்பது மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

நூலின் தொடக்கம், அன்று வழங்கிய இலக்கிய வண்ணக்கோலங்களை அழகுபடக் காட்டுகிறது. சேக்கிழாரின் **பெரிய புராணம்** மரபுச் செய்திகளைச் சீர்செய்து ஒரு நம்பகத்தன்மையை எடுத்துக்காட்டியிருக்கிறது என்பதனை இந்தப் புத்தகம் தெளிவாகக்காட்டியிருக்கிறது. 'தேவாரம்' என்ற சொல் சமயகுரவர் மூவர் முதலிகளின் பதிகங்களைக் குறிப்பதோடு அச்சொல்லிற்குள்ள பலவேறு நுட்பமான பொருள்களையும் தருகின்றன.

சம்பந்தரது வாழ்க்கையைக் கூறும்பகுதி '**பெரிய புராணத்தை**' மிகவும் திறம்படவும் கைவண்ணத்துடனும் எடுத்தாண்டிருக்கிறது. சம்பந்தரின் வாழ்க்கைப்படத்தைப் **பெரியபுராணம்** எந்த அளவிற்குச் சீராகச் சித்திரித்துக் காட்டுகிறதோ அதற்கு நிகராகவே இந்தப் புத்தகமும் **பெரியபுராணச்** செய்திகளைச் சிறப்புறக் காட்டுகிறது.

சம்பந்தர் இம் மண்ணில் வாழ்ந்தகாலம் மிகவும் குறுகியது. ஆனால் அதில் மிகப் பெரிய நிகழ்ச்சிகள் இடம் பெற்றிருக்கின்றன. இப்புத்தகத்தில் அவைகள் செம்மையாக ஆராயப்பட்டு வியக்கத்தக்க முறையில் முழுமையாகத் தரப்பட்டுள்ளன. மிக நுட்பமான அரிய உணர்வுகள் திறமையோடு இழைத்துக் காட்டப்பட்டுள்ளன.

சம்பந்தருடைய 'மெய்ஞ்ஞான'த்தை ஆராய்கிற பகுதியில் அவருடைய பாடல்களில் அவரே கூறியுள்ள செய்திகளை அப்படியே எடுத்தாண்டு மெய்ஞ்ஞானக் கோட்பாடுகளில் உள்ள கேள்விகளுக்கு விடை காணும் முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. அந்த வழியில்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சம்பந்தரின் மெய்ஞ்ஞானக் கொள்கையை அவரது பாடல்களின் அடிப்படையிலேயே உருவாக்கும் முயற்சியும் எடுக்கப் பட்டுள்ளது.

அவ்வாறு முயலும் பொழுது அவரை ஒரு குறிப்பிட்ட கோட்பாட்டு வட்டத்திற்குள் புகுத்திவிடக் கூடிய ஆர்வம் தவிர்க்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், எழுகின்ற வாதம் இதுதான்: சம்பந்தருடைய வாக்கிற்கிணங்க அவரது தமிழ் 'மறை இலங்கு தமிழ்' என்பதை ஏற்றுக் கொண்டால் அவரது கருத்துக்களையும் ஒன்றிற்கும் மேற்பட்ட சமயக் கோட்பாடுகளுக்கு இணங்க விளங்கிக் காட்ட இயலும். வேதங்களை (உபநிடதங்களை) வேதாந்த அடிப்படையில் விளக்கும் பொழுது முடிவு உறுதியாக அமையமுடியாமல் போகலாம். அதுபோன்றே இங்கும் (சம்பந்தர் பாடல்களிலும்) ஏற்படுவதற்கு இடம் உண்டு. ஆனால் வரலாற்று அடிப்படையில் அமைந்த பிற்காலத்தில் தோன்றிய மெய்கண்ட சாத்திரத்தின் சைவ சித்தாந்தக் கொள்கை அப்படிப்பட்டதன்று. அது சம்பந்தரது பாடல்களிலிருந்து தெளிவான ஆதாரங்களையும் ஊக்கத்தையும் பெற்றிருப்பதை ஒதுக்கிப்பார்க்க இயலாது.

'இயற்கை, உயிர்கள், இறைவன்' பற்றிப் பேசும் பகுதி 'இப்படியும் முடியுமா?' என்று நம்பமுடியாத அளவிற்கு அளவிலும் சரி; தரத்திலும் சரி, முற்றிலுமாகத் துருவி ஆராய்ந்து எழுதப்பட்டிருக்கிறது.

சம்பந்தருடைய பாடல்கள் அத்தனையும் நுணுகி ஆராய்ந்து எளிதில் விளக்கமுடியாத, மாறுபாடுள்ளதைப் போல் தோன்றுகிற இலைமறைகாய் போல் பொருள் பொதிந்துள்ள பல சொற்களுக்கு இங்கே விளக்கம் காணப்பட்டுள்ளது. பொதுவாக, வாதங்களை எடுத்துப் பேசும் போக்கும், கருத்துகளைப் புரிய வைக்கும் திறமையும் பாராட்டத்தக்கவை.

சமயத்தைப் பற்றி ஆராயும் பகுதியில் புராணச் செய்திகளைக் கூறும் சம்பந்தருடைய மொழியின் அழகும் இன்னோசையும் ஆற்றலும் மிகச்சிறப்பாகத் திகழ்கின்றன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

புராணச் செய்திகள் பல கோயில்களில் கொலுவிருக்கும் கலைகளிலும் சிற்பங்களிலும் முழுமைபெற்றுப் பொலி கின்றன.

ஆலய வழிபாடு சமய நெறியின் மையப்புள்ளியாக விளங்குகின்றது. ஆலயங்கள் பொதுமக்களின் சமுதாயப் பொருளாதார வாழ்வின் உயிர்நாடியாக அமைந்திருந்தன. இங்கே ஆலயவழிபாடுபற்றிச் சுருக்கமாக ஆனால் அழகு ஒளி மிளிரக் கூறப்பட்டுள்ளது.

ஐந்தாவது பகுதி இசை எவ்வாறு சம்பந்தரின் கவிதைக்கு உயிர்நிலையாகத் திகழ்கிறது என்றும், அந்தத் துறையில் சம்பந்தரின் அளப்பரிய சாதனைகள் பற்றியும் விரிவாகச் சுவைபட எடுத்துரைக்கின்றது. அவ்வாறு எடுத்துச் சொல்லும் முறையில் அமைந்துள்ள கலைச்செறிவும் கூர்மையும் விளங்கித் தோன்றுகின்றன.

இந்த வகையில் இந்தப் புத்தகத்தின் ஆசிரியர் சிலப்பதிகாரத்திற்கு அடியார்க்கு நல்லார் ஆற்றித் தந்துள்ள உரைவளத்தை நன்கு பயன்படுத்தித் தமது புத்தகத்தின் ஆழத்தையும் அகலத்தையும் அழகான முறையில் சிறப்படையச் செய்திருக்கிறார்.

பல்வேறு புதுப்புது யாப்பு வடிவங்களைச் சம்பந்தர் ஆக்கி வழங்கியுள்ள சிறப்பையும் இப்புத்தகம் இனிது விளக்குகின்றது.

சம்பந்தருடைய கவிதைகளை எடுத்துக் கையாள்வது என்பதே ஒரு மகத்தான விந்தைச் சாதனை. அதற்கு நல்ல பயிற்சியும் மொழித் திறமையும் வேண்டும்.

சம்பந்தரது பாடல்களையும் சேக்கிழாரின் பெரிய புராணத்தையும் ஆழமாகக் கற்றறிந்த ஆராய்ச்சியின் அடிப்படையில் இந்தப் புத்தகம் வெளிவருகிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மதிப்புரை

நீதியரசர் எஸ். நடராஜன்
முன்னாள் நீதிபதி, உச்சநீதிமன்றம்

அறுபத்தி மூன்று நாயன்மார்கள், தேவாரம் பாடிய மூவர் முதலிகளிலும் முதன்மை இடம் பெற்றவரான திருஞானசம்பந்தரின் பூவுலகத் தோற்றத்தைப் பற்றியும் அவருடைய மூன்றாவது வயதில் இறைவனும், உமையம்மையும் தோற்றமளித்து ஞானப்பால் ஊட்டுவித்ததையும் அதன் பிறகு சம்பந்தர் தோடுடைய செவியன் என்ற முதல் திருப்பதிகத்தினைப் பாடி அருளினார் என்ற புராணக் கூற்றையும் சைவமக்கள் அனைவரும் நன்கு அறிவர். திருகாழி நகரில் வாழ்ந்த சிவபாத இருதையர் என்ற அந்தணர் பெருந்தகைக்கும் அவரின் துணைவியார் பகவதி அம்மைக்கும் மகனாகச் சம்பந்தர் பிறந்தார் என்ற வரலாற்றுக் கூறு இருப்பினும் உண்மையிலே சம்பந்தர் திருமுருகப் பெருமானின் அவதாரமாகவே கருதப்படுகிறார். நம்பியாண்டார் நம்பி சம்பந்தரைப் “பிள்ளை” என்று பாசத்தோடு குறிப்பிடுகிறார்.

மானிடர் வயிற்றில் உருவாகிப் பிறப்பெடுத்தார் என்றபோதும் சம்பந்தர் தெய்வப்பிறவியே என்று அவருடைய பதிகங்களே நம்மை உணர வைக்கின்றன.

ஞானப்பால் ஊட்டப்பெற்ற சம்பந்தர் பாடிய முதல் பதிகத்தைப் பார்க்கும் பொழுது தோடுடைய செவியனின் தோற்றத்தைக் கூறிய பிறகு “ஏடுடையமல ரான்முனை நாட்பணிந்தேத்தவருள் செய்த பீடுடையபிர மாபுரமேவிய பெம்மானிவ னன்றே” என்று பாடியுள்ளார். இப்புவியில் தோன்றுவதற்கு முன்பே சிவபுராணம் அறிந்திராவிடில் சிவபெருமான் முப்புரம் எரித்து நான்முகனைப் பணியச்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

செய்து அருள்பொழிந்தார் என்ற திருவிளையாடலைச் சம்பந்தர் பாடியிருக்க முடியாது.

நமசிவாயத் திருப்பதிகத்தில், "வேத நான்கினு மெய்ப்பொரு ளாவது நாதன் நாம நமச்சிவாயவே" என்று கூறியிருப்பதன் மூலம் வேதங்கள் நான்கையும் நன்கு கற்றுணர்ந்து அவற்றின் மெய்ப்பொருள் என்னவென்று கூறியிருப்பதின் காரணமாக அவருக்கு இம்மண்ணில் தோன்றும் முன்னரே சிவன் அருள் பெற்று வேதங்கள் அறிவு பெற்ற "பிள்ளை" என்பது விளங்குகிறது.

சம்பந்தர் பாடிய பல பதிகங்களிலிருந்து அவருடைய இறை முத்திரையை நாம் காணலாம். இலம்பயம் கோட்டூர் பதிகத்தில் "எனது உரை தனது உரையாக" என்று பாடியதன் மூலம் தான் பேசுவதெல்லாம் இறைவனின் பேச்சாகவே அமைவதைக் குறிப்பிடுகிறார்.

சைவ நாயன்மார்களின் வரலாற்றை உலகிற்கு எடுத்து உரைப்பதற்காகத் தெய்வப் புலவர் சேக்கிழார் பெருமான் திருத்தொண்டர் புராணம் என்றும் பெரிய புராணத்தைப் புவி வாழ் மக்களுக்கு அருளித் தந்துள்ளார்கள். பெரிய புராணத்தில் பாடப்பட்ட மொத்தப் பாடல்கள் 4296-ல் 1256 பாடல்கள் சம்பந்தரின் வரலாற்றுப் பாடல்களாக அமைந் துள்ளன. அதை நோக்கின் சம்பந்தரின் தனிச்சிறப்பைச் சேக்கிழார் பெருமான் உணர்ந்ததன் காரணமாகத்தான் அவ்வாறு பாடியுள்ளார் என்பது புலனாகிறது. அதன் விளைவு "பிள்ளை பாதி புராணம் பாதி" என்ற சொல் பெரியபுராணத்தைப் பற்றி வந்துள்ளது.

இவ்வாறு ஒப்பற்ற சிறப்புகள் கொண்ட சம்பந்தர் பெருமானின் தேவாரப் பதிகங்களின் பல்வேறு சிறப்புகளையும், தத்துவங்களையும், சித்தாந்தங்களையும் உலகில் வாழும் சைவப் பெருமக்கள் அனைவரும் அறிய வேண்டும் என்ற உயர்ந்த எண்ணத்தில் இந்நூலை உருவாக்கிய பேராசிரியர் முனைவர் பி.எஸ். சோமசுந்தரம் அவர்கள் சில வருடங்களுக்கு முன்பு ஒரு திறனாய்வு நூலை ஆங்கிலத்தில் வெளியிட்டார்கள். அந்நூலை இந்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நாட்டவர்கள் மட்டுமன்றி அமெரிக்கா, கனடா போன்ற மேலை நாடுகளிலும் உள்ள சைவப் பெருமக்களும் படித்து பயன் பெற்றுள்ளார்கள். அந்தப் போற்றத் தக்க பணியின் தொடர்ச்சியாக இப்பொழுது பேராசிரியர் அவர்கள் தெய்வத் தமிழ் மொழியில் அளிக்க முன் வந்துள்ளார்கள். நூலில் கடைப் பிடித்துள்ள புதிய அணுகுமுறையுடன் கூட நூலாசிரியரின் திறனாய்வு சம்பந்தர் தேவாரத்தில் அடங்கியுள்ள மெய்ஞானதத்துவங்களையும், சமயக் கருத்துக்களையும் தெளிவுபடுத்துவது ஒரு புதுமையான முயற்சி; ஒரு போற்றத்தக்க பணி.

இந்நூல் ஆறு பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளது. அப்பகுதிகளிலே முதல் பகுதியில் சம்பந்தரின் மெய் ஞானத் தத்துவங்களையும், சமயக் கருத்துக்களையும் ஆராய்ந்து ஆராய்ச்சிக்கு அடிப்படை ஆதாரங்கள் சொல்லப் பட்டுள்ளன. இரண்டாவது பகுதியில் சம்பந்தரின் வாழ்க்கை வரலாறு கூறப்பட்டுள்ளது. மூன்றாவது பகுதியில் சம்பந்தரின் மெய்ஞானத் தத்துவம் விரிவாகக் கூறப் பட்டுள்ளது. நான்காவது பகுதியில் சம்பந்தரின் சமயக் கோட்பாடுகள் விளக்கப்பட்டுள்ளன. ஐந்தாவது பகுதியில் சம்பந்தர் சமுதாய நலனுக்காகச் செயல் ஆற்றியது கூறப்பட்டுள்ளது. ஆறாவது பகுதியில் சம்பந்தரின் சமய உணர்வுகளின் பேரகலம் காட்டப்பட்டுள்ளது.

இந்நூலை ஆசிரியர் நமக்கு வழங்கியதின் காரணமாக, சம்பந்தப் பெருமானின் பதிகங்களில் காணும் பல்வேறு பொக்கிஷங்களை நாம் ஓர் புதிய பார்வையிலும் புதிய சிந்தனை வழியிலும் படித்துப் பயன்பெற அது வகை செய்துள்ளது.

இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்
ததனை அவன்கண் விடல்

என்ற வள்ளுவரின் கூற்றிற்கேற்ப வணக்கத்திற்குரிய தருமை ஆதீனம் அவர்களும், அமரர் முனைவர் தெ.பொ. மீனாட்சி சுந்தரனாரும் நூல் ஆசிரியருக்கு இந்தப் பணியைச் செய்யுமாறு அறிவுரை கூறியதின் பயனாக நூல் ஆசிரியர்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அவர்கள் இந்தப் பயனுள்ள நூலை உலகுவாழ் தமிழ் மக்களுக்கு, குறிப்பாகச் சைவ முறையை பின்பற்றுபவர் களுக்கு வழங்கியுள்ளார்கள். இந்த அரிய பணிக்காகத் தமிழ் கூறும் நல்லுலகம் பேராசிரியர் பி.எஸ். சோமசுந்தரம் அவர்களுக்கு நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளது.

இந்நூலிற்கு முன்னுரை வழங்க எனக்கு வாய்ப்பு கொடுத்தமைக்கு நூல் ஆசிரியருக்கு என்னுடைய உளம்கனிந்த நன்றி.

நீதியரசர் எஸ். நடராஜன்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அணிந்துரை

வித்யாவாசஸ்பதி, சிலைமீட்ட செம்மல்,
கலைமாமணி, டாக்டர் இரா. நாகசாமி
(உலகப் புகழ்பெற்ற தொல்பொருள் ஆராய்ச்சி வல்லுனர்.)

'சம்பந்தர் திருநெறி' என்னும் இந்நூலை இயற்றித் தமிழகத்தில், தரணியில், சிவம் பெருகப் பிறந்த பிள்ளையான திருஞானசம்பந்தப் பெருமானின் பெருநெறியை ஆய்ந்து, அனுபவித்து, அன்பு உந்த அனைவரும் தாம் பெற்ற இன்பத்தைப் பெற வேண்டும் என இந்நூலை அச்சிட்ட அன்பர் சோமசுந்தரம் அவர்களின் அன்புக் கட்டளைக் கிணங்க இவ்வுரை தோன்றலாயிற்றே அன்றி இவ்வுரை எழுதும் ஆற்றலோ, ஆழ்ந்த புலமையோ எனக்கில்லை எனில் மிகையல்ல. திருஞானசம்பந்தப் பெருமான் இசையால் பாடி நமக்கு வகுத்துள்ள நெறி யாது? அதன் பின்னணியான தத்துவங்கள் யாவை? அவர் வகுத்த சைவத்தின் தன்மை என்ன? இது எவ்வாறு எல்லோருக்கும் ஒக்கும் என எண்ணி, அவரது தேவாரப் பாடல்களைச் சிந்தித்து, உரிய வரிகளைத் தேர்ந்தெடுத்து, இதோ சம்பந்தர் கூறியுள்ள வழிக்குச் சான்று! காலத்தால் பின்ஆனவை என நாம் நினைத்ததெல்லாம் சம்பந்தரே தெளிவுற உரைத்துள்ளதைப் பாரும்! அவர் கூறுவது வைதிக சைவம் தான். தென்தமிழ் நாட்டின் மரபைப் பிரதிபலிப்பதுதான். இவை தென்னாட்டிற்கு மட்டுமல்ல. எந்நாட்டவருக்கும், எக்காலத்தவர்க்கும், எச்சமயத்தவர்க்கும் ஏற்றவைதான்! என எழிலுற எடுத்தியம்பும் ஆசிரியரின் ஆற்றலை வியக்காமல் இருக்க இயலாது.

தேவாரப் பதிகங்களிலே இன்று நேற்றல்ல, பல்லாண்டுகள் ஆழ்ந்து தோய்ந்து தாம் பெற்ற அனுபவத்தை அப்படியே இந்நூலில் கொட்டி வடித்துள்ளார் ஆசிரியர்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

என்பது படிக்கும் ஒவ்வொரு பக்கத்திலும் புலப்படுவதைக் காண்கிறோம்.

"திருஞானசம்பந்தர் இறைவனது திருவருளை முற்றிலும் உணர்ந்து அனுபவித்தவர். அவருடைய பாடல்கள் எல்லாம் அவருடைய உணர்வின் வெளிப்பாடுகளே. 'எனது உரை தனது உரையாக' என அவர் தனது இலம்பையங்கோட்டூர் பதிகத்தில், தான் பேசுவதெல்லாம் இறைவனின் பேச்சாகவே அமைவதைக் குறிப்பிடுகிறார்" என்று ஆசிரியர் சம்பந்தப் பெருமானைப் பற்றி எழுதியுள்ளது ஆசிரியரின் இந்நூலுக்கும் ஒக்கும் எனில் அது தவறில்லை.

இந்நூலில் ஒரு சிறந்த பண்பையும் காணலாம். முன்னர் ஆய்ந்த அறிஞர்களையோ, எழுத்தாளர்களையோ, கருத்து வேறுபடும்போது, சாடுவதில்லை. அவ்வக்கருத்துக்களைக் கூறி, தமது கருத்தை மட்டும் கூறிச் செல்வது இவரது எழுத்தில் உள்ள தனிச் சிறப்பே எனலாம்.

எடுத்துக்காட்டாக, தேவாரம் என்ற சொல்லை ஆயுமிடம். பிற கருத்துக்களை மட்டும் எடுத்துரைத்து, தமக்கு ஏற்புடைய கருத்துக்களை முன் வைக்கிறார். 'தேவாரம் என்பது தெய்வத்துக்குச் சூடும் பாமாலை' என்பது ஒன்று. மற்றது 'வாரம்' என்பது ஒருவகைப் பாடல். சொல் வளமும், இசை நயமும், ஒலி நயமும் உடையது; தெய்வத்துக்கு அன்புடன் இசைக்கப்படுவது என எடுத்துக்காட்டுகிறார். அதே சமயம் தேவாரம் என்பது சோழர்காலத்தில் "தெய்வத்தை வழிபடும் இடம்" என்று முதலில் இருந்தது என்பதையும் காட்டுகிறார். "ஆகாரம்" என்ற வடமொழிச் சொல்லுக்குக் கட்டிடம் என்ற ஒரு பொருள் உண்டு. எடுத்துக்காட்டு, கோட்டாகாரம் என்பது கோட்டாரம் என்றும் வழங்கப்பட்டது. அதுபோல் தெய்வவழிபாட்டுக்குக் கட்டப்பட்ட ஒரு பகுதியை தேவாகாரம் என்றும் தேவாரம் என்றும் சோழர் காலத்தில் வழங்கியிருக்க கூடும். அதுபோல் வடமொழியில் செய்யுள் வடிவை "பத்யம்" என்றும் வசன நடையை "கத்யம்" என்றும் நூல்கள் கூறுகின்றன. "பத்யம்" என்ற சமஸ்கிருதச் சொல் "பதியம்" என்று அழைக்கப்படுதல் பொருத்தமானதாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இந்நூலாசிரியர் சம்பந்தரின் வாழ்க்கைக் குறிப்பை ஆய்கிறார். சிறப்பாக, சம்பந்தர் மேற்கொண்ட தலயாத்திரைகளைத் தொடுத்து நயம்பட உரைக்கிறார். சேக்கிழார் தமது பெரியபுராணத்தில், சம்பந்தரின் பிறப்பைக் கூறுமிடத்து, அகிலசராசரங்களிலும், சிவம் பெருகச் சண்பை நகரில் பிள்ளையார் திருஅவதாரஞ் செய்தார் என்று

தவம் பெருகும் சண்பையிலே தாவில் சராசரங்கள் எல்லாம்
சிவம் பெருக்கும் பிள்ளையார் திரு அவதாரஞ் செய்தார்

என்கிறார். எனவே ஞானசம்பந்தரின் பிறப்பும் வாழ்க்கையும் உலகெல்லாம் சிவம் பெருக்க (மங்கலம் சிறக்க) சைவம் தழைக்கத் தோன்றியதே என்பது தெளிவாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. சம்பந்தப் பெருமான் போற்றிய சைவம், வைதிக சைவம் தான் என்பதைப் புலப்படுத்தச் சேக்கிழார் அவர் பிறந்த சீர்காழிப்பதியின் ஒவ்வொரு அங்கத்திலும், இயற்கைச் சூழலிலும் வேதமும், வேதவேள்வியும், வேதக் கிரியைகளுமே பிரதிப்பலிப்பதைப் பிள்ளையாரின் பிறப்புக்குப் பின்னணியாகவே காட்டுகிறார். இவ்வாறு எடுத்துரைக்கும் சேக்கிழார், சம்பந்தரின் பிறப்பின் மூலமாகவே அவரது வாழ்வின் குறிக்கோளையும், நெறிகளையும் "சைவமும் வைதிகமும் தழைத்தோங்க", "அந்தணர் ஆகுதி பெருக, வண் தமிழ் செய்தவம் நிரம்பவும்", "திசை அனைத்தின் பெருமை எல்லாம் தென்திசையே வென்று ஏறவும்", "அசைவில் செழுந்தமிழ் வழக்கே அயல் வழக்கின் துறை வெல்லவும்", "இசை முழுதும் மெய்யறிவும் இடங்கொள்ளும் நிலை பெருகவும்" பிறந்தார் எனச் சேக்கிழார் கூறுவது சம்பந்தரின் அனைத்துச் சிறப்பையும் அழகுடன் எடுத்துரைத்த பாங்காகும். வடமொழியும் தென்மொழியும் இணைந்தே சம்பந்தர் வாழ்வில் வெளிப்பட்டன. தமிழுக்குத் தனிப்பெருமை அதனால் சேர்ந்தது. மெய்ஞானத்தை இசை வாயிலாகவே வெளிப் படுத்தியது எனக்கண்டால் அதுவே சம்பந்தரின் நெறியை அறிந்ததாகும். இந்நூலாசிரியர் இவற்றை மனத்தில் கொண்டு நூலை யாத்துள்ளதைக் காண்கிறோம். இதனைத் தெளிவாக

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வேத வேள்வியை நிந்தனை செய்துழல் ஆதமில்லி
அமணொடு தேரரை
வாதில் வென்றழிக்கத் திருவுள்ளமே

(ப.50) என்ற எடுத்துக்காட்டின் மூலம் காட்டுகிறார். ஆயினும் இச்செயல் சிவபெருமானின் புகழையே நாளும் மிகுதியாக்க மேற்கொண்ட திருவருள் என்கிறார்.

சம்பந்தரின் மெய்ஞ்ஞானக் கோட்பாடு தான் இந்நூலில் மேலோங்கி நிற்கிறது. "சம்பந்தருக்கு ஆலயம் என்பது வெறும் வழிபாட்டுத்தலம் மட்டுமில்லை. ஒவ்வொரு கோயிலின் பின்புலத்திலும் இயற்கை சித்திரத் திரைச்சீலை போல் மனித வாழ்வை தெய்வத்தோடு இணைத்து காட்டி நிற்கிறது" என்று பாங்குறக் கூறும் நூலாசிரியர் சம்பந்தர் பாடல்களின் சுவையை, குறிப்பாக இயற்கை வர்ணனைகள் தெய்வீக நிலையை எடுத்துக்காட்டுகின்றன என்று கூறுமிடம் படித்துப் படித்து இன்புறத்தக்கது (ப–65–75). இயற்கையின் நகைச் சுவையை இனிக்க எடுத்துரைக்கிறார்.

தமிழ்ச் சைவ மரபில் ஆகமங்கள் எவ்வளவு இன்றியமையாத நிலை வகித்தன என்பதை நேர்முகமாகவும் வெளிப்படையாகவும் ஒவ்வொரு பதிகத்திலும் காணலாம். சம்பந்தர் "ஆகமம்" என்றே பல இடங்களில் குறிக்கிறார். ஆசாரம், நாள் வழிபாடு, நாள்விழா, திங்கள் விழா, தேர்விழா, போன்றவற்றையும் பாடுகிறார். திருமயிலைப் பதிகத்தில் ஒவ்வொரு மாத விழாவையும் குறிப்பிடுவது ஆகம விழாக்களைத்தான் என்பதில் எந்த ஐயமும் இருக்க முடியாதல்லவா? அதேபோல் ஆகம வழிப்படியே தத்துவங்கள் சம்பந்தரால் பாடப்படுகின்றன. ஆதலின் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கு ஆகம அடிப்படைகளை சோமசுந்தரம் நன்கு சுட்டிக்காட்டி யுள்ளார். ஆசிரியர் திருப்பாசுரத்தைப் பாடல் பாடலாக் ஆய்ந்துள்ளது சிறப்பாகவே உள்ளது.

அகத்துறைப் பாடல்களை ஆயும்போது இறைவனைத் தலைவனாகவும், ஆன்மாவைத் தலைவியாகவும் வைத்துப் பாடும் மரபைச் சித்திரிக்கிறார். ஆசிரியர் அங்கு "ஆன்மக்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

காதலி” என்று அழைத்திருப்பது பண்புடனும் பாங்குடனும் உள்ளது.

இந்நூலைப்பற்றி மிகப்பெரிய கட்டுரையே எழுதலாம். இந்நூலே பெரும்கட்டுரை தானே! முன்னரே ஆங்கிலத்தில் சம்பந்தப்பெருமானைப் பற்றி நூல் எழுதிச் சிறப்படைந் துள்ள இவரது இந்நூல் தமிழ் உலகுக்குப் பயனுடையதாம் என்பதில் ஐயமில்லை.

டாக்டர் இரா. நாகசாமி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பாராட்டுரை

சேக்கிழார் அடிப்பொடி,
டாக்டர் திரு. தி.ந. இராமச்சந்திரன், D.Litt.,
கௌரவ இயக்குனர்,
அனைத்துலகச் சைவசித்தாந்த ஆராய்ச்சி நிறுவனம், தருமபுரம்.

தெய்வச் சேக்கிழாரின் பிள்ளைத் திருநாமம் இராமதேவர் என்று திருமழபாடிக் கல்வெட்டு ஒன்று அறிவிக்கின்றது. இச்செய்தியை வெளியிட்டவர் ப்ரம வைணவரான திரு.மு. இராகவ ஐயங்கார் ஆவார். சில தலங்கள் தேவாரத்தலங்கள் என்று தவறுதலாக அறிவிக்கப் பட்டன. இதுவகையில் உண்மையான தலங்களைக் கண்டறிந்து அறிவித்தவரும் அப்பெருந்தகையே.

திருத்தொண்டர் புராணம் எனப் பெயரிய பெரிய புராணத்தின் அரங்கேற்றம் தில்லையில் கி.பி. 1139, ஏப்ரல் மாதம் நான்காம் நாள் தொடங்கி கி.பி. 1140, ஏப்ரல் 22ஆம் நாள் அன்று முற்றுப்பெற்றது. ஆதிரைநாளில் தொடங்கி ஆதிரைநாளில் இவ்வரங்கேற்றம் நிறைவுற்றது. இச்செய்தியை நமக்கு வழங்கியவர் கல்வெட்டு ஆய்வாளர் அமரர் குடந்தை சேதுராமன் அவர்கள்.

பன்னிரு திருமுறைகளின் மணிமுடி நூல் பெரிய புராணம். அடியார்களின் வரலாற்று நூலை Hagiography என்பர். பெரியபுராணத்தை ஒத்த வரலாற்று நூல் உலகில் வேறெங்கும் இல்லை. இது உண்மை; வெறும் புகழ்ச்சி இல்லை.

திவ்வியப் பிரபந்தத்திற்கு அற்புத வியாக்கியானங்கள் பல உள்ளன. என்றாலும் பெரியபுராணம் போல் ஒரு நூல் வைணவத்திற்கு வாய்க்க வில்லையே என்று கலுழ்ந்து கூறியவர் பெரும்புலவரான இரா. இராகவ ஐயங்கார்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அவர்கள். பெரியபுராணத்திற்கு இணையான நூல் எங்குமில்லை. பெரியபுராணத்தின் உதவியின்றித் திருமுறைகளை, சிறப்பாகத் தேவாரத்தைப் பயிலுதல் இயலாது என்று தமிழ் நன்கறிந்த பிரஞ்சு மொழியாளர் குரோ (Gros) தெளிவாகக் கூறியிருக்கிறார்.

வால்மீகி, வியாசர், பதஞ்சலி, அகத்தியர் ஆகிய இவர்களும் சேக்கிழார் பெருமானை ஒத்தபுலவர்கள் ஆகமாட்டார்கள் என்று உமாபதிசிவம் அருளியுள்ளார்.

மதுர இராம யண கதை உரை செய்த
வான்மீக பகவனும் ஒப்பல்லன்,
விதிவழி பாரதம் உரைசெய்து கரை செய்த
வேத வியாதனும் ஒப்பல்லன்
சிதைவற ஆயிர நாவுடன் அறிவுள
சேட விசேடனும் ஒப்பல்லன்
பொதியமலைக் குறு முனிவனும் ஒப்பல்லன்
புகழ்புனை குன்றை முனிக்கு...

சைவ சமய குரவர் நால்வர். அவர்களுள் முதல் இடம் பெற்றவர் திருஞான சம்பந்தர். நால்வரில் ஒருவரான மாணிக்கவாசகர் அறுபான் மூவருள் ஒருவர் அல்லர். ஏனைய மூவரின் சரித்திரங்களைப் பெரியபுராணம் விரிவாகவே பாடியிருக்கிறது 1256 பாடல்களால் கொண்ட சரித்திரமே திருஞானசம்பந்தர் புராணம்.

சம்பந்த சுவாமிகள் பற்றி ஒருசில நூல்களே ஆங்கிலத்தில் வெளிவந்துள்ளன. ஆனால் அப்பெருமானின் பெருமையைப்பற்றி மாணவர்களும் உணர்ந்து கொள்ளல் வேண்டும் என்று பண்டு நம்மை ஆண்ட வெள்ளையரும் கருதினர்.

'திருமங்கை ஆழ்வாரும் திருஞானசம்பந்தரும்' என்ற தலைப்பில் ஒருசிறு ஆங்கிலநூல் உருவாக்கப்பட்டு, அதை ஆறாம் வகுப்பு மாணவர்களுக்குத் துணைப்பாட நூலாக அமைத்தனர். லாங்மென்ஸ் நிறுவனம் இந்நூலை 1928இல் வெளியிட்டது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸ்ரீலங்காவைச் சார்ந்த சைவ அன்பர் சபாரத்தினம் அவர்கள், சம்பந்தப் பெருமானின் வரலாற்றை ஆங்கிலத்தில் அமைத்து 1920 ஆம் ஆண்டு வெளியிட்டார். முனைவர் செளந்திரா, சம்பந்தப் பெருமான் பாடல்களை ஆய்வுசெய்து, ஆங்கிலத்தில் அமைத்த நூல் 1979இல் வெளிவந்தது.

மேற்சொன்ன நூல்கள் எல்லாவற்றையும் விஞ்சும் வகையில் பேராசிரியர், முனைவர் பி.எஸ். சோமசுந்தரம் அவர்கள் 1986இல் சம்பந்தப்பெருமான் (தத்துவக் கோட்பாடும் சமயமும்) என்ற ஆங்கில நூலை வெளி யிட்டார். சைவ சித்தாந்தத் துறையில் அமரர் கிருஷ்ண சிவராமன் ஒரு தனிச் சிறப்போடு விளங்கியவர். அப்பெரியவர் மேற்சொன்ன நூலை எழுத்தெண்ணிப் படித்துப் பரவசப் பட்டனர்; நூலுக்குரிய அறிமுகத்தைத் தாமே முன் வந்து இயற்றித் தந்தனர். இவ்வாங்கில நூல் தமிழாக்கம் பெறுதல் வேண்டும் என்று விரும்பியோருள் யானும் ஒருவன். எங்கள் எண்ணம் இப்போது இறையருளால் ஈடேறியிருக்கிறது. ஆங்கிலத்தில் தாம் அமைத்த நூலை ஆசிரியரே தமிழிலும் தந்திருக்கிறார். மூலத்தில் விடுபட்ட நற்செய்திகள் சில இத்தமிழ் நூலில் இணைக்கப்பட்டிருக் கின்றன. நல்ல முறையில் செப்பம் செய்யப்பட்ட இந்நூல் சைவர் ஒவ்வொருவர் இல்லத்திலும் இடம் பெறுதல் வேண்டும்.

சம்பந்த வாரணத்தில் ஆழங்கால் பட்டு ஊறித் திளைத்து ஒளிபெற்று, அதன் பின்னர் இந்நூலை ஆசிரியர் அழகு தமிழில் வடித்திருக்கிறார்.

இவர்பட்ட பிரயாசைபற்றி ஒரு குறிப்புமட்டும் கூறுகிறேன். ஞானசம்பந்தப் பெருமான் பாடிய திருவெழு கூற்றிருக்கை என்ற பாடல் சித்திரக்கவி வகையைச் சார்ந்தது. இதை இரதபந்தமாக இவர் அமைத்திருக்கிறார். இப்பாடல் இவர் காலத்திற்கு முன்பு வெளிவந்த பதிப்புகளின்படி, “இருநிதி வாய்ந்த பூந்தராய் ஏய்ந்தனை” என்பதற்குப்பிறகு ‘வரபுரம் என்றுணர் சிரபுரம்” (வரி 30) என்று அச்சாகி யிருக்கிறது. இதுவே பாடலின் வடிவம் என்றால் சித்திரம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அமைக்கமுடியாது. ஆகவே பலநாள் சிந்தித்து, என்றுணர் என்ற தொடர் ஒன்று உணர் என்று இருத்தல் வேண்டும் என்று ஆசிரியர் சிந்தித்து முடிவெடுத்துச் செயல் பட்டிருக்கிறார். இன்னும் கூடப் பல பதிப்புகளில் 'என்று உணர்' என்ற பாடமே காணப்படுகிறது.

நீள நினைந்து நன்முறையில் உரு அமைத்து இவ்வாசிரியர் படைத்திருக்கும் இந்நூல் இதுவரையில் இதுவே முதலானது என்று அமரர் சிவராமன் கூறியிருப்பதிலிருந்தே இவ்வாசிரியர் பெருமை நமக்குப் புலனாதல் வேண்டும்.

ஆங்கிலத்தில் அமைக்கப்பட்ட நூல் ஆசிரியராலேயே தமிழில் வடிக்கப்பட்டிருப்பதை நாம் மனமாரப்பாராட்ட வேண்டும். மரபுவழியை ஏற்றும், அதே சமயத்தில் காலத்திற்கு ஏற்ப மாறிவரும் விமர்சனக் கலையை அனுசரித்தும், கவனமுடனும் பொறுப்புடனும் வரையப்பட்ட இந்நூல் ஓதுவார்க்குப் பெருமகிழ்ச்சி அளிக்கவல்லது.

இன்று தமிழில் பலப்பல நூல்கள் வெளிவந்த வண்ணம் உள்ளன. இவற்றுள் பலவற்றை நாம் படிக்க வேண்டியதே இல்லை. பல சொல்லக்காமுறுவாரும் பயனில கூறுவாரும் பல்கிப் பெருகி வருகின்றனர். இதைக் காலத்தின் கொடுமை என்றே கூறல்வேண்டும்.

ஞானசம்பந்தர் தமிழ் ஆகரர்; அவருடைய அருளிச் செயல்கள் ஆரணங்களே. இப்பெரியார் உளமே புகுந்து அவர் திருவாய் மூலம் கழக மோடமர்ந்த கண்ணுதற்கடவுள் பூதபரம்பரை பொலிதற்காக ஆதார உண்மைகளை வெளிப்படுத்தி உள்ளார். அத்தகு அருட்செய்திகளை இறையருள் கொண்டு ஈர்த்துவாங்கி முறைப்படுத்தி, அனைவரும் உளங்கொள்ளுமாறு அமைத்துத் தந்திருக்கும் ஆசிரியரை நாம் போற்றக் கடமைப்பட்டிருக்கிறோம்.

டாக்டர் தி.ந. இராமச்சந்திரன்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

எனதுரை

திருஞான சம்பந்தர் இசையில் கனிந்த ஒரு கவியோகி; ஒரு ஞானக் குழந்தை. பிள்ளைமைப் பருவத்திலே 'குஞ்சி (தலைமுடி) கூடாப் பருவத்திலேயே' சிவஞானம் வாய்க்கப் பெற்றவர்; தேனிசையில் தெய்வத்தமிழைக் குழைத்துப் பாடத் தொடங்கியவர். அவருடைய இசையும் தமிழும் தமிழக மெங்கும் சென்று கமழ்ந்தன. அதன்பயனாய்த் தமிழும் இசையும் தெய்வத்திருக்கோலம் பூண்டன; தமிழ் மக்கள் வாழும் நெறியில் சென்று ஏற்றமும் பெருமிதமும் பெற்றனர்.

சம்பந்தர் ஒரு சமயக்கணக்கர் அல்லர்; தத்துவவாதியும் அல்லர். அவர் அருளில் தோய்ந்து அருள் மயமாக நின்ற ஒரு கவிஞர். அவர் அருளால் உரைத்த இசைச் சொற்களில் மெய்ஞ்ஞானம் மிளிர்கிறது; சமயநெறி செப்பமாக அமைகிறது. அவைகளைத் தான் அவர் தம்முடைய முதல் பாட்டிலேயே (1.1.1) 'திருநெறி' என்று குறிப்பிடுகிறார்.

அந்த அடிப்படையில் இந்நூல் **சம்பந்தர் திருநெறி** என்ற பெயரைத் தாங்கி வருகிறது.

இந்தத் தமிழ்நூல் சிறப்புற, திருஞானசம்பந்தரின் தமிழும் இசையும் பாரெல்லாம் ஓங்க வேண்டுமென்றும் ஆசிவழங்கினார்கள் காஞ்சி காமகோடி பீடாதிபதி, பூஜ்யஸ்ரீ சங்கராசாரியசுவாமிகள் அவர்கள்.

பல ஆண்டுகளுக்கு முன்பாகவே திருஞானசம்பந்தரின் தத்துவ ஆராய்ச்சி நூலைத் தமிழில் தர வேண்டும் என்று எனக்கு எழுத்தின் மூலம் ஆணையிட்டார்கள் தருமை ஆதீன கர்த்தர் மகாசன்னிதானம் அவர்கள்.

இந்த இரண்டு மாமுனிவர்களின் பொன்னடிகளைத் துதித்து வணங்குகிறேன்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

என்னுடைய தகைமை சான்ற பேராசிரியர், பல்மொழிப்புலவர், பல்கலைச் செல்வர் டாக்டர். தெ.பொ. மீனாட்சிசுந்தரனார் அவர்கள் சம்பந்தர் திருநெறியை மெய்ஞ்ஞான இயலின் அடிப்படையில் ஆராய்ந்து உண்மை தெளிந்து எடுத்துக் கூற அறிவுரை வழங்கினார்கள். அவர்களது அறிவுரையைச் சிரமேற்கொண்டு என்னால் இயன்றமட்டில் இந்த ஆராய்ச்சிநூலை எழுதலுற்றேன். பேராசிரியரின் பசுமை நினைவை நெஞ்சில் நிறுத்தி வணங்குகிறேன்.

இந்த நூல் முதலில் ஆங்கிலத்தில் வடிக்கப்பட்ட போது என்மீது கொண்ட அளப்பரும் அன்பினாலும் திருஞான சம்பந்தரிடம் கொண்ட மாளாப்பற்றினாலும் தானே உவந்து முன் வந்து முன்னுரை வழங்கினார் அமரர் பேராசிரியர் கிருஷ்ண சிவராமன் அவர்கள். அதில் சில பகுதிகள் இந்நூலுக்கும் முன்னுரையாகத் தமிழில் இடம்பெறுகின்றன.

நீதியரசர், முன்னாள் உச்ச நீதிமன்ற நீதிபதி, மாண்புமிகு. திருவாளர் எஸ். நடராஜன் அவர்கள் இந்த நூலுக்கு மதிப்புரை வழங்கியிருக்கிறார்கள். அவரது பொன்னான திருவடிகளை வணங்கி நன்றி கூறுகிறேன்.

உலகளாவிய நிலையில் புகழ்பெற்றுயர்ந்த, தொல் இயல் மேதை டாக்டர். இரா. நாகசாமி அவர்கள் இந்த நூலுக்கு அமைத்துள்ள அணிந்துரை உண்மையில் இந்த நூலை அணிசெய்து சிறப்பிக்கிறது. அவரையும் நன்றியுடன் வணங்குகிறேன்.

சேக்கிழார் அடிப்பொடி, அனைத்துலக சைவசித்தாந்த நிறுவனத்தின் கௌரவ இயக்குனர், தஞ்சை வழக்கறிஞர் டாக்டர். தி.ந. இராமச்சந்திரன். D.Lit. அவர்களின் பாராட்டுரை என் நெஞ்சிற்கு உரமூட்டுகிறது. சேக்கிழாரிடத்தும் சம்பந்தரிடத்தும் அவர் கொண்டுள்ள அன்பு உண்மையில் 'ஈசன் பால்' கொண்ட அன்பே ஆகும். அவருக்கு நன்றி என்று எழுதினால் மட்டும் என் இதய உணர்வைக் காட்டிவிட முடியாது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சென்னை, விவேகானந்தா கல்லூரி, முன்னாள் தத்துவத்துறைத் தலைமைப் பேராசிரியர் டாக்டர். டி.என். கணபதி அவர்கள் இந்த நூல் வெளிவர எல்லா வகையிலும் ஊக்கமும் உரமும் ஈந்தவர். அவருக்கு என்ன சொல்லி என் நன்றியை வெளிப்படுத்துவது என்று தெரியவில்லை.

டாக்டர். கரு ஆறுமுகம், இந்த நூல் அச்சில் நுழைந்ததருணத்திலிருந்து செப்பனிட்டுச் சரிபார்த்து பிழைகள் களைந்து தூய்மைசெய்திருக்கிறார். அவருக்கு என் நெஞ்சார்ந்த நன்றி.

இந்தப் புத்தகத்திற்கு அட்டைச் சித்திரத்தையும் மற்ற படங்களையும் அழகிய வடிவ வண்ணங்களில் படைத்தளித் திருக்கிறார் இளம் ஓவியர் செல்வர் ஜெ. பாலாஜி. அவருக்கும் நூல் அழகான முறையில் அச்சில் மிளிர்வதற்குத் துணைபுரிந்த எல்.கே.எம். கம்ப்யூட்டர் பிரிண்டர்ஸ் அதிபர் திருவாளர் கார்த்திகேயனுக்கும் என்ன சொல்லிப் பாராட்ட முடியும். மிகமிக நன்றி.

இறுதியாக ஆனால் உறுதியாக ஒன்றைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். 'ஞாலம் நின்புகழே மிக வேண்டும் தென் ஆலவாயில் உறையும் எம் ஆதியே' என்றார் சம்பந்தர். திருஞானசம்பந்தரின் மேன்மை நலன்களை எல்லாம் இந்த நூலில் கூறிவிட முடியாது. அவரது புகழே மிக வேண்டும்; அதற்குத் துணைபுரிந்து நிற்கும் திருவருளை என்றும் துதித்துப் போற்றுவேன்.

பல்லாவரம்,
சென்னை - 43

நன்றியுடன்
சோமசுந்தரம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பொருள் அடைவு

	பக்கம்
முன்னுரை – முனைவர் கிருஷ்ண சிவராமன்	ix
மதிப்புரை – நீதியரசர் எஸ். நடராஜன்	xiii
அணிந்துரை – முனைவர் இரா. நாகசாமி	xvii
பாராட்டுரை – முனைவர் தி.ந. ராமச்சந்திரன்	xxii
எனதுரை	xxvi
1. தோற்றுவாய்	1
1.1 – பொதுப்புலம்	1
1.2 – ஆதாரங்கள்	5
1.3 – தேவாரம் – திருமுறை – விளக்கம்	11
1.4 – சம்பந்தரது பதிகங்களின் அமைப்பு	17
1.4.1 – பதிகங்கள்	18
குறிப்புகள்	23
2. திருஞான சம்பந்தரின் திருநின்ற வாழ்வு	24
2.1 – வாழ்க்கைக் குறிப்பு	24
2.2 – சம்பந்தரது வாழ்க்கை – ஓர் ஆய்வு	35
குறிப்புகள்	60
3. சம்பந்தரின் மெய்ஞ்ஞானம்	61
3.1 – மெய்ஞ்ஞானக் கோட்பாடுகள்	61
3.2 – இயற்கை	63
3.2.1 – அட்டமூர்த்தம் (அஷ்ட மூர்த்தம்)	83
3.2.2 – கடந்து நிற்கும் நிலை	84
3.2.3 – படைப்பின் தத்துவம்	85
3.2.4 – படைப்பின் நோக்கம்	90
3.3 – உயிர்கள் (ஆன்மாக்கள்)	92
3.3.1 – உயிர்களின் இயல்பு	92
3.3.2 – ஆன்ம வளர்ச்சிக்கு நான்கு வழிகள்	99
3.3.3 – சம்பந்தர் காட்டும் நெறி	100
3.3.4 – விட்டு விடுதலையாகி நின்றவர்கள்	112
3.3.5 – முக்தியில் ஆன்மாக்களின் நிலை	116
3.4 – இறைவன்	118
3.4.1 – அறிவை அறியும் கருவி (அளவை)	119
3.4.2 – சம்பந்தர் அனுபவித்த இறையருள்	120
3.4.3. – திருப்பாசுரம் (3.312)	124
3.4.4 – சோதியுள் சோதி	135
3.4.5 – நீதியாய் நின்ற நிலை	136

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

3.4.6 – அகத்துறையில் அருள் வெளிப்பாடு 138
3.4.6.1 – காதலர் இருவர் 141
3.4.6.2 – காதலின் இரு பக்கம் 144
3.4.6.3 – சம்பந்தரின் அகப்பாட்டு 144
3.4.6.4 – தூது விடல் 149
3.4.6.5 – பிச்சைப் பெருமான் 149
3.4.7 – சம்பந்தரின் மெய்ஞ்ஞானம் – ஓர் ஆய்வு 152
குறிப்புகள் 166

4. சம்பந்தர் காட்டும் சமயநெறி 171
4.1 – ஒரு பார்வை 171
4.2 – புராணங்களின் மொழியில் 173
4.2.1 – சம்பந்தரது பாடல்களில் புராணக் குறிப்புகள் 175
4.2.2 – வீரம் விளைத்த திருஅருள் செய்கைகள் 176
4.2.2.1 – அந்தகன் அழிவு 177
4.2.2.2 – காமன் எரிந்தான் 178
4.2.2.3 – காலகாலன் 179
4.2.2.4 – ஜலந்தரன் மாண்டொழிந்தான் 180
4.2.2.5 – தட்சனது வேள்வி சிதைந்தது 181
4.2.2.6 – திரிபுரம் தீப்பற்றி எரிந்தது 182
4.2.2.7 – பிரமன் ஒரு தலை இழந்தான் 185
4.2.2.8 – யானைத்தோல் போர்த்து நின்றான் 186
4.2.3 – ஆடும் அழகன் 188
4.2.4 – நஞ்சுண்ட பெருமான் 191
4.2.5 – ஆடை அணிகலன்கள் போன்றவை 192
4.3 – ஆலய வழிபாடு – அதன் நாகரிகமும் சிறப்பும் 200
4.4 – வழிபாடு 210
குறிப்புகள் 218

5. சம்பந்தரின் சமுதாய நோக்கு 220
5.1 – சம்பந்தரது சமுதாய நோக்கின் அடிப்படை 220
5.2 – இசை பெற்ற மேன்மை 221
5.3 – சம்பந்தரும் தமிழும் 237
5.4 – உயிர்களிடத்தில் சம்பந்தர் கொண்ட கருணை 247
5.5 – சம்பந்தர் ஆற்றிய சமுதாயப் புதுமை 250
5.6 – சமணர், பௌத்தர்: சம்பந்தரின் நிலை 252
5.7 – சம்பந்தரின் உலகளாவிய பார்வை 266
குறிப்புகள் 267

6. நிறை மங்கலம் 270
துணை நின்ற நூல்கள் 275

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

1

தோற்றுவாய்

1.1. பொதுப்புலம்

வேதநெறி தழைத்து ஓங்க மிகுசைவத்துறை விளங்க,
பூதபரம் பரைபொலிய...

அவதரித்தவர் திருஞான சம்பந்தர் என்பது சேக்கிழார் திருமொழியாகும். சைவத் திருநெறியில், குறிப்பாகத் தென்னகத்தின் சமயத்துறையில் திருஞானசம்பந்தர் ஒரு மகத்தான பீடத்தில் வீற்றிருக்கிறார். அவர் காலத்திலேயே அவரோடு இணைந்திருந்த சீரடியார்களான அப்பர் பெருமான், திருநீலகண்டர், முருகனார், சிறுத்தொண்டர், மங்கையர்க்கரசியார், அவருடைய கணவன் பாண்டியன் நெடுமாறன், அமைச்சர் குலச்சிறையார் போன்ற பலரும் சம்பந்தரிடத்தில் வைத்திருந்த பேரன்பும் பக்தியும் மரியாதையும் எண்ணிப்பார்க்கும்பொழுது சம்பந்தரின் பெருமையும் மாண்பும் நமக்குத் தெளிவாக விளங்கும். அவர்களுக்கு ஒரு நூற்றாண்டிற்குப் பின் தோன்றிய நம்பி ஆரூரரான சுந்தரர் தம்முடைய திருத்தொண்டத்தொகையில் சம்பந்தரை 'எம்பிரான்' என்று மிகவும் மரியாதையுடன் குறிப்பிடுவதைப் பார்க்கிறோம்.

பக்தர்தம் பெருமையைச் சீரோடு பாராட்டும் நாரத பக்தி சூத்திரம் என்னும் நூல் 'கௌண்டின்யன்' என்ற ஒருவரை பக்தி மரபில் மிகப் பழமையான ஆசார்யார்களில் ஒருவராகக் குறிப்பிட்டுப் பாராட்டுகிறது. சம்பந்தர் கௌண்டின்ய கோத்திரத்தைச் சார்ந்தவர். அவரது பாடல்களில் அவரே தன்னைக் கவுணியன் என்று பலமுறை அழைத்துக்கொள்வதைப் பார்க்கின்றோம். நாரத பக்தி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சூத்திரம் குறித்துச் சொல்லும் 'கௌண்டின்யன்' வேறு யாருமில்லை; சம்பந்தரேதான் என்று அறிஞர்கள் கருதுகிறார்கள்.

மதுரையில் உள்ள திருஞானசம்பந்தர் மடத்தில் வழங்கும் விருது ஒன்று 'ஸ்ரீமத் விருஷபத்துவஜ ஸ்தாபக ஸ்ரீ சைவ சமய கர்த்திரு சர்வஞான பீடாரூட ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக ஸ்வாமிகள்' என்று திருஞான சம்பந்தரை 'உலகெலாம் சைவ சமயத்தின் மேன்மையை நிலைநிறுத்திய ஆசாரியர்' என்று பெருமிதத்தோடு பிரகடனப் படுத்துகிறது. மேன்மைமிகு சோமசுந்தர நாயகர் அவர்கள் தமது **சித்தாந்த ரத்னாகரம்,** ஆசார்யப் பிரபாவம் என்னும் நூலில் இதுபற்றி விளக்கமாகக் கூறியுள்ளார்கள்.

இவையெல்லாம் திருஞானசம்பந்தருக்குச் சைவ உலகில் அமைந்துள்ள மேல்நிலையை விளக்கமாகக் காட்டுகின்றன.

சம்பந்தரின் பண் சுமந்த பாடல்களை உணர்வோடு ஊன்றிப் படிக்கும்பொழுது அவர் மெய்ஞ்ஞானம் கைவரப் பெற்ற "ஞானத்தமிழ்க்" கவிஞராக விளங்குவது தெளிவாகப் புரியும். கடவுளை – தெய்வத்தை அவர் நேராக உணர்ந்து அனுபவித்தவர்.

தன் ஒளி மிக்கு உயர்ந்த தமிழ்ஞான சம்பந்தன் (1.108.11)

என்றும், காழி ஈசனின் கருத்தை நிறைவு செய்யத் தோன்றியவர் என்ற கருத்தில்

காழியர்கோன் கருத்தார்வித்த... ஞானசம்பந்தன் (2.152.11)

என்றும், இறைவனுடைய 'திருந்தடி மறக்குமாறில்லாதவர்' *(2.234.5)* என்றும், தனக்கென்று எந்த குணமுமில்லாமல் இறைவனுடைய சித்தப்படியே உணர்ந்து வாழும் 'தன்னியல்பில்லாச் சண்பையர் கோன்' *(1.97.11)* என்றும், வெங்குரு என்னும் சீர்காழியில் விளங்கும் அவனே 'என் குரு' என்று 'வித்தகராகிய வெங்குருவே' என்றும் அவர் பாடுவதைக் கண்டு நாம் அவருடைய ஈசனுடன் வாழும் உணர்வைப் புரிந்துகொள்ள முடியும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இறைவன் பெருமையின் அகலத்தை அறிவார் யார்? அந்தப் பெருமையைத் தன் தமிழில் ஏற்றிப்பாடுகிறார் சம்பந்தர்: "பெருமான் அகலம் அறியலாகப் பரவும் முறையே பயிலும் பந்தன்" (2.216.11). இறையருள் உணர்வில் ஊன்றியுள்ள தான் வேறு, தன் உடல் வேறு என்பதை உணர்ந்துகொண்ட அவர் சிவன் அருளால் தான் உடல் பந்தத்திலிருந்து விடுபடும் சக்தியைப் பெற்றமையைக் குறிப்பிடும் முறையில் தன்னைக் 'காயவர்க்க அசம் பந்தனே' (3.374.11) என்று உறுதிபடக் கூறுகிறார்.

குழந்தைப் பருவத்தில் தேவியின் ஞானப்பாலைப் பருகிச் சிவஞானசம்பந்தம் உற்றார் அவர் என்ற செய்தி - மரபில், பாட்டில், கல்வெட்டுகளில் எல்லாம் நிலவி வருகின்றது. சம்பந்தருடைய பாடல்கள் சிலவற்றிலேயே அகச்சான்றுகள் இருப்பதாகக் கருதுவதற்கு இடமிருக்கிறது. திருமுறைகளை வகுத்துத் தொகுத்த நம்பியாண்டார் நம்பி சம்பந்தரைப் 'பிள்ளை' என்று பாசத்தோடு அழைக்கிறார். இந்தக் கருத்து நாளடைவில் வளர்ந்து விரிந்தது. திருமுருகனின் அவதாரம் தான் சம்பந்தப்பெருமான் என்ற நம்பிக்கை ஊன்றித் தழைத்தது. பன்னிரண்டாம் நூற்றாண்டில் ஒட்டக்கூத்தர் தான் தமது தக்கயாகப் பரணி என்ற நூலில் இவ்வாறு கருதத் தொடங்கியிருக்கிறார் என்று சொல்லலாம். சோமசுந்தர நாயகர் போன்றவர்கள் சம்பந்தர் மனித யோனியில் கருவுற்றுத் தோன்றாதவர் (அயோனிஜர்) என்ற அளவிற்குக் கூறியிருக்கிறார்கள்.

ஆராய்ச்சியாளர்கள் திருஞானசம்பந்தரின் காலத்தை கி.பி. ஏழாம் நூற்றாண்டு என்று துணிந்திருக்கிறார்கள். அக்கருத்தை இந்த நூலாசிரியரும் ஏற்றுக்கொள்கிறார்.

இந்த நூல் திருஞானசம்பந்தரின் மெய்ஞ்ஞானத் தத்துவங்களையும் சமயக் கருத்துகளையும் முறைப்படி ஆராய்ந்து அறிய முற்படுகிறது. அந்த முயற்சிக்கு அடிப்படை ஆதாரமாக (primary source) இருப்பவை சம்பந்தருடைய பாடல்கள்தாம்: மற்ற ஆதாரங்களும் உதவுகின்றன. இந்தப் பகுதியில் அவற்றையெல்லாம் குறித்துப் பேசப்படும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இரண்டாவது பகுதி திருஞானசம்பந்தருடைய வாழ்க்கை வரலாற்றைச் சேக்கிழார் பெருமானின் அடி ஒற்றி ஆராய்கிறது. சம்பந்தருடைய பாடல்கள் சிலவற்றிலும் அவருடைய வாழ்க்கைக் குறிப்புகள் காணப் படுகின்றன. இதனால் சம்பந்தருடைய சிந்தனைகளையும் அறிவுரை களையும் நம்மால் தெளிவாகத் தெரிந்துகொள்ள முடிகிறது.

இயற்கை, உயிர்கள், இறைவன் என்ற மூன்றையும் பற்றிச் சிந்திப்பது மெய்ஞ்ஞானம் அல்லது மெய்யுணர்வு ஆராய்ச்சி. சம்பந்தருடைய பாடல்களில் இந்த முப்பொருள் களையும் பற்றிய கருத்துகள் ஆங்காங்கே மிளிர்வதைக் காண்கிறோம். பொன்துகளை அரிந்தெடுத்துத் தங்கத்திரளை உருவாக்குவதைப் போல இக்கருத்துகள் திரண்டு சம்பந்தரின் மெய்ஞ்ஞானத் தத்துவத்தை நமக்கு நம் அறிவாற்றல் களுக்கிணங்க உருவாக்கித் தருகின்றன. மூன்றாவது பகுதியில் அவற்றை விரிவாகக் காணலாம்.

புராணக் கதைகள், ஆலய வழிபாடு, பல்வேறு வழிபாட்டு முறைகள்பற்றிய சம்பந்தரின் கருத்துகள் அவருடைய சமயக் கொள்கையைக் காட்டுகின்றன. நான்காவது பகுதியில் அவரது சமயக் கோட்பாடுகளை விளக்கிச் சொல்கிறது.

"திருந்தடி மறந்திடாமலும்," "நினைவிலும் கனவிலும் நாளும் தன் ஒளி" அவரது மனத்தில் எப்பொழுதும் அகலாதிருந்தாலும் சம்பந்தர் தான் வாழ்ந்த சமுதாயத்தைப் பற்றியும் சிந்தித்துச் செயலாற்றியிருக்கிறார் என்பதை அவரது வாழ்விலும் பாட்டிலும் பார்க்கிறோம். அது அவருடைய மெய்ஞ்ஞானக் கருத்தின் விளைவாக அமைந்துள்ளது. இது பற்றி ஐந்தாவது பகுதி நிரம்பச் செய்திகளை வழங்குகிறது. இனி ஆறாவது பகுதி நூலை நிறைவு செய்கிறது.

சிவன் எனும் நாமத்தை நினைந்து அவனது திருவுருவை வணங்கி நிற்கின்ற அளவில் திருஞானசம்பந்தர் ஒரு சைவரே ஆவார். ஆனால், அடிப்படையில், அவர் சமய வரம்பு களுக்குள் அடங்கிவிடவில்லை. கடவுளது அன்புப் பேராட்சியில், சாம்ராஜ்யத்தில், எல்லா உயிர்க்கும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பொதுவாக ஊடுருவி நிற்பது எதுவோ அந்த உணர்வைப் பெருக்குவ்துதான் அவரது உண்மைச் சமயமாகத் திகழ்வதைக் காண்கிறோம். அவருடைய ஞானத்தின் விரிவை, பேரகலத்தை இந்தச் சிறிய ஏட்டில் ஏற்றிக் காட்டுவதற்கு என் போன்றார்க்கு இயலாது; எனினும் கார்வானத்தில் கொடியோடித் திகழும் மின்னல் ஒளியில் நாம் திருஞானசம்பந்தரின் திருநின்ற செம்மைக் காட்சியைக் காண முயல்கிறோம்.

1.2. ஆதாரங்கள்

திருஞானசம்பந்தர் இறைவனது திருவருளை முற்றிலும் உணர்ந்து அனுபவித்தவர். அவருடைய பாடல்கள் எல்லாம் அவருடைய உணர்வின் வெளிப்பாடுகளே. 'எனது உரை தனது உரையாக' (1.76. 1–10) என்று அவர் தனது இலம்பையம் கோட்டூர்ப் பதிகத்தில் தான் பேசுவதெல்லாம் இறைவனின் பேச்சாகவே அமைவதைக் குறிப்பிடுகிறார். எனவேதான் அவரது மெய்ஞ்ஞானக் கோட்பாடுகளையும் சமயக் கொள்கைகளையும் அறிந்து கொள்வதற்கு அவரது பாடல்களே நமக்கு முதல்நிலை ஆதாரங்களாக விளங்கு கின்றன. ஆனால் அவரது பாடல்கள் என்று இன்று நமக்குக் கிடைத்திருப்பவை அவர் பாடிச் சென்றதாக நம்பப்படும் மொத்தப் பாடலின் ஒரு பகுதியே ஆகும். முழுதும் கிடைக்கவில்லை. கிடைத்தால் மேலும் மேலும் பல செய்திகளை நாம் அறிந்து கொண்டிருக்க முடியும்.

திருஞானசம்பந்தரின் பாடல்கள் பத்துப் பத்தாக – பதிகங்களாகத் தொகுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பதிகத்தின் கடைசியிலும் திருக்கடைக்காப்பு என்ற ஒரு பாட்டு சேர்க்கப்பட்டுள்ளது. இந்தப் பதிகங்கள் 'திருப் பாட்டு,' 'திருப்பதியம்,' 'திருப்பதிகம்' என்ற பெயர்களிலும் வழங்கப்படுகின்றன. சம்பந்தர் பதிகங்கள் முழுவதும் (384) முதன் மூன்று திருமுறைகளாக நம்பியாண்டார் நம்பியினால் தொகுக்கப்பட்டுள்ளன.

திருநாவுக்கரசடிகள் சம்பந்தர் காலத்தவர்; ஆனால் மூத்தவர். அவரது பதிகங்கள் அடுத்த மூன்று திருமுறை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

களாகத் தொகுக்கப்பட்டுள்ளன. சுந்தரர் என்னும் நம்பியாரூரரின் பதிகங்கள் ஏழாவது திருமுறையில் இடம்பெற்றுள்ளன. இந்த ஏழு திருமுறைகளைத் 'தேவாரம்' என்று அழைக்கின்றோம். மூவரும் 'மூவர் முதலிகள்' என்று சைவத்தில் போற்றப்படுகின்றனர்.

மாணிக்கவாசகரின் திருவாசகமும், திருக்கோவை யாரும் எட்டாம் திருமுறையாக அமைந்துள்ளன. இவரோடு சைவ குரவர்கள் (ஆசார்யர்கள்) நால்வராய்த் திகழ்கின்றனர்.

திருமாளிகைத் தேவர் முதலிய ஒன்பது புலவர்கள் பாடிய திருவிசைப்பாமாலை ஒன்பதாம் திருமுறையாக விளங்குகிறது. திருமூலர் வழங்கிய திருமந்திரம் (திருமந்திர மாலை) பத்தாம் திருமுறையாகும். திரு ஆலவாய் உடையார், காரைக்கால் அம்மையார், ஐயடிகள் கார்டவர்கோன், சேரமான் பெருமாள் நாயனார், நக்கீர தேவர், கல்லாட தேவர், கபிலதேவர், பரணதேவர், இளம்பெருமான் அடிகள், அதிரா அடிகள், திருவெண்காட்டடிகள், நம்பியாண்டார் நம்பி ஆகிய பன்னிரண்டு பேர் பாடியவை பதினோராம் திருமுறையில் சேர்க்கப்பட்டுள்ளன. சேக்கிழாரின் திருத் தொண்டர் புராணமாகிய பெரிய புராணம் .பன்னிரண்டாம் திருமுறையாக விளங்குகின்றது. இவை பன்னிரு திருமுறைகள் என்று சைவத்தின் மேன்மைமிகு தோத்திரங்களாகத் திகழ்கின்றன.

சைவ மரபில் இப்பன்னிரு திருமுறைகளும் வடமொழி வேதங்களுக்கு நிகரானவை என்ற நம்பிக்கை தொன்று தொட்டு நிலவி வருகிறது. தோத்திரங்களைப் போலவே, பதினான்கு சைவச் சாத்திர நூல்களும் இருக்கின்றன. மெய்கண்ட தேவரின் சிவஞான போதம் தலைமைச் சிறப்புள்ளது. இந்த நூலில் உள்ள பன்னிரண்டு சூத்திரங்களும் சைவசித்தாந்த சாத்திரத்திற்கு அடிப்படை யானவை; வேதாந்த சூத்திரத்திற்கு இணையானவை. எனவே சைவசித்தாந்தமே 'மெய்கண்ட சாத்திரம்' என்றும் கருதப்படுகிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சம்பந்தரின் மூன்று திருமுறைகளிலும் இன்று மொத்தம் 384 பதிகங்கள் உள்ளன. ஆனால் இவைகளைத் தொகுத்த நம்பியாண்டார் நம்பியும் (9–10 நூற்றாண்டு) **திருமுறை கண்ட புராணம்** பாடிய உமாபதி சிவாசாரியாரும் சம்பந்தர் மொத்தம் 16,000 பதிகங்களைப் பாடியதாகக் கூறுகிறார்கள். சில அறிஞர்கள் 16,000 பாடல்கள்தாம் என்றும் கருது கிறார்கள். இருப்பினும் இன்று கிடைப்பவை அவற்றில் நாலில் ஒரு கூறுதான். மற்றவை காலத்தாலும் கரையான் களாலும் அழிந்து போயிருக்க வேண்டுமென்று தெரிகிறது.

சேக்கிழார் சில குறிப்பிட்ட கோயில்களில் சம்பந்தர் பாடிய பதிகங்களைக் குறிப்பிடுகிறார். ஆனால் அவை கிடைக்கவில்லை. எடுத்துக்காட்டாக திருவாலந்துறைப் பதிகங்கள் கிடைக்கவில்லை.

மற்றுமொரு சான்றையும் பார்க்கலாம். சம்பந்தர் தம் காலத்தில் வாழ்ந்த முருகனார், திருநீலநக்கனார், நீலகண்ட யாழ்ப்பாணர் போன்றவர்களைக் குறிப்பிடுகிறார். ஆனால் அவரே 'அப்பர்' என்று பாசத்தோடு அழைத்த திருநாவுக் கரசரைப்பற்றித் தெளிவாகக் குறிப்பிடவில்லை என்பது கவனிக்கத்தக்கது. இதற்கு என்ன காரணம்? சம்பந்தரும் அப்பரும் சம காலத்தவர்; ஒன்றாகப் பல இடங்களுக்கும் சென்று பாடியவர்கள் என்று சேக்கிழாரும் மற்ற ஆதாரங்களும் உறுதியாகச் சொல்கிறார்கள். அப்பரைக் குறித்துச் சம்பந்தர் பாடிய பாடல்கள் கிடைக்காமல் போயிருக்கலாம் என்பதைத் தவிர வேறு என்ன காரணம் இருக்க முடியும். இவ்வாறு சம்பந்தரின் பல பாடல்கள் இன்று கிடைக்காமல் போய்விட்டன.

திருநாவுக்கரசரின் பதிகங்களும் சுந்தரரின் பதிகங்களும் நம் ஆராய்ச்சிக்கு மிக முக்கியமானவை. **தேவாரத்தின் சமயமும் தத்துவமும்** (*The Religion and Philosophy of Tevāram*) என்ற தனது நூலில் பேராசிரியர் துரை அரங்கனார் 'நம்பி யாரூரரின் பாடல்கள் தேவாரம் எனும் பெட்டகத்தைத் திறந்து பார்க்க உதவும் திறவுகோலாக விளங்குகின்றன' என்று உறுதிபடக் கூறுகிறார். ஆரூராரின் திருத்தொண்டத்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தொகைதான் சைவத் திருத்தொண்டர்கள் வாழ்க்கையை எடுத்துக்கூறும் முதல் நூல். மாணிக்கவாசகரின் திருவாசகமும் உதவுகின்றது. பட்டினத்து அடிகள் தமது திருக்கழுமல மும்மணிக்கோவை என்னும் நூலில் சம்பந்தரைப் பற்றிப் பல செய்திகள் சொல்கிறார்.

நம்பியாண்டார் நம்பி சம்பந்தரை ஓர் அவதாரமாகவே நம்புபவர். அவர் பாடியுள்ள பத்து நூல்களில் ஆறு நூல்கள் சம்பந்தர் மீதே பாடப்பட்டவை. நம்பி ஆரூரரின் திருத்தொண்டத் தொகையின் வழிநூலாக அமைகிறது, நம்பியாண்டார் நம்பியின் திருத்தொண்டர் திருஅந்தாதி. ஔவையார், ஒட்டக்கூத்தர் ஆகியோரின் பாடல்களும் துணைக்கு வந்தாலும் சேக்கிழார் பெருமானின் திருத்தொண்டர் புராணம் என்னும் பெரிய புராணமே இந்த நூலுக்கு அடித்தளமாக அமைகின்றது.

சேக்கிழார் மகா மேதை; பைந்தமிழைப் பாடி இசை கொண்டவர். அதுமட்டிலுமல்ல. அவர் அனபாய சோழனது ஆட்சியில் தலைமை அமைச்சராக இருந்து அரசியல், பொருளாதாரத் துறைகளில் வல்லமை படைத்தவராக விளங்கியவர்; அம்பலத்தாடுவானின் மலர்ச்சிலம்படியில் நீங்காத பக்தி கொண்டவர்; கூடும் அன்பினின் கும்பிடு வதையே கொள்கையெனக் கொண்டவர்; திருமுறைகளில் தோய்ந்தவர்; சம்பந்தரின் நெஞ்சத்தை உணர்ந்தவர். தான் பெரிய புராணத்தில் பாடிய மொத்தப் பாடல்கள் 4296இல் 1256 பாடல்களைச் சம்பந்தரது வரலாற்றைத் திருஞான சம்பந்தர் புராணத்தைப் பாடுவதற்காகவே வகுத்திருக்கிறார். அதனால்தான் 'பிள்ளை பாதி, புராணம் பாதி' என்ற சொல் வழக்கத்தில் வந்திருக்கிறது. மேலும் அமைச்சர் என்ற முறையில் சேக்கிழாருக்கு நிறைய அரசியல் செல்வாக்கு இருந்தது. பல இடங்களுக்கும் சென்று நேரடியாகச் செய்தி களைச் சேகரிப்பதும், கல்வெட்டுகள், சரித்திரங்கள் போன்ற வற்றை ஆராய்வதும் அவருக்குக் கைகூடி வந்திருந்தன.

மேலும் சேக்கிழாரிடம் இருக்கும் வேறு ஒரு சிறப்பு என்னவென்றால் அவர் தொண்டர்களின் சீர்களைப்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பரவும்பொழுது செவிவழிச் செய்திகளை மட்டும் அப்படியே எடுத்துக்கொண்டு விடாமல் அவைகளில் உள்ள மெய்யான தன்மைகளை மற்றவைகளிலிருந்து பிரித்து எடுத்துக் காரண காரியத் தொடர்போடு வரலாறு கூறும் திறம் இன்றைய அறிவியல் அடிப்படையில் (scientific base) அமைந்துள்ளது என்பதை அறிந்து மகிழ்கிறோம். எனவேதான் அவருடைய சொற்களுக்கு ஒரு நம்பகத் தன்மையும் (credibility) அதிகார வலிமையும் உள்ளன. (ஆகையால்தான் சேக்கிழாரது பெரிய புராணத்தை நாம் பெரும் துணையாக மதித்து ஏற்றுக் கொண்டுள்ளோம்).

திருவாலந்துறை, திருச்செந்துறை போன்ற தலங்களில் திருஞானசம்பந்தர் பதிகங்கள் பாடியுள்ளதாகச் சேக்கிழார் உறுதியோடு கூறுகின்றார். ஆனால் அந்த ஆலயங்களுக்குரிய சம்பந்தரது பாடல்கள் இப்பொழுது கிடைக்கவில்லை. மேற்சொன்ன ஆலயங்களில் கிடைக்கும் முதலாம் ராஜராஜன், பரகேசரிவர்மன் உத்தம சோழன் ஆகியோரது கல்வெட்டுக்கள், சம்பந்தர் இந்த ஆலயங்களில் பதிகம் பாடியதாகத் தெளிவாக எடுத்துக்கூறுகின்றன.

அதுபோல இன்றைக்கு லால்குடி என்னும் ஊரில் இருக்கும் திருத்தவத்துறை என்ற ஆலயத்தில் சம்பந்தப் பெருமான் சென்று வணங்கித் திருப்பதிகம் பாடியதைச் சேக்கிழார் குறிப்பிடுகிறார். இங்கும் முதலாம் ராஜராஜனின் கல்வெட்டுகள் சேக்கிழாரின் சொற்களை உறுதிப்படுத்து கின்றன. சேக்கிழார் காலத்தில் வழங்கிவந்த அத்திருப்பதிகம் இன்றையத் தேவாரப் பதிப்பில் இடம்பெற்றிருக்கவில்லை. இவையெல்லாம் சேக்கிழாரின் சொற்களில் இருக்கும் சான்றுகளுடன் கூடிய உண்மை நிலையை நமக்குத் தெளிவாக விளக்குகின்றன.

சேக்கிழாரின் பெரிய புராணத்திற்குப் பின்னால், சம்பந்தருடைய வாழ்வையும் சிந்தனையையும் பற்றிப் பல நூல்கள் கூறியிருக்கின்றன.

உமாபதி சிவாசாரியார் இயற்றிய திருமுறைகண்ட புராணம் என்ற நூல் மிக முக்கியமானது. தில்லைக் கோயிலி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

லிருந்து தேவாரத் திருமுறைகள் மீட்கப்பட்ட வரலாற்றினை இந்த நூல் விரிவாகக் கூறுகிறது. இராஜராஜன் என்னும் அபயகுலசேகரன் என்ற சோழ வேந்தன் தேவாரப் பதிகங்களின் பண் ஒலிக்கும் பாடல்கள் சிலவற்றைக் கேள்வியுற்றான்; அவைகளின் பண்ணோசையிலும் பாட்டுத் திறத்திலும் அவன் தன் நெஞ்சத்தைப் பறிகொடுத்தான்; தேவாரப் பாடல்கள் அனைத்தையும் படித்துச் சுவைப்பதற்கு அவன் மிகவும் ஆசைப்பட்டான். அவை கிடைக்காமல் மறைந்துபோய் விட்டதை அறிந்து மிகவும் கவலைப்பட்ட மன்னன், திருநாறையூர் என்னும் தலத்தில் வாழ்ந்த நம்பியாண்டார் நம்பியின் தெய்வ பக்தியையும் ஆற்றலையும் கேள்விப்பட்டு, அவருடைய உதவியை நாடி வேண்டிக் கொண்டான்.

திருநாறையூரில் எழுந்தருளியிருக்கும் பொள்ளாப் பிள்ளையாரின் அருளினால் மறைவுற்ற தேவாரப் பதிகங்கள் தில்லைக் கோயிலில் உள்ள ஓர் அறையில் வைக்கப் பட்டிருப்பது தெரிய வந்தது. அதன்படி அந்த அறையைச் சோதித்துப் பார்த்தபொழுது சம்பந்தரின் பதிகங்கள் 384-ம், அப்பரது பதிகங்கள் 307*-ம், ஆரூரரின் பதிகங்கள் 100-ம் மட்டுமே கண்டெடுக்கப்பட்டன. மற்றவை கரையானுக்கு இரையாகி விட்டன. இதையறிந்து மன்னனும் மற்றவர்களும் சொல்லொணாத் துயரத்தில் மூழ்கினர். அப்பொழுது ஓர் அசரீரி எழுந்தது. 'மறைந்ததை எண்ணி வருந்தாமல் கிடைத்ததை வைத்து உலகு பயனடையச் செய்ய வேண்டும்' என்றது அந்த ஒலி.

அதன்பிறகு மனம் தேறிய மன்னன் பதிகங்களைத் திருமுறைக்ளாக வகுத்துத் தொகுப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்தான். பண் முறையால் திருமுறைகள் வகுக்கப்பட்டன. திருநீலகண்ட யாழ்ப்பாணர் சம்பந்தப் பெருமானின் பதிகங்களைத் தம்முடைய யாழில் கூட்டிப் பண் அமைத்திருந்தார். எனவே அந்த நாயனாரின் வமிசத்தில் தோன்றிய ஒரு பெண்மணியின் உதவியைக் கொண்டு பதிகங்களுக்குப் பண் அமைக்கப்பட்டது.

* சிலர் 310, 311, 312, 313 என்றும் கூறுகிறார்கள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருமுறை கண்ட புராணம் பண்களைப்பற்றியும் அவற்றின் பல்வேறு பிரிவு விரிவுகளைப்பற்றியும் நிரம்பச் செய்திகளைச் சொல்கிறது. பண் ஆராய்ச்சிக்கு அந்நூல் காட்டிய மரபு நெறிகள் மிகவும் பயனுள்ளவையாக இருப்பதைக் காண்கிறோம்.

பெரும்பற்றப்புலியூர் நம்பியின் (கி.பி.1228) திருவாலவா யுடையார் திருவிளையாடற் புராணம், விமலநாத பண்டிதரின் கடம்பவன புராணம், பரஞ்சோதியாரின் திருவிளையாடற் புராணம் ஆகிய நூல்களிலிருந்து திருஞானசம்பந்தருடைய வாழ்வையும் கொள்கைகளையும்பற்றிய பல செய்திகளை அறிய முடிகிறது. சிவப்பிரகாசப் பெருந்திரட்டு என்பது பழம் பாடல்களையெல்லாம் தொகுத்துக் கூறும் தொகை நூல். பதினைந்தாம் நூற்றாண்டிலிருந்து இந்த நூல் வழக்கில் உள்ளது. இதுவும் ஓர் ஆதார நூலாக விளங்குகிறது. நம்பியாண்டார் நம்பி, ஒட்டக்கூத்தர் ஆகியோரைப் பின்பற்றி அருணகிரிநாதரும் சம்பந்தரை முருகனாகப் பரவியிருப்பதைப் பார்க்கின்றோம். இவர்களைப் போலவே சிவப்பிரகாசர், சிதம்பர ஸ்வாமிகள், இராமலிங்க அடிகள் போன்றவர்கள் திருஞானசம்பந்தருக்குத் தனி இடம் அளித்துப் பாராட்டுவதுடன் அவரைச் சிறந்த குருநாத ராகவும் மதிக்கின்றார்கள்.

1.3. தேவாரம் – திருமுறை – விளக்கம்

இனி, தேவாரம், திருமுறை என்ற சொற்கள் இலக்கியங்களிலும், கல்வெட்டுகளிலும் எத்தகைய கருத்து களில் பயன்படுத்தப்படுகின்றன என்று பார்ப்போம். இவை எந்த முறையில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன என்றும் பார்க்கலாம்.

சம்பந்தர் தம் பாடல்களை எந்த இடத்திலும் 'தேவாரம்' என்று குறிப்பிடவேயில்லை என்பது கவனிக்கத்தக்கது. அவரே தம் பாடல்களை, 'பாடல்,' 'மாலை,' 'தமிழ்,' 'பனுவல்,' 'பாட்டு,' 'கிளவி,' 'மொழி,' 'பாடல்,' 'உரை,' 'சொல்,' 'கலைகள்,' 'சந்தம்,' 'இசை,' 'சொல் வழிபாடு,' 'செய்யுள்,' 'வண்ணம்,'

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

'பொய்யிலி மாலை' என்றபடிதான் குறித்துச் சொல்கிறார். மற்ற இரு தேவார ஆசிரியர்களும் 'தேவாரம்' என்ற சொல்லைப் பயன்படுத்தவில்லை. சம்பந்தர், நாவுக்கரசர் ஆகிய இருவரது பாடல்களை ஆரூரர் 'நற்றமிழ்மாலை' என்றுதான் அழைக்கிறார்.

எனவே தேவாரத்தைப் பக்திப் பாடல் என்ற கருத்தில் குறிக்கும் வழக்கம் பின்னால்தான் எழுந்திருக்க வேண்டும். ஆனால் திருஞானசம்பந்தர் ஒரே ஓர் இடத்தில் *(3.371.12)* தன் பாடலைப் 'பதிகம்' - "பதிகமது எழுது இலை" என்று குறிப்பிடுகிறார்.

எட்டாம் நூற்றாண்டுவாக்கில் சம்பந்தர் முதலியோரின் பாடல்களைத் 'திருப்பதியம்' என்று அழைக்கும் வழக்கம் ஏற்பட்டதாக நினைக்கலாம். எட்டாம் நூற்றாண்டில், நந்திவர்ம பல்லவ மன்னன் என்றழைக்கப்பட்ட விஜயநந்தி விக்கிரம வர்மனின் 17ஆவது ஆட்சியாண்டில் (கி.பி. 750) வெளியிடப்பட்ட கல்வெட்டு ஒன்றில் 'திருப்பதியம்' பாடுபவர்களுக்கு ஊதியம் வழங்க வகை செய்யப் பட்டுள்ளது. இந்தக் கல்வெட்டினைப் போலவே பல கல்வெட்டுகள் 'திருப்பதியம்' என்ற சொல்லைப் பயன் படுத்திக் கொள்கின்றன.

நம்பியாண்டார் நம்பி தம்முடைய ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதியில் *(15)* சம்பந்தரது பாடலைத் 'திருப்பதிகம்' என்றழைக்கிறார்; அந்தப் பதிகங்கள் காட்டும் நெறியைப் 'பதிகப் பெருவழி' *(2)* என்று உணர்த்துகிறார். சேக்கிழாரும் 'திருப்பதிகம்' என்றே குறிப்பிடுகிறார்.

இனிப் 'பதிகம்' என்ற சொல் எதிலிருந்து தோன்றியது என்று பார்ப்போம். பத்யப் 'ப்ரதிகா' (முன்னுரை) என்ற சொல்லிலிருந்தோ, 'பதிகா' (புனித யாத்திரை செய்பவன்) என்ற சொல்லிலிருந்தோ வந்திருக்கலாம். 'பதி' (இறைவன்) - இறைவனைப்பற்றிய பாடல் என்ற கருத்திலும் தோன்றி யிருக்கலாம் என்றெல்லாம் கருத்து நிலவுகிறது. ஆனால் 'பத்து' என்ற சொல்லடியாகப் பிறந்திருக்கலாம் என்று கருதுவது சற்றுத் தெளிவாக இருக்கிறது. பழந்தமிழ்ச் சங்க

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நூலான ஐங்குறுநூறு என்பதில் பாடல்கள் பத்துப் பத்தாகத் தொகுத்துக் கூறப்பட்டிருக்கும் மரபினைப் பார்க்கிறோம். (எடுத்துக்காட்டு: 'குரங்குப் பத்து'; 'கிள்ளைப் பத்து'; 'வெறிப்பத்து' என்பன). ஒருவேளை 'பதிகம் என்ற சொல் 'பத்து' என்பதிலிருந்து தோன்றியிருக்கலாம்.

'திருமுறை' என்றால் என்ன என்று பார்ப்போம். பிங்கலந்தை என்ற தமிழ் நிகண்டு 'முறை' என்பதற்கு ஒரு புனித நூல், விதி (ஊழ்), கூட்டு, முறை (ஒழுங்கு) என்றெல்லாம் பொருள் தருகிறது. முறைப்படி எழுதப்பட்ட எந்த நூலையும் முறை என்று சொல்லலாம். சேக்கிழார் 'திருமுறை' என்னும்போது தேவாரம் போன்ற பாடல் களையே குறிக்கின்றார். (கணநாத நாயனார் புராணம் – பாட்டு 3).

ஆனால் மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில்தான் 'திருமுறை' என்ற சொல் வழக்கு, கல்வெட்டுகளில் தோன்றத் தொடங்கியது என்பார்கள். தேவாரப் பாடல்களை முறையாக எழுதத்தொடங்கிய பின்னால்தான் 'திருமுறை' என்பது பயன்படுத்தப்பட்டிருக்க வேண்டும் என்று கருதுகிறார்கள்.

ஸ்ரீ நிசங்க சாரங்கதேவர் (கி.பி.1210–1247) என்பவர் பதிகங்களில் உள்ள பல பண்களின் வகைகளையும் வடிவங்களையும் பற்றிக் குறிப்பிடுகையில் அவைகளை **தேவார வர்த்தினி** என்ற வகையில் வைத்துப் பேசுகிறார் தமது **சங்கீத ரத்னாகரம்** என்ற நூலில்.

மதிநாத சம்புவரையரின் (கி.பி.1321–1339) காலத்தைச் சார்ந்தவர்களாகக் கருதப்படுகின்ற இரட்டைப் புலவர்கள், தங்களுடைய **ஏகாம்பரநாதர் உலா** என்னும் நூலில் "மூவாத பேரன்பின் மூவர் முதலிகளும் தேவாரம் செய்த திருப்பாட்டும்" என்று கூறுகிறார்கள். இங்கு 'தேவாரம்' ஒரு பெயர்ச் சொல்லாகப் பயன்படுத்தப்படுவதற்கு மாறாக 'தேவாரம் செய்த' என்ற வினைச் சொல்லாகவே பயன் படுத்தப்படுகிறது. அப்படியென்றால் 'தேவாரம் செய்தல்' என்பது ஒருவகையான வழிபாட்டு முறை. அதில் மூவர்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பாடல்களைப் பாடி வழிபட்டிருக்கிறார்கள் என்றே தெரிகிறது.

தேவாரத்தை மூவர் பாடல்களைக் குறிக்கும் சொல்லாக, இரட்டைப் புலவர்களுக்குப் பின்னால் வந்த சைவ எல்லப்ப நாவலர்தாம் முதலில் பயன்படுத்தியிருக்கிறார். அவர் தமது திருவருணைக் கலம்பகத்தில், ‘சீர்திருத் தேவாரமும் திருவாசகமும் உய்ய வைத்தார்... நால்வர்’ என்று தெளிவாகச் சொல்லியிருப்பதைப் பார்க்கிறோம். கி.பி. பதினாறாம் நூற்றாண்டின் முன் பகுதியைச் சார்ந்த தத்துவப் பிரகாசர் தமிழ் நாவலர் சரிதையில் சேர்க்கப்பட்ட தமது பாடல் ஒன்றில் மூவர் பாடல்களையே தேவாரம் என்று குறிப்பிடுகிறார்.

ஆனால் இந்தக் குறிப்புகளுக்கெல்லாம் முன்பாக பிற்காலச் சோழர்களது காலத்தில், ‘தேவாரம்’ என்றால் தனிப்பட்ட வழிபாட்டு முறை என்றே வழங்கப்பட்டிருக்கிறது. முதலாம் இராஜராஜ சோழனின் கி.பி.1015ஆவது வருடக் கல்வெட்டு ஒன்றில் ‘பெரிய பெருமாளுக்குத் தேவார தேவர்’ என்று ஒரு குறிப்பு வருகிறது. இங்கு பெரிய பெருமாள் என்பது முதலாம் இராஜராஜ சோழனையே குறிக்கிறது. ‘தேவார தேவர்’ என்றால் அச்சோழ வேந்தர் தனிப்பட்ட முறையில் வழிபடும் தெய்வம் என்று பொருள். மற்றொரு கல்வெட்டு ‘தேவாரச் சுற்றுக் கல்லூரி’ என்று அரசன் வழிபடும் இடத்தைப் பற்றிச் சொல்கிறது.

இராஜேந்திர சோழனுடைய கல்வெட்டு, அவனது வழிபாட்டிற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யும் பொறுப்பில் இருந்த அலுவலரை ‘தேவார நாயகம்’ என்று அழைக்கிறது. பதினோராம் நூற்றாண்டைச் சேர்ந்த வேறு இரண்டு கல்வெட்டுகளில் தனி வழிபாட்டின்போது (தேவாரம்), திருப்பதியங்களை பாடுவோரைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. திருக்களர் என்னும் ஊரிலுள்ள கல்வெட்டு ஒன்றில் ‘நம் தேவாரத்துக்குள் திருப்பதியம் பாடும் பெரியான்’ என்ற வரி உள்ளது. அல்லூர்க் கல்வெட்டு ஒன்றில் ‘மடம் தேவாரத்துக்குள்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருப்பதியம் விண்ணப்பம் செய்யும் அம்பலத்தாடி' என்ற செய்தி கிடைக்கிறது. தக்கோலக் கல்வெட்டு ஒன்று, குலோத்துங்க சோழன் அவ்வூரில் உள்ள திருவூரல் என்னும் கோயிலில் தங்கித் 'தேவாரம்' செய்தான் என்பதை, 'திருவூரல் பெருமானைத் தேவாரம் செய்து' என்று குறிப்பிடுகிறது.

தேவாரத்திற்குத் தனிப்பட்ட, சொந்தமான வழிபாடு என்ற பொருள் எவ்வாறு வந்தது என்று பார்க்கலாம். 'தே' என்பது ஓர் எழுத்தும் சொல்லுமாக ஒரெழுத்து ஒரு மொழியாக உள்ளது. அதன் பொருள் தெய்வம் என்பது. தேவாரம் என்ற சொல் 'தே+ஆரம்' என்று பிரிக்கப்படலாம். 'ஆரம்' என்றால் மாலை – தேவாரம் என்றால் தெய்வத்திற்குச் சூட்டப்படும் மாலை – இங்கு பாமாலை. இது பொதுவான கருத்து. வேறு ஒரு கருத்தும் உண்டு. இங்கே தேவாரம் என்பது தே+வாரம் என்று பிரிக்கப்படுகிறது. 'வாரம்' என்றால் அன்பு. தெய்வத்திற்கு அன்போடு, பக்தியோடு சூட்டப்படும் பாடல் என்று பொருள்.

மூன்றாவது கருத்தும் உள்ளது. இங்கு தேவாரம் – தே+வாரம் என்றாகிறது. வாரம் என்பது இசைப் பாடலின் ஒரு வகை. சொல் வளமும், ஒலி நயமும் இசை அமைப்பும் உடையது இந்த இசைப்பாடல். இங்கு 'வாரம் பாடுதல்' என்றால் இறைவனை அன்போடு, இசையோடு பாடி வழிபடுதல்' என்று பொருள். நம் பழந்தமிழ்க் காப்பியமான நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரத்தில் இந்த வாரப் பாடல்கள் பேசப்படுகின்றன. மரபோடு இசையையும் கூத்தையும் பயின்று தேர்ந்த ஆடல் பெண்கள் இரண்டு வகையான வாரப் பாடல்களைப் பாடி இறைவனைத் துதிப்பார்கள். ஒன்றால் உலகில் நிலவும் அறமும் அமைதியும் ஓங்க வேண்டும் என்றும், மற்றதால் தீமையெல்லாம் தேய்ந்து மறைய வேண்டும் என்றும் பாடி ஆடுவார்கள்.

சிலப்பதிகாரத்திற்கு உரை எழுதிப் பெரும் புகழ்பெற்ற அடியார்க்கு நல்லார் 'வாரம்' என்பது 'தெய்வப்பாடல்' என்றே பொருள் சொல்கிறார். மேற்சொன்ன கருத்துகளால்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வாரம் என்பதை ஓர் இசைப்பாட்டில் உள்ள இன்னிசை என்று பொதுவாகவும், தெய்வ பக்திப் பாடல் என்று சிறப்பாகவும் பொருள் கொள்வதை உணரலாம்.

வேறு ஓர் இசைப்பாட்டு வகை உண்டு. அதனை "தேவபாணி" என்பார்கள். பொதுவாக பாணி என்றாலே அது ஓர் இசைப்பாட்டைக் குறிக்கிறது. இது தேவபாணி என்றால் அது கடவுளைத் துதிக்கும் இசைப்பாட்டு என்று பொருள். தொல்காப்பியத்திற்கு உரை எழுதி இசை கொண்ட பேராசிரியர் தேவபாணியை, தெய்வத்தைப் பாடும் இசைப்பாட்டு என்றே குறிப்பிடுகிறார். அதுவும் தெய்வத்தை முன்னிலைப்படுத்திப் பாடுவது என்பதைச் சுட்டிக்காட்டு கிறார். தெய்வத்தைப் படர்க்கையில் வைத்துப் பாடுவது புறநிலை வாழ்த்தாகும். பேராசிரியர் வெள்ளைவாரணன் தம்முடைய ஆய்வு நூலான பன்னிரு திருமுறை வரலாறு என்பதில் வாரத்திற்கும் தேவபாணிக்கும் உள்ள ஒற்றுமைக் கூறுபாடுகளை விளக்குகிறார். தேவாரம் தேவபாணியைப் போன்றதுதான். தேவபாணியில் முன்னிலையில் பாடப் படுவதென்றால், தேவாரம் முன்னிலையிலும் படர்க்கை யிலும் வைத்துப் பாடப்படுவதாகும். இந்த ஒரு வேற்றுமை தான் உள்ளது என்று அவர் எடுத்துரைக்கிறார். எனவே தேவாரம் என்றால் தெய்வத்தை முன்னிலையிலும் படர்க்கை யிலும் வைத்து இன்னிசைப் பாடல்களால் துதித்து வழிபடுவது என்பதாகத் தெளிவாக உணரலாம்.

சோழர்கள் காலத்தில் ஆலயங்களில் பதிகங்களைப் பாடும் வழக்கம் கால் ஊன்றிவிட்டது. அப்பொழுது தேவாரம் என்ற சொல் தனிப்பட்ட, சொந்தமான வழிபாட்டைக் குறிப்பதாக நிலைத்துவிட்டது. இந்த வழக்கம் தொடர்ந்தது. பின்னால் சிவப்பிரகாசர், ஸ்வரூபானந்தர், தத்துவராயர் ஆகியோரது காலங்களிலும் இதே நிலையைக் காண்கிறோம். பிற்காலத்தில் தேவாரம் என்றால் மூவர் பாடிய முதன்மைப் பதிகங்கள் என்று வளர்ச்சி ஏற்பட்டு விட்டது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

1.4. சம்பந்தரது பதிகங்களின் அமைப்பு

அவரது 384 பதிகங்களும் மூன்று திருமுறைகளாக வகுத்துத் தொகுக்கப்பட்டுள்ளன. இதில் இரண்டு வகைகள் உண்டு. ஒன்று பதிகங்களின் பண்களை அடிப்படையாகக் கொண்டு வழங்கும் “பண்முறை.” மற்றொன்று அந்தப் பதிகங்கள் எந்தத் தலங்களில் பாடப்பட்டன என்பதைக் கருத்தில் கொண்டு அமைக்கப்படும் “தலமுறை.” பண் முறையைத்தான் நம்பியாண்டார் நம்பி அடிப்படையாகக் கொண்டு திருமுறைகளை வகுத்திருக்க வேண்டும். தலமுறை பின்னால் ஏற்பட்ட வழக்கம் என்பார்கள்.

தருமபுர ஆதீனத்தின் வெளியீட்டு அமைப்பின்படி ஞானசம்பந்தரின் தேவாரங்கள் பண்முறையில் கீழ்க்கண்ட வாறு தொகுக்கப்பட்டுள்ளன:

முதலாம் திருமுறை
(பதிகம் 1 முதல் 136 வரை) – 136 பதிகங்கள்

இரண்டாம் திருமுறை
(பதிகம் 137 முதல் 258 வரை) – 122 பதிகங்கள்

மூன்றாம் திருமுறை
(பதிகம் 259 முதல் 383 வரை) – 125 பதிகங்கள்

383 பதிகங்கள்

இதோடு திருவிடைவாய்க் கோயில் கல்வெட்டிலிருந்து பெற்ற பதிகத்தையும் சேர்த்துக் கொண்டால்

பதிகங்களின் மொத்த எண்ணிக்கை 384

மொத்தப் பாடல்களின் எண்ணிக்கை 4168

இவ்வாறாகத் திருஞானசம்பந்தரது பதிகங்கள் எல்லாம் 22 பண் தொகுதிகளில் சேர்க்கப்பட்டு ஒவ்வொரு தொகுதியும் ஒன்றையொன்று சீராகத் தொடர்ந்து வருகின்றன. ஆனால் பதிகம் 313 காந்தார பஞ்சமத்தைக் கொண்டிருந்தாலும் அது இரண்டு கௌசிகப் பண்ணைச் சார்ந்த பதிகங்களுக்கிடையே சேர்க்கப்பட்டுள்ளது. அது போன்றே காந்தாரப் பஞ்சமப் பண்ணில் அமைக்கப்பட்ட பதிகம் 315 கௌசிகம், பஞ்சமம் பண்களில் அமைக்கப்பட்ட

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இரண்டு பதிகங்களுக்கிடையே காணப்படுகிறது. இதுபோல கௌசிகப் பண் கூட்டப்பெற்ற பதிகம் 375 பழம்பஞ்சுரம், புறநீர்மை ஆகிய இரண்டு பண்களில் அமைந்த பதிகங்களுக் கிடையே உள்ளது. இந்த மூன்று இடங்களைத் தவிர மற்ற எல்லாப் பண்களும் முறையாகவே சேர்க்கப்பட்டிருக் கின்றன. சேக்கிழார் 'துஞ்சவருவார்' என்று தொடங்கும் பதிகத்திற்கு பழம்பஞ்சுரம் என்ற பண்ணைக் கூட்டுகிறார் (திருஞானசம்பந்த நாயனார் புராணம், 1010). ஆனால் இன்றுள்ள பண் முறை வைப்பில் அந்தப் பதிகத்திற்குரிய பண் தக்கராகம் என்று அமைந்திருப்பதைக் காணலாம்.

சேக்கிழார்தம் பெரிய புராணமே இந்தப் புத்தகத் திற்குச் சிறந்த துணை ஆதார நூலாக விளங்குகிறது. அவர் 'தோடுடைய செவியன்' என்று தொடங்கும் பதிகத்தில் தொடங்கிக் 'கல்லூர்ப் பெருமணம்' என்ற பதிகத்தை இறுதியாக வைத்து நிறைவு செய்கிறார். சம்பந்தரின் வாழ்க்கை வரலாறு இதே முறையில்தான் இந்தப் புத்தகத்திலும் பின்பற்றப்படுகிறது.

1.4.1. பதிகங்கள்

ஒவ்வொரு பதிகத்திலும் பத்துப் பாடல்கள் உள்ளன. அவைகளுக்குப் பிறகு பதினோராவது செய்யுள் ஒன்றும் சேர்க்கப்பட்டிருக்கிறது. சேக்கிழார் அந்தக் கடைசிச் செய்யுளைத் **திருக்கடைக்காப்பு** என்று அழைக்கிறார். அதில், செய்யுளைப் பாடிய புலவன் (சம்பந்தர்), பெயர், ஊர், அங்குள்ள ஆலயம், அந்தப் பதிகத்தைப் படித்துப் பாடுபவர் களுக்கு விளையும் நன்மைகள் ஆகிய விவரங்கள் கூறப் பட்டிருக்கின்றன. பதிகப் பாடல்கள் பத்துதாம் என்பதையும் பதினோராவது பாடல் திருக்கடைக்காப்பு என்பதையும் முதல் பதிகத்திற்கு விளக்கம் சொல்லும் பொழுதே சேக்கிழார் விவரமாகக் கூறிவிடுகிறார். இவ்வாறு திருக்கடைக் காப்புச் சொல்லிப் பாடுதல் திருஞான சம்பந்தருக்கும் நம்பி ஆரூரருக்கும் தனிச் சிறப்பான மரபாக அமைந்து திகழ்கிறது. அப்பருடைய 'நமசிவாயப் பதிகம்'

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஒன்றே ஒன்றுதான் திருக்கடைக்காப்பைப் பெற்றிருக்கிறது. மற்ற பதிகங்களில் இல்லை.

ஆரூரரின் பதினோராவது பாடலைத் 'திருக்கடைக் காப்பு' என்றே சேக்கிழார் பெயரிட்டழைத்தாலும் சம்பந்தருடைய திருக்கடைக்காப்புச் செய்யுள்களுக்கு ஒரு தனிச்சிறப்பு இருப்பதாகக் கருதப்பட்டு வருகிறது. அதற்குக் காரணம் அந்தச் செய்யுளின் வலிமை வாய்ந்த கம்பீரமும் 'ஆணை நமதே!' (2.221.11) என்றெல்லாம் ஆணையிட்டுச் சொல்லும் பாங்கும்தான். 'திருக்கடைக்காப்பு' அதன் பேருக்கு ஏற்றபடி ஒரு 'காப்பாக' – ரட்சையாகவே மதிக்கப்பட்டு வருகிறது. ஆயிரக்கணக்கான வருடங்களாக அதற்கிருக்கும் சிறப்பால் சம்பந்தரது தேவாரத்திற்கும் 'திருக்கடைக் காப்பு' என்ற பெயர் வந்து வாய்த்து விட்டது.

சிவப்பிரகாசப் பெரும் திரட்டு என்னும் தொகை நூலில் (கி.பி. 1422) சம்பந்தரது பாடல்களுக்குத் 'திருக்கடைக் காப்பு' என்றும், அப்பரது பாடல்களுக்குத் 'தேவாரம்' என்றும், சுந்தரரது பாடல்களுக்குத் 'திருப்பாட்டு' என்றும் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. இந்த வழக்கு கி.பி. பதினெட்டாம் நூற்றாண்டு வரையில் கூடத் தொடர்ந்து வந்திருக்கிறது. சிதம்பர ஸ்வாமிகள் 'அவிரோத உந்தியார்' என்ற நூலுக்கு எழுதிய உரையில் அவ்வாறே குறிப்பிடுவதைப் பார்க்கிறோம்.

அதுமட்டுமல்ல, தமிழ்நாட்டுப் பொதுமக்களுக்கும் கூடச் சம்பந்தரது 'ஆணை நமதே!' என்னும் திருக்கடைக் காப்பில் ஒரு மகத்தான ஈடுபாடு ஏற்பட்டுவிட்டது. பலர் தங்களது பெயரையே 'ஆணை நமது என்ற பெருமாள்' என்ற வைத்துக் கொண்டு மகிழ்ந்திருக்கிறார்கள் என்பதைக் கல்வெட்டில் (S.I.I. V.III. No.442) காண்கிறோம்.

பொதுவாக, ஒவ்வொரு பதிகத்திலும் திருக்கடைக் காப்புச் செய்யுளையும் சேர்த்து பதினோரு பாடல்கள் இருப்பது உண்டு. ஆனால் சில விதிவிலக்குகளையும் காண்கிறோம். பதிகங்கள் 217, 352, 382 ஆகியவற்றில் திருக்கடைக் காப்புச் செய்யுள் இல்லை; 53, 145, 232ஆம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பதிகங்களில் திருக்கடைக்காப்புச் செய்யுள் முழுமையாக இல்லாமல் குறைந்து காணப்படுகின்றன. திருவெழு கூற்றிருக்கை என்ற பதிகத்தில் தெளிவாக இல்லை; குறிப்பால் உணரும்படியே உள்ளது.

பதிகங்களில் பாடல்களின் அமைப்பும் பாங்கும்

பதிகங்கள் பெரும்பாலானவற்றில் இருக்கும் ஒரே மாதிரியான, சீரான அமைப்பு முறை யாவரையும் ஈர்க்கக் கூடியதாகும். திருக்கடைக்காப்புச் செய்யுள்களுக்கு முன்னால் அமைந்த கடைசி மூன்று பாடல்களும் ஒரே மாதிரியான கருத்தையே கூறுகின்றன. ஆனால் சம்பந்தரது பாடல்களில் நல்ல பயிற்சி உடையவர்களுக்கு அவ்வாறு ஒரே கருத்துத் திரும்பத் திரும்பக் கூறப்பெறுவது வெறும் மரபுபோல் தோன்றுவதில்லை. அவற்றில் இருக்கும் அழுத்த மான நம்பிக்கையும் துணிவும் தெளிவாகவே விளங்கும். உலகிற்கு உணர்த்த வேண்டிய மாபெரும் உண்மையையும் கொள்கையையும் சம்பந்தப் பெருமான் ஆழமாகக் கூறும் இடங்கள் அவை.

சேக்கிழார் சம்பந்தருடைய நெஞ்சக் கிடக்கையை நன்கு உணர்ந்தவர். சம்பந்தரின் பதிகங்களில் உள்ள எட்டாவது பாடல், மலைமகள் அஞ்சுமாறு கயிலை மலையைத் தன் இருபது தோள்களால் பெயர்த்தெடுக்க முற்பட்ட இராவணன் இறைவனது விரல் நுனி அழுத்த, தலையும் தோளும் நெறிபட்டு, பின் தன் பிழையை எண்ணி வருந்தியதையும், இறைவனது அருள் அவனுக்கு நாளும் வாளும் கொடுத்ததையும் மிக அழகாகக் கூறுகிறது. தம் பிழையை உணர்ந்து நொந்து இறைவனைச் சரண் அடைந்தாருக்கு அவருடைய அருள் வந்து துணை செய்யும் என்ற இத்தத்துவத்தையே அப்பாடல் உணர்த்துவதாகச் சேக்கிழார் தமது திருஞானசம்பந்த நாயனார் புராணத்தில் (77) குறிப்பிடுகிறார்.

அடுத்த ஒன்பதாவது பாடல் உணர்த்துவது: "இறைவன் தன்னை அன்போடு அடைந்தவர்களுக்கு இன்பமும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஞானமும் தருவான். அப்படியின்றித் தருக்கினால் முனைப்போடு அணுகும் பிரம்மா, விஷ்ணு ஆகியோருக்கு வெளிப்பட மாட்டான். பிரம்மா அன்னத்தின் மீதேறி இறைவனது முடியைக் காண முனைப்போடு முனைந்து தோற்றார்; திருமாலோ பன்றி உருவெடுத்து, நிலத்தைப் பிளந்து பாதாளம்வரை சென்றும் சிவபெருமானின் திருவடியைக் காண முடியவில்லை. இருவரும் தருக்கொழிந்து வழிபட்டபோது ஒளிப்பிழம்பாய் இறைவன் காட்சி தந்து அருளினான்" (78) என்பதையே.

அடுத்துவரும் பத்தாவது பாடலில் சமணர் பௌத்தர் களின் நிலை பேசப்படுகிறது. அவர்கள் மக்களை நல்வழியில் அழைத்துச் செல்ல மாட்டார்கள். அவர்கள் பிறவித் தளையி லிருந்து மக்களை விடுவிக்க மாட்டார்கள். வேதநாயகனின் மெய்யான வழிகளை உணர்ந்து பயனடைய மாட்டார்கள் (79) என்ற கருத்து உணர்த்தப்படுகிறது.

இனி, மற்ற பாடல்கள் உணர்த்தும் செய்திகளின் அமைப்பைக் காண்போம். இவற்றில் பல்வேறுபட்ட செய்திகள் பேசப்படுகின்றன. புராணச் செய்திகள், இறைவனது வீரச் செயல்கள், அருள் வெளிப்பட்டு நிற்கும் நிலைகள், தத்துவப் பின்புலத்தில் ஒளிரும் இயற்கையின் தோற்றம், சமுதாயத்தின் பொருளாதார, கலை, பண்பாட்டு நிலைகள், ஆலயங்களின் வருணனை, வழிபாடு, விளையும் பயன்கள், சம்பந்தரது காலத்தில் வாழ்ந்திருந்த சீரடியார் களைப்பற்றிய வரலாற்றுக் குறிப்புகள், தமிழகத்தில் தமிழுக்கும் வடமொழிக்கும் இருந்த ஏற்றமான நிலை, வேதம், வேள்வி, இசை, தத்துவ சமயக் கோட்பாடுகள் இவை யாவும் சம்பந்தரது பாடல்களிலிருந்து வெள்ளமெனப் பொங்கி வருகின்றன; இசையின் தேனின்பம் அந்த வெள்ளத்தில் தோய்ந்து கலந்து வந்து நம் நெஞ்சை இனிக்கச் செய்கின்றது.

இங்கு புராணம் என்பது வெறும் கற்பனை இல்லை; ஆழமான நம்பிக்கையின் அடித்தளம். தெய்வத்தின் அருட்செயல்களெல்லாம் எங்கோ கண்ணுக்குத் தோன்றாத வானத்து அரங்கில் நிகழவில்லை; எல்லாமே இந்த மண்ணில் நிகழ்வதாக இசையோடு கூறப்படுகின்றது. தமிழகம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிவலோகமாகப் பரிணமிக்கிறது. கோயில்கள் வெறுங்கல்லும் சுண்ணாம்பும் கலந்து உருவானவையல்ல. அவை மக்கள் வாழ்வின் உயிர்நாடியாக, ஜீவாதாரமாக் விளங்குகின்றன. கல்வி, கலை, ஞானம் எல்லாம் களிநடம்புரியும் இடமாகக் கொள்ளப்படுகின்றன. தமிழும் வடசொல்லும், இசையும் நாடகமும், கலையும் ரசனையும், ஏன் – புல்லும் மரமும்கூட தெய்வம் வாழும் கோயில்களாக மாற்றப்படுகின்றன. அவை யாவும் இறைவன் திருநடம் புரியும் நாடக அரங்குகளாக மிளிர்கின்றன.

மூன்று திருமுறைகளிலும் பதிகங்களுக்கு அளிக்கப்பட்ட பண்களைக் குறிக்கும் அட்டவணை

திருமுறை	பதிக எண்கள்	பதிகங்களுக் குரிய பண்	பண் எண்	மொத்தப் பதிகங்கள்
முதல் திருமுறை	1 - 22	நட்டப்பாடை	1	22
	23 - 46	தக்கராகம்	2	24
	47 - 62	பழந்தக்கராகம்	3	16
	63 - 74	தக்கேசி	4	12
	75 - 103	குறிஞ்சி	5	29
	104 - 128	வியாழக் குறிஞ்சி	6	25
	129 - 136	மேகராகக் குறிஞ்சி (யாழ்முரியுடன் சேர்த்து)	7	8
				136
இரண்டாம் திருமுறை	137 - 175	இந்தளம்	8	39
	176 - 189	சீகாமரம்	9	14
	190 - 218	காந்தாரம்	10	29
	219 - 232	பியந்தைக் காந்தாரம்	11	14
	233 - 248	நட்டராகம்	12	16
	249 - 258	செவ்வழி	13	10
				122

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மூன்றாம் திருமுறை	259 - 282 313 & 315	காந்தார பஞ்சமம்	14	26
	283 - 299	கொல்லி	15	17
	300 மட்டும்	கொல்லிக் கௌவாணம்	16	1
	301 - 312 314 & 375	கௌசிகம்	17	14
	316 - 324	பஞ்சமம்	18	9
	325 - 357	சாதாரி	19	33
	358 - 374	பழம்பஞ்சுரம்	20	17
	376 - 381	புறநீர்மை	21	6
	382 - 383	அந்தாளிக் குறிஞ்சி	22	2
				125

மொத்தப் பண்கள் 22. மொத்தப் பதிகங்கள் 383. திருவிடைவாய்ப் பதிகத்திற்குரிய பண் குறிப்பிடப்பட வில்லை.*

குறிப்புகள்

ஒரு பொதுக் குறிப்பு: இந்தப் புத்தகத்தில் பயன்படுத்தப் பட்டிருக்கும் ஏழு தேவாரத் திருமுறைகளும் தருமபுரம் ஆதீனத்தால் 1953, 1954, 1955, 1957, 1961, 1963, 1964 ஆண்டுகளில் பதிப்பிக்கப்பட்டு வெளிவந்தவை.

* கி.பி. 1070 முதல் 1120 வரை ஆட்சி புரிந்த முதற் குலோத்துங்க சோழனது படைத் தலைவரில் ஒருவனான மணவிற்கூத்தன் காளிங்கராயன் என்பவன் மூவர் தேவாரங்களைச் செப்பேட்டில் எழுதுவித்துத் திருக்கோயிலில் சேமப்படுத்தி வைத்தான். இச்செய்தி மூத்திறத்தார் ஈசன் முதல் திறத்தைப் பாடியவாறு ஒத்தமைத்த 'செப்பேட்டின் உள் எழுதி - இத்தலத்தின் எல்லைக்கிரிவாய் இசை எழுதினான் கூத்தன் தில்லைச்சிற் றம்பலத்தே சென்று' என்று தில்லைக் கோயிலில் பொறிக்கப் பட்டுள்ள கல்வெட்டு ஒன்றில் காணப்படுகிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

2

திருஞானசம்பந்தரின் திருநின்ற வாழ்வு

2.1. வாழ்க்கைக் குறிப்பு

தென்இந்தியச் சைவ வானிலே திருஞானசம்பந்தர் சுடர் விட்டுப் பிரகாசிக்கும் விடிவெள்ளியைப்போல் ஒளிமிக்கவராக விளங்குகிறார். சராசரங்களை யெல்லாம் சிவமயமாக்கவே சம்பந்தர் அவதரித்ததாகச் சேக்கிழார் கூறுகிறார்.[1] பெரிய புராணம் முழுவதும் 4296 பாடல்களை யுடையது. அதில் திருஞானசம்பந்தர் ஒருவரை மட்டுமே 1256 பாடல்களில் பாடியுள்ளார் சேக்கிழார். அதனால் 'பிள்ளை பாதி புராணம் பாதி' என்ற வழக்கு ஏற்பட்டுள்ளது.

சங்கரர் இந்த 'திராவிட சிசு'வின் ஞானத்தையும் மகத்துவத்தையும் பாராட்டுகிறார். சைவ மரபிலே திருநாவுக் கரசர் தொடங்கி இராமலிங்க அடிகள் உள்படப் பலரும் சம்பந்தரை உயர்ந்த பீடத்தில் வைத்துப் போற்றி இருக் கிறார்கள். நம்பியாண்டார் நம்பியும் சேக்கிழாரும் அவரைப் 'பிள்ளை' யென்று கருதிப் பாராட்டியிருக்கிறார்கள். பின் வந்த புலவர்கள் சம்பந்தரை முருகனின் அவதாரமாகவே எண்ணித் துதித்திருக்கிறார்கள். அவரது பாடல்களிலும், மற்றவர்கள் பாடல்களிலிருந்தும் சம்பந்தப் பெருமானின் வாழ்க்கையும் ஞானமும் ஒளிவிட்டுக் கொண்டிருக்கின்றன. தெய்வத்தின்பால் அன்பும், ஞானமும், மனிதர்களிடத்தும் பிற உயிர்களிடத்தும் அவருக்குள்ள அருளும் பரிவும், இயற்கையில் தோய்ந்து திளைக்கும் இன்பமும், இசையின் யோகமும், கலையுணர்வுக் காட்சியும், கவிதை ஆர்ந்த பேர் உணர்வும், உலகில் அருளையும் அன்பையும் உணர்த்தும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

எல்லாமும் சம்பந்தரது கவிதையிலே காலைக் கதிரவனின் செம்மையோடும் மாலை மதியத்தின் தண்மையோடும் பொலிந்து மிளிர்கின்றன.

இனி, சம்பந்தரது வாழ்வின் நுட்பங்களைக் காண்போம். இதில் இரண்டு முறைகள் கையாளப்படுகின்றன. ஒன்று அவரது வாழ்க்கையைச் சேக்கிழார் முதலியவர்கள் எவ்வாறு கண்டு உரைத்திருக்கிறார்கள் என்பது; மற்றொரு முறை சம்பந்தரது பாடல்களிலேயே அவரது வாழ்க்கைக் குறிப்புகள் உள்ளனவா என்று ஆராய்ந்து அவற்றை எடுத்துரைக்கும் முறையாகும்.

அப்பரும், ஆரூரரும், நம்பியாண்டார்நம்பி போன்றவர் களும் தங்களது பாடல்களிலே ஞானசம்பந்தரைப் பற்றிய கருத்துகளையும் செய்திகளையும் கூறியுள்ளார்கள். ஆனால் அவை அளவில் குறைந்தவை; சுருக்கமானவை. சேக்கிழார்தான் சம்பந்தரின் வாழ்க்கையையும் திருவுள்ளக் கிடக்கையையும் விரிவாக, சுவையாக, நீண்டதாகக் கூறியிருக்கிறார். சில பாடல்களுக்கு விரிவுரை கூறுவதைப் போல் அவர் விளக்கமாக எடுத்துரைத்திருக்கிறார். அவ்வாறு சம்பந்தர் வாழ்க்கையை விவரிக்கும்பொழுது சேக்கிழார் வெறும் கர்ண பரம்பரையான, செவி வழிச் செய்திகளுக்கு மட்டும் முக்கியத்துவம் கொடுத்து விடாமல் தம் முன்னோர் திருவாக்கையும், மற்றும் தமக்குக் கிடைத்த கல்வெட்டுகள் போன்ற ஆவணங்களையும் ஆராய்ந்தே திருஞானசம்பந்த நாயனார் புராணத்தைப் பாடி அருளியிருக்கிறார். சேக்கிழாருடைய ஒவ்வொரு சொல்லும் சம்பந்தருடைய வாழ்க்கையைச் சீர் தொடுத்துச் சிறப்பிக்கின்றது. அதை யெல்லாம் கூற ஆசையிருந்தாலும் விரிவஞ்சி திருஞான சம்பந்த நாயனார் புராணத்தின் சுருக்கத்தைமட்டும் இங்கு எடுத்துச் சொல்ல முயற்சி செய்யப்பட்டிருக்கிறது.

பொன்னி நாட்டின் சீர்காழியில் சிவனருளால் சிவபாத இருதயர் என்ற அந்தண சீலருக்கும் அவர்தம் துணைவியார் பகவதி என்னும் பெண்ணின் நல்லாளுக்கும் ஓர் ஆண் மகவு பிறந்தது. அவர்களது குடும்பம் வழி வழியாகச் சிவபக்தியிலும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வைதிகச் சைவ நெறியிலும் தோய்ந்து தழைத்து வந்தது. அந்தச் சிவநேயச் சூழலிலே அவர்களின் பிள்ளை வளர்ந்து வந்து மூன்றாம் ஆண்டினை எட்டியிருந்தது.

அச்சிறு குழந்தை மற்ற பிள்ளைகளைப்போல் அல்லாமல் எப்பொழுதும் சிவனென்னும் செம்பொருளில் ஆழங்கால்பட்டு அதே உணர்வில் திளைத்துக் கொண் டிருந்தது. சில நேரங்களில் சிவனது பிரிவை எண்ணி அச்சிறு பிள்ளை கண்ணில் நீர்மல்க செவ்விதழ்கள் துடிதுடிக்க அழத் தொடங்கும்; சில நேரம் மருண்டு மருண்டு விழிக்கும்.

ஒரு நாள் வைகறை நேரத்தில் தந்தையார் சிவபாத இருதயர் குளக்கரைக்கு நீராடச் செல்லும் பொழுது தம் பிள்ளைக்கனியையும் அணைத்து எடுத்துச் சென்றார். கரையில் குழந்தையை உட்கார வைத்து விட்டுக் குளத்து நீரில் இறங்கிக் குளிக்கத் தலைப்பட்டார். ‘அகமர்ஷணம்’ என்ற மந்திரத்தை ஜெபித்துக் கொண்டு நீரில் மூழ்கியவர் வெகு நேரம் வெளியில் வரவில்லை. அப்பொழுது இறைவனைக் கணமும் பிரியமாட்டாத உணர்வு வந்து தலைப்பட அக்குழந்தை ஈசன் உணர்வாலோ குழந்தைமை யாலோ அழத் தொடங்கியது. ‘அம்மா! அப்பா!’ என்று கூவி அழைத்தது ஆலயத்தின் விமான உச்சியைப் பார்த்தவாறே.

அப்பிள்ளையின் அழுகுரலுக்கிரங்கிய தோணியப்பர் தன் துணைவியுடன் விடையேறி வந்து தோன்றினார். அவரது திருவுள்ளப்படி அன்னையார் பிள்ளைக்கு அருகில் வந்து தன் அமுதத்தை ஞானத்தில் குழைத்து, ஒரு பொன் கிண்ணத்தில் ஏந்தி வந்து, அக்குழந்தையை ஆதரித்து எடுத்து ஊட்டினார்; கண்ணீரைத் துடைத்து அருள் பாலித்தார்.

உமையம்மை மகிழ்ந்தூட்டிய ஞானத்திருப்பாலை அக்குழந்தை பருகியது. அந்தக் கணத்தில் – திருஞானம் – சிவஞானம் பிள்ளையை ஆட்கொண்டது. அவர் சிவஞான சம்பந்தம் உற்றார்; திருஞானசம்பந்தர் ஆகினார்.

சிவன் அடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்
பவம் அதனை அறமாற்றும் பாங்கினில் ஓங்கிய ஞானம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உவமை இலாக் கலைஞானம். உணர்வு அரிய மெய்ஞ்ஞானம்
தவ முதல்வர் சம்பந்தர் தாம் உணர்ந்தார் அந்நிலையில்
(திருஞானசம்பந்த நாயனார் புராணம், 70)

என்பது சேக்கிழாரின் திருமொழி.

சிவபாத இருதயர் குளித்து எழுந்து நியமங்களை முற்ற முடித்துவிட்டுக் கரைக்கு வந்து தம் பிள்ளையைப் பார்த்தார்.

ஞானப்பிள்ளையின் கொள்ளைக்கவின் அழகும், அவர் சிவன் அருளில் தோய்ந்து திளைத்து நின்ற நிலையும் அவரது உள்ளத்தைக் கொள்ளை கொண்டன. அருகில் வந்து பார்த்தார். பிள்ளையின் வாய்க்கடையில் பால் ஒழுகி இருக்கக் கண்டார். அவருக்குச் சினம் தோன்றியது.

எச்சில் மயங் கிடஉனக்கு ஈது இட்டாரைக் காட்டு (71)

என்று கேட்டுக் கையில் வைத்திருந்த ஒரு பிரம்பை ஓங்கினார். பிள்ளை அழகைக் கண்டு யாரோ 'கண்ணேறு' பட்டுவிட்டார்கள் என்ற எண்ணம் அவர் மனதில் பட்டது போலும்! இங்கு 'எச்சில்' என்று அவர் குறித்தது "கண் எச்சிலை"த்தான். அந்தக் கண் எச்சில் படும்படியாக உனக்கு அமுதளித்தவர் யார் என்று அவர் கேட்டார்.

அப்பொழுது அந்தப் பிள்ளை – 'சிறிய பெருந்தகையார்' – அழவில்லை; கண்களில் களிதுள்ளியது. தலைமேல் தூக்கிய ்கவிரலால் 'விடைமேல் வீற்றிருப்போரைக் காட்டினார். எழுதாத மறைப் பொருளை எழுதும் மறையர்ன தமிழால் 'தோடுடைய செவியன்' என்று பாடி 'என்னை இது செய்தவன் இவன்' என்று சுட்டிக்காட்டினார். சுட்டப்படாத பொருளை 'இவன்' என்று அண்மையில் சுட்டும்பொழுது அது இதயத்தில் வீற்றிருப்பவனைத்தான் குறித்து நின்றது, தோணியீசனை அன்று என்று பொருள் தோன்றும்படியாகச் சேக்கிழார் காட்டுகிறார்.

சிவபாத இருதயர் அதனைக் காணவில்லை; வெருட்சியும் வியப்பும் வந்து ஆட்கொண்டன. காணாவிட்டாலும் நிகழ்ந்ததை ஊகித்து அறிந்து கொண்டார். மகனார் தோணிபுரக் கோயிலுக்குச் சென்றபொழுது கூற முடியாத மகிழ்ச்சியோடு தானும் தொடர்ந்து சென்றார். பின் தன்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வீட்டிற்கும் அழைத்துச் சென்றார். செய்தி கேட்டு ஊர் மக்கள் திரண்டு வந்தனர்.

மறுநாள் காலையில் பிள்ளையார் திருக்கோலக்கா விற்குச் சென்றார். ஐந்தெழுத்து பொறிக்கப்பட்ட தாளம் சிவனருளால் அவருக்குக் கிடைத்தது. சீர்காழியில் சம்பந்தர் தோணியப்பரைப் பலமுறைப் பாடிப் பரவினார். இடை யிடையே மகேந்திரப்பள்ளி, கருகாவூர், திருமுல்லைவாயில் முதலிய தலங்களுக்குச் சென்று பாமலர் தூவி வழிபட்டார்.

சம்பந்தரது சீரும் புகழும் நாடெங்கும் பரவின. திருநீலகண்ட யாழ்ப்பாணர் தம் துணைவியார் மதங்க சூளாமணியாருடன் சம்பந்தரை நாடி வந்து இணைந்தார். பிள்ளையாரும் பாணர் தம்பதியரைத் திருக்கோயிலுக்கு அழைத்துச் சென்றார். பாணரின் வேண்டுகோளை ஏற்று அவர்கள் இருவரையும் தம்முடனேயே தங்கியிருப்பதற்கும் தம் பதிகங்களை யாழில் கூட்டிப் பண் அமைப்பதற்கும் அனுமதித்தார். அந்தத் தொடர்பு அறாமல் தொடர்ந்தது.

பின்னர் அவர்கள் தில்லைச் சிதம்பரம் சென்றடைந் தனர். ஒரு நாள் தில்லைவாழ் அந்தணர்கள் சம்பந்தர் முன்னால் சிவகணங்களாகத் தோன்றினார்கள். அக் காட்சியை அவர் நீலகண்டருக்குக் காட்டினார்; அவரும் கண்டு மகிழ்ந்தார்.

தில்லையிலிருந்து சம்பந்தர் முதலியோர் எருக்கத்தம் புலியூர், திருமுதுகுன்றம், பெண்ஆகடத்துத் தூங்கானை மாடம், அரத்துறை ஆகிய தலங்களுக்குச் சென்று தமிழையும் இசையையும் தழைக்கச் செய்தனர்.

திருஅரத்துறையைச் சென்று அணையும்பொழுது சிவபெருமான் முன் இரவிலே கனவில் தோன்றிக் கட்டளை யிட்டபடி அவ்வூர் மக்கள் முத்துப்பல்லக்கு, குடை போன்ற வற்றையும் எடுத்துக்கொண்டு வந்து சம்பந்தரை எதிர் கொண்டு வரவேற்றார்கள். அவைகளைச் 'சிவன் அருள்' என்று மகிழ்ந்து ஏற்றுக்கொண்டார் சம்பந்தர்.

திருநெல்வெண்ணெய், பழுவூர், விசயமங்கை திருவைகாவூர், திருப்புறம்பயம், திருச்சேய்ஞலூர், திருப்பனந்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தாள், பந்தணைநல்லூர், ஓமாம்புலியூர், வாழ்கொளிபுத்தூர், கடம்பூர், நாரையூர், கருப்பறியலூர், ஆகிய தலங்களில் வழிபட்ட பிறகு சம்பந்தர் சீர்காழிக்குத் திரும்பினார். ஊர் மக்கள் இன்னிசை கீதங்களோடும் வேத கோஷங்களோடும் அன்பும் மகிழ்வும் பொங்க அவரை வரவேற்றார்கள்.

கோயிலிலிருந்து வீட்டிற்குத் திரும்பிய சம்பந்தரைப் பெண்களும் யாவரும் வரவேற்றனர். இந்தத் தருணத்தில் சேக்கிழார் ஒரு செய்தியைக் கூறுகிறார். அது சிந்திக்கத் தக்கது. அதாவது சம்பந்தரை அவருடைய தாயார் – ஈன்ற தாயார் – திருநீற்றுக்காப்பு அணிவித்து வணங்குகிறார். தாயார் "இறைஞ்சி ஏத்த" அவரும் தாயாரை முறைமையால் 'அருள் செய்து' தம்முடைய மடத்திற்குள் புகுகிறார் (மடத்துப்புக்கு) என்று கூறப்படுகிறது (262). ஈன்ற தாயார் பிள்ளையை – அவர் துறவு பூண்டிருந்தாலும் – வணங்கும் மரபு இல்லை. ஆனால் ஈன்ற தாயார் 'இறைஞ்சி ஏத்த' என்பதோடு பிள்ளையாரும் தாயாருக்கு 'அருள் செய்தார்' என்றும் இங்கே பார்க்கின்றோம்.

இந்த நிலையில் சம்பந்தருக்கு ஏழாம் ஆண்டு வந்தது. அவருக்கு 'உபநயனச் சடங்கு' செய்விக்கப்பட்டது. இத்தருணத்தில்தான் 'நமச்சிவாயப் பதிகத்தை' ஓதி அந்தணர்களுக்கு உணர்வித்தார் சம்பந்தர்.

திருநாவுக்கரசர் சீர்காழிப் பிள்ளையாரின் பெருமையைக் கேள்விப்பட்டார்; அங்கு வந்து அவரைச் சந்தித்தார். இருபெரும் சிவநேசச் செல்வர்களும் பல நாட்கள் இணைந்து அளவளாவினர். தோத்திரங்கள் பாடிப் பரவினர். அதற்குப் பிறகு திருநாவுக்கரசர் தம்முடைய தலயாத்தி ரையைத் தொடர்ந்து சென்றார். இந்தக் காலக்கட்டத்தில் தான் சம்பந்தர் தமிழில் பல புதுமை யாப்பு முறைகளையும் இசைக்கோவையையும் இசைத்துப் பாடினார் எனப்படுகிறது.

தந்தையாரும், பாணர்கள் இருவரும் தொடர்ந்து வரச் சம்பந்தர் தம்முடைய இரண்டாவது தலயாத்திரையைத் தொடங்கினார். திருக்கண்ணார் கோயில், புள்ளிருக்கு வேளூர், நின்றியூர், நீடூர், புன்கூர், மண்ணிப் பாலிக்கரை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முதலிய தலங்களில் வழிபட்ட பின்னால் அவர்கள் திருவையாறு வந்தடைந்தனர். அருகில் உள்ள தலங்களுக்கும் சென்றுவிட்ட பிறகு மேற்குத் திசையில் தன் யாத்திரையைத் தொடங்கினர்.

பாச்சிலாச்சிராமத்தில் ஒரு திருவருள் நிகழ்ந்தது. அங்கு அந்நாட்டுக் கொல்லிமழவசரன் மகளுக்கு பீடித்திருந்த முயலகன் என்னும் நோயைத் தீர்த்துவைத்தார் சம்பந்தர். கொங்கு நாட்டில் சென்றபொழுது அடியார்களுக்கு ஏற்பட்ட குளிர் நோயைத் திருநீலகண்டப் பதிகத்தைப் பாடி அவர்களைக் காப்பாற்றினார். வழியில் உள்ள பல கோயில்களையும் பாடிவிட்டுப் பட்டீச்சரம் வந்து சேர்ந்தார் சம்பந்தர். வெயிலின் கொடுமையில் சிக்கி வந்த சம்பந்தருக்குச் சிவகணங்கள் முத்துப்பந்தல் வேய்ந்து உதவின.

திருவாவடுதுறையில் தந்தையார் வேள்வி செய்வதற் காகப் பொன் வேண்டியதால் இறைவனைத் தொழுத சம்பந்தருக்குக் கோயில் பீடத்தில் பொன் முடிச்சு வைக்கப் பட்டது. நீலகண்டரின் தாயார் பிறந்த ஊரான தருமபுரத்தில் யாழ்முரிப் பதிகம் பாடி இறைவன் அருளையும் தமது யாழின் பெருமையையும் நிலை நாட்டினார்.

நள்ளாற்றை வழிபட்டுச் சென்று திருச்சாத்தமங்கையை அடைந்த சம்பந்தர் திருநீலநக்கர் என்ற அடியாரைச் சந்தித்து அவரது பெருமையை உலகறியச் செய்தார். அங்கு யாழ்ப்பாணர் தம்பதிகளுக்குத் திருநீலநக்கர் தம்முடைய யாக சாலையில் தங்குவதற்கு இடம் அமைத்துக் கொடுத்தார் (திருநீலநக்க நாயனார் புராணம் – 30).

இந்த நிலையில் திருச்செங்காட்டங்குடியிலிருந்து சிறுத்தொண்டர் வந்து வேண்டிக் கொண்டதற்கு இணங்கிச் சம்பந்தர் அங்கு சென்று கணபதீச்சரத்தைப் பாடிச் சிறப்பித்தார்.

திருமருகலில் பாம்பு தீண்டி இறந்து போன ஓர் இளைஞனைப் பதிகம் பாடி உயிர்த்தெழச் செய்து அவனது காதலியை அவனுக்குத் திருமணம் செய்து வாழவைத்தார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அதற்குப்பின் அப்பர் பெருமானை அடைந்து அவரோடு அளவளாவி மகிழ்ந்தார்.

திருவாரூர், வலிவலம் முதலிய கோயில்களைக் கண்டு வழிபட்டுப் பதிகப் பாமாலைகள் சூட்டி மகிழ்ந்த சம்பந்தர் அப்பருடன் கூடித் தன் தலயாத்திரையைத் தொடர்ந்தார். திருக்கடையூரில் குங்கிலியக் கலய நாயனாரை இருவரும் கண்டு மகிழ்ந்தார்கள். அங்கிருந்து அவர்கள் திருவீழிமிழலை என்னும் திருத்தலத்தைச் சென்றடைந்தார்கள். இருவரது வருகையால் அவ்வூர் மக்கள் அவதியுற்ற பஞ்சப் பிணி அகன்றது. வீழிமிழலைக்கடவுள் அருள் காட்டி வழங்கிய பொற்காசுகளைக் கொண்டு பசியால் வருந்திய மக்களுக்கு இருவேளையும் காயும் நெய்யும் கூடிய நல்ல உணவு வழங்கப்பட்டது.

திருமறைக்காடு மற்றொரு முக்கியமான தலம். அவ்வூர்க் கோயிலில் உள்ள பிரதான வாயிற் கதவுகள் பல ஆண்டுகளாக அடைபட்டுக் கிடந்தன. இறைவனைத் தரிசிக்க முடியாமல் அடியார்கள் நெஞ்சம் நொந்து போயிருந்தனர். அங்கு வந்து சேர்ந்த ஞானசம்பந்தரும் நாவுக்கரசரும் அடியார் துயர்களை அகற்ற உறுதி பூண்டனர். அப்பர் பாடிய திருப்பதிகம் கேட்டுக் கோயில் கதவுகள் திறந்தன. சம்பந்தர் திருக்கடைக்காப்புக் கொள்ள - அடைப்பதற்காகப் பாடிய பதிகத்திறத்தால் கதவுகள் மூடிக்கொண்டன. அடியார் ஆரவாரித்தனர்.

திருவாய்மூரில் இறைவனை ஆடும் கோலத்தில் கண்டு கசிந்துருகினார் சம்பந்தர். அக்காட்சியை அவர் அப்பருக்கும் காட்ட அவரும் கண்டு மகிழ்ந்தார்.

திருமறைக்காட்டில் இருவரும் தங்கியிருக்கையில் மதுரையிலிருந்து பாண்டிமாதேவியும் அமைச்சர் குலச் சிறையாரும் அனுப்பியிருந்த தூதுவர்கள் அவர்களைச் சந்தித்தனர். மதுரையில் மன்னனும் பிறரும் புறச் சமயமான சமணர்களின் பிடியில் சிக்கித் தொன்மையான சைவ சமய நெறிகளைத் துறந்து சைவர்களைத் துயரில் ஆழ்த்தியிருந்த செய்தியையும், உடனே மதுரைக்கு எழுந்தருளி மன்னனை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

யும் மக்களையும் நன்னெறிப்படுத்த வேண்டும் என்ற அவர்களது முறையீட்டையும் மதுரைத் தூதுவர்கள் தொழுது அறிவித்தார்கள்.

திருஞானசம்பந்தர் நாவுக்கரசரிடம் விடைபெற்றுக் கொண்டு மதுரைக்குப் புறப்பட்டார். செல்லும் வழியில் பல தலங்களில் வழிபட்டும் பதிகம் சாத்தியும் சம்பந்தர் தன் பயணத்தைத் தொடர்ந்து மதுரையாகிய ஆலவாயை வந்தடைந்தார். தேவியும், அமைச்சரும் அடியார் குழாமும் அவரை ஆரவாரத்துடன் வரவேற்று வணங்கினார்கள்.

மதுரையைச் சுற்றியுள்ள ஆனைமலை முதலிய எண்பெருங் குன்றங்களில் வாழ்ந்திருந்த சமணத் துறவிகள் தீய கனவுகளைக் கண்டு நெஞ்சம் பதைத்தனர். அச்சமும் அவலமும் ஆட்கொள்ள அவர்கள் பாண்டிய மன்னனிடம் சென்று சம்பந்தர் வருகை குறித்து முறையிட்டனர். சமணர்கள் அரசியல் செல்வாக்கு கெடுபிடியாக இருக்கும் மதுரையில் வேற்றுச் சமயத்தார் - அதுவும் புகழ் வாய்ந்த அவர்களது தலைவர் - சம்பந்தர் மதுரைக்கு வந்ததை அந்தக் காலச் சூழ்நிலையில் அவர்கள் ஓர் அக்கிரமமாகவும் அனுசிதமாகவும் நினைத்தார்கள் போலும். அரசனுடைய இசைவைப் பெற்று அவர்கள் சம்பந்தரை ஊரைவிட்டே விரட்டத் துணிந்தனர். அவர் தங்கியிருந்த திருமடத்திற்குத் தீ வைத்தனர். ஆனால் ஆலவாய்ப் பெருமானின் அருளால் சம்பந்தரும் அடியார்களும் தீக்கு இரையாகாமல் தப்பினார்கள்.

சம்பந்தர் சமணத் துறவியர் சிலரின் சூழ்ச்சியைப் புரிந்து கொண்டார்; ஆனால் அரசனே அதற்குப் பொறுப்பு ஏற்க வேண்டும் என்று துணிந்தார். ஒரு பதிகம் எழுந்தது 'அமணர் கொளுவிய தழல், பையவே சென்று பாண்டியர்க்கு ஆகவே!' என்பது அவரது தீர்ப்பு. அத் தீ மன்னனை வெப்பு நோயாகச் (ஜுரமாகச்) சென்று பிடித்துக் கொண்டது.

அவனது சுரத்தைத் தீர்க்க சமணர்கள் தங்கள் மணிமந்திர ஔஷதச் சாதனங்களைப் பல வகையிலும் முயன்று பார்த்தார்கள்; ஆனால் பயனில்லை. நோய்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முன்னைக் காட்டிலும் அதிகமாகக் கொதித்தது. அரசனது நிலை கண்டு அஞ்சி வருந்திய அரசியும் அமைச்சரும் அவனது சம்மதத்தின் பேரில் சம்பந்தரை அழைத்து வந்தனர்.

அரண்மனைக்கு வருவதற்கு முன்னால் சம்பந்தர் ஆலவாய்ப் பெருமானைச் சென்று வணங்கினார். அவருடைய திருவுள்ள இசைவை வேண்டிப் பெற்றுக் கொண்டார்.

சமணர்களது சூழலுக்கு இடையே சம்பந்தர் வந்தார். அவரைக் கண்ட மாத்திரத்தில் மன்னன் எழுந்து மரியாதை செய்தான். மன்னனது நோயைத் தீர்ப்பவர்களின் சமயமே உண்மைச் சமயம்; அச்சமயத்தையே மன்னன் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று முடிவாயிற்று. சமணர்களது முயற்சி தோல்வியைச் சந்தித்தது. சம்பந்தர் 'மந்திரமாவது நீறு' என்ற திருநீற்றுப் பதிகத்தைப் பாடி மன்னனது உடலெங்கும் திருநீற்றை நீவினார். நோய் அகன்றது. மன்னனும் தேவியும் மகிழ்ந்தனர்.

ஆனால் சமணர்கள் மேலும் வாதுக்கிழுத்தனர். அனல் வாதம், புனல். வாதம் என்பன மேற்கொள்ளப்பட்டன. அனல் வாதத்தின்போது சம்பந்தரால் எழுதப்பட்டுத் தீயிலிடப்பட்ட 'போகமார்த்த பூண்முலையாள்' என்ற பச்சைப் பதிகம் தாங்கிய ஓலை எரியாமல் பசுமையாகவே இருந்தது. சமணர்களின் சமய ஓலை கருகிவிட்டது. புனல் வாதத்தின்போது ஓடும் வைகை வெள்ளத்தில் விடப்பட்ட சமணர்களது ஓலை அடித்துச் செல்லப்பட்டது. சம்பந்தரின் ஓலை வெள்ளத்தை எதிர்த்துச் சென்று திருவேடகம் என்னும் ஊரில் கரை ஏறிக்கொண்டது. அமைச்சர் குலச்சிறையார் ஏற்கனவே ஒரு விதி அமைத்திருந்தார். அதன்படி இரு தரத்தினரும் ஒரு பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும். இனிமேல் தோற்றவர்கள் அடுத்த வாதத்திற்கு அழைக்கக் கூடாது. யார் தோற்றாலும் தண்டனைக்கு ஆளாக வேண்டும் என்பது அவரது நிபந்தனை. சமணர்களும் அதனை ஏற்றுக் கொண்டார்கள். அவசரத்தில் – சினத்தில், 'தோற்றவர்கள் கழுவேற வேண்டும்!' என்று அவர்களாகவே நிபந்தனையை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

விதித்துக் கொண்டார்கள். இப்பொழுது புனல் வாதத்திலும் சமணர்கள் தோற்றுவிட்டதால் அவர்களே கழுவேறி உயிர் விட முன்வந்தார்கள். சம்பந்தர் அதில் தலையிடவில்லை; அரச நீதி எதுவோ அது நடப்பதற்குத் தான் குறுக்கே வர விரும்பவில்லை. அரசனுக்குத் திருநீறு அளித்து, அவனைச் சைவ சமயத்தில் மீண்டும் ஏற்றுக்கொண்டார். அரசியும், அமைச்சரும், அடியார்களும், பொது மக்களும் மகிழ் வடைந்தனர். அதன்பிறகு பாண்டிய நாட்டின் திருத்தலங் களில் வழிபாடு செய்துவிட்டுச் சம்பந்தர் சீர்காழிக்குத் திரும்பினார்.

அவர் மேற்கொண்ட மூன்றாவது தல யாத்திரை நீண்டதாக இருந்தது. அவர் திருக்காளத்திவரை சென்றார். அங்கிருந்தபடியே பருப்பதம், கேதாரம், கயிலாயம் ஆகிய தலங்களை மனத்தால் நினைந்துருகிப் பதிகங்கள் பாடினார். திரும்பி வருகையில் திருமயிலாப்பூரில் உள்ள கபாலீச்சரம் சென்று பாடினார். சிவனேசன் என்ற அடியாரின் திருமகள் பூம்பாவை பாம்பு தீண்டி இறந்துபோக, அவ்வடியார் அவளுடைய சாம்பலை ஒரு சட்டியில் வைத்து சம்பந்தரது வருகைக்காகக் காத்திருந்தார். சம்பந்தர் நலம் உரைத்த பூம்பாவைப் பாட்டை - பதிகத்தை கபாலியின் திருவருளை நினைத்துத் துதித்துப் பாடினார். பூம்பாவையின் சாம்பல் உருப்பெற்று உயிரும் பெற்றது. பூம்பாவை மீண்டாள்.

இந்த நிலையில் சம்பந்தருக்குத் திருமணம் செய்யத் தக்கப் 'புண்ணியப் பதினாறாம் ஆண்டு' நிகழ்ந்தது. பூம்பாவையைத் துணைவியாக ஏற்றுக்கொள்ளும்படிச் சிவனேசர் சம்பந்தரை வேண்டிக்கொண்டார். ஆனால் 'பூம்பாவை என் மகளைப் போன்றவள்!' என்று சொல்லிச் சம்பந்தர் அதற்கு ஒப்புக்கொள்ள மறுத்தார். அதன்பிறகு பல தலங்களை வழிபட்ட பின்னால் சம்பந்தர் மீண்டும் சீர்காழிக்கு வந்து சேர்ந்தார். அவர்தம் பெற்றோர்கள் நல்லூர்ப் பெருமணம் (ஆசாள்புரம்) என்னும் தலத்தைச் சார்ந்த நம்பாண்டார் நம்பியின் திருமகளை மணம் பேசி முடித்தனர். சம்பந்தர் முதலில் திருமணத்திற்கு ஒப்புக்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கொள்ளவில்லை. எனினும் குலமுறை பேணவும் இல்லறக் கடமைகளைச் செய்வதற்காகவும் அவரை ஒப்புக்கொள்ள வைத்தனர் பெற்றோரும் மற்றோரும்.

நல்லூர்ப் பெருமணத்தில் திருமணச் சடங்குகள் நடைபெற்றன. ஆனால் இதற்குள் சம்பந்தரது ஆன்மா முதிர்ந்து பக்குவப்பட்டிருந்தது; இறைவனோடு ஒன்றிவிட வேண்டும் என்று மிகவும் வேட்கை கொண்டிருந்தது. திருமண பந்தமோ உலக பந்தமோ அவரை இனிமேல் கட்டுப்படுத்த முடியாது. 'கல் மிதித்து' திருமணச் சடங்கு செய்யும் 'கல்லூர்த் திருமணம் வேண்டா!' என்று அவர் இறைவனை மனம் உருகி வேண்டிக் கொண்டார். உலக பந்தத்தை நீக்கும் 'போக்கு அருளீர்' என்று முறையிட்டார். திருமணத்திற்கு வந்தவர்களுடன் அவர் அவ்வூர்க் கோயிலை அடைந்து வலம் வந்தார். அப்பொழுது இறைவன் ஒரு சோதிப் பிழம்பாக வந்து தோன்றினார். சம்பந்தரும் அங்கு வந்திருந்த அனைவரும் அந்த தீப்பிழம்புக்குள் நுழைந்து மறைந்தனர்; பெற்றோரும் மாமன் மாமியும், திருமணப் பெண்ணும், நீலநக்கர், நீலகண்டர், முருகனார் ஆகியோரும் அவர்தம் மனைவியாரும் அவ்வாறே சோதியில் கலந்து மறைந்தனர். சோதிக்குள் நுழையும் தருணத்தில் சம்பந்தர் 'காதலாகிக் கசிந்துருகி' என்று தொடங்கும் பஞ்சாட்சரப் பதிகத்தைப் பாடிக்கொண்டே மறைந்தார்.

2.2. சம்பந்தரது வாழ்க்கை – ஓர் ஆய்வு

இந்த நாயனாரின் பெயர் திருஞானசம்பந்தர் என்பதே. ஆனால் இது அவரது இயற்பெயர்தானா? சேக்கிழார் 'பொன் கிண்ணம் அளித்து உண் அடிசில்' என்று உமை அம்மை தம் பாலினைக் குழைத்தருளி ஊட்ட ஆளுடைய பிள்ளையாராகியவர் 'சிவஞானசம்பந்தர் ஆயினர்' என்று தெளிவாகக் கூறுவதால் இந்தப் பெயர் அக்காரணம் பற்றி அவருக்கு ஏற்பட்ட பெயராகும். (திருஞானசம்பந்தர் புராணம், 69).

ஆளுடைய பிள்ளையாரின் பிள்ளைப் பருவத்துச் சடங்குகள் பலவற்றைச் சேக்கிழார் குறிப்பிடுகிறார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

'நாமகரணத்து அழகு நாள் பெற நிறுத்தி' (41) என்று 'நாமகரணத்திற்கு நாள் குறித்து விட்டதையும் பார்க்கிறோம். நாமகரணத்திற்கு இடப்பட்ட நாமம் என்ன என்று தெரியவில்லை. ஆனால் திரு.வி.க. அவர்களின் அரும்பத உரையில் "குழந்தைக்குத் தாய் தந்தையர் இட்ட பெயர் இன்னதெனத் தெரியவில்லை" என்று காணப்படுகிறது.[2]

ஆனால் சேக்கிழார் மற்ற நாயனார்களைப்பற்றிக் கூறும் பொழுது அவர்களது இயற்பெயர் குறிக்கப்படுவதைப் பார்க்கிறோம். எடுத்துக்காட்டாக, திருநாவுக்கரசரின் இயற்பெயர் மருள் நீக்கியார்; கண்ணப்ப நாயனாரின் இயற்பெயர் திண்ணன்; ஆரூரரின் பெயர் நம்பியாரூரர்; காரைக்கால் அம்மையாரின் பெயர் புனிதவதியார், சிறுத் தொண்டரின் பெயர் பரஞ்சோதி, கழறிற்றறிவாரின் பெயர் பெருமாக்கோதையார் - இவ்வாறு சேக்கிழார் குறிப் பிட்டிருப்பதைக் காண்கிறோம். திருஞானசம்பந்தரை மட்டும் சேக்கிழார் இயற்பெயரிட்டு அழைக்கவில்லை; ஆனால் "புகலிப்பிள்ளையார்," "சிரபுரத்துச் சிறுவர்" என்றே குறிப்பிடுகிறார். அவருக்கு முன்வந்த நம்பியாண்டார் நம்பியோ சம்பந்தரை 'பிரமாபுர நகர மன்னன்' என்றும் 'சண்பையர் நாதன்' என்றும் 'கவுணியர் தீபன்' என்றும் அவருடைய ஊரையும் கோத்திரத்தையும் குறிப்பிட்டே அழைக்கிறார்.

சம்பந்தர் தன்னை எவ்வாறு அழைத்துக்கொள்கிறார் என்று பார்ப்போம்: 'பந்தன்,' 'கழுமல மாநகர் தலைவன்,' 'கவுணி,' 'சிரபுர நகர் இறை,' 'காழியர் மன்னன்,' 'கழுமல ஊரன்,' 'பொன்னி நாடன்,' 'புகலிவேந்தன்,' 'சிரபுரக் கோன்,' 'புகலிநகர் மன்னன்,' 'கவுணியர் குலபதி,' 'காழியர்கோன்,' 'காழிக் கவுணியன்,' 'காழி ஊரன்' என்றெல்லாம்தான் சம்பந்தர் தன் பெயரைக் குறிப்பிடுகிறார். எங்கும் அவரது இயற்பெயரைக் காணோம்.

மேற்கண்ட பெயர்கள் எல்லாமே ஞானப்பால் உண்ட நிகழ்ச்சியையோ, ஊரின் பெயரையோ, கோத்திரப் பெயரையோ அடிப்படையாகக் கொண்டே அமைந்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருப்பதைப் பார்க்கிறோம். அவற்றில் அவரது இயற்பெயர் எதுவும் தெரியவில்லை.

நாமகரணச் சடங்கு நிகழ்ந்திருந்த காரணத்தால் பெற்றோர்கள் அவருக்கு ஒரு நாமத்தை வைத்திருக்க வேண்டும். திருஞானசம்பந்தம் பெற்றுவிட்ட பிறகு அவருக்கு ஏற்பட்ட புகழால் அந்தப் பெயரே நிலைத்து இயற்பெயர் மறக்கப்பட்டது போலும். சம்பந்தப் பெருமான் தன்னுடைய முதற்பதிகத்திலேயே (11) தன்னை 'ஞானசம்பந்தன்' என்றே அழைத்துக்கொள்கிறார். 'பெம்மான் இவன் தன்னை, ஒரு நெறிய மனம் வைத்து உணர் ஞானசம்பந்தன்' என்று அதற்குக் காரண விளக்கமும் கூறுகிறார்.

இனி சம்பந்தரின் ஊர் சீர்காழி என்று அவரது பதிகங்களில் பல இடங்களில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

சம்பந்தருடைய தகப்பனார் சிவபாத இருதயர் என்றும் தாயார் பகவதியார் என்றும் சேக்கிழார் குறிப்பிட்டுவிட்டார். ஆனால் சம்பந்தர் எந்த இடத்திலும் தம்முடைய பெற்றோர் களின் பெயரைக் குறிக்கவில்லை. வேறு பல நாயனார்கள் தங்கள் பெற்றோர்களின் பெயரைக் குறிப்பிட்டிருப்பதைப் பார்க்கிறோம். ஆரூரர் தம்மை, 'சடையன் தன் காதலன்,' 'இசைஞானி சிறுவன்' என்று தெளிவாகக் குறிப்பிடுகிறார். இருப்பினும் சம்பந்தர் தம் தந்தையின் தோள்மீது அமர்ந்து தலங்களுக்குச் சென்றதாக 'அத்தன் பியல்மேல் இருந்து' (2.220.11) என்று சொல்கிறார். தந்தையாரை 'தாதையார்' (3.282.2) என்றும் குறிப்பிடுகிறார்.

சம்பந்தர் கவுணிய (கவுண்டின்ய) கோத்திரத்தில் தோன்றியவர் என்பதும் அவரது பாடல்களில் பல இடங்களிலும் காணப்பட்டிருக்கிறது.

கவுண்டின்ய கோத்திரத்தைச் சார்ந்த அந்தணர்கள் தமிழ் நாட்டில் மிகவும் பழமை வாய்ந்தவர்கள். அவர்களது வேத ஞானமும் வைதிக நெறியும் மிகவும் ஆழம் பட்டிருந்தவை. அவர்கள் சைவ நெறியிலும் ஊன்றி நிலை பெற்றவர்கள். இத்தருணத்தில் சங்க நூலான புறநானூற்றில் ஆவூர் மூலங்கிழார் என்ற புலவர் தமது பாடலில் (166)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கவுணியன் விண்ணந்தாயன் என்ற ஓர் அந்தணக் கவுணியனை மிகவும் சிறப்பித்துப் பாராட்டியிருப்பதைக் குறிப்பிடுவது மிகவும் முக்கியமாகும். சிவனுக்கும் வேத நெறிக்கும் எதிராக இருந்தவர்களை (பௌத்த சமணர்களை) கவுணியன் விண்ணந்தாயனின் மூதாதைகள் வென்று புகழ் கைக்கொண்ட நிகழ்ச்சியை பார்ப்பன வாகை என்ற துறையில் வைத்துப் பாராட்டுகிறார் ஆவூர் மூலங்கிழார். மேற் குறிப்பிட்ட புறநானூற்றுச் செய்யுளின் குறிப்புரையில், கவுணியன் விண்ணந்தாயன் சோழ நாட்டில் உள்ள பூஞ்சாற்றூர் என்னும் ஊரைச் சார்ந்த 'பார்ப்பான்' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. 'கவுணியன்' என்றதால் அவன் கௌண்டின்ய கோத்திரத்தைச் சார்ந்தவன் என்பதும் தெரிகிறது.

சிலப்பதிகாரத்தின் உரையாசிரியராகிய அடியார்க்கு நல்லாரின் காலத்திற்கு (கி.பி.12ஆம் நூற்றாண்டு) முற்பட்டவ ரான புறநானூற்றின் பழைய உரைகாரர், சிவனுக்கு எதிராக இருந்தோர் பௌத்தர்கள் போன்ற புறச்சமயத்தவர்கள்தாம் என்றே குறிப்பிடுகிறார். கௌண்டின்ய கோத்திரத்து அந்தணர்கள் வைதிகச் சைவ நெறியைப் பின்பற்றியவர்கள் என்பதோடு அச்சமயத்தை உறுதியாகக் கட்டிக்காப்பதில் வல்லவர்களாகவும் விளங்கியிருக்கிறார்கள்.

இந்தக் கவுண்டின்ய கோத்திரத்தைச் சார்ந்த ஒருவர் (ஹுன் 'இ' யென்) இந்தோ-சைனாவிற்கு கி.பி. முதல் நூற்றாண்டுகளில் சென்றடைந்து அங்கு ஃபூனன் சாம் ராஜ்யத்தை நிறுவிக் கவுண்டின்ய அரச வம்சத்தைத் தோற்று வித்திருக்கிறார். இதுபற்றி ஃபிலோசியட் என்ற அறிஞர் குறிப்பிட்டு எழுதியிருப்பதை எஸ். சிங்காரவேலு என்பவர் கூறுவதை இங்கு காண்போம்.

"இந்த கோத்திரத்தைச் (கவுண்டின்ய) சார்ந்தவர்கள் தென்னிந்தியாவில் சைவ சமயத்தை நிலைநிறுத்துவதில் ஒரு முக்கியப் பங்கினை ஆற்றியிருக்கிறார்கள். சோழ நாட்டினைச் சார்ந்த கவுண்டின்ய கோத்திரத்தினரும், ஃபூனன் அரசாட்சியைச் சார்ந்த கவுண்டின்யனும் ஒரே சரித்திர

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

காலத்தில் சைவ சமயத்தைப் பாதுகாத்துப் பேணுவதில் மிகவும் ஈடுபட்டிருந்தார்கள் என்பதையும், இருவரும் ஒரே பரம்பரையைச் சார்ந்தவர்கள் என்று சொல்லிக்கொள்வதையும் அறிந்துகொள்வது மிகவும் குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் வாய்ந்ததாகும்."[3]

வைதிகச் சைவ நெறியை நிலைநாட்டுவதற்காகவும் சமணர்களது எதிர்ப்பை எதிர்கொள்வதற்காகவும் தனக்கு ஒரு மைந்தனைத் தந்தருள வேண்டும் என்று சிவபாத இருதயர் சிவபெருமானை வேண்டித் துதித்தார் என்று சேக்கிழார் கூறுகிறார்.

சம்பந்தரது வாழ்வில் மிகவும் முக்கியமான நிகழ்ச்சியாக அமைந்திருப்பது அவர் ஞானப்பாலினை உண்டு தேனார்ந்த பாடல்களைப் பாடத் தொடங்கியதுதான் என்பதைப் பெரிய புராணத்தில் பார்க்கிறோம். சம்பந்தரே இந்த நிகழ்ச்சியைத் தம்முடைய பாடல்களில் குறித்திருக்கிறார் என்று கருதுவதற்கு இடமிருக்கிறது.

திருக்கழுமலப் பதிகத்தின் இரண்டாவது பாட்டு இது பற்றி ஓர் ஒளியைப் பாய்ச்சுகின்றது.

பிள்ளையார் மதுரைக்குச் சென்றிருக்கையில் அவருடைய தந்தையார் அங்கு தன் திருமகனாரைத் தரிசிக்க வந்ததாகச் சேக்கிழார் குறிப்பிடுகிறார். தந்தையைக் கண்ட தனயனுக்குக் காழியில் உள்ள அம்மையையும் அப்பனையும் பற்றிய நினைவு வந்து விட்டது போலும். அந்த நினைவில் உருகிச் சம்பந்தர் பாடியதாகக் கீழ்வரும் பாட்டில் குறிப்புகள் காணப்படுகின்றன என்று கருதலாம்.

போதைஆர் பொற்கிண்ணத்து அடிசில் பொல்லாதெனத்
தாதையார் முனிவுறத் தான்எனை ஆண்டவன்
காதையார் குழையினன் கழுமல வளநகர்ப்
பேதையாள் அவளொடும் பெருந்தகை இருந்ததே (3.282.2)

இங்கு போது என்றால் தாமரை மலர். தாமரை மலர் வடிவத்தில் அமைந்த தங்கக் கிண்ணத்தில் இருந்த அடிசிலை – பாலைத் தீமையானது – அதாவது உகந்தது. அல்ல என்று

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தான் அதனை உண்டதற்காகத் தன் தந்தை தன்னிடம் வெகுண்டார் என்ற சம்பந்தர் தெளிவாகக் கூறியிருக்கிறார்.

மதுரைக்கு வந்திருந்த இதே தந்தை கழுமலத்தில் (சீர்காழியில்) வெகுண்டு கண்டித்தபோது, தன்னை ஆண்டுகொண்டவன் தோணிபுரத்தில் பேதையாளாகிய அம்மையோடு வீற்றிருக்கும் அந்தத் தந்தையேயாவன் என்று சம்பந்தப் பிள்ளை நினைந்துருகிய உணர்வு இந்தப் பாட்டில் ஊறிவருவது விளங்குகிறது அல்லவா? அவர் அப்பொழுது பாலகனாக இருந்த நிலையும் ஓரளவு தெரிகிறது என்றே கருதலாம்.

இனி வேறு ஓர் அகச்சான்று இருப்பதாகக் கொள்ள லாம். இந்தப்பாட்டு சம்பந்தர் முதல் முதலாகத் திருவாய் மலர்ந்தருளிய பதிகத்திலேயே வருகிறது. அந்தப் பாட்டைப் பார்ப்போம்.

> அருநெறியமறை வல்ல முனிஅகன் பொய்கை அலர்மேய
> பெருநெறியபிர மாபுரம் மேவிய பெம்மான்இவன் தன்னை
> (1.1.11)

என்பன பாட்டின் முதல் இரண்டு அடிகள்.

இந்தப் பாட்டு அகத்துறையில் அமைந்துள்ளதை எளிதில் அறிந்துகொள்ள முடியும் ‘என் உள்ளம் கவர்கள்வன்’ (1.1.1) என்றும் ‘வெள்வளை சோர என் உள்ளங்கவர் கள்வன்’ (1.1.6) என்றும் ஒரு பெண் காதலில் உருகிப்பாடுவதுபோன்ற உணர்வில் இந்தப் பாட்டு வருகிறது. இதனை மனதில் வைத்துக்கொண்டு இப்பாடல் வரிகளைக் கவனிப்போம்.

இங்கு ‘அருநெறிய மறைவல்ல முனி’ என்பது சிவபெருமானையே குறிக்கின்றது என்று எடுத்துக் கொள்ளலாம். பெறுவதற்கரிய வீட்டின்பத்தை அளிக்க வல்லவனும் மறையில் வல்லவனுமான முனிவனாகிய சிவபெருமான் அகன்ற பொய்கைக் கரையில் ‘அலர்’ தூற்றி என் காதலை வெளிப்படுத்தி விட்டான் என்பது இந்த வரிகளின் ஆழமான பொருள்.

சிவபெருமான் மறையில் வல்லவன் என்பதைச் சம்பந்தர் பல இடங்களில் பாடியிருக்கிறார். ‘பாடல் மறை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வல்லான்' (1.46.3), 'வேதங்கள் வேறு வேறு தெரித்தவன்' (1.113.1), 'மறைபாடும் பரம யோகி' (1.119.3), 'வேதம் விரித்தோதுவான்' (3.288.4) என்றெல்லாம் வருவதைப் பார்க்கிறோம். எனவே இங்கு 'மறை வல்ல முனி' என்பது சிவபெருமானைக் குறிப்ப தாகக் கொள்வது பொருத்தமுடையதாகவே இருக்கின்றது.

'அலர்' என்பது பழந்தமிழில் மறைவாக இருந்த காதலைப் பலரும் அறிந்துகொண்டு தங்களுக்குள் பேசிக் கொள்வதைக் குறிக்கிறது.

எனவே 'அருநெறியாகிய வீட்டின்ப நெறியைத் தருகின்ற மறையில் வல்லவனான முனிவன் (சிவன்) பிரமாபுரத்தில் அகன்று கிடக்கும் பொய்கைக் கரையிலே என்னுடைய அகக்காதல் 'அலர்' ஆகி எல்லோரும் தெரிந்து கொள்ளும்படியாகச் செய்து என்னை ஆண்டு கொண்டான்' என்பது மேற்கண்ட பாடல் வரிகளின் பொருள் என்று எடுத்துக் கொள்ளலாம்.

திருஞானசம்பந்தரை, அம்மையப்பனாக வந்து பிரமாபுரப் பொய்கைக் கரையில்தான் சிவன் ஆட்கொண்டு இருக்கிறான் என்பதனைச் சேக்கிழார் இனிது விளக்கி யிருக்கிறார்.

திருக்கோலக்காவிற்குச் சென்று அம்மை மகிழ்ந்தளித்த பொற்றாளத்தைச் சம்பந்தர் பெற்ற வரலாற்றை இரண்டாவது நிகழ்ச்சியாகச் சேக்கிழார் பாடுகிறார். முதல் பாட்டைச் சம்பந்தர் பாடி முடித்தவுடனேயே பொற்றாளம் அவர் கையில் கிடைத்துவிட்டது என்றும், அத்தாளத்தை வைத்துக் கொண்டே மற்ற பாடல்களையும் திருக்கடைக்காப்புச் செய்யுளையும் அவர் பாடி முடித்தார் என்றும் சேக்கிழார் குறிக்கின்றார். ஆனால் சம்பந்தரது பாடலில் இதற்கான குறிப்பு ஏதுமில்லை. இருப்பினும் சம்பந்தர் காலத்தை ஒட்டித் தோன்றிய நம்பி ஆரூரர் தமது பாடலில் இந்த நிகழ்ச்சியைப் பற்றித் தெளிவாகவே குறிப்பிட்டுள்ளார்.

ஞானசம்பந்தர்க்கு உலகவர் முன் தாளம் ஈந்தவன் (7.62.8)

என்பது ஆரூரரின் வாக்கு.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மூன்றாவது நிகழ்ச்சியாகச் சேக்கிழார் கூறுவது பாச்சிலாச்சிராமத்தில் நிகழ்ந்த அருஞ்செயல். கொல்லி மழவரையனின் அரசிளங்குமரி 'முயலகன்' என்ற நோயினால் பீடிக்கப்பட்டு அடிக்கடி மரக்கட்டைபோல் உணர்வில்லாமல் கிடந்து கொண்டிருந்தாள். மன்னன் பலவகை மருத்துவங்களை முயன்று பார்த்தும் அவளது நோய் தீர்ந்தபாடில்லை. மன்னன் தெய்வத்தின் திருவடி அருளை நம்பினான். சம்பந்தர் அந்தப் பகுதிக்கு வருவதை அறிந்து கொண்ட அவன் தன் மகளைக் கோயிலில் இறைவனது திருமுன்பாகக் கிடத்தி வைத்தான். அங்கு வந்த பிள்ளையார் செய்தியைத் தெரிந்து கொண்டார். இறைவனைத் துதித்துப் பாடினார். அந்தப் பெண் கண் விழித்து எழுந்தாள்; நோயிலிருந்து முழுவதும் விடுபட்டாள்.

ஆனால் 'துணிவளர் திங்கள் துலங்கி விளங்க' என்று தொடங்கும் அந்தப் பதிகப் பாடல்களில் 'முயலகன்' நோய் தீர்த்த செய்தி ஏதும் காணப்படவில்லை. பாட்டைப் பார்க்கையில் அகத்துறையில், ஒரு செவிலித்தாய் பேசுவது போலவே அங்கு அமைந்திருக்கிறது. 'மணிவளர் கண்டரோ மங்கையை வாட மயல் செய்வதோ இவர் மாண்பே!' என்று செவிலி புலம்புவதாகவே பாடல்கள் இருக்கின்றன. இந்த அமைப்பை அடிப்படையாகக் கொண்டே மேற்சொன்ன செவிவழிச் செய்தி தோன்றியிருக்கலாம். திருமருகல் பதிகமும் இப்படித்தான் அமைந்துள்ளது. சம்பந்தர் பல பாடல்களை அகத்துறை முறையில் பாடியிருக்கிறார். பாச்சிலாச்சிராமம், திருமருகல் ஆகிய இரண்டு இடங்களில் பாடப்பட்ட பதிகங்களை ஒட்டித்தான் செவிவழிச் செய்திகள் தோன்றி யிருக்கின்றன. மற்றவற்றில் இத்தகைய செய்திகளுக்கு இடமில்லை. இந்தச் செய்திகளை நம்பியாண்டாரும், சேக்கிழாரும், திருக்களிற்றுப்படியார் பாடிய உய்யவந்த தேவரும் போன்ற மிகப்பெரியவர்கள் தங்கள் நூல்களில் எடுத்துக் கையாண்டிருக்கிறார்கள். பாடல்களின் சில வரிகளில் செவிவழிச் செய்தியின் உண்மை தொனிப்பதைக் கவனிக்கலாம். எனவே இவற்றை வெறும் கட்டுக்கதை என்று ஒதுக்குவதில் பயன் ஏதும் இல்லை.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருக்கொடிமாடச் செங்குன்றூரில் தன் உடன் வந்த அடியார்களுக்குக் குளிர் ஜுரம் வந்து வருந்தியதைக் கண்டு இரங்கிய சம்பந்தர் 'அவ்வினைக் கிவ்வினையாம்' என்று தொடங்கும் பாடலில் 'வெவ்வினை வந்தெம்மைத் தீண்டப் பெறா திருநீலகண்டம்!' என்று ஆணை மொழியிட்டுப் பாடிப் பரவினர். நோய் தீர்ந்து தொண்டர்கள் மகிழ்ந்தனர். இந்தப் பாடலின் உணர்வும் தொனியும் இந்த வரலாற்றை உறுதிப்படுத்துகின்றன.

அடுத்த நிகழ்ச்சியாகச் சேக்கிழார் பாடியிருப்பது திருவாவடுதுறையில் நிகழ்ந்ததுதான். சம்பந்தரின் தந்தையார் சிவபாத இருதயர் ஒரு வேள்வி செய்வதற்கு விரும்பினார். வேள்வி செய்வது தன்னலத்திற்காக இல்லை. 'கற்றாங்கு எரியோம்பி கலியை வாராமே, செற்றார் வாழ்தில்லைச் சிற்றம்பலம்' (1.80.1) என்று சம்பந்தரே குறிப்பிடுகிறார். தில்லைச் சிற்றம்பலம் மேவிய மூவாயிரவர்கள் தாங்கள் கற்ற வேதக் கல்விக்கு இணங்க எரிவளர்த்துத் தீ ஓம்பிச் செய்வதெல்லாம் கலியை - பஞ்சமும் பிணியுமானவைகளை உலகில் ஏற்படாமல் முற்றிலும் ஒழிப்பதற்காகவே என்பதைப் பிள்ளையார் வற்புறுத்துவதைக் காண்கிறோம்.

வேள்வி செய்வது உலக நன்மைப் பொருட்டேயாகும். அது ஓர் அந்தணனுடைய தன்னலமில்லாத கடமை என்று அக்காலத்தில் மறையவர்கள் கருதிவந்தார்கள். சிவபாத இருதயரும் அப்படி ஒரு வேள்வியைச் செய்ய நினைத்தார். ஆனால் வேள்வி செய்வதற்கு மிகுந்த பொருள் வேண்டும். வேள்விக்கு வேண்டிய பொருள்களை (திரவியங்களைப்) பெறுவதற்கும், வேள்வி செய்து வைக்கும் ஆசார்யர்களுக்குத் தட்சணை முதலியவற்றைக் கொடுப்பதற்கும், வேள்விக்கு வந்த அனைவருக்கும் உணவு படைப்பதற்கும் பொருள் வேண்டப்பட்டது.

புறநானூற்றுப் பாடல் (166) ஒன்றில் ஆவூர் மூலங்கிழார் என்பவர் சோழநாட்டுப் பூஞ்சாற்றூர்ப் பார்ப்பான் விண்ணந்தாயனின் மூதாதைகள் 21 துறைப்பட்ட வேள்வி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

களைச் செய்த சிறப்பினைப்பற்றி விரிவாகப் பாடியிருக்கிறார்.

சிவபாத இருதயர் அப்படி ஒரு வேள்வி செய்ய நினைத்தார். தம் உள்ளக்கிடக்கையைத் தம் திருவளர் செல்வனிடம் தெரிவித்தார். தந்தையார் வேள்வி செய்ய நினைப்பது உலக நன்மைக்காகவே என்பதை உணர்ந்து கொண்ட சம்பந்தர் அவரது விருப்பத்தை நிறைவு செய்ய விரும்பினார். ஆனால் பொருளுக்கு என்ன செய்வது? செல்வர்களிடமும் மன்னர்களிடமும் பொருள் கேட்கும் மரபினை முற்றக் கைவிட்டுவிட்டவர்கள் சீரடியார்கள். ஆதலால் திருவாவடுதுறையில் வீற்றிருந்த சிவபெருமானைத் துதித்துப் பாடினார். 'இடரினும் தளரினும்' என்று தொடங்கும் நாலடி மேல்வைப்புப் பதிகம் ஒன்றைப் (3.262.1) பாடினார். ஒவ்வொரு பாட்டின் இறுதியிலும் 'இதுவோ எமை ஆளுமாறு ஈவதொன்றெமக் கில்லையேல், அதுவோ உனது இன்னருள் ஆவடுதுறை அரனே!' என்று அவர் குறிப்பாக உணர்த்துவது தன் உள்ளக்கிடக்கையைத்தான் என்று எடுத்துக்கொள்ளலாம். திருக்கடைக்காப்பில் தன் பாட்டினை 'விலை உடை அருந்தமிழ் மாலை' என்று அவர் கூறுவதும் தன் பாட்டைக் கேட்டு இறைவன் வேள்வி செய்யப் பொருளுதவி அருள வேண்டும் என்பதை வேண்டி நிற்பதாகவே தோன்றுகிறது.

அவரது பாடலுக்கிசைந்து அருள் புரிந்த ஈசர், ஒரு பூதத்தை ஏவிக் கோயில் பீடத்தில் ஆயிரம் பொன் நிறைந்த ஒரு பொதியை வைக்கச் செய்தார். (திருஞானசம்பந்த நாயனார் புராணம், 426). நம்பியாண்டார் நம்பியும் சேக்கிழாரும் தவிர நாவுக்கரசரும் இந்தச் செய்தியைப் பாடியிருக்கிறார். 'கழுமல ஊரர்க்கு ஐம்பொன் ஆயிரம் கொடுப்பார் போலும் ஆவடுதுறை அரனே!' (4.56.1) என்று பாடி வியக்கின்றார் நாவரசர். கழுமல ஊர் என்பது சீர்காழி என்பதும் அந்த ஊரர் என்று அவர் இங்கு குறிப்பிடுவது திருஞான சம்பந்தரைத்தான் என்பதும் யாவருக்கும் விளங்கும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அடுத்து ஞானசம்பந்தர் காரைக்காலுக்குப் பக்கத்தில் உள்ள தருமபுரம் என்ற தலத்திற்குச் சென்றார். அந்த ஊர் திருநீலகண்ட நாயனாரின் தாயாரது பிறப்பிடம். ஊரில் அன்பும் ஆரவாரமும் அவரை வரவேற்றன. பிள்ளையாரின் பதிக இசையை 'நம்மூர்ப் பிள்ளை யாழில் அடக்கி வாசிப்பதால் அவன் யாழிசையின் பெருமை உயர்ந்தது' என்று உறவினர் கூறுவதைக் கேட்டு மனம் பதைத்த யாழ்ப்பாணர் பதிக இசையின் மாண்பினை உலகறியச் செய்யவேண்டுமென்று பிள்ளையாரை வேண்டிக் கொண்டார். ஞானக்குழந்தையாரும் ஒப்புக்கொண்டு 'மாதர் மடப்பிடியும் மட அன்னமும் அன்னதோர் நடை உடை மலைமகள்' *(1.136.1)* என்று தொடங்கும் யாழ்முரிப் பண்ணைப் பாடினார். அந்த இசையின் அமுதத்தை நீலகண்டரின் யாழ் நரம்புகள் ஏற்றுக்கொள்ள முடியாமல் தவித்தன.

நடுநடுங்கிய யாழ்ப்பாணர் இந்த யாழினால் அல்லவா இந்தத் தருக்கு ஏற்பட்டது என்று சினந்து அதனை முறித்து உடைக்கத் தலைப்பட்டார். சம்பந்தர் அதைத் தடுத்து, 'இறைவர் புகழ் நம் இசைக்குள் அடங்குமோ! இருப்பினும் நம்மால் முடிந்த மட்டில் வாசித்துத் துதிப்போம்!' என்று கூறி யாழ்ப்பாணரைச் சமாதானம் செய்தார்.

இங்கு குறிப்பிடப்படும் 'யாழ்முரிப்பண்' என்பது ஒரு வகையான பண்ணாகும். பாட்டும் விரைந்து இசையும் எடுப்பும் வீழ்ச்சியும் பெற்று வருவது முரி எனப்படும்.[4] இது ஒருவகையான பண்தான் என்பதை நம்பியாண்டார்நம்பி உறுதி செய்கிறார்.[5] இதை யாழில் பொருத்தி இசைப்பது அவ்வளவு எளிது இல்லை போலும்.

திருஞானசம்பந்தருக்கு நண்பர்களாக அமைந்தவர்கள் நீலநக்கரும், முருகநாயனாரும் ஆகியோர் என்பதைச் சேக்கிழாரும் நம்பியாண்டார் நம்பியும் குறிப்பிடுகிறார்கள். நம்பியாண்டாரின் ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி என்னும் நூலில் பாடல் 71 இல் "நீலநக்கருக்கும் புகலூர் முருகர்க்கும் தோழனை" என்று கூறியிருக்கிறார். சம்பந்தருடைய திருச்சாத்தமங்கைப் பதிகம் *(3.316.2, 11)*, புகலூர்ப்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பதிகம் (2.228.3, 5) ஆகியவற்றில் இதற்குரிய குறிப்புகள் காணக் கிடக்கின்றன. மேலும் சம்பந்தர் சிறுத்தொண்டர்பால் அன்புகெழுமிய நட்பினைக் கொண்டிருந்த செய்தியையும் நம்பியாண்டார் நம்பி தமது ஆளுடைய பிள்ளையார் திருவுலாமாலை என்னும் நூலில் 73, 74 பாடல்களில் உணர்த்துகிறார். சேக்கிழாரும் அதையே கூறுகிறார். சம்பந்தரின் திருச்செங்காட்டங்குடிப் பதிகமும் (3.321. 1–9) அதனையே பிரதிபலிக்கின்றதைக் காண்கிறோம்.

சம்பந்தரின் வாழ்வில் திருவீழிமிழலை ஒரு தனிச் சிறப்பினைப் பெறுகிறது. அவ்வூரில் பஞ்சம் வந்து மக்கள் அவதியுற்றார்கள். அதற்கு இரங்கிய சம்பந்தர் வீழிமிழலை இறைவனிடம் வேண்டினார். அவனது அருளால் அக்கோயில் கிழக்கு பீடத்தில் நித்தமும் ஒரு காசு கிடைக்கச் செய்தார். ஆனால் அந்தக் காசு மாசு படிந்திருந்தது. 'கறை கொள் காசு' (1.92.2). 'பழங்காசு' (5.50.7). அதனைக் கொண்டுபோய்க் கொடுத்து உணவுப் பொருள்களைக் கேட்டால் அவர்கள் அதற்கு 'வட்டம்' கேட்டார்கள். அதனால் நாள்தோறும் பொருள்கள் வந்து சமைத்து மக்களுக்கு உணவிடுவதில் காலதாமதமாகியது. சம்பந்தர் மீண்டும் இறைவனிடம் வேண்டினார். சம்பந்தருடைய திருவிருக்குக்குறள் பதிகம் (1.92. 1, 2) இதைக் குறிப்பிடுகிறது:

வாசி தீரவே காசு நல்குவீர்
மாசில் மிழலையீர், ஏசலில்லையே

...கறைகொள் காசினை முறைமை நல்குமே

உணவிடுவதற்குக் காலதாமதம் ஏற்பட்டது அவரது மனத்தில் கவலையை உண்டாக்கியிருக்க வேண்டும்; 'யாரும் ஏசுவார்களோ' என்று அஞ்சியிருக்க வேண்டும். அதனால் தான் 'ஏசலில்லையே' என்றார். மக்கள் மனத்தில் ஐயம் ஏற்பட்டுவிடலாகாதே என்பதால் 'சங்கை தவிர்மினே' என்றார். அப்பர் பெருமானும் இந்த நிகழ்ச்சியைக் குறிப்பிடுகிறார். வாய்மூர்ப் பதிகத்தில் (5.50.7), 'பாடிப் பெற்ற பரிசில் பழங்காசு வாடி வட்டம் தீர்ப்பர்' என்று சம்பந்தரது மன வாட்டத்தை இறைவன் தீர்த்து வைத்ததைக் குறிப்பிடுகிறார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருஞானசம்பந்தருக்கும் அப்பருக்கும் வீழிமிழலையில் காசு வழங்கிய செய்தியை நம்பி ஆரூரரும் தம்முடைய திருவீழிமிழலைப் பதிகத்தில் பாடியிருக்கிறார் - 'வீழிமிழலை இருந்து நீர் தமிழோடு இசை கேட்கும் இச்சையால் காசு நித்தம் நல்கினீர்' (7.88.8).

மறைக்காட்டு நிகழ்ச்சி அப்பர், சம்பந்தர் ஆகிய இருவருடைய ஆன்ம ஸ்வரூபத்தைக் காட்டுவதாக அமைந்துள்ளது. 'வேதம் பலவோமம் வியந்து அடிபோற்ற, ஓதம் உலவும் மறைக்கா'ட்டின் கதவுகள் அடைக்கப் பட்டிருந்தவற்றைத் திறந்தருளச் செய்யுமாறு சம்பந்தர் வேண்டிக் கொண்டதை ஏற்று அப்பர் பெருமான் கதவு களைத் திறக்கப் பாடினார். அவர் அடைக்கப் பாடும்படிக் கேட்டுக் கொள்ளவே சம்பந்தர்;

சதுரம் மறை தான்துதி செய்துவணங்கும்
மதுரம் பொழில் சூழ்மறைக் காட்டுறை மைந்தா
இது நன்குஇறை வைத்தருள் செய்க எனக்கு உன்
கதவம்திருக் காப்புக்கொள் ளுங்கருத் தாலே (2.173.1)

என்று பாடி முதல் பாட்டிலேயே கதவுகள் காப்புக்கொள்ள (அடைத்துக் கொள்ள) வேண்டும் என்பதே தன்னுடைய விண்ணப்பம்; அதற்கு 'இறை வைத்து' விடை சொல்லியருள வேண்டும் என்று குறிப்பிட்டு விடுவதைக் காண்கிறோம்.

திருநாவுக்கரசர் இந்த நிகழ்ச்சியைத் தெளிவாகக் காட்டும் நிலையில் தம்முடைய திருவாய்மூர்ப் பதிகத்தில் (5.50.8) 'செந்தமிழ் உறைப்புப்பாடி அடைப்பித்தார்' என்று குறிப்பிட்டிருக்கிறார். ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதியில் நம்பியாண்டார் நம்பியும், 'அடைத்தது மாமறைக்காட்டர் தம் கோயில் கதவினை' (91) என்று உறுதியாகச் சொல்கிறார்.

சேக்கிழாரது கூற்றுப்படி அந்த நிகழ்ச்சி நடந்த அன்றே, இரவில் நாவரசர் சற்று மனம் சஞ்சலித்த நிலையில் திருமடத்தில் தங்கியிருக்கும்போது வாய்மூர் இறைவர் அவரைத் தன்னுடன் வாய்மூருக்கு வரும்படி அழைத்தார். அவரும் பின் தொடர்ந்தார். ஆனால் வழியில் அவரை அழைத்துச் சென்ற இறைவர் மறைந்து போகவே அப்பர்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

குழப்பமடைந்தார். சம்பந்தரும் அவரைப் பின் தொடர்ந்து வந்து சந்தித்தார். அப்பொழுது, வாய்மூர் இறைவன் சம்பந்தரின் கண் முன் ஆடல் கோலத்தில் நின்றார். அந்த தெய்வக் காட்சியைச் சம்பந்தர் கண்டு திளைத்தது மட்டுமின்றி அருகில் நின்ற அப்பருக்கும் காட்டினார். அப்பரும் கண்டு மெய் சிலிர்த்தார். (திருஞானசம்பந்த நாயனார் புராணம், 281).

இங்கு ஒன்றைக் கூறுவது பொருத்தமாக இருக்கும். சீர்காழியில் பிரம்மபுரத் தீர்த்தக்கரையில் தோணிபுரத்து ஈசன் உமையோடு வெள்ளை ஏ்ருதேறி வந்து நின்ற காட்சியை 'பெம்மான் இவன் அன்றே!' என்று பிள்ளையார் தன்னைப் பெற்ற தந்தைக்கும் காட்டினார். ஆனால் அவர் காணவில்லை; வெருட்சியும் வியப்பும் எய்தி, நிலையை ஓரளவு உணர்ந்து கொண்டார் என்று சேக்கிழார் குறிப்பிட்டிருக்கிறார். ஆனால் வாய்மூரில் சம்பந்தர் ஈசனின் ஆடுங்கோலத்தை அப்பருக்குக் காட்ட அவரும் கண்டு மகிழ்ந்தார் என்ற கூறுகிறார். நாவுக்கரசரைத் தன் ஆன்மீகத் தந்தையாகக் கருதித்தான் சம்பந்தர் அவரை 'அப்பரே!' (அப்பா) என்று அழைத்தார். எனவே தன்னை ஈன்ற தந்தைக்கும் ஆன்மீகத் தந்தைக்கும் சம்பந்தர் இறைவனைக் காட்டினார். முன்னவர் இன்னமும் பக்குவப் படாத காரணத்தினாலோ என்னவோ அவர் காணவில்லை. ஞானம் கனிந்த நாவுக்கரசர் கண்டு தெளிந்தார்.

திருவாய்மூர்த் தேவன் அப்பரை 'வா' என்றழைத்ததும், அவர் பின் தொடர்ந்ததும், வழியில் இறைவர் மறைந்ததும், அப்பர் வருந்தியதும், அவர் 'செந்தமிழ் உறைப்புப் பாடி அடைப்பித்த சம்பந்தரும் 'உந் நின்றார்' என்று குறித்ததும் நாவரசர் தன்னுடைய பாடலில் (5.50) தெளிவாகக் குறிப்பிட்டிருப்பதைப் பார்க்கின்றோம்.

சம்பந்தரின் திருவாய்மூர்ப் பதிகம் ஒன்றில் (2.247) ஒவ்வொரு பாட்டின் இறுதி வரியிலேயும் (திருக்கடைக்காப்பு நீங்கலாக) இவராணீர் என்ற சொற்றொடர் வருகிறது. இதனை இரண்டு வகையாகப் பிரித்துப் பொருள் கொள்ளலாம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஒன்று, 'இவர்+ஆண்+நீர்' என்பது. இதற்குப் பொருள்: 'இவர்' - அப்பர்; 'ஆள்' - ஆளப்பட்ட; 'நீர்' - நீர்மையை உடையவர்; இவர் இறைவனால் ஆளப்பட்ட நீர்மையை (தன்மையை) உடையவர் என்பது பொருள்.

மற்றொரு வகையில் 'ஆள் நீர்' என்பது 'காணீர்' என்பதன் மருவிய வடிவம் என்று கருதலாம். அதாவது இவர் (இறைவனைக்) காணீர் (காணுங்கள்) என்று பொருள் கொள்ளலாம். சம்பந்தர் அப்பருக்கு இறைவனைக் 'காணீர்' என்று காட்டுகிறார் என்று பொருள். இங்கு சம்பந்தர் நாவுக்கரசை மறைமுகமாகக் குறிப்பிடுவதைக் காண்கிறோம்.

மதுரை அரங்கிலே நிகழ்ந்த சம்பந்தரது வரலாறு ஒரு தனி இடத்தைப் பெறுகிறது. இங்குதான் அவரது ஆன்ம ஸ்வரூபம் விளங்கிச் சுடர் விடுகிறது என்று கூறலாம்.

பெரியபுராணத்து வரலாற்றுப்படிச் சம்பந்தரும் அப்பரும் திருமறைக்காட்டில் தங்கியிருந்து திருவருள் பதிகங்களைப் பாடிக் கொண்டிருக்கையில், மதுரை அரசி மங்கையர்க்கரசி, குலச்சிறையார் ஆகியோரிடமிருந்து வந்த தூதுவர்கள் இரு சான்றோர்களையும் வணங்கி மதுரையின் நிலையை எடுத்துரைத்து, அரசமாதேவி சம்பந்தரை மதுரைக்கு வந்து சைவநெறி தழைத்தோங்க அருள் செய்யுமாறு விண்ணப்பம் செய்ததை வணங்கித் தெரிவித்தார்கள்.

அதனைக் கேட்டவுடன் பிள்ளையார் மதுரைக்குச் செல்லத் துணிந்தார். நாவரசரிடம் விடை கேட்டார். அப்பரும் 'பிள்ளாய்! நாளும் கோளும் நன்றாய் இல்லை' என்று கூறி அவரது பயணத்தை மெதுவாகத் தடுத்துப் பார்த்தார். ஆனால் சம்பந்தர் 'வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்... உளமே புகுந்த அதனால் - ஞாயிறு திங்கள் செவ்வாய் - ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல அடியார் அவர்க்கு மிகவே!' என்று கோளறு பதிகம் (2, 221) பாடி விடைபெற்றுக் கொண்டார்.

சம்பந்தர் ஏற்கனவே மங்கையர்க்கரசியாரையும் குலச்சிறையாரையும்பற்றிக் கேள்விப்பட்டிருக்க வேண்டும். மதுரையை நெருங்கும்போது 'மங்கையர்க்கரசி' என்று

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தொடங்கும் அவரது பாடல் (3.378.1) இந்த உண்மையைப் புலப்படுத்துகிறது. மேலும் இந்தப் பதிகத்தின் உணர்வி லிருந்தே சம்பந்தர் அரசியாரின் அழைப்பின் பேரில் மதுரையை அணுகுகிறார் என்பதும் தெரிகிறது.

திருமறைக் காட்டிலிருந்து மதுரைக்குப் புறப்பட்டுச் செல்வதன் நோக்கம் தேவியின் விண்ணப்பத்திற்கு இணங்க மதுரையில் அமணர்களுடன் வாதிட்டு வெல்வதற்காகத்தான் என்ற நோக்கத்தைச் சம்பந்தர் நன்கு வரையறுத்துக் கொண்டிருக்கிறார். அதற்குப் பெரும் துணையாக இருப்பது ஆலவாய் அரனின் செம்மைத் திருநீறுதான் என்பது அவரது அசைக்கமுடியாத மனத்துணிவு.

'புத்தரோடு அமணை வாதில் அழிவிக்கும் அண்ணல் திருநீறு செம்மை திடமே!' (2.221.10). இதில் – தம் எதிர் நிற்பவர்கள் யார்; அவரை எதனில் வெல்ல வேண்டும்? உற்ற துணை யாது? முடிவு வெற்றியாகத்தான் இருக்கும் என்ற நம்பிக்கை – இவ்வளவும் தலைநிமிர்ந்து நிற்கின்றன அல்லவா?

மதுரை ஆலவாய்ப் பெருமானிடத்தில் தன் நோக்கத்தைச் சொல்லி அவனது அருட்குறிப்பை நாடுகிறார்.

> வேத வேள்வியை நிந்தனை செய்துழல்
> ஆத மில்லி அமணொடு தேரரை
> வாதில் வென்றழிக் கத்திரு வுள்ளமே... (3.366.1)

என்ற இறைவனின் திருவுள்ளத்தை நாடுகிறார்.

> வாது செயத் திருவுளமே (3.366 – 2–10)

என்று வாது செய்வதற்கு இறைவனது திருவுள்ளச் சம்மதத்தை நாடுகிறார்.

இதனால் தனக்கு விளையும் நன்மையையோ புகழையோ அவர் நாடியிருக்கவில்லை. 'நாளும் நின் புகழே மிக வேண்டும்' என்று ஒவ்வொரு பாடலிலும் வலியுறுத்து கிறார்.

சம்பந்தர் மதுரைக்கு வந்த அந்த இரவிலேயே அவர் தங்கியிருந்த இடத்திற்கு மன்னனது இசைவைப் பெற்றுத் தீ

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வைத்தார்கள் சமணர்கள். என்பதைச் சேக்கிழார் விவரிக்கின்றார். சம்பந்தரே இந்தத் தீய செயலைக் குறிப்பிடு கிறார். 'செய்யனே!' என்று தொடங்கும் அவரது பதிகம் முழுவதிலும் (3.309) அவர் சமணரின் அடாத செயலைத் திரும்பத் திரும்பக் குறிப்பிடுகிறார். 'அமணர் கொளு வுஞ்சுடர்', அமண் கையர் இடும்கனல்' என்று வருவதைப் பார்க்கிறோம். அதற்கு அனுமதித்த மன்னனே தவறுடைய வன் என்று அவரது நீதி உணர்வு தீர்மானிக்கிறது. பக்தர்கள் வாழ்ந்த திருமடத்தில் இட்ட தீ 'பையவே சென்று பாண்டியர்க்கு ஆகவே!' என்று ஆணையிட்டார். பாண்டிமா தேவியின் மங்கல நாணைக் காக்கவும், குலச்சிறையாரின் அன்பிற்காகவும், பின்னால் தன்னால் காப்பாற்றப்பட இருப்பவன் என்பதினாலும் 'பையவே' என்ற தீ தன் சீற்றத்தின் கொடுமையால் பாண்டியனைப் பொசுக்கி விடாமல் அவனுக்கு அறிவு வெளிப்படுவதற்காகவேதான் தீயானது பையச் சென்று அவனை மெள்ளத் தொடரட்டும் என்று பாடினார்.

மேலும் வெப்பம் பாண்டியனைத் தாக்கிய செய்தியைத் திருக்கடைக்காப்புச் செய்யுளில் 'வெப்பம் தென்னவன் மேல் உற' என்று குறிப்பிடுகிறார்.

வெப்பம் தென்னவனைச் சென்று தாக்கியது; வெப்பு நோயால் அவன் அவதியுற்றான். அதனைத் 'தீப்பிணி' (பாவத்தினால் வந்தது) என்று பாடுகிறார் (2.202.11). அதே பாட்டில் தான் அந்த நோயைத் தீர்த்ததையும் அவர் குறிப்பிடுகிறார். 'தீப்பிணியாயின தீர' ஆலவாயான் திருநீற்றை அவனது உடலில் பூசுகிறார். இந்த அருட் செயலைக் கண்டு நின்ற அமணர்கள் திகைத்துத் தடுமாறியதை, 'குண்டிகைக் கையர்களோடு சாக்கியர் கூட்டமும் கூடக் கண் திகைப்பிப்பது நீறு' (2.202.10) என்று காட்டுகிறார் சம்பந்தர். 'ஆலவாய்த் திருஇயமகம்' என்ற மற்றொரு பதிகத்தில் (3.373.6), 'தென்னவன் தேவிக்கு அணியையே மெல்ல நல்கிய' என்று பாடி ஆலவாய் அரன் தேவியின் மங்கல அணியைக் காப்பாற்றிய அருட் செயலைக் குறிப்பிடுகின்றார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மதுரையில் தென்னன் முன்னால் ஆனை மாமலை யாதியாய இடங்களிலிருந்து சமணர்கள் வந்து சூழ்ந்திருந்த செய்தியை சம்பந்தரே குறிப்பிடுகிறார் (3.297.1). நம்பி யாண்டார் நம்பியும் சமணர்களது இருப்பிடத்தை 'எண் பெருங்குன்றம்' என்று தமது ஆளுடைய பிள்ளையார் திருக் கலம்பகத்தில் (133) குறிப்பிடுகிறார். அவர்கள் வேதாகமங்கள் நிலவிய சம்ஸ்கிருத மொழியை பங்கப்படுத்திப் பிராகிருத மொழியில் பலவாறு உரக்கப்பேசி மக்களை அச்சுறுத்தி னார்கள். (ஆகமத்தோடு மந்திரங்கள் அமைந்த சங்கத பங்கமாப் பாகதத்தொடு இரைத்து) நாட்டில் உள்ள நூல் வல்ல புலவர்களை இகழ்ந்து ஏசினார்கள். இவையெல்லாம் அரசன் எதிரிலேயே நிகழ்ந்தன.

அங்கு வந்திருந்த சமணர் தலைவர்கள் பலருடைய பெயர்களையும், சம்பந்தர் ஒரு பட்டியலாகக் காட்டுகிறார். அவர்கள் 'சேனக் கூட்டம்', 'நந்திக் கூட்டம்' என்ற இரு பிரிவுகளையும் சார்ந்தவர்களாயிருந்தார்கள். சந்துசேனன், இந்துசேனன், தருமசேனன், கந்துசேனன், கனகசேனன்- முதலியவர்கள் சேனக் கூட்டத்தவர்கள். கனக நந்தி, புட்ப நந்தி, பவண நந்தி, குமணமாச்சுணக நந்தி, குணகநந்தி, திவனநந்தி போன்ற 'அனகம் நந்தியர்' நந்திக் கூட்டத் தவர்கள்.

நம்பியாரூரரும் இந்தக் கூட்டத்தைப் பற்றிப் பேசுகிறார். (நமண நந்தியும், கரும வீரனும், தருமசேனனும்' – 7.33.9).

திருநீற்றுப் பதிகத்தைப் பாடித் திருநீறு நீவி மன்னன் உடலுக்குற்ற தீப்பிணியைச் சம்பந்தர் தீர்த்த பிறகும் சமணர்கள் தங்கள் தோல்வியை ஒப்புக்கொள்ளவில்லை.*

* சம்பந்தர் தம் பையில் இருந்த திருநீற்றை அள்ளி மன்னவன் மேனி மீது பூசுவதற்கு முயன்றார். அப்பொழுது சமணர்கள் அதனை 'மாயநீறு' என்று விலக்கினார்களாம். சம்பந்தர் அவர்களுக்கு இணங்கி, 'அண்டர் நாயகன் திருமடப்பள்ளி நீறு அள்ளிக் கொண்டு வாரும்' என்று ஏவி, அதனைப் பெற்ற பின்னால் அந்த மடப்பள்ளி நீற்றையே பூசினார் என்று பரஞ்சோதியார் திருவிளையாடல் புராணம் கூறுகிறது. (3186, 3187). இன்றும், மதுரைக் கோயிலில் அந்த மடப் பள்ளி நீற்றை மக்கள் பக்தியுடன் அள்ளிப் பூசுகிறார்கள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அனல் வாதத்திற்கு அழைத்தனர். அதன்படி திருநள்ளாற்று இறைவனைப் பாடும் 'போகமார்த்த பூண்முலையாள்' என்று தொடங்கும் பதிகத்தை ஓர் ஓலையில் எழுதி அதனை அனலில் இட வைத்தார் சம்பந்தர். ஆனால் அது வாடாமல், வதங்காமல் பச்சையாகவே பொலிந்தது. அதனால் அந்தப் பதிகம் 'பச்சைப் பதிகம்' என்றே இப்பொழுதும் அழைக்கப்பட்டு வருகிறது. அனலில் இட்ட பொழுது 'தளரிள வளரொளி' என்று தொடங்கும் பதிகம் பாடி *(3.345.1)* இறைவனைத் துதித்தார் சம்பந்தர்.

அந்தப் பதிகத்தில் உள்ள திருக்கடைக்காப்புச் செய்யுளுள் அரசன் முன்னால் ஓலையைத் தீயில் இட்ட செய்தியை 'கொற்றவன் எதிரிடை எரியினில் இட இவை கூறிய சொல்' என்று சம்பந்தர் குறிப்பிட்டிருக்கிறார்.

சமணர் அனல் வாதத்திலும் தோற்ற பிறகு புனல் வாதம் செய்ய அழைத்தனர். இந்த வாதப்படி இரு தரத்தாரும் தங்கள் தங்கள் சமயங்களின் அடிப்படை உண்மைக்ளை ஏடுகளில் எழுதிப் பாய்ந்து பெருகி வரும் 'வையை' என்ற வைகை ஆற்றில் இடவேண்டும். எந்த ஏடு ஆற்று வெள்ளத்தோடு ஓடிப் போகாமல் எதிர்த்து வருகிறதோ அந்த ஏட்டின் சமயமே வென்றது எனக்கொள்ள வேண்டும்.

சம்பந்தரது 'வாழ்க அந்தணர்' என்று தொடங்கும் **திருப்பாசுரம்** என்ற பதிகத்தை *(3.312)* வையை ஆற்றில் இட்டனர்: ஏடு எளிதாக எதிர் நீந்திக் கரையை அடைந்தது.

இந்தப் பதிகத்தின் பதினோராம் பாடல் இந்த உண்மையைத் தெளிவாகக் காட்டுகின்றது.

> "மதுரையில் சங்கம் வைத்தருளியவனும், சிவனே பரம்பொருள் என்று உலகிற்கு உணர்த்தவும், மெய்ப்பொருளைத் தெளிவுறாத சமணர்கள் தெளிவடையவும், வைகையில் இட்ட ஏடு எதிர் நீந்திச் செல்ல வைத்தவனுமான இறைவனே பெருமான்" என்ற கருத்தில்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அற்றன்றி அந்தண் மதுரைத் தொகை ஆக்கினானும்
தெற்றென்று தெய்வம் தெளியார் கரைக்கு ஓலை தெண்ணீர்ப்
பற்றின்றி பாங்கெதிர்வின் ஊரவும் பண்பு நோக்கில்
பெற்றொன்று உயர்த்த பெருமான் பெருமானு மன்றே

என்று அவர் திருவாய் மலர்ந்து பாடியுள்ளார்; இதனைத் திருக்கழுமலப் பதிகத்திலும் மேலும் உறுதி செய்துள்ளார்.

மதுரை மன்னன், அவை எதிரே பதிகம் அது எழுதிலை
யவை எதிரே,
வரு நதியிடை மிசை வருகரனே (3.371.12)

'வன்னியும் மத்தமும்' என்று தொடங்கும் பதிகத்தைச் சம்பந்தர் பாடியதும், ஆற்று நீரை எதிர்த்து நீந்திய ஏடு, திருவேடகம் என்னும் வைகைக் கரைத் தலத்தைச் சென்றடைந்தது. இதனை 'ஏடு சென்று அணைதரு ஏடகம்' (3.290.11) என்று சம்பந்தர் குறிப்பதைக் காண்கிறோம்.

...ஞானம் உண்டார் மடத்துத் தீ நாடிஇட்ட
எண்பெருங் குன்றத்து எண்ணாயிரவரும் ஏறினார்கள்
(திருஞானசம்பந்த நாயனார் புராணம் 855)

என்ற வாதில் தோற்ற சமணர்கள் தாங்கள் ஏற்கனவே சூள் உரைத்தபடி கழு ஏறினார்கள் என்று சேக்கிழார் கூறுகின்றார்.

"தனி வாதில் அழிந்தோம் ஆகில், வெங்கழு வேற்று வான் இவ்வேந்தனே" என்று சமணர்களே சூளுரைத்ததையும் சேக்கிழார் 798ஆம் பாட்டில் உரைத்ததைக் காண வேண்டும்.

ஆனால் நம்பியாண்டாரும் ஒட்டக்கூத்தர் போன்ற பலரும் சமணர்களைக் கழுவேறும் படியாகச் செய்தவர் சம்பந்தரே என்று கூறுகிறார்கள். ஆனால் இன்றைக்குக் கிடைக்கும் சம்பந்தர் பாடல் எதிலும் அவர் இவ்வாறு குறித்துப் பாடியிருக்கவில்லை. இப் புத்தகத்தின் ஐந்தாவது பிரிவினில் (5.6) இதுபற்றி விரிவாகக் கூறப்பட்டிருக்கிறது.

பாண்டிய நாட்டிலிருந்து திரும்புகையில் கொள்ளம் புதூருக்குச் செல்ல விழைந்தார் சம்பந்தர். ஆனால் அவ்வூரோ முள்ளியாற்றுக்கு அக்கரையில் உள்ளது. ஆற்றில் வெள்ளம் கரைபுரண்டு ஓடியது. கடப்பதற்கு ஓடமோ தோணியோ இல்லை; செலுத்துவதற்கும் யாருமில்லை.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சம்பந்தர் அடியார்களுடன் அந்தத் தோணியில் ஏறிக் கொண்டு 'கொட்டமே கமழும்' என்று தொடங்கும் பதிகத்தைப் பாடினார் (3.264). அந்தப் பதிகப்பாடல் ஒவ்வொன்றிலும் 'செல்ல உந்துக' என்று வரும்படியாக அமைந்துள்ளது. படகைச் செலுத்துவோர் இல்லாவிடினும் படகு தானே உந்திச் செல்வதற்கு அவர் ஆணையிட்டது போல தோன்றுகிறது. ஆறாவது பாடலில் 'ஓடம் வந்து அணை தரும் கொள்ளம்புதூர்,' என்று சம்பந்தர் பாடியிருப்பதால் ஓடம் தானே சென்று கரைசேர்ந்திருக்க வேண்டும் என்று தெரிகிறது.

திருமயிலையில் பூம்பாவையின் எலும்பைப் பெண் ஆக்கிய நிகழ்ச்சியைச் சேக்கிழார் சுவைபடக் கூறுகிறார்.

சிவனேசன் என்ற வணிகரின் செல்வ மகள் பூம்பாவை. அவர் தம் மகள் பூம்பாவையைச் சம்பந்தருக்கென்றே ஆளாக்கி வைத்திருந்தார். ஒருநாள் அவளைப் பாம்பு தீண்டி அவள் உயிர் நீத்தாள். சொல்லொணாத் துயரில் மூழ்கிப் போன சிவனேசர் அவளது எலும்பையும் சாம்பலையும் ஒரு சட்டியில் வைத்துப் பாதுகாத்தார்.

சம்பந்தர் திருமயிலைக்கு வந்தபோது சிவனேசருக்கு ஏற்பட்ட மகத்தான சோகத்தைப் பற்றிக் கேள்விப்பட்டார். அவரை உடனே அந்த எலும்பு வைத்திருந்த சட்டியைக் கோயில் முன்னால் கொண்டுவந்து வைக்கும்படியாகக் கூறினார். எல்லோர் முன்னிலையிலும் சம்பந்தர் 'மட்டிட்ட புன்னையங் கானல்' என்று தொடங்கும் பதிகத்தைப் (2.183 – 1–10) பாடத் தொடங்கினார். சமணர்களும் பௌத்தர்களும். கூட அங்கு வந்து சூழ்ந்து கொண்டனராம். ஒவ்வொரு பாட்டும் 'போதியோ பூம்பாவாய்!' என்று முடிகிறது. சம்பந்தரே தன் பதிகப் பாடலுக்கு 'ஞானசம்பந்தர் நலம் புகழ்ந்த பத்து' என்று பெயரிட்டிருக்கிறார். ஒவ்வொரு பாட்டும் பூம்பாவையின் நலனை – அழகினைப் புகழ்ந்து பாடி அவளைப் 'போகிறாயோ பூம்பாவாய்!' என்று அழைப்பதுபோல் அமைந்துள்ளது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சேக்கிழார் கூறும் விவரப்படி ஒவ்வொரு பாட்டைப் பாடியதும் பாவையின் ஒவ்வொரு அங்கமும் தோன்றியது; பாட்டு முழுவதும் முடிந்த உடன் பூம்பாவை புத்துயிர் பெற்றுப் பொலிவுடன் வந்து நின்றாள். அதைத்தான் 'நலம் புகழ்ந்த பத்து' என்று சம்பந்தர் அழைத்திருக்கிறார்.

நம்பியாண்டாரும் சேக்கிழாரும் நல்லூர்ப் பெருமண நிகழ்ச்சியைச் சம்பந்தர் வாழ்வின் இறுதிக்கட்டமாக ஆனால் அவரது ஏற்றம் கூறும் நிறைவாகக் காட்டுகிறார்கள்.

பிள்ளையாரின் பாடல்களைப் படிக்கையில், அவர் எவ்வாறு இறைவனுடன் இணைவதற்குத் துடித்துக் கொண்டிருக்கிறார்; எந்த அளவிற்கு அவரது ஆன்ம உணர்வு பக்குவப்பட்டுக் கனிவடைந்திருக்கிறது என்பதை உணர முடியும். சராசரங்களையெல்லாம் சிவமயம் என்று உணர்ந்து தெளிந்த அவ்ரது உள்ளம் எல்லா உயிர்களிடத்தும் பரிவும் அருளும் கொண்டு திகழ்கிறது. அவரோடு மாறுபட்ட சமயவாதிகளையும் பிறரையும் அவ்வண்ணமே நோக்கி யிருக்கிறார். எனினும் அவர் ஆன்ம உணர்வு இறைவன் என்ற மையப்புள்ளியை நோக்கியே வட்டமிட்டுக் கொண்டிருந்தது; அந்த மையத்தில் தோய்ந்து மாற்ற மனம் கழிந்து நின்று நிலைபெற்றிருந்தது. உலக வாழ்வின் பயன்களை அவர் உள்ளம் நாடவில்லை. 'பலவும் பயன் உள்ளன பற்றும் ஒழிந்தோம்' (1.31.6) என்று அவர் கூறுவஃதைப் பார்க்கிறோம்.

பெண்டு, மக்கள், சுற்றம் என்பதெல்லாம் பேதமையே என்கிறார். துன்பத்தில் புடம் போடப்பட்டு இறைவன் இடத்தில் அன்பு வைத்திருப்பதையே – அவன் பெயரைப் பன்னி உரைப்பதையே பெருவாழ்வின் பயன் என்றே நினைக்கிறார்.

> பெண்டிர் மக்கள் சுற்றம் என்னும் பேதைப் பெருங்கடலை
> விண்டு பண்டே வாழமாட்டேன் வேதனை நோய் நலியக்
> கண்டு கண்டே உன்றன் நாமம் காதலிக்கின்ற துள்ளம்
> (1.50.3)

> தாயும் நீயே தந்தை நீயே சங்கரனே (1.50.7)

என்று அந்த உறவில் உறைகின்றார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

'என்னை ஏன் இவ்வுடம்புவிட்டு நீங்குமாறு காட்டத் தயங்குகிறார்?' என்பதுபோல்

பிணிபடும் உடம்பு விட்டு இறக்குமாறு காட்டினாய்க்கு
இழுக்கின்ற தென்னையே? (2.234.5)

என்று வினவுகிறார்.

பற்று நீங்கிப் பழுத்து இறைவனடி கூடும் எல்லையில்லாத அவரது வேட்கையை மேற்சொன்ன ஒருசில எடுத்துக்காட்டுகள் ஓரளவு உணர்த்தும். அதனால்தான் அவருடைய திருமணம் பற்றிய பேச்செழுந்தபோது முதலில் அதனை மறுக்கின்றார். இருந்தாலும் வைதிக நெறியை உலகில் நிலைநிறுத்துவதற்காகவே திருமணத்திற்கு அவர் ஒப்புக் கொள்வதாகச் சேக்கிழார் கூறுகிறார்.

திருஞானசம்பந்தரது நல்லூர்ப் பெருமணப்பதிகம் பல காரணங்களுக்காக முக்கியத்துவம் பெறுகிறது. பாட்டின் முதல் வரியே 'கல்லூர்ப் பெருமணம் வேண்டா!' என்று அம்மிக் கல்லில் காலை வைத்துச் செய்யும் திருமணச் சடங்குகளில் தமக்கு விருப்பமில்லை என்று திட்டவட்டமாக அறிவிக்கின்றார். தன்னை இறைவனிடமிருந்து பிரிக்கும் உலக பாச பந்தங்கள் அனைத்தும் தம்மைப் பொறுத்தவரையில் பொருளற்றவை என்று அவர் கருதினார். அதனால்தான் கழுமலம் முதலாகப் பல திருத்தலங்களுக்குச் சென்று தாம் பாடிய பாடல்களும் உணர்வுகளும் மெய்யிலையோ, பொய்யோ? என்று இறைவனிடம் கேட்கிறார். ('கழுமலம் பல்லூர்ப் பெருமணம்,பாட்டு மெய்யாய்த்தில?')

இறைவனுடன் கலப்பதற்கு அவர் பொறுமை பாராட்ட முடியாமல் தவிக்கிறார். 'பெருமணம் புக்கிருந்தீர் எம்மைப் போக்கருளீரே!' – நல்லூர்ப் பெருமணம் புகுந்து வீற்றிருப்பவரே எமக்குப் போக்கு – விடுதலையை உடனே வழங்க மாட்டீரோ?' என்று துடிப்போடு கேட்கிறார்.

சேக்கிழாரின் விவரப்படி அங்கே பெருந்தழல் தூண் ஒன்று தோன்றிக் கோயிலுக்கும் மேல் சென்று சுடர் ஒளியைப் பாய்ச்சி நின்றது. "சம்பந்தா! நீயும் இந்தப்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பெண்ணும் உன் திருமணத்திற்கு வந்திருந்த யாவரும் இத்தீப் பிழம்பிற்குள் புகுந்து வருக" என்று இறைவன் அருளினான்.

சம்பந்தரும் 'ஞான மெய்நெறி என்பது நமச்சிவாய என்ற சொல்லே ஆகும்' என்று கருதி 'காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி ஓதுவார்தமை நன்னெறிக்குய்ப்பது – நாத நாமம் நமச்சி வாயவே' என்று அமையும் நமச்சிவாயப் பதிகத்தைப் பாடி (3.307) 'ஈனம் ஆம் பிறவி தீர யாவரும் புகுக!' என்றார்.

நீலநக்கர், திருமுருகர், சிவபாத இருதயர், நம்பியாண் டார், நீலகண்டப்பாணர் போன்ற தொண்டர்கள் அனைவரும் தங்கள் தங்கள் பத்தினிமார்களுடன் இணைந்து ஜோதியுள் புகுந்தார்கள். சிவிகை சுமப்பவர்கள் முதல் மணத்திற்கு வந்திருந்த எல்லோரும் அப்படியே புகுந்தார்கள்.

சம்பந்தர் தம் காதலியைக் கைப்பற்றிக் கொண்டு வலம் வந்து நாதன் எரிவளர் சோதியுள் புகுந்து இறைவனுடன் ஒன்றினார்.

சம்பந்தர் எந்த இடத்திலும் தான் மணந்த பெண்மணியாரைப்பற்றிக் குறிப்பிடவில்லை. சேக்கிழாரோ நம்பியாண்டாரோகூடக் குறிக்கவில்லை. ஆனால் சில கல்வெட்டுகள் வழியாக அந்த மாதரசியின் பெயர் 'சொக்கியார்' என்று தெரிந்துகொள்கிறோம். 'தோத்திரபூரணி' என்ற பெயரும் இருப்பதாகத் தெரிகிறது.[6]

இந்தப் பகுதியை நிறைவு செய்வதற்கு முன்னால் சம்பந்தருடைய வயதைப்பற்றிச் சிறிது பார்ப்போம். அவர் சிவஞானமுற்றது பிள்ளைப் பருவத்தில்; மூன்றாம் ஆண்டில் என்று சேக்கிழாரும், 'குஞ்சிகூடாப் பருவத்து' என்று நம்பியாண்டாரும் கூறுகிறார்கள். 'போதையார் பொற் கிண்ணத் தடிசில்' என்று கழுமலப்பதிகப் பாட்டில் (3.282.2) சம்பந்தரே குறிப்பிட்டிருப்பதைப் பார்க்கிறோம்.

உபநயனச் சடங்கு ஏழாம் ஆண்டில் நடந்துமுடிந்த பிறகு சம்பந்தர் தமது தலயாத்திரையை மேற்கொள்கிறார். அப்பொழுதுதான் அவர் மதுரை சென்று அமணர்களை எதிர்கொள்கிறார். அவ்வேளையில் அவர் பிள்ளையாகத்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தான் விளங்குகிறார். அமணர்கள் பலர் வலியோராய்ச் சூழ்ந்திருப்பதைக் கண்ட மங்கையர்க்கரசியார்க்கு மனத்தில் சிறிது அச்சம் ஏற்பட்டிருக்க வேண்டும். சம்பந்தர் அரசியாரைக் கண்ணுற்ற பொழுதில் அவரது கலக்கம் பிள்ளையாருக்குப் புரிந்துவிட்டது. அவரது மானைப் போன்ற மருண்ட கண்கள் அவரது உணர்ச்சியைச் சம்பந்தருக்கு உணர்த்திவிட்டன. உடனே அரசியின் அச்சத்தைப் போக்க எண்ணி,

> மானின் நேர்விழி மாதராய்வழு திக்குமாபெருந் தேவி கேள்
> பானல்வாய் ஒரு பாலன்ஈங் கிவன் என்று நீபரி வெய்திடேல்
> ஆனை மாமலை ஆதியாய இடங்களிற்பல அல்லல்சேர்
> ஈனர்கட் கெளி யேனலென்திரு வாலவாய்அரன் நிற்கவே.
>
> (3.297.1)

(பானல்வாய் – பால்+நல்+வாய் – பாலொழுகும் வாய்).

என்று பாடி அவரது அச்சத்தைப் போக்கி 'நான் பாலனே ஆனாலும் ஆலவாய் அரன் என் பக்கம் நிற்பதால் நான் அவர்களுக்கு எளியவனாகிவிட மாட்டேன்!' என்று மனத்திற்கு உறுதி அளிக்கின்றார். சம்பந்தர் அப்பொழுது ஒரு பாலகனாகச் சிறுபிள்ளையாகத்தான் இருந்தார் என்பதற்கு இது ஒரு சிறந்த சான்றாகும்.

மேலும் உபநயனத்திற்குப் பிறகு அவர் மேற்கொண்ட நீண்ட பயணத்தையும் திருவீழிமிழலை போன்ற இடங்களில் நெடிய நாட்கள் தங்கியிருந்ததையும் கணக்கில் கொண்டால் அதற்குள் 4 ஆண்டுகள் ஆகியிருக்கலாம். எனவே அவர் மதுரைக்குச் சென்றபோது அவரது வயது 11 ஆக இருப்பதற்கு இடமிருக்கிறது. அதற்குப் பிறகு அவர் சீர்காழிக்குத் திரும்பினார். அங்கு அவர் நீண்ட காலம் தங்கிப் பல பதிகங்கள் பாடியருளியிருக்கிறார். அதன் பின்னால்தான் அவரது நீண்ட யாத்திரை தொடங்கியது. திருக்காளத்தி வரை சென்றார். திரும்புகையில் திருவொற்றியூர், திருமயிலை ஆகிய தலங்களுக்கு வந்தார். அந்தத் தருணத்தில் அவருக்குப் 'புண்ணியப் பதினாறாம்' ஆண்டு வந்ததாகச் சேக்கிழார் குறிப்பிடுகிறார். (திருஞானசம்பந்த நாயனார் புராணம் 1109).

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நல்லூர்ப் பெருமணத்தில் அவரது திருமணம் நிச்சயிக்கப் படுவதற்கு ஒரு சில மாதங்களே ஆகியிருக்க வேண்டும். நம்பியாண்டார் நம்பியும், சம்பந்தருடைய பெற்றோரும் சுற்றத்தாரும் பெருமணத்தில் அவரது திருமணத்தை நடத்திய போது சம்பந்தர் சிவனடி சேர்ந்துவிட்டதாகக் கூறுகிறார்.

ஆகையால் திருஞானசம்பந்தர் மிகவும் இள வயதிலேயே இவ்வுலகை நீத்து இறைவன் திருவடியை அடைந்திருக்க வேண்டும் என்று தெரிகிறது.

குறிப்புகள்

1. "தாவில்சரா சரங்களெலாம், சிவம்பெருக்கும்
பிள்ளையார் திருஅவதாரஞ் செய்தார்."
– திருஞானசம்பந்த நாயனார் புராணம், 26

2. திருத்தொண்டர் புராணம், திரு.வி. கலியாணசுந்தரனார் அரும்பத உரை, பதிப்பாசிரியர் பேராசிரியர் அ.ச. ஞானசம்பந்தன், சேக்கிழார் ஆராய்ச்சி மையம், சென்னை, *1993*. பக். *581*.

3. S. Singaravelu, 'Some aspects of South Indian Cultural contacts with Thailand : Historical Background' – *Proceedings of the First International conference seminar of Tamil Studies*, 1966, Vol. I, p.27.

4. எடுத்த இயலும் இசையும் தம்மின்
முடித்துப் பாடுதல் முரிஎனப் படுமே!
அடியார்க்கு நல்லார் உரை, அரும்பத உரை, சிலப்பதிகாரம், பக். 208.

5. ஆக்கரிய யாழ்முரி சக்கரமாற் றீரடி முக்காலும்
– ஆளுடைய பிள்ளையார் திருஉலா மாலை, கண்ணி. 84

6. சிறப்புப் பெயர் அகராதி, சைவசித்தாந்தக் கழக வெளியீடு, சென்னை, *1970*, பக். *378*.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

3

சம்பந்தரின் மெய்ஞ்ஞானம்

3.1. மெய்ஞ்ஞானக் கோட்பாடுகள்

திருஞானசம்பந்தர் ஒரு தெய்வக் கவிஞர். கடவுளைக் கண்டு தெளிந்தவர்; பேரின்பத்தை நுகர்ந்து அனுபூதி பெற்றவர். கவிதையும் இசையும் அவர் உயிரில், உணர்வில் இழையோடியிருப்பவை. எனவே தெய்வப் பேரெழிலை, பேருணர்வை அவர் அனுபவித்த ஆன்ம இன்பம் அவருடைய தமிழிலும் இசையிலும் தேன் அருவியாகப் பொழிவதைக் காண்கிறோம். அங்கு அன்பும் ஞானமும் இணைந்து பாய்வதையும் காண்கிறோம். அவர் ஒரு தத்துவ சித்தாந்தி அல்லர்; சமயக் கணக்கரும் இல்லை. இருந்தாலும் அவருடைய கவிதைகளில் மெய்ஞ்ஞானச் சிந்தனைகள் மலரில் துளிர்க்கும் தேன் துளிகளைப் போல் அங்கும் இங்கும் பிலிர்த்து நிற்கின்றன; மலர்களின் நறுமணம் போல் கமழ்ந்து பரவுகின்றன.

சம்பந்தரின் மெய்ஞ்ஞானச் சிந்தனைகளை அவரது பாமலர்களிலிருந்து எடுத்துத் தொடுத்துக் கொடுப்பதே இந்த நூலின் பணி. அவ்வாறு செய்கையில் மிகவும் கவனம் செலுத்தப்பட்டிருக்கிறது. அவரை எந்த ஒரு சமயக் கோட்பாட்டிற்கோ – கொள்கைக்கோ சார்புடையவராகக் கொள்ளாமல் உள்ளது உள்ளபடி ஆராய முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது..

மிகப் பழங்காலம் தொட்டே சம்பந்தரது பாடல்கள் வேதங்களாகப் போற்றப்பட்டு வந்துள்ளன. வேதங்கள் எழுதா மாமறை என்றால் சம்பந்தரது பதிகங்கள் 'எழுது மாமறை' என்று சேக்கிழார் போற்றுகின்றார்.[1] நம்பி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

யாண்டார் நம்பியும் தம்முடைய ஆளுடைய பிள்ளையார் திருக்கலம்பகத்தில் "பன் மறையோர் செய்தொழிலும் பரம சிவாகம விதியும் நான்மறையின் விதி முழுதும் ஒழிவின்றி நவின்றனையே" என்று சம்பந்தர் வைதிக வேள்விக் கடமை களையும், பரமசிவ ஆகமங்களையும் வேத நெறிகளையும் தம் பாடல்களில் விளங்குமாறு பாடியிருப்பதாகப் பாராட்டு கிறார்.

சம்பந்தரே தன்னைப் பற்றியும் தம் தமிழைப் பற்றியும் சொல்லிக்கொள்ளும்பொழுது 'மறை இலங்கு தமிழ்' (1.61.11), 'மறை மலி தமிழ்' (1.124.11), 'மறைவளரும் தமிழ்' (2.203.11), 'தமிழ்க் கிளவி' – கிளவி – வேதம் (3.337.11) என்றெல்லாம் குறிப்பிட்டுக் கொள்வதைப் பார்க்கின்றோம்.

உபநிடதங்கள் வேதாந்தத்திற்கும் மற்ற எல்லா தரிசனங்களுக்கும் அடிப்படையாக அமைந்து அந்த அடிப் படைகளில் பல சித்தாந்தங்கள் விளங்கியிருப்பதைப் போலவே சம்பந்தரின் பதிகங்களிலிருந்தும் பல மெய்ஞ் ஞானச் சிந்தனைகள் எழுவதை ஆராய்ந்து பார்ப்பதற்கு இடமிருக்கிறது.

தேவாரப் பதிகங்களின் மெய்ஞ்ஞான அடிப் படையைப் பற்றி வி.ஏ. தேவசேனாதிபதி அவர்கள் பின்வருமாறு கூறுகிறார்: அவை தூய பொன்னை ஒத்தன. தங்கத்திலிருந்து பல்வேறு அணிகலன்களை வகை வகையாகச் செய்துகொள்ள இயலுவதைப்போல் பல்வேறு சிந்தனை வடிவங்களை இப்பதிகப் பாடல்களிலிருந்து புனைந்துகொள்ள முடியும்.[2]

எனவே, சம்பந்தர் மெய்ஞ்ஞானக் கோட்பாடுகள் பற்றித் தம் பாடல்களில் கூறியவற்றையெல்லாம் உள்ளது உள்ளபடி இங்கு எடுத்துச் சொல்லி அவருடைய மெய்ஞ் ஞானக் கோட்பாட்டை அவருடைய சிந்தனையின் அடிப்படையில் அமைத்துக் காட்டுவதே இந்த நூலின் சிறப்பான கடமையாக உள்ளது.

சம்பந்தரைப் பொறுத்தவரையில் இந்த உலகம் என்பது ஓர் உள் பொருள். இவ்வுலகமும் இவ்வண்டங்களும் எல்லாமே

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இயற்கையாக விளங்குகின்றன. ஆனால் உலகும் அண்ட பேரண்டங்களும் மட்டுமே இயற்கை முழுவதுமாகி விடாது. இயற்கை அவற்றினும் பரந்தது, எனினும் நுண்ணியது. அது பேரண்டமாகவும் பரமாணுவாகவுமாகத் திகழ்கிறது.

அதைப்போல் ஆன்மா - உயிர் என்ற ஒன்றும் உண்டு. அது இயற்கையை அறிந்துகொள்ளக் கூடியது; இயற்கையை அனுபவிக்க வல்லது. இவையெல்லாவற்றிற்கும் அடிப்படையான ஒரு 'பொருள்' உள்ளது. அதுதான் பேரறிவாகவும் மகாசக்தியாகவும் விளங்குகிறது. இந்த முப்பொருள்களும் - இயற்கை, ஆன்மா - (உயிர்), பேரறிவுப் பேராற்றலாம் இறை-கடவுள் மூன்றும் சம்பந்தரது மெய்ஞ்ஞானக் கோட்பாடுகளுக்கு அடிப்படையானவையாக அமைந்துள்ளன. இவற்றைச் சம்பந்தரின் பாடல்கள் வழியாக உணர்ந்து தெளிய இந்நூல் முயல்கிறது.

3.2. இயற்கை

இயற்கை மாயை என்றும், பிரகிருதி என்றும், பாசம் என்றும் பல நிலைகளில் வைத்து எண்ணிப் பார்க்கப் படுகிறது. இந்த இயற்கையை ஒரு பொருள் உணர்கிறது; சுவைக்கிறது. எது அவ்வாறு ஒன்றை அனுபவிக்கின்றதோ அது எழுவாயாக, ஆன்மாவாக, உயிராக இருக்கின்றது. அனுபவிக்கும் எழுவாயும், அனுபவிக்கப்படும் பொருளும் இல்லையென்றால் 'அனுபவம்' ஏற்படுவதில்லை. இயற்கையை மேல்நாட்டு சிந்தனையாளர்கள் பொருளாகக் (matter) கருதுகிறார்கள். ஆனால் நம் நாட்டுச் சிந்தனைப்படி இயற்கை வெறும் சடப்பொருள் மட்டுமில்லை. அது மனத்தை - தான் என்ற உணர்வைத் தோற்றுவிக்கும் அகங்காரத்தை உள்ளடக்கியுள்ளது. ஆன்மா என்பது பூரணமான அறிவு; அது சடப்பொருளுக்கு மேலானது. ஆனால் ஆன்மாவும் சடப்பொருளும் பரமாத்மாவை அடிப் படையாகக் கொண்டே இயங்குகின்றன; அதையின்றி அவற்றுக்கு இயக்கமோ இடமோ இல்லை.

இயற்கை, ஆன்மா (உயிர்), இறைவன் என்ற முப்பொருள்களுக்கும் உள்ள உறவு எப்படிப்பட்டது

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

என்பதில் விளக்கம் கூறும் நிலையில்தான் பல்வேறு தத்துவக் கோட்பாடுகளுக்கிடையே வேறுபாடு இருக்கிறது. ஆனால் உலகில் எல்லாச் சமயங்களிலும் உள்ள அருளாளர்கள் யாவரும் இறைவனுடைய அழகையும் அருளையும் இன்பத்தையும் இயற்கையின் வாயிலாக அனுபவித்து உணர்ந்திருக்கிறார்கள். அவர்களுக்கு இயற்கை – அதாவது அண்ட சராசரங்கள் யாவும் இறைவனுடைய திருக்கிளரும் வடிவமாகவே கோலம் கொண்டுள்ளன.

ஆண்டாள் என்னும் திருவளர் மடந்தை மாலை தொடுப்பதற்காக மலர் கொய்ய நந்தவனம் புகுந்தாள். அங்கு அவள் பார்த்த மலர்களெல்லாம் பரந்தாமனின் பேரழகையே காட்டினவாம். கருவிளை மலர்களையும் காயா மலர் களையும் கண்டு அதிசயித்த ஆண்டாள் 'கருவிளை ஒண் மலர்காள்! காயா மலர்காள்! எங்கும் திருமால் உரு ஒளி காட்டுகின்றீர்!' என்று விம்மிதமடைகிறாள். திருமாலின் பேரெழில் ஒளியைப் பிரதிபலிக்கும் முல்லை மலர்களையும் கோவை மலர்களையும் 'முல்லைப் பிராட்டி!' கோவை மணாட்டி!' என்று பாசத்தோடு அள்ளி எடுத்து அணைத்துக் கொள்கிறாள்.

உயிர்களை உறவுகளாக மதிக்கும் பண்பாடு பழந்தமிழ்ச் சமுதாயத்தில் வேர் பிடித்திருக்கிறது. **நற்றிணை** என்ற சங்கத்தொகை நூலில் ஒரு பாடலில் (172) ஒரு புன்னைச் செடி ஒரு மகளாகவும், தமக்கையாகவும் ஒரு தாய், மகள் ஆகிய இருவராலும் பாவிக்கப்பட்டுப் பாசத்தோடு ஏற்றுக் கொள்ளப்பட்ட செய்தி காணப்படுகிறது. பழந்தமிழ் இலக்கியங்களில் காதலர் வாழ்வின் அன்பரங்கத்திலே இயற்கை ஒரு முக்கியமான பாத்திரமாக விளங்குகிறது.

இயற்கையுடன் ஒன்றி உறவாடி வாழ்ந்த காரணத்தால் பழந்தமிழர்கள் அங்கு அருளார்ந்த இன்ப நிலையை அனுபவித்து வந்திருக்கிறார்கள். கடவுள் காதலர்களுக் கிடையே ஒரு தன்னிகரற்ற தலைவன். அதுமட்டுமல்ல அவன்; அளவுகடந்த அழகன். இயற்கை அவனுடைய தெய்வப் பேரழகைப் பிரதிபலித்து ஒளிர்கிறது. அவன்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஒவ்வொரு இடத்திலும் ஒவ்வொரு புள்ளியிலும் இருந்த அழகின் கோலமெலாம் காட்டி நிற்கிறான். திருமுருகாற்றுப் படை 'கைபுனைந்து இயற்றாக் கவின்பெரு வனப்பு' (வரி. 17) என்று இயற்கையின் கொள்ளை அழகைச் சொற்களால் அள்ளிக் கொட்டுகிறது.

அதே திருமுருகாற்றுப்படை என்னும் சங்கத் திருநூல் முருகன் மகிழ்ந்து குடியிருக்கும் இடங்களைத் தொகுத்துக் கூறுகிறது. கீழே பார்ப்போம்.

காடும் காவும் கவின்பெறு துருத்தியும்
யாறும் குளனும் வேறுபல் வைப்பும்
சதுக்கமும் சந்தியும் புதுப்பூங் கடம்பும்
மன்றமும் பொதியிலும் கந்துடை நிலையினும் (223–226)

(கந்துடை நிலை – நடு தறியாக நிற்கும் நிலை – தூண்).

செந்தமிழ் நாட்டின் பழம்பெரும் கோயில்கள் ஒவ்வொன்றிலும் ஒரு சிறப்பான மரம் உண்டு. அதனைத் 'தல விருட்சம்' என்று பாராட்டி வருகிறார்கள். அந்த மரங்கள் அக்கோயில்களின் பழைய வடிவங்களாக இருக்கின்றன என்று கருதலாம். அம்மரத்தடியிலோ, மரத்தையோ பழந் தமிழர்கள் வழிபட்டு வந்திருக்கிறார்கள். பின்னால் அவை களின் அடிப்படையிலேயே 'கொடிமாடக் கோயில்கள்' எழுந்திருக்க வேண்டும். சில கோயில்களின் பெயர்களே அவைகளின் தல மரங்களின் பெயரடியாகப் பிறந்திருக் கின்றன. எடுத்துக்காட்டாக, பாதிரிப்புலியூர், பைஞ்ஞீலி, இடைமருதூர், குற்றாலம், மருகல் போன்ற ஊரும் கோயில் களும் மரங்களின் பெயர்களையே தாங்கியிருக்கின்றன.

பல இயற்கைப் பொருட்களின் பெயர்களைத் தாங்கியே பல திருத்தலங்கள் அழைக்கப்பட்டு வருகின்றன. எடுத்துக் காட்டு: ஆலங்காடு, வேற்காடு, வெண்காடு, மறைக்காடு என்று காட்டின் பெயர்களாகவும்; கோலக்கா, ஆனைக்கா, கோடிகா, என்று 'கா' என்னும் சோலைகளின் பெயர் களாகவும்; ஐயாறு, நள்ளாறு, கோட்டாறு என்று ஆறுகளின் பெயர்களாகவும்; ஆவடுதுறை, பேணுபெருந்துறை, சோற்றுத் துறை, குரங்காடுதுறை, மயிலாடுதுறை என்று துறைகளின்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பெயராகவும், முதுகுன்றம், திருப்பரங்குன்றம், செங்குன்றம் என்று குன்றுகளின் பெயராகவும்; இவ்வாறு பல வழிகளில் இயற்கையே திருத்தலங்களாக விளங்கக் காண்கிறோம்.

நாட்டு மக்களின் பொது வாழ்விலும் சமய வாழ்விலும் இயற்கை ஒரு முக்கியமான பணியைச் செய்கிறது. சம்பந்தர் ஒரு தமிழ்க்கவிஞர்; தமிழ்க் கவிதை மரபுகளை நன்கறிந்தவர்; தம்மைத் 'தமிழ்ஞானசம்பந்தன்' என்றும் 'தமிழ் விரகன்' என்று நாத்தழுதழுக்க அழைத்துக்கொண்டு மகிழ்ந்தவர். எனவே வாழ்க்கையில் ஊன்றிப் பிணைந்து விட்ட ஓர் அங்கமாகவே இயற்கையை அவர் மதிப்பதில் வியப்பேதும் இல்லை. ஆண்டவனுக்கும் மனிதனுக்கும் உள்ள பிணைப்பையும் இயற்கையின் வழியாகக் கண்டு உணர்ந்த அவர் இங்கேயே இம்மையிலேயே பேரின்ப உணர்வைச் சுவைத்தவர்.

இங்கு இயற்கை அருளியற்பாடு (nature mysticism) என்பது எல்லா வற்றையும் கடவுளாக ஏற்றுக்கொள்ளும் சமயநிலை (pantheism) இல்லை, உலகில் உள்ள சராசரங் களின் கூட்டு மொத்தமில்லை. எல்லாமாக இணைந்து உணரும் ஓர் ஒன்றுபட்ட மன நிலையைத்தான் இது உணர்த்துகிறது.

சம்பந்தர் ஓர் இயற்கை அருளியல் கவிஞர் (nature mystic). அவரது பாடல்களில் இயற்கை கொலுவீற்றிருக்கக் காண்கிறோம். ஊர்களும் நகர்களும், மலையும் குன்றும், ஆறும் கடலும் எல்லாவற்றையும் அவரது பாடல்களில் முழு வடிவத்தோடு சந்தித்து மகிழ்கிறோம். கோயில்கள் மக்கள் வாழ்வின் உயிர்நாடியாக, மையப் புள்ளியாக விளங்கு கின்றன. சம்பந்தருக்கு ஆலயமென்பது வெறும் வழிபடும் தலம் மட்டுமில்லை. ஒவ்வொரு கோயிலின் பின் புலத்திலும் இயற்கை சித்திரத் திரைச்சீலைபோல் மனித வாழ்வை தெய்வத்தோடு இணைத்துக் காட்டி நிற்கிறது. ஒவ்வொரு ஊரிலும் உள்ள ஓடைகளும், ஆறுகளும் அவைகளில் நீந்தித் திளைக்கும் மீன்களும் அவற்றுக்காக வந்து படியும் பலவகைப் பறவைகளும், நீண்ட நெடுவயல்களும், அங்கு விரிந்து

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தென்றலில் அசைந்தாடும் பயிர்ச் செல்வமும், பல்வேறு தொழில்களில் ஈடுபட்டிருக்கும் மக்களும், ஓடித்திரிந்து விளையாடும் இளஞ்சிறுவர் சிறுமியரும், ஆடும், மாடும், கோழியும், நாய்களும் – உலக வாழ்க்கை இயற்கையோடு பொருந்தி இறைவனையும் இணைத்துக் கொண்டு சலசல என்று இயங்கும் இயக்கத்தைக் காண்கிறோம்.

இந்த இயற்கையின் உயிர் ஓட்டத்தை, கலகலவென்ற சுறுசுறுப்பைச் சம்பந்தரது பாடல்களில் கண்டு வியக்கும் நாம் அவர் எந்த அளவிற்கு இயற்கையோடு ஒன்றிப் போயிருக்கிறார் என்றும் அறிந்து மகிழ்கிறோம். கோயில் களைச் சுற்றியுள்ள இயற்கையில் அன்பையும் ஆண்ட வனையும் நமக்குக் காட்டுகின்றார் சம்பந்தர். ஆலயத்தில் தொழுவதும் ஆலயத்தைத் தொழுவதும் ஒன்றே என்ற நெறியைக் காட்டியவர்கள் சம்பந்தர்போன்ற அருள் நெறியாளர்கள். ஆலயம் என்பது இயற்கையின் அங்கம் என்றும் தெளிவாகக் காட்டப்படுகிறது. அதனால்தான் அவர் *'தூங்கானை மாடம் தொழுமின்காள்!'* (1.59 – 1–10), 'பிதற்றாய்ப் பிறை சூடி தன் பேரிடமே' (2.175.1) என்றெல்லாம் இறைவன் வாழும் கோயில்களையே அவனாக மதித்துக் கும்பிட அழைக்கின்றார்.

சம்பந்தர் செல்லுமிடமெல்லாம் இயற்கையும் அவரைக் கூவி அழைத்துக் கொண்டாடுகிறது; இறைவனே தன்னை அன்போடு எதிர்கொள்வதாகவும் அவன் இயற்கையில் தோய்ந்து நிற்கும் திருவருள் வெளிப்பாட்டை வெளிப் படுத்துவதாகவும் அவர் உணர்ந்து உருகுகிறார். ஒரு சில காட்சிகளைப் பார்ப்போம்: திருக்கருகாவூருக்குப் பிள்ளையார் சென்று நெருங்கும்போது 'மௌவல்' என்ற ஒரு வகை முல்லைப்பூக்கள் மணம் கமழ்ந்து அவரை வரவேற்கின்றனவாம். "கந்த மௌவல் கமழும் கருகாவூர்' (3.304.7) என்று மணம் வந்து அழைப்பதைச் சுட்டிக் காட்டுகிறார் அவர்.

சம்பந்தரது இயற்கை வருணனை அங்குள்ள பொருள் களைமட்டிலும் நமக்குக் காட்டவில்லை. எல்லாவற்றிலும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஊடுருவி நிற்கும் இறைவனது அருள் இயல்பையும் உணர்த்துகிறது; அவனது அழகையும் காட்டுகிறது. அவர் அவற்றில் தோய்ந்து ஒன்றிய நிலையையும், அவரது மனத்திலிருந்து பீரிட்டு எழும் இன்ப ஊற்றையும், மகிழ்ச்சிக் கொந்தளிப்பையும் நம்மால் உணர்ந்துகொள்ள முடிகிறது. பொதுவாக இயற்கை அவரது பாடல்களில் நாடகம்போல் சுவைபட விளங்குகிறது.

'அன்பே சிவம்' என்பார் திருமூலர். 'அன்பின் வழியது உயிர்நிலை' *(80)* என்றுரைத்தார் தெய்வப்புலவர். இந்த அன்பு ஆணும் பெண்ணுமாக உள்ள உயிர்களிடத்தில் உயர்ந்து வெளிப்படுகிறது. எனவே ஆண்-பெண் அன்பும் ஆண்டவனுக்கு இணையானதுதான். சம்பந்தப் பெருமானின் பாடல்கள் பலவற்றில் இந்த அன்பின் பெருநிலை பேசப் படுகிறது. பேணு பெருந்துறையில் அன்னப் பறவைகள் ஆணும் பெண்ணுமாக அணைத்துக்கொண்டு உறவாடி மகிழ்வதைப் பார்க்கின்றோம். 'அன்னம் கன்னிப் பெடை யோடாடி அணவு பெருந்துறை' *(1.42.1)* என்பது ஒரு காட்சி.

இன்றைக்குத் திருவெறும்பூர் என்று அழைக்கப்பட்டு வரும் கற்குடிமாமலையில் மற்றொரு காட்சி. இங்கு ஓர் ஆண் யானை தன் காதலியிடம் கொண்ட காதல் மிகுதியால் அம்மலையில் வளர்ந்திருந்த மூங்கிலின் இளங்குருத்தைப் பறித்துத் தன் பிடி (பெண் யானை)யின் வாயில் வைத்து ஊட்டி மகிழ்கிறதாம்.

> ...பிடிவாயில் வாழ்வெதி ரின்முளை வாரிக்,
> கருங்களி யானை கொடுக்கும் கற்குடி மாமலை... *(1.43.4)*

காதல் உணர்வின் முழு அழுத்தத்தையும் ஊடலில் காண முடியும். 'ஊடுதல் காமத்திற்கு இன்பம்' என்கிறார் வள்ளுவர் *(1330)*. இங்கு காமம் என்பது காதல் அன்பு. இந்த உணர்வினைச் சிறைப்பிடித்துக் காட்டுகிறது சம்பந்தரின் பாடல்.

காதலுற்ற ஒரு பெண்வண்டு தன் காதலுக்குரிய ஆண்வண்டின் வரவு நோக்கி காத்திருந்தது. அந்த ஆண்வண்டு வந்தபோது அதன் உடலெல்லாம் வேறு ஒரு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பெண் வண்டோடு முயங்கிய காரணத்தால் மகரந்தப் பொடி பூசியிருப்பதைப் பார்த்த பெண்வண்டு, ஊடல் கொண்டு, அந்த ஆண் வண்டின் கண்ணில் படாது ஒரு சோலையுள் சென்று மறைந்து கொள்கிறதாம்.

> மாதர் வண்டுதன் காதல் வண்டாடிய புன்னைத்
> தாதுகண்டு பொழில்மறைந்து ஊடு சாய்க் காடே (2.174.7)

மற்றொரு இடத்தில் - திருச்சிராப்பள்ளியில் - ஒரு செம்முக மந்தி தன் கணவன் கடுவனோடு ஊடல் கொள்கிறது. அந்த ஊடல் வேகத்தில் தன் குட்டியையும் கையில் ஏந்திக்கொண்டு மூங்கில் முனையிலிருந்து பாய்ந்து உயிர்விட நினைக்கிறது. அந்த மூங்கில் அந்தக் கரிய குன்றத்தின் மீதிருப்பதால் விறுவிறு என்று அங்கே ஏறிச் செல்கிறதாம். எல்லாம் கணவன்மேல் கொண்ட ஊடலுக் காகத்தான்.

> கைம்மக வேந்தி கடுவ னொடூடிக் கழை பாய்வான்
> செம்முக மந்தி கருவரை ஏறும் சிராப் பள்ளி (1.98.2)

தாயன்பிற் சிறந்ததோர் அன்பில்லை அல்லவா? சம்பந்தர் காளத்தி மலையிலிருந்து கேதாரத்தை மானசிக மாகத் தரிசித்துப் பாடுகிறார். அந்தக் கேதாரத்தில் ஒரு தாய்க் கிளி கூட்டில் இருக்கும் தன் குஞ்சுகள் பசியால் குரல் எழுப்புவதைக் கேட்டு மனம் பரிவு கொள்ளுகிறது. ஆனால் அவற்றைத் தனியாக விட்டுவிடவும் மனமில்லை. இருப்பினும் மனத்தைத் தேற்றிக் கொண்டு பறந்து சென்று இரை தேடிக் கொண்டுவந்து தன் குஞ்சுகளுக்கு அன்போடு ஊட்டுகிறதாம்.

> பிள்ளை துள்ளிக் கிள்ளி பயில்வ கேட்டுப் பிரியாது போய்க்
> கிள்ளி ஏனல் கதிர் கொணர்ந்து வாய்ப்பெய்யும் கேதாரமே
> (2.250.4)

(ஏனல் - ஒருவகை நெல்)

அன்பே கடவுள் என்றால் அழகும் கடவுள்தானாம். அவன் ஒரு புவன சுந்தரன்; 'சொக்கன்' (3.297.11); 'அழகாய ஈசன்' (1.32.5). அப்பேரழகன் இயற்கையின் ஒவ்வொரு கூறிலும் வியாபித்திருப்பதை அனுபவித்து உணர்ந்தவர் சம்பந்தர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கவிதைக் கலையும் கானத்தின் இனிமையும் நிறைந்த அவர் அந்தப் பேரழகைக் கண்டுணர்ந்து அதனைத் தன் பாட்டில் வடித்தெடுக்கும் வல்லமையையும் பெற்றிருக்கிறார்.

இதனைத்தான் ஷெல்லிங் என்பவர் பேரண்ட அழகைக் கலையுணர்வால் அறியும் திறம் (aritistic intution of cosmic beauty)[3] என்கிறார்.

இயற்கை அழகு நுட்பங்களை ஊன்றிக் கவனிப்பவர் சம்பந்தர். சீர்காழியில் ஒரு பாக்குமரம் குலை தள்ளி யிருக்கிறது. அதன் சிறு கொட்டைகள் முதலில் முத்துக் களைப் போல வெண்மையாக இருக்கின்றன. சில நாள் கழிந்த பிறகு அம்முத்துக்கள் பச்சை மரகதமாக மாறி விட்டன. மேலும் சில நாள் சென்ற பிறகு மரகதம் பவளம் போல் சிவந்து விட்டன. இந்த அற்புதத்தைக் கண்ட சம்பந்தர்,

> எண்ணார் முத்தம் ஈன்று மரகதம்போல் காய்ந்து
> கண்ணார் கமுகு பவளம் பழுக்கும் கலிக்காழி (1.102.4)

என்று தம் வியப்பைப் பாட்டாக வடித்தார்.

திருவீழிமிழலையில் வேறு ஓர் அழகுக் காட்சி.

அரசவையில், ஆடும் மகளிர்க்கும் கலைஞர்க்கும் பொற்காசு வழங்குதல் மரபு. புறவம் என்னும் சீர்காழியில் பூத்து நின்ற புன்னை மரம் ஒன்று செல்வந்தனைப்போல் தன் மலர்களைச் சிந்தி விளங்குகிறது. பாடும் வண்டுகளும் ஆடும் மயிலும் அங்கு தம் கலைத்திறனைக் காட்டுகின்றன. இயற்கை என்னும் திருமகள் அங்கு முறுவல் செய்து வீற்றிருக்கிறாள். அங்கு சிதறிக் கிடக்கும் முத்துகள் அவளது பற்களாக ஒளிவிடுகின்றன. அருகில் உள்ள தாமரை முகம்போல் சிவக்கிறது. கயல் மீன் துள்ளி அவளுடைய விழியெனப் பிரள்கின்றன. பவளம் அவளது இதழ்களைப் போல் செம்மையுற்றிருக்கின்றன.

> 'கொழுந்தரளம் நகைகாட்டக் கோகநதம் முகம் காட்டக்
> குதித்து நீர்மேல்
> விழுந்த கயல் விழிகாட்ட விற்பவளம் வாய்காட்டும்
> மிழலையாமே' (1.132.3)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இயற்கையில் நகைச்சுவையும் உண்டு. திருவெண்காடு என்ற ஊருக்கு வெளியே ஒரு தாழம்புதர். அருகில் ஒரு குளம். தாழை மடல் ஒன்று இதழ் பிரிந்து பக்கத்துக் குளநீரில் சாய்ந்து படிந்திருக்கிறது. அதன் நிழலைக் கண்டு அக் குளத்தில் பிரளும் கெண்டை மீன் அதனைக் குருகோ (கொக்கோ) என்ற எண்ணி அஞ்சி தாமரைப் பூவிற்குள் சென்று ஒளிந்து கொள்கிறது. அதன் அறியாமையையும் அச்சத்தையும் கண்டு கடல் அலை எறிந்த முத்துக்கள் பல் காட்டிச் சிரிப்பது போல் ஒளிவீசுகின்றன.

இந்தக் காட்சியைச் சம்பந்தர்,

விடமுண்ட மிடற்றண்ணல் வெண்காட்டின் தண்புறவில்
மடல்விண்ட முடத்தாழை மலர்நிழலைக் குருகுஎன்று
தடம்மண்டு துறைக் கெண்டை தாமரையின் பூமறையக்
கடல்விண்ட கதிர்முத்தம் நகைகாட்டும் காட்சியதே (2.184.4)

என்று பாடிச் சிரிக்கிறார்.

சம்பந்தரது பாடல்கள் பண்மலிந்த பாடல்கள். அவரோ கானத்தின் எழுபிறப்பு. எனவே அவரது பாடல் களில் தேனும் வண்டும் கிளியும் மைனாவும் குயிலும் பிறவும் பாடி ஒலிப்பதை நம்மால் இனிது கேட்க முடிகிறது.[4]

கடவுள் புவன சுந்தரனாக உலகுயிர்ப் பொருள்கள் யாவற்றிலும் அழகுமயமாக விளங்குகிறான். எல்லாம் அவனுடைய அழகையும் அன்பையும் பிரதிபலித்து நிற்கின்றன. ஆனால் அவை எல்லாம் கடவுளாவதில்லை; கடவுள் அவை எல்லாவற்றிலும் இருக்கிறான். அதனால் இயற்கையே அவனைத் தொழுது கும்பிடுகிறது. அந்த அன்புக் காட்சிகளைச் சம்பந்தரது பாடல்களில் பார்க்கிறோம்.

கோட்டாறு என்னுமிடத்தில் ஓர் ஆண் யானை (களிறு) நின்று மேய்ந்து கொண்டிருக்கிறது. அதன் மனமெல்லாம் கோட்டாற்று ஈசனையே நினைத்துக் கொண்டிருந்தது. அந்த அன்பில் மலர்களைக் கொய்து வந்தது. இறைவனுக்கு நீராடத் தண்ணீர் வேண்டுமே! பக்கத்தில் மழை மேகமொன்று தவழ்ந்து வந்தது. அதனைப் பிடித்து யானை குலுக்கிக்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

குத்தியவுடன் நீர் பொழிந்தது. அந்த நீரையும் பூவையும் வைத்துக்கொண்டு யானை தன் பூசனையைச் செய்ததாம்.

நின்று மேய்ந்து நினைந்துமாகரி நீரொடும் மலர்
வேண்டிவான் மழை
குன்றின் நேர்ந்து குத்திப் பணிசெய்யும் கோட்டாறு (2.188.2)

என்று அந்த அன்புக் காட்சி நம்மை சிலிர்க்க வைக்கிறது.

மற்றோர் இடத்தில், குற்றாலத்தில் குறும்பலா ஈசனை ஆணும் பெண்ணுமாக யானைகள் வேங்கை மரத்தின் பூங்கொத்துகளை ஒடித்துத் தங்கள் தலையில் சுமந்து கொண்டு வந்து இறைவனுக்குப் படைத்து வணங்கு கின்றனவாம்.

பூந்தண் நறுவேங்கைக் கொத்திறுத்து மத்தகத்தில்
பொலிய ஏந்திக்
கூந்தல் பிடியும் களிறும் உடன் வணங்கும் குறும்பலாவே.
(2.207.8)

இதுபோல் திருவலி தாயத்தில் மந்திகள் (பெண் குரங்குகள்) தம் கணவன்மார்களான கடுவனோடு வணங்குவ தாகக் காண்கிறோம்.

மந்தி வந்து கடுவனோடு வணங்கும் வலிதாயம் (1.3.5)

இவை போன்றே பல காட்சிகள்![5]

சங்க நூல்களில் கூட இத்தகைய காட்சிகள் சிலவற்றைக் காண்கிறோம். அகநானூற்றுப் பாடல் ஒன்றில் (70) இராமன் ஓர் ஆலமரத்தின் கீழ் அமர்ந்து முனிவர்களுடன் மறையை - வேதங்களைக் குறித்து ஆராய்ந்து கொண்டிருந்தான். அவ்வாலமரத்தில் தங்கியிருந்து சலசலவென்று கத்தி ஓசையெழுப்பிக் கொண்டிருந்த பறவைகள் இராமனது அருமறைச் சொற்களைக் கேட்டவுடன் வாய் அவிந்து ஓசையெழுப்பாமல் மௌனமாகி விட்டனவாம்.

வெல்போர் இராமன் அருமறைக்கவித்த பல்வீழ் ஆலம்

என்று இந்தச் செய்தி பேசப்படுகிறது. புறநானூற்றில் யானைகள் முனிவர்களுக்கு விறகு முதலியவற்றைக் கொண்டு வந்து கொடுத்து உதவி செய்த செயல் குறிக்கப் பட்டுள்ளது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வேதங்கள், வேத வேள்விகள்பற்றியும் சம்பந்தரது பாடல்களில் பல இடங்களில் பெரிதாகக் கூறப்பட்டுள்ளன. இயற்கையே வேத வேள்வியைச் சீராகச் செய்வதாகத் திருவீழிமிழலைப் பதிகம் ஒன்றில் சம்பந்தர் வைதிகத் திருமணச் சடங்குக் காட்சியைச் சொல்லோவியமாகத் தீட்டுகின்றார்.

ஓமகுண்டத்தில் பொரியிடுதல் என்பது வேத வழக்கு. திருவீழிமிழலையில் நீலமணிபோல் துலங்கும் ஒரு பொய்கையில் மலர்ந்த செந்தாமரை வேள்வித் தீபோல் பொங்கொளி செய்து நிற்கிறது. குளத்தில் சங்குகள் ஒலிக்கின்றன. அருகில் உள்ள புங்க மரம் தன் வெண் மலர்களைப் பொரிபோல் அத்தாமரைத் தீயில் உதிர்த்து ஒரு திருமணச் சடங்கினைச் செய்கிறது. அது அங்கே இயற்கையே வேதச் சடங்கினை ஆற்றும் பாங்கினை உணர்த்துகிறதாம். பாட்டைப் பார்ப்போம்.

தகவுடை நீர் மணித்தலத்துச் சங்குள வர்க்கம்திகழச்
சலசத் தீயுள்
மிகவுடைய புங்கமலர்ப் பொரிஅட்ட மணஞ் செய்யும்
மிழலையாமே
(1.132.6)

திருஞானசம்பந்தர் எரிஓம்பி வேத வேள்வி செய்யும் நெறியில் ஆழ்ந்த நம்பிக்கை உள்ளவர் என்பது அவரது ஆழ்ந்த கவியுள்ளம் கண்ட சேக்கிழாருக்கு நன்கு தெரியும். அதனால் சீர்காழியின் வைதிக ஒழுக்கத்தைப் பாட வந்த அவர் 'மரங்களும் ஆகுதி செய்யும்' இயற்கைக் காட்சியை மிக நேர்த்தியாக விவரிக்கின்றார்.

ஒரு வயலின் அருகில் மாமரம் ஒன்று நிற்கிறது. வயலில் உள்ள நீரில் தாமரை தீபோல் மலர்ந்திருக்கிறது. மாங்கனி பழுத்து முதிர்ந்து அதன் சாறு நெய்போல் வழிந்து மாவிலையின் நுனியில் பட்டுத் தாமரையில் விழுகிறது. மாவிலையில் நெய் வார்த்துத் தீயில் விடுவது ஆகுதி செய்யும் முறை. இவ்வாறு மரங்கள்கூடச் சீர்காழியில் ஆகுதி செய்கின்றனவாம். திருஞானசம்பந்த நாயனார் புராணத்தில்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஏழாவது பாட்டு இக்காட்சியை நமக்குப் புனைந்து காட்டு வதைக் கீழே பார்ப்போம்.

பரந்தவிளை வயல் செய்ய பங்கயம் ஆம் பொங்கு எரியில்
வரம்பு இல்வளர் தேமாவின் கனிகிழிந்த மதுநறு நெய்
நிரந்தரம் நீள் இலைக்கடையால் ஒழுகுதலால் நெடிதுஅவ்வூர்
மரங்களும் ஆகுதிவேட்கும் தகையஎன மணந்துளதால்

கிளியும் மைனாக்களும்கூடத் திருவீழிமிழலையில் வேதம் ஓதுவதில் வல்லவைகளாக விளங்கினவாம். அவ்வூர்ச் சோலை மர நிழலில் வேத விற்பன்னர்கள் நாள்தோறும் வேதப் பதங்களை உச்சரித்து ஓதுவது வழக்கம். மரங்களில் வாழும் கிளிகள் அந்த வேத மந்திரங்களைக் கேட்டுப் பழகி விட்டன. அவையும் வேதப் பதங்களைச் சொல்வதோடு அம்மந்திரங்களுக்குப் பொருளும் கூறிவிடுமாம்.

பாரிசையும் பண்டிதர்கள் பன்னாளும் பயின்றோதும்
ஓசை கேட்டு
வேரிமலி பொழிற்கிள்ளை வேதங்கள் பொருள் சொல்லும்
மிழலையாமே (1.132.1)

வேதத் தொலியால் கிளி சொல் பயிலும் மிழலையாமே
(2.197.5)

இன்னும் சில கிளிகள் அதற்கு மேலும் உயர்ந்து விட்டன. வேதங்களைப் பயில்வார் வேத கோஷங்களில் ஒலிப்பிழை நிகழ்த்தியபோது அந்தக் கிளிகளே திருத்தம் செய்து கொடுக்குமாம்.

பெரிதிலங்கும் மறை கிளைஞரோதப் பிழை கேட்டலால்
கருதுகிள்ளைக் குலம்தெரிந்து தீர்க்கும்... (2.249.5)

கொச்சைவயம் எனப்படும் சீர்காழியில் மாட கூடங்கள் ஏறி மைனாக்கள் மறையோதுவதை,

கூடமேறி வளர் பூவை நல்ல மறையோது கொச்சைவயமே
(2.219.3)

என்று சம்பந்தர் காட்டுகிறார்.

சம்பந்தருடைய பாடல்களில் உயிர் உள்ளவையும் அல்லவையுமான இயற்கைப் பொருள்கள் பெருவாரியாக இடம்பெற்றுள்ளன. பறவைகள், விலங்குகள், மரஞ்செடி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கொடிகள், மலர்கள், ஓடைகள், ஆறுகள், கடல்கள், குன்றுகள், மலைகள் போன்ற பலவும் மிக நுட்பமான விளக்கங்களுடன் சம்பந்தரின் பாடல்களில் அரங்கேறி அங்கம் வகிக்கின்றன. அவைகளை வரிசைப்படுத்தி, ஒவ்வொன்றும் எந்த எந்தப் பாடல்களில் இடம்பெற்றுள்ளன என்ற குறிப்புடனே ஓர் அட்டவணையாக அமைக்கப்பட்டு இந்த நூலில் இங்கு இணைக்கப்பட்டுள்ளது. இவைபற்றி ஆராய்வோருக்கு இந்த முயற்சி உதவலாம் என்று நம்புகிறோம். மேலும் இந்த எளிய முயற்சி சம்பந்தரின் இயற்கை நாட்டத்தையும் நுட்பமாக உற்றுநோக்கிச் சொல்லும் திறத்தையும் ஓரளவு புலப் படுத்தும்.

சம்பந்தர் தேவாரப் பதிகங்களில் காணப்படும் பறவைகள், விலங்குகள், தாவரங்கள், நதிகள் முதலியவை பற்றிய அட்டவணை

	1. பறவைகள்	
1.	அன்னம்	*1.11.9; 1.42.8; 3.321.2; 6; 3.332.1; 3.384.4*
2.	அன்றில்	*2.186.1; 3.321.2,7*
3.	ஆந்தை	*1.16.5; 1.44.5*
4.	சாதகம்	*1.66.2*
5.	சேவல்	*1.112.7*
6.	கழுகு	*1.103.1, 11; 1.131.9; 3.362.10*
7.	கபோதம்	*1.60.5*
8.	கருடன்	*2.255.6*
9.	கிளி, கிள்ளை	*1.11.10; 2.197.5; 3.377.8; 1.132.1; 2.250.4*
10.	கொக்கு	*1.36.3*
11.	கூகை	*3.315.10*
12.	குருகு	*1.60.2; 2.184.4; 3.321.5, 6, 7, 9*
13.	குயில்	*1.14.2; 1.60.8; 1.67.5; 1.130.7; 3.317.3*

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

14.	மயில், மஞ்ஞை	1.14.2; 1.67.5; 1.78.1; 1.97.2; 1.132.4; 2.174.9; 2.224.9; 2.250.1; 3.317.3; 1.11.10; 2.207.4; 2.219.3; 3.332.1
15.	நாரை	1.60.4; 2.196.6; 2.220.1; 3.321.3–8
16.	பருந்து	1.60.3
17.	பூவை	2.219.3; 3.321.9
18.	தாரா	2.178.2; 3.321.8
19.	வாரணம்	1.60.3
	2. தேனீக்கள்	
1.	அளி	1.60.1; 1.34.5
2.	அரி	2.199.4
3.	அறுபதம்	1.75.3
4.	சுரும்பு	2.237.6; 3.308.1
5.	சுழுது	2.166.11
6.	தேன்	1.11.10; 1.130.4
7.	தும்பி	1.98.4; 3.308.1
8.	வண்டு	1.23.7; 1.43.9; 1.64.9
	3. மீன் முதலியவை	
1.	ஆரல்	2.220.1; 2.237.6
2.	சேல்	2.174.9; 2.189.5
3.	சுறா	1.60.2; 3.321.5
4.	கனகழுக்கு	3.293.8
5.	கயல்	1.42.9; 1.132.3; 2.189.5
6.	கெளிறு	3.328.9
7.	கெண்டை	2.184.4; 2.250.1
8.	மகரம்	3.293.2

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

9.	மீன்	1.130.4
10.	வாளை	1.78.2; 3.336.1
11.	வரால்	3.264.9; 3.293.8
12.	ஆமை	1.1.2
13.	புள்ளி	2.162.1
14.	தேரை	2.215.6
	4. விலங்குகள்	
1.	அரி, மடங்கல்	2.221.6; 3.337.4; 1.63.1
2.	ஆடு	2.236.6
3.	ஆளி	1.14.10
4.	ஆன், பசு	2.156.4; 1.22.5; 1.80.2
5.	எருது, ஏறு	1.79.1; 2.216.5; 2.140.9 1.98.1; 1.117.7
6.	எலி	3.297.5
7.	ஏனம்	3.327.1
8.	கேழல், பன்றி	3.337.4; 1.7.9
9.	குதிரை	2.250.4
10.	நரி	3.277.1; 3.359.1
11.	நாவி	3.284.3
12.	புலி, உழுவை	1.68.1; 1.68.4
13.	மான், உழை பிணை கலை மறி	1.130.4; 2.150.1 1.45.8 1.45.8 1.45.8
14.	ஆனை, வேழம் கரி, களிறு பிடி	1.43.4; 3.311.1; 3.273.4 1.3.6; 2.181.7; 2.208.4; 1.68.2; 2.208.7 1.43.4
15.	முயல்	1.12.9

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

16.	கடுவன், ஊகம் மந்தி குரங்கு	1.98.2; 2.220.6 1.78.2 2.170.8
17.	கன்று	1.71.10
18.	வெருகு	2.226.5
19.	மேதி எருமை	2.220.1 1.78.10
	5. மரம், செடிகள்	
1.	அகில்	1.78.8
2.	ஆல்	2.149.6
3.	ஆரம்	2.220.6
4.	சாதி	3.294.1
5.	செருந்தி	1.56.6; 2.174.9; 2.237.9
6.	சூரை	2.220.1
7.	சுரபுன்னை	2.169.1; 3.275.1
8.	இலவம்	3.347.2
9.	ஈகை	2.220.1
10.	கள்ளி	2.220.1
11.	கமுகு	2.189.3; 2.194.1
12.	காரை	2.220.1
13.	கோங்கம்	3.349.1
14.	கொன்றை	2.169.1; 3.294.3
15.	குரவம்	3.349.1
16.	கூகை	2.220.1
17.	கூவிளம்	2.142.1; 2.143.1; 2.148.2
18.	குருந்து	3.278.5
19.	மா	2.224.6

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

20.	மருது	3.294.9
21.	மூங்கில் கழை வேய் வேரி	3.294.3 1.98.2 2.246.2; 2.255.7 1.132.1
22.	ஞாழல் (அல்லது) புலிநகக் கொன்றை	2.169.1; 2.173.3; 2.237.9
23.	ஓமை	2.169.1; 3.294.3; 3.349.1
24.	பலா	2.207.2
25.	பனை	1.54.11
26.	பாதிரி	3.349.1
27.	பிண்டி	2.148.10; 2.184.10; 3.265.10
28.	போதி	2.148.10; 2.184.10; 3.265.10
29.	புன்னை	2.173.3; 2.237.9; 3.341.1
30.	தாழை கோட்டல்	2.184.4 3.272.4
31.	தெங்கு	2.237.7
32.	வன்னி	2.143.1; 2.241.7; 2.245.6
33.	வாழை	2.194.1
34.	வேங்கை	2.251.1; 3.349.1

6. மலர்கள்

1.	அல்லி	2.200.9
2.	ஆம்பல்	2.180.3
3.	கமலம்	1.60.1
4.	கஞ்சம்	3.295.11
5.	காந்தள்	2.256.1
6.	காவி	2.206.12; 3.284.3

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

7.	குவளை	1.129.1
8.	குமுதம்	1.129.1; 2.219.9
9.	குமிழ்	1.73.8
10.	குடசம்	3.347.1
11.	குருக்கத்தி	2.173.3
12.	கூவிளம்	2.142.1
13.	கொன்றை	3.313.1
14.	கொகுடி முல்லை	2.200.8
15.	கோடல்	2.174.10; 2.180.11
16.	கோகநதம்	1.132.3
17.	சலசம்	1.132.6
18.	செண்பகம்	1.99.3
19.	தளவம்	2.160.4
20.	தாமரை	1.42.9
21.	தாழை	2.184.4
22.	பங்கயம்	2.186.7
23.	பிரசம்	2.201.8
24.	மத்தம்	2.179.1; 3.290.1
25.	மல்லிகை	3.317.1
26.	மாதவி	2.168.6
27.	முல்லை	2.200.9
28.	மௌவல்	3.317.1
29.	நீலம்	1.42.9
30.	நெய்தல்	1.129.1
31.	வகுளம்	2.224.10
32.	வெண்தாமரை	1.11.9

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

7. குன்றுகளும் மலைகளும்

1.	ஆனைமலை	2.217.1
2.	அண்ணாமலை	1.69.1–11
3.	சிராப்பள்ளி	1.98.1–11
4.	இமயம்	3.316.7
5.	இந்திரநீலப்பருப்பதம்	2.163.2
6.	ஈங்கோய்மலை	1.70.1–11
7.	காளத்திமலை	3.327.1
8.	கழுக்குன்றம்	1.103.1–11
9.	கேதாரம்	2.260.1
10.	கொடுங்குன்றம்	1.14.1–11
11.	கயிலை	3.326.1
12.	மந்தாரம்	3.307.6
13.	மயேந்திரம்	3.367.1–11
14.	முதுகுன்றம்	1.12.1–11
15.	பரங்குன்றம்	1.100.1–11
16.	பருப்பதம்	1.118.1–11
17.	திருகோணமலை	3.381.1–6, 8–11

8. நதிகள்

1.	அரிசில்	1.42.5; 2.199.1
2.	சுரநதி (தெய்வீக ஆறு (உ–ம்) கங்கை) கங்கை	1.20.2 1.57.4; 2.204.7
3.	காவிரி பொன்னி	1.16.2; 2.255.3 2.168.4
4.	கெடிலம்	3.335.11

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

5.	கோட்டாறு	3.347.2
6.	குடைத்தலை	3.337.5
7.	மணிமுத்தாறு	1.131.6
8.	மண்ணி நதி	1.101.2
9.	நிவா	2.226.1
10.	பாலாவி (ஸ்ரீலங்காவில் உள்ள ஒரு நதி)	2.243.10
11.	பாலி (பாலாறு)	1.55.6
12.	பம்பை	2.186.2
13.	பெண்ணாறு	2.236.7
14.	பொன்முகலி	3.294.5
15.	வைகை	1.88.11

மேல் அட்டவணையில் அடங்கியவை பல்பொருள்களின் பெயர் வரிசைதான். சம்பந்தர் பாடல்களில் அவை அப்படியே தொகுக்கப்பட்டிருக்கவில்லை. அங்கே அவை யாவும் உயிர்பெற்று சொல் ஓவியங்களாக இசையும் தாளமுமாகத் திருநடம் புரியும் கோல வடிவமாகக் காண்கிறோம். அண்டங்கள் முழுதும் நிறைந்த பொருள்கள் இறைவனின் கணக்கில் அடங்காத, வரம்புக்குள் சிக்கிவிடாத மகத்துவத்தின் ஒரு சிறு நுனியைத்தான் காட்டுகின்றன. அவற்றைக் கொண்டு அளக்க முடியாத அவனது 'அகலத்தை' அளக்க முயல்கிறோம்.

இயற்கை இறைவனின் ஒரு வடிவம். அது மிகமிகப் பெரிய அண்டமாகவும் உள்ளது. மிகவும் நுண்ணிய பிண்டமாகவும் உள்ளது. 'நுண்ணியன் மிகப் பெரியன்' (1.61.6) என்று எடுத்துரைக்கிறார் சம்பந்தர். அவன் மனத்தில் வாழ்பவன் – 'மனத்துள்ளான்' (1.61.6), 'உயிர்க்கு உயிராய் அங்கங்கே நின்றான்' (1.132.4), 'சோதியுள் சோதியான்' (2.142.7).

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

3.2.1. அட்டமூர்த்தம் (அஷ்ட மூர்த்தம்)

பேரண்டமாக விளங்கும் இறைவனின் வடிவத்தை அட்டமூர்த்தங்களாகக் கருதிக் காட்டுகிறார் சம்பந்தர். மண்ணும், நீரும், தீயும், காற்றும், ஆகாயமும், சந்திரனும், சூரியனும், உயிரும் ஆன கோலங்கள்தாம் இறைவனின் எட்டு வடிவங்கள் – அட்ட மூர்த்தங்கள்.

'மண்ணொடு நீர் அனல் காலொடு ஆகாயம் மதி இரவி, எண்ணில்வரும் இயமானன் ஆம் பேராளன்' *(2.184.3)* என்பது அவரது பாடல் வரி. அவன் 'அட்ட மூர்த்தி' *(2.253.8)*; 'எட்டாம் மூர்த்தியன்' *(3.309.4)*; 'எட்டாம் திருமூர்த்தி' *(2.175.3)*; 'எட்டிசைந்த மூர்த்தி' *(2.143.3)* என்றெல்லாம் இறைவனைப் பாடி மகிழ்கிறார் சம்பந்தர்.

இறைவன் ஐந்து வடிவத்தான் எனப் பஞ்சமூர்த்தி யாகவும் பேசப்படுகிறான். 'அஞ்சு பூதம் ஆர்த்தது உடையதே' *(3.372.5)* என்பார். 'புவம் வளி கனல் புனல் புவி மருவிய சிவன்' *(1.21.1)* என்று ஐந்து பூதங்களையும் மருவி நிற்பவன் சிவன். அவன் மூன்று தீயாய் ஒளிர்பவன் (முத்தீயானவன் – *1.11.5*). 'காற்றுள் ஆளுவர்' *(3.379.1)* என்று காற்றாய் வழங்குபவன்.

இந்த 'அட்ட மூர்த்தக் கருத்து' தென்னாட்டுச் சைவத்தின் ஒரு முக்கியக் கோட்பாடாக மிகப் பழங்காலந் தொட்டு வழங்கிவந்துள்ளது. **மணிமேகலையில்**, 'சமயக் கணக்கர்தம் திறம் கேட்ட காதையில்' சைவவாதி,

இருசுட ரோடிய மானனைம் பூதமென்று
எட்டு வகையும் (89, 90)

என்று அட்டமூர்த்தம்பற்றிப் பேசுவதைப் பார்க்கிறோம்.

கடவுளைக் காலமாகவும் பாவிப்பதுண்டு. அட்ட மூர்த்தத்தில் சந்திர சூரியர்கள் காலமாகவும் மற்ற ஆறும் இடமாகவும் ஆன்மாவாகவும் கருதப்படுகிறார்கள். இறைவனை 'காலமாய்' *(1.132.5)*; 'கழிகாலமெல்லாம் படைத்த' *(3.314.10)*; 'ஊழியும்... காலமாகி' *(3.365.7)*; 'மூன்று காலமும் தோன்ற நின்றானை' *(1.128., வரி. 44)* என்றெல்லாம் சம்பந்தர் பாடிப் பரவுகிறார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இறைவனைத் தத்துவமாகவும் கருதிப் பேசுகிறார் சம்பந்தர். 'கழிகாலமெல்லாம் படைத்த' (3.314.10) என்று அவர் கூறுவது காலத்தோடு தத்துவங்களையும் இறைவன் படைத் திருக்கிறான் என்பதை விளக்குவதாகும் என்று கருதப் படுகிறது. அதுபோல் இறைவன் 'தத்துவங்களாக' நின்று ஒளிர்கிறான் என்பதைப் பல இடங்களில் உணர்த்துகிறார் பிள்ளையார்.

> புவிமுதல்ஐம் பூதமாய்ப் புலன் ஐந்தாய் நிலன் ஐந்தாய்
> கரணம் நான்காய்
> அவை அவைசேர் பயனுருவாய் அல்லவுரு வாய் நின்றான்
> (1.129.7)

என்று திருக்கழுமலத்து இறைவனது மாண்பு பாராட்டப் படுகிறது.

> காலமாய்க் குணங்கள் மூன்றாய் (1.135.5)

என்பதில் இறைவன் முக்கணங்களோடு பொலிவது விளங்கும்.

இறைவனைத் 'தத்துவன்' (1.107.8) என்றும் 'தத்துவ மானார்' (1.130.5) என்றும் 'பரதத்துவன்' (1.132.5) என்றும் துதிக்கிறார் சம்பந்தர். அத்தகைய இறைவனை வழிபடு பவர்கள் 'தத்துவஞானத் தலையாரே' (1.102.1) என்று போற்றப்படுகிறார்கள்.

இதனால் ஞானசம்பந்தர் இந்த உலகம், இயற்கை இறைவனுடைய அழகையும் அன்பையும் வெளிப்படுத்து பவைகளாக ஏற்றுக்கொண்டிருப்பது தெரியவருகிறது.

3.2.2. கடந்து நிற்கும் நிலை

கடவுள் எல்லோரிடத்தும் எல்லாப் பொருள்களிலும் ஊடுருவிப் பரந்து நிற்கிறான். அதனால் அவனை இறைவன் – எங்கும் எதிலும் இருப்பவன் என்று அழைக்கிறோம். இயற்கை அவனது அழகையும் அன்பையும் வெளிப்படுத்தி உணர்த்துவதாகத் திகழ்கிறது. இவ்வாறு இருப்பது ஒரு நிலை. மற்றொரு நிலை அவன் எல்லாவற்றையும் கடந்து அப்பாலுக் கப்பாலாய், ஞானிகளால் உணரப்பட்டு நிற்கிறான். இந்தக்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கடந்து நிற்கும் நிலையைச் சம்பந்தரது பாடல்கள் மிக அழகாக வெளிப்படுத்துகின்றன.

திருமுதுகுன்றப் பதிகம் அதற்கு ஓர் அழகான எடுத்துக் காட்டு.

பற்றுமாகி வானுளோர்க்குப் பல்கதிரோன் மதிபார்
எற்றுநீர்தீக் காலும்மேலை விண்இயமா னனோடு
மற்றும்மாதுஒர் பல்லுயிராய் மால்அயனும் மறைகள்
முற்றுமாகி வேறுமானான் மேயது முதுகுன்றே (1.53.2)

வானோர், கதிரவன், மதி, பூமி, அலை எறியும் நீர்க்கடல், காற்று, விண், இயமானனென்ற (ஆன்மா), உமை மாது, திருமால், அயன் (பிரம்மா), மறைகள் ஆகிய எல்லோருக்கும் உயிர்க்கு உயிராகவும், எல்லாவற்றையும் தாங்கும் பற்றுமாகி விளங்கும் இறைவன், முற்றும் யாவுமாகி இருப்பவன், அவைகள் யாவற்றையும் கடந்து வேறாகியும் நிற்கிறான்' என்பது இந்தப் பாடலில் மிகவும் தெளிவாக எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. அவன் சொல்லால் புலப்படுத்த முடியாத பரம்பொருள்; சோதிக்கு அப்பால் நிற்கும் சோதி என்பதைச் 'சொல் தெரியாப் பொருள்; சோதிக்கு அப்பால் நின்ற சோதி' (3.267.10) என்ற உறுதிபடச் சொல்கிறார் சம்பந்தர்.

3.2.3. படைப்பின் தத்துவம்

தென்னாட்டில் சைவம் படைப்பைப் பற்றிக் கொண் டிருந்த கொள்கையை பௌத்த நூலான **மணிமேகலை** தெளிவாக எடுத்துக் கூறுவதைப் பார்க்கிறோம்.

இருசுட ரோடிய மானன்ஐம் பூதமென்று
எட்டு வகையும் உயிரும்யாக் கையுமாய்க்
கட்டி நிற்போனும் கலைஉருவி னோனும்
படைத்து விளை யாடும் பண்பி னோனும்
துடைத்துத் துயர்தீர் தோற்றத் தோனும்
தன்னில் வேறு தானொன்றி லோனும்
அன்னோன் இறைவன்... (27.89 – 95 வரிகள்)

இந்தப் பாடல் சிவனுக்குப் பஞ்சகிருத்தியங்கள் எனப்படும் ஐந்தொழில்கள் என்பதையும், அவன் ஒருவனே;

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அவனையன்றி வேறு எதுவுமில்லை என்பதையும் ஆணித்தர மாக உறுதி செய்து கூறுகிறது.

மணிமேகலைக்கு மிகவும் முன்னால் தோன்றிய மதுரைக்காஞ்சி என்னும் சங்க நூல்,

நீரும் நிலனும் தீயும் வளியும்
மாக விசும்போ டைந்து தானியற்றிய
மழுவாள் நெடியோன் தலைவனாக... (453–455)

என்று, 'கோடரிப் படையை ஏந்திய மிகவும் உயர்ந்தவனான இறைவன்' (சிவன்) ஐந்து பூதங்களையும் இயற்றியவன்; அவன் மாயோன், முருகன் முதலிய கடவுளர்களுக்கெல்லாம் தலைவனாகத் திகழ்கிறான்" என்று அழகாகக் கூறுகிறது.

சங்கத்தொகை நூல்கள் பலவற்றிற்குக் கடவுள் வாழ்த்துப் பாடிப் புகழ் கைக் கொண்டவர் பாரதம் பாடிய பெருந்தேவனார். அவர் அகநானூற்றுக்கு உரைத்த வாழ்த்துப் பாடலில் சிவபெருமானின் திருவடி நிழலில் உலகம் தழைத்திருப்பதை, 'யாழ்கெழு மணிமிடற்று அந்தணன் தாள்நிழல் தவிர்ந்தன்றால் உலகே' என்று பாடியிருக்கிறார். இதைப்போலவே ஐங்குறுநூறுக்கும், பதிற்றுப்பத்திற்கும் கலித்தொகைக்கும் அமைந்துள்ள கடவுள் வாழ்த்துச் செய்திகளையும் காணலாம்.

இவையெல்லாம் பழங்காலத்தில் படைப்பைப்பற்றிச் சைவர்கள் கொண்டிருந்த தத்துவக் கோட்பாட்டினைத் தெளிவாகக் காட்டுகின்றன. சி.வி. நாராயண ஐயர் என்பவர் இதுபற்றிக் கூறுவதைக் கீழே காணலாம்:

> தென்னிந்திய வரலாற்றில் தென்னாட்டுச் சைவ வரலாற்றைப்பற்றிக் கூறவேண்டுவதெல்லாம், கிறிஸ்தவ சகாப்தத்தின் மிகப் பழைய நூற்றாண்டு களிலேயே புராணங்கள் தமிழர்களுக்கு மிகவும் நன்றாகத் தெரிந் திருந்தன என்றும் வடநாட்டவர் களைப்போலவே தென்னாட்டவர்களுக்கும் சைவம் நன்றாகத் தெரிந்திருந்தது என்பதும்தான்.[6]

வேதக் கருத்துகள்போலவே சைவ ஆகமங்களும் தென்னிந்திய மெய்ஞ்ஞானக் கோட்பாடுகளை உருவாக்கு வதில் பெரும்பங்கு கொண்டிருக்கின்றன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பேராசிரியர் கி. சிவராமன் இதுபற்றிக் கூறுவதைப் பார்ப்போம்:

> பதின்மூன்றாம், பதினான்காம் நூற்றாண்டுகளில் மெய்கண்ட சாத்திரங்கள் தோன்றி வளர்ந்ததற்கு உரிய தூண்டுதல் அலைகளைத் திருமுறை இலக்கியங்களிடமிருந்தே பெற்றன். ஆனால் மெய்கண்ட சாத்திரம் ஒரு மெய்ஞ்ஞானச் சமயஇயல் கொள்கையாக வெளிப்பட்டதற்கு ஒரு முன்புலமும் பின்புலமும் உள்ளன. அவற்றின் அடிப் படையில்தான் அதனைப் புரிந்து கொள்ள வேண்டும். அதற்கு அமைந்த பின்புலம் என்பது சைவ ஆகம மரபுகள். அந்த மரபுகள் அப்பொழுது வழங்கியிருந்த உப ஆகமங்களாலும் அவைகளின் உரைகளாலும் உயிர் தழைத்திருந்தன. அதோடு முக்கிய ஆகமங்களின் ஞானகாண்டங்களில் உள்ள தத்துவக் கோட்பாடுகளைத் தெளிவாக உணர்த்தும் நூல்களும்தாம்.[7]

திருஞானசம்பந்தர் ஆகமங்களைப்பற்றிப் பேசுகிறார். 'அரன் ஆகமம்' *(3.337.6)*; 'ஆகம செல்வன்' *(3.315.10)*; 'ஆகமத்தோடு மந்திரங்கள்' *(3.297.2)*; 'மந்திரத்தான் தந்திரத்தான்' *(1.61.3)* (தந்திரம் – ஆகமம்) என்றெல்லாம் பாடல்களில் காண்கிறோம். எனவே ஆகமங்களின் தத்துவக் கோட்பாடுகளை ஞானசம்பந்தர் அறிந்திருக்க வேண்டும்.

சைவ ஆகமங்களின் கருத்துப்படி, சிவதத்துவம் முதலாக மண் முடிவாக முப்பத்தாறு தத்துவங்கள் உள்ளன. சிவனது சித்தப்படி அவை மாயையிலிருந்து ஒன்றன்பின் ஒன்றாகத் தோன்றுகின்றன; ஒன்றன்பின் ஒன்றாகச் சென்று மாயையில் ஒடுங்குகின்றன. அந்த மாயை சிவனால் வியாபிக்கப்பட்டிருக்கிறது.

"எல்லா உயிர்களும் எதிலிருந்து தோன்றுகின்றனவோ தோன்றிய பின் எதில் நிலைபெறுகின்றனவோ, எதில் பிரிவுபடுகின்றனவோ, எதில் அவை யாவும் சென்று ஒடுங்குகின்றனவோ அதுவே பிரம்மம். அதனை விரும்பி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நாடுவாயாக” என்று- தைத்ரிய உபநிடதம் *(3–1)* தெளிவாகக் கூறுகிறது.

ஞானசம்பந்தருக்கு வேதமும் ஆகமமும் உணர்த்தப் பட்ட ஞானங்களேயாகும். சிவன் எம்பெருமானே ‘அங்கமொடு அருமறை அருள்புரிந்தான்’ *(1.109.2)*, அவனே ‘அருமாமறை விரித்தான்’ *(1.104.1)*. வேதங்களை வேறுவேறாகப் பிரித்துத் தந்தவனும் அவனே. ‘வேதங்கள் வேறுவேறு தெரிந்தவன்’ *(1.113.1)*. அவனே ‘வேத வேதாந்தன்’ *(3.293.4)*. வேதாந்தம் மீண்டும் மீண்டும் தெரிந்த பொருள்களை அவனே வழங்கினான். ‘வேதாந்தம் பன்னு நுண்பொருள் பயந்தவன்’ *(2.238.1)* சிவன் ‘ஆகம செல்வ’னாகவும் *(3.315.10)* விளங்குகிறான்.

இந்த அடிப்படையில் சம்பந்தர் உலகப் படைப்பைப் பற்றிக் கூறுவதைக் காணுவோம்.

திருச்சிரபுரம் பதிகத்தில் *(1.21)* சிவன் பிரம்மாவின் நிலையிலிருந்து உலகைப் படைப்பது கூறப்பட்டுள்ளது.

> புவம்வளி கனல்புனல் புவிகலை உரைமறை திரிகுணம்
> அமர்நெறி
> திவமலி தருசுரர் முதலியர் திகழ்தரும் உயிரவை யவைதம
> பவமலி தொழிலது நினைவொடு பதுமநன் மலரது
> மருவிய சிவன்... (1.21.1)

தாமரை மலரில் விரும்பி வீற்றிருந்து சங்கற்ப மாத்திரத்தில் – நினைத்த மாத்திரத்தில் சிவபெருமான் புவம் புனல் முதலியவற்றையும் சுரர்கள் முதலிய உயிர்களையும் படைக்கின்றான்.

இதே பதிகத்தில் இரண்டாவது பாடலில் காக்கும் தொழில் காட்டப்படுகிறது.

> மலைபல வளர்தரு புவியிடை மறைதரு வழிமலி மனிதர்கள்
> நிலைமலி சுரர்முதல் உலகுகள் நிலைபெறு வகை
> நினை வொடுமிகும்
> அலைகடல் நடுஅறி துயில்அமர் அரிஉரு இயல்பரன்...
> (1.21.2)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மலை பல வளர்ந்துள்ள உலகில் மறைவழி நடக்கும் மனிதர்களும் சுரர்களும் உலகங்களும் நிலைபெறும்படியாக, அலைகடல் நடுவே அறிதுயில் புரியும் அரியின் இயல்போடு சிவபெருமான் நினைவொடு அருள்புரிகிறான்.

அடுத்த பாடலில் சிவன் சங்கார மூர்த்தியாக எழுந்து நிற்கிறான்.

பழுதில கடல்புடை தழுவிய படிமுத லியஉலகுகள்மலி
குழுவிய சுரர்பிறர் மனிதர்கள் குலம்மலி தரும்உயிர்
அவைஅவை
முழுவதும் அழிவகை நினைவொடு முதல்உரு இயல்பரன்...
(1.21.3)

கடல் சூழ்ந்த உலகுகளில் குழுவிய சுரர், மனிதர்கள் ஆகிய உயிர்களை முழுவதும் அழியும்படிச் செய்யுமாறு நினைக்கும் இயல்புடையவனான முதல் உருவாக - முதல்வனாக விளங்கும் சிவன் என்பது பாட்டு உணர்த்தும் பொருள். இங்கே மகாசங்காரம் குறிக்கப்படுவதையும், மகா சங்காரகாரணனாகச் சிவன் திகழ்வதையும் பார்க்கிறோம்.

சிவனே முழு முதற்பொருள்; திரிமூர்த்திகளும் அவன் படைப்பே என்று பல பாடல்களில் கூறப்பட்டுள்ளன. 'மூவருமாகி, இருவருமாகி, முதல்வனுமாய் நின்ற மூர்த்தி' (1.42.2); 'மூவராய முதல்வர்' (1.27.2); 'மூவரிலும் முதலாய் நடுவாய மூர்த்தி' (1.44.8) - என்ற வரிகள் ஒருசிலவற்றை மாத்திரம் இங்கு குறிப்பிடுகிறோம்.

சிவன் தன்னுடைய சிவசக்தியால் மும்மூர்த்திகளாகுவ தோடு அல்லாமல் தேவர்கள் முதலிய அத்தனையும் படைத்தளிக்கின்றான்.

தேவராயும் அசுரராயும் சித்தர்செழு மறைசேர்
நாவராயும் நண்ணும்பாரும் விண்ணெரிகால் நீரும்
மேவராய விரைமலரோன் செங்கண்மால் ஈசன் என்னும்
மூவராய முதல் ஒருவன்... (1.53.1)

இங்கு கைவல்ய உபநிடதம் என்ற நூல் கூறுவதைக் காண்போம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"அவன் பிரம்மா; அவன் ருத்திரன்; அவன் இந்திரன்; அவன் அட்சரம்; அவன் பரமஸ்வராட்; அவன் விஷ்ணுவே; அவன் பிராணன், அவன் காலம், அக்னி, சந்திரன்."

அதர்வசிரோபனிடதம் கூறுவதையும் காணலாம்: எவன் பகவான் ருத்திரன்; எவன் பிரம்மா, எவன் புவஸ்வரா - அவனுக்கு நமஸ்காரம்! நமஸ்காரம்! யார் விஷ்ணு, மகேஸ்வரன் - அவனுக்கு நமஸ்காரம்.[8]

விஷ்ணுவும், பிரம்மாவும்கூட சிவனுடைய படைப்பு களே. அவர்களது உடல்கள் அழிவில்லாதவை அல்ல. மகாசங்கார காலத்தில் எல்லாமே எரிந்து சாம்பலாகி விடுகின்றன. அந்தச் சாம்பலைப் பூசிக்கொண்டு ஆடுகிறான் சிவபெருமான்.

"பேருலகம் நீரில் மூழ்க, அந்நீர் நெருப்பில் புகுந்து மறைய, நெருப்பு வெளியில் நிலவிய காற்றில் அடங்க, எல்லாமே கெட்டு அழிய, சிவன் மட்டும் பிரும்மா, விஷ்ணு ஆகியவர்களது உடலைச் சுமந்துகொண்டு அழகோடு விளங்குகிறான்."

> முழுவதும் கெட, இருவர்கள் உடல் பொறையொடு
> திரி எழில் உரு உடையவன் (1.22.7)

இந்தக் கருத்துகள் வேதங்களைப் பிரதிபலிப்பதாகக் கூறப்படுகின்றன. 'மகா பிரளயத்தில் அசத்தும் இல்லை; சத்தும் இல்லை; அப்பொழுது 'அது மட்டும்தான் தனித் திருந்தது. அதனிலிருந்தே 'காமா' என்னும் பிரகிருதி தோன்றியது.' என்று ரிக்வேதம் கூறுகிறது. *(10.129.1, 2, 4)*.

'எப்பொழுது பகலும் இரவும் அற்ற இருள் இருந்ததோ, அசத்தும் சத்தும் இல்லாமலிருந்ததோ, அப்பொழுது சிவன் ஒருவனே இருந்தான். அழிவற்ற பிரக்ஞை என்னும் பராசக்தி தோன்றியது' என்று ஸ்வேதாஸ்வதார உபநிடதம் கூறுவதை தேவாரம் வேதசாரம் மேற்கோள் காட்டுகிறது. *(பக். 12)*.

3.2.4. படைப்பின் நோக்கம்

இங்கு படைப்பு என்றால் என்ன? ஓர் உருவமும் ஒரு நாமமும் அற்ற முழுமுதற்பொருள், உயிர்க்கூட்டங்கள்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தன்மம் என்னும் கடல் அலைகளால் மொத்துண்டு தவிக்கும் பொழுது, அவைமீது கொண்ட அளப்பரும் கருணையால் தன்னுடைய சக்தியின் துணையோடு வடிவெடுத்து வருவதே படைப்பு என்று சொல்லலாம். அவ்வாறு வடிவெடுத்து வருவது உயிர்களின் விடுதலைக்காகவும் தூய்மை உறுதற்காகவுமேயாகும்.

தத்தமது இன்ப துன்பங்களில் தோய்ந்துபோன ஆன்மாக்கள் இறைவனை மறந்து விடுகின்றன. அவர்களுக்குத் துறவு, வீடு போன்ற சிந்தனைகளை உண்டாக்கித் தன்னுடன் கூடுகின்ற நெறியைக் காட்டுகின்றான். அப்பொழுது அந்த ஆன்மாக்கள் இறைவனை மறந்துவிட்ட தங்கள் சிந்தனையை மாற்றிக்கொண்டு அவனையே நினைந்துருகும் மன நிலையைப் பெறுகிறார்கள். அப்படி வாழவல்லவர்களுக்கு இறைவன் பிறவித் துன்பம் அற்றுப் போகுமாறு செய்கிறான்.

இதைத்தான் சம்பந்தர் பின்வருமாறு பாடுகிறார்:

உறவியும் இன்புறுசீரும் ஓங்குதல் வீடுஎளிதாகித்
துறவியும் கூட்டமும் காட்டித் துன்பமும் இன்பமும் தோற்றி
மறவியஞ் சிந்தனை மாற்றி வாழவல் லார்தமக் கென்றும்
பிறவி அறுக்கும் பிரானார்... (2.203.8)

உயிர்களுக்குக் 'கேடும் பிறவியும் ஆக்கினாரும், கேடில்லா வீடுமாநெறி விளம்பினார்...' (1.45.2) என்றும் சம்பந்தர் குறிப்பிடுகிறார்.

கேடும் பிறவியும் ஆக்குதலும், வீடுமா நெறி காட்டுதலும் ஆகிய எல்லாமே இறைவன் ஒரு மாய விளையாட்டாக, முயற்சியின்றிச் செய்பவர். அதனால் 'மாயம் அவன்' என்று சம்பந்தர் குறிப்பிடுகிறார். இவைகளைச் செய்வதால் அவனுக்குத் தன்னுடைய இறை நிலையிலிருந்து எந்த மாற்றமும் ஏற்படுவதில்லை (மாறிலி – 1.114.2) படைத்தலும் நிலை நிறுத்தலும் அழித்தலும் அவனுக்கு ஒரு விளையாட்டு 'முன்னவன் விளையாட்டு' என்று குறிப்பிடுகிறது சிவஞான சித்தியார் (முதற்சூத்திரம் – 36). 'ஏற்ற இவை அரன் அருளின் திருவிளையாட்டாக இயம்புவார்கள்' என்று சிவப்பிரகாசம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(பொது. 6) உணர்த்துகிறது. இங்கு விளையாட்டு என்பதற்கு முயற்சியில்லாமல் எளிதாகச் செய்தல் என்று பொருள்.[9]

படைப்பின் முக்கியமான நோக்கம் இறைவன் சம்சாரத்தில் உழலும் உயிர்கள்மீது வைக்கும் அளப்ப அரும் கருணைதான்; அவர்களை அச்சுழலிலிருந்து காப்பாற்றி விடுதலை அடைய வைப்பதுதான். 'மங்கை ஒரு பாகமாக அருள் காரணங்கள் வருவான்' (2.223.3) என்று மிகத் தெளிவாகக் கூறுகிறார் சம்பந்தர். இதற்குப் பொருள் மங்கை (சக்தி)யோடு இணைந்து வருவது உலகுயிர்கள் மீதுள்ள கருணையால்தான்; படைப்பின் பல்வேறு நிலைகளில் உயிர்கள் பக்குவப்பட்டு விடுதலை அடைய வேண்டுமென்பதே அவனது திருவுள்ளம்.

இந்தக் கருத்தைத் 'திருப்பாசுரப்' பதிகத்தில் மிக அழகாகக் கூறுகிறார் பிள்ளையார்: இறைவன் ஆடுகிறான்; பாடுகிறான்; கூற்றுவனை உதைத்தழிக்கின்றான் என்று சொல்வது அவனது புகழைக் குறிப்பதற்கா, ஆன்மாக்களை உய்விக்க வேண்டும் என்ற அவனது திருவுள்ளத்தை அறிவதற்கா என்று ஆராய்ந்தால் அருள்தான்; காரணம் வேறில்லை என்பது சம்பந்தர் துணிவு.

ஆடும் எனவும் அருங்கூற்றம் உதைத்து வேதம்
பாடும் எனவும் புகழல் அல்லது பாவம் நீங்கக்
கேடும் பிறப்பும் மறுக்கும் எனக்கேட் டீராகில்
நாடும் திறத்தார்க்கு அருள்அல்லது நாட்ட லாமே (3.312.6)

எனவே படைப்பு முதலாயினவற்றை இறைவன் செய்வதற்கு அடிப்படையான காரணம் உலகுயிர்களைக் காப்பது என்ற திருவருள் நோக்கமேயாகும்.

3.3. உயிர்கள் (ஆன்மாக்கள்)

3.3.1. உயிர்களின் இயல்பு

உலகம் இருக்கிறது. அதனை ஒன்று உணர்கிறது; அறிகிறது. அவ்வாறு உணர்ந்து அறியும் ஒன்றுதான் ஆத்மா. அதனை ஆன்மா என்றும், ஆத்மன் என்றும், பசு என்றும் உயிர் என்றும் அழைக்கிறோம். அந்த ஆன்மாவின் இயல்பைச்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சம்பந்தர் ஒரு தத்துவக்காரர்போல விளக்குவதில்லை. அவர் சிவானுபவத்தில் திளைப்பவர். அந்த அனுபவத்தின் அடிப்படையின் அவன் அருள் தந்த அருள் நிலையே சம்பந்தருடைய பாட்டாக வெளிப்படுகிறது. சராசரங்கள் அவருக்கு இறைவனின் அருளை உணர்த்துகின்றன. அந்த அனுபவமே அவரை அவன் அருளில் தோயவைக்கின்றது. சம்பந்தருடைய ,பாடல்கள் நமக்கு உணர்த்தும் உண்மை இதுதான்.

இருப்பினும் பல இடங்களில் ஆன்மாக்களைப்பற்றிய கருத்துகள் எழுகின்றன. உயிர்களின் பந்தப்பட்டு நிற்கும் நிலையை, அறியாமையை, தூய்மையற்ற, பாபங்களிலிருந்து விட்டு நீங்க, விடுதலை அடைய அவை மேற்கொள்ளும் முயற்சிகள் ஆகியவைபற்றிப் பல பாடல்களில் சம்பந்தர் பேசுகிறார். சில சமயங்களில் தனக்காகவும், பொதுவாக எல்லோருக்காகவும் சம்பந்தர் பல செய்திகளைக் குறிப்பிடு கிறார். சில பாடல்களில் இறைவனுடைய அருட்செயல் களைப் பற்றி மற்றவர்களிடம் வினா எழுப்புகிறார்; ஏன் எதற்கு என்று கேட்டு அதன் வழியாகப் பல நுணுக்கங்களை விளக்குகிறார். சில இடங்களில் கட்டளையிடுகிறார். அகத்துறையில் தம்மை ஒரு காதலியாக வைத்து அன்பின் உயிர் நிலையை நாம் உணரும்படியாகச் செய்கிறார். அவன்மீது கொண்ட தீராக் காதலையும், பிரிவையும் பிரிவுத் துன்பத்தையும் தேர்ந்த கலைத்திறத்தால் பேசுகிறார். அவரது தெய்வத் தமிழும் இசையும் அவரது உணர்வோடு நம்மை ஐக்கியப்படுத்துகின்றன.

முன்பே சொன்னபடி, சம்பந்தர் ஒரு சமயக் கணக்கர் இல்லை; தத்துவக் கோட்பாடுகளை வகுக்க வந்தவர் இல்லை. அவர் ஓர் அருள் கவிஞர், அன்புக்கவிஞர். இருப்பினும் அவரது பாடல்களில் தத்துவக் கருத்துகள், மெய்ஞ்ஞானச் சிந்தனைகள் அங்கங்கே மின்னிச் சுடர்விடுகின்றன; சிந்தனைகள் மட்டுமில்லை. சொற்களும் தத்துவார்த்த அடிப்படையில் எழுகின்றன. அவரது காலத்திற்கு முந்தியும் அப்போதும் வழங்கிய கலைச் சொற்களை அவர் நன்கு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அறிந்துகொண்டு அவற்றைத் தக்கவாறு பயன்படுத்திக் கொண்டிருக்கிறார். அவரது சிந்தனை பலருக்கு வழிகாட்டி யாகவும் விளங்குகிறது.

திருஞானசம்பந்தரை ஒரு சைவர் என்றே சொல்லலாம். எப்படியென்றால் அவர் இறைவனைச் 'சிவன்' என்ற நாம ரூபத்தினால் துதித்துப் போற்றுகிறார். 'சிவன் எம் இறை' (1.11.5) என்று ஆணித்தரமாகக் கூறுகிறார். சம்பந்தர் சிவனையே 'சைவர்' (1.43.3; 1.109.7) என்று அழைக்கிறார். இங்கு அவர் சைவம் என்பது வைதிக சைவத்தையே ஆகும் என்பார்கள். ஆகமங்களையும்பற்றி அவர் பேசுகிறார். சிவனை 'வேத முதல்வன்'. (1.46.7) என்றும் 'ஆகம செல்வன்' (3.315.10) என்றும் அவர் பாடுவதைப் பார்க்கின்றோம். சிவனே 'தொகுத்தவன் அருமறை அங்கம் ஆகமம்' (3.281.6) என்று அறிவிக்கிறார். எனவே இவற்றைக் கொண்டு பார்த்தால் சம்பந்தருக்கு வேதமும் ஆகமமும் ஏற்றுக்கொள்ளத் தக்கவையேயாகும்.

வேதாகமங்களின்படி ஆன்மா அநாதியானது. ஆன்மா சத்சித் ஆனந்தமயமானது. இருப்பினும் அது பாசத்தால் பிணிக்கப்பட்டுள்ளது. ஆணவம், கன்மம், மாயை என்ற மூன்று மலங்களுமே பாசமாகும். அவையும் அநாதியான வையே! எனவே பதி, பசு, பாசம் மூன்றும் அநாதியானவை. திருமந்திரம், 'பதியினைப் போல் பசுபாசம் அநாதி' (10.159) என்று உறுதியாகச் சொல்கிறது.

ஆணவ மலம் என்பது ஆன்மாவைத் தொடக்கத்தி லிருந்தே தொற்றி நிற்பது; தொற்றி நின்று ஆன்மாவைத் தன் இயல்பான சத்சித் ஆனந்த நிலையை அறிந்துகொள்ளாமல் செய்வது. அதனால் ஆணவ மலத்தை 'மூல மலம்' என்றும் 'பழ மலம்' என்றும் அழைப்பார்கள். அது ஆன்மாவை இருளடையச் செய்வதால் அதனை 'இருள் மலம்' என்றும் கூறுவதுண்டு. ஆன்மாவோடு அநாதியாகப் பற்றி வருவதால் அது 'மூலவினை' என்றாகிறது. சைவத்தில் கன்மமும் - (கர்மமும்) அநாதிதான். இந்த வினை பிற வினைகளையும் ஏற்படச் செய்கிறது. அதனால் - வினையால் விளைவுகள் உண்டாகி ஆன்மா மாயையின் செய்கையால் பல சூட்சும

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸ்தூல சரீரங்களைப் பெறுகிறது. அவ்வாறு ஏற்படும் நிலைகளில் மேலும் வினையைச் செய்கிறது. அதற்கு 'ஆகமி' என்று பெயர். இதனால் பிறப்பு-இறப்பு என்னும் சுழற்சியிலே சிக்கித் தவிக்கிறது ஆன்மா. கடவுள் அருளால் ஆன்மா இந்தச் சுழற்சியில் பட்டு அனுபவத்தைப் பெறுகிறது. அந்த அனுபவம் அதற்குத் தன்னை அறியும் உணர்வைக் கொடுக்கிறது. அந்த அறிவினால் தனக்கும் இறைவனுக்கும் உள்ள உறவினை அது உணர்ந்துகொள்கிறது; அதன் பயனாய் ஆன்மா விடுதலை பெற முயல்கிறது. சைவத்தின் தலைமை யான கொள்கை எல்லா உயிர்களும் ஆன்மானுபவமும் விடுதலையும் பெற வேண்டுமென்பதே.

உயிர்கள் பல. (பல்லுயிர் – 2.238.7); 'எண்பத்து நான்கு நூறாயிரம் யோனி பேதம்' (1.132.4) என்று உயிர்த் தொகையைச் சுட்டிக்காட்டுகிறார் சம்பந்தர். இத்தனை உயிர்களும் உடம்பெடுத்துப் பிறப்பதே படைப்பு; இதற்குக் காரணம் தொடக்கத்திலிருந்தே தொற்றி நிற்கும் பாசம்; அது தொற்றி நிற்கும் வினை. அதனைப் 'பாசவல்வினை' (2.161.9) என்கிறது பாட்டு. இது 'தொல்வினை', 'முந்தி நின்ற வினை' (1.27.1) 'முன்னைய முதல் வினை' (3.342.6) எனவும் படும். இந்த வினை ஆன்மா இறைவனை அறிய முடியாமல் செய்கிறது – 'ஊனத்து இருள்' (1.38.3).

இந்தப் பிறப்பு – இறப்புச் சுழற்சி கடலின் அலைகள் போல் ஓயாமல் நிகழ்கிறது. அதனால் பிறவியை 'பிணிபடு கடல் பிறவிகள்' (1.92.2) என்று விவரிக்கிறார் சம்பந்தர். இந்த உடம்புதான் ஆன்மாவையும் பிணியில் தள்ளுகிறது – 'பிணிகொள் யாக்கை'; 'ஊன்றும் பிணி பிறவி கேடென்றிவை உடைத்தாய வாழ்க்கை' (1.59.4) என்பார். இருக்கும் நாளிலும் இந்த உடம்பில்தான் எத்தனை குறைகள்!

பல் நீர்மை குன்றிச் செவிகேட்பிலா
  படர்நோக் கின்கண் பவளந்நிறம்
நல்னீர்மை குன்றித் திரைதோலொடு
  நரை தோன்றும்... (1.59.6)

(1.59.7; 1.118.2 ஆகிய பாடல்களையும் பார்க்க.)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மனம் அறிவுற்று உடலின் நிலையாமையை உணர்ந்து கொண்டால் ஆன்மா பந்தத்தில் சிக்காது. ஆன்மா உடம் பெடுத்தது இறைவனைப் பிரிந்திருக்கும் துன்பத்திலிருந்து விடுபடுவதற்குரிய அனுபவத்தைப் பெறுவதற்காகத்தான். பசு புண்ணியங்களை, சொர்க்கம் முதலிய இன்பத்தை அனுபவிப்பதற்காக இல்லை.

பிறவித் துயரையும் தீர்க்க வேண்டும். அதே நேரம் உலக இன்பங்களை நுகர வேண்டும் என்ற ஆசை. இந்த 'இருமனம்' வேண்டாம் என்று எச்சரிக்கிறார் சம்பந்தர். 'துனியுறு துயர் தீரத் தோன்றியோர் நல்வினையால் இனியுறு பயனாதல் இரண்டுற மனம் வையேல்!' (1.118.3; 1.118.4-ஐயும் பார்க்க). அவ்வாறு பாசப் பிணையில் நீங்கிப் பேரெழில் பெற்ற மனத்தினை 'ஏர் கெழு... நெஞ்சம்' என்பார் பிள்ளையார்.

திருவாரூரில் சம்பந்தர் பாடிய பதிகம் (2.215) முழுவதும் பாசத்தில் சிக்கிய ஆன்மாக்களில் நிலையற்ற, மாறி வருகின்ற, உடம்பெடுத்த வாழ்க்கையைக் காட்டுவதாக அமைந்துள்ளது. மரணத்தின் கோரத்தைச் சம்பந்தர் விவரிக்கின்றார்.

பவனமாய்ச் சோடையாய் நாஎழாப் பஞ்சுதோய்ச்
சட்டவுண்டு (1)

பவனம் என்ற பிராண வாயு இறக்கும் காலத்தில் பெருகும்; மேல் மூச்சு வாங்கும்; சோடை என்ற நீர் வறட்சி ஏற்படும். நாக்கு வறண்டு போகும். உறவினர்கள் பஞ்சினைப் பாலில் தோய்த்து வாயில் ஊட்டுவார்கள்.

தந்தையார் போயினார் தாயரும் போயினார் தாமும் போவார்
கொந்தவேல் கொண்டு ஒரு கூற்றத்தார் பார்க்கின்றார்
கொண்டுபோவார் (2)

முன்னால் வாழ்ந்த எத்தனை எத்தனை தந்தையோ தாயோ எல்லோரும் போய்விட்டார்கள். நம்மையும் கொல்லு வதற்கு எமன் வேலை ஓங்கிக் கொண்டு நிற்கிறான்; கொண்டும் போவான்.

செடிகொள் நோய் யாக்கையைம் பாம்பின் வாய்த்
தேரைவாய்ச் சிறுபறவை
கடிகொள்பூம் தேன்சுவைத்து இன்புறலாமென்று கருதினாயே
(6)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

துன்பமும் நோயும் நிறைந்த உடலோடு ஆன்மா உலகைச் சுவைக்க விரும்புவது எப்படியிருக்கிறது என்றால் ஒரு பாம்பின் வாயில் சிக்கிய தேரை; அதன் வாயில் அகப்பட்டுக் கொண்ட ஒரு வண்டு (பறவை); அந்த பயங்கர நேரத்திலும், அந்த வண்டு தேனைச் சுவைத்து இன்புறலாம் என்ற ஆசைப்படுவதைப் போல் இருக்கிறது.

இவ்வாறு வேதனை வாழ்விற்கிடையே நப்பாசையும் முடிவில் மரணமும் கொண்ட வாழ்க்கையைச் சம்பந்தர் மிகவும் தெளிவாக எடுத்துரைக்கின்றார்.

இயற்கை இறைவனுடைய கோலம் என்பதைப்பற்றி முன் பகுதியில் விரிவாகக் கூறப்பட்டது. அவன்தான் மாயையிலிருந்து உலகையும் தத்துவங்களையும் படைத்தவன். படைத்து அவற்றின் இன்னுயிர் வாழ்க்கையாக விளங்குபவன். 'உடல் வரை இன்னுயிர் வாழ்க்கையாகிய ஒருவன்' *(3.363.1)* என்பார் சம்பந்தர்.

இருப்பினும் சம்பந்தர் உடலோடமைந்த வாழ்க்கையைச் சற்று இழித்துப் பேசுவது எதற்காக என்று எண்ணத் தோன்றும்.

உயிர் எனும் ஆன்மா உடம்பையே தான் என்று எண்ணித் தடுமாறுகிறது; தன்னை உணரத் தவறிவிடுகிறது. உலகென்பது பொய்யில்லை. ஆனால் இடத்தையும் காலத்தையும் கடந்ததாய் நிற்கும் பொருள் ஒன்று உண்டு என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். இத்தருணத்தில் மெர்சியா எலியட் என்ற அறிஞர் இதுபற்றிக் கூறுவதைச் சற்றுச் சிந்திப்போம்:

> உபநிடத காலங்களிலிருந்தே இந்தியா உலகை ஒதுக்கி வருகிறது; ஒரு ஞானியின் பார்வையில் அது தென்படுவதைக் கண்டு அதனைக் குறைவாகவே மதிக்கிறது. (ஞானியின் பார்வையில்) உலகம் நிலையற்றது; துன்பகரமானது; வெற்றுத் தோற்றமா யிருப்பது. (ஆனால்) அத்தகைய கருத்து உலகமே இல்லை என்ற நிலைக்கோ, உலகில் நலமே ஏதுமில்லை என்ற நினைப்பிற்கோ இடமளிக்க

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வில்லை. இந்த உலகம் ஒதுக்கப் படுகிறது; இந்த வாழ்க்கை இழித்துரைக்கப்படுகிறது. ஏனென்றால் இந்த உலகினும் வேறான மாறுபடாத, நிலை பேறின்மையைச் சாராத, அழிவுறாத ஒரு பொருள் இருக்கிறது என்பதை அறிந்துகொள்கிறோம்; சமயச் சார்புள்ள சொற்களில் சொல்லப்போனால் இந்தியா இந்தப் புற உலகை, புற வாழ்வை ஒதுக்கித் தள்ளிவிட்டு ஒரு புனித உலகை, ஒரு புனித வாழ்க்கை முறையைப் பெறுவதற்குத் தாகத்தோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது.[10]

மெர்சியா எலியட் கூறுவது, சம்பந்தர் ஏன் உலகையும் உலக வாழ்க்கையையும் பழித்துரைக்கிறார் என்பதை ஓரளவிற்குப் புரியவைக்கிறது. ஆனால் உடம்பில் பிணி பட்டுக் கிடக்கும் இந்த வாழ்க்கை ஆன்மா ஞானத்தைப் பெறுவதற்குத் துணையாகவே உள்ளது. அந்தக்கரணம் முதலியவையே தான் என்று கருதிவிடாமல், தன் உண்மை நிலையை உணர்ந்து கொண்டு கருவி கரணங்களைப் பயன்படுத்தி ஆன்ம வளர்ச்சியைப் பெறுவதுதான் ஆன்மாவின் கடமை.

சம்பந்தரது கொள்கைப்படி 'கருவிகரணங்கள்' ஆன்ம சுத்தியைப் பெற்றுவிடுகின்றன. அதனால் அவர் 'உன்னி நிதம் மனமே நினையாய்' (2.144.7) என்றும் 'ஆமாத்தூர் அம்மானைக் கேளாத செவியெல்லாம் கேளாச் செவிகளே' (2.180.8); என்றும் 'ஆமாத்தூர் அம்மான்... கழல் பரவா வாழ்க்கையும் வாழ்க்கையே' (2.180.9) என்றும், 'ஆவூர் பசுபதி ஈச்சரம் பாடுநாவே' (1.8.1–10) என்றும் கருவிகரணங்களை இறைவனிடம் செலுத்தி ஆன்மசுத்தி பெறச் செய்கிறார்.

நீ நாளும் நன்னெஞ்சே நினைகண்டாய் ஆரறிவார்
சாநாளும் வாழ்நாளும் சாய்க்காட்டுஎம் பெருமாற்கே
பூநாளும் தலைசுமப்பப் புகழ்நாமம் செவி கேட்ப
நா நாளும் நவின் றேத்தப் பெறலாமே நல்வினையே (2.177.3)

என்ற சாய்க்காட்டுப் பதிகப்பாடல் இதனை மேலும் விரித்துப் பேசுகின்றது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இங்கு சம்பந்தர் இரண்டு குறிப்புகளைத் தந்தருளு கிறார். ஒன்று உடலும் உலகும் ஆன்மாவின் வளர்ச்சிக் காகத்தான் படைக்கப்பட்டுள்ளன. இரண்டு, அவ்வாறு கருவி கரணங்களை நன்கு பயன்படுத்தவில்லை என்றால் ஆன்மா வீழ்ச்சியுற்றுத் துன்பத்தில் துயர் உறும். அத்தகைய பயனற்ற வாழ்வைப் 'பொன்றுகின்ற வாழ்க்கை' (2.235.1) என்றும் 'அல்லல் மிக்க வாழ்க்கை' (2) என்றும் 'துக்கம் மிக்க வாழ்க்கை' (3) என்றும் சம்பந்தர் பழித்துரைக்கின்றார்.

3.3.2. ஆன்ம வளர்ச்சிக்கு நான்கு வழிகள்

ஆன்ம வளர்ச்சிக்கு முடிந்த முடிபாக இருப்பது இறைவனை உணர்தல்தான். அதற்கு ஆகமங்கள் நான்கு வழிகளைக் காட்டுகின்றன. அவை சரியை, கிரியை, யோகம், ஞானம் என்று நான்காகும். இவை பற்றிக் காண்போம்.

சரியை என்பது உடம்பால் தொண்டு செய்து பூசித்தல்; கிரியை என்பது பாவனை; அதாவது உடல் தொண்டோடு உள்ளத்தால் வழிபடுதல்; யோகம் என்பது மனத்தை அடக்கி இறைவனிடத்தில் ஒருமுகப்படுத்தல்; ஞானம் என்பது பூரண அறிவால் இறைவனை உணர்தல். ஒவ்வொன்றிலும் மற்ற மூன்றும் சேர்ந்த மொத்தம் பதினாறு வழிகளாகும்: அவைகள் என்னவென்றால் சரியையுள் சரியை, சரியையுள் கிரியை, சரியையுள் யோகம்; சரியையுள் ஞானம்; அதுபோல் கிரியையுள் சரியை, கிரியையுள் கிரியை, கிரியையுள் யோகம், கிரியையுள் ஞானம்; அதுபோல் யோகத்தில் சரியை, யோகத்தில் கிரியை, யோகத்தில் யோகம், யோகத்தில் ஞானம்; அதுபோல் ஞானத்தில் சரியை, ஞானத்தில் கிரியை, ஞானத்தில் யோகம், ஞானத்தில் ஞானம். ஆகப் பதினாறு வழிகள், ஆன்மா உன்னத நிலையை அடையும் வரையில் ஒவ்வொன்றும் மற்றொன்றோடு இணைந்தே வரும். இவ்வைகளில் எது மிகுதியாக இருக்கிறதோ அது அந்தப் பெயரால் விளங்கும். இவ்வாறு ஏணிபோல், படிக்கட்டுப் போல் ஆன்மா முயன்று முன்னேறுவதற்கான வழிமுறைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இவைகளின் பயன்களும் கூறப்பட்டுள்ளன. சரியையின் பயன் சாலோக்கியம் - ஒன்றி வாழும் நிலை; கிரியையின் பயன் சாமீப்யம் - சமீபமாக நெருங்கியிருக்கும் நிலை; யோகத்தின் பயன் சாரூப்யம் - உருவ ஒற்றுமை பெற்றிருத்தல். ஞானத்தின் பயன் சாயுஜ்யம் - ஒன்றிய நிலை. சாலோக்கியத்தில் ஒரு சாதகன் சரியைத் தொழில்களைச் செய்துகொண்டு இறைவனை மனத்தால் தியானித்து ஒரு பணியாள் தன் ஆண்டானின் வீட்டில் சுதந்திரமாக இயங்கிவருவது போல் நடந்துகொள்வான். எனவே இதற்கு தாஸ மார்க்கம் - பணியாள்முறை என்று பெயர்.

பின் இறைவனை நெருங்கிச் சாமீப்பியத்தை அடைந்த பொழுது ஒரு பிள்ளைபோல் அமைவதால் அந்த நிலை சத்புத்ர மார்க்கம் என்று கருதப்படுகிறது.

சாரூப்யம் என்பது யோக மார்க்கம். இங்கு சாதகனது மனம் யோக சாதனங்களால் ஒருமுகப்படுகிறது. இயமம், நியமம் போன்ற நியதிகள் கடைப்பிடிக்கப்படுகின்றன. ஆன்மா பிரகிருதியின் தொடர்பை முற்றிலும் அகற்றி விடுகிறது.

சாயுஜ்யம் என்பது ஞானமார்க்கம். இங்கு ஆன்மா இறைவனது உள்ளார்ந்த நிலையை நெருங்கி சாயுஜ்ய பதத்தை அடைகிறது. இந்த நிலையில்தான் உண்மையான பக்தி மலர்ந்து மணக்கிறது.

3.3.3. சம்பந்தர் காட்டும் நெறி

ஆன்மா மெய்யுணர்வுப் பாதையில் முன்னேறுவதற்குச் சம்பந்தர் பல வழிகளைக் காட்டியுள்ளார். அவற்றை விரிவாக அடுத்த பகுதியில் (சமய நெறியைப் பற்றிப் பேசும்பொழுது) காண்போம். இப்பொழுது சில முக்கியமான கருத்துகளைச் சம்பந்தரது பாடல்களிலிருந்து எடுத்துப் பார்ப்போம்.

முன்னமேயே குறித்தபடி சம்பந்தர் ஆகமக் கருத்துகளைப்பற்றியும் பேசுகிறார். மாசுகளைக் களையவும் மாசற்ற

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

புனித நிலையை – பூரணத்தை அடையவும் அவை மிகவும் பயனுள்ளவையாக அமைந்துள்ளன.

ஆன்ம ஒழுக்கங்களை மேற்கொள்வதில் சம்பந்தர் இரண்டு முறைகளைக் கையாள்கிறார். ஒன்று உலகில் சீரடியார்களும் ஞானிகளும் வகுத்துச் சொல்லும் முறையை விளக்குதல், மற்றொன்று நாம் எப்படிச் செய்யவேண்டும் என்ற விதித்தல் முறை.

முதல் முறைப்படி எல்லா வகையான வழிபாட்டு முறைகளும் கூறப்படுகின்றன. இவை பெரும்பாலும் சரியை, கிரியை, யோகம், ஞானம், என்பவற்றுள் அடங்கும். 'சரியைத் தொழில்' *(3.339.7)* என்றே ஓரிடத்தில் சம்பந்தர் குறிப் பிட்டிருக்கிறார். இதைத் தவிர இந்தத் தொழில்கள் அனைத்தையும் தனித்தனிப் பாடல்களில் விளக்கி யிருக்கிறார். எடுத்துக்காட்டாக 1.116.2 இல் சரியையும், 1.21.4 இல் கிரியையும் 1.21.5 இல் யோகமும் 1.21.6 இல் ஞானமும் பற்றி விரிவாகக் காணலாம். இந்த வழிபாடுகளைச் சம்பந்தர் 'நெறி' என்றே குறிப்பிடுகிறார். (எ.டு.) 'நெறியால் தொழுவார்' (1.31.9); 'நெறியே பல பத்தர்கள் கை தொழுதேத்த' (1.32.10).

சில முறைகளைச் சம்பந்தர் வேதநெறி என்று குறிப்பிடுவது வழக்கம். எடுத்துக்காட்டாக,

> அங்கமும் வேதமும் ஓதும்நாவர் அந்தணர் நாளும்
> அடிபரவ (1.6.12)
>
> நாமரு கேள்வியர் வேள்வி ஓவா நான்மறையோர்
> வழிபாடு செய்ய (1.6.4)

என்பன.

இவற்றுக்கெல்லாம் அணிமுடியாகச் சம்பந்தர் மேலும் மூன்று நெறிகளைக் குறிப்பிடுகிறார். அவை, 'பாடல் நெறி,' 'ஆடல் ' நெறி,' 'வேடநெறி' என்பவையாகும். சம்பந்தரின் கருத்துப்படி கவிதையும் கானமும் இறைவனின் உள்ளார்ந்த உட்பொருள்களாகும்.

> என்றும் அரியான் அயல வாக்கு, இயலிசைப் பொருள்
> –களாகி எனதுள்
> நன்றும் ஒளியான்... (3.337.1)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

என்றும் யாவர்க்கும் உணர்ந்துகொள்ள அரிய இறைவன் இயலிசைப் பொருள்களாகி என் உள்ளத்தில் ஒளியாகத் திகழ்கிறான் என்று சம்பந்தர் கூறுவது குறிப்பிடத்தக்கதாகும். இசை வல்லவர்களுக்கு இறைவன் அருள் புரிவான் என்பதை,

பாடுவார்க்கு அருளும் எந்தை (1.53.4)

என்கிறார்.

எங்கெல்லாம் இசையும் ஆடலும் திகழ்கின்றனவோ அங்கெல்லாம் இறைவன் நிலைபெற்றிருக்கிறான் என்பதை 'பாடல் நெறி நின்றான்;' 'ஆடல் நெறி நின்றான்' (2.180.5) என்ற உணர்த்துகிறார்.

கீதத்தை மிகப்பாடும் அடியார்கள் குடியாகப், பாதத்தைத்
தொழநின்ற பரஞ்சோதி (2.179.5)

என்றும்

பாடியாடும் மெய்ப்பத்தர்கட் கருள்செய்யும் முத்தினை (2.245.9)

என்றும் இறைவன் இசைக்கு நெகிழ்வதைக் காட்டுகின்றார். பக்தியால் ஆடிப்பாடும் அடியவர்கள் 'நிருத்தர் கீதர்' (1.52.6) எனப்படுகின்றனர்.

'வேட நெறி' என்பது சிவச்சின்னங்கள் அணிந்து சிவனைப் போற்றும் அடியார்களின் நெறியாகும். இறைவனின் அன்பிலே பித்துக்கொண்டு இயங்கும் அடியார்கள் 'பித்து உலாவிய பத்தர்கள்' (2.241.6) எனப்படுகிறார்கள். அத்தகைய பித்தர்கள் மீது பித்தேறி நிற்பவன் இறைவன்; அவனும் ஒரு பித்தன்தான்; 'பித்தர் பித்தன்' (2.234.10); 'தொண்டர் தொண்டன்' (2.240.10). ஜீவன் முக்தர்கள் கூட இந்த வேட நெறியைப் போற்றுகின்றார்கள்; அடியார்களையும் ஆலயங்களையும் அரன் என்றே தொழுகிறார்கள். சிவஞானபோதம், பன்னிரண்டாம் சூத்திரம்

மாலற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயம் தானும் அரனெனத் தொழுமே

என்று உணர்த்துகிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஜீவன் முக்தர்கள் மும்மலங்களிலிருந்தும் முற்ற நீங்கியவர்கள்; ஞானத்தேனைப் பருகிப் பேரின்பத்தில் திளைப்பவர்கள். அவர்கள்கூட, உடம்போடு வாழும் பொழுது பிராரப்தவினை வந்து தாக்கிச் சம்சாரத்தில் அழுந்திவிடாமல் தங்களைக் காத்துக்கொள்ள அடியவர் வேடத்தையும் ஆலயத்தையும் தொழுகிறார்கள் என்பது சிவஞான யோகியின் விளக்கம்.[11]

எனவே சம்பந்தர் ஆடல் நெறியிலும் பாடல் நெறியிலும் நிற்பதைப்போல 'வேட நெறி நின்றான்' என்று உணர்த்துகிறார். குலச்சிறையார் அடியவரைத் தொழும் பாங்கை 'கணங்களாய் வரினும் தமியராய் வரினும் அடியார் தங்களைக் கண்டால், குணங்கொடு பணியும் குலச்சிறை' *(3.378.4)* என்று போற்றுகிறார் சம்பந்தர்.

மணிவாசகப் பெருமான், 'என் கொங்கை நின் அன்பர் அல்லார் தோள் சேரற்க' என்று கூறுவதைத் திருவெம் பாவையில் பார்க்கிறோம். மேலும், 'உன் அடியார் தாள் பணிவோம்; ஆங்கு அவர்க்கே பாங்காவோம்' என்றும் அவர் கூறுவதைக் காண்கிறோம்.

சம்பந்தரும் சாம்பல் (திருநீறு) பூசும் மார்புடைய உன் அடியாரின் தொடர்பைத் தவிர வேறு உறவில்லை என்ற கருத்தில் 'சாம்பல் அகலத்தார் சார்பல்லார் சார்பிலமே' *(2.180.3)* என்று உறுதியாகக் கூறுகிறார்.

தழும்பேறிய பக்தர்களின் நெறியை ஓரளவு கண்டோம். இனி, சம்பந்தர் விதித்துச் சொல்லும் நெறிகளைக் காணலாம். இங்கும் இரண்டு வகைகளைப் புரிந்து கொள்ளலாம். ஒருவகையில் சம்பந்தர் தம் சீடர்களை – மக்களை நோக்கி இவ்வாறு செய்யுங்கள் என்று கேட்டுக்கொள்கிறார். எடுத்துக்காட்டாக,

> தூங்கானை மாடம் தொழுமினே (1.51.10)
>
> கண்டு தொழுமின் கபாலி வேடமே (1.27.10)
>
> விரைகமழ் மாமலர் தூவி விரிசடையான், அடிசேர்வோம் (1.40.2)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பாலோடு நெய் ஆடி பாதம் பணிவோமே (2.182.9)

உற்று நினையாய் (2.144.8)

என்றெல்லாம் அடியார்களை அழைக்கின்றார் சம்பந்தர். இரண்டாவது வகையில் அடியவர்களைத் தம் பாடல்களைப் பாடிப் பரவுமாறு அழைக்கிறார்.

பாடல் சொலி ஆடத் தவமாமே (1.16.11)

ஒவ்வொரு பதிகத்திலும் பொதுவாகப் பதினோராவது பாட்டாக விளங்குவது **திருக்கடைக்காப்புப்** பாட்டே. இப் பாட்டில் பதிகங்களைப் படித்துப் பாடுவதால் ஆகும் பயன்களை எடுத்துக்கூறுவது வழக்கம். இந்தப் பயன்களை அடைவதே பெரும் பேறாகும். இம்மைக்கும் மறுமைக்கும் ஏற்ற நன்மைகளை இப்பதிகங்கள் வழங்குவதால் நம்பியாண்டார் நம்பி இதனைப் **பதிகப்பெருவழி** என்று, அதுவே ஒரு நெறியாக விளங்குவதை எடுத்துக்காட்டுகிறார். 'பதிகப்பெருவழி காட்டினான்' என்று தமது ஆளுடைய **பிள்ளையார் திருவந்தாதியில்** *(2)* சம்பந்தரை நன்றியோடு நினைத்துப் பாடுகிறார் அவர்.

சம்பந்தர் தம் பாடல்களைப் பாடுவார்கள் பெறும் பேறுகளை உணர்த்துகிறார்.

தமிழ் தரிப்போர் தவஞ்செய் தோரே (2.209.12)

அனுபோகமொடு யோகம் அவரதே (3.338.11)

என்றெல்லாம் அவர் கூறுவதைக் காணலாம். மேலும் தம்முடைய தமிழைப் படித்தவர்களது அடியைப் பணிவதே தவமாகும் என்ற கருத்தில், 'சம்பந்தன் தமிழ் வல்லவர் அடி பேணுதல் தவமே' *(1.10.11)* என்கிறார். தன் பாடலை மொழிந்தால் பெறலாம் வரமே 'மொழிந்தக்கால் மற்றது வரமாமே' (2.244.11) என்று உறுதி கூறுகிறார்.

திருஞானசம்பந்தர் தமிழகமெங்கும் ஊர் ஊராகச் சென்றவர்; தலங்கள்தோறும் சென்று பாடியவர். பல ஊர்களில் பல்தரப்பட்ட மக்களைச் சந்தித்திருக்கிறார். ஓர் ஊர்க் கோயிலைப் பாடும்பொழுது அதன் இயற்கைப் பின்புலத்தையும் மக்களின் இயல்புகளையும் வைத்துப்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பாடுவது அவருக்கு வழக்கம். அந்தந்த ஊர் மக்களின் மனப் பக்குவத்திற்கு ஏற்பத் தேவைகளுக்குத் தகுந்தாற்போலப் பாடிச் செல்வதையும் பார்க்கின்றோம். எடுத்துக்காட்டிற் காகத் திருப்பிரமபுரம் பதிகத்தில் *(3.295)* திருக்கடைக்காப்பில் தான் பாடிய பாடல்கள் மெய்த்தவத்தோருக்குப் பொருந்துவ தாகக் குறிப்பிடுகிறார்.

> மெய்த்தவத்துநின் றோர்களுக்கு உரைசெய்து நன்பொருள் மேவிட
> வைத்தசிந்தையுள் ஞானசம்பந்தன் வாய் நவின்று எழுமாலைகள்
> பொய்த்தவம் பொறி நீங்க இன்னிசை போற்றி செய்யமெய்ம் மாந்தரே!

என்று தாம் மெய்த்தவநெறியில் நின்றவர்களுக்காகப் பாடியதாகத் தெளிவாகக் குறிப்பிடுகிறார்.

இவ்வாறு பல பதிகங்கள் பலதரப்பட்ட மக்களது மன வளர்ச்சியைப் பிரதிபலிப்பதாகக் கொள்ளமுடியும்.

சம்பந்தர் தம் பாடல்கள் அளிக்கும் பல்வேறு பயன் களைப் பல வகைகளில் அடைவு செய்யலாம். அது பற்றிக் கீழே சில விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன:

1. **அவலம் (துன்பம்):** 'அவலம் தீரும் – அவலம் அடையாவே' *(1.26.11; 3.362.11; 3.268.11)* 'அறும் நீடு அவலம்' *(1.134.11)*
2. **கேடு:** 'இல்லை கேடே' *(1.35.11)*
3. **துயர்:** 'துயர் கெடுதல் எளிதாமே' *(1.40.11)* 'சிந்தையில் துயராய தீர்வரே' *(2.164.11; 2.252.11; 2.340.11)*
4. **துன்பம்:** 'துன்பம் துடைப்பாரே' *(1.105.11)*
5. **குற்றம்:** 'குற்றங்கள் குறுகாவே' *(2.239.11)* 'குற்றம் அற்றார்களே' *(3.286.11)* 'குற்றம் அற்றோரே' *(3.384.1)*
6. **பிணி:** 'வாரா பிணிகள்' *(1.68.11)* 'பிணியிலார் தாமே' *(1.78.11)* 'உறுநோய் களைவாரே' *(1.104.11)* 'மருவா பிணிதானே' *(3.363.11)*
7. **கவலை:** 'கவலை களைவாரே' *(1.70.11)* 'கவலை கழிவாரே' *(1.72.11)*

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

8. பாவம்: 'பறையும் பாவமே' (2.235.11; 1.29.11; 1.39.11; 2.148.11; 3.266.11) பறையும் – நீங்கும்.

9. இடர்: கன்மாக்கள் ஆன்ம வளர்ச்சிக்குத் தடைகளாக உள்ளவை. எனவே இங்கு இடர் என்பது கன்மாவை யும் குறிக்கும். 'இடர் பாவம் அடையாவே' (1.12.11; 1.97.11; 2.177.11; 3.371.11)

10. தடுமாற்றம்: 'தடுமாற்றறுப் பாரே' (1.88.11) 'தடுமாற்றம் வஞ்சமிலார்' (3.339.1)

11. கருமம் (வினைகள்): 'பறையும் வினைதானே' (1.17.11); 'வினைபோய் ஓங்கி வாழ்வாரே' (1.23.11); 'சாரகிலா வினைதானே' (1.44.11); 'வினை இலாரே' (1.46.11); 'வினை வீடே' (1.54.11; 1.55.11; 1.77.11; 1.95.11; 1.107.11; 2.160.11; 2.161.11; 2.167.11; 2.216.11) 'தீவினை போய் அகல நல்வினைகள் தளரா வன்றே' (2.207.11); 'வினை மாயுமே' (2.212.11); 'வினை கெடுதல் ஆணை நமதே' (2.220.11); துயர் வாதியாமையால் வினை மாயுமே' (2.252.11; 3.260.11; 3.263.11).

12. குணம்: 'குணமாமே' (1.57.11); 'தக்கார் தாமே' (2.210.12; 2.234.11; 3.321.11; 3.338.11).

13. புகழ்: 'குறைவின்றி நிறை புகழே' (1.18.11); 'பழியில் புகழாரே' (1.81.11); 'புகழோடும் பேரின்பம் புகுதுமன்றே' (1.119.11; 1.120.11; 2.154.11; 3.329.11).

14. பழி: 'பழியோடு பாவமிலாரே' (1.39.11); 'பழிபோமே' (1.101.11; 1.102.11; 2.169.11; 3.338.11).

15. மதி, விதி, ஞானம்: 'மதியுடையவர் விதியுடையவர்களே' (1.19.11); 'உருஞானம் உண்டாம்' (2.156.11).

16. இன்பம்: 'இன்பம் ஆமே' (1.111.11; 2.199.11; 3.279.11)

17. செல்வம்: 'செல்வம் ஆம் இவை செப்பவே' (1.135.11); 'தீதிலாச் செல்வரே' (3.309.11).

18. நல்லவர் ஆதல். 'நல்லவர் தாமே' (1.130.11; 2.202.11; 3.370.11).

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

19. நன்னெறி: ‘நலமிக்க சிந்தையர் ஆகி நன்னெறி எய்துவர் தாமே’ (2.205.11); ‘தூநெறி பெறுவார்களே’ (2.214.11; 2.230.1[1]; 2.247.11; 3.291.11).

20. வான்: ‘வானத்து இனிதாய் இருப்பரே’ (1.24.11); ‘விண்ணோர் உலகத்தில் வீற்றிருப்பாரே’ (1.32.11; 1.34.11; 2.142.12; 3.326.11).

சம்பந்தரது பாடல்களைப் படிப்பவர்கள் அல்லல், அவலம், கேடு, துயர், துன்பம், குற்றம், பிணி, கவலை, பாவம், இடர், தடுமாற்றம், வினை, பழி ஆகியவைகளை நீக்கி குணம், புகழ், மதி, விதி, ஞானம், இன்பம், செல்வம், நலம், நன்னெறி முதலியவைகளை அடைந்து மகிழ்வார்கள். முடிவில் ‘வான்’ என்ற உயர்நிலை உலகத்தையும் அடைவார்கள் என்பதனை அறிந்துகொள்கிறோம்.

அத்தகையோர் ‘பாக்கியவான்களே’ (3.366.11) என்றும் ‘பக்தராகுவரே’ என்றும் ‘உயர்ந்தோர் சுற்றமுமாகி’ (3.381.11) என்றும் ‘பந்தம் அறுத்து ஓங்குவார் பான்மையினாலே’ என்றும் ‘பந்தபாசம் அறுக்க வல்லார் களே’ (3.307.11) என்றும் சம்பந்தர் உறுதியாக எடுத்துரைக்கின்றார்.

21. மலம்: ஆன்மாக்களை இழிவுறுத்தும் அழுக்காகிய மலத்தை அழித்து அவர்களைத் தூய்மையுறச் செய்யும். ‘இழுக்கும் மலம் அழியும் வகை கழுவும் உரை’ (3.325.12) என்று தன் உரைக்கு ‘மலம்’ அழிக்கும் மாண்பு உள்ளத்தைக் குறிப்பிடுகிறார்.

22. பிறப்பு: ‘பிறப்பது அறுத்துக் கவலை களைவாரே’ (1.72.11); ‘அறும் பிறப்புத்தானே’ (1.134.11); ‘இல்லையாம் மறுபிறப்பே’ (2.179.11; 3.308.11).

23. வீடுபேறு: ‘எய்தும் பிறவாவகை வீடே’ (1.31.11); ‘வானிடை வீடு எளிதாமே’ (1.33.11). ‘உயர் வீடே’ (1.36.11; 2.213.11; 3.317.11).

24. சிவனடி: ‘சிவனடி நண்ணுவார் தாமே’ (1.41.11); ‘அடி சேர்வார்களே’ (1.87.11; 2.144.11; 3.361.11).

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

25. சிவலோகம்: 'சிவலோகம் சேர்வாரே' (1.60.11; 3.276.11; 3.361.11); 'பரலோகத்திருப்பாரே' (1.106.10; 2.219.11; 3.371.11).

26. சிவகதி: 'சிவகதியைப் பெறுவாரே' (1.9.11); 'சேர்வார் சிவகதியே' (1.15.11); 'சிவகதி சேர்வாரே' (1.66.11; 2.241.11; 3.275.11).

27. ஈசனோடு ஒன்றுதல்: 'எய்துவார்கள் ஈசனையே' (1.62.11); 'கோனோடும் கூடுவரே' (1.116.11).

28. ஈசனோடு இணைதல்: 'ஈசனோடே மன்னி இருப்பாரே' (1.50.11); 'இருநிலத்தில் ஈசன் எனும் இயல்பினாரே' (1.132.11; 'இறைவனோடு உறைவரே' (2.240.11).

29. அருள்: 'துயர் போகி அருள் பெறும் தன்மை மிக்காரே' (1.100.11); 'திருவளர் செம்மையாகி அருள்பேறு மிக்க உளது' (2.222.11); 'அருள்சேர்வாரே' (3.269.11); 'நெஞ்சு இருளும் நீங்கி அருள்பெற்று வளர்வரே' (3.339.11).

இவ்வாறெல்லாம் சம்பந்தரது பாடல்களைப் படிப்பதால் விளையும் நன்மைகள் தொகுத்தளிக்கப்பட்டன. எவ்வாறு சம்பந்தரது பாடல்கள் படிப்படியாக நம்மை வளர்த்தி வாழவைக்கின்றன என்பதனை அறிய இந்தப் பாகுபாட்டு முறை நமக்கு ஒருவாறு உதவுகிறது. ஆனால் சம்பந்தர் இந்த முறையில்தான் பாடியிருக்கிறார் என்பதில்லை. அவர் ஊர் ஊராய்ச் சென்று அங்குள்ள மக்களின் பக்குவ நிலைகளுக்கேற்பப் பாடி எல்லோரையும் படிப்படியாக அருள் நெறியில் வளர்த்திருக்கிறார் என்றே சொல்ல வேண்டும்.

ஆடல் நெறி, பாடல் நெறி, வேட நெறி, பதிகப் பெருவழி போன்ற எல்லா வழிபாட்டு முறைகளும் ஆன்மாவை வழிநடத்தி, தான் பிரகிருதி இல்லை; தான் வேறு என்ற ஆன்ம ஞானத்திற்குக் கொண்டு செல்கின்றன. அந்த ஞானம் வந்து வாய்த்தபோது ஆன்மா ஆண்டவனிடம் சென்று ஒன்றிவிடுகிறது. இந்த வழிகள் எல்லாமே சாதனைகள்; செய்பவன் சாதகன். அவன் செய்து பெறுவதுதான் சித்தி.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருஞானசம்பந்தர் பல பாடல்களில் சித்தர்களைப் பற்றிக் குறிப்பிடுகிறார். பக்தர்களையும் பாடுகிறார். (1.71.5; 1.43.10; 2.170.1; 2.186.6; 2.223.10) 'பத்தர் சித்தர்' என்றே இருவரையும் இணைத்துப் பேசுவது அவரது மரபு.

வழிபாடு என்றால் அதை ஆற்றும் வழிபடுவோரும் வழிபடப்படுகின்ற தெய்வமும் என்ற இருமை நிலை ஏற்படுகிறது. ஆனால் சாதகனுடைய சாதனையில் இந்த இருமை நிலை அவனுக்குத் துணையாய் நின்று இரண்டற்ற ஒருமை அனுபவத்தை முடிவில் தந்து உதவுகின்றது. அறிந்ததைக் கொண்டு அறிய முடியாததை அறிந்து கொள்ளும் ஒரு முயற்சிதான் இது என்று சொல்ல வேண்டும்.

இந்த இருமை நிலையைத் துவைதம் என்பார்கள். தாயுமானவர் என்ற தமிழ்நாட்டுச் சிந்தனை அருளாளர் "ஓத அரிய துவைதமே அத்துவித ஞானத்தை உண்டு பண்ணும் ஞானமாகும்'' என்று அழகாக எடுத்துரைப்பதைப் பார்க்கிறோம்.[12]

இந்தச் சாதனைகள் வழியாக முயன்று ஆன்மா 'தான் இவ்வுடம்பில்லை - இந்த மனமில்லை' என்ற உணர்வினைப் பெறுகிறது. இறையருளில் தோய்ந்து தன்னை மறக்கிறது; அங்கே ஊன்றித் திளைக்கிறது; சிவனாகவே ஆகிவிடுகிறது. இதனைச் 'சிவோகம் பாவனை' என்பார்கள். இந்த நிலையில் ஆன்மாவிற்கும் பரமாத்மனான சிவனுக்கும் உள்ள பேதம் கழன்று விடுகிறது. சிவமே அனுபவமாய்த் தேன்போல் இனிக்கிறது.

திருஞானசம்பந்தர் இந்த நிலைபற்றிப் பல இடங்களில் குறிப்பிடுகிறார்: "கள்ள நெஞ்ச வஞ்சகக் கருத்தை விட்டு அருத்தியோடு (அன்போடு), உள்ளம் ஒன்றி உள்குவார் உளத்துளான்'' (2.237.6). இங்கு கள்ள நெஞ்சம் என்பது பேதப்படுத்தும், இருமைப்படுத்தும் உள்ளம்; வஞ்சகக் கருத்து என்பது ஆன்மாவைத் தான் மனமென்றும் உடம்பென்றும் மயக்க வைக்கும் மனப்பான்மை. அவை நீங்கும்பொழுது இறைவன் ஆன்மாவோடு ஒன்றிவிடுகிறான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நன்னெஞ்சே உனை இரந்தேன் நம்பெருமான் திருவடியே
உன்னஞ் செய்து இருகண்டாய் உய்வதனை வேண்டிதியேல்
(2.176.3)

என்று தன் நெஞ்சைக் கெஞ்சிக் கேட்கிறார் சம்பந்தர். மனமும் உடம்பும் அப்படியேதான் இருக்கின்றன. ஆனால் உணர்வு சிவத்தில் தோய்ந்தபொழுது அங்கு இருப்பது ஒரே ஓர் அனுபவந்தான். அங்கு அன்பின் வெது வெதுப்பில் உணர்வு உருகி விடுகிறது. அத்தகைய அடியவர்களை 'உருக்கும் அடியார்' (1.88.8) என்கிறார். அவர்களுக்குச் சுவர்க்க இன்பமும் பெரிதில்லை. இறைவனின் அன்பில் திளைப்பவர் களுக்கு "சுவர்க்கங்கள் பொருள் அலவே" என்று சம்பந்தர் கூவிக் குரல் எழுப்புகிறார் (2.177.7).

ஆசைகள் அடங்கி மடங்காவிட்டால் ஆன்மிகத் தெளிவு ஏற்படுவது என்பது இயலாததாகும்.

இரவியும் திங்களும் மற்றுமுள்ள தேவர்களும் இறைவனைப் பயன்கருதித் தொழுவதால் சித்தம் தெளியாமல் மருளுகின்றனர். இதனை,

இயங்குகின்ற இரவி திங்கள் மற்றும் நற்றேவரெல்லாம்
பயங்களாலே பற்றி நின்பால் சித்தம் தெளிகின்றிலர் (1.50.2)

என்று சுட்டிக்காட்டுகிறார்.

பழுத்த ஞானிகள்கூடச் சில சந்தர்ப்பங்களில் உலக நினைவுகளில் இறங்கிச் சுழன்று விடுகின்றனர். இறைவனின் எல்லையற்ற அருள்தான் அவர்களைக் காத்து மேம்படுத்து கிறது. சம்பந்தர் தம்மீது வைத்து மற்ற அடியார்களின் இந்த நிலையைக் காட்டுகிறார். வலிவலம் என்னும் திருத்தலத்தில் வீற்றிருக்கும் இறைவனை நோக்கி 'மயங்குகின்றேன் வந்து நல்காய் வலிவலம் மேயவனே' (1.50.2) என்று முறையிடுகிறார்.

மேலும் அவர் தொடர்ந்து எம்பெருமானிடம் விண்ணப்பிக்கின்றார்:

தாயும் நீயே தந்தை நீயே சங்கரனே அடியேன்
ஆயும் நின்பால் அன்புசெய்வான் ஆதரிக்கின் றதுள்ளம்
ஆயமாய காயம் தன்னுள் ஐவர்நின்றுஒன்றல் ஒட்டார்
மாயமே என்று அஞ்சுகின்றேன் வலிவலமே யவனே (1.50.7)

என்றும்,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

'ஆதிநாளும் உன்னை ஏத்தும் என்னை வினை அவலம்
வாதியாமே வந்துநல்காய் வலிவலம் மேயவனே!'

(1.50.9)

என்றும் அவர் தம்மை வினை அவலம் வந்து துன்புறுத்தாமல் காத்தருள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறார்.

வினைக்கு ஆளாகிய ஆன்மா இரண்டு வழிகளில் அலைப்புண்டு தடுமாறுகிறது. ஒன்று பிற உயிர்களைத் துன்புறுத்தும் 'தீவினை,' மற்றொன்று எல்லோருக்கும் நல்லது செய்யும் 'நல்வினை.' ஆனால் இந்த இரண்டு வினைகளுமே 'பாச புண்ணியம்'தான். பாச புண்ணியம் அகந்தையிலிருந்து நீங்கித் தூய்மைப்படுத்தப்படும் பொழுது அது 'சிவ புண்ணியமாகப்' பரிணமிக்கிறது. இங்கு ஆன்மா இறைவனிடம் முற்றும் முழுவதுமாகச் சரணடைந்து அவனுடைய புகழைப் பாடித் துதித்துக் கொண்டிருக்கிறது.

'என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே இருங்கடல் வையத்து
முன்னை நீபுரி நல்வினைப் பயனிடை முழுமணித் தரளங்கள்
மன்னுகாவிரி சூழ்திரு வலஞ்சுழி வாணனை வாயாரப்
பன்னியாதரித்து ஏத்தியும் பாடியும் வழிபடும் அதனாலே"

(2.242.1)

என்று வலஞ்சுழி வாணனை வாயாரப் பாடித் துதிப்பதற்கு என்ன புண்ணியம் செய்துவிட்டாய் என்று சம்பந்தர் தமது நெஞ்சினைக் கேட்டு வியக்கின்றார்.

சம்பந்தருடைய கருத்தின்படி, முற்றமுழுவதுமாகச் சரணடைந்து, எல்லாம் திருவருள் செயல் என்ற சிந்தனையோடு, அன்பில் தோய்ந்து கனிந்து செய்யும் சிவபுண்ணியம்தான் ஞானமாக மலர்கிறது. 'ஆண்ட கழல் தொழிலல்லது அறியார் அவர் அறிவே' (1.18.4) என்று அடிதொழுது கிடந்தறியும் அறிவுதான் அடியார்களின் அறிவு (ஞானம்) என்று சம்பந்தர் பாடுவதைப் பார்க்கின்றோம். மேலும் 'அடிதொழும் அறிவலது அறிவு அறியோமே' (1.19.7) என்றும் உறுதியாகக் கூறுகிறார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

3.3.4. விட்டு விடுதலையாகி நின்றவர்கள்

ஞானத்தால் அடையும் மெய்யுணர்வுதான் மிகச் சிறந்தது. அதாவது இறைவனை அடைவதற்கு ஞானமே சிறந்த சாதனமாகக் கருதப்படுகிறது. இந்த ஞானம் மூன்று வகைப்படும்: 1. பாச ஞானம், 2. பசு ஞானம், 3. பதிஞானம். ஐம்பொறியுணர்வாலும் அந்தகரணம், மனம் போன்ற வற்றாலும் பெறப்படுவதுதான் பாசஞானம். இவை யெல்லாம் மாயையிலிருந்து தோன்றியவை. அதனால் இந்த ஞானத்தைப் பாசஞானம் என்கிறோம். மாயையின் பொருள்களிலிருந்து விடுபட்டு அறிவதே பசுஞானம். ஆன்மா பசுஞானத்தால்தான் பதிஞானத்தை அடைகிறது. பதி ஞானத்தில் ஆன்மா இறைவன் அறிவிக்க அறிகிறது. அங்கு சிவஞானம்தான் ஆன்மாவிற்கு ஞானத்தை வழங்குகிறது. பசுஞானம் முற்றுமாகிய விடுதலையைத் தருவதில்லை. ஏனென்றால் அந்த ஞானம் கலை, வித்தியா ஆகிய தத்துவங்களிலிருந்து விலகியிருக்காமல் அவற்றிலேயே அழுந்தியிருக்கிறது.

பதிஞானம்தான் மிக உயர்ந்த ஞானம். இதனை 'உயர் ஞானம்' என்பார் ஞானசம்பந்தர். இந்த நிலையில் ஆன்மா மாயையின் பொருள்களான கலை, ஆணவம் முதலியவற்றி லிருந்து முழுவதும் விடுபட்டு விளங்குகிறது. இறைவனின், பராசக்தி இங்கு வந்து அருள் செய்கிறது. மல சம்பந்தமான வற்றிலிருந்து முற்றுமாய் நீங்கி நிற்கும் ஆன்மாவின் அறிவு இறைவனின் மெய்யறிவால் ஆட்பட்டுக் கிடக்கிறது. இந்த நிலையில் ஆன்மா தன்னை அறிவதுடன் எல்லாவற்றையும் அறிந்துகொள்ளும் வல்லமையைப் பெற்று விடுகிறது.

திருஞானசம்பந்தர் பல பாடல்களில் விடுதலையுற்ற ஆன்மாக்களைப்பற்றி விரிவாகக் குறிப்பிட்டிருக்கிறார். அவர்கள் 'அஞ்சு புலன் வென்று அறுவகைப் பொருள் தெரிந்து ஏழுஇசைக் கிளவியால் வெஞ்சினம் ஒழித்தவர்கள்' (3.336.10) என்பார். அதாவது பஞ்சேந்திரியங்களை வென்று ஆறு சமயங்கள் கூறும் தத்துவங்களைக் கற்றுத் துறைபோகி ஏழு ஸ்வரங்களையுடைய இசை வேதத்தால் கடுஞ் சினத்தைத் தங்களிடமிருந்து முழுதும் நீக்கியவர்கள் அந்த

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஞானிகள். தம்மையொத்த ஞானிகளிடமிருந்து, கற்றும் கேட்டும் மெய்யறிவைப் பெற்ற பெரியவர்கள். ('கற்றல் கேட்டல் உடையார் பெரியார்' 1.1.2).

பொய்ப்பொருள்களைத் துறந்து மெய்யறிவைப் பெற்றவர்கள்; ஐம்பொறிகளும் அடக்கப்பட்டு சித்தத்தை 'தாரணை'யில் நிறுத்தியவர்கள்; மெய்யைக் கண்டவர்கள். "ஆறினார் பொய்யகத்து ஐயுணர் வெய்தி மெய் தேறினார்" (3.293.6). எல்லாப் பற்றினையும் துண்டித்துக் கொண்டவர்கள். ("அற்றவர்கள்" – 2.201.10; 3.326.2; 3.378.2). 'சுற்றமொடு பற்று அவை துயக்கற அறுத்தும் குற்றமில் குணங்களோடு கூடும் அடியார்கள்' (2.167.1).

ஜீவன் முக்தர்களாகிய அடியவர்கள் பாவ புண்ணியங் களுக்கும் அப்பாற்பட்டவர்கள். அதர்மங்களைத் துறப்பது மட்டுமல்ல; சாதாரண மக்கள் ஏற்றுக்கொண்டு நடக்கும் ஒழுக்க விதிகளும் அவர்களுக்கு ஒரு பொருட்டல்ல. இவையெல்லாமே ஆத்ம சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தும் சங்கிலிகள். பாவ புண்ணியங்களுக்கு அப்பாற்பட்டு, இன்ப துன்பங்களை ஒன்றாக மதித்து, மனத்தை நடுநிலையில் வைத்துக்கொள்வதும், பயன்களைப்பற்றிக் கவலைப்படாமல் பற்றற்று நிற்பதும் 'இருவினை ஒப்பு' என்ற மனநிலையைப் பெற்றிருத்தலும் இந்த மெய்யடியார்களின் மாண்பாகும்.

> மறத்துறை மறுத்தவர் தவத்தடியர் உள்ளம்
> அறத்துறை ஒறுத்து உனது அருட்கிழமை பெற்றார் (2.166.7)

என்று மறத்துறையாகிய பாபமும் அறத்துறையாகிய புண்ணியமும் நீக்கி அத்தவத்து அடியவர்கள் இறைவனது அருளைப் பெற்றவர்களாக விளங்குகின்றனர் என்பது சம்பந்தரின் விளக்கம்.

'இருவினை ஒப்பு' வர, சிறந்த அடியார்களுக்கு 'முன்னை வினைக'ளெல்லாம் கழிந்து போகின்றன. முழுதும் உணர்கின்ற இறை அருளால் பெறுகின்ற அறிவு வந்து கூடுகிறது. 'முன்னை வினை போய் வகையினால் முழுதுணர்ந்து முயல்கின்ற முனிவர்' (3.329.4) என்று அவர்களைப் போற்றுகின்றார் சம்பந்தர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

காமக் குரோதங்கள் ஆன்ம வளர்ச்சிக்குப் பெரிய முட்டுக்கட்டைகள். அவற்றை அகற்றி ஐம்புலன்களையும் வெல்லுதல் வேண்டும். ஆனால் அந்த வெற்றி நிலைத்திருக்க வேண்டுமென்றால் இறைவனிடத்தில் நீங்காத அன்பு கொண்டிருக்க வேண்டும். அத்தகைய அன்புடைய நெஞ்சத்தில் நின்று இறைவன் அருளை வழங்குகிறான். இந்தக் கருத்தை,

> அகன் அமர்ந்த அன்பினராய் அறுபகை செற்று ஐம்புலனும் அடக்கி ஞானப்
> புகல்உடை யோர்தம் உள்ளப் புண்டரிகத்து உள்ளிருக்கும் புராணர்... (1.132.6)

என்று சம்பந்தர் கூறுகிறார்.

ஜீவன்முக்தர்களது உணர்வு சாதாரண உலக வாழ்க்கை நிகழ்ச்சிகளிலும் நியதிகளிலும் தோய்ந்திருப்ப தில்லை. அவர்கள் 'வேறுபட்ட சிந்தையார்' (3.311.2). இறை உணர்விலேயே அழுந்திக் கிடப்பவர்கள். அவர்களுக்கு மொழி அற்ற மௌனமே ஞானத்தை விளக்கும் சாதனமாக அமைகிறது. முத்தமிழிலும் ஊறிய அவர்கள் மௌனத்தையே மொழியாகக் கொண்டவர்கள்.

> மூகம் அறிவார் கலைமுத்தமிழ் நூல் மீகம் அறிவார் (2.153.10)

என்று வேணுபுரத்து முக்தர்களைக் குறித்துச் சொல்கிறார் சம்பந்தர். மேலும் அவர்களை 'இருநான்கின் மாதி சித்தர்' (1.66.10) என்று எட்டு சித்திகளிலும் வல்லவர்கள் என்கிறார்.

ஜீவன்முக்தர்கள் என்ன செய்தாலும் எத்தகைய நோயும் துன்பமும் உற்றாலும் அவர்களது சிந்தை இறை யுணர்வில் ஊன்றியே இருக்கும். ஒன்றுபட்ட மனம் அமைதியில் நிலவியிருக்கும். சில நேரங்களில் அவர்களது நடைமுறைகள் உலகியல் வழக்கங்களுக்கு மாறுபட்டன போலத் தோன்றும். மெய்யெல்லாம் நீறு பூசித் திரியலாம்; சோலைகளில் மதுவை உண்டு திரியலாம்; பலவாறு கூவி அழைக்கலாம்; மணம் மிக்க சோலை சூழ்ந்த திருக்கள்ளில் என்னும் தலத்தில் வீற்றிருக்கும் இறைவனது அடியார் களாகிய அவர்களது பண்பினைக் கீழ்மக்கள் தான் இழி வாகப் பேசுவார்கள்; அறிவுடையோர் பேச மாட்டார்கள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பொடியார்மெய் பூசினும் புறவின் நறவம்
குடியாஊர் திரியினும் கூப்பி டினும்
கடியார்பூம் பொழில்சோலைக் கள்ளின் மேயான்
அடியார்பண்பு இகழ்வார்கள் ஆதர்களே (1.119.7)

என்று சம்பந்தர் அத்தகைய அடியார்களது பண்பினைக் குறிப்பிடுகிறார்.

இங்கு ஒன்றைச் சொல்லவேண்டும். அடியார்கள் 'பித்தேறிய சிந்தையராய்'த் திரிந்து அலையும்பொழுது சில செயல்களைச் செய்வார்கள் என்பது அவர்கள் எப்பொழு தாவது செய்பவற்றைத்தான் குறிக்கிறதே தவிர அச்செயல் களே அந்த அடியார்கள் செய்யும் வழக்கமென்று கொள்ளுவது பொருந்தாது.

பல இடங்களில் உலக ஒழுக்க வழக்கங்களை நிலை நிறுத்த வேண்டுவதற்காக அவர்கள் சில நியதிகளை மேற் கொள்வதைச் சம்பந்தர் காட்டுகின்றார்.

திருக்கேதாரத்தில் முனிவர்கள் புரோதயத்தில் நீரில் முழுகித் தூய்மை அடைவதையும், நீறு பூசுவதையும் உணவினை நிலத்தில் இட்டு உண்பதையும், இண்டை மாலை கட்டி வழிபடுவதையும், ஊழி ஊழி உணர்வதையும், வேதத்தின் ஒளி சிறந்த பொருள்களால் வழிபடுவதையும் சம்பந்தர் காட்டுகின்றார். அவர்களைத் 'தேறு சிந்தை உடையார்கள்' என்று சம்பந்தர் கூறி வணங்குகிறார் *(1.114.1; 1.114.3; 1.114.5; 1.114.6)*. அவர்கள் பக்தர்களின் அடிப்பட்ட நெறியில் வந்தவர்கள் என்ற கருத்தில ('சிட்டப்பட்டார்' - 3.383.6) என்றும் அடியார்கள் குறிக்கப்படுகிறார்கள்.

சொல்நயம் உடையவர் சுருதிகள் கருதிய தொழிலினர்
பின்னையர் நடுஉணர் பெருமையர் (3.342.6)

என்று அவர்களது சிந்தை ஸ்தூல பஞ்சாக்கரத்தில் நிலைநிற்பது காட்டப்படுகிறது.

சாவாதவர் பிறவாதவர், தவமே மிக உடையார்
மூவாத பல் முனிவர்... (1.12.6)

என்று சம்பந்தர் போற்றுகின்றார். அவர்கள் 'துறவி எனும் உள்ளம் உடையவர்கள்' *(3.331.7)*.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஊனில் உயிர்ப்பை ஒடுக்கி ஒண்சுடர்
ஞான விளக்கினை ஏற்றி நன்புலத்
தேனை வழிதிறந்து ஏத்துவார்... (3.280.3)

என்பதில் சம்பந்தர் முத்தராய் நின்றவர்களின் யோக சாதனையைக் குறிப்பிடுகிறார்.

ஒரு பாடலில் வேறு ஒரு சுவையான செய்தி காணப் படுகிறது. சிவனுக்குரிய சில சின்னங்கள் அடியவர்களுக்கும் உரியவையாய் இருப்பதைச் சம்பந்தர் காட்டுகின்றார்:

கலைஇலங் கும்மழு கட்டங்கம் கண்டிகை குண்டலம்
விலைஇலங் கும்மணி மாடத்தர் வீழி மிழலையார்
தலைஇலங் கும்பிறை தாழ்வடம் சூலம் தமருகம்
அலைஇலங் கும்புனல் ஏற்றவர்க் கும்அடி யார்க்குமே (3.267.4)

மழு, கட்டங்கம், கண்டிகை, குண்டலம், பிறை, தாழ்வடம், சூலம், தமருகம், புனல் (கங்கை) ஆகிய சின்னங்க்ள் வீழிமிழலைப் பெருமானுக்கும் அவனுடைய அடியவர்களுக்கும் ஒன்றாகவே அமைந்துள்ளனவாம்.

3.3.5. முக்தியில் ஆன்மாக்களின் நிலை

ஆன்மாக்கள் முக்தி நிலையை அடைந்த பிறகு எவ்வாறு அமைகின்றன? சிவஞானபோதம் தன்னுடைய பத்தாவது சூத்திரமாகிய

அவனே தானே யாகிய அன்னெறி
ஏகன்ஆகி இறைபணி நிற்க

என்பதில் இதற்கு விடை கூறுகிறது. விடுதலையுற்ற ஆன்மா அனுபவத்தில் இறைவனோடு ஒன்றி அவனாகவே ஆகி, அவனுடைய ஆணையில் நிற்கிறது. 'ஏகன் ஆகி நிற்றல்' என்பது ஆன்மா தன்னுடைய வாசனா மலத்தையும் கழித்து விடுவதைக் குறிக்கிறது. அதன் விளைவாய் அறிபவன் - அறியப்படும் பொருள் – அறியும் அறிவு ஆகிய மூன்றினுக்கும் இடையே உள்ள வேற்றுமை மறைந்து விடுகிறது. அங்கு இறையை அனுபவிக்கும் ஒன்றுபட்ட அனுபவம் ஒன்றுதான் உள்ளது. இறைவனை அறிவது என்பது இறைவனாய்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆகிவிடுவதுதான். இங்கு இறைவனுடைய அருள்தான் திருவடியாக உருவகிக்கப்படுகிறது. மெய்யுணர்வு வந்து வாய்த்தவுடன் ஆன்மா இறைவனின் அருளில் ஈர்க்கப்பட்டு ஒடுங்கி விடுகிறது. இந்த உணர்வினைத்தான் 'வயஞானம்' என்பார்கள்.

இப்படி 'வயஞானம் வந்தார்' இறைவனிடம் உறுதியாக ஒன்றிவிடுகிறார்கள். அப்பொழுது 'உயர்ஞானம்' வந்து தோன்றுகிறது. 'வயஞானம் வந்தார் மருகல் பெருமான் உயர்ஞானம் உணர்ந்து அடி உள்குதலால்' (2.154.11) என்று சம்பந்தர் உணர்த்துகிறார்.

இறைவனடியை – திருவடியை – அருளை அடைவது என்பதே ஞானம் என்பதாகும். அத்திருவடியில் கிடந்து ஆன்மா இறைவனைத் தொழுது போற்றுகிறது. 'உயர் பதமே, ஞானமாக நின்று ஏத்தவல்லார்' (2.146.5). 'சாய்க்காட்டான் தாள் நிழற்கீழ் ஓங்கினார் ஓங்கினார்' (2.177.5). என்றெல்லாம் சம்பந்தர் பாடல்கள் உணர்த்துகின்றன.

இறைவனது திருவடியில் கிடக்கும் ஆன்மா ஒருபோதும் தன் அடிமை நிலையை மறுப்பதில்லை, 'மறப்பிலா அடிமைக்கண் மனம் வைப்பார்' (3.322.7). இந்த நிலை எதை உணர்த்துகிறது என்றால் பந்தத்திலிருந்து முற்றும் விடுபட்ட ஆன்மா இறைவனுடைய திருவடி நிழலில் கிடந்து அவனோடு ஒன்றிவிட்ட உணர்வுடையதாகிறது. அதனுடைய இச்சை, ஞானம், கிரியை எல்லாம் இறைவனின் திருவுள்ளத் தின் திறத்தாலும் அருளாலும் வயப்பட்டு நின்றுவிடுகின்றன என்பதே.

திருஞானசம்பந்தர் 'தொண்டொடு கூடித் துதைந்து நின்ற தொடர்பைத் தொடர்வோமே' (3.364.6) என்று தொண்டர்களை அழைக்கிறார். மாய காரியமாகிய பந்தங்களில் பட்டு ஆன்மா தன்னை மனமென்றும் உடம் பென்றும் எண்ணித் தடுமாறுகிறது. அத்தகைய குழப்பமான தடுமாற்ற வாழ்க்கை வெறுக்கத்தக்கது; நிலையில்லாதது என்று சம்பந்தர் அறிவுறுத்துகிறார். இறைவனைத் தொழு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வதன்மூலம் உடம்பும் மனமும் ஆன்மிகச் சார்புள்ளவையாக மாறும். சரியை, கிரியை, யோக, ஞானங்களால் ஆன்மா தன் உண்மை நிலையை அறிந்துகொண்டு இறைவனிடம் ஒன்றி நிற்கும் நிலையைப் பெறுகிறது. முடிவில் விடுதலை கிடைக்கிறது. அங்கு இறைவனுடன் ஒன்றி சிவபோகத்தை அனுபவிக்கிறது. அந்த இன்பத்தை நுகர்ந்துகொண்டே அவனுக்கு அடிமைப்பட்டுத் தொண்டு செய்து பெரு நிலையை அடைகிறது.

3.4. இறைவன்

இறைவனை மெய்ப்பொருளாக உணர்வதே ஆன்மா வின் முற்றும் முடிந்த உயர்ந்த குறிக்கோள். சம்பந்தரது பாடல்களில் இந்த மெய்யுணர்வைக் குறித்துச் சொல்லும் செய்திகள் நிறைய உள்ளன. சேக்கிழாரின் புராணப்படி சம்பந்தர் இறைவனைக் கண்டவர்; பிரமபுரக் குளக்கரை யிலும் சரி, திருவாய்மூரிலும் சரி சம்பந்தர் இறைவன்னத் தாம் கண்டதுமல்லாமல் திருநாவுக்கரசடிகள் போன்றவர் களுக்கும் காட்டியிருக்கிறார்.

இங்கு கடவுள் உண்மையை எப்படிக் காட்டுகிறார் சம்பந்தர் என்பதை ஆராய்வதற்கு ஒரு முயற்சி மேற் கொள்ளப்பட்டிருக்கிறது. அன்பே கடவுள் என்பர். ஆனால் கடவுளை உணர்ச்சி அளவில் வைத்துக் காண முற்படுவ தோடு அமைந்துவிட முடியாது. அவருடைய ‘சித்’ என்னும் நிலையையும் ஆராய வேண்டும். அறத்தின் அடிப்படையாகக் கடவுள் விளங்குவதையும் நோக்க வேண்டும். காதல், அழகு என்பவைகளைப் பார்ப்பதற்கு வெறும் வறண்ட அறிவு பயன்படாது. காதலனாகவும் அழகனாகவும் கடவுளை அனுபவிக்கும்பொழுதுதான் அந்த உண்மைநிலை புலப்பட முடியும்.

அகத்துறையில் அமைந்த சம்பந்தரது பாடல்கள் இறைவனுடைய பேரின்ப நிலையை நுகருவதற்குப் பெரிதும் பயன்படக்கூடியவை.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இறைவனுடைய ‘அருள்’ சைவ சமயத்திற்கு அடித் தளமாக – ‘தயாமூல தத்துவ’மாக விளங்குகிறது.[13] சம்பந்தரது பாடல்களில் இறைவனுடைய தடம்பெருங்கருணைபற்றி ஏராளமான குறிப்புகள் உள்ளன.

இறையின் மெய்ப்பொருளைப் பேதமற நுகரும் அனுபவ உணர்வுகள் சம்பந்தரின் பாடல்களில் நிரம்ப உண்டு. ஆனால் சம்பந்தரை ஒரு குறிப்பிட்ட கோட் பாட்டுக்குள்ளோ கொள்கைக்குள்ளோ வைத்துப் பார்ப்ப தற்கு இந்த நூல் முனையவில்லை. ஒன்றுக்கும் மேற்பட்ட கோட்பாட்டைச் சேர்ந்தவர்களுக்குச் சம்பந்தரது பாடல்கள் சிறந்த ஆதாரங்களாக விளங்குகின்றன. அந்த நிலையும் இங்கு காட்டப்பட்டிருக்கிறது. ஏனெனில் சம்பந்தரின் பார்வை இறைவனை எல்லாக் கொள்கைகளுக்கும் இடையே நாடும்படியாக உள்ளது. அது வெறும் சமநோக்கு அன்று; அதற்கும் மேலாக இறைவன் எல்லாவற்றிலும் திகழும் நிலையைச் சம்பந்தர் தன் மெய்யுணர்வால் கண்டு நுகர்ந்திருக்கிறார் என்பதேயாகும்.

3.4.1. அறிவை அறியும் கருவி (அளவை)

அளவை இயலைப் பற்றிப் பேராசிரியர் ஹிரியண்ணா அவர்கள் கூறுவது மிகவும் பயனுள்ளதாக அமைந்துள்ளது.

> எல்லாத் தத்துவ அமைப்புகளும் தங்கள் தங்கள் பொருளைப்பற்றி ஆராய முற்படுவதற்கு முன்னால் உண்மையைப்பற்றிய அறிவு என்ன என்பதைை விவரித்திருக்கிறார்கள்; எது உண்மை என்பதை எப்படி அறிவது என்று வரையறுத்திருக்கிறார்கள். வேறு வகையில் கூறப்போனால் இந்தியத் தத்துவம் தன்னுடைய நிலையைப்பற்றி நன்கு உணரத் தலைப்பட்டிருக்கிறது. தர்க்க சாத்திரம் இந்த நிலையில் இந்தியத் தத்துவத்தின் விளக்கமென ஒரு கிளையாக வெளித்தோன்றி யிருக்கிறது.[14]

பேராசிரியர் தேவசேனாதிபதி சிவாக்ர யோகியின் பாடல் ஒன்றைக் கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகிறார்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தர்க்கத்தின் முக்கியத்துவத்தை இந்தப்பாடல் விளக்குவதைக் காணலாம்.

> இராகம் அறியார் இசைப்பயன் தாமறியார்
> தராதரம் அறியார் சற்காரியம் அறியார்
> ஓரார் அளவை ஒருபயனும் தாமறியார்
> ஆராய்ந்து அளவை அறிந்து கொளிரே

இப்பாட்டின் திரண்டபொருள் இதுதான்: இராகம் என்னவென்று அறியாதவர்கள் இசையின் நேர்த்தியை உணரமாட்டார்கள்; அதுபோல அளவை நூலை நன்கு அறியாதவர்கள் ஒரு நூலின் தன்மையை அறிந்து கொள்ள முடியாது. எனவே ஒவ்வொருவரும் தர்க்கத்தை ஆராய்ந்து கற்க வேண்டும்.[15]

சிவஞான சித்தியாரின் புகழ்மிக்க ஆசிரியர் அருள்நந்தி சிவாசாரியார் தன்னுடைய நூலுக்கு வழங்கிய பாயிரச் செய்யுளில் இறைவனுடைய பாதகமலங்களை மறைகளும், மாலும், அயனும், மனமும், சொல்லும் தர்க்க நூலும்கூட அறிந்துகொள்ள முடியாது என்ற கருத்தில்,

> மறையினால் அயனால் மாலால் மனத்தினால் வாக்கால் மற்றும்
> குறைவிலா அளவினாலும் கூறவொணா தாகிநின்ற
> இறைவனார் கமல பாதம்...

என்று குறிப்பிட்டுள்ளார்.

ஆனால் இறைவனுடைய அருளினால் ஒருவர் மறையினாலும் அளவையாலும்கூட இறைவனை அறிய முடியும் ('அருளினால் ஆகமத்தே அறியலாம்; அளவினாலும் தெருளலாம்') என்று அருளால், அளவையால்கூட அறியலாம் என்று விளக்கியுள்ளார்.[16]

3.4.2. சம்பந்தர் அனுபவித்த இறையருள்

உண்மையை அறிந்துகொள்ள மூன்று சாதனங்கள் உள்ளன; கண்ணால் நேரில் கண்டு தெளிதல் (பிரத்யட்சம் அல்லது காட்சி), அனுமானத்தால் உணர்தல், சப்தம் என்னும் ஒலி வடிவத்தால் உணர்தல் என்பவை அவை. ஆனால்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

காட்சியால் இறைவனையோ, ஆன்மாவையோ, பாசத்தையோ நேரில் காண இயலாது. முன்பே குறிப்பிட்டப்படிச் செவிவழிச் செய்தியாலும் சேக்கிழார் வாக்காலும் சம்பந்தர் இறைவனைக் கண்டிருக்கிறார் அதுமட்டுமல்ல மற்றவர்களுக்கும் காட்டியிருக்கிறார் என்று அறிகிறோம். சீர்காழியில் ஞானப்பாலுண்டு திருஞானம் பெற்றபிறகு சிவபாத இருதயருக்குச் சம்பந்தர் 'தோடுடைய செவியன்...' முதலிய அடையாளங்களைச் சொல்லி இறைவனைக் காட்டினார்; 'என்னை இது செய்தவன் இவன்' என்று காட்டினார். ஆனால் சிவபாத இருதயர் காணவில்லை; என்றாலும் வெருண்டு மருண்டார். ஓரளவிற்கு நடந்ததைப் புரிந்து கொண்டார்.

இரண்டாவது நிகழ்ச்சியாக அமைவது திருவாய்மூரில். அங்கு இறைவனின் நடனக் காட்சியைக் கண்ட சம்பந்தர் அதனை நாவுக்கரசருக்கும் காட்டினார் என்று சேக்கிழார் கூறுகிறார். இந்த இரு நிகழ்ச்சிகளும் சம்பந்தர் நேராகக் கடவுளைக் கண்ட செய்தியை உலகிற்கு எடுத்துரைக்கின்றன.

சம்பந்தர் தம் பாடல்களில் தாம் இறை அனுபவத்தைப் பெற்ற குறிப்புகளைக் காட்டியிருக்கிறார். கனவிலும் நனவிலும் இறை அனுபவம் அவருக்கு வாய்த்திருக்கிறது. தன்னுடைய அனுபவத்தை வெளிப்படுத்த அவர் புராணங்களின் மொழியைப் பயன்படுத்துகிறார். சொல்லுக்கு அடங்காத ஒன்றைச் சொல்லிப் புரிய வைப்பதற்காக அவர் கையாளும் உத்தி புராணச் செய்திகளேதாம். 'சொல் தெரியாப் பொருள் சோதிக்கு அப்பால் நின்ற சோதி' என்று விளங்கும் மெய்ப்பொருளை விரிசடையும் முக்கண்ணும் போன்ற அடையாளங்களால் அவர் விளங்க வைக்கிறார் என்றே சொல்ல வேண்டும்.

சில சமயங்களில் இறை அருள் அவருக்கு ஒளிமயமாக வந்து உணர்த்தியிருக்கிறது. அந்த ஒளியை அவர் நனவிலும் கனவிலும் கண்டு திளைத்திருக்கிறார். இதனை அவர்

நனவிலும் கனவிலும் நாளும் தன்ஒளி
நினைவிலும் எனக்குவந்து எய்தும் நிர்மலன் (3.279.1)

என்றும்,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

துஞ்ச வருவாரும் தொழுவிப்பாரும் வழுவிப்போய்
நெஞ்சம் புகுந்து என்னை நினைவிப்பாரும்... (1.45.1)

என்று பாடிக் குறித்துள்ளார். இங்கு 'ஒளி,' 'நினைவு' என்றெல்லாம் வருபவை அவருடைய சிவத்தில் ஊன்றி நின்ற சிந்தனையைக் குறிப்பவை.

இறை அருள் எங்கும் நிலவி எல்லாவற்றையும் இயக்குகிறது என்பதைச் சம்பந்தர் பாடல்கள் நமக்கு ஆழமாக உணர்த்துகின்றன. கடவுளின் உண்மையை அதாவது கடவுள் உள்ளான் என்னும் உண்மையை அவர் பல அருள் வெளிப்பாடுகளின் மூலமாகக் காட்டுகின்றார். அந்த அருள் வெளிப்பாடுகள் மாயாஜால வித்தைகள் இல்லை. அவை ஆண்டவனின் எல்லையில்லாத கருணையின் திருமுகங்கள். இறைவனை வேண்டி 'வாசி தீரவே காசு நல்குவீர்' (1.92.1) என்று வீழிமிழலையில் வேண்டிப் பொற்காசு பெற்றதும், திருமறைக்காட்டில் 'கதவம் திருக்காப்புக் கொள்ளும் கருத்தாலே' (2.173.1) என்று பாடித் திறந்த கதவை அடைக்கச் செய்ததும், சமணர் இட்ட தீ 'பையவே சென்று பாண்டியர்க்கு ஆகவே!' என்று சொல்லி, 'அப்பன் ஆலவாய் ஆதி அருளினால் வெப்பம் தென்னவன் மேல் உற'ச் செய்ததும் (3.309.11); அவன் நோய் தீர்த்ததும் ('தென்னவன் உடல் உற்ற தீப்பிணியாயின தீர' (2.202.11), திருவாவடுதுறையில் பொற்கிழி பெற்றதும், 'செல்லவுந்துக' (3.264.1–10) என்று பாடிக் கொள்ளம்புதூரில் தோணியை ஆற்றில் செலுத்தியதும் மதுரை மன்னனது அவையில் 'போகமார்த்த பூண்முலையாள்' என்று தொடங்கும் பதிக ஏட்டை எரியில் இட்டும் அது பச்சைப்பதிகமாக விளங்கியதும் ஆகிய பல நிகழ்ச்சிகள் இறைவனுடைய அருளின் வெளிப்பாடுகளே என்று சம்பந்தர் திண்ணமாகச் சாற்றுகின்றார்.

இவை எல்லாவற்றிற்கும் சிகரம் வைத்ததுபோல இறைவன் அருளைக் காட்சி அளவையில் பிரத்தியட்சமாகக் காட்டுகின்ற நிகழ்ச்சி சம்பந்தரது வாழ்வில் ஏற்பட்டது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மதுரையில் வைகை ஆற்றில் 'வாழ்க அந்தணர்' என்று தொடங்கும் திருப்பாசுர ஏடு வெள்ளத்தை எதிர்த்து நின்று பின் திருவேடகத்தலக்கரையில் ஏறி அமர்ந்த செயல் கண்கூடாக இறையருளைக் காட்டிவிட்டதன்றோ? இவ்வாறு எந்தவித ஆதாரமுமின்றி ஏடு ஆற்றில் எதிர் ஊர்ந்து வந்த செயலைப் பார்த்தால், அது விடையேறி வருபவன்தான் பெருமான் - பரம்பொருள் என்பது தெளிவாகிறதல்லவா' என்ற கருத்தில்

... ஓலை தெண்ணீர்ப்
பற்றின்றிப் பாங்குஎதிர்வின் ஊரவும் பண்பு நோக்கில்
பெற்றொன்று உயர்த்த பெருமான் பெருமானும் அன்றே
(3.312.11)

என்று சம்பந்தர் வியந்து வினவுகிறார்.

இறைவனது அருளின் மெய்த்தன்மையை இவ்வாறெல்லாம் சம்பந்தர் வெளிப்படுத்திக் காட்டியுள்ளார்.

அன்பு ஒன்றினால் மட்டுமே இறைவனை அறிந்து கொள்ள முடியும் என்பது சம்பந்தரின் கொள்கை. அவரது திருவுள்ளத்தை நன்கு அறிந்து கொண்ட சேக்கிழார் 'ஞானம் ஈசன்பால் அன்பே' என்று திருஞானசம்பந்த நாயனார் புராணத்தில் (843) எடுத்துரைக்கின்றார். அன்பை விட்டு விட்டு மற்ற வழிகளில் இறைவனைத் தேடினால் முழுமையான வெற்றி கிடைத்துவிடாது.

பணிவாயுள்ள நன்கெழு நாவின் பத்தர்கள் பத்திமை
செய்யத்
துணியார்; தங்கள் உள்ளமிலாத சுமடர்கள் சோதிப்பு
அரியார் (1.42.5)

பணிந்து நாவினால் பரவும் பக்தர்கள் அன்பு செய்யும் பொழுது அவர்களை விட்டுப் பிரியமாட்டார் இறைவர். ஆனால் உள்ளத்தில் அன்பில்லாதவர்களைத் தம்மை அறிய எப்படிச் சோதித்துப் பார்த்து முயன்றாலும் அவர்களுக்கு அறிய அரியவர் என்று சம்பந்தர் குறிப்பிடுகிறார்.

தன் திருவடியை நினைந்து நாடுபவர்களுக்கு உரியவனாகத் திகழ்பவன் இறைவன். இதனைக் 'கழல் சேர்வார்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நன்று நினைந்து நாடற்கு உரியார்' (1.68.5) என்று உணர்த்துகிறார் சம்பந்தர்.

அவரது பாடல்கள் ஒன்றை நன்றாக வலியுறுத்தி உணர்த்துகின்றன. அதாவது இறைவனைப் பாச, பசு ஞானங்களாலும் அகந்தையாலும் அடைந்துவிட முடியாது. சம்பந்தர் பதிகம் ஒவ்வொன்றிலும் பெரும்பான்மையாக ஒன்பதாவது பாடல் அயனும் மாலும் தேடி முயன்றும் காணற்கரியவன் இறைவன் என்பதையே வலியுறுத்திக் கூறுவதைப் பார்க்கின்றோம். ஆனால் தன்னை அன்பால் நினைந்து உருகுபவரது மனத்தில் எளிதாக வந்து தோன்றுகிறான் என்பதை 'நெடியான் பிரமன் நேடிக்காணார்; நினைப்பார் மனத்தார்' (1.71.9) என்று கூறுகிறார்.

இறைவன் இருக்கிறானா இல்லையா என்று தர்க்கவாதம் பேசித் தருக்கித் திரிபவர்களைப் பார்த்து,

> பேச்சினால் உமக்கு ஆவதுஎன் பேதைகாள் பேணுமின்
> வாச்ச மாளிகை சூழ்மழ பாடியை வாழ்த்துமே (2.145.2)

வெறும் பேச்சில் பயனில்லை. மழபாடியை வந்து தொழுது 'ஈடேறுங்கள்' என்று அழைக்கின்றார் சம்பந்தர்.

அதுபோல் வேத புராண நூல்களைப் படிப்பதால் மட்டிலும் இறைவனைக் கண்டு தெளிய முடியாது. 'ஓதியாரும் உணர்வாரிலை' (2.142.7). நூல்களினால் பெறுகின்ற அறிவு பாசஞானத்தைத்தான் தரும்.[17] ஈசனது அன்பில் தோய்ந்து அடையும் அனுபவத்தை விட்டு நூலறிவால் பெறும் அறிவினால் பெரும் பயன் ஏற்படுவதில்லை. ஆனால் நூல்களை 'ஓதி யாரும் அறிவாரிலை' என்று சொன்ன சம்பந்தர், 'ஓதி நன்கு உணர்வார்க்கு உணர்வுடை ஒருவன்' (1.41.6) என்றும் கூறுகிறார். 'கற்ற கேள்வி ஞானமான காரணம்' (1.51.7) இறைவனே.

3.4.3. திருப்பாசுரம் (3.312)

'வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்' என்று தொடங்கும் இந்தப் பதிகம் சைவர்களால் தொழுது பயிலப்படும் பதிகம். திருஞானசம்பந்தரின் மெய்ஞ்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஞானத்தின் பிழிவுதான் இந்தப் பாசுரம் என்பார்கள். சேக்கிழார் இருபத்திரண்டு பாடல்களில் இதன் மெய்ப் பொருளை விளக்குகிறார். இதனை 'மெய்ப்பாசுரம்' என்றே பெருமையுடன் பேசும் சேக்கிழார் இதனது அகலத்தை, ஆழத்தைத் தன்னால் முற்றிலும் முழுவதுமாக .உணர்ந்து சொல்ல .முடியவில்லை என்பதை, 'மெய்ப்பாசுரத்தைக் குறியேறிய எல்லை அறிந்து கும்பிட்டேன் அல்லேன்' என்று தம் புராணத்தில் (845) குறிப்பிட்டுள்ளார்.

இந்தப் பாசுரம் சொன்ன இடம் மதுரையில் வைகைக் கரையினிலே; சொன்ன குருநாதராகத் திகழ்பவர் திருஞான சம்பந்தர். அவருடைய உபதேசத்தைக் கேட்டுத் தெளிந்தவன் தென்னவன் பாண்டிய மன்னன். சகலாகம பண்டிதரான அருள் நந்தி சிவாசாரியார், திருப்பாசுரத்தை 'மெய்ஞ்ஞானம்' என்றே போற்றுகிறார்; ('மன்ற பாண்டியன் கேட்பக் கிளக்கும் மெய்ஞ்ஞானம்' – இருபா இருபஃது 2–11; 32–33).

திருப்பாசுரத்தில் பன்னிரண்டு பாடல்கள் உள்ளன. மெய்கண்ட தேவரின் சிவஞானபோதத்தின் பன்னிரண்டு சூத்திரங்களுக்கு இவை அடித்தளமாக அமைந்துள்ளன என்பார்கள். இப்பாசுரச் செய்தியைச் சுருக்கமாகக் காண் போம். சேக்கிழார் அருளிய விரிவுரை இங்கு துணையாக வந்து வழிகாட்டுகிறது.

முதல் பாடல்: கடவுள் வாழ்த்தாகவும், திருக்கடைக் காப்புப் போன்ற மங்கல வாழ்த்தாகவும் அமைந்துள்ளது.

வாழ்கஅந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல் லாம்அரன் நாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே (1)

'அந்தணர்களும் வானவரும் பசுக்களும் வாழ்க; குளிர்ந்த வான்மழை வீழ்ந்து பொழிக; வேந்தனும் எல்லா வகையிலும் ஓங்கி வளர்க; தீமையானவை யெல்லாம் மேல் எழுந்துவிடாமல் அழுந்தி மூழ்க; எல்லா ஆன்மாக்களும் அரனது நாமத்தையே ஓதித் தெளிக; உலகத்து உயிரினங் களெல்லாம் துயர் தீர்க' என்பது பாட்டின் திரண்ட பொருள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உலகமும் உலகத்து உயிர்களும் துயர் நீங்கி மகிழ்ந்து வாழ்வதற்கு அந்தணரும், வானவரும் ஆனினமும் வேத வேள்வியில் ஈடுபட்டு உறுதுணை ஆற்றுபவர்கள் எனவே சம்பந்தர் முதலில் அவர்களை எடுத்துப் பாடுகிறார். வான்மழை பொழிவது வேள்விப் பயன்; அரனை நீராட்டி வழிபாடு செய்யவும் உலக உயிர்களுக்கு வாழ்வும் வளமும் அளிக்கவும் தீம்புனல் பயன்படுகிறது. வேந்தன் உலகில் நல்லவற்றைக் காத்து, வேள்வி முதலானவற்றை ஆதரித்துப் பாதுகாப்பவன். இந்த நன்மைகள் யாவையும் எதிர்த்து அழிக்க முற்படுபவையெல்லாம் தீயவை. அவை ஆற்றல் மிகுந்து தலையெடுத்துவிடாமல் ஆழ்ந்து அடங்கிப் போக வேண்டும். உயிர்கள் அனைத்தும் உய்ந்து வாழ்வதற்கும், கடைத்தேறுவதற்கும் அரனது நாமத்தை ஆழ்ந்து சிந்தித்து ஓத வேண்டும். ஏனென்றால் அவன் அரன் (ஹரன்); மகாசங்கார மூர்த்தி. அவனிடம்தான் எல்லா மாயாகாரியங்களும் சென்று ஒடுங்குகின்றன; நிலைபெறுகின்றன; மீண்டும் தோன்றி வருகின்றன. எனவே அவனே ஆதி; அவனே அந்தம்; அவனே பூரணமான முழுமுதற்பொருள்.

ஆன்மாக்களை வருத்தும் 'துயர்' என்பது 'மலம்'தான். அது அகன்றால் எல்லோரும் விடுதலையுற்றுப் பேரின்பத்தை அனுபவிக்கலாம்.

இந்தப் பாடலில் திருஞானசம்பந்தர் கூறும் உண்மைகள்: 1) அரனே முழுமுதற்பொருள். 2) ஆன்மாக்கள் உடலோடு பிணிபட்டு இருக்கும் நிலையில் பல்லுயிராய் இருக்கின்றன. 3) அவற்றைத் 'துயர்' என்ற இருண்ட மலம் அணுவாகக் குறைத்துப் பிறப்பு இறப்பு என்னும் சுழற்சியில் சிக்க வைத்து வருத்துகிறது. 4) அரனது நாமத்தைச் சிந்தித்து ஓதி ஆன்மாக்கள் ஈடேறலாம்.

இரண்டாவது பாடல்:

அரிய காட்சிய ராய்த்தமது அங்கைசேர்
எரியர் ஏறுஉகந்து ஏறுவர் கண்டமும்
கரியர் காடுஉறை வாழ்க்கையர் ஆயினும்
பெரியர் ஆரறி வார்அவர் பெற்றியே. (2)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இந்தப் பாடல் இறைவனுடைய இலக்கணங்களை உணர்த்துகிறது: 'ஆதியாகிய அவரை அறிவது அரிது. தம் உள்ளங்கையில் அனல் ஏந்தியிருக்கிறார்; ஏறு என்னும் காளையை விரும்பித் தன் ஊர்தியாகக் கொண்டுள்ளார்; கண்டமும் கருத்துள்ளது; ஈமச் சுடுகாட்டில் வாழ்பவர்; இருப்பினும் அவர் பெரியவர்; அவரது பெருமையெல்லாம் அறிந்தவர் உண்டோ?'

சிவபெருமானின் ஆழ்ந்து நின்ற அகலத்தை வெறும் பாசஞானத்தாலும் பசுஞானத்தாலும் அறிந்துகொள்ள முடியாது. ('சிறியவர் சிந்தை செய்ய அரியவன்' – 1.113.9). ஆனால் பதிஞானம் பெற்றுள்ள அன்புமிக்க அடியார்களைத் தம்மை அறிந்துகொள்வதற்கு இறைவன் வழிகாட்டுகிறான். ஏறு உகந்து, எரி ஏந்தி நிற்கும் அவனது அடையாளங்களுடன் அவர்களால் அறிந்துகொள்ள இயலும்.

ஆனால் இறைவன் முழுமுதல்பொருள். அவனைத் தர்க்க நூல்களாலும் அளவைகளாலும் அறிந்துகொள்ள முடியும் என்றால் முழுமுதற்பொருள் ஓர் அசத்தாகக் குறைவுபட்டு விடுமல்லவா? ஆனால் அப்பொருளை அறியவே முடியாது என்றால் அது ஓர் இல்பொருளாகி விடும் – முயல் கொம்பினைப் போல என்பார்கள்.

இருப்பினும் அரனோ ஒரு சத்துப்பொருள். அவனை பாச, பசுஞானங்களால் ஒரு சாதாரணப் பொருளை அறிவது போல அறிய முடியாது. இறைவனுடைய அருளால் ஞான முற்றவர்கள் அவனை அறிந்துகொண்டு, தங்கள் அன்பின் துணை கொண்டு, நெருங்கி உணர முடியும். அதனால் சம்பந்தர் 'காட்சி அரியர்' என்று சொல்லாமல் 'அரிய காட்சியர்' என்று குறிப்பிடுகிறார். சிவனருளால் ஞானமுற்ற வர்களுக்கு அவன் தன்னுடைய நல் அடையாளங்களுடன் தோன்றுகிறான். சேக்கிழார் அந்த அடையாளங்களை, 'உண்மையாம் பெரிய நல் அடையாளங்கள்' என்று குறிப்பிடுகிறார் (828). ஏனெனில் அந்த அடையாளங்கள் சில உண்மைகளை உணர்த்துகின்றன. கையில் ஏந்திய தீயும், வாழும் சுடுகாடும் அரனைச் சங்கார மூர்த்தியாகக் காட்டு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கின்றன. ஏறு - காளை, மெய்யுணர்ந்த ஞானிகளைக் குறிக்கின்றது. கருங்கண்டம் அவனது எல்லையற்ற கருணையையும் தியாகத்தையும் உணர்த்துகிறது.

இருப்பினும் இவற்றோடு கூடிய அரனை இவ்வாறு சிந்திப்பது அவனுடைய முழுமுதல் தன்மையை, பரத்வத்தைக் குறைத்துப் பேசுவதாக ஆகிவிடாதோ என்றால் அப்படியில்லை. இறைவன் தன்னுடைய அளக்கலாகாத கருணையினால் உயிர்களைச் சம்சாரச் சுழற்சியிலிருந்து விடுவிப்பதற்காகவே இந்த 'நல்' அடையாளங்களுடன் இறங்கி வந்து காட்சியளிக்கிறான்.[18]

அரனின் பெருமையை அளந்து அடக்கமுடியாது. அவன் அண்டமெலாம் விரிந்து விரிந்து அப்பாலுக்கு அப்பாலாய் வியாபித்து நிற்பவன் 'உம்பராலும், உலகின்னவராலும், தம் பெருமை அளத்தற்கு அரியான்' (1.29.5). 'உரை அரும் உருவினார் உணர்வரும் வகையினார்' (1.122.5) என்று அறிவார் அளப்பார் யாருமில்லாத ஒருவன். பல்லவனேச்சரப் பதிகத்தில் 'இவர் தன்மை அறிவார் யார்' (3.370.1-10) என்று வினவுகிறார் சம்பந்தர்.

மூன்றாவது பாடல்:

வெந்த சாம்பல் விரைஎனப் பூசியே
தந்தை யாரொடு தாயிலர் தம்மையே
சிந்தியா எழுவார்வினை தீர்ப்பரால்
எந்தை யாரவர் எவ்வகையார் கொலோ (3)

இப்பாடலின் திரண்ட பொருள்:

அரன் வெந்த சாம்பலை வாசனைப் பொருளாகத் தன் திருமேனியெல்லாம் பூசிக்கொள்கிறான்; தந்தையும் தாயுமற்றவன்; தன்னையே சிந்தித்து எழும் அடியார்களின் கர்ம வினைகளைத் தீர்ப்பவன்; அவனே நம் தந்தை; ஆனால் அவர் எந்த வகையினர்?

எல்லாத் தத்துவங்களும் மகாசங்கார காலத்தில் ஒன்றொன்றாக அவனுள் ஒடுங்கிவிடுகின்றன; மேலும் குறைக்க முடியாத சாம்பலாகச் சுட்டெரிக்கப்படுகின்றன. அச்சாம்பல் இருக்கவும் இடமில்லை. அத்தருணத்தில்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அச்சாம்பலைத் தன் மேனியில் பூசிக்கொள்கிறான். அதாவது அவன் ஒருவனே நிற்கிறான்; மற்றவர்களும் மற்றவைகளும் அவனையே தாம் தங்கும் இடமாகக்கொண்டு அவன் மேனியிலே அமைந்து விடுகின்றன. சிவபெருமானே முழுமுதற் பொருள்; அவனே அந்தம். அவனிடமிருந்துதான் எல்லாம் நிலைபெற்று, வெளிவந்து ஒடுங்குகின்றன. அவனை அன்றி அவனுக்கு முன்னால், அப்பால் ஏதுமில்லை. அவனே தனிப்பொருளாக நின்று திகழ்கிறான். அதனால்தான் அவன் தந்தையும் தாயுமில்லாதவன் என்று வருணிக்கப்படுகிறான்.

அவனே முழுமுதற்பொருள். அவனே 'சோதியுள் சோதியாக' விளங்குபவன். இதனை உணர்பவர்கள் இருவினைப் பயன்களையும் மலத்தையும் நீங்கி அவனது கருணையால் வாழ்வர். சொல்தெரியாத பொருளாகிய அவனை யார் 'இது' என்று சொல்லி விவரிக்க முடியும்? ஏனென்றால் மொழி ஒரு சடப்பொருளைத்தான் விவரிக்கும் வன்மை பெற்றது.

நான்காவது பாடல்:

ஆட்பா லவர்க்கருளும் வண்ணமும் ஆதி மாண்பும்
கேட்பான் புகில்அள வில்லை கிளக்க வேண்டா
கோட்பா லனவும் வினையும் குறுகாமை எந்தை
தாட்பால் வணங்கித் தலைநின்று இவைகேட்க தக்கார் (4)

இப்பாடலின் திரண்ட பொருள்:

யாராகிலும் இறைவன் தன் அடியார்களுக்கு அருள்புரியும் தன்மைகளையும், ஆதியாகிய அவனுடைய பெருமைகளையும் ஆராயப்புகுந்தால் அவைகளுக்கு அளவில்லை; அந்த ஆராய்ச்சியும் அதன் விளக்கங்களும் வேண்டாம் (பயனற்றவை). எம் தந்தையாகிய அவனுடைய பாதங்களை வணங்கி அவனது அருளின் வழியிலே நின்றால் தக்க பக்குவமுற்ற சான்றோர்களுக்கு மலங்களாலும் வினைகளாலும் விளையும் தீமைகள் வந்து சேரா. தக்கோர் இவ்வாறு கேட்டுத் தெளிக.

வைணவர்கள் ஆன்மாக்களை **சேஷம்** என்றும் ஆண்டவனை **சேஷி** என்றும் கருதுகிறார்கள். சைவர்கள்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆன்மாவை இறைவனுடைய ஆள் – தொண்டன் என்றும் இறைவனை ஆண்டான் என்றும் வைத்துத் தங்கள் பக்தியைப் புலப்படுத்துகிறார்கள். இந்தத் தொடர்பு என்றும் நிலைத் திருப்பது. 'என்று நீ அன்று நான்; உன் அடிமை அல்லவோ' எனத் தாயுமானவர் கூறுவதைப் பார்க்கின்றோம்.

அடியார்களை ஆள்வதில் அவர்களுக்கு அருள் பாலிப்பதில் இறைவனுடைய சித்தமும் அருள் செயல்களும் எண்ணிக் கணக்கிட முடியாதவை. இதைச் சம்பந்தர் 'தொண்டொடு கூடித் துதைந்து நின்ற தொடர்பு' (3.364.6) என்கிறார். 'தொண்டு அலால் துணையுமில்லை' (4.40.4) என்பார் அப்பர் பெருமான். யாராலும் அவனது அருட் செயல்களை அலசிப் பார்த்து ஆராய்ச்சி வரையறைக்குள் கொண்டுவர முடியாது. ஏனென்றால் அவ்வாறு ஆராய்வது 'தற்போதத்தின்' உந்தலால்தான். ஆனால் எல்லை நீத்த அன்பினால், தற்போதத்தை நீக்கி அவனது பாதத்தில் சரண் அடைந்து நின்றால் மலமும் அதன் வாசனையும், அவற்றோடு தொடர்புடைய பல்வேறு வினைகளும் ஆன்மாவைப் பற்றிக்கொள்ளாது விலகும்.

ஐந்தாவது பாடல்:

ஏதுக்க ளாலும் எடுத்த மொழியாலும் மிக்குச்
சோதிக்க வேண்டா சுடர்விட்டுளன் எங்கள் சோதி
மாதுக்கம் நீங்கல் உறுவீர் மனம்பற்றி வாழ்மின்
சாதுக்கள் மிக்கீர்இறையே வந்து சார்மின்களே (5)

காரண காரியத் தொடர்பை வைத்துக்கொண்டு ஆராய்கிறவாதம் நல்லதுதான். அதோடு ஞானிகள் கூறுகின்ற திருமறைச் சொற்கள் அதற்குத் துணையாக அமைந்திருந்தால் அதுமேலும் சிறந்தது.

பேருலகம் (பிரபஞ்சம்) பல்பகுதிகளால் ஆனது; அதனால் அது ஒரு காரியப் பொருளாகத்தான் இருக்க முடியும். எனவே அதற்கு ஒரு காரணமும் வேண்டும். அந்தக் காரணம்தான் கடவுள். மேலும் பேருலகம் சித்துப் பொருளில்லை; அதாவது தானே அறிந்துகொள்ளும் தன்மை உடையது அல்ல. அதற்கு அறிவூட்டும் ஒரு சித்துப்பொருள்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உண்டு. அதுதான் இறைவன். இவையெல்லாம் கடவுளின் உண்மையை விளக்கிவிடலாம். ஆனால் அது போதுமா? போதாது. அது கடவுளை அனுபவிக்கும் உணர்விற்குக் கொண்டு செல்லாது. கடவுளை அனுபவ உணர்வால்தான் அறிய முடியும்.

அதனால் திருஞானசம்பந்தர் ஆன்மிகத் துறையில் முயலும் சாதுக்களை அழைக்கிறார், 'சாதுக்கள் மிக்கீர்' என்று. எதற்கென்றால் காரணகாரியத் தொடர்பு வாதமான (ஹேது) ஏதுக்களாலும், அவற்றோடு இணைந்து செல்லும் ஒப்புமை மொழிகளாலும் இறைவனைச் சோதித்து ஆராய்ந்தால் ஓரளவுதான் பயன் கிடைக்கும். அதற்குமேல் இல்லை. அதனால்தான் 'மிக்குச் சோதிக்க வேண்டா' என்று கேட்டுக் கொள்கிறார். இறைவனின் அன்பிலே, திருவருள் நிழலிலே தோய்ந்து ஊன்றி நின்றால் சோதிமயமான அவன் அவர்கள் உள்ளங்களிலே சுடர்விட்டுப் பிரகாசிப்பான். அதுதான் அவனது அனுபவத்தைச் சுவைக்கும் வழி.

ஆன்மாக்களுக்கு மிகுந்த துன்பமும் துயரும் கொடுப்பது மலம். அது 'மாதுக்கம்' என்று குறிக்கப்படுகிறது. அது ஆன்மா தன்னை அறிந்துகொள்ள, இறைவனை நெருங்கி ஒன்றிவிடத் தடையாக இருக்கிறது. அதனால் பிறப்பு-இறப்புச் சுழற்சியில் ஆன்மா சிக்கித் தவிக்கிறது.

எனவே மலம் அகற்றப்பட வேண்டும். அது அகன்றால் ஆன்மா தன்னை அறியவும் இறைவனோடு தான் பிரிக்க முடியாத தொடர்பு கொண்டிருப்பதையும் உணர முடியும். அப்பொழுது ஆன்மா சிவபோகத்தை அனுபவிக்கும். இறை அருள் அதற்குத் துணை புரியும்.

மலத்தைத் தவிர்க்க முயலும் நல்லவர்களை, சாதுக்களை அழைக்கிறார் சம்பந்தர். அவர்கள் சிவயோகத்தில் இறைவனுடன் ஒன்றி அந்த இன்பத்தில் ஊன்றிச் சுவைத்தால் அவர்கள் சிவோகம்பாவனை என்ற பேருணர்வை அடைவார்கள். அதுதான் 'மனம் பற்றி வாழ்த'லாகும். அப்பொழுதுதான் அவர்களது 'மாதுக்கம்' நீங்கும். சாதுக்கள் தங்கள் செயல், அறிவு, இச்சை முதலியவைகளை இறைவ

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

னிடத்தே சமர்ப்பித்துவிட்டு அவன் அருள் இன்பத்தில் தோயவேண்டும்.

(திருப்பாசுரத்தின் இந்த முதல் ஐந்து பாடல்களும் வேதங்கள், சிவஞானம் முதலியவற்றின் முடிவுகளின் அடிப்படையில் அமைந்துள்ளன என்றும் அடுத்துவரும் ஐந்து பாடல்கள் மகாபுராணங்களில் நிறுவப்பட்ட உண்மை களைப் பற்றி அமைந்துள்ளன என்றும் C.K. சுப்பிரமணிய முதலியார் தமது பெரியபுராணப் பதிப்பில் (பக்.1019) கூறுகிறார்).

ஆறாவது பாடல்:

ஆடும் எனவும் அருங்கூற்றம் உதைத்து வேதம்
பாடும் எனவும் புகழ்அல்லது பாவம்நீங்கக்
கேடும் பிறப்பும் அறுக்கும் எனக்கேட்டீ ராகில்
நாடும் திறத்தார்க்கு அருள்அல்லது நாட்ட லாமே (6)

இறைவன் ஆடுகிறான். வெல்வதற்கு அரிய கூற்று வனைத் தன் காலால் உதைத்தழிக்கிறான்; வேதங்களைப் பாடி மகிழ்கிறான்.

ஆடுவது அவன் ஐந்தொழில் புரிவதற்கு; வேதம் பாடுவது உலகத்து உயிர்கள் அறவழியில் நடந்து உய்வதற்காக. கூற்றுவனை உதைத்து மார்க்கண்டேயனைக் காப்பது அவன் காலகாலன் என்பதை உணர்த்துவதற்கு. இவையெல்லாம் அவன் ஏன் செய்கிறான் என்ற வாதம் எழுகிறது. தன் புகழ் கருதியோ அல்லது உயிர்களைக் காக்க வேண்டும் என்ற கருணைக்காகவா என்றால் திருஞானசம்பந்தர் அவனுடைய அளப்பரும் கருணைதான் – அருள்தான் காரணம் என்று உறுதிபடச் சொல்கிறார். 'நாடும் திறத்தார்க்கு அருள் அல்லது நாட்டலாமே?' என்று வினவுகிறார்.

ஏழாவது பாடல்:

கடிசேர்ந்த போது மலரான கைக்கொண்டு நல்ல
படிசேர்ந்த பால்கொண்டுஅங்கு ஆட்டிடத் தாதை பண்டு
முடிசேர்ந்த காலைஅற வெட்டிட முக்கண் மூர்த்தி
அடிசேர்ந்த வண்ணம் அறிவார் சொலக்கேட்டு மன்றே (7)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இந்தப் பாடல் சண்டீசரின் வரலாற்றைக் கூறுகிறது. திருச்சேய்ஞ்ஞலூரில் சண்டீசர் என்னும் இறையருள் பிள்ளை சிவபெருமானுக்குப் பால் அபிடேகம் செய்து கொண்டிருந்த பொழுது அந்தச் சட்டியை அவரது தந்தையார் உதைத்துத் தள்ளிச் சிவநிந்தனை புரிந்துவிட்டார் என்று அவரது காலை வெட்டிவிட்டார். இது ஒரு பாபச் செயலாகக் கருதப்படவில்லை. சிவநிந்தனை புரிந்தது தன் தந்தையே ஆனாலும் அதனைப் பொறுக்கமாட்டாதுதான் சண்டீசர் தந்தையின் காலை வெட்டிவிட்டார்.

இறைவன் அவருடைய சிவ ஆராதனை நாட்டத்தை எண்ணி மகிழ்ந்து தன்னை அடையும் வரம் கொடுத்தார். தான் சூடிய மாலையையும் அவருக்கு அணிவித்தார். இந்த வரலாற்றினைச் சம்பந்தர் பல அறிஞர்கள் கூறக் கேட்டிருக்கிறார். ("அறிவார் சொலக் கேட்டுமன்றே").

எட்டாவது பாடல்:

வேத முதல்வன் முதலாக விளங்கி வையம்
ஏதப் படாமை உலகத்தவர் ஏத்தல் செய்யப்
பூத முதல்வன் முதலே முதலாப் பொலிந்த
சூதன் ஒலிமாலை யென்றே கலிக்கோவை சொல்லே (8)

சிவபெருமானே வேதங்கள் 'நாதா' என்று போற்றிப் பரவும் முதல்வன். பூதங்களால் ஆகிநின்ற இப்பேருலகம் அத்தனைக்கும் அவனே முதல்வன் - தலைவன். அவனே உலகைக் காத்தளிக்கின்றான். அவனையே உலகோர் ஏத்திப் புகழ்கின்றனர். உலகில் பதினெட்டுப் புராணங்கள் உள்ளன. அவைகள் சிவபெருமானின் பரத்துவத்தை, மாண்பினைப் போற்றுகின்றன. இறைவனிடம் மாளாக் காதல் கொண்டுள்ள பக்தர்கள் இப்புராணங்களைக் கற்று, பிறப்பு-இறப்பு வாதனையிலிருந்து மீண்டு உய்ந்து, போகுமாறு சம்பந்தர் அழைக்கிறார். இதனால் சப்தப் பிரமாணத்தைச் சம்பந்தர் ஏற்றுக்கொள்வதை அறிகிறோம்.

ஒன்பதாம் பாடல்:

பாராழி வட்டம் பகையால் நலிந்துஆட்ட ஆடி
பேராழி யானதுஇடர் கண்டுஅருள் செய்தல் பேணி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நீராழி விட்டுஏறி நெஞ்சிடம் கொண்ட வர்க்குப்
பேராழி ஈந்த புகழும் புகழுற்ற தன்றே (9)

ஆழியாகிய கடல் வட்டத்திலுள்ள பாரிலுள்ள உயிர்கள் எல்லாம் ஜலந்தரனால் நலிவுறுத்தப்பட்டு அலைக்கப்பட, பேராழியாகிய சக்கரத்தைக் கைக்கொண்ட திருமாலின் துன்பத்தைக் கண்டு அருள் செய்வதற்காக அவனுக்குப் 'பேராழி'யை ஈந்து புகழ் கொண்டான் சிவபெருமான். ஆழி நீராகிய கடலில் அறிதுயில் புரிந்த திருமால் அதனை விட்டு நீங்கிச் சிவபெருமானைத் தன் நெஞ்சில் வைத்துப் பூசித்தார். அவருக்கு ஆழியைக் கொடுத்து ஈசன் புகழ் மேலும் புகழைப் பெற்றது.

பத்தாவது பாடல்:

மாலா யவனும் மறைவல்ல நான்மு கனும்
பாலாய தேவர் பகரில்லமுது ஊட்டல் பேணிக்
காலாய முந்நீர் கடைந்தார்க்கு அரிதாய் எழுந்த
ஆலாலம் உண்டுஅங்கு அமரர்க்கருள் செய்ததாமே (10)

மாலும் மறைவல்ல நான்முகனும் மற்றுமுள்ள தேவர்களும் கடல் கடைய, அமுதத்தைக் கொடுப்பதற்காகச் சிவபெருமான் ஆலால நஞ்சை உண்டு அமரர்களுக்கு அருள் செய்தது பேரருள் திறமன்றோ!

பதினோராவது பாடல்:

அற்றன்றி அந்தண் மதுரைத் தொகை ஆக்கினானும்
தெற்றென்று தெய்வம் தெளியார் கரைக்குஓலை தெண்ணீர்
பற்றின்றிப் பாங்கெதிர்வின் ஊரவும் பண்பு நோக்கில்
பெற்றொன்று உயர்த்த பெருமான் பெருமானும் அன்றே. (11)

மதுரையில் தமிழ்ச்சங்கம் வைத்தருளியவனும், சிவனே பரம்பொருள் என்று பலவாறு விளங்கக் காட்டியும் தெளிவடையாத சமணர்கள் தெளிவடையவும் வைத்தவனுமாகிய சிவபெருமான் அல்லவா இறைவன். ஆதலின் அவனுக்கே ஆளாகி அன்பு செய்தலே கடமை.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

3.4.4. சோதியுள் சோதி

'அன்பே சிவம்' என்று அறுதியிட்டுச் சொல்கிறார் திருமூல முனிவர் (திருமந்திரம் 257). பெரும்பாலும் அன்பு என்பது உணர்ச்சியில் விளைவது. ஆனால் சிவமயமான அன்பு வெற்று உணர்ச்சி அல்ல. அந்த அன்பினை ஞானம் முறுக்கேற்றி வலுவடையச் செய்திருக்கிறது. அதனால் ஈசன் பால் கொண்ட அன்பே ஞானமாகிறது என்று சேக்கிழார் கூறுவதைப் பார்த்தோம். இங்கு ஞானமும் அன்பும் ஒன்றோடொன்று உருகிக் கலந்து நிற்கிறது; ஒன்றுக்கொன்று துணையாகி நிற்கிறது. தேர்ந்த சிந்தனையும் ஆழ்ந்த நம்பிக்கையும் ஐயமில்லாத துணிவும் இங்குப் பின்னிப் பிணைந்திருக்கின்றன. இதில் ஐயமில்லை; மயக்கமில்லை. சம்பந்தர் இதனைத் 'தேறிய சிந்தை' (2.222.9) 'தேறு சிந்தை' (2.250.6) என்கிறார். இத்தகைய உணர்வினை 'நெறிகொள் சிந்தை' (2.229.7) 'நலம்கொள் சிந்தை' (2.230.11) என்கிறார். இந்த உணர்வின் வயப்பட்ட மனம் தக்க பாதுகாப்பைப் பெறுகிறது ('ஏம மனத்தார்' – 1.86.8). சிவஞானப் பேரொளியால் அவர்களது மனம் ஒளியேறி நிற்கிறது ('தீப மனத்தார்' – 1.86.8). அவர்கள் மனம் என்றும் சுருங்கிக் குறுகாதது ('சுருங்கா மனத்தவர்' – 1.57.7). இறையருள் வியாபித்து நின்ற மனம் அவர்தம் மனம் (தேவார் சிந்தை – 1.72.5). இவையெல்லாம், சம்பந்தர் காட்டும் பக்தி நெறி வெறும் உணர்ச்சி ஆரவாரமில்லை; மிகச்சிறந்த ஞானத்தில் எழுவதுதான் என்பதைத் துல்லியமாகக் காட்டுகின்றன.

திருஞான சம்பந்தர் இறைவனுடைய 'சித்' என்ற பண்பை எடுத்துப் பலவாறு போற்றுவதைப் பார்க்கிறோம். 'ஞானத்திரளாய் நின்ற பெருமான்' (1.69.3) என்று சிவபெருமான் ஞானத்தின் முழுவடிவாய் அமைந்திருப்பதைக் குறிக்கின்றார் சம்பந்தர். ஓர் இடத்தில் சிவனை 'ஞானன்' (3.278.2) என்றே அழைத்து மகிழ்கிறார். அவனே ஞானத்தின் தனி முதலாக விளங்குவதை 'ஞான முதல்வன்' (3.329.6) என்றும் 'ஞானப் பேராயிரம் பேரினான்' (3.284.5) என்றும் 'யோகத்தையே புரிந்தானே' (3.383.7) என்றும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கூறுகிறார். அவனே வேதமாக நிற்பதை 'மறை ஆவான் சாமவேதன்' (1.50.2) என்று புகழ்கிறார். மற்றும் 'பரஞ்சோதி' (2.179.5) என்றும் 'தயங்கு சோதி' என்ற சொற்கள் இறைவனின் ஞான நிலையைக் குறிக்கின்றன.

இறைவனின் கடந்த நிலையும், தோய்ந்து நின்ற நிலையும் 'சோதி அந்தம் ஆயினாய்; சோதியுள் ஓர் சோதி' (3.310.7) என்பதில் காட்டப்படுகின்றன. 'மொழிக்குப் புலப்படாதவன்' என்பது புற உலகில் தோன்றும் ஒளிக்கு அப்பாற்பட்டவன் என்பதும் 'சொல் தெரியாப் பொருள்; சோதிக்கு அப்பால் நின்ற சோதி' (3.267.10) என்பதால் உணரலாம்.

ஞானமயமாய் நிற்கும் ஆன்மாக்கள் ஞானம் பெறுவதற்குத் தன் அருளால் உதவுகிறான். 'நெறி' நீர்மையர் நீள் வானவர் நினையும் நினைவாகி அறிநீர்மையில் எய்தும் அவர்க்கு அறியும் அறிவருளி' (1.17.6) என்று பக்குவப்பட்டவர் களுக்கும் வானவர்க்கும் அவர்களது நினைவிலே தானே நின்று நினைவாகி, தன்னை அறிந்துணரும் கனிவையுடைய அவர்களுக்குத் தன்னை அறியும் அறிவை அருளால் வழங்குகிறான்.

3.4.5. நீதியாய் நின்ற நிலை

இறைவன் நீதியின் நிலைக்களன்; நீதிநெறியெல்லாம் நடத்திச் செல்பவன். அவனுடைய ஐந்தொழில்களில் படைப்பு, காப்பு, அழிப்பு என்பவை இருக்கின்றன. படைக்கப் பட்ட பொருள்கள் யாவும் இறுதியில் முற்றும் அழிந்து ஒழியும். கடவுளிடமிருந்து கிளர்ந்து வந்தவை யாவும் அவனிடமே சென்று ஒடுங்கும். இதற்கிடையில் காத்தல் என்ற தொழிலுக்கு என்ன தேவை என்ற கேள்வி எழலாம். ஆனால் சில உயிர்கள் உலகில் சில நாள்களே வாழ்கின்றன; சில நீண்ட நாட்களுக்கு வாழ்கின்றன. ஏன் இந்த வேறுபாடு? அந்தந்த உயிர்களின் கர்மமே (வினையே) அந்த வேறு பாட்டிற்குக் காரணம் எனலாம். வினை என்பது இருவினைப் பயன்களும் செய்தவனையே சென்று அடையும் ஒரு நியதி

In Public domain, Digitization Muthulakshmi Research Academy

என்பார் திருக்குறளின் மிகச் சிறந்த உரை ஆசிரியர் பரிமேலழகர் (ஊழ் அதிகாரம்). சைவசித்தாந்தக் கருத்துப்படி நியதி என்பது இறைவன் உயிர்களின் வினைப்படிப் பயனை அருளும் அருட்செயல் என்பார்கள்.

ஆனால் வினைக்கு அறிவு கிடையாது. இருவினைப் பயன்கள் செய்தவனையே சென்று அடையவேண்டுமானால் அறிவு வேண்டும். கடவுள் ஒருவனே வாலறிவன். அவனால் இதனைச் செய்ய முடியும். எனவே கடவுள்தான் உலகைக் காப்பவன். 'தாயாகிய உலகங்கள் நிலைபேறு செய்தலைவன்' (1.15.3).

அறத்தை, அதன் மாண்பை நிலைநிறுத்துபவனும் அவனே. மலத்தில் அழுந்தியிருக்கும் ஆன்மாக்களுக்குத் தக்க நெறியைத் தெரிந்துகொள்ளத் தெரியாது. இறைவனே நெறியைக் காட்டுபவன். 'விண்ணவர்க்கு மண்ணவர்க்கு நெறி காட்டும் விகிர்தனாகி' (1.130.6) இறைவன் விளங்குவதைச் சம்பந்தர் குறிப்பிடுகிறார்.

> திறம்கொண்ட அடியார்மேல் தீவினை நோய் வாராமே
> அறம்கொண்டு சிவதன்மம் உரைத்தபிரான் (2.179.6)

என்று அறத்தின் அடிப்படையாக அமைந்த சிவதர்மத்தைப் புகட்டுபவன் அவனே; மேலும் 'அறம் பொருள் இனபம் வீடு மொழிந்த வாயான்' என்றும் இறைவன் போற்றப்படுகிறான். ஆலவாய் ஆதியைப் பரவும் பொழுது 'குற்றம் நீ குணங்கள் நீ' (3.310.3) என்று அறத்தின் நுட்பமாக இறைவன் விளங்குவது குறிப்பிடப்படுகிறது. குற்றமும் அதன் மாறுபாடான குணமும் எப்படி இறைவனிடத்தில் இருக்க முடியும்? உலக நியதியை நிலைநாட்டுவதற்கே என்று கொள்ளலாம். அதனால்தான் அடியார்கள் 'குற்றம் இன்மை உண்மை நீயென்று உன் அடியார் பணிவர்' (1.51.7) என்று கூறும் சம்பந்தர் இறைவன் குற்றம் குணம் இரண்டிற்கும் அப்பாற்பட்டவன் என்பதை உணர்த்துகிறார்.

> பெருமையோடு சிறுமையும் ஆம் பேராளன் (2.184.3)

என்று அவர் கூறுவதைக் காண்கிறோம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இன்னஉரு இன்னநிறம் என்றஅறிவ தேல்அரிது நீதிபலவும்
தன்ன உரு வாம்என மிகுத்தவன் (3.329.4)

என்று இறைவன் நீதியின் திருவுருவமாகக் காட்டப்படுகிறார்.

3.4.6. அகத்துறையில் அருள் வெளிப்பாடு

இறைவனை 'ஞானன்;' 'சொல் தெரியாப் பொருள்;' 'சோதிக்கு அப்பால் நின்ற சோதி' என்றெல்லாம் போற்றுகின்றோம். அப்பொழுது அவன் நமக்கு எளிதில் எட்ட முடியாதவனாகின்றான்; நெருங்குவதற்கு அச்சத்தை உண்டாக்கும் நிலையில் உள்ளான். அப்பொழுது ஆன்மாவிற்கும் அவனுக்கும் ஓர் இடைவெளி ஏற்படுகிறது.

ஆனால் இறைவனை 'இனியன்,' 'அன்பன்' என்று நினைத்துப் பார்க்கும் பொழுது அவன் இன்பமயமாகி விடுகிறான் அல்லவா? 'தம்மைப் போலத் தன் அடியார்க்கும் இன்பமளிப்பவர்' (2.238.2) என்று சம்பந்தர் ஆன்மாக்களுக்கு இறைவனின் இனிய நிலையைக் காட்டுகிறார்.

'தேனுமாய் அமுதமுமாய் தெய்வமும் தானாய்' (1.76.5) என்று, 'அவன் தெய்வம்தான்; இருப்பினும் தேனாய் அமுதமாய் இனிப்பவன், 'தேன் ஒத்து இனியான்' (1.38.3) என்கிறார் சம்பந்தர்.

அதனால்தான் நாயன்மார்கள், ஆழ்வார்கள் போன்ற அருளாளர்கள் 'நாயக நாயகி பாவத்தில்' காதலர் இருவர் தங்களின் கனி மொழியாகிய அன்பு மொழியைப் பேசுகிறார்கள். இதனை, 'கலையுணர்வுள்ள அருளியலாகக் (artistic mysticism) கூறுவர். காதல் மொழியை உருவகமாகப் பேசுவது இதன் மரபு. இங்கு காமம் இல்லை; காதலின் மொழி பேசப்பட்டிருக்கலாம். இந்தக் காதல் ஆன்மாவின் காதல். இந்த மொழியால் வெளியிட முடியாத ஆன்ம விஷயங்களைத் திறமாகச் சொல்ல முடியும். இந்த் ஆன்மக் காதலில் ஆண்டவன் எங்கோ இருக்கும் சர்வ வல்லமை படைத்த பரம்பொருளாக வருவதில்லை. ஒரு காதலனாக வருகிறான். அவனும் தன் ஆன்மக் காதலியுடன் இணைவதற்கு ஆர்வம் கொண்டு நிற்கிறான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பரம்பொருள் என்ற நிலையில் இறைவனைக் கண்டு அஞ்சுவது இயல்பு; தந்தை என்றால் வணக்கத்திற்கு உரியவராகின்றார்; தாயென்றால் பாசம் தலைதூக்கி நிற்கும்; எஜமானன் என்றால் மதிக்கப்பட்டுத் தொண்டு செய்வதற்கு உரியராகின்றார். ஆனால் காதலன் என்றால் அவனிடம் தீராக் காதலும் தெவிட்டாத விருப்பமும் ஏற்படுமல்லவா?

காதலனாகி வரும்பொழுது ஆன்மாவிற்கு மிக நெருங்கியவனாகிவிடுகிறான் இறைவன்; உயிர்த் துணையாகி நிற்கிறான். காதலில் மரியாதைக்கோ, விசுவாசத்திற்கோ இடமில்லை. தங்கு தடையற்ற அன்பே அங்கு சிறப்பானது. அவனைக் காண்பதும் கண்டு தழுவுவதும்தான் உயிரின் ஏக்கநிலை.

இங்கு ஆன்மா காதலி; இறைவன் காதலன். இருவரும் ஒருவரை ஒருவர் நெருங்கிப் பிணைய்த் துடித்துக் கொண் டிருக்கின்றனர்; பிரிவென்றால் தீப்போல் சுட்டெரிக்கும். அவன் கண் வழியாக உள்ளே புகுந்து காதலியின் இதயத்தில் தேன் அமுதமாகத் தித்திக்கின்றான். 'என் உளமே புகுந்த அதனால்' (1.1.1). நனவில் மட்டிலுமல்ல, கனவிலும் அவனை உணர்ந்து பிரிவால் வருந்துகிறாள் ஆன்மக் காதலி (கள்வர் கனவில் துயர் செய்து – 2.247.9). அந்த நிலையில்தான் என்ற நினைவு சுழன்று அவனாகவே இணைந்து புனிதமடைகிறது.

கடவுளைக் காதலனாகவும் ஆன்மாவைக் காதலி யாகவும் வரித்துக்கொண்டு பேசுவது காதலின் மொழி. வாட்கின் என்ற கத்தோலிக்கப் பெரியவர் தெய்விகக் காதலுக்கு ஆன்மிக அர்த்தமுண்டு என்பார்.[19] மேலை நாட்டில் இத்தகைய தெய்விகக் காதல் திருமணத்தைப்பற்றி முதலில் சொன்னவர் புனித பெர்னார்ட் என்பவர். அவருக்குப் பின்னால் ஜான் ரூயிங் பிராக், புனித ஜான் (of the cross), புனித தெரசா போன்றவர்கள் இக்கொள்கையைப் பின்பற்றினார்கள்.[20]

இந்துக்களின் கருத்துப்படிக் காமம் என்றால் ஒருவகை ஆசை. அது வெறும் புலன்வழி வந்த ஆசையென்றால்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அதனை 'விஷய காமம்' என்பார்கள். ஆனால் அருளாளர்கள் நாடுவது 'பகவத் காமத்தை.' இதனைத்தான் நாயன்மார்களும் ஆழ்வார்களும் கொண்டு பாடியிருக்கிறார்கள். 'கண்ண னுக்கே ஆம் அது காமம்' என்று திருவரங்கத்தமுதனார் இராமானுஜ நூற்றந்தாதியில் (40) குறிப்பதைக் காணலாம்.

'அவனுக்கே பிச்சியானாள்' என்பது சைவத்தின் மொழி. இந்து சமய நூல்களின்படி 'விஷயகாமம்' என்பது ஆத்ம காமத்தின் ஒரு பிரதிபலிப்புத்தான். யாக்ஞவல்க்ய முனிவர் தம் மனைவி மைத்திரேயிக்கு ஆத்ம காமத்தின் உட்பொருளை விளக்கியிருக்கிறார்:

> அன்பே! கணவன் என்பதற்காக மட்டும் கணவன் விரும்பப்படுவதில்லை; அவன் விருப்பப்படுவது அவனுடைய ஆத்மாவின் பொருட்டேயாகும். அந்த ஆத்மா பரமாத்மாவின் உண்மையான ஸ்வரூபமாக விளங்குகிறது.[21]

காதலனாகி வந்து ஆன்மாக்களின் உள்ளங்களைக் கொள்ளை கொண்டு விடுகிறான் இறைவன். திருஞான சம்பந்தர் இறைவன் பேரழகை நாவாரப் பாடி மகிழ்கிறார். 'அழகன்' (3.333.1) என்றும் 'அழகர்' (3.361.10) என்றும், 'அந்தம் இல் அழகன்' (3.289.6) என்றும், 'அந்தி வண்ணன்' (1.66.11) என்றும் சம்பந்தர் பாடல்களில் இறைவனது அழகைப் படித்து மகிழ்கிறோம்.

காதலுக்குப் பிரிவு தீராப்பகை. இறைவனும் பிரிவுத் துன்பத்தால் வருந்துகிறான். பிரஹதாரண்யக உபநிடதம் இந்த உணர்வைக் காட்டுகிறது:

> அவன் (பிரம்மம்) மகிழ்வாகவே இல்லை; ஆகையால் ஒருவனும் (இன்று கூட)த் தனிமையில் மகிழ்ச்சி யுடன் இருப்பதில்லை. அவன் தனக்கு ஒரு துணையை விரும்பினான்; ஓர் ஆணும் அவன் மனைவியும் நெருங்கித் தழுவி நிற்கும் வடிவாக மாறினான். இந்த உடம்பை இரண்டாகப் பிரித்தான். அந்தப் பிரிவுபட்ட நிலையிலிருந்தே பதியும் பத்தினியும் தோன்றினார்கள்.[22]

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இந்தப் பேரண்ட நாடகம் இறைவன் தன்னைக் காதலன்-காதலி வடிவாகப் பிரித்து நின்ற நிலையில் பிறந்த ஒன்றுதான்.

திருஞான சம்பந்தரின் திருவெழுகூற்றிருக்கைப் பதிகம் இந்த உண்மையைக் கூறுகிறது: 'ஓர் உரு ஆயினை; மாண் அங்காரத்து ஈரியல்பாய்...' (1.128. வரிகள் 1, 2) இங்கு 'மாண்' என்பது சக்தியைக் குறிக்கிறது. 'ஆங்காரம்' என்றால் அதனுடைய ஆற்றல்.

இந்த அர்த்தநாரிக் கோலம் சம்பந்தரது உள்ளத்தை வாரி எடுத்துக்கொள்கிறது. 'தோடுடைய் செவியன்' என்ற தனது முதல் பாடலிலேயே சிவத்தின் சக்திபாகத்தைப் புகழ்ந்துரைக்கிறார். பல இடங்களில் அம்மையை நினைத்து உருகுவதைப் பார்க்கிறோம். 'ஆதி எமை ஆளுடைய அரிவை' (3.333.10) என்று அந்த அரிவை - சக்தி எவ்வாறு தன்னை ஆட்கொண்டு விட்டாள் என்று பாடுகிறார்.

திருவெழுகூற்றிருக்கை உள்ளிட்ட சம்பந்தரின் மொத்தப் பாடல்கள் 4168இலும் உமையைப்பற்றி 887 இடங்களுக்கு மேலாக சம்பந்தர் பாடியிருக்கிறார். அவை 323 பதிகங் களிலும் காணக்கிடக்கின்றன. கலை உணர்வும் கவியழகும் நிறைந்த இடங்கள் அவை.

3.4.6.1. காதலர் இருவர்

உமையின் குண நலன்கள் பலப்பல. அவற்றில் நம் உள்ளத்தையெல்லாம் தொட்டு நிற்பது உமை தன் கணவனிடம் கொண்டிருந்த தீராக் காதல்தான். அவனை விட்டுப் பிரிய மனமில்லாதவள் அவள் ('அன்பில் பிரியாள்' - 1.32.6). தன் கருந்தடமலர்க் கண்களால் அவனைக் காதலிப்பவள் அவள் ('கரும்தட மலர்க்கண்ணி காதல் செய்யும் மருந்தவன்' - 1.114.1). அவனும் அவளை ஒருநாளும் விட்டுப் பிரியான். ('மாது அவளை ஒரு பாகம் பிரியாத பெருமானார்' - 3.322.8). அவளோடு உடன்நின்று வாழ்க்கையில் ஏதோ வாழ்வதாக இல்லாமல் மகிழ்ச்சியோடு வாழ்கிறான்; ஆடிப்பாடி வாழ்கிறான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

'மலையான் மகளோடு மகிழ்ந்தவன்' (1.34.6) என்றும் மலைமகளைக் 'காதலி' (1.59.6) என்றும் 'மலையான் மகள் கணவன்' (1.16.2) தான் என்றும் அவனுடைய நிலையை எண்ணிச் சம்பந்தர் மகிழ்கிறார். இருவருக்கும் உள்ள காதல் கனிவைக் கண்டு அது 'அற்புதம் செப்ப அரிதால்' (3.358.1) என்று விம்மிதம் அடைகிறார் பிள்ளையார்.

சிவனுடைய செயல்களில் சக்தி பெரும் பங்கு கொள்கிறாள். அதன் விளைவாக ஐம்பூதங்களும் பல்லுயிர் களும் படைத்து, காத்து, அழிக்கப்படுகின்றன. இதனை 'ஈரியல்பால் ஒரு விண் முதல் பூதலம் ஒன்றிய இருசுடர் உம்பர்கள் பிறவும், படைத்து அளித்து அழிப்ப...' (1.128, வரிகள் 2-4). என்று குறிப்பிடுகிறார். ('வார் உறு மென்முலை நன்னுதல் ஏழையோடு ஆடுவர்' - 1.136.4) என்றும் 'உமைபாடத் தாளம் இட' (2.247.1) என்றும் 'நேரிழை பாட' (2.186.3) என்றும், உமை அவனது ஆட்டத்திற்குப் பாடித் தாளமிடுவதைப் பார்க் கின்றோம். வேறு ஓர் அருங்காட்சியையும் காண்கிறோம். இறைவன் கல்லால மரத்தின் கீழ் அமர்ந்து மறையை ஓதுகின்றபோதும் - அவனது தட்சிணாமூர்த்திக் கோலத் திலும், உமை அருகிருந்து மகிழ்வதை 'மதிநுதல் மங்கையோடு வடபாலிருந்து மறை ஓதும் எங்கள் பரமன்' (2.221.4) என்ற பாடல் வரியில் கண்டு வியக்கின்றோம். லலிதா சகஸ்ர நாமத்தில் 'தக்ஷிணாமூர்த்தி ரூபிண்யை' என்று அம்பிகை பேசப்படுவது குறிப்பிடத்தக்கது. மற்றொன்று, பூசைகள் நடைபெறாதபொழுது இறைவன் உமையோடு அமர்ந்து, மறையை ஆராய்கிறானாம்: 'வன்னியோடு பூசை அல்லாப் போழ்தின் மறைபேசி' (1.66.11). ஊர்தோறும் சென்று பிச்சை ஏற்கும் காலங்களிலும் உமையை உடன் அழைத்துச் செல்வதை, 'ஐயம் இடும் என்று மடமங்கையோடு அரன் திரியும்' (3.336.6) என்று குறிப்பிடுகிறார் சம்பந்தர். வேறு ஒரு வியக்கத்தக்க செய்தி: உமையைத் தன் பாகத்தில் வைத்திருப்பவன் இறைவன் என்பது பல இடங்களிலும் பேசப்படுகிறது. ஆனால் அவனே உமையின் மார்பில் வாழுகின்றான். 'பேதைதட மார்பது இடமாக உறைகின்ற பெருமான்' (3.328.4) என்ற அதிசயத்தைக் காட்டுகிறார் சம்பந்தர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இன்னஉரு இன்ன நிறம் என்றறிவதேல் அரிது நீதிபலவும்
தன்னஉரு வாமெனமி குத்தவன்

(3.329.4)

என்று இறைவன் நீதியின் திருவுருவாய் நிற்பதைப் பார்த்தோம். சம்பந்தர் உமையையும் 'பேர் அறத்தாள்' (3.282.10) என்று அழைக்கின்றார். சிவபெருமான் தன் மேனியில் பூசும் வெண்ணீறு சக்தி வடிவானது என்பதைப் 'பராவணம் ஆவது நீறு' (2.202.8) என்ற சம்பந்தர் குறிப்பிடுகிறார். உலகில் சிறந்த காதலர்கள்கூட ஓர் உயிரும் ஈருடல்களும் கொண்டுதான் இருக்கிறார்கள். ஆனால் இங்கு சிவனும் சக்தியும் இணைந்து ஒரே உடலில் வாழ்கின்றதைப் பார்க்கிறோம்: 'ஓர் உடம்புள்ளே உமையொரு பாகம் உடன் ஆகி' (1.100.3) என்றுள்ள அர்த்தநாரீஸ்வரர் கோலத்தை ஈரெழில் கோலம் (3.316.9) என்று சம்பந்தர் குறிக்கின்றார். இந்தக் கோலத்தை 'சோதியாய் மங்கை பாகம் நிலைதான் சொல்லல் ஆவதொன்றே' (3.316.6) என்றும் 'உன்னல் ஆவதொன்றே' என்றும் சம்பந்தர் வியந்து பாராட்டுகிறார்.

இறைவன் உமையோடு உடனாகி வருவதற்குக் காரணம் உயிர்களிடத்தில் அவன் கொண்டிருக்கும் எல்லையில்லாக் கருணை – அருள்தான் என்பது சம்பந்தரின் கொள்கை. இந்த நிலை, சம்பந்தருக்குப் பேருவகையைத் தருகிறது. எல்லா அருளாளர்களையும்போலச் சம்பந்தருக்கும் இறைவனுடைய காதலன் வடிவம் நெஞ்சை அள்ளுவதாக இருக்கிறது. அவனுடன் கூடி இணையத் துடிக்கின்றார்.

வைணவ உரையாசிரியர்கள் அகப்பாட்டுத்துறையில் அமைந்த ஆழ்வார்களின் உணர்வுகளை உணர்ந்தறிந்து ஆழ்வார்களை நாயகிமார்களாக உருவகிக்கிறார்கள். திருமங்கை யாழ்வாரைப் 'பரகால நாயகி' என்றும் நம்மாழ்வாரைப் பராங்குச நாயகி என்றும், குலசேகர ஆழ்வாரைக் குலசேகர நாயகி என்றும் போற்றுகிறார்கள். ஞானசம்ப்ந்தரும் ஒரு ஞானசம்பந்தநாயகிதான்.

சிவபெருமான் ஒரு மாபெரும் யோகி. ('பரம யோகி' – 1.119.3) ஆனால் அவன் போகியாகவும் இருப்பவன் என்பதை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

'போகமாய் இன்பமாய்' (2.205.5) என்று சம்பந்தர் குறிப்பிடுகிறான்; 'போகத்தவன் யோகத்தையே புரிந்தானே' (3.387.7) என்கிறார்.

3.4.6.2. காதலின் இரு பக்கம்

கூடுவதாலும் பிரிவதாலும் காதலின் இன்பம் பல மடங்கு அதிகரிக்கிறது. கூடும் இன்பத்தை **சம்ஸ்லேசம்** என்றும் பிரிவுத் துன்பத்தை **விஸ்லேசம்** என்றும் கூறுவார்கள். இறைவன் தன்னுடைய காதலியான ஆன்மாவிடம் கூடியும் பிரிந்தும் விளையாடுகிறான். ஆனால் இந்த உலகில் ஆன்மா இறைவனுடன் இணைந்து மகிழும் நேரம் மிகவும் குறைவு; மறு உலகில்தான் அது நிலைபெற்ற இன்பத்தைத் தருகிறது. இணைவதும் பிரிவதும் மாறிமாறி நடக்கும் பொழுது ஆன்மா தன்னுடைய தற்போதத்தை மறந்து அவனை நிரந்தரமாக அடைவதற்காக ஏங்கித் தவிக்கிறது. சில வேளைகளில் ஒளி தென்படும். ஆனால் அதுவே தொடக்கமாக விளங்குகிறது. பிரிவில்தான் ஆன்மா தானென்பதை மறந்து நிலையான அவனது உறவுக்கான வழிமுறைகளை எண்ணிப்பார்க்கிறது. அவனையே சரண் அடைகிறது. இத்தருணத்தில் காதலி யாகிய ஆன்மா கையற்ற நிலையில் கலங்குகிறது. ஆன்மாவின் பிரிவினால் இறைவனும் துயருருகிறான் என்பார்கள். ஆனால் ஆன்மா நம்பிக்கையை இழக்காமல் காத்திருக்கிறது. முடிவில் அவன் வருகிறான்; அவள் பேருவகை அடைகிறாள். விஷய காமம் பகவத்காமமாக பரிணமிக்கிறது.

3.4.6.3. சம்பந்தரின் அகப்பாட்டு

நாயன்மார்கள், ஆழ்வார்களுக்கிடையே சம்பந்தர்தாம் இந்தப் பாடல்களை - நாயக நாயகி பாவப் பாடல்களைப் பாடத் தொடங்கியிருக்க வேண்டும் என்று கருதலாம். அவருடைய சமகாலத்தவர் அப்பர். அவரும் அகப் பாட்டுகளைப் பாடியிருக்கிறார்.

பதின்மூன்று பாடல்கள் சம்பந்தரது அகப்பாட்டு களாகக் கருதப்பட்டிருக்கின்றன. பாச்சிலாச்சிராமத்திலும் (1.44), திருமருகலிலும் (2.154) பாடப்பட்டவை அகப்பாட்டாக

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

எண்ணத்தகுந்தவை. பதிகம் (247) இல் 6, 7ஆம் பாடல்கள் அகப்பாட்டு வகையைச் சார்ந்தவை. நம்மாழ்வாரின் திருவாய்மொழிக்கு விரிவான உரைகள் பல உள்ளன. ஆனால் சைவ நூல்களுக்கு அத்தகைய வாய்ப்பு இல்லை. வைணவ உரையாசிரியர்கள் அகப்பாட்டிற்குச் சிறந்த விளக்கங்களை அளித்திருக்கிறார்கள். அவர்களது விளக்கங்கள் தேவார அகப்பாட்டுகளை உணர்ந்துகொள்ளப் பெரிதும் உதவு கின்றன.

சம்பந்தரின் சில அகப்பாட்டுகளையாவது நாம் இங்கு உணர்ந்தறிய முற்படுவோம். பிரிவில் (விஸ்லேசத்தில்) ஆன்மா பெருந்துயர் உற்றுப் பேதுறுகிறது. சங்க நூல் மரபின்படி இந்த மன நிலையை 'நெய்தல்' என்பார்கள்.

நம்மாழ்வாரின் திருவாய்மொழிக்குப் பேருரையாக அமைந்து விளங்குவது ஈடு என்னும் முப்பத்தாறாயிரப்படி உரை. இந்த உரையின்படி இறைவனோடு கூடுவது என்பது அவனை ஞானத்தைக் கொண்டு கண்களால் காண்பதாகும். ஆனால் ஆன்மா தன் ஊனக் கண்களைக் கொண்டே இறைவனைக் கண்டு மகிழ ஏங்குகிறது. அது முடியாத நிலையில் ஆன்மாவின் ஏக்கமும் வாட்டமும் அதன் மனத்தைத் துன்புறுத்துகின்றன. பிரிவு என்பது இதுவே.

இங்கு ஈடு ஒரு கேள்வியை எழுப்புகிறது. எங்கும் நிறைந்து எல்லாம் அறிந்தவன் இறைவன். அப்படி யிருக்கையில் அவன் ஏன் இந்தக் கூட்டமும் பிரிவும் காட்டி ஆன்மாக்களை அவதிக்கு ஆளாக்குகிறான்? அதற்கு அந்த உரையே விடையும் தருகிறது: இறைவன் ஆன்மாக்களின் இணையும் இன்பத்தை நீடிக்கச் செய்து மேலும் மேலும் அவனது இன்பத்தை அடைவதற்காக அவைகள் ஏங்குமாறு செய்வதற்காகத்தான்.

இருந்தும் ஆன்மா ஏன் துயரம் அடைகிறது? அதற்குக் காரணம், அதனால் இறைவனைத் தன்னால் எவ்வளவு முடியுமோ அந்த அளவிற்கு அனுபவித்துச் சுகம் பெற இயலவில்லையே என்பதால்தான்.[23]

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பிரகதாரண்யக உபநிடதத்தில் யாக்ஞவல்கியர் தன் மனைவி மைத்ரேயியிடம் ஆன்மாவின் தன்மைகளை விளக்கிச் சொல்லும் பொழுது 'ஆன்மா கேட்கப்படத்தக்கது; சிந்திக்கத்தக்கது, காணத்தக்கது' என்று கூறுகிறார் (6.5.6). அதனால் அகப்பாட்டில் வரும் காமம் பகவத் காமமே. நம்மாழ்வார் 'அடிப்போது அயர்ப்பிலன், அலற்றுவன், தழுவுவன், வணங்குவன் அமர்ந்தே' (திருவாய்மொழி 1.3.10) என்று தாம் இறைவனைத் தழுவி வணங்கி விரும்புவதாகக் கூறுகிறார். ஆழ்வார் இவ்வாறு இறைவனை மனத்தால், மொழியால், மெய்யால் சுவைத்தின்புறுவதாக நஞ்ஜீயர் விளக்கம் சொல்கிறார். நஞ்ஜீயரின் இந்த விளக்கம் அகப். பாட்டிற்கும் பொருந்துவதாக ஈடு கூறுகிறது (பக். 178–179).

ஈட்டின் விளக்கப்படிக் கவிஞர் இரண்டு நிலைகளில் பாடுகிறார். ஒன்று தமதான தன்மை இங்கு அவர் இறைவனைத் தான் அனுபவித்த நிலையில் பேசுகிறார். இதில் ஞானம் தான் அடிப்படையாக அமைகிறது. மற்றொரு நிலை பிராட்டியான தன்மை. இங்குக் கவிஞர் தன்னை ஒரு காதலியாக பாவித்துக்கொண்டு தன் காதலை வெளிப்படுத்துகிறார். ஆசார்ய ஹிருதயம் என்னும் நூலின்படி ஞான நெறியில் புலவன் தன் பேச்சாகப் பேசுகிறான்; காதலியாகப் பேசும்பொழுது அவனுடைய பேச்சே வெளிவருகிறது. ஞானத்தில் தன் பேச்சு; ப்ரேமத்தில் பெண் பேச்சு என்பதே இவ்விரு நிலைகளும்.

காதலி பறவைகளையும் வண்டையும், மேகத்தையும் தன் காதலனிடத்து தூது அனுப்புகிறாள். இலக்கியமரபு இதற்கு உகந்ததாயிருப்பதாக ஈடு சொல்கிறது. பறவைகள் முதலியவைபற்றிய வர்ணனை ஓர் ஆத்மார்த்த நிலையை உணர்த்துகிறது. ஈட்டின் துணைகொண்டு சம்பந்தர் அகப்பாடல்களில் உள்ள உணர்வினை உணர்ந்து கொள்ளலாம். பறவைகள் ஆசாரியர்கள் என்று கொள்ளப் படுகின்றன. சம்பந்தரது அகப்பாடல்களில் ஒரு மரபு காணப்படுகிறது. அவர் தன்னையொத்த அடியார்களைக் கேட்டு இறைவனின் செயல்களுக்கு விளக்கம் பெறுவதாக அது அமைந்துள்ளது. (3.296 – 1–11).

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பறவைகளின் வர்ணனைகளில் இந்த உள்ளார்ந்த பொருள் மிளிர்கிறது. இங்கு பறவைகள் குருவாக மதிக்கப் படுகின்றன. அந்த குரு ஆன்மாவிற்கும் ஆண்டவனுக்கும் இடையே ஒரு பாலமாக அமைந்து ஓர் இணக்கத்தை உண்டுபண்ணுகிறார். வெள்ளை நிறக் கொக்கு குருவின் மாசுமறுவற்ற புனிதத்தையும் உண்மை ஞானத்தையும் உணர்த்துகிறது.

மைனா (பூவை) குருநாதரின் இனிய மொழியை நினைவுறுத்துகின்றது. வெண் நாரை பறந்து திரிந்து தன் குஞ்சுகளுக்கு இரை தேடி வருகிறது. அது குருநாதர் தம் சீடர்களுக்கு உகந்தவற்றைத் தேர்ந்து சொல்வதைப் போன்றது. கிளி சொன்னதைச் சொல்கிறது. அதுவே 'ஆப்த வசனம்' என்ற ஆன்றோர் சொற்கள். அன்னம் நீரிலிருந்து பாலை எடுப்பது குரு மாசினை நீக்கி நல்லதை எடுத்துக் கொள்வதற்கு . ஒக்கும். மரத்தின் உச்சிக்கிளையில் அமர்ந்திருக்கும் கொக்கு சுற்றியுள்ள இலை தழைகளை நோக்காமல் உறுமீன் வருமளவும் காத்திருக்கிறது. அதுபோல் குரு தன் சீடர்களது நலன்களைக் கவனித்து தன் நலத்தை நோக்காது இருத்தலை இது காட்டுகிறது. அதுபோல் மணல் திடல்களில் அமர்ந்திருக்கும் குருகு குருவின் பண்புகளைக் கொண்டு திகழ்கிறது. 'இம்'மென முரலும் வண்டுகள் குருநாதர் சுறுசுறுப்பாக இயங்கி நல்ல பொருள்களை நாடிச் சேகரித்துத் தம் சீடர்களுக்கு வழங்குவதைக் காட்டுகின்றன. தேனீக்கள் தேனைமட்டுமே பருகுகின்றன. அதுபோல் குரு இறைவன் ஒருவனைத்தான் சிந்திக்கிறார். குயிலோ குருவின் இனிய குரலை எதிரொலிக்கின்றது. சாருவாகப் பறவைகள் ஒன்றையொன்று பிரியா. இறைவனிடம் நீங்காத அன்பு கொண்ட ஆன்மாவின் தன்மையைத்தான் அவை சுட்டிக் காட்டுகின்றன. (ஈடு – பக். 222–223).

ஈடு ஒரு செய்தியைத் திண்ணமாகச் சொல்கிறது. பாடும் புலவர் ஆணாக இருக்கலாம். ஆனால் பகவானைப் பாடும் பொழுது அவர் பெண்ணின் அன்பு உள்ளத்தையே பெற்று விடுகிறார். இறைவன் புருஷோத்தமன் ஆதலால் அவன் முன்னால் எல்லோரும் காதல்வயப்பட்ட பெண்களே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இந்தக் கருத்தின் அடிப்படையில் சம்பந்தரது அகப் பாட்டுகளையும் பார்க்கலாம். இங்கே அவரது அகப் பாட்டுகள் சிலவற்றை உணர்வோடு கலந்து ஆராய்வோம். கூட்டத்தின் இன்பமும் பிரிவில் துயரும் காதலர்களிடம் உள்ள மனநிலைகள். சம்பந்தரது பாடல்களில் ஒரு சில போக்குகள் காணப்படுகின்றன.

முதல் பதிகத்திலேயே சம்பந்த நாயகி தன் காதலனின் அழகில் உள்ளத்தைப் பறிகொடுத்துவிட்டு நிற்கும் நிலையைச் சொல்கிறாள். 'காடுடைய சுடலைப் பொடி பூசி என் உள்ளம் கவர் கள்வன்' (1.1.1) என்பது அவளது முதல் பேச்சு. காதலனைக் 'கள்வன்' என்ற சொல்லுவதைக் குறுந்தொகை (25), நற்றிணை (28) போன்ற சங்கப்பாடல்களிலும் பார்க்கின்றோம். 'யாருமில்லைத் தானே கள்வன்' என்றும், 'கள்வர்போல' என்றும் காதலி கூறுவதை அந்த நூல்களில் காணலாம். யாரும் அறியாமல் வந்து உள்ளத்தைக் கொள்ளை கொள்வதால் காதலர்களைக் 'கள்வர்' என்று கூறுவது வழக்கம்.

வேறு ஒரு பாடல். கள்ளத்தனமாய் நெஞ்சம் கவர்ந்த காதலன் காலையும் மாலையும் வந்து அவளது எழிலை அடைந்த மகிழ்ச்சியில் ஆடுகிறான்.

> சிந்தை உள்ளும் நாவின் மேலும் சென்னியு மன்னினான்
> வந்து என் உள்ளம் புகுந்துமாலை காலை ஆடுவான் (1.73.9)

சில சமயங்களில் தீ வண்ணம்போல் சிவந்த மேனியை உடைய தலைவன் உணவை யாசித்து வருவதுபோல் அவளிடம் வந்து அவளது சித்தத்தைக் கவர்ந்து செல்வது உண்டு. ('தீ வண்ணர் சில்பலிக்கென்று ஒத்தபடி வந்து என் உள்ளங் கொண்ட ஒருவர்' - 3.358.3).

வேறோர் இடத்தில் தலைவன் அவளது வீட்டிற்கு வருகிறான். தமிழின் அழகையெல்லாம் கொட்டிப் பேசுகிறான். குமிழமலர் போன்ற தன் மேனி அழகைக் காட்டுகின்றான். விளைவு? அவளது அச்சம், மடம், நாணம் போன்ற பண்புகளையும் அவளது உள்ளத்தோடு வாரிச் சென்று விடுகிறான்:

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தமிழின் நீர்மை பேசித்தாளம் வீணை பண்ணி நல்ல
முழவம் மொந்தை மல்குபாடல் செய்கைஇடம் ஓவார்
குமிழின் மேனி தந்துகோல நீர்மையது கொண்டார் (1.73.8)

அவனது பிரிவோ அவளை வாட்டுகிறது. கண் உறங்கவில்லை ('கண் துயிர் வவ்வல்' – 1.63.2); வளை சோருகின்றது ('வளை சோரல்' – 1.1.3); மேனி பொன்போல் பசந்து விடுகிறது ('பொன்னிறம் ஆக்கினான்' – 1.56.5).

தமிழ் வழக்கில் ஒரு பெண் தன் காதலைப் பிறர் அறியச் சொல்வதில்லை. ஆனால் காமநோய் (இங்கு சிவ காமம்) பற்றி எரிப்பதால்; எருதுபோல் அவளது மேனியை மேய்வதால் தலைவனையே கேட்டுவிடுகிறாள் ('செப்புமின் எருது மேயுமே' – 3.374.7). சங்க நூல் மரபில் வரும் தலைவி பேச்சு போன்றமைந்த பாடல்களும் உண்டு (1.1.2; 2.242.6.7; 3.358.3).

3.4.6.4. தூது விடல்

சம்பந்தராகிய நாயகி இரண்டு பதிகங்களில் (1.60; 3.321) வண்டுகளிடத்தும் பறவைகளிடத்தும் தன் பிரிவுத் துயரைச் சொல்லித் தலைவனிடம் தூதனுப்புகிறாள். இவ்வாறு தூது அனுப்புதல் ஒருவகை இலக்கிய மரபு. இது மேல் நாட்டிலும் வழங்குகிறது.[24] தொல்காப்பியத்தில் இதுபற்றிய சூத்திரம் இருக்கிறது.[25]

எஸ். மைக்கேல் இருதயம் இதற்கு மேலும் ஒரு விளக்கம் சொல்கிறார். ஆசாரியர்களை வண்டும் பறவையுமாகக் கொண்டு தூதாக அனுப்புவது மட்டுமல்ல இந்த மரபு; இறைவனாகிய காதலுக்குத் தன்னை நினைப்பூட்டுவதற்காகவும் தூது விடும் மரபு அமைந்திருக்கிறது.[26] அளி அரசு (அரச வண்டுகள்), குருகு, நாரை, குயில், புறா, அன்னம், கிளி, மைனா போன்ற பறவைகளைத் தூது அனுப்புவது இலக்கிய மரபு.

3.4.6.5. பிச்சைப் பெருமான்

கடவுள் ஒரு மாயக்காதலன். அவனது அன்பின் வலையில் அகப்படும் ஆன்மாக்கள் அவனிடம் மையல் ஏறி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அத்தனையும் துறக்கத் துணிந்து அவன் பின்னால் செல்லத் தயங்குவதில்லை. அவனும் அவர்கள்மீது அன்பு கொண்டவன்தான். அதனால் அவர்களது இல்லங்களுக்குச் சென்று அன்புப் பிச்சைக்காக அலைந்து திரிபவன் அவன்.

ரிஷி பத்தினிகளுக்கும் பிச்சாண்டிக்கும் (பிட்சாடனர்) உள்ள உறவின் கதை கோபிகைகள் கண்ணன் மீது கொண்ட காதலை ஒத்த கதைதான். தாருகாவனத்து முனிவர்கள் தங்களது அகம்பாவத்தைத் துறந்து நல்லறிவு பெற்றதையும் இந்தக் கதை உணர்த்துகிறது. முடிவில் அந்த முனிவர்களும் அவனிடம் வருகிறார்கள்; அவனது சிவதாண்டவத்தில் பங்கேற்கிறார்கள்.

திருஞானசம்பந்தர் பிச்சைப் பெருமானிடம் சொக்கி நின்றவர்; தமது அகப்பாட்டிலும் மட்டுமல்ல, பிற பாடல்களிலும் அவரைப் பல வகையாகப் போற்றிப் பாடுகிறார். ஏறத்தாழ 350 இடங்களில் நாம் அந்தப் பெருமானைச் சந்திக்கின்றோம். பேராசிரியர் துரைரங்க சுவாமி பிச்சைப் பெருமான் ஆரூரரின் (சுந்தரரின்) பாடல்களுக்கு நாயகனாக விளங்குவதைச் சுட்டிக் காட்டுகிறார்.[27]

ஆரூரர் 'நல்லிசை ஞானசம்பந்தனும் நாவினுக்கு அரையனும் சொல்லியவே சொல்லி' அவர்களது மலரடித் தடங்களைப் பின்பற்றுபவர். அதனால் சம்பந்தரது பாடல்களுக்கும் நாயகனாக வருபவர் பிச்சைப்பெருமான் என்றே கருதலாம். துரைரங்கசுவாமி, பேராசிரியர் பி.என். சீனிவாசாச்சாரியர் பிருந்தாவனத்தில் கண்ணனும் கோபிகை களும் செய்த லீலைகளைப்பற்றிக் கூறியிருப்பதைக் பிட்சாடனருக்கு ஏற்றிப் பேசுவதைக் கீழே காணலாம். இங்கு பிருந்தாவனம் தாருகாவனமாகிறது. கிருஷ்ணலீலை சிவதாண்டவமாகிறது. பெயர்கள் தக்கவாறு மாறுகின்றன.

> தத்துவ ஞானிகளுக்கு உலகம் ஒரு மாயை; அல்லது சிந்தனைக்கு உரிய ஒரு புதிர். ஆனால் பக்தர்களுக்கு இது சிவமயமாகத் திகழ்கிறது; சிவபக்தியில் நிறைகிறது. தாருகாவனம் என்பது அண்டசராசரங்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

களுக்கும் எழிலின் இன்பத்தின் தலைமை இடம் மட்டுமல்ல; இடவரம்பைக் கடந்து நின்ற இடத்தில் என்றும் நிலைத்திருப்பதொன்று. அங்கு எல்லாம் கடந்த பொருள் ஒவ்வொரு ஜீவனின் இதயத்திலும் (தகராகாசத்தில்) நின்று வாழும் அன்பாகத் திகழ்கிறது.[28]

இங்கு பிரம்மத்தின் லீலை, திருமூர்த்தியர்க பேரண்டங்களில் நின்று ஆடும் தாண்டவம். என்றுமுள்ள ஒரு சத்துப் பொருள் இயங்கிச் சுழலுகின்ற பல்பொருள்களாகி விளங்குகின்றது. இதை அருளாளர்களும், முனிவர்களும், அவர்களது பத்தினிகளும் மட்டுமே உணர்ந்தறிவார்கள். பிச்சைப் பெருமானின் ஆனந்த தாண்டவம், சிவகாமி உள்ளிட்ட அனைத்து அன்பு உயிர்களின் காதலால் உந்தப்பட்டு எங்கும் இறைஅன்பை வியாபிக்கச் செய்கிறது. மின்னுகின்ற வான வெளியிலும் மனம் கடந்த கவர்ச்சிக்கு ஆட்பட்ட உயிர்க் கூட்டங்களிடையேயும் தோன்றும் எல்லா இயக்கங்களும், இந்த அன்பு ஆட்டத்தின் வயப்பட்டுக் களிக்கின்றன.

ஆனந்த த்தாண்டவத்தில் பிட்சாடரான நடராஜன் ஒருவன்தான் மையப்புள்ளி. அவனைச் சுற்றியுள்ள வட்டத்தில் அவன் எங்குமிருக்கிறான். வட்டத்தின் எல்லைக் கோடு அகன்று அகன்று எங்குமில்லாமல் ஆகிவிடுகிறது. எதையும் நம்ப மறுப்பவர்களும், எல்லாவற்றையும் வெறுத்து ஒதுக்குபவர்களும் கல்நெஞ்சமுடையவர்கள். அவர்களால் பிட்சாடன வடிவத்தைக் கண்டு மனம் நெகிழ முடியவில்லை. அவரது பிரம்ம ரச, அன்புத் தாண்டவத்தைக் கண்டு மனம் மகிழ முடிய வில்லை.[29]

ஆனால் சம்பந்தரின் பிட்சாடனருக்குத் தாருகாவனம் ஒரே ஓர் இடமில்லை. உயிர்க்கூட்டங்கள் உள்ள எல்லா இடங்களும் தாருகாவனம்தான். எல்லா இடங்களுக்கும் எல்லாருடைய இல்லங்களுக்கும் சென்று அவன் அன்புப் பிச்சைக்காகக் கையில் ஓடு ஏந்தித் திரிகின்றான். அந்தப்

In Public domain: Digitization Muthulakshmi Research Academy

பிச்சையை அவன் விரும்பி நுகருகின்றான் ('உலகங்கள் தோறும் பிச்சை நுகர் இச்சையர்').

தாருகாவனத்து முனிவர்களின் பத்தினிகள்மட்டும் அவனது அழகில் மயங்கவில்லை. அவன் மீது ஏவப்பட்ட பாம்பும், புலியும், யானையும் போன்ற அஞ்சத்தக்க பொருள்களும் அவனுடைய ஆடை அணிகலன்களாக மாற்றப்படுகின்றன. எல்லோரையும் எல்லாவற்றையும் அவன் புனிதப்படுத்தி என்றுமுள்ள இன்ப நிலையைத் தருகிறான்; ஆன்மாக்களிடமிருந்து உடல், பொருள், ஆவி என்ற மூன்றையும் பெற்றுக்கொள்கிறான் ('மூன்றும் கொண்டான்' - 2.148.5). முனிவர்கள் முனைப்பு நீங்கி அன்பின் இன்பத்தை அனுபவிக்கிறார்கள்.

3.4.7. சம்பந்தரின் மெய்ஞ்ஞானம் – ஓர் ஆய்வு

இதுவரையில் திருஞானசம்பந்தர் இயற்கை, ஆன்மா, இறைவன்பற்றிக் கொண்டிருந்த கருத்துகளை அவரது பாடல்களின் வழியாக ஓரளவு தொட்டுப்பார்க்க முடிந்தது. இதை வைத்துக்கொண்டு அவரது சமய, தத்துவக் கோட்பாடுகளினைத் தெரிந்துகொள்ள முடியுமா? அல்லது அவரது பாடல்களில் ஒன்றுக்கும் மேற்பட்ட கோட்பாட்டுக் கருத்துகள் புலப்படுகின்றனவா என்று இந்தப் பகுதியில் சிந்தித்துப் பார்க்கலாம். இன்னும் குறிப்பாகச் சொல்லப் போனால் அவர் கூறுவது சித்தாந்தமா, வேதாந்தமா அல்லது இரண்டுமா என்று பார்க்க வேண்டும்.

உலகும் உயிர்களும் இறைவனின் எட்டு வடிவங்கள் (அட்டமூர்த்தம்). அவனே அவையாகின்றான். இங்கு சம்பந்தர் எடுத்துக் கையாளும் வினைச் சொல் 'ஆய்' அல்லது 'ஆகி' என்பது. இதற்கு ஒன்றுக்கு மேலாகப் பொருள் கூறலாம். முதல் நிலையில் 'ஆய்' அல்லது 'ஆகி' என்றால் இறைவன் (சிவன்) தன்னை உலகு உயிர்களாக ஆக்கிக்கொள்கிறான் என்று பொருள் கொள்ளலாம். அவற்றில் அந்தர்யாமியாக அவன் விளங்குகிறான் ('ஊன் ஆர்தரும் உயிரான்' - 1.13.7).

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மற்ற பொருள் என்னவென்றால் இறைவன் எல்லா உலகு உயிர்களுமாகி, அவற்றைப் படைத்தளிப்பதோடு, அவைகளுக்கு வேறாகவும் நிற்கிறான் என்பது ('முற்றுமாகி வேறும் ஆனான்' – 1.53.2). சம்பந்தர் வேறு ஒரு சொல்லையும் பயன்படுத்துகிறார்; அது 'உடனாய்'. இறைவன் தான் படைத்த உலகு உயிர்களோடு உடனாகவும் – கூடவும் நின்று பொலிகின்றான். இதனால் இறைவன் அந்தர்யாமியாகவும், கடந்த நிலையிலும் ஒன்றி உடனாகியும் இருக்கும் நிலையிலும் அமைந்துள்ளான்.

சம்பந்தரின் திருவீழிமிழலைப் பதிகம் ஒன்று (1.11.2). இந்த நிலைகளை அழகாகக் காட்டுகின்றது.

ஈறுஆய்முதல் ஒன்றாய்இரு பெண்ஆண்குணம் மூன்றாய்
மாறாமறை நான்காய்வரு பூதம்அவை ஐந்தாய்
ஆறுஆர்சுவை ஏழ்ஓசை யொடுஎட்டுத்திசை தானாய்
வேறாய்உடன் ஆனான்இடம் வீழிம்மிழ லையே

இறுதியிலும் முதலிலும் ஒன்றாகி நின்ற பொருள், ஆண்பெண் என்ற இரண்டாகி, குணங்கள் மூன்றாகி, மறைகள் நான்காகி, பூதங்கள் ஐந்தாகி, சுவைகள் ஆறாகி, இசை ஓசைகள் ஏழாகி, திசைகள் எட்டாகி இவை தானாகி இவை அத்தனைக்கும் வேறாகி அவற்றோடு உடனாகியும் நிற்பவன் சிவன். அவன் இடம் வீழிமிழலை. இந்தப் பாட்டில் 'தானாய், வேறாய், உடனாய்' என்ற சொற்கள் இடம் பெறுகின்றன. இவை இறைவன், உயிர், உலகம் ஆகிய மூன்றுக்கும் உள்ள உறவு என்ன? எப்படிப் பட்டது என்பதை இங்கு இச்சொற்கள் உணர்த்துகின்றன. 'தானாய்' என்னும் போது இறைவன் உயிர் உடலாக ஒன்றாகி நிற்கும் நிலையைப் பார்க்கின்றோம். 'வேறாய்' என்னும்போது இறைவன் அவற்றிலிருந்து வேறாகி நிற்கும் நிலை. 'உடனாய்' என்னும் பொழுது வேறாகி நின்றாலும், உடனாகியிருக்கும் நிலை. இவற்றை ஒன்றாதல் (identity), வேறாதல் (difference), உடனாதல் (identity in difference) என்பார்கள். இதனை ஒரு சைவசித்தாந்தக் கொள்கையாகக் கூறுவார்கள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மெய்கண்டாரின் காலத்திற்கு முன் எழுந்த திருக்களிற்றுப்படியார் என்னும் நூலின் 86ஆவது பாடல் மேற்சொன்ன சம்பந்தரது கருத்துகளைக் கிட்டத்தட்ட அதே சொற்களில் கூறுகின்றது.

> ஈறாகி யங்கே முதல்ஒன்றாய் ஈங்கு இரண்டாய்
> மாறாத எண்வகையாய் மற்றிவற்றின் – வேறாய்
> உடனாய் இருக்கும்...

மெய்கண்ட தேவரும் தமது சிவஞானபோதத்தின் இரண்டாவது சூத்திரத்தில் 'அவையே தானே ஆய்' என்று கூறுகிறார்.

சிவஞான சித்தியாரும் தனது இரண்டாவது சூத்திரத்தில் 'உலகெலாம் ஆகி வேறாய் உடனுமாய்' என்று குறிப்பிடு வதைப் பார்க்கின்றோம்.

இறைவன் உயிர்களது அனுபவத்தில் அவற்றோடு ஒன்றாகி நிற்கிறான்; உயிர் தன் உடலோடு வாழும்பொழுது தன்னை உடலாகவே கருதிக்கொள்வதைப்போல இருந்தாலும், உயிர் உடம்பிலிருந்து வேறானது. சூரியன் (ஒளி) பொருள்களைக் கண்களுக்குக் காட்டுவதில் அவற்றோடு ஒன்றுபட்டாலும் தன்மையில் கண்களுக்கு வேறாகி இருப்பதைப்போல தன்னுடைய சக்தியின்மூலமாக உயிர்களில் வியாபித்து உள்ளிருந்தே அவற்றின் உயிர்களை இயக்குகின்றான். அதுவே உடனாய் நிற்கும் நிலை.

பரிணாமவாதிகள் இந்த உறவினை வேற்றுமையில் ஒருமை என்பார்கள். சத்காரியவாதிகள் ஒன்றுபட்ட (ஒன்றாதல்) நிலை என்று கூறுவார்கள்.

சிவபெருமான் ஒரு நிமித்தகாரணன். அனந்தர், ஸ்ரீகண்டர் மூலமாக மாயாகாரணத்திலிருந்து காரியங்களை உண்டாக்குகிறான். அதனால் தொடர்பினால் ஒன்றாதலும், தன்மையால் வேறாதலும், உடன் இருந்து சக்தியைக் கொண்டு இயக்குவதால் உடனாதலும் ஏற்படுகின்றன.[30]

சைவசித்தாந்தக் கொள்கைப்படி உலகு உயிர்களுடன் இறைவன் கொண்டுள்ள உறவு, தானாதலும், வேறாதலும்,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உடனாதலுமென்று மூன்று நிலைகளிலும் அமைந்துள்ளது. இதைத்தான் அத்துவிதம் என்பார்கள். இந்த அத்துவிதம் இரண்டு என்ற பேதமற்ற ஆத்ம அனுபவம். சம்பந்தர் இந்த அனுபவத்தைக் குறித்துப் பல பாடல்களில் பேசுகிறார். 'சேர்வார் தாமே தாமாகச் செய்யுமவன்' – (1.126.7). இந்தக் கருத்தை இதே போன்ற சொற்களால் கூறுகிறது, சிவஞானபோதம், 'சேர்ந்தடியார் தான்தானாகச் செய்து' (சூத். 10; அதிகரணம் 2, உதாரண வெண்பா 2). ஆரூரர் 'நான் ஆயபரன்' (7.38.4) என்றும் சம்பந்தர் 'என் ஆனான்' (1.16.6) என்றும் இதே கருத்தில்தான் கூறியிருக்கிறார்கள்.

பதி, பசு, பாசம் என்ற முப்பொருள்களும் சைவ சித்தாந்தத்தின் அடிப்படைக் கொள்கைகள். திருஞான சம்பந்தர் முப்பொருள்களைப்பற்றி அதனதன் பெயர் களோடு குறிப்பிடுகிறார். 'பசுபதியதன் மிசைவரு பசுபதி' (1.22.5; 1.76.3; 3.372.11; 3.79.1–9). பாசம் என்பது ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்களையுடையது. கன்மம் என்பது வினை. மெய்யாக ஆன்மாக்கள் எல்லா இடங்களிலும் வியாபித்திருப்பவை. ஆணவமலம் ஆதியிலிருந்தே ஆன்மாவை பீடித்திருக்கிறது; ஆன்மாவின் பெருமையைக் குறைத்து சிறுமையுறச் செய்கிறது; அணுவினும் சிறிதாகச் செய்கிறது. அதனால்தான் அம்மலத்திற்கு ஆணவம் என்ற பெயர் ஏற்பட்டிருக்கிறது.

இந்த ஆணவமலக் கொள்கை சைவசித்தாந்தத்தில் மிகவும் முக்கியமானது. ஆனால் சம்பந்தரது பாடல்களில் ஆணவ மலத்தைப்பற்றித் தெளிவாக, அந்தப் பெயரிலேயே எதுவும் கூறப்படவில்லை; அதனால் அந்த அளவில் சைவசித்தாந்தத்திற்குச் சம்பந்தருடைய ஆணை கிடைக்க வில்லை போலும் என்று ஒரு கருத்து நிலவுகிறது.[31] ஆனால் அதற்கு ஒரு மறுப்புவாதம் உண்டு. சம்பந்தர் 'ஆணவமலம்' என்ற பெயரை நேரடியாகக் குறிக்காவிட்டாலும் அவர் வேறு பெயர்களால் அதனைக் குறிப்பிடுகிறார்; குறிப்பாலும் உணர்த்துகிறார். (எ–டு.) 'மலனாய தீர்த்தெய்தும்' (1.119.6); 'முனிவர்கள் தமமலம்' (1.22.4) என்ற இடங்களில் மலத்தைப்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பன்மையில் குறிப்பதைக் காணலாம். ஆனால் பன்மையில் குறித்தாலும் அது ஆணவ மலத்தையும் சேர்த்துத்தான் குறித்தது என்று ஏற்றுக்கொள்ள முடியாது என்று மறுத்தால் வேறு ஒரு பாடலில் சம்பந்தர் மும்மலங்களையும் தெளிவாகவே குறிப்பிடுகிறார்; அவற்றின் இயல்புகளையும் விரித்துரைக்கின்றார். திருமுதுகுன்றப் பதிகத்தில் (1.12.3) இந்தக் குறிப்பும் விளக்கமும் காணப்படுகின்றன. இனி அந்தப் பாட்டைப் பார்க்கலாம்.

விளையாததொர் பரிசில்வரு பசுபாசவே தனைஒண்
தளையாயின தவிரவ்வருள் தலைவன்...

என்பவை அந்தப் பாட்டில் முதல் இரண்டு வரிகள். இதன் பொருள்:

சிவன் என்ற தலைவன், அருளோடு, வேதனைகளாகிய பசுத்துவத்தையும் பாசத்தையும் (கர்மாவையும்) ஒளிமயமான தளையாகிய மாயையும் தவிர்ப்பவன். அதாவது அவற்றின் தீமைகளை வாராமல் செய்பவன். அவை எதிலிருந்தும் முளைத்துத் தோன்றுபவை அல்ல (அநாதிகளாயிருப்பவை).

இந்த இரண்டு வரிகளையும் பிரித்துப் பார்த்துப் பொருள் கொள்ளலாம்:

1. **விளையாததொர் பரிசில் வரு பசு (வேதனை):** (பசு வேதனை – ஆணவமலம்). இது ஆதிமுதலாகப் பசுவைப் பீடித்து வருத்தும் வேதனையாகும். அதனால் அவ்வாறு வருத்தும் பசுவேதனையாகிய ஆணவமலம் அனாதி.

2. **(விளையாததொர் பரிசில் வரும்) பாசவேதனை** – இங்கு பாசவேதனை என்பது கர்மம் – வினை. இதுவும் ஆணவ மலத்தினால் ஆன்மாவை ஆதி முதல் பிடித்து வருத்துகிற வேதனையாகும்.

3. **ஒண்தளை** – மாயை. இது உயிர்களைப் பந்தப்படுத்து கின்ற ஒன்று. இது உயிர்களைப் பிணிப்பதால் உயிர்களுக்கு அறிவு உண்டாகித் தன்னையும் தன் பதியையும்பற்றித் தெரிந்துகொள்ளும் உந்துதலைத்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தருகின்றது. அதனால் இதனை ஒளி உண்டாக்கும் தளை என்ற கருத்தில் 'ஒண்தளை' என்கிறார் சம்பந்தர்.

4. தவிரவ்வரு தலைவன்: தலைவனாகிய சிவன். அவன் அருளை வழங்கி இம்மும்மலங்களையும் நீக்குகிறான்.

இங்கு சம்பந்தர் மும்மலங்களையும் அவற்றின் செயல்பாடுகளையும் இயல்புகளையும் விளக்கிக் கூறுவதோடு அல்லாமல் சிவபெருமான் தனது அருள் காரணமாக இவற்றின் தீமைகளைத் தவிர்ப்பான் என்ற உறுதியான நம்பிக்கையையும் நல்குகிறார்.

ஆணவமலம் அனாதியான மலம்; உயிர்களைப் பிடித்து அவற்றைச் சிறுமைப்படுத்துகிறது. இதுவே எல்லா வேதனைகளுக்கும் காரணம். எனவே இதனை மூலமலம் என்பார்கள். சம்பந்தர் இதனை மூலம் என்றே குறிக்கின்றார் (1.53.9). நீறு பூசித் தன் நாமத்தை வாயால் ஓதும் பக்தர்கள் மூல மலத்தை நீக்கி விடுவார்கள் என்ற கருத்தில் 'மூலம் உண்ட நீற்றர் வாயான்' (1.53.9) என்பார்.

திருவண்ணாமலைப் பதிகம் மூன்றாவது பாடலிலும் (1.69.3) சம்பந்தர் ஆணவ மலத்தை 'ஊனத்திரள்' என்றே குறிப்பிடுகின்றார்.

> ஞானத்திரளாய் நின்றபெருமான் நல்லஅடியார்மேல்
> ஊனத்திரளை நீக்கும்அதுவும் உண்மைப்பொருள்போலும்

மேலும் 'ஊனத்திரளை' 'உண்மைப் பொருள் போலும்' என்று குறிப்பதால் ஊனத்திரளாகிய ஆணவமலம் ஓர் உண்மைப் பொருள்தான், அனாதியான ஒன்றுதான் என்று அவர் வலியுறுத்துவது விளங்குகிறது. இங்கு வரும் 'போலும்' என்ற சொல்லை 'ஒப்பில் போலி' அதாவது, ஓசை காரணமாக வருவது என்று சில இலக்கணக்காரர் குறிப்பர். ஆனால் தேவ சேனாதிபதி இது ஒப்பில் போலி இல்லை; தேற்றமாக - உறுதியாகக் கூறும் தன்மை உடையதே என்ற கூறுகிறார். 'நஞ்சைக் கண்டத்து அடக்கும் அதுவும் நன்மைப் பொருள் போலும்' என்று சம்பந்தர் அதே பதிகத்தில் குறிப்பிடுவதை அவர் சுட்டிக்காட்டுகிறார்.[32]

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருக்களிற்றுப்படியார் முதலாகச் சைவசித்தாந்த நூல்கள் சம்பந்தருடைய கருத்துகளைக் கூறுவதோடு அவரது சொற்களையும் பொன்னேபோல் போற்றி வந்திருக்கின்றன என்ற விவரம் முன்பே கூறப்பட்டிருக்கிறது. உமாபதி சிவாசாரியாரின் திருஅருட்பயன், ஒரு மெய்கண்ட சாத்திர நூல். இந்த நூல் பத்துப் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவை: பதிமுதுநிலை, உயிரவை நிலை, இருள்மல நிலை, அருளது நிலை, அருள்உறு நிலை, அறியும் நெறி, உயிர் விளக்கம், இன்புறு நிலை, அஞ்செழுத்து அருள் நிலை, அணைந்தோர் தன்மை என்பன.

தேவார அருள்முறைத் திரட்டு என்ற ஒரு தொகை நூலும் இருக்கிறது. இதில் 19 தேவாரப் பாடல்கள் இடம் பெற்றுள்ளன. இதைத் திரட்டித் தந்தவரும் ஓர் உமாபதி சிவன்தான். இவரும் திருவருட்பயனின் ஆசிரியர் உமாபதி ஆசிரியரும் ஒருவரே என்ற கருத்தும் நிலவுகிறது. அதனால் திருவருட்பயன் சம்பந்தர், அப்பர், சுந்தரர் என்ற மூன்று தேவார ஆசிரியர்களின் கருத்தைப் பிரதிபலிப்பதாகவும் அவர்களது தேவாரங்களின் பிழிவு என்றும் கூறுவார்கள். மேலும் பன்னிரு திருமுறைகளுமே சைவசித்தாந்தத்தின் அடிப்படை என்ற கருத்து அறிஞர்களிடையே போற்றப்பட்டு வருகிறது.[33] இங்கு கூறப்பட்ட கருத்துகள் சைவசித்தாந்தத் திற்குச் சம்பந்தரது பாடல்கள் பெரிதும் உணர்வூக்கம் அளிப்பவை என்பதை விளக்கியிருக்கின்றன.

இருநில னதுபுனல் இடைமடி தரஎரி புகஎரி அதுமிகு
பெருவளி யினில்அவி தரவளி கெடவியன் இடைமுழு
வதுகெட

என்ற இந்த வரிகள் திருமறைக்காடு – திருவிராகப் பதிகத்தில் முதல் இரண்டு வரிகள் (1.22.7).

இங்கு சம்பந்தர் எவ்வாறு ஐந்து பூதங்களும் ஒன்றுக்குள் ஒன்றாக ஒடுங்குகின்றன என்பதை விவரிக்கிறார். மண் நீரிலும், இரண்டும் தீயிலும் இவை மூன்றும் காற்றிலும் இவை நான்கும் ஆகாயத்திலும் ஒடுங்குகின்றன. ஆனால் சைவ சித்தாந்தம் பூதங்கள் தங்கள் தங்களது தன்மாத்திரைகளில்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஒடுங்குவதாகக் கூறுகிறது. சம்பந்தரது கருத்து உபநிடத, வேதாந்தக் கருத்துக்கு ஒட்டியிருக்கிறது. சிவஞான முனிவர் தம்முடைய **சிவஞானமாபாடியத்தில்** (பக். 222-224) இதனைக் குறிப்பிடுகிறார்.

வேறு ஒரு தொகை நூலும் இருக்கிறது. அதில் 25 தேவாரப் பாடல்கள் தொகுக்கப்பட்டுள்ளன. இதனை அகத்தியர் தொகுத்ததாக நம்பப்படுவதால் இதன் பெயர், **அகத்தியர் தேவாரத்திரட்டு** என்பதாகும். இந்த நூலைச் சைவசிந்தாந்திகள் உள்ளிட்ட எல்லாச் சைவர்களும் போற்றுகிறார்கள். இதனால் சம்பந்தர் போன்றவர்களில் தேவாரம் எல்லாச் சைவர்களுக்கும் தோத்திர நூலாக மதிக்கப்படுவதைப் பார்க்கின்றோம்.

சௌந்தர்ய லஹரீ என்ற வடமொழித் தோத்திர நூலை ஆதிசங்கரர் எழுதியதாகப் பொதுவாக ஒரு கருத்து வழங்குகிறது. சிலர் மறுப்பதும் உண்டு. ஆனால் ஒன்று மட்டும் உறுதி. இந்த நூலின் ஆசிரியர் ஸ்ரீ சங்கரரின் பரம்பரையில் உதித்த ஒருவராகத்தான் இருக்கவேண்டும். இந்த நூலின் ஆசிரியர் 75ஆவது பாடலில் 'திராவிட சிசு' என்ற ஒரு பிள்ளையைக் குறிப்பிடுகிறார். அந்தப் பாட்டின் திரண்ட கருத்து இதுதான்:

> ஓ மலைமகளே! உன்னுடைய மார்பகங்களிலிருந்து ஊறி ஒழுகும் திரு அமுதம் (பால்), உன்னுடைய இதயக்கடலிலிருந்து ஒழுகும் தேனை ஒத்தது. அது கல்விப் பெருக்காகப் பொழிகிறது. உன்னால் அருளோடு வழங்கப்பட்ட அந்த அமுதத்தைப் பருகிய இந்த திராவிட சிசு, புகழ்மிக்க கவிஞர்களின் மனதையெல்லாம் கவர்ந்திழுக்கும்படியான (மிகச் சிறந்த) நூல்களுக்கு ஆசிரியராக வன்றோ ஆகியுள்ளார்!

இதனை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் 'திராவிட சிசு' என்று குறிப்பிட்டவர் ஆதிசங்கரர்தான் என்று கூறுகிறார்.[34] ஆனால் நூலின் தொனியையும் உணர்வையும் பார்க்கும்பொழுது சங்கரர் தன்னையே அப்படிப் புகழ்ந்து

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பாடிக்கொண்டிருப்பாரா என்ற ஐயம் எழுகிறது. ஆனால் சம்பந்தரது வரலாற்றை அறிந்த எவரும் திராவிட சிசு சம்பந்தரேதான் என்ற முடிவிற்கு வர இயலும்.[35] இந்த முடிவை ஏற்றுக்கொண்டால் திருஞானசம்பந்தருக்கு அத்வைதக் கோட்பாடுகள் புறம்பாக இருக்க முடியாதல்லவா?

சங்க நூல்கள் சிலவற்றையும் தொல்காப்பியத்தையும் அத்வைதக் கருத்தில் எண்ணிப் பார்க்கும் போக்கு தமிழ் அறிஞர்களிடம் எழுந்திருக்கிறது. உச்சிமேல் புலவர்கொள் நச்சினார்க்கினியர் (கி.பி. 14ஆம் நூற்றாண்டு) மலைபடுகடாஅம் என்னும் பத்துப்பாட்டில் ஒரு பாட்டிற்கு உரை கூறும்பொழுது கீதாசாரியரைக் குறிப்பிடுகிறார். அந்தப் பாட்டில் வரும் 'ஒரு நீயாகி', 'நல்குமதி' என்ற தொடர்கள் அத்வைத ஒருமை உணர்வை விளக்குவதாக விளக்கம் அளிக்கின்றார். அந்த நெறியைப் புலம்பெயர்ந்து உறைதல் என்று காட்டுகிறார்.[36]

தத்துவராயர் என்ற மகா அத்வைதி (14ஆம் நூற்றாண்டு பிற்பகுதி – பதினைந்தாம் நூற்றாண்டு முன்பகுதி) பெருந்திரட்டு என்னும் நூலைத் தொகுத்திருக்கிறார். இதில் பல சமய, தத்துவக் கோட்பாடுகளைச் சார்ந்த 100க்கும் மேற்பட்ட நூல்கள் இடம் பெற்றுள்ளன. அவற்றில் சில அத்வைத நூல்கள். தெ.பொ. மீனாட்சி சுந்தரனார், தத்துவராயரும் வேறுபல அத்வைதிகளும் நாயன்மார்களையும் ஆழ்வார்களையும் அத்வைதபரமாக விவரித்திருக்கிறார்கள் என்று கூறுகிறார்.[37] சிலர் இதனை ஏற்காவிட்டாலும் அத்வைதிகள் நாயன்மார்களிடமிருந்து, சிறப்பாகத் தேவார ஆசிரியர்களிடமிருந்து பல செய்திகளைத் திரட்டிக்கொள்ள முடியும்.

வித்யாரண்யர் மெய்கண்டாரின் சிவஞானபோதத்திற்கு ஓர் அத்வைத உரையை எழுதியிருப்பதாகவும் ஆனால் அவ்வுரை தற்பொழுது கிடைக்கவில்லை என்றும் ஒரு கருத்து நிலவுகிறது. ஆனால் வடிவேல் செட்டியார் சிவஞான போதத்திற்கு ஓர் அருமையான அத்வைதச் சார்புள்ள உரையை எழுதி வழங்கியுள்ளார்.[38]

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மேலும் ஏ.ஆர். மலையப்ப சாஸ்திரி என்பவர் தமது நால்வர் மொழியில் அத்வைதம் என்ற கட்டுரையில் தேவார, திருவாசகப் பாடல்கள் சில அத்வைதக் கருத்தைப் பிரதிபலிப்பதாகக் கூறியிருக்கிறார்.[39] "ஒரு முழுமுதற் பொருளே பலவாகத் தோன்றுகிறது" என்பது அத்வைத நிலை. மலையப்ப சாஸ்திரி சம்பந்தருடைய திருமுதுகுன்றப் பதிகத்தில் (1.53.1), 'தேவராயும்' என்று தொடங்கும் பாடல் ஒன்றை எடுத்துக்கொண்டு அங்கு வரும் 'ஆய்' என்ற வினைச் சொல்லிற்குத் 'தோன்றி' என்ற விளக்கத்தைக் கொடுக்கிறார். சிவன் பல பொருள்களாகத் தோன்றுவதாக எடுத்துக் கொண்டு, முதல் ஒருவன் என்ற தொடருக்குச் சிவன் உபாதான காரணனாக விளங்குகிறான் என்றும் விளக்கம் அளிக்கிறார் சாஸ்திரியார்.

மேலும் அதே பதிகத்தில் வரும் 'பற்றுமாகி' என்று தொடங்கும் பாடலை விளக்கும்பொழுது 'முற்றுமாகி வேறுமானான்' என்ற தொடர் சிவன் சகுண நிலையில் பல்லுயிரும் பல உலகுமாகத் தோன்றியிருப்பது உண்மையில் நிர்குணப் பிரம்மமேதான் என்றும் 'வேறுமானான்' என்ற தொடர் அந்த உண்மையைத்தான் உணர்த்துகிறது என்றும் கூறுகிறார்.

'குற்றம் நீ குணங்கள் நீ' (3.310.3) என்று சம்பந்தர் கூறுவது இறைவனுடைய நிர்குண நிலையை உணர்த்துவதே யாகும். அதுபோல சம்பந்தருடைய தொடர் 'சேர்வார் தாமே தானாகச் செய்யுமவன்' என்பதும் அப்பருடைய 'தானும் யானும் ஆகின்ற தன்மையன்' என்பதும் பிரம்மத்திற்கும் ஆன்மாவிற்கும் இடையேயுள்ள அபேத ஒருமை உணர்வையே காட்டுகிறது என்றும் சாஸ்திரியார் கூறுகிறார். மேலும் நாவுக்கரசரின் "மண் அல்லை; விண் அல்லை; மலையல்லை; கடல் அல்லை" என்ற தொடர்கள் அத்வைத நிலையையே காட்டுவதாக அவர் கூறுவார்.

இதுவரையில் கூறப்பட்டவற்றிலிருந்து ஒரு கருத்துத் தெளிவாகிறது. சம்பந்தரின் பாடல்கள் சித்தாந்தமாகவும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வேதாந்தமாகவும் பொருள் கொள்வதற்கு இடமளிக்கின்றன. தாயுமானவர் மெய்கண்டாரை 'அத்துவித மெய்கண்டார்' என்று பாராட்டுவதைக் காண்கிறோம்.

பல்வேறு கருத்துகளையும் எண்ணங்களையும் ஒருமைப்படுத்தி ஒருமுக உணர்வையும் அனுபவத்தையும் உண்டாக்கச் சம்பந்தர் நன்றாக முயன்றிருக்கிறார் என்பது தெளிவு. முன்னரே சொன்னபடிச் சம்பந்தருக்குச் சிவனே முழுமுதற் கடவுள்; எ-டு. 'சிவன் எம் இறை,' 'பரதத்துவன்,' 'உத்தமன்,' 'நிராமயன்,' 'பராபரன்,' 'புராதனன்,' 'பராவு சிவன்,' 'ராக,' 'கேடிலி,' 'மாறிலி' என்ற தொடர்களைச் சிந்திக்க.

> எங்கேனும் யாதாகிப் பிறந்திடினும் தன் அடியார்க்கு
> இங்கேயென்று அருள் புரியும் எம் பெருமான் (2.176.6)

என்று எல்லா உயிர்களும் எங்கெங்கு இருந்தாலும், தன்னை வழிபடுவோருக்கு 'இங்கே! இதோ வருகிறேன்!' என்று ஓடிவந்து உதவுபவன் சிவபெருமான். அவனே இறப்பு, பிறப்புகளைக் கொடுத்து முடிவில் வீட்டையும் நல்குவான் என்பதைக் 'கேடும் பிறவியும் ஆக்கினாரும் கேடிலா, வீடுமா நெறி விளம்பினார்' (1.45.2) என்று பாடுகிறார்.

சமயங்களை ஆறாக வகுத்துக் கூறுவது அனைத்திந்திய மரபாகும். அவரவர் ஆன்ம வளர்ச்சிக்கும் மன இயல்பு களுக்கும் ஏற்றபடி அவ்வாறு வகுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் சிவபெருமானே இந்த ஆறுசமயங்களையும் படைத்து உதவியிருக்கிறான் என்று 'முன்னம் இரு மூன்று சமயங்கள் அவையாகிப் பின்னை அருள்செய்த பிறை யாளன்' (2.165.2) என்றும் 'சமயங்களை வகுத்தவன்' (3.337.3) என்றும் சம்பந்தர் தெளிவாகக் குறிப்பிடுகிறார்.

திருக்கோகர்ணத்தில் ஒரு காட்சி. ஆறு சமயங்களில் வழிபடும் அடியார்கள் விரும்பி வந்து அவனடி பணிந்து சிவனது ஆகமங்களை ஓதுகிறார்கள். அப்படி ஓதும்பொழுது அவர்களுக்கு அதுவரை தோன்றாத ஒரு மனக்கிளர்ச்சி ஏற்பட்டு அவர்கள் மயங்கி நிற்கிறார்களாம்; ஆடுகிறார் களாம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆறுசம யங்களும் விரும்பியடி பேணிஅரன் ஆகமம் மிகக்
கூறுமனம் வேறுஇரதி வந்து அடியர் கம்பம்வரு
கோகரணமே (3.337.6)

எல்லாச் சமயங்களுக்கும் சிவனே தலைவன் என்பதை 'ஒத்து ஆறு சமயங்கட்கு ஒருதலைவன்' (1.131.1) என்று கூறுகிறார். இங்கு சம்பந்தர் ஆறு சமயங்கள் என்று எந்தெந்தச் சமயங்களைக் குறிக்கிறார் என்று பார்ப்போம். இங்கு 'ஆறு' என்பது பலவற்றைக் குறிக்கிறதா; ஆறு சமய நெறிகளைக் குறிக்கிறதா?

தருமபுரம் ஆதீனம் வெளியிட்ட முதலாம் திருமுறையில் 1.31.1 என்ற பதிகத்தின் அடிக்குறிப்பில் 'அகச் சமயங்கள் ஆறாகக் கொள்ளப்பட்டிருக்கின்றன. உமாபதி சிவாசாரியாரின் **சங்கற்ப நிராகரணம்** என்னும் நூல் அகச் சமயங்களைப் பின்வருமாறு குறிப்பிடுகிறது: (1) ஐக்கியவாதம், (2) பாசாணவாதம், (3) சங்கராந்த வாதம், (4) ஈஸ்வர அவிகார வாதம், (5) நிமித்தகாரண பரிணாம வாதம், (6) சைவ வாதம். பேதவாதமும், சிவசம வாதமும் பாஷாண வாதத்தோடு ஒத்திருப்பதால் அவையும் ஒக்கச் சேர்க்கப் பட்டிருக்கின்றன.

ஆனால் பாசுபதம், மாவிரதம், காபாலம், வாமனம், வைரவம், ஐக்கியவாத சைவம் முதலியவை அகப்புறச் சமயங்கள் எனப்படும். அவை வேதங்களையும் ஆகமங்களையும் பொதுவாக ஒப்புக்கொள்கின்றன. இருப்பினும் சில இடங்களில் அவை மாறுபடுகின்றன. அல்லது வேறு சில நூல்களுக்கு முக்கியத்துவம் அளிக்கின்றன. எடுத்துக் காட்டாகப் பாசுபதம் தங்கள் தலைவர் நகுலேசர் வழங்கிய **பாசுபதம்** என்ற நூலுக்கே தலைமை இடத்தை அளிக்கின்றது.

ஆனால் சம்பந்தர் பாசுபதர்களைக் குறிப்பிடுகிறார். சண்பை நகரில் (சீர்காழியில்) அவர்கள் மற்ற சைவர்களோடு சென்று சிவனை வழிபட்டதை,

சைவர் பாசுபதர்கள் வணங்கும் சண்பை நகராரே (1.66.4)

என்று பாடுகிறார்.

பவானி அணைக்கட்டிற்கு அருகில் உள்ள திருநணா என்ற தலத்தில் 'நானாவித்தால் விரதிகள் நன்நாமமே ஏத்தி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வாழ்த்த' (12.208.7) என்கிறார். விரதிகள் என்பவர்கள் அகப்புறச் சமயத்தைச் சார்ந்த 'மாவிரதி'களாக இருக்கலாம்.

சம்பந்தர் சிவபெருமானைச் 'சைவன்,' 'காபாலி,' 'பாசுபதன்' என்றெல்லாம் குறிப்பிடுகிறார். ஆனால் சிவனைக் 'காபாலி', 'பாசுபதன்' என்று அழைத்தாலும் அந்தச் சமயங்களின் தனித்தன்மைபற்றி சம்பந்தர் எங்கும் குறிப்பிடுவதில்லை. திருமயிலையில் உள்ள கபாலீச்சரத் திற்குச் சம்பந்தர் சென்று பாடியிருக்கிறார். முதலாம் மகேந்திரவர்ம பல்லவனின் **மத்தவிலாசப் பிரகசனம்** என்ற நூலின்படி காபாலிகர்களும் பாசுபதர்களும் காஞ்சி ஏகாம்பரநாதர் கோயில் பெருங்கூட்டமாக இருந்தார்கள் என்று தெரிகிறது. சம்பந்தர் உள்ளிட்டத் தேவார ஆசிரியர்கள் அதனைப் பாடியிருக்கிறார்கள். அதுபோல் நாகைக் காரோணம், குடந்தைக் காரோணம் போன்ற ஆலயங் களிலும் சம்பந்தர் பாடியிருக்கிறார். காரோணம் என்பது காயாரோகணம் என்பதன் திரிபு. அதுதான் நகுலேசருடைய ஊர்.

அதுபோலச் சம்பந்தர் திருக்காளத்திக்குச் சென்ற பொழுது, 'சடைத்திரு முனிவர், கபாலக்கையர், பல வேடச் சைவர்' போன்ற பல சமயத்தார்களும் அவரை அன்பு மரியாதையோடும் வரவேற்றதாகச் சேக்கிழார் கூறுகின்றார் (1018).

புத்தமும் சமணமும்கூட இறைவனுடைய (சிவனுடைய) ஆக்கமே என்று சம்பந்தர் நம்பினார்.

> ஈசன் அணைவுஇல் சமண் சாக்கியம் ஆகியவாறே!
> (2.172.10)

என்று தொண்டர்களைக் கேட்கிறார் சம்பந்தர். அவர்கள் சிவநிந்தனை செய்துழன்றாலும் அவர்களிடமும் நீதிநெறி உள்ளதாகச் சம்பந்தர் குறிப்பிடுகிறார்.

> போதியாரும் பிண்டியாரும் புகழ்அலவே சொன்னாலும்
> நீதியாகக் கொண்டங்கு அருளும் நிமலன் (1.66.10)

அதே பாடலில் 'சாதி கீத வர்த்தமானர் சண்பை நகராரே' என்று சம்பந்தர் குறிப்பதை, தெ.பொ.மீ. அவர்கள் சம்பந்தர்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சமணர் தலைவர் வர்த்தமானரைத்தான் குறிப்பிடுகிறார் என்கிறார்.[40]

சிவனைத் தொழும் எல்லாச் சைவர்களையும் சம்பந்தர் ஏற்றுக்கொள்கிறார். ஆனால் சிவபரம்பொருளை ஏற்றுக் கொள்ளாதவர்களும் உண்டு என்பதைச் சம்பந்தர் அறிந்து வைத்திருக்கிறார். 'ஆயாதன சமயம் பல அறியாதவன் (1.11.5) என்று சிவனை ஆராய்ந்து உணர்ந்தனுபவிக்காதவர்களைச் சம்பந்தர் குறிப்பிடுகிறார்.

சில தரிசனங்களை அவர் ஏற்றுக்கொள்ளாது மறுக்கும் இடங்களும் உண்டு. தென் திருமுல்லைவாயில் பதிகத்தில (2.224.4) இருபத்தைந்து தத்துவங்கள்தான் உள்ளன என்ற கருத்தில் சிக்கியிருப்போருக்குச் சிவபெருமான் அறிதற்கு அரியவன் என்கிறார். (இதில் 24 தத்துவங்களும் ஒரு புருஷனும் சேர்த்து 25 தத்துவங்கள்). சாங்கியத் தத்துவ வாதிகள் 24 தத்துவங்களும் அவைகளை அறியும் ஒரு புருஷனையும் சேர்த்து 25 தான். அதற்குமேல் ஏதுமில்லை என்று கூறுவர்.

சிவபெருமான் இத்தத்துவங்களுக்கும் மேற்பட்டவன். எனவே சாங்கிய வாதத்தைச் சம்பந்தர் இங்கு மறுப்பதாகத் தெரிகிறது. அப்பரும் 'அய்யைந்தின் அப்புறத்தானும் ஆரூர் அமர்ந்த அம்மானே' (4.4.10) என்பது காண்க.

இது போலவே சமணர்கள், பௌத்தர்கள், ஆஜீவகர்கள் முதலியோரின் பல கோட்பாடுகளைச் சம்பந்தர் மறுப்பதைக் காணலாம். பௌத்தர்கள் க்ஷணிக வாதிகள் எனப்படு வார்கள். எதுவும் கணப்பொழுதில் மறையும் என்பது அவர்களின் கொள்கை. சம்பந்தர் இதனை மறுக்கிறார். இவர்களைக் 'கணிகை நோன்பினர்' (3.261.10) என்று அழைக்கிறார். சமணர்கள் ஆண்கள்தான் மோட்சம் அடைவார்கள்; பெண்களுக்கு இல்லை என்பார்கள். இந்தக் கருத்தை மறுத்து இறைவன் அருள் எல்லோருக்கும் உண்டு என்கிறார் (1.72.10). சமணர்களும் பௌத்தர்களில் வைபாசிகளும் மூலமான அணுக்களின் சேர்க்கைதான்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இவ்வுலகம் என்ற வாதத்தைக் கூறுவார்கள். சம்பந்தர் இவர்களை 'ஆரம்பர்' என்பார்: இந்த ஆரம்ப வாதத்தைச் சம்பந்தர் மறுக்கிறார் (1.10.10). சமணர்கள் மெய்ப்பொருளை உண்டு என்றும் சொல்லமாட்டார்கள்; இல்லை என்றும் கூற மாட்டார்கள். இதற்குச் சியாத்வாதம் என்று பெயர். 'அத்தகு பொருள் உண்டும் இல்லையும் என்று நின்றவர்' என்ற சமணர்களை மறுக்கிறார் சம்பந்தர். அதுபோல பௌத்த தேரர்களின் 'தேரவாதமும்' மறுக்கப்படுகிறது. ஆஜீவகர்கள் குணங்கள் இல்லை என்று வாதிடுவார்கள். சம்பந்தர் அவர்களை 'குணமிலிகள்' என்பார் (1.11.10). 'முயன்றால் பயன் விளையும்', 'கர்த்தா வேண்டுவதில்லை' என்ற கொள்கையை மறுத்து 'முயன்றன படும்' (3.335.70) என்ற பௌத்த சமய வாதங்களை மறுக்கிறார் சம்பந்தர்.

குறிப்புகள்

1. திருஞானசம்பந்த நாயனார் புராணம், 358, 375.
2. V.A. Devasenapathy, *'Invitation to Saiva Siddhanta' Perspective of Theism and Absolutism in Indian Philosophy*, R.K.M. Vivekananda College, Madras, 1978.
3. W.R. Inge, *"Christian Mysticism"*, 1899, p. 95.
4. 1.14.2; 1.16.5; 1.60.1; 1.132.4; 2.197.1; 2.207.4; 2.236.2; 2.250.2
5. 1.12.1; 2.200.2; 2.208.6; 2.254.9; 3.284.1
6. 'All that can, therefore be said about the history of South Indian Saivism in the earliest period of South Indian History is that in the early Centuries of the Christian Era, the Puranas were known to the Tamils and Saivism as known to the northerners was also known to the people of the South.

   C.V. Narayana Aiyar, *Origin and Early History of Saivism in South India*, University of Madras, 1979, p. 116.
7. The rise of Meykanda Sastra in the 13th and 14th Centuries owes its main inspiration to the Cannonical literature, but its emergence as a philosophical theology and scriptural evaluation must be understood against a foreground and background. The

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

background was the tradition of the *Śaivāgamas* which was kept alive through the vogue of *Upāgamas* and its commentaries and also of independent manuals recapturing the philosophical contents of the knowledge section of the major *āgamas*."

K. Sivaraman, *'Śaivism in Philosophical Perspectives'*, Motilal Banarsi Dass, Delhi, 1975 pp. 31-32.

8. செந்திநாத ஐயர், 'தேவாரம் வேதசாரம், மங்கையர்க் கரசியார், சென்னை, பிங்கள வருடம், சித்திரை மாதம், பக். 20–21.

9. சிவஞான முனிவர் இதனைக் கீழ்வரும் முதுமொழியோடு ஒப்பிட்டுக் கூறுகிறார். 'ஐங்கலப் பாரம் சுமத்தல் சாத்தனுக்கு விளையாட்டு' – சிவஞானபாடியம், கழகம் வெளியீடு, 1968, பக். 112.

10. "From the time of the Upanisads India rejects the world as it is and devaluates life as it reveals itself to the eyes of the sage; ephimeral, painful, illusory. Such a conception leads to neither nihilism nor pessimism. This world is rejected, this life depreciated, because it is known that *something else exists*, beyond becoming, temporality, beyond suffering. In religious terms it could almost be said that India rejects the *profane* cosmos and *profane* life, because it thirsts for a sacred world and a sacred mode of being."

Mircea Eliade, ***Yoga, Immortality and Freedom*** translation of French by Willard R. Trask, Bollingur Series, L.VI, Pantheon Books, 1958, p. 10.

11. சிவஞான யோகி, சிவஞானபாடியம், கழகம் வெளியீடு, சென்னை, 1968, பக். 484.

மேலும் உமாபதி சிவாசாரியார் அருளிய சிவப்பிரகாசம் பாடல் ஒன்று (10) உயர் ஞானத்தை இரண்டு வகையாகப் பிரிக்கின்றது. ஒன்று திருவருளால் பெறுவது. மற்றது சிவாகமத்தை கற்றறிகையில் பெறப்படுவது.

'...மலம் அகல அகலாது மன்னுபோதத்
திருவருள் ஒன்று ஒன்று அதனைத் தெளிய ஓதும்
சிவாகமம் என் றுலகறியச் செப்பும் நூலே'

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

12. என். கதிரைவேல் பிள்ளை (பதி.) 'ஸ்ரீமத் தாயுமான ஸ்வாமிகள் திருப்பாடல் திரட்டு,
பி. இரத்தினநாயகர் சன்ஸ், சென்னை, *1935, 10.3*, பக். *164*.
13. 'தயா மூல தன்ம மென்னும் தத்துவம்' *(6.20.6)*; 'தயா மூல தன்ம வழி' *(6.40.6)* – அப்பர்.
14. Hiriyanna says:

"Infact several systems which develop now do not set about investigating their proper subject until they have given us what may be described as a critique of knowledge and considered how we come by truth. In other words, Indian philosophy, becomes, self conscious at this state, and logic emerges as an explicit branch of it."

M. Hiriyanna, *Outlines of Indian Philosophy*, Allien and Unwin (India) Private Ltd., Bombay, 1976, p. 177.
15. V.A. Devasenapathi, *Śaiva Siddhanta*, University of Madras, Madras, p. 16.
16. மெய்கண்ட சாத்திரம் பதினான்கு, கழகம் வெளியீடு, *1969*, பாயிரம் *5*.
17. "வாத சாத்தி மிருதிபுராணம் கலை ஞானம்
...நாதமுடி வானவெலாம் பாசஞானம்"

மேற்கோள் – C.K. சுப்பிரமணிய முதலியார், திருத்தொண்டர் புராணம் என்னும் பெரியபுராணம் பாகம். *5*, கோவைத் தமிழ்ச்சங்கம் வெளியீடு, கோயம்புத்தூர், *1.6.1950*, பக். *1016*.
18. திருஞானசம்பந்த நாயனார் புராணம், அடிக்குறிப்பில் இராமநாத செட்டியாரின் கூற்றை C.K. சுப்பிரமணிய முதலியார் மேற்கோள் காட்டும் இடம். பக்கம். *1019*.
19. See his *Philosophy of Mysticism*, 1919, pp. 33 ff.
20. P.N. Srinivasachari, *'Mystics and Mysticism*, Sri Krishna Library, Madras, 1951, p. 284.
21. *Bṛahadāraṇyaka Upaniṣad*, II, IV.5. *The Upanisad*, Swamy Nikhilananda (Tr.) Vol. III, Harpert and Brothers Publishers, New York, 1956. p. 176.
22. மேற்படி; I. iv, 3, Vol. III, p. 113.

In Public domain, Digitization Muthulakshmi Research Academy

23. B.R. Purushothama Naidu, Tiruvāymoḻi - Īṭṭin Tamilākkam Mutarpāṭṭu, part I, University of Madras, 1971, pp. 28, 29.

24. P.S. Shelly, *'Ode to West Wind'*
J. Keats, *'Ode to the Nightingale'*
புறநானூறு, *66;* சிலப்பதிகாரம், கானல்வரி, *23.*

25. 'ஞாயிறு திங்கள் அறிவே நாணே
கடலே கானல் விலங்கே மரனே
புலம்புறு பொழுதே புள்ளே நெஞ்சே
அவையல பிறவும் நுவலிய நெறியால்
சொல்லுந போலவும் கேட்டுந போலவும்
சொல்லியாங்கு அமையும் என்பனார் புலவர்'
சூத்திரம் *513,* பொருளதிகாரம், பேராசிரியர் உரை, கழக வெளியீடு, சென்னை, பக். *410.*

26. S. Michael Irudayam, *'Treatment of Nature in Tiruvā*imoḻi in Proceedings of the Second International conference Seminar of Tamil Studies,
Vol-II International Association of Tamil Studies, Madras, 1971, p. 165, also see J.S.M. Hooper, *'Hymns of the Āḻvārs*, First Reprint, Pioneer Book Service, Madras, 1985. p. 60.

27. M.A. Dorai Rangaswamy, *'The Religion and Philosophy of Tevāram*, Book II, Vol. IV, University of Madras, 1959, p. 1248

28. மேற்படி - (quoting from P.N. Srinivasachari, *Mystics and Mysticism*. p. 306). பக். *1248.*

29. மேற்படி பக். *308-309.*

30. M. Arunachalam Pillai, 'அவனேதானே ஆதல்' 'பொன் விழா மலர், சைவசித்தாந்த சமாஜம், சென்னை, *14, 1955,* பக். *96.*

31. க. வெள்ளைவாரணன், 'பன்னிரு திருமுறை வரலாறு' அண்ணாமலைப் பல்கலைக்கழகம், பகுதி. *1.* அண்ணாமலை நகர், *1972,* பக். *876, 877.*

32. *Saiva Siddhanta*, Vol. XIV,No. 3, Madras, December 1979, Meditoria, p. iii.

33. வை. இரத்தின சபாபதி, 'திருமுறைத் திரட்டே சிவஞான போதம்'.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

34. V.K. Subramanian, (tr.)
Soundarya Lahari, Motilal Banarasi Dass, Delhi, 1977, p. 40

35. வீரை கவிராஜ பண்டிதர் என்பவர் 'சௌந்தர்ய லஹரி'யைத் தமிழில் வெளியிட்டிருக்கிறார். இதன் உரையாசிரியர் சைவ எல்லப்ப நாயகரும் பண்டிதரும் திராவிட சிசு சம்பந்தரே என்று அழுத்திக் கூறுகின்றனர்.

36. திருமுருகாற்றுப்படை, வரிகள், *294, 295, 63.*

37. T.P. Meenakshisundaram, *Advaita in Tamil*, University of Madras, 1974, p. 15.

38. *Ibid.*, p. 18.

39. A.R. Malaiappa Sastri, "நால்வர் மொழியில் அத்வைதம்", *Advita Siddhanta Ponvila Malar*, Sri Kamakoti Kosharthanam, Kumbakonam, 1952, pp. 77-87.

40. தெ.பொ.மீ, சம்பந்தரும் சமணமும், ருத்ரா பதிப்பகம், சென்னை, *1957*, பக். *73.*



In Public domain. Digitization Muthulakshmi Research Academy

4

சம்பந்தர் காட்டும் சமயநெறி

4.1. ஒரு பார்வை

> தத்துவ சாத்திரம், முழுமையைத் தர்க்க முறையில் ஆராய்ந்து விடைகாண முயலுகிறது; ஆனால் சமயமோ நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டே விடை தருகிறது. தத்துவ சாத்திரம் (உலகில் உள்ள) பொருள்களைக் கருத்துகளைக் கொண்டு விளக்க முயல்கின்றது. ஆனால் மனத்திற்கு நிறைவான சின்னங்கள் சமயங்களின் களங்களாகத் திகழ்கின்றன... தர்க்கரீதியான கேள்வியிலிருந்து தத்துவ சாத்திரம் தோன்றுகிறது; கொள்கை வகையில் ஏற்படும் நிறைவைத்தான் அது நாடுகிறது. தத்துவக்காரர்கள் காரணகாரியத் தொடர்பு காட்டி வாதிடும்பொழுது சமயத்தில் உள்ளவர்கள் நம்பிக்கையோடு செயல் படுகிறார்கள்; வாழ்கிறார்கள்; அன்பைக் காட்டுகிறார்கள்.

என்று டாக்டர் இராதாகிருஷ்ணன் தத்துவத்திற்கும் சமய உணர்வுகளுக்கும் உள்ள அடிப்படை வேறுபாடுகளை விளக்குகிறார்.[1] சம்பந்தரை ஒரு தத்துவவாதியாகவும் சமய நெறியினராகவும் நாம் அறிந்து கொள்வதற்கு இராதா கிருஷ்ணனின் மேற்கண்ட கருத்துகள் பெரிதும் உதவும் என்று நம்புகிறோம். ஆனால் சம்பந்தர் ஒரு தத்துவவாதி அல்லர். அவரை ஒரு கோட்பாட்டிற்குமட்டும் உரியவர் என்று அடக்கிவிடவும் முடியாது. அவருடைய மெய்ஞ்ஞான உணர்வுகள் அவருடைய அன்பிலிருந்து தழைத்து வருபவை; சிவ பக்தியிலிருந்து பெருகுபவை. 'பத்தியில் வருவன' (1.124.11) என்றும் 'பத்திமைப் பாடல்கள்' (1.8.2) என்றும் அவரே

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

குறிப்பிடுகிறார். சிவன்பால் சித்தம் வைத்த காரணத்தால் அவரைச் சைவர் என்று நினைக்கலாம். ஆனால் சைவர் களுக்குள் எந்தப் பிரிவிலும் அவரை அடக்கிவைத்துப் பார்க்க முடியாது. ஏனென்றால் சிவன் என்னும் செம்மேனிப் பெருமானைச் சித்தம் வைத்து அன்பு கொள்பவர் அனைவரையும் அவர் தழுவி ஏற்றுக்கொள்கிறார்; அன்பு கொள்கிறார். அதற்குக் காரணம் அவரது அசைக்க முடியாத நம்பிக்கை. எல்லா அறிவிற்கும் மூவுலகில் வாழும் எல்லா உயிர்களுக்கும் சிவனே முழுமைப்பொருள் என்று அவர் திண்ணமாக எண்ணம் கொண்டிருந்தார். 'முன்னிய கலைப்பொருளும் மூவுலகில் வாழவும் பன்னிய ஒருத்தர்' (1.165) என்பது அவரது உறுதி. சமய நெறியில் அவர் தம்முடைய இசையாலும் தமிழாலும் அந்தக் காலத்து முறைப்படி இறைவனை வழிபடும் நெறியில் வந்தவர். தம்முடன் வந்துள்ள அடியார்களையும் அவ்வாறே வழிபட அன்புடன் அழைப்பதைப் பார்க்கிறோம்.

உயர்ந்த தத்துவ ரகசியங்களைப் புராணக் கதைகளில் வைத்து விளக்கும்பொழுது எளிதில் புரிந்துவிடுகின்றன. சிவபெருமானின் வீரச் செயல்களையும் அருள் வெளிப்பாடு களையும் அவர் பாடுகிறார். ஒவ்வொரு கோயிலுக்குச் செல்லும்பொழுதும் அவை அழகாக வெளிவருகின்றன. புராணங்களின்மூலமாக சமயத்தின் உள்ளார்ந்த கருத்தை எல்லோரும் எளிதில் உணர்ந்து கொள்ளும்படியாக அவர் பாடிச் சொல்கிறார்.

புராணச் சக்திகள் கவிதையாகமட்டும் வெளிவருவ தில்லை. கலையிலும், சிற்பங்களிலும் இசையிலும் பொங்கி வருகின்றன. அப்பொழுது அவை மிகப்பெரிய உண்மை களின் சக்தி வாய்ந்த சின்னங்களாகவே மிளிர்ந்து திகழ் கின்றன. இந்தக் கதையும், கவிதையும் பிறவும் நம் நாட்டுக் கோயில்களில் குடியேறி விளங்குவதைப் பார்க்கின்றோம். அந்த ஆலயங்களும் அழகான இயற்கைச் சூழலில், பின்னணியில் ஆற்றங்கரைகளிலும், சோலைகளின் நடுவே யும், குன்றும் மலையுமான பகுதிகளிலும் அமைந்துள்ளன.

In Public domain, Digitization Muthulakshmi Research Academy

நாயன்மார்கள், சிறப்பாகத் தேவார ஆசிரியர்களும் ஆழ்வார்களும் இந்த மண்ணை விளக்க வந்த பிறகு ஆலயங்களும் அவற்றின் கலைச்சிறப்பும் தமிழகப் பரப்பு எங்கும் வீறுகொண்டு எழுந்தன. ஆலய வழிபாடு சாலவும் நன்றென மதிக்கப்பட்டது. மேலும் ஆலயங்கள் வழிபாட்டுத் தலங்களாகமட்டும் விளங்கவில்லை. தமிழக மக்களின் சமுதாயப் பொருளாதார வாழ்வின் மையங்களாகவே திகழ்ந்தன. ஆகமங்கள் ஆலயங்கள் எழுந்து தோன்றுவதற்கு வழிமுறைகளையும் நெறிமுறைகளையும் வகுத்துக் கொடுத்திருக்கின்றன. சம்பந்தரது பாடல்களில் பல வகையான வழிபாட்டு முறைகள் பேசப்படுகின்றன.

4.2. புராணங்களின் மொழியில்

இறைவன் முழுமுதற் பொருள். அதனைச் சிவன் என்றே அணுகுகிறார் சம்பந்தர். ஆனால் அவனோ 'சொல் தெரியாப் பொருள்; சோதிக்கு அப்பால் நின்ற சோதி' *(3.267.10)* அவனது இயல்பினை அறிவார் யாருமில்லை ('தன்மை யாரும் அறிவாரிலை' – *2.142.2*). அவர் மிகப் பெரியவர். யாரால் அவருடைய தன்மை அறியமுடியும் ('பெரியர், யார் அறிவர் அவர் பெற்றியே' – *3.312.2*); என் தந்தையாகிய அவரது நிலை என்னவோ ('எந்தையார் அவர் எவ்வகையார் கொலோ' – *3.312.3*) இவ்வாறெல்லாம் சொல்லும்பொழுது சம்பந்தர் இறைவனுடைய யாவும் கடந்து நிற்கும் சொரூப நிலையை வெளிப்படுத்துகிறார். ஆனால் அதே நேரத்தில் அவர் இறைவனை நன்றாக அனுபவிக்கவும் செய்கிறார். அந்த இன்ப அனுபவம், அவர் தலைசிறந்த கவிஞர் ஆனதால், தேன் கலந்த பாடல்களாகக் கொட்டுகிறது. இத்தகைய பாடல்களை நாம் கூர்ந்து கவனித்தால் அவற்றில் இரண்டு நிலைகள் தென்படுகின்றன. சில பாடல்களில் சம்பந்தர் இறைவனை முழுமுதற் பொருளாகக் கண்டு உணர்ந்து பாடுகிறார். வேறு சிலவற்றில் அவர் வாழ்ந்த சமுதாயம் இறைவனைச் சிவனாகக் கொண்டு அவனுக்கு உரிய அடையாளங்களையும், புராண வரலாறுகளையும் பின்னி வைத்துப் போற்றுவதை அவரும் பின்பற்றிச்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிவனுடைய 'சரிதைகளையும்' இயல்புகளையும் அவனோடு சேர்த்து வைத்துப் பாடுகிறார்.

இப்பொழுதெல்லாம், வரலாற்று ஆசிரியர்களும் மனோ தத்துவ நிபுணர்களும் மிகச் சீரிய மெய்யுணர்வு, சமய உண்மைகளை புராணங்கள் வாயிலாகவும் நல்லிசை வழியாகவும் வெளியிட இயலும்; மற்ற வழிகளால் அல்ல என்பதைத் திடமாகச் சொல்கிறார்கள். இதுபற்றிக் 'கெரண்யி' என்ற ஹங்கேரிய நாட்டு அறிஞர் எழுதுவதைக் காண்போம்.

> சில கால நிலைகள் இருக்கின்றன. அப்பொழு தெல்லாம் மிகச் சிறந்த 'சிந்தனைகளை' இசை மூலமாக மட்டிலும் வெளியிட இயலும். ஆனால் எல்லாவற்றிலும் மிகமிகச் சிறந்த ஒன்றை இசையால் மட்டும்தான் எடுத்துச் சொல்ல முடியும்; வேறு எந்த வழியிலும் அல்ல. புராணங்களும் அப்படிப் பட்டவைகளேயாம்.[2]

ருடால்ஃப் ஆட்டோ என்பவர் ஒரு புகழ்பெற்ற சமய வரலாற்று ஆசிரியர். எல்லாச் சமய உணர்வுகளுக்கும் அடிப்படையாக இருப்பது ஒரு வேறுபட்ட சிந்தனை (உணர்வு). இதனை அவர் 'நியோமின்' (numen) என்றழைக் கிறார். அந்த வேறுபட்ட சிந்தனை என்பது ஆழங்கால் தெரியாத அடி உணர்வு. மனிதன் இந்த உணர்வினால் ஆட்கொள்ளப்படுகிறான். சில சின்னங்களாலும் கருத்து வடிவங்களாலும் இதனை ஓரளவு உணர்ந்து கொள்ளலாம்.[3] என்கிறார்.

ஆலன் W. வால்ஸ் என்பவர், 'புராண வடிவம் என்பது, புதுமை விமர்சகனின் கருத்துப்படி, பல்வேறு கற்பனைகளின் தொகுப்பே. அல்லது நடந்ததையோ கற்பனையாகவோ கூறப்படும் ஒரு கதையைப் போன்றது. வாழ்வின் ஆழமான உண்மைகளை இவை குறிப்பிடுகின்றன' என்று கூறுகிறார்.[4]

அவர் கெரண்யிக்குச் சொல்லும்பொழுது, 'புராணம் ஆர்ஃபியஸ் என்றும் கடவுளின் துண்டிக்கப்பட்ட தலையைப் போல் சாவிலும், அதன் பின்னாலும்கூடப் பாடிக் கொண்டேயிருக்கிறது. அதன் வாழ்நாளில், அது எங்கு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தோன்றியதோ அந்த இடத்தில் வாழ்ந்த மக்களுக்கிடையே அது ஓர் இசையாக மட்டும் பாடப்படவில்லை; அந்த மக்கள் அதுவாகவே வாழ்ந்திருக்கிறார்கள்' என்றும் கூறுகிறார். அதாவது புராணங்களை அந்த மக்கள் தங்கள் வாழ்க்கை யாகவே கருதி வாழ்ந்திருக்கிறார்கள்; அவை அவர்களது வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்து போயிருக்கின்றன.

இந்தக் கருத்துகளைச் சொன்னவர்க்ள் மேல் நாட்டார்கள் என்றாலும் புராணங்கள் கடவுள்களைப்பற்றிச் சொல்லும் வெறும் கதைகள் இல்லை; அவற்றில் சில ஆழமான உண்மைகள் பொதிந்திருக்கின்றன என்பதை அறிந்துகொள்ள உதவியாக இருக்கின்றன.

திருஞானசம்பந்தர் எல்லையில்லா, மனவாசகம் கடந்த பொருளை ஒன்றி உணர்ந்தவர்; இருப்பினும் மெய்ப்பொருள் உண்மைகளைப் புராணங்கள் போன்ற உத்திகளால் நமக்கு எளிமையாகக் காட்டியிருக்கின்றார். நம் நாட்டில் புராண வரலாறுகள் ஏராளமாக இருக்கின்றன. C.G. யுங் (Jung) போன்ற உளத் தத்துவ வல்லுநர் எல்லோருக்கும் ஒரு சமுதாய நினைவு (racial memory) இருக்கிறது. புராணங்கள் அத்தகைய உணர்வுகளின் கருவூலமாக விளங்குகின்றன என்கிறார்.[5]

4.2.1 சம்பந்தரது பாடல்களில் புராணக் குறிப்புகள்

திருஞானசம்பந்தர் கூறும் புராணக் கதைகளை அலசிப் பார்க்கும்போது அவைகளை இரண்டு வகைகளாகப் பிரித்துக்காண இடம் இருக்கிறது.

முதல் வகையில், சிவபெருமானைப் பற்றிய புராண வரலாற்றுக் குறிப்புகள் சில கதைகளில் பொதிந்திருக்கின்றன. மற்றொரு வகையில் சிவபெருமானுடைய திருமேனியில் அணியப்பெற்றுள்ள ஆடை அணிகலன்கள், சில அடையாளங்களைப் பற்றிய விவரங்கள் பாடல்களில் ஏராளமாகக் காணக் கிடைக்கின்றன.

சிவபெருமானின் கதைக் குறிப்புள்ள செயல்களைச் சம்பந்தர் 'சரிதைகள்' என்று கூறுகிறார். இந்தச் சரிதைகளைத்

In Public domain, Digitization Muthulakshmi Research Academy

திரும்பத் திரும்பப் பாடுவதில் அவருக்குப் பெரு விருப்பம். 'பிறை உடை அண்ணல் சரிதைகள் பரவி நின்று உருகு சம்பந்தன்' (1.78.11) என்று தன்னை அழைத்துக் கொள்வதிலேயே அவருக்கு அத்தனை ஆசை!

இந்தச் சரிதைகள் பலப்பல; பல வகைகள். அவைகளை ஒரு முறைப்படுத்தித் தொகுத்து வழங்க இங்கு முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. அவைகளில் சிவபெருமானின் வீரச் செயல்களைக் குறிக்கின்றன. எட்டுவகை வீரச் செயல்கள் எட்டு இடங்களில் நடைபெறும். இவைகளை அட்டவீரட்டம் (அஷ்டவீரஸ்தானம்) என்பார்கள். சிவனைப் பற்றிய பெரும்பான்மையான வரலாறுகளை இந்த எட்டிற்குள் வைத்துக் காண முடியும். இதன் கருத்து, தமிழகக் கோயில்களின் வரலாற்றில் ஒரு குறிப்பிடத்தக்க சிறப்பினைப் பெற்றிருக்கிறது. அவருடைய வீரத்தையும் அன்பையும் பற்றிப் பேசும் கதைகள் இருக்கின்றன. சிவனின் வீரமே அன்பின் விளைவாகக் காட்டப்படுகிறது. இதனை மறக்கருணை என்பார்கள். சில கதைகள் சிவபிரானின் தத்துவங்களையும் தன்னிகர் அற்ற தன்மையையும் காட்டவல்லவை.

சம்பந்தரது காலத்தில் புராணக் கதைகள் மிகவும் பரவலாகப் போற்றப்பட்டு வந்திருக்கின்றன. அந்தக் கதைகளின் 'கரு' சம்பந்தரது கலைவண்ணக் கைவண்ணத்தால் மேலும் மெருகூட்டப்பட்டுள்ளன; மக்களின் உணர்வுகளும் கற்பனைகளும் அவருடைய பாடல்களில் இடம் பெற்று மிக உயர்ந்த தரத்திற்கு ஏற்றப்பட்டிருக்கின்றன. அவைகள் வெறும் கதைகள் இல்லை; இந்தப் பேருலகைப் பற்றிய பல சிந்தனைகளை, உண்மைகளை நமக்கு எடுத்துச் சொல்கின்றன அவை.-

4.2.2 வீரம் விளைத்த திருஅருள் செய்கைகள்

வீரம் விளைத்த தானங்கள் வீரத்தானங்கள் என வழங்கப்படுகின்றன. இவைகள் எட்டானதால் அவைகள் 'அட்டத்தானங்கள்' என வழங்கப்படுகின்றன. சம்பந்தர் 'அட்டானம்' (2.176.3) என்று அழைக்கிறார். இந்த எட்டு வீரச்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

செயல்களும் தமிழகத்திற்குள்ளாகவே நடந்திருப்பதாகக் கருதப்படுகின்றன. அவைகள் திருவதிகை, திருப்பறியலூர், திருக்குறுக்கை, திருவழுவூர், திருவிற்குடி, திருக்கடவூர், திருக்கோவலூர், திருக்கண்டியூர் என எட்டுத் தலங்கள்.

நாவுக்கரசரும் 'அட்டானம்' என்ற சொல்லையே பயன்படுத்துகிறார். இதனால் இந்தக் கதைகள் தேவார ஆசிரியர்கள் காலத்தில் நன்கு பிரபலமாகியிருந்தன என்று தெரிகிறது. அட்டானங்களில் ஆறு தானங்களைப் பற்றிய பதிகங்களே இன்று கிடைத்திருக்கின்றன. குறுக்கை, வழுவூர் பதிகங்கள் கிடைக்கவில்லை. ஆனால் சம்பந்தர் எட்டு வீரச்செயல்களையும் பற்றிக் குறிப்பிடுகிறார். அவை: (1) அந்தகன் வதம், (2) காமதகனம், (3) காலசம்ஹாரம் (4) ஜலந்தரனை வதைத்தல், (5) தட்சனை வதைத்து அவனது யாகத்தை அழித்தல், (6) திரிபுர தகனம், (7) பிரம்ம சிரச்சேதம், (8) கஜமுகனைத் தோல் உரித்து அழித்தல் என்பவை.

இங்கு இந்தப் புத்தகத்தில் எட்டு வீரச்செயல்கள் சுருக்கமாக விளக்கப்பட்டுள்ளன.

4.2.2.1 அந்தகன் அழிவு

அந்தகன் ஓர் அசுரன், அவன் தனது பலத்தால் தேவர்களைத் துன்புறுத்தினான். மத்ஸ்ய புராணம் அவன் பார்வதியை எடுத்துச் சென்ற போது சிவபிரான் அவனை அழித்ததாகக் கூறுகிறது. வானுலகின் பாரிஜாத மரத்தையும் அபகரித்துச் சென்றான். அவனை 'அந்தன்' என்பார் சம்பந்தர்; தன் திரிசூலத்தால் சிவபிரான் அவனை வதைத்ததை மூன்று பாடல்களில் குறிக்கின்றார் (1.12.5; 3.267.3; 3.296.10) இவைகளைத் தவிர பதிகங்கள் (2.167.7), (2.255.6) ஆகியவையும் அந்தகனை ஆண்டவன் நைய அழித்த வரலாற்றைச் சொல்கின்றன.

அந்தகனை இறுதியில் இறைவனுடைய அருள் ஆட்கொண்டு அவனைச் சிவகணங்களுள் ஒருவனாக ஏற்றுக்கொண்டு விட்டது என்ற செவிவழிச் செய்தி கூறுகிறது. தமிழ் வழக்குப்படி இந்த வீர நிகழ்ச்சி திருக்கோவலூரில் நிகழ்ந்தது என நம்பப் படுகிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

4.2.2.2 காமன் எரிந்தான்

தட்சனது யாகம் சிதைந்தது. அதன்பின் தாட்சாயினி இமவான் திருமகளாக, ஹைமாவதியாகத் திருஅவதாரம் செய்தாள். அவளுடைய உயிரும் உள்ளமும் சிவபிரானிடத்தி லேயே லயித்திருந்தன. எப்படியும் அவனை மணந்துகொள்ள வேண்டும் என்ற உறுதியுடன் கடுந்தவம் புரிந்தாள். சிவபெருமானோ கற்றைச் சடைமுடி வைத்த முனிவனாக இமயமலையில் தன் சீடர்களுக்கு 'நல்லறம் உரைத்து ஞானமோடிருந்தான்' (1.75.7).

தாரகன், சிங்கமுகன், சூரபத்மன் என்ற முப்பெரும் அசுரர்களின் கொடுமைகளை அழித்து தேவர்களைக் காப்பதற்காகத் திருமுருகன் தோன்ற வேண்டும். இந்திரன் முதலிய இமயவர் வேண்ட 'காமன்' என்னும் மன்மதன் சிவனது தவத்தைக் கலைத்துக் காமவயப்படச் செய்வதற்காக அனுப்பப்பட்டான் (2.167.6). 'வளைக்கும் திண்சிலை மேல் ஐந்து பாணமும் தான் எய்து களிக்கும் காமன்' என்று அவன் சிவபிரான்மீது மலர் அம்புகளைத் தொடுத்துக் களித்தான் (2.139.2). அதனைக் கண்டு வெகுண்டான் சிவன். தன் நெற்றி ஒற்றைக் கண்ணைத் திறந்து காமனைச் சுட்டெரித்துச் சாம்பலாக்கினான். இவ்வாறு காமனைக் கண்ணால் எரித்துப் பொடியாக்கிய இந்த வீரச் செயலைச் சம்பந்தர் 75 பாடல்களில் பாடிச் சிறப்பித்திருக்கிறார்.

இங்கு ஒரு சுவையான செய்தியைத் தெரிந்து கொள்கிறோம். அசுரர்களின் மும்மதில்களை அழித்த பிறகே – திரிபுர தகனத்திற்குப் பிறகே, இறைவன் காமனை வெந்தழியச் செய்தான் என்று சம்பந்தர் கூறுகிறார்: "விண்டவர்தம் மதில் எய்த பின் வேனில் வேள் வெந்தெழக் கண்டவர்" (2.256.2).

காமன் தேவி ரதி முறையிட்டு வேண்ட அவளுக்கு அருள்பாலித்த அருள் செயலை 'சுரும்புஅமர் வில்லியைக் காய்ந்து காதல் காரிகை மாட்டு அருளி' (3.358.1) என்று பாடுகிறார் சம்பந்தர். அவள் பெற்ற வரத்தால் காமன்

In Public domain, Digitization Muthulakshmi Research Academy

மீண்டான்; ஆனால் உருவமற்றவனாக. திருக்குறுக்கையில் இந்த நிகழ்ச்சி நடந்ததாகத் தமிழ் வழக்கு இருக்கிறது.

4.2.2.3 காலகாலன்

சாவினை வென்று நிலைத்திருக்க வேண்டும் என்பது மனிதனுடைய ஆசை. சைவர்கள் இந்த ஆசையை, லட்சியத்தைக் 'காலகாலன்' என்ற சிவபெருமானுடைய கருத்து வடிவத்திலேயே நிறைவேற்றிக் கொண்டார்கள் என்றே சொல்லலாம். இது சாவை அழிக்கும் செயல் மட்டிலுமில்லை. இது மார்க்கண்டேயர் போன்றவர்களுக்குச் சாவாத நிலையைக் கொடுக்கும் அருட்செயலுமாகும்.

இந்தப் புராண நிகழ்ச்சி தமிழகத்து மக்களுக்கு மிகவும் அறிந்து மகிழத்தக்க நிகழ்ச்சியாகும். புறநானூற்றில் *(365)* மார்க்கண்டேயனார் என்ற புலவர் ஒருவர் உலகின் நிலையாண்மையைப் ப்ற்றிச் சிறப்பாகப் பாடியுள்ளார்.

புராணத்தின்படி, மார்க்கண்டேயர் என்பவர் மிருகண்டு என்னும் முனிவரின் வரத்தால் தோன்றியவர். மிருகண்டுவின் விண்ணப்பப்படிச் சிவபெருமான் முனிவருக்கு நீண்ட ஆயுளும் ஆனால் பயனில்லாத பல பிள்ளைகளைக் காட்டிலும் 16 ஆண்டுகளே வாழப்பிறந்த ஒரு பிள்ளையைத் தந்தருளினார். மார்க்கண்டேயருக்குப் பதினாறு ஆண்டுகள் வந்தவுடன் பெற்றோர்கள் கவலையடைந்தார்கள். ஆனால் மார்க்கண்டேயரோ ஆலயம் சென்று சிவபெருமானை உள்ளார்ந்த பக்தியுடன் வழிபட்டு உறுதியாய் நின்றார். அந்த நேரத்தில் எமதூதுவர்கள் அங்கு வந்து அவரை நெருங்க முடியவில்லை. வெகுண்டு காலனே வந்தான். தன் பாசத்தை வீசிப் பிள்ளையைப் பற்றி இழுத்தான். மார்க்கண்டேயனோ சிவலிங்கத்தை இறுகத் தழுவிக்கொண்டான். சிவபிரான் லிங்கத்திலிருந்து வீறுகொண்டு எழுந்தார்; காலனைத் தன் காலால் மார்பில் உதைத்து வீழ்த்தினார். பக்தியின்பால் பட்ட மார்க்கண்டேயன் காலனது பிடியிலிருந்து மீண்டான் என்றும் சிரஞ்சீவியாக வாழும் வரம் பெற்றான் என்றும், ஏறத்தாழ 120 பாடல்களில் சிவபெருமானின் இந்த அருள்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வீரத்தைப் பாடிப் பரவியிருக்கிறார் சம்பந்தர். இதைப் பாடிப் பாடிப் புகழ அவர் விரும்பியிருக்கிறார் என்பதை,

... ஓர் காலனைக்
கடுத்துஅடிப் புறத்தினால் நிறத்து உதைத்த காரணம்
எடுத்துஎடுத்து உரைக்குமாறு வல்லமாகில் நல்லமே"
(2.234.2)

என்று பாடுகிறார்.

மார்க்கண்டேயனுடைய புகழையும் பெருமையையும் 27 பாடல்களில் சிறப்பிக்கின்றார். திருக்கடவூரில் இந்த வீரம் நிகழ்ந்ததாகத் தமிழ் வழக்கு உண்டு.

4.2.2.4 ஜலந்தரன் மாண்டொழிந்தான்

சிவ்புராணம் வழங்கும் செய்திப்படி திரிபுர தகனத்திற்குப் பின்னால் சிவபெருமானின் நெற்றிக் கண்ணிலிருந்து கிளம்பிய தீ சிந்துநதி கடலுடன் கலக்கும் இடத்தில் செலுத்தப்பட்டது. அந்த ஜலத்திலிருந்து ஒரு குழந்தை எழுந்தது. அப்பாலகன்தான் ஜலந்தரன் என்பவன். வளர்ந்து வாலிபன் ஆனவுடன் அவன் பிருந்தா என்னும் கற்பிற்கரசியை மணந்தான். வலிமை மிகுந்த அவன் தேவர்களை நசுக்கி அவர்களது நகரங்களைக் கொள்ளை யடித்தான்; பார்வதியைத் தன்னிடம் ஒப்படைத்துவிடுமாறு சிவனுக்கே அறைகூவல் செய்தான்; சிவன் சினந்து எழுந்தான். இருவருக்கும் நடந்த கடும் போரில் சிவபெருமான் சுதர்சனம் என்ற சக்கரத்தால் அவனைப் பிளந்தெறிந்தார்.

தமிழ் வழக்குப்படிச் சிவபெருமான் தன் கால்விரலால் கீறிய வட்டம்தான் சுதர்சனச் சக்கரமாக ஆகிவிட்டது என்பார்கள் (திருமந்திரம், 342). அந்தகனால், அந்தச் சக்கரத்தைத் தலை வரையில் தூக்க முடியுமா என்ற சோதனை எழுந்தது. அவன் முனைப்புடன் எடுத்து நிறுத்தியபொழுது அந்தச் சக்கரம் அவனது உடலை இரண்டாகப் பிளந்துவிட்டது. இந்தச் செயல் திருவாரூருக்கு அருளில் உள்ள திருவிற்குடியில் நிகழ்ந்ததாக நம்பப்படுகிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வேறு ஒரு செய்தியும் கூறப்படுகிறது. சிவபெருமான் திருமாலுக்கு அந்த சுதர்சனத்தைத் தந்தருளினார். திருமால் மகிழ்ந்து ஆயிரம் தாமரை மலர்களால் அவரை வழிபட்டார். அப்பொழுது ஒரு மலர் குறைந்தது. அதைக்கண்டு திகைத்த திருமால் தன் கண்ணொன்றைப் பறித்து மலராக அர்ச்சித்தார்.

ஜலந்தரனைப் பிளந்து நிகழ்த்திய வீரச் செயலைச் சம்பந்தர் ஏழு பாடல்களில் குறிப்பிட்டிருக்கிறார். ஒரு பாட்டில், 'சக்கரம் மாற்கு ஈந்தானும் சலந்தரனைப் பிளந்தானும்' – (2.184.7) என்று இரண்டு நிகழ்ச்சிகளையும் சேர்த்தே கூறுகிறார்.

4.2.2.5 தட்சனது வேள்வி சிதைந்தது

சிவபெருமான் தட்சன் செய்த வேள்வியைச் சிதைத்ததில் சமய, வரலாற்றுப் பின்புலன்கள் காணப் படுகின்றன. அக்காலத்தில் சிவனடியார்களுக்கும் திருமால் பக்தர்களுக்கும் இடையே ஒரு காழ்ப்புணர்ச்சி இருந்திருக்க வேண்டும். சிவபெருமானின் மகத்துவம் இந்தக் கதையின் மூலம் உலகத்திற்கு எடுத்துரைக்கப்பட்டது.

மகாபாரதத்தில் உள்ள சாந்தி பர்வத்தில் இந்தக் கதை இடம்பெறுகிறது. சிவன் ஏன் தட்சன்து யாகத்தைச் சிதைத்தார் என்பதற்கு இரண்டு மூன்று காரணங்கள் எடுத்துக்காட்டப்படுகின்றன. ஆனால் ஒரே ஒரு காரணத்தை எல்லோரும் ஒப்புக்கொள்கிறார்கள்.

தட்சன் மிகப்பெரிய யாகம் ஒன்றைச் செய்தான். அதற்கு விஷ்ணு, பிரம்மா முதலிய தேவர்கள் அனைவரையும் மரியாதையுடன் அழைத்திருந்தான். ஆனால் சிவ பெருமானை அழைக்கவில்லை. அதோடு அவரை நிந்தனையும் செய்திருக்கிறான். இதனால் சினம் அடைந்த சிவபிரான் அவனது யாகத்தை அழித்தார்.

தட்சன் சிவனின் மாமன் ('மாமடி' – 2.170.7) என்று சம்பந்தர் கூறுகிறார். அவன் தன் மகள் தாட்சாயிணியை அவமதித்தான். '...புரிகுழல் உமைதனை, இகழ்வு செய்தவன்'

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(1.124.5); 'மலைமகள் தனை இகழ் வது செய்த மதிஅறு சிறுமனவன்' (1.20.3; 1.75.10; 3.304.6) என்று சம்பந்தர் குறிப்பிடுகிறார். 'அறிவில்லாச் சிறுமதித் தக்கன்' (3.351.5) என்றும் கல் மனம் படைத்த 'வன் தக்கன்' (1.75.10) என்றும் அவனைச் சம்பந்தர் சாடுகின்றார். அதனால்தான் அவனது யாகத்தைச் சிவபிரான் அழித்தார் என்பது சம்பந்தரது வாதம். இருபது பாடல்களில் இந்த நிகழ்ச்சி கூறப்படுகிறது.

தட்சனை ஆதரித்து அவனுக்குத் துணை போனவர் களையும் சிவபிரான் தண்டித்ததாகச் சம்பந்தர் கூறுகிறார்.

> தக்கனது பெருவேள்விச் சந்திரன் இந்திரன் எச்சன்
> அருக்கன் அங்கி
> மிக்கவிதா வினோடும் விதிவழியே தண்டித்த விமலர்
> (1.131.3)

என்றும்,

> சுருதியான் தலையும் நாமகள் மூக்கும்
> சுடரவன் கரமும்முன் இயங்கு
> பரிதியான் பல்லும் இறுத்தவர்க்கு அருளும்
> பரமனார்... (3.76.5)

என்றும் சம்பந்தர் அவர்களுக்கு ஏற்பட்ட தீமைகளைச் சொல்லி முடிவில் பரமன் அவர்களுக்கு அருள்பாலித்ததை யும் குறிப்பிடுகிறார் (2.258.5 ஐயும் பார்க்க). இந்த அருளைப் போற்றிப் பரவுகிறார். தட்சனுக்கு ஆட்டுத்தலை வந்து வாய்க்கிறது; வரங்களும் பெற்று உயர்கிறான்,

> தக்கன் சிரம் ஒன்றினை அரிவித்து அவன்
> தனக்கு, மிக்கவரம் அருள்செய்த எம்விண்ணோர்
> பெருமானார் (1.9.4; 3.381.8)

என்று சம்பந்தர் பாராட்டுகிறார்.

4.2.2.6 திரிபுரம் தீப்பற்றி எரிந்தது

வானத்தில் இயங்கும் கோட்டைகளைச் சிவன் தீயால் சுட்டெரித்த கதை மிகவும் பழமையானது. தைத்திரிய சம்ஹிதையிலும் சதபத பிராம்மணத்திலும் இந்தக் கதை பேசப்படுகிறது. மேலும் கிருஷ்ண யஜுர் வேதத்தின்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வாஜஸ்னேய சம்ஹிதை உரையிலும், மகாபாரதத்திலும் சரபோப நிடதத்திலும், தர்ம சம்ஹிதையிலும் இக்கதை குறிப்பிடப் பெற்றுள்ளது.[6]

தமிழிலும் ஒரு வழக்கு உண்டு. ஒரு சோழ வேந்தன் 'தூங்கு எயில் எறிந்த தொடித்தோள் செம்பியன்' என்று சங்க இலக்கியத்தில் போற்றப்படுகிறான். அதாவது வானத்தில் தொங்கிக் கொண்டிருக்கும் மதிலை அவன் வீழ்த்தி அழித்துப் புகழ் பெற்றிருக்கிறான். புறநானூற்றுப் பாடல் (55) ஒன்று மூன்று மதில்களையும் மலை வில்லாக, பாம்பு நாணாக, தனிச் சிறப்புற்ற அம்பைக் கொண்டு சிவபெருமான் சிதைத்தழித் தார் என்ற செய்தியைக் கூறுகிறது. சிலப்பதிகாரம் இம்மாவீரச் செயலைக் கலையழகும் கவிதை நயமும் கொண்ட சொற் களால் விவரித்துப் பேசுகிறது. கொடுகொட்டி, பாண்டரங்கம் என்ற தாண்டவங்களை இந்தக் கட்டத்தில்தான் சிவபிரான் ஆடிக் காட்டினார் என்று சிலம்பு சொல்கிறது.

திருவதிகை வீரட்டானம் அந்த வீரம் நிகழ்ந்த களமாகத் தமிழ்நாட்டில் போற்றப்படுகிறது. அவ்வூரைச் சுற்றியுள்ள அச்சிறுபாக்கம், பேரணி போன்ற ஊர்கள் திரிபுரசம்ஹாரக் கதையை அடிப்படையாகக் கொண்டு பெயர் பெற்றிருக் கின்றன.

இக்கதை பல வடிவங்களில் வழங்குகின்றது. நடுநாயகமான நிகழ்ச்சி இதுதான்: கார்த்திகேயனால் கொல்லப்பட்ட தாரகாசுரனுக்கு மூன்று புதல்வர்கள், தாரகாட்சன், கமலாட்சன், வித்யுன்மாலி என்பவர்கள். அவர்கள் கடும் தவம் செய்து பிரம்மாவிடமிருந்து ஒரு வரம் பெற்றார்கள். அந்த வரத்தினால் வானில் இயங்கும் மூன்று கோட்டைகளில் இருந்து கொண்டு தேவர்களை நசுக்கி வருத்தினார்கள். அவர்களை வெல்ல வேண்டுமென்றால் மகேஸ்வரனுடைய அம்பினால்தான் முடியும். சிவன் அவ்வாறுதான் அம்மூன்று கோட்டைகளையும் அழித்தான்.

இனிச் சம்பந்தர் கூறுவதை நோக்குவோம். திரிபுரத்தைப் பலவாறு அவர் வருணித்துள்ளார். 'அசுரர்தம் பதி' – 3.279.1; 'அந்தரம் உழிதரும் திரிபுரம்' – 3.344.5;

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிறகுடையபுரம் 'சிறைகண்டபுரம்' - 1.36.4; நினைத்த மாத்திரத்தில் தேவர்களை அழிக்கும் புரம், 'நினைக்கும் அளவில் நலிதரும் முப்புரங்கள்' - 2.219.6; வரம்பெற்று வலிமையுற்ற புரம், 'வரமதே கொள உரமதே செய்யும் புரம்' - 3.368.1 என்று திரிபுரம் சித்திரிக்கப்படுகிறது.

அங்கு வரம் பெற்று வாழும் அசுரர்கள், 'தவத்தானவர்' - 2.218.7; 'தருக்கிய திரிபுரத்தவர்' - 3.271.3; 'கொலை வரையாத கொள்கையர்' - 1.96.5; 'தீயராய வல் அரக்கர்' - 1.53.3, திசை யெல்லாம் சென்று இடமெல்லாம் நிரப்பி தேவர்களை யெல்லாம் போரில் வென்ற செய்தியை,

> அண்டத்தால் எண்திக்கும் அமைந்து அடங்கும் மண்டலத்து
> ஆறேவேறே வான் ஆள்வார் அவர் இடமதெல்லாம்
> மண்டிப்போய் வென்றிப்போர் மலைந்து அலைந்த உம்பரும்
> மாறு ஏலாதார்... (1.126.4)

என்று விவரிக்கின்றார் சம்பந்தர். அதே சமயம் அவர்கள் சிவபெருமானை நினைப்பதும் உண்டு. 'எந்தை பெருமானை உள்கி நினைவார்' (2.222.11).

அவ்வசுரர்களையும் கோட்டைகளையும் பல காரணங்களுக்காக அழித்தொழித்தார் சிவபிரான்: (1) 'உலகு உய்ய' - 1.2.4; 'உலகுக்கொரு நன்மையாலே' - 3.315.7; 'இமையோர் தொழ' - 3.265.6; 'பாரோர் தொழ, விண்ணோர் பணிய' - 1.84.3.

சிவபெருமான் மேருமலையாகிய பொன்மலையை ('இரும்பொன் மலை' - 1.82.1) வில்லாக வளைத்த செய்தி ஏறத்தாழ 65 பாடல்களில் கூறப்பட்டிருக்கிறது. வாசுகியை நாணாக்கியதை (1.11.6) 18 பாடல்கள் விவரிக்கின்றன. அம்பைப்பற்றிப் பலவாறு கூறப்படுகிறது. அக்னி - தீ தான் அம்பு என்ற நிலை 29 பாடல்களில் இடம்பெறுகின்றது. காற்றே அம்பின் கோலாக 13 பாடல்கள் குறிக்கின்றன. அம்பைப்பற்றிய முழு விவரத்தையும் 3 பாடல்கள் பேசுகின்றன. அரியே அம்பின் முனை, காற்று அதன் கோல்; அக்னி அதன் நுனி என்றெல்லாம் கூறப்பட்டிருக்கிறது. வானோரெல்லாம் தேராகி நின்ற செய்தியை மூன்று

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பாடல்கள் கூறுகின்றன. வேதங்கள் குதிரைகள்; பிரம்மன் தேரைச் செலுத்துபவன் ('வானோர் எல்லாம் ஒரு தேராய் அயன் மறைபூட்டி நின்றுய்ப்ப' - 1.11.6).

சிவபெருமான் திரிபுரங்களைத் தம் வில்லாலும் அம்பாலும் எரித்த செய்தியைத்தான் சம்பந்தர் பொதுவாகக் கூறுகிறார். வேறு சில செய்திகளும் உண்டு. தமது நெற்றிக் கண் தீயால் எரித்ததை நான்கு பாடல்களில் அவர் கூறுகிறார். அதுபோல் முறுவல் செய்தே முப்புரங்களை எரித்த செயல் கூறப்படுகிறது. முகத்தைச் சுளித்த அளவிலே முப்புரம் அழிந்ததை, 'துன்னிய புரம் முகம் சுளித்த தொன்மையர்' (2.271.1). 'மதில் மூன்றும் ஒரு கணையால், எரித்தார் இமைப்பளவில்' (3.322.6) என்று கண் இமைக்கும் நேரத்தில் அசுரர் புரம் அழிந்ததைக் காண்கிறோம். மேலும் 'உளுந்து உருளும் அளவையின்' (1.132.3) என்று உளுந்துப் பயறு ஒருமுறை உருண்டு வரும் கால எல்லையில் முப்புரம் அழிந்ததாம்.

வேறு ஒரு சுவையான செய்தி! இறைவன் உமையோடு விடையேறி வந்து முப்புரம் எரித்தாராம். 'உமையாள் பங்கர் இமையோர் பெருமானார், செரு வில் ஒரு கால் வளைய ஊன்றிச் செந்தீ எழுவித்தார்' (1.69.5; 1.69.4).

முப்புரம் அழிந்தபின் மூன்று அசுரர்களுக்கும் சிவன் அருள்பாலித்த நல்லறத்தை 'எயில் உக்குஅற முனிந்து தொழும் மூவர் மகிழ தக்க அருள் பக்கமுற வைத்த அரனார்' (3.336.5) என்று குறிக்கிறார் சம்பந்தர்; இந்தப் பேரருளை எட்டுப் பாடல்களில் ஏத்திப் பாடுகிறார். 271ஆம் பதிகம் முழுவதும் திரிபுர சங்காரத்தையே பேசுகிறது.

4.2.2.7 பிரமன் ஒரு தலை இழந்தான்

சங்கர சம்ஹிதையின்படி, பிரமன் சிவநிந்தனை செய்ததால் தமது ஐந்து தலைகளுள் ஒரு தலையை இழந்தான். சினமுற்ற சிவபிரான் பைரவரைத் தோற்றுவித்தார்; அவரை ஏவிப் பிரமனது மேல்நோக்கிய தலையை துணிக்கச் செய்தார். அப்பொழுது வெட்டப்பட்ட தலையி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

லிருந்து பீரிட்டு வந்த இரத்தத்தின வேகத்தால் பைரவன் களைத்து மயங்கி விட்டார். பின் பிரமனது இரத்தத்தை பிரம கபாலத்திலேயே ஏந்திப் பிடித்தார். அதன்பின் பிரம்மா உயிர்பெற்று நான்கு முகங்களோடு இருந்தார்; சிவனது பரத்துவத்தை ஒப்புக்கொண்டார்.

மேலும், தட்சகாண்டம் வேறு ஒரு செய்தியைக் கூறுகிறது. பைரவர் பிரம்ம கபாலத்தை ஏந்தியவாறு திருமாலின் இரத்தத்திற்காகத் தேடி அலைந்தார். அப்பொழுது விஷ்ணு தன் நெற்றியைக் கீற அதிலிருந்து பொழிந்த இரத்த வெள்ளம் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகள் பாய்ந்து வந்தது. இரத்தமின்மையால் அவர் மயக்கமுற்றார். இந்தக் கதைகள் எல்லாமே சிவபெருமானின் பரத்துவத்தை எடுத்துச் சொல்வதற்காகவே தோன்றியிருக்க வேண்டும்.

பிரம்மனது சிரம் அறுபட்டதைச் சம்பந்தர் 24 பாடல்களில் பாடியிருக்கிறார். அதற்குக் காரணங்களையும் கூறுகிறார். ஒரு முக்கிய காரணம் தேவர்களிடையே சிவன் மகாதேவனாக விளங்குவதை எடுத்துச் சொல்வதுதான். பிரமன் வழி தவறி விட்டதாகவும் கூறப்படுகிறது. ‘மறையவன் வழி வழுவிய சிரம்’ (1.20.8).

தஞ்சைத் திருநிலத்தில் உள்ள கண்டியூரில் இந்த நிகழ்ச்சி நடைபெற்றதாக நம்பப்படுகிறது.

4.2.2.8 யானைத்தோல் போர்த்து நின்றான்

யானையின் தோலை உரித்து அதனைப் போர்த்திக் கொண்டு விளங்கும் சிவனது வீரச்செயலைச் சம்பந்தர் பாராட்டி மகிழ்கிறார். வராக புராணமும், சங்கர சம்ஹிதையும் இந்த நிகழ்ச்சியை ஒருவிதமாகக் கூறுகின்றன.

கஜாசுரன் என்ற அசுரன் தேவர்களுக்குச் சொல் லொணாத் துன்பமிழைத்து வந்தான். தேவர்கள் முறையிட சிவபிரான் அவனைத் தோல் உரித்து அழித்தார்.

தாருகாவனத்தில் ரிஷி பத்தினிகள் சிவனின் சுந்தர வடிவில் மனம் பறிகொடுத்து நின்றதை அறிந்த அந்த ரிஷிகள் சிவனை அழித்தொழிக்க ஒரு வேள்வியைச் செய்தார்கள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அந்த வேள்விக் குண்டத்திலிருந்து வெளிவந்த கொடும் பொருளை சிவபிரான் மீது ஏவிவிட்டனர். அவைகளில் கொலைவெறி மிகுந்த யானையும் ஒன்று. சிவன் அதனை தோலுரித்துக் கொன்றான் என்பதைப் புராணங்கள் கூறுகின்றன. சிலப்பதிகாரம், வேட்டுவவரிப் பாடல் (54) கொற்றவை யானைத் தோல் போர்த்து நின்ற வீரத்தைப் புகழ்கிறது.

கொல்ல வந்த இந்த யானையைச் சம்பந்தர், 'அத்தி,' 'ஆனை,' 'கரி,' 'களிறு,' 'குஞ்சரம்,' 'காட்டுமா,' 'கைமா,' 'தும்பி,' 'நாகம்,' 'பகடு,' 'போதகம்,' 'மதமா,' 'மா,' 'வாரணம்,' 'வேழம்' என்றெல்லாம் பெயர் சொல்லிக் கும்பிடுகிறார். இதன் நுட்பமான வருணனைகள் நூற்றைந்து பாடல்களில் இடம்பெறுகின்றன. ஆனால் ஓர் இடத்தில்கூடச் சம்பந்தர் யானையை அசுரன் என்று குறிக்கவில்லை.

இந்த யானை வேள்விக் குண்டத்தில் தோன்றி வந்ததே சம்பந்தருடைய எண்ணத்தில் நிலைத்திருந்தது போலும். ஓர் இடத்தில் இதனை 'வஞ்ச மதஞானை' (3.330.5) என்று வஞ்சனையால் அது தோன்றி வந்ததைக் குறிப்பிடுகிறார். அறுபத்தெட்டுப் பாடல்கள் சிவன் யானையின் தோலை உரித்த செயலைச் சொல்கின்றன. தோலைப் போர்த்த செயல் நூற்றுப் பதினேழு பாடல்களில் இடம்பெறுகின்றன.

இங்கு ஒரு முக்கியமான செய்தியைச் சொல்ல வேண்டும். சிவபெருமான் யானையின் தோலை உரித்துக் கொன்றபொழுது அருகிருந்த உமை அஞ்சிப்போனாளாம். ஒரு சில பாடல்களைத் தவிர இந்தக் கதையைச் சொல்லும் தமது பாடல்கள் அனைத்திலும் சம்பந்தர் உமை அஞ்சியதைக் கூறுகிறார். வேறு பல இடங்களில் சிவ பெருமான் 'கரி உரித்து ஆடும் கங்காளர்' (3.351.6) ஆகக் காட்டப்படுகிறார். உமையைத் தெளிவுறுத்துவதற்காகவே அதனைச் சிவனார் செய்தார், 'மாதுமை பேதுறலும் சித்தம் தெளிய நின்றாடி' (3.358.3) என்கிறார் சம்பந்தர். இந்த நிகழ்ச்சி திருவழுவூரில் நிகழ்ந்ததாக ஐதீகம். ஆனால் இந்தத் திருத் தலத்தில் சம்பந்தர் பாடிய பாடல் ஏதும் கிடைக்கவில்லை.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முன்பே குறித்தபடி சிவபெருமானின் புராணக் கதைகள் அத்தனையும் 'அட்டவீரட்டக் கதைகளில் அடக்கி விடலாம். உமையோடு இணையாக இருக்கும் வரலாறு தட்சனையும் காமனையும் அழித்த வரலாறுகளுடன் தோன்றியதாகும்.

சிவன் உமை பங்கனாக இருப்பது பற்றியும் பிட்சாடனர் வரலாறும் பின்னால் விரிவாகக் கூறப்படும். அதுபோல் இராவணனது தருக்கழித்த செயலும், மாலும் அயனும் தேடிக் காணாத நிலையும் ஒவ்வொரு பதிகத்திலும் இடம் பெறுகின்றன.

4.2.3 ஆடும் அழகன்

ஆடும் அழகனை, அரசனை, சம்பந்தர் பாடிப்பாடி மகிழ்கின்றார். அந்தப்பாடல்களை நாம் ஆராய்வதற்கு முன்னால் ஆனந்த குமாரசாமி இதுபற்றி அழகாகக் கூறுவதைச் சற்றுச் சிந்திப்போம்:

> ...(இறைவனுடைய ஆடும் கோலம் என்ற) இந்தக் கருத்தின் ஆற்றல் வாய்ந்த பேரழகு அறிவியல், சமயம், கலை ஆகிய மூன்றும் கலந்து பிணைந்து நிற்கும் நிலையாகும். இதனைப்பற்றி ஊன்றிச் சிந்திப்பது பொருத்தமுடையது. இதைப்போன்ற ஒரு கருத்து வடிவத்தை உருவாக்கிய முனிவர்களாகிய கலைஞர்களின் எண்ணமும் ஒன்றுபட்ட உணர்வும் எத்தனை அகன்று விரிந்தவை! எத்தனை வியத்தகு தன்மை உடையவை! எவ்வாறு மெய்ம்மையின் வடிவத்தை வழங்குகின்றன; அந்த வடிவம் எவ்வாறு வாழ்வின் அடிப்படைத் தன்மையை அளக்கும் கருவியாக உள்ளது; இயற்கையின் கோட்பாட்டை எப்படி உணர்த்துகிறது! அது ஒரு குழுவிற்கோ, ஓர் இடத்திற்கோ திருப்தி அளிக்கக் கூடியதாக மட்டிலுமல்லாமல் ஒரு நூற்றாண்டில் வாழும் சிந்தனையாளர்கள் மட்டிலும் ஏற்கக்கூடியதாக அமையாமல். மனிதகுலம் அனைத்திற்கும் பொருந்தி, தத்துவ ஞானிகளுக்கும், காதல் வயப் பட்டவர்களுக்கும், கலைஞர்களுக்கும் எல்லாக்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

காலங்களுக்கும் எல்லா நாடுகளுக்கும் ஏற்றதாய் அமைந்துள்ளது."[7]

இதுபற்றி ஆனந்த குமாரசாமி மேலும் சொல்கிறார்:

இதன் விளக்கத்தைச் சுருக்கிச் சொல்ல வேண்டும். சிவ நடனத்தின் அடிப்படையான சிறப்பியல்கள் மூவகைப்படும். முதலாவதாக இது (நடனம் என்பது) இசை ஒழுங்கமைதியுள்ள நாடகத்தின் ஒரு வடிவமாகும். பேரண்டத்தில் உள்ள எல்லா இயக்கங் களுக்கும் இதுவே மூலாதாரமாக விளங்குகிறது.

அதனை உணர்த்துவதுதான் திருவாச்சி. இரண்டாவ தாக (சிவ) நடனத்தின் நோக்கம் எண்ணற்ற உயிர்களை மாயையின் வலையிலிருந்து விடுவிப்ப தாகும். மூன்றாவதாக நாடகம் நடைபெறும் களம் பேருலகின் மையமான சிதம்பரம். அது (நம்) இதயத்தில் நிலவுகிறது.

திருஞான சம்பந்தர் "உவமை இலாக் கலைஞானம்" கைவரப்பெற்ற கவிஞர். சிவ நடனக் கருத்தில் அவரது சிந்தை தோய்ந்து நின்று களிப்பால் பொங்குவதைக் காண்கிறோம். சிவ நடனத்தின் ஆதிவடிவம் எப்படித் தோன்றியதாக இருந்தாலும் அதுவே இறைவனின் அருள் இயக்கத்தைக் காட்டும் கலைச்சித்திரமாகத் திகழ்கிறது. சிவபெருமானை 'ஆடவல்லான்' (3.320.6) 'நட்டப் பெருமான்' (1.80.10) என்றெல்லாம் கூறி அறுபத்தேழு பாடல்களில் சிறப்பித்துப் பாடுகிறார் சம்பந்தர்.

இறைவனின் கலையார்ந்த நடத்தின் பல்வேறு கோலங்கள் சிலவற்றை இங்கு காணலாம்:

1. நாகபந்தனத்தோடு ஆடுதல் (10 பாடல்கள்)
2. கையிலார்ந்த பாம்போடு ஆடுதல் (2.223.7)
3. நாகாபரணத்துடன் ஆடல் (8 பாடல்கள்)
4. சுடலை, காடு, கான் ஆகியவற்றில் ஆடல் (116 பாடல்கள்)
5. அவன் ஆடும் பொழுது / நேரம்

   (i) அந்தியில் (3 பாடல்கள்)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(ii) சந்தியில் *(3.374.4)*

(iii) இருளில் *(24 பாடல்கள்)*

(iv) இரவில் *(16 பாடல்கள்)*

(v) எல்லியில் *(13 பாடல்கள்)*

(vi) நள்ளிரவில் - கங்குலில் *(5 பாடல்கள்)*

(vii) பகலில் *(4 பாடல்கள்)*

(viii) மாலையில் *(11 பாடல்கள்)*

6. கங்கையுடன் ஆடுதல் *(11 பாடல்கள்)*

7. உமையோடு ஆடல்:

(i) அவள் அஞ்சிய போது *(3.279.3)*

(ii) அவள் காணும்பொழுது *(10 பாடல்கள்)*

(iii) அவள் தாளமிட *(2.247.1)*

(iv) அவனுள் ஒரு பாகமாக *(29 பாடல்கள்)*

(v) அவள் பாடும்பொழுது *(12 பாடல்கள்)*

(vi) அவள் அவனது ஆடல் கண்டு திளைக்கும்போது *(6 பாடல்கள்)*

(vii) அவளது பேதுறல் நீங்க *(6 பாடல்கள்)*

8. ஆடிப்பாடல் *(6 பாடல்கள்)*

9. எரி (தீ) ஏந்தி ஆடல் *(146 பாடல்கள்)*

10. சிலம்பு / கழல்தரித்து ஆடல் *(22 பாடல்கள்)*

11. கால்தூக்கி ஆடுதல் *(4 பாடல்கள்)*

12. காளியோடு ஆடுதல்

(1) காளி காண நின்றாடுதல் *(3.314.5; 1.41.5)*

(2) காளியை வெல்லுவதற்காக *(1.115.6)*

(3) காளியின் சினம் தவிர்க்க *(3.377.1; 1.126.5; 2.168.5)*

13. ஓடேந்தி / தலைமாலை தரித்து *(9 பாடல்கள்)*

14. நந்தி தாளமிட ஆடுதல் *(2.168.3;2.232.7)*

15. பிறை ஏந்தி ஆடல் *(24 பாடல்கள்)*

16. பூதம் / பேய்கள் உடன் ஆடல் *(65 பாடல்கள்)*

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

4.2.4 நஞ்சுண்ட பெருமான்

திருஞான சம்பந்தரின் உள்ளமெல்லாம் கொள்ளை கொண்ட ஒரு நிகழ்ச்சி, சிவபிரான் ஆலால நஞ்சினை உண்டு அனைத்து உயிர்களையும் காத்தளித்த தியாகச் செயல்தான்.

சாவாமருந்தான அமிழ்தத்தை அடைவதற்காகத் தேவர்களும் அசுரர்களும் பாற்கடலைக் கடைந்தார்கள். மந்தரமலை மத்தாகியது. வாசுகி கயிறாகியது; விஷ்ணு மத்திற்கு அடித்தளம் ஆனார். இருந்தாலும் எல்லோரும் அஞ்சி நடுங்கும்படியாக எழுந்தது ஆலாலம் என்னும் கொடிய நஞ்சு. எல்லோரும் சிவனடியைத் தஞ்சமடைந் தார்கள். அவர்களுக்கு அபயம் அளித்து அக்கொடிய நஞ்சை அள்ளிப்பருகினார் சிவபிரான். அருகில் இருந்த பார்வதி அவரது கழுத்தை இறுகப்பற்றி நஞ்சினை அங்கேயே தடுத்து நிறுத்தினாள். அதனால் சிவனது கண்டம் கருத்தது, நீலமாகியது. சிவபெருமான் 'திருநீலகண்டன்' என்று நாமமும் நல்லிசையும் பெற்றார்.

ரிக்வேதம், ஐதரேயப் பிராம்மணம், அதர்வண வேதம், யஜுர்வேதம், ஸ்வேதாஸ்வதார உபநிடதம், சரப உபநிடதம், தைத்ரீய சம்ஹிதை, மகாபாரதம் போன்ற தெய்வத் திருநூல்களெல்லாம் இந்த நிகழ்ச்சியை ஒவ்வொரு வகையில் குறித்துப் பாராட்டுகின்றன.[8]

சங்க நூலான புறநானூற்றில் (கடவுள் வாழ்த்தில்) 'கறைமிடறு' என்று சிவபெருமானின் திருநீலகண்டம் மறை ஓதும் அந்தணர்களால் ஓதிப்பரவப்படுவதாகக் கூறப் படுகிறது. சங்கத்து ஔவையார் அதிகமான் – நெடுமான் அஞ்சியை வாழ்த்தும் பொழுது 'நீலமணி மிடற்று ஒருவன் போல' அவன் என்றென்றும் வாழவேண்டும் ஏன்று வாழ்த்துகிறார் (புறநானூறு, 91).

திருஞான சம்பந்தருக்குத் "திருநீலகண்டம்" என்ற பெயர் சத்தியத்தன்மை வாய்ந்ததாகத் திகழ்ந்தது. 'செய்வினை வந்தெம்மைத் தீண்டப் பெறாதிரு நீலகண்டம் (1-116-1-6, 8-10) என்று ஆணையிட்டுச் சொல்கிறார். ஏறத்தாழ 104 பாடல்கள் திருநீலகண்டனைப் போற்றிப் பரவுகின்றன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இந்த திருவருட் செயலால் இறைவன் மற்ற தேவர்களின் பரத்துவத்தினும் மேம்பட்டவனாகின்றான் என்பது சம்பந்தரின் கருத்து:

உரம் கெடுப்பவன் உம்பர்கள் ஆயவர் தங்களைப்
பரம்கெ டுப்பவன் நஞ்சை உண்டு

(2.145.3)

... நஞ்சம் உண்ட
உரிமையின் உலகுயிர் அளித்த நின்றன்
பெருமையை நிலத்தவர் பேசின் அல்லால்
அருமையில் அளப்பரி தாயவனே

(3.261.5)

என்று சிவபெருமானின் இந்த அருள் செயலை நினைத்துப் பேசிப் பாடுவதல்லாமல் அவனது பெருமை அளக்க முடியாதது என்றும் கூறுகிறார் சம்பந்தர்.

4.2.5 ஆடை அணிகலன்கள் போன்றவை

திருஞானசம்பந்தரின் பாடல்கள், சிவபெருமான் உகந்து ஏற்றுக் கொண்டதாகக் கருதப்படும் பலவகை ஆடைகள். அணிகலன்கள், மலர்கள், மாலைகள், ஊர்ந்து வரும் வாகனங்கள், கையாண்ட படைகள் (ஆயுதங்கள்), கொடிகள் போன்றவற்றைப் பலப்பல இடங்களில் பலப்பல வருணனைகளுடன் எடுத்துப்பேசுகின்றன. அவையெல்லாம் ஓர் அட்டவணையாக இந்த நூலில் கொடுக்கப் பட்டிருக்கின்றன.

இந்த ஆடை, அணிகலன்கள் முதலிய எல்லாம் மகா ஞானிகளாலும், முனிவர்களாலும், மக்களாலும், புனிதமாக ஏற்றுக் கொள்ளப்பட்டுவருகின்றன. ஆழமான கருத்துகளை, உணர்வுகளை, அவை பிரதிபலிக்கின்றன. அவை சிவம் என்னும் செம்பொருளின் நுட்பமான தன்மைகளைக் காட்டுகின்றன. சேக்கிழார் இவற்றை "நல் அடையாளங்கள்" என்று மதித்துப் போற்றுகிறார்.

மிர்சியா எலியட் என்ற அறிஞர் இந்தப் புனித அடையாளங்கட்குப் பல்வேறு பயன்பாடுகள் இருப்பதாகக் கூறுகிறார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(1) புனித அடையாளங்கள் ஒரு புனித உலகை இனஞ் சுட்டிக் காட்டுகின்றன. அந்த உலகம் அருளால் ஆளப் படுகின்ற உலகம். அதனைப் பக்குவப்படாத சாமானியர்கள் கண்டு உணரமுடியாது.

(2) இவை மெய்ப்பொருளை உணர்த்துகின்றன. புனிதச் சின்னங்களில் மெய்ப்பொருள் உறைந்து நிற்பதைக் குறிப்பாகக் காட்டுகின்றன.

(3) ஒரு புனித அடையாளம் பல்வேறு சக்திகளை உடையது; வெளியே புலப்படாத பல்வேறு உறவுகளைக் காட்டவல்லது.

(4) ஒரு முழுமையை – எல்லாம் ஒன்றி இணைந்துவிட்ட முழுமையைக் காட்டவல்லது. அதனால் யாரும் எதைப் பற்றியும் உணர்ந்தறியும் வாய்ப்பினை அளிக்கிறது.

(5) இந்தப் புனித அடையாளங்கள் பல்வேறு மாறுபாடு களை இசைத்து வைக்கின்றன.

(6) இங்கே, இவ்வுலகத்திலேயே உள்ளபடி காட்டி, மனிதர்கள் மனநிலைகளை வகைப்படுத்திக் காட்டுகின்றன.

புனிதம் என்பது விவரிக்க முடியாதது. ஆனால் அது எங்கும் வியாபிக்கவல்லது. மிர்சியா எலியட் இந்த அடை யாளங்களின் வாயிலாக புனித மெய்ப்பொருளை உணர் வதற்கு மனிதன் முயன்று வந்திருப்பதைக் குறிப்பிடுகிறார்.[9]

சம்பந்தர் இந்த அடையாளங்களை 'வேடங்கள்' என்றழைக்கின்றார். ஓதி உணரமுடியாத மெய்ப்பொருளை இந்த அடையாளங்கள், நமக்குக் காட்டி நமது வினை களையும் களைகின்றன என்பதை அவர் உணர்த்துகிறார்.

... வினையைவீட் டுவ்வன
ஓதிஓர்க் கப்படாப் பொருளைஓர் விப்பன (3.283.2)

மேலும்

மருந்துவேண்டில் இவை மந்திரங்கள் இவை (3.283.1)

என்று எடுத்துச் சொல்கிறார். அடையாளங்கள் அளிக்கும் பல்வேறு பயன்களையும் சம்பந்தர் ஒன்றொன்றாகக் காட்டுகிறார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அடையாளங்களின் உள்ளார்ந்த அர்த்தத்தைக் காட்டுவதற்குச் சம்பந்தர் வினா - விடையாக அமையும் முறையைத் தம் பதிகங்களில் கையாளுகின்றார். இப்பதிகங்கள் 'வினா - உரைப் பதிகங்கள்' எனப்படும். (2.137;2.138;2.140; 2.173) இவை சிவனுக்கே எழுப்பிய வினாக்களாக அமைந்துள்ளன. சில (2.172;3.296) ஞானிகளுக்கு விடுவிக்கப்பட்டவை. இந்தப் பதிகங்களில் புனிதச் சின்னங்களில் புதைந்திருக்கும் ஆழமான பொருள்களைக் கேட்டறிகிறார் சம்பந்தர்.

கண்டியூர்ப் பதிகத்தில் (3.296) சம்பந்தர் தான் அறிந்து கொள்ள மாட்டாமல் இருக்கும் நிலைமையை உணர்த்துகின்றார். "வினாவினேன் அறியாமையில்;" "அறிகின்றிலேன்" (3.296.1-3) என்று சொல்வதைக் காணலாம். அதாவது வெளிப்படையாகத் தெரியவில்லை என்பதே அதன் பொருள். அவ்வாறு வெளிப்படையாக இல்லாத ஆழமான கருத்துகளுக்கு விளக்கம் காண்பது தான் இந்த 'வினா - உரை' யின் பயன்பாடாகும். இதன் வழியாக அருள் நிற்கும் நிலை குறிப்பாக உணர்த்தப்படுகிறது.

இறைவன் சிந்தனைக்கு அப்பாற்பட்டவன்; மொழிக்கும் செயலுக்கும் எட்டாதவன். அவனை அடையாளங்கள் காட்டி, அவனுக்குக் குணங்களும் செயல்களும் இருப்பதாகக் கூறி, அவனுடைய முழுமுதல் தன்மையைக் குறைத்துவிட முடியாது என்று சொல்வதில் தவறேதுமில்லை என்றாலும் சம்பந்தர் போன்ற ஞானிகள் தங்களது அனுபவ நிலையில் சடைமுடியும், பாம்பணியும், மேனிமுழுதும் சாம்பல் பூச்சும், மழுவும் சூலமும் கையில் ஏந்திய கைகளோடு இறைவன் விளங்குவதை உணர்ந்து உருகுவது பொய்யாகாது. அதனால் இறைவனின் பூரணத்துவத்திற்குப் பங்கமில்லை என்று அவர்கள் அறிந்திருக்கிறார்கள் என்றே கருதவேண்டும். இங்கு சம்பந்தர் ஓர் அருமையான உத்தியை - வழியைக் கண்டு இந்த இருவேறு நிலைகளும் இசைந்து அமைதி கொள்ளுமாறு செய்திருக்கிறார்.

திருப்பிரமாபுரம் பதிகத்தில் (2.201) இந்த உத்தியின் நேர்த்தியை நாம் கண்டு அனுபவிக்க முடிகிறது. இந்தப்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பதிகப்பாடல் வகைகள் ஒவ்வொன்றும் இறைவன் ஒன்றைச் செய்யவில்லை என்றே சொல்கிறது. உதாரணமாக, "கறை அணிவேல் இலர் போலும்", "கங்கை தரித்திலர் போலும்", "கபாலம் ஏந்திலர் போலும்', என்றெல்லாம் வருவதைப் பார்க்கின்றோம். 'கறை அணிவேல்' கொண்டதும் 'கங்கை தரித்தலும்' 'கபாலம் ஏந்துவதும்' இறைவனுடைய இயல்பு களாகப் புராணங்கள் சொல்கின்றன. ஆனால் அப்புராணக் கருத்துக்களை மறுப்பதுபோல் சம்பந்தர் பாடுகிறார். மறுத்தாலும் 'போலும்', 'போலும்' என்று சேர்த்துச் சொல்லுகின்ற ஓர் உத்தியாலே அவை நடக்காதவை என்று அர்த்தமில்லை என்பதைக் குறிப்பாக உணர்த்துகிறார் சம்பந்தர். இந்தப் 'போலும்' என்ற சொல்லை 'ஒப்பில்போலி' என்று இலக்கணக்காரர்கள் கூறுவார்கள். ஆனால் இது வெறும் ஒப்பில்போலியில்லை; இதற்கு உள்ளார்ந்த பொருளும் இருக்கிறது என்று அறிஞர்கள் கருதுகிறார்கள்.[10]

சிவஞான சித்தியாரில் உள்ள 'சிவன் உரு அருவுமல்லன்; சித்தினோடு அசித்தும் அல்லன்' என்ற வரிக்கு மறைஞான தேசிகர் உரை கூறும்பொழுது, அவர் சம்பந்தருடைய மேற்சொன்ன பதிகத்தைத்தான் மேற்கோள் காட்டுகிறார். இங்கு நமக்குக் கிடைக்கும் விளக்கம் என்னவென்றால் 'சொரூப லட்சணம்' 'தடத்த லட்சணம்' என்ற கடந்து நிற்கும் நிலை, எங்கும் எதிலும் ஆகி நிற்கும் நிலை என்ற இரண்டில் சொரூப நிலையில் இறைவனுக்குக் குணமும், தொழிலும் கூறமுடியாது; ஆனால் தடத்த நிலையில் புராணக்கருத்துகள் ஏற்புடையதாகின்றன என்பதே. அதாவது கடந்து நிற்கும் நிலையில் குணம், குறி, தொழில் ஏதும் இல்லை. ஆனால் எல்லாமாகி நிற்கும் தடத்தநிலையில் இறைவனுக்கு அவற்றை ஏற்றிச் சொல்லமுடியும். சம்பந்தர் கையாண்ட 'போலும்' என்ற சொல் இந்த நுண்ணிய பொருளைத்தான் உணர்த்து கிறது. மேற்படிப் பதிகத்தின் கடைசிப் பாட்டில் சம்பந்தர் இதனைத் தெளிவாகச் சொல்கிறார். 'அண்ணல் செய்யாதன எல்லாம் அறிந்து வகைவகையாலே நண்ணிய ஞான சம்பந்தன்' என்று இறைவன் சொரூப நிலையில்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

செய்யாதவையெல்லாம் தடத்தநிலையில் செய்வதாகத்தான் அறிந்து கொண்டதை உணர்த்துகிறார். ஸ்பிநோசா என்னும் தத்துவ ஞானி 'எல்லா எதிர் மறையும் உடன்பாடுதான்' என்று கூறுவதைக் காணலாம்.

நம் புராதன முனிவர்கள் இந்த இடர்ப்பாட்டை உணர்ந்திருக்கிறார்கள். அதனால் எதிர்மறையையும் உடன் பாட்டையும் சேர்த்துக் கையாண்டு மெய்ப்பொருளின் உண்மையைப் புலப்படுத்தியிருக்கிறார்கள். உபநிடதங்கள் 'இதி!இதி' என்றும் 'நேதி! நேதி!' என்றும் இந்த உத்தியைத் தான் கையாள்கின்றன.

சம்பந்தர் மேலும் ஓர் உத்தியைக் கையாள்கிறார். எதிர்மறைகள் இணை இணையாக வந்து இங்கு உண்மையைப் புலப்படுத்துகின்றன. சில எடுத்துக் காட்டுகளைப் பார்ப்போம்:

1. அணியதே – சேயதே. *(2.151.4)*
2. அந்தமும் – ஆதியும் *(1.39.1)*
3. அந்தம் நீர் – முதல் ஆனீர் *(2.138.7)*
4. அரியாய் – எளியாய் *(2.156.8)*
5. அருமையன் – எளிமையன் *(1.121.3)*
6. ஆண் அல்லர் – பெண் அல்லர் *(3.291.9)*
7. இரவோடு – பகலும் ஆம் எம்மான் *(3.261.8)*
8. இழிவு – ஏற்றமானார் *(1.11.2)*
9. எளியாய் – அரியாய் *(2.157.4)*
10. சீதமும் – வெம்மையும் ஆகி *(1.39.3)*
11. தண்ணியன் – வெய்யன் *(1.61.6)*
12. துயர் அவன் – துயர் அகற்றும் கழலவன் *(1.110.5)*
13. துன்பனுமாய் – இன்பனுமாய் *(2.147.7)*
14. தோற்றம் – ஈறு *(1.51.5)*
15. நல்லார் – தீயார் – *(3.379.6)*
16. நுண்ணியன் – மிகப் பெரியன் *(1.61.6)*
17. நெடியாய் – குறியாய் *(2.157.3)*
18. பெரியாய் – சிறியாய் – *(2.156.8)*

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

19. பிரிந்தனை – புணர்ந்தனை (2.166.3)
20. பிறவினோடு – இறவுமானான் (1.110.1)
21. புறத்தினார் – அகத்துளார் (3.351.5)
22. விரிந்தனை – குவிந்தனை (2.166.3)
23. மண்ணினாய் – விண்ணினாய் (2.150.9)
24. விருத்தனாகி – பாலனாகி (1.52.6)
25. வேறாய் – உடனானான் (1.11.2)

சிவபெருமானை அலங்கரிக்கும் ஆடை அணிகலன்களைக் குறிக்கும் அட்டவணை

வ.எண்	விவரம்	அவைகளைப் பற்றிக் குறிப்பிடும் பதிகங்களின் எண்ணிக்கை
	தலை, காதணிகள்	
1.	கங்கையாறு – அப்பு, அருவி, அலர், அலை, ஆறு, கங்கையாள், கங்கை, சலம், தீர்த்தம், திரை, நதி, புனல், நீர், வாரி, வெள்ளம்	502
2.	பிறை – அம்புலி, இந்து, இரவன், உடுபதி, எல்லி, சசி, சந்திரன், சோதி, சோமன், திங்கள், நிலா, பிறை, மதி	629
3.	பாம்பு – அரவம், உரகம், நாகம், புயங்கம், மாசுணம்	170
4.	கபாலம் – தலை, சென்னி, சிரம்	76
5.	கொக்கின் இறகு – கொக்கிறகு	12
6.	மலர்கள் – கொன்றை, வன்னி, கமலம், மத்தம், வெள்ளெருக்கு, கோடல், கோங்கு, மராம்	25

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

7.	காதணிகள்: 1. குழை 2. அரவக்குழை 3. சங்கணி குழை 4. தோடு 5. சங்கவெண் தோடு 6. அரவத்தோடு (1.62.2) 7. தோடு, குழை இரண்டும் 8. குண்டலம்	 20 2 9 34 6 1 10 2
8.	சடை (சடா முடி)	827
	கழுத்து, மார்பணிகள்	
1.	அக்கு மாலை (ருத்ராட்சம்) பாம்பு மாலை	16 15
2.	மார்பணியாக பாம்பு	234
3.	ஆமை ஓட்டு மாலை	41
4.	கண்டி மாலை	1
5.	தாழ் வடம்	1
6.	இறந்தவர்களின் எலும்புகளால் ஆன மாலை	35
7.	பன்றிகளின் பற்கள் - ஏனத்து எயிறு	31
8.	கபாலங்களினால் ஆனமாலை - தலைமாலை	16
9.	புனித சாம்பல்:- நீறு, சுடலைப்பொடி, வெண்பொடி, சாந்தம்	238
10.	மலர் மாலைகள்: 1. கொன்றை மாலை 2. தாமரை மாலை (கமலம்) 3. கூவிள மாலை 4. கோங்க மாலை 5. கோடல் மாலை 6. ஊமத்த மாலை 7. மர மாலை 8. வன்னி மாலை 9. வெள்ளெருக்கு மாலை	 93 1 5 1 1 2 1 2 1

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

	இடுப்பணி	
1.	உருத்ராட்சம் (அக்கு)	15
2.	பாம்பு	127
3.	வண்ண ஆடை, துன்ன வண்ண ஆடை	11
4.	கச்சு	3
5.	பாம்பாகிய கச்சு	10
6.	கோவணம்	68
7.	கோவணத்திற்கு மேல் இடுப்பில் அணியும் அணியாக பாம்பு	7
8.	புலித் தோலாடை	94
9.	சிங்கத் தோலினால் ஆன ஆடை	2
10.	புலித்தோலின் மீது இடுப்பணியாக பாம்பு	13
11.	மான் தோல் ஆடை	23
12.	மேகலை - முத்துக்களால் ஆன இடுப்பணி	3
13.	இடுப்பணியோடு கட்டப்பட்ட வாள்	1
	கையணிகள்	
1.	அக்கு மாலை	1
2.	நெருப்பு (தீ) - அங்கி, அனல், அழல், எரி, கனல், தழல் (இடது கை - 373.9)	101
3.	கங்கணம்	1
4.	கல்லவடம்	3
5.	கொடு கொட்டி	2
6.	டமருகம்	3
7.	சிரந்தை	1
8.	சுட்டி - ஓர் ஆயுதம்	3
9.	சூலம் (தண்டு)	2

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

10.	கங்காளம் (எலும்பினால் ஆன தடி)	2
11.	கபாலம் - ஓடு, கபாலம், சிரம், சென்னி, தலை	102
12.	பரசு, மழு (கோடரி)	6
13.	பறை	1
14.	பாசம் (கயிறு)	2
15.	பாம்பு, நாகம், பணி	22
16.	பேரி	1
17.	பொக்காணம்	1
18.	மான், மறி, கன்று, பிணை, உழை, இரலை, கலை (மான்)	87
19.	யாழ்	2
20.	வீணை	16
21.	வேல்	2
22.	காளையின் உருவத்துடன் கொடி:- இடபம், ஏறு, சே, பெற்றம், விடை	69
	காலணி	
1.	கழல்	52
2.	பாம்பினால் ஆன கழல்	5
3.	சிலம்பு	23
4.	கழல், சிலம்பு இரண்டும்	17
5.	கிண்கிணி	1

4.3 ஆலயவழிபாடு – அதன் நாகரிகமும் சிறப்பும்

மெய்ஞ்ஞானத்தைப் பற்றியும் சமய உணர்வு நுட்பங்களைப்பற்றியும் அவற்றில் பொதிந்துள்ள ஆழமாகி அகன்று கிடக்கும் உண்மைகள்பற்றியும் நமக்குப் புராணங்கள் கதைகளைக் கூறிவிளக்குகின்றன. இவையெல் லாம் கண்ணுக்குப் புலனாகும்படி உயிர் பெற்றுத்

In Public Domain. Digitization Muthulakshmi Research Academy

திகழ்வதைக் காட்டி உதவுகின்றன ஓவியங்களும் சிற்பங்களும் போன்ற கலைப் பொருள்கள்.

இவற்றில் சில வடிவங்கள் நாம் கும்பிட்டு வணங்கும் பெருமையைப் பெற்றிருக்கின்றன. அவை நிலை பெற்றிருக்கும் இடங்கள் வழிபாட்டுத் தலங்களாகியுள்ளன. அவற்றில் ஆன்மா லயமுற்று இசைந்துவிடுவதால் அவை 'ஆலயம்' என்று அழைக்கப்படுகின்றன. அவற்றின் சிறப்பும் பெருமையும் சமுதாயம் வளர வளர மேம்பாடு அடைந்து வந்திருக்கின்றன.

இத்தலங்களுக்குச் சென்று அங்கு நிலைபெற்றிருக்கும் தெய்வ வடிவங்களை அன்போடு வணங்கித் தொழுது வழிபாடு செய்வது என்பது சமய வாழ்க்கையின் அடிப்படை நெறியாகவும் குறியாகவும் அமைந்திருக்கின்றன. 'குறியால் குறி கொண்டவர் போய்க்குறுகும் நெறியான் நெல்லிக்காவுள் நிலாயவனே" *(2.155.6)* என்று திருநெல்லிக்காவில் நிலைத் திருப்பவனைப் பாடுகிறார் சம்பந்தர்.

'மூர்த்தி, தலம், தீர்த்தம்' என்று வழங்கும் தொடர் சமயவாழ்வின் நெறியை உணர்த்துகின்றது. ஆலய வழிபாட்டை நெறிப்படுத்திச் சீர்பெறச் செய்வதற்காகவே ஆகமங்கள் எழுந்தன. ஆலய வழிபாடு என்பது ஒரு சமுதாய வழிபாடு ஆனதால் சமுதாயம் முழுதும் அதன் ஆக்கத்திலும் வளர்ச்சியிலும் மிகவும் அக்கறையோடு ஈடுபட்டது, மக்கள் ஆலயச் செயல்முறைகளைச் சீராக நடத்துவதில் நாட்ட மடைந்தனர். நாளாவட்டத்தில் ஆலயம் மக்களுடைய சமுதாயப் பொருளாதார செயற்பாடுகளின் தனி மையமாகத் திகழத்தொடங்கியது.

பழந்தமிழ் நாட்டில், குறிப்பாகச் சங்ககாலத்தில் மக்கள் இறைவனை இயற்கையின் பின்னணியில் கண்டு தொழு திருக்கிறார்கள். **திருமுருகாற்றுப்படை** *(223-226)* இதனை விரிவாகச் சொல்வதை முன்பே அறிந்து கொண்டோம். **பட்டினப் பாலை** 'கந்து' என்ற ஒரு சிறு தூண்நிற்கும் இடத்தைப் 'பொதியில்' (அம்பலம்) என்று அழைக்கிறது *(249)*. அங்கு பெண்கள் அந்திக்காலத்தில் 'நந்தாவிளக்கை ஏற்றி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வழிபடுகின்ற செய்தியைக் காண்கிறோம் (247). அந்த நடுதறி - கந்து என்பது இலிங்கத்தை நினைவுறுத்துவதாக உள்ளது.

அதுபோல நவிரமலையில் 'காரி உண்ணிக் கடவுள்' எழுந்தருளியிருந்ததை மலைபடுகடாஅம் (வரி 83) கூறுகிறது. காரி என்பது கருத்த நஞ்சு; அதை உண்ட கடவுள் நீலகண்டன்.

மதுரைக்காஞ்சி (427) ஏழுநாள்கள் நடைபெறும் ஒரு திருவிழாவைப்பற்றிப் பேசுகிறது. அந்த விழாவிற்குக் 'கணம்' என்று பெயர்.[11] அந்த விழா கால் கொள்ளத் தொடங்கிய ஏழாம் நாள் அந்தியிலே மக்கள் தீர்த்தமாடுவது மரபு என்று நச்சினார்க்கினியர் குறிப்பிடுக்றார். அந்தத்தீர்த்தம் 'கழுநீர்' எனப்பட்டது. (தீவினைகளைக் கழுவுவதற்குக் காரணமான தீர்த்தம்). மாயோனின் திருநாளாக ஓணவிழா (மாயோன்மேய ஓண நன்னாள்) கொண்டாடப்பட்டது.

கலித்தொகையிலும் பரிபாடலிலும் பல கோயில்களைப் பற்றியும் திருவிழாக்களைபற்றியும் நிரம்பச் செய்திகள் காணப்படுகின்றன. சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய காவியங்கள் கோயில் கலாசாரம் நன்கு வளர்ந்திருந்த நிலையைக் காட்டுகின்றன.

பழந்தமிழ் நாட்டில் கோயில்களைக் குறிக்க 'நகர்' என்ற சொல் பயன்படுத்தப்பட்டது.[12] ஆனால் சிலப்பதிகாரத்தில், 'கோயில்' என்பது வழக்கில் வந்து விட்டது. 'கோட்டம்' என்பது கோவிலைக் குறித்தது. திருக்குறளில் (வான் சிறப்பு) வானோரைப் பற்றியும் கடவுளைப் பற்றியும் 'பூசனை' என்னும் அன்றாடப் பூசனைகளையும் 'சிறப்பு' என்ற திருவிழாக்கள் பற்றியும் பேசப்படுகிறது. ஆனால் திருக்குறளோ, பதினெண்கீழ்க்கணக்கு நூல்களோ கோயிலைக் குறிக்கவில்லை. என்பது குறிப்பிடத்தக்கது. காரைக்கால் அம்மையாரும் 'கோயில்' என்ற சொல்லைப் பயன் படுத்தவில்லை. ஆனால் அவரது கால எல்லையில் தோன்றிய திருமூலரும் பொய்கையாழ்வாரும் பயன்படுத்தியிருக் கிறார்கள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருமூலர் காலத்தில் ஆகமங்களும் தந்திரசாத்திரங்களும் தோன்றிப் பெருகிவிட்டன. அதனால் கோயில் நாகரிகம் மிகவும் செப்பமுற்று உயர்நிலையை அடைந்து விட்டது. இன்னும் சொல்லப்போனால் திருமூலர் காலத்திற்கு முன்பாகவே தமிழ்நாட்டில் நிரம்பக் கோயில்கள் தோன்றியிருந்தன. சோழன் கோச்செங்கணான் என்பவர் பல கோயில்களைக் கட்டியதாகப் புகழப்படுகிறான். திருநறையூரில் 'எண்தோள் ஈசர்க்கு எழில் மாடம் எழுபது' செய்தான் என்றும் அங்கு அவன் திருமாலுக்கும் ஒரு கோயிலைக் கட்டிப் புகழ் கொண்டான் என்றும் திருமங்கையாழ்வார் குறிப்பிடுகிறார் (பெரிய திருமொழி, 6.6.8).

திருஞானசம்பந்தரும் கோச்செங்கணான் கட்டிய கோயில்களைக் குறிக்கின்றார் (திருவைகல்மாடக் கோயில் 3.276.2; அம்பர் பெருந்திருக்கோயில் 3.277.2). உயர்ந்த தளத்தில் பலபடிக்கட்டுக்களோடு உயரமாகக் கட்டப்பட்ட கோயில்கள் 'மாடக்கோயில்' என்றழைக்கப்பட்டன. சம்பந்தர் இதனை 'மாடமாளிகை' என்கிறார் (3.276.10). பல்லவர்களது வருகைக்கு முன்னாலேயே கோச்செங்கணான் மிகச் சிறந்த கோயில்பணிகளைச் செய்திருக்கிறான்.

அப்பர் பெருமான் காலத்தில் எழுபத்தெட்டு, கோயில்கள் இருந்ததாகவும், அவைகளைத்தவிர, 'கரக் கோயில், ஞாழல் கோயில், கொகுடிக்கோயில், இளங்கோயில், மணிக்கோயில், ஆலக்கோயில்' என்று சிவன் உறையும் கோயில்கள் பல இருந்ததாகவும் அவர் பாடியருளியிருக்கிறார். (6.71.5)

இந்தக் கோயில்களெல்லாம் சுட்ட செங்கற்களாலும் (சுடுமண்) மரம், சுண்ணச்சாந்து கொண்டும் கட்டப் பட்டன. முதலாம் மகேந்திரவர்ம பல்லவன் முதன் முதலில் செங்கற்களின்றி, மரம் உலோகம் சாந்து இன்றி, கோயில்களைக் கட்டியதாக அவனது மண்டகப்பட்டு குகைக் கோயில் கல்வெட்டு (S.I.I. Vol. XII, No.2) கூறுகிறது. அந்தக் குகைக் கோயில்கள் கோச்செங்கணான் போன்றவர்கள் கட்டிய கோயில்களின் வடிவமைப்பில் கட்டப்பட்டுள்ளன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆதிகாலத்தில் கருவறையும் (கர்ப்பக் கிரகங்கள்) விமானமும் மட்டும் கட்டப்பட்டன. அதற்குப்பிறகு 'நடுமண்டபம்' 'அர்த்தமண்டபம்' போன்றவை எழுந்தன. பின்பாகச் சுற்று மதில்களும், அம்மதில்களை ஒட்டி சுற்றாலைகளும் கட்டப்பட்டன. நான்கு வாயில்கள் அமைந்து அங்கே கோபுரங்களும் எழுந்தன. மதில்களை ஒட்டிக் கல்லூரிகளும், புத்தகசாலைகளும், தோன்றின. அம்பிகைக்காகத் தனிக் கோயில்கள் கோயில் பிரகாரத்திற் குள்ளேயே கட்டப்பட்டன. மேலும் பிரகாரங்கள் அமைக்கப் பட்டன. இவ்வாறு கோயில்கள் வளர்ச்சியுற்றன.

பெரும்பாலும் கோயில்களுக்கு வெளியேயும் சிலசமயங் களில் உள்ளேயும் குளங்கள் வெட்டிக்கட்டப்பட்டன. மாளிகைகளும் மடங்களும் அமைக்கப்பட்டன. இவற்றில் சாத்திரங்களும் புராணங்களும் கற்றுத்தரப்பட்டன. ஆராய்ச்சிகளும் நடந்தன.

கோயில்கள் மக்களின் மனதைக் கவர்ந்து, அவர்களது சமுதாய, பொருளாதார, சமயகல்வித் துறைகளில் சிறப்பான இடத்தைப் பெற்றன. சில நேரங்களில் அரசாங்கத்துறைக்கும் அங்கு இடமளித்து மக்களின் உயிர்நிலைகளாக அவைகள் விளங்கின என்று கூறுவதில் உயர்வு நவிற்சி இல்லை. கோயில்கள் வளம் பெற்று வளர்ச்சியுற்றதால் கலைஞர்கள், சிற்பிகள், வண்ணவினை செய்வோர், ஆடுவோர், பாடுவோர், தத்துவ ஆசிரியர்கள், பக்தர்கள் ஆகிய அனைவருடைய வாழ்க்கையும் கோயிலோடு இணைந்து பிணைந்தது.

கோயில்களைச் சார்ந்து கட்டப்பட்ட பல மண்ட பங்கள் 'சிறுத்தொண்டன் நம்பி மண்டபம்' போன்ற அடியார்களின் பேரையும் புகழையும் நிலைநிறுத்துவதாக அமைந்தன. (M.E.R. 57/1913)

மண்டபங்களில் உள்ளூர் சபையோர்கள் கூடி பல செயல்களை நிகழ்த்தினார்கள். குறிப்பாக, சபைக்குத் தேர்தல்கள் இங்குதான் நடத்தப்பட்டன. அரசியல், பொருளாதாரம் பற்றிய பல ஆவணங்களைக்கோயில் மதில்களில் பொறித்து வைத்தார்கள். இவ்வாறு பல

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

துறைகளில் ஈடுபட்டிருந்த கோயில் நிர்வாகம் அன்றைய அரசாங்கத்தின் கவனத்தை ஈர்ப்பதாக இருந்தது. 'மகேஸ்வரர்கள்' 'ஸ்ரீ காரியஞ்செய்வோர், 'கோயில் கணப் பெருமக்கள்' 'பாத மூலத்தார்' போன்ற சபைகளைப்பற்றிய பல செய்திகளைக் கோயில் கல்வெட்டுகள் அளிக்கின்றன. வரி இல்லாத (இறைஇலி) நிலங்கள் (தேவதானங்கள்) கோயில் களுக்குத் தானமாகக் கொடுக்கப்பட்டன. இவைகளின் வருமானத்திலிருந்து கோயில் பராமரிக்கப்பட்டது. கோயில் பணியாளர்களுக்கு தக்க ஊதியம் வழங்கப்பட்டது. 'மகண்மை' அல்லது 'மகமை' என்ற வரி கட்டாயமாக வசூலிக்கப்பட்டது. அன்னசத்திரமும் கட்டப்பட்டு இயங்கியது.

பல்லவர்காலத்தில் கோயில்களின் பல்வேறு பணிகளைப்பற்றி சி. மீனாட்சி என்பவர் நன்கு ஆராய்ந் திருக்கிறார். இதுபற்றி அவர் கூறுவதைப் பார்ப்போம்:

> கோயிலில் நடைபெற்ற பணிகள் பல்வேறு பட்டவை. (ஓர் ஊரில்) கோயிலிடம்தான் மிகுதி யான நில உடமை இருந்தது. அதனால் வேளாண்மை செயல்பாடுகளில் கோயில் மிகுந்த அக்கறை எடுத்துக் கொண்டது. தானே (வயல்களில்) பயிர் செய்தது. பயிர் செய்யாத நிலங்களிலும் (தரிசு நிலங்களிலும்) பயிர் செய்யவும் முயற்சி செய்தது (A.R. 258 of 1919). சிதைபாடுடைய கிராமங்கள் சீர்செய்யப்பட்டன நுகர்வோர் என்ற நிலையில் வைத்துப்பார்த்தால் கோயில் நிர்வாகம் பலபொருள் களைக் கொள்முதல் செய்து கோயில்பணிக்கும் பயன்படுத்தியது.
>
> நெசவு போன்ற உள்ளூர் கிராமத்தொழில் களைக் கோயில்கள் ஆதரித்து ஊக்கம் அளித்தன. அதற்காகக் கோயிலைச் சுற்றியுள்ள நிலங்கள் நெசவாளர் குடும்பங்களுக்கு மானியமாக அளிக்கப் பட்டன. பல்லவர்கள் காலத்தில் கோயில்கள் மிகச் சிறந்த பொருளாதாரச் செயல்பாடுகளில் ஈடு பட்டன. அதனால் உள்ளூர் மக்கள், பஞ்சம்,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வெள்ளம் போன்ற பொருளாதாரத் தாக்கங்களின் போது கோயில்களை நம்பி நாடினார்கள்.[13]

திருஞானசம்பந்தரின் பாடல்கள் அனைத்தும் தமிழகமெங்கும் உள்ள சிற்றூர்களிலும், நகரங்களிலும் எழுச்சி பெற்றிருக்கும் நூற்றுக்கணக்கான கோயில்களோடு தொடர்பு கொண்டவை. இன்றைக்குக் கிடைத்துள்ள அவரது பாடல்களின்படி அவர் 228 கோயில்களுக்குச் சென்று தம் பண்ணமர்ந்த பாடல்களைப் பாடியுள்ளார். அவற்றில் நிறைந்துள்ள தமிழும் இசையும், மெய்ஞ்ஞானக் கருத்துகளும் சமய நியதிகளும் இக்கோயில்களின் மகிமையை மேலும் மேலும் மிளிர்ந்து ஒளிரச் செய்திருக்கின்றன. திருக்கடைக் காப்புச் செய்யுள்களைப் பார்க்கும்பொழுது இந்த உண்மை இனிது விளங்கும். மேலும் ஒவ்வொரு கோயிலைப்பற்றிப் பாடும்பொழுதும், அந்தந்த ஊர்களின் இயற்கை அழகும் ஆறு மலைகளின் சிறப்பும் வேறுபல சுவையான செய்திகளையும் படித்து அறிந்து கொண்ட மக்கள் தங்கள் ஊரின் பெருமைகளால் தங்களுடைய வாழ்வே தனித்தன்மை பெற்றுச் சிறந்து விட்டதாக எண்ணிப் பெருமிதம் அடைந் திருக்கிறார்கள். தங்கள் ஊரும் கோயிலும் ஞானசம்பந்தர் போன்றோரின் பாடல்களைப் பெற்றுப் பெருநிதியை அடைந்ததுபோல மகிழ்ந்திருக்கிறார்கள்: இன்றும் மகிழ் கிறார்கள். ‘பாடல் பெற்ற தலம்’ என்று அந்தக் கோயிலுக்கும் ஊருக்கும் பேரும் புகழும் வந்து வாய்த்திருக்கின்றன. பத்திமைப்பாடல்களால் கோயில் கலாசாரம் மேலும் மேலும் செழித்துத் திகழ்ந்தது.

கோயில்கள் பெருகவும், அங்கெல்லாம் சென்று வழிபடவேண்டும் என்று மக்கள் ஆர்வம் கொண்டனர். தலயாத்திரைகள் அதிகமாக மேற்கொள்ளப்பட்டன. இந்தப் புனிதத்தலங்களை வரிசைப்படுத்திப் பாமாலைகள் தொடுக்கப்பட்டன. இவைகளுக்கு ‘க்ஷேத்திரக் கோவை’ ‘திருக்ஷேத்திர வெண்பா’ போன்ற பெயர்கள் ஏற்பட்டன.

இந்தவகையில் பாடப்பட்ட கோவைகளில் மிகவும் பழங்காலத்தில் தொடுக்கப்பட்ட வரிசையைப் பல்லவ

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மன்னன் ஐயடிகள் காடவர் கோன் ஆக்கித் தந்திருக்கிறார். முதலாம் மகேந்திரபல்லவன் தந்தை சிம்ம விஷ்ணுவிற்கு முன்னால் இப்பல்லவன் தோன்றியிருக்கவேண்டும் என்று ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். இப்பல்லவனின் நூலுக்குப் பெயர் **திருக்ஷேத்திரத் திருவெண்பா** என்பதாகும். இதில் இன்று கிடைப்பவை 24 வெண்பாப் பாடல்களேயாம். ஒவ்வொரு பாடலும் ஒவ்வொரு தலத்தைப் பற்றியது. ஆனால் பாடல்கள் 10-ம் 23-ம் எந்தக் கோயிலையும் குறிப்பிடாமல் பாடப்பட்டிருக்கின்றன. அதனால் இந்த நூலைக் கொண்டு 22 தலங்களைத் தெரிந்து கொள்கிறோம். அவைகளின் பெயர்கள் வருமாறு:

(1) தில்லைச் சிற்றம்பலம், (2) தென்குடந்தைக் கீழ்க்கோட்டம் (3) ஐயாறு, (4) ஆரூர், (5) திருத்துருத்தி, (6) திருக்கோடிக்கா (7) திருவிடைவாய், (8) நெடுங்களம் (9) குழித்தண்டலை (10) பெயர் குறிக்கவில்லை, (11) ஆனைக்கா, (12) மயிலைத் திருப்புன்னையங்கானல் (13) உஞ்சேனை மாகாளம் (14) வளைகுளம் (15) பூம்புகார்ச் சாய்க்காடு (16) பாச்சிற்றிருவாச்சிராமம் (17) சிராமலை, (18) மழபாடி, (19) தென்திருவாப்பாடி (20) கச்சியேகம்பம் (21) திருப்பனந்தாள் தாடகையீச்சரம் (22) ஒற்றியூர் (23) பெயர் குறிக்கப்படவில்லை (24) திருமயானம்.

இந்த மரபு அடுத்துவரும் நூற்றாண்டுகளிலும் தொடர்ந்தது. சம்பந்தர் **திருக்ஷேத்திரக்கோவையைப்** பாடியுள்ளார். அப்பர், **க்ஷேத்திரக்கோவைத் திருத்தாண்டகம்** என்ற நூலையும் **அடைவுத்திருத்தாண்டகத்தையும்** பாடியிருக்கிறார். **ஊர்த்தொகை, நாட்டுத்தொகை, இடையாற்றுத்தொகை** ஆகிய மூன்றையும் சுந்தரர் பாடியருளியிருக்கிறார் இந்தக் கோவைகள் திருக்கோயில்களின் வளர்ச்சியை நமக்குத் தெளிவாகக் காட்டுகின்றன.

சம்பந்தரின் **திருக்ஷேத்திரக் கோவையில்** 104 திருத்தலங்களைத் தெளிவாகத் தெரிந்து கொள்ள முடிகிறது. ஆனால் மூன்றாவது பாடலில் அட்டவீரட்டானமும் பாகூரும் தவிர

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மற்றவையெல்லாம் தொங்கப்பெயராகவே உள்ளன. எடுத்துக்காட்டாக, 'கா அனைத்தும்,' 'துறைஎட்டு,' 'காடு ஒன்பது,' 'குளம் மூன்று,' 'பாடி நான்கு,' 'பாழிமூன்று' என்று வருகின்றன. மேலும், மூன்று பாடல்களில் மொத்தம் ஐந்து வரிகள் கிடைக்கவில்லை. சில தலங்களை எளிதில் இனம் கண்டு கொள்ள முடியவில்லை. என்றாலும், மற்ற அடியார்களின் துணை கொண்டு பல தலங்களைத் தெரிந்து கொள்கிறோம்.

சம்பந்தருக்குப் பிறகும் இத்திருநிலத்தில் வாழ்ந்தவரான அப்பர் 193 கோயில்களைப்பற்றி குறிப்பிட்டுள்ளார். இவைகளில் 58 கோயில்கள் சம்பந்தர் வரிசையில் காணப்படவில்லை. சுந்தரர் குறிப்பிடுகின்ற ஏழு பெயர்களும் சம்பந்தர் அப்பர் ஆகிய இருவரது வரிசையிலும் காணப் படவில்லை. இந்த வரிசைகள் ஒரு குறிப்பிட்ட கால எல்லையில் ஏற்பட்டுள்ள கோயில்களின் வளர்ச்சியை உணர்த்துகின்றன. அதோடு மூவரும் ஆலய வளர்ச்சியில் ஆற்றிய பணியும் தெளிவாகிறது.

திருஞானசம்பந்தர் முதலியவர்கள் பாடல்தந்து சிறப்பித்த கோயில்களில் அவர்களது பண்நிறைந்த பாடல்களைப் பாடுகின்ற வழக்கம் ஏற்பட்டது. அதனால் ஆலய வழிபாட்டில் தேவாரப் பதிகங்களைப் பாடுவது என்பது ஓர் இன்றியமையாத சிறப்பாக அமைந்து விட்டது.

தென்னிந்திய ஆலய வழிபாட்டு நியதிகளைக் கையாள்வதில் **காமிகாகமம்** சில நெறிமுறைகளை வகுத்துள்ளது. ஒவ்வொரு கோயிலிலும் நித்தமும் நடக்கும் நியம வழிபாடுகள் முடிவடைந்த உடனே தமிழ்ப் பாசுரங் களைப் பாட வேண்டும் என்ற நெறிமுறை வகுக்கப்பட்டது.[14] இந்த வழக்கத்தைத் 'திருப்பதியம் விண்ணப்பித்தல்' என்பார்கள். கி.பி. எட்டாம் நூற்றாண்டிலேயே இந்த வழக்கம் தமிழகக் கோயில்கள் எங்கும் பின்பற்றப்பட்டது. நந்திவர்ம பல்லவ மன்னனது கல்வெட்டு ஒன்று இந்த வழக்கத்தை உறுதி செய்கிறது.[15] சோழர்காலத்திலும் இந்த வழக்கம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தொடர்ந்ததோடல்லாமல் விரிவான ஏற்பாடுகள் பதியம் பாடுவதற்காகச் செய்யப்பட்டன; பாடுவோருக்கு ஊதியங்களும் அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டது. 'திருக்கைக் கொட்டி 'மண்டபங்களும் அமைக்கப்பட்டன.

முடிவாக எடுத்துச் சொன்னால், தமிழக மக்களின் வாழ்க்கையில் கோயில்கள் மகத்தான தொண்டினைச் செய்திருக்கின்றன. பக்தி – ஈசன் பால் அன்பு என்னும் உணர்வு, கலை உணர்ச்சியோடு மிளிர்ந்து ஞானமாகப் பரிணமிப்பதற்குக் கோயில்கள் ஆற்றிய அரும்பணிகள் ஏராளம்.

கோயில்களைப் பற்றிய அட்டவணை

(சம்பந்தரின் திருக்ஷேத்திரக் கோவையில் இடம் பெறாது அப்பர், நம்பியாரூரர் சென்ற கோயில்களாக அவர்களது பட்டியலில் குறிப்பிடப்படுபவை.)

அப்பரது பட்டியல்

1. கொல்லிக்குளிரறைப்பள்ளி
2. முருகன்பூண்டி
3. சத்தி முற்றம்
4. பேரூர்
5. பேராவூர்
6. பெருந்துறை
7. காம்பிலி
8. பிடவூர்
9. குறுக்கை வீரட்டம்
10. இடவை
11. இன்னம்பர்
12. ஏமப்பேரூர்
13. சடைமுடி
14. சாலைக்குடி
15. தக்களூர்
16. தலையாலங்காடு
17. தலைச்சங்காடு
18. எச்சிலிளாமர்
19. ஏமநல்லூர்
20. இறையஞ்சேரி
21. அளப்பூர்
22. அழுந்தூர்*
23. அஞ்சைக்களம்
24. கொங்கணம்
25. நியமானல்லூர்
26. எழுமூர்
27. ஏமூர்
28. தொழூர்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

29. ஏமக்குடம்
30. மண்ணிப்படிக்கரை
31. மந்தாரம்
32. விளத்தொட்டி
33. விராடபுரம்
34. பிரம்பில்
35. கண்ணை
36. காரை
37. வெங்கூர்
38. உருத்திரகோடி
39. பொதியில் மலை
40. தஞ்சை
41. வழுவூர்
42. மாடாளம்
43. வெஞ்சமாக்கூடல்
44. விவீச்சரம்
45. கஞ்சாறு
46. பஞ்சாக்கை
47. திண்டீச்சரம்
48. கொண்டீச்சரம்
49. குழையூர்
50. குமரி
51. கொங்கு
52. அசோகந்தி
53. சூலமங்கை
54. சோமேச்சரம்
55. ஊற்றட்டூர்
56. கறையூர்
57. கன்றாப்பூர்
58. புலிவலம்

* ஆனால் சம்பந்தரின் பதிகம் இந்தக் கோயிலில் காணப்படுகிறது.

நம்பியாரூரரது பட்டியல்

1. கொழுனல்
2. சுழியல்
3. சோபுரம்
4. காரிகரை
5. குரக்குத்தளி
6. நாங்கூர்
7. தேங்கூர்

4.4 வழிபாடு

ஆன்ம விடுதலையே சமயங்களின் இலட்சியம்; மெய்யுணர்தலே மெய்ஞ்ஞானத்தின் இலக்கு. திருஞான சம்பந்தர் போன்ற அருள்ஞானிகளுக்கு இரண்டும் ஒன்றுதான். ஆன்ம விடுதலை என்பது உடம்புச் சட்டையைக் கழற்றிவிட்டு அவ்வுலக இன்பங்களில் திளைப்பது இல்லை. முழுமுதற் பொருளை உணர்ந்து நிலைபெறுவதுதான் ஆன்ம விடுதலை. அதை அடையும் நெறி அன்பு ஒன்று தான். 'கூடும் அன்பினில் கும்பிடும் அன்பு' என்கிறார் சேக்கிழார். இந்த

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அன்பு தனிப்பட்டதாக இல்லாமல் எல்லா உலகுயிர்களையும் இணைத்து அணைத்து அழைத்துச் செல்லுவதற்குத் துணையாக இருப்பது ஆலய வழிபாடு. சம்பந்தர் போன்றவர்களின் தெய்வமும் தேனிசையும் கலந்த பாடல்கள் இந்த இலட்சியத்தை அடைவதற்குத் துணை செய்கின்றன. ஆகமங்கள் தனிப்பட்டோர் வழிபாட்டையும் கூட்டுவழிபாட்டையும் செம்மையாகச் செய்வதற்குப் பல வழிமுறைகளை அமைத்துக் கொடுத்துள்ளன.

வழிபாடு என்றால் என்ன? வழிபாட்டில் பல செயல்கள் அடங்கியுள்ளன; புறச் செயல்கள், அகச்செயல்கள் ஆகிய இரண்டும் வழிபாடுசெய்யும் ஒருவர் தன் உள்ள உணர்வுகளை வெளிப்படுத்தவும், மெய்ஞ்ஞான சமய உண்மைகளை நேராக அனுபவித்து உணரவும் துணை செய்கின்றன. வழிபாட்டில் மேற்கொள்ளும் செயல்களை கிரியைகள் அல்லது சடங்குகள் என்பார்கள்.

ஜான் உட்ராஃப் என்பவர் இதுபற்றி ஆராய்ந்து சில கருத்துக்களைச் சொல்கிறார். அவரது கருத்துக்களை நோக்குவோம்:

> சடங்கு ஒரு கலை; சமயத்தின் கலை. அறிவியல் கொண்டு உணர்வில் உணரும் கருத்துகளின் புறத்தோற்றமான வெளிப்பாடுதான் கலை. சடங்குக் கலை சமயச்சார்புள்ள சிந்தனைகளை, உணர்வுகளை வெளிப்படுத்துவதில் நாட்டமுற்றிருக்கின்றது. சமய உண்மையை எடுத்துச் சொல்ல இது ஒரு வழிமுறை; இதனால் புறப்பொருள்களாகவும் அடையாளங்களாகவும் சமய உண்மைகள் மனதில் புலப்படுத்தப்படுகின்றன. பலருக்கு இறைவன் வெளிப்பட்டுத் தோன்றும் பேரழகைப் பேராசையோடு உணரக்கூடிய அனைவரையும் இது கவர்ந்து கொள்கிறது. ஆனால் சடங்குக்கலை அந்த அளவில் நிற்பதில்லை. ஏனெனில் இதன் வழியாக மனம் மாற்றப்பட்டுத் தூய்மையுறுகிறது. குறிப்பாக இந்தியக் கொள்கைப்படி, சாதகனான வழிபடு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

> வோனுடைய உள்ளுணர்வை மாற்றிவிடுகின்ற ஒரு கருவியாகவும் இது அமைந்துவிடுகிறது. இதனால் புனிதநூல்கள் உணர்த்தும் உண்மைகளை உணரும் அனுபவ வடிவத்திற்குச் சாதகனுடைய மனம் உருவாக்கப்படுகிறது.
>
> இந்தச் சடங்கின் முடிந்த நோக்கம் இறைவனை உணர்வதேயாகும். வழிபடுவோனை வழிபடப்படும் பொருளைப்போல மாற்றி விடுவதன் மூலமாக இறையுணர்வு ஏற்படுகிறது.[16]

முன்பே சொன்னபடி ஆகமங்கள் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கு நெறிகளை வகுத்துத் தந்திருக்கின்றன. சம்பந்தரது காலத்தில் இந்த நெறிகள் பெருவழக்கில் வந்துவிட்டன. அவருடைய பாடல்களில் இவை பற்றி நிரம்பக் குறிப்புகள் உள்ளன. இச்சடங்குகளைத் 'தொழில்' அல்லது 'தொண்டு' என்பார் சம்பந்தர். சரியை 'சரியைத் தொழில்' *(3.339.7)* என்றே அழைக்கப்படுகிறது.

இந்த நான்கு நெறிகளையும் தனித்தனியாக விவரித்துப் பாடுகிறார் சம்பந்தர்.

> காவினை இட்டும் குளம்பல தொட்டும் கனிமனத்தால்
> இருபொழுதும்
> பூவினைக் கொய்தும் மலரடி போற்றுதும் நாமடியோம்
> (1.116.2; மேலும் 1.15.9; 1.54.1)

என்று சரியை குறிக்கப்படுகிறது.

> "நறைமலிதரும்அள றொடுமுகை நகுமலர்
> புகைமிகு வளர் ஒளி
> நிறைபுனல் கொடுதனை நினைவொடு நியதமும்
> வழிபடும் அடியவர்" (1.21.4)

என்பது கிரியை.

> சினம் மலி அறுபகை மிகுபொறி சிதைதரும்
> வகைவளி நிறுவிய (1.21.5)

என்பது யோகம்.

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

....
உருஇயல் உலகவை புகழ்தர வழிஒழுகும் மெயுறு பொறிஒழி
அருதவம் முயல்பவர் தனதுஅடி அடைவகை நினைஅரன்
(1.21.6)

என்பது ஞானம்.

நான்கு நெறிகள் தவிர 'பாடல்நெறி,' 'ஆடல் நெறி,' 'வேடநெறி' என்ற நெறிகளையும் சம்பந்தர் நமக்குக் காட்டுகின்றார். இவைகளோடு அவரது பதிகங்களைப்பாடிப் பயன் அடையும் 'பதிகப்பெருவழி'யையும் முன்னமேயே விவரமாகக் கண்டிருக்கிறோம்.

இவற்றைத்தவிர சில வழிபாடுகள்பற்றியும் முறைகளைப்பற்றியும் சம்பந்தரின் பாடல்களில் நாம் அறிந்து கொள்கிறோம். அவற்றில் சிலவற்றைக் கீழே காண்போம்.

(1) பூவும் புனலும் அளித்தல்

பொடிஅணி மேனியி னானை உள்கிப்
போதொடு நீர் சுமந்தேத்தி முன்னம் நின்று
அடிகையி னால்தொழ வல்ல தொண்டர் (1.5.7)

பொன் அடிக்கே நாள்தோறும் பூவோடு நீர் சுமக்கும்
தன்னடியார் (2.178.8; மேலும் 1.15.9; 1.16.7; 1.33.7; 1.52.3; 2.169.6; 2.191.3; 2.200.3,6)

(2) மலரிட்டு வணங்கல்

கரவுஇன் றிநன்மா மலர்கொண்டு இரவும்பகலும்
தொழுவார்கள்
(1.38.1; 1.17.9.; 1.34.10; 1.54.1; 1.55.4; 1.61.1)

(3) மாலை கட்டி வழிபடுதல்

தொண்டர் அஞ்சு களிறும் அடக்கிச் சுரும்பார்மலர்
கொண்டு
இண்டை கட்டி வழிபாடு செய்யுமிடம் (2.250.1; 3.351.6)

(4) சாந்தும் புகையும் இடுதல்

பொன்னியன்று மலர் புனலொடுதூபம்
சாந்தமும் ஏந்திய கையினராகி (1.79.6)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(5) பாலும் தேனும் பெய்து முழுக்காட்டல்

பாலினால் நறு நெய்யால் பழத்தினால் பயின்றாட்டி (1.61.5)

தேன் நெய் பால்தயிர் தெங்கிள நீர்களும் பின்தெளி
ஆன்அஞ் சாடுமுடி யான் (1.7.4; 1.82.9; 1.87.2; 2.142.5)

(6) அருச்சனை

...இமையோர்
வந்துதுதி செய்யவளர் தூபமொடு
தீபம்மலி வாய்மை அதனால்
அந்திஅமர் சந்திபல அர்ச்சனைகள் செய்ய
(1.61.4; 3.331.1; 3.338.4)

(7) மந்திர நன்மொழி சொல்லுதல்

நன்று நகு நாள்மலரால் நல்இருக்கு மந்திரம் கொண்டு
ஒன்றி வழிபாடு செய்... (1.62.3)

பிரமாபுரம் பதிகத்தில் (3.325.1) பிரமன் உபநிடதங் களைச் சொல்லி அர்ச்சிப்பதாகக் கூறப்படுகிறது. இங்கு உபநிடதத்தை 'சுருதிசிரஉரை' என்று குறிப்பதைக் காணலாம்.

தொழிலால் மிகுதொண்டர்கள் தோத் திரம்சொல்ல (1.30.8)

(8) உருத்திராட்சம் கொண்டு எண்ணுதல்

நெக்குள் ஆர்வம் மிகப்பெரு கிநினைந்து
அக்கு மாலைகொண்டு அங்கையில் எண்ணுவர்
(1.65.8; 3.307.3)

(அக்கு = உருத்திராட்சம்).

(9) நீறு பூசுதல்

பொடிகள் பூசிப் பலதொண்டர்கள் கூடிப் புலர் காலையே
அடிகள் ஆரத் தொழுதேத்த...
(1.52.7; 1.53.9; 2.187.2; 2.230.6; 2.232.6; 2.237.4; 2.254.1)

(10) புண்ணிய நதிகளாடுதல்

தீர்த்த நீர்வந் திழிபுனல் பொன்னியில் பன்மலர்
வார்த்த நீர் குடைவார்...
(1.104.2; 1.121.7; 2.138.6,7; 2.138.9; 2.139.2)

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

(11) பாடி ஆடுதல்

ஊறுபொருள் இன்தமிழ் இயற்கிளவி தேரும்மட
மாதர்உடனார்
வேறுதிசை ஆடவர்கள் கூறஇசை
தேரும் எழில் வேதவனமே' (3.334.4)

(1.38.6; 1.54.5; 2.181.9; 2.197.9; 3.336.4; 3.362.7–9)

இசையால் வழிபாடு செய்து உன்னினார் (3.306.7)

அடியார்கள் கூட்டமாகப் பாடுவதை, 'கணங்கள் பாடவும்' *(2.239.3)* என்றும், 'கீதத்தை மிகப்பாடும் அடியார்கள் குடியாகப் பாதத்தை தொழ' *(2.179.5)* என்றும், இரவு பகலாக இசைபாடிஆடும் அடியார்கள் 'மனத்தகத்தார் பாடல் ஆடல் பேணி இராப்பகலும் நினைந்து எழுவார்' என்றும், 'நாதத் தோடு இசை பாடும் அடியார்கள் *(2.169.2)* என்றும் விவரிக்கப்பட்டுள்ளன.

இந்த வழிபாடுகளில் பெண்களுக்கு மிகச் சிறந்த பங்கு உண்டு.

கோல விழாவில் அரங்கதுஏறிக் கொடிஇடை
மாதர்கள் மைந்தரோடும்
பால்என வேமொழிந்து ஏத்தும் (1.8.9)

என்றும்

சுற்றிய வாசலில் மாதர்விழாச் சொல்கவி பாட (1.8.6)

என்றும்

....மனைகள் தொறும் இறைவனது தன்மைபாடி
கருந்தடங்கண்ணார் கழல்பந்து அம்மானைப் பாட்டயரும்
(1.129.2)

என்றும் பலவாறு குறிக்கப்பெறுகின்றன.

பலவகையான திருவிழாக்கள் நடைபெற்றன. திருமயிலைக் கபாலீச்சரத்தில் உத்திரப்பெருங்கணத் தாருக்குப் பெருஞ்சோறு இடும் திருவிழா, ஐப்பசியில் ஓண விழா, கார்த்திகை நன்னாளில் பெண்கள் விளக்கிடும் விழா, மார்கழியில் திரு ஆதிரை நாள், தையில் பூசத்திருவிழா, மாசியில் கடல் ஆடும் திருவிழா, பங்குனி உத்திரநாள்,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிவகணங்களுக்காக எடுக்கும் அட்டமித்திருவிழா, பொன் ஊசல் விழாவான பொற்றாப்பு, பெருஞ்சாந்தி என்னும் புனிதத்திருவிழா போன்ற விழாக்கள் நடைபெற்றதை அறிகிறோம் *(2.183.1-10)*. தைப்பூசவிழாவில் இறைவனுக்கும் தேவிக்கும் திருமஞ்சன நீராட்டுவிழா நடைபெற்றதை *(1.32.5;2.192.5)* பதிகங்கள் பேசுகின்றன.

பாடும்பொழுதும் ஆடும்பொழுதும் பறை, சங்கு, முழவு, வீணை, மொந்தை, தாளம், தகுனிச்சம், துந்துபி, குழல், யாழ், மணி, முரசு போன்ற இசைக்கருவிகளைப் பயன்படுத்தி னார்கள்.

(12) நாதன் நாமம் பாடுதல்

புத்தூரில் வாழ்ந்த அந்தணர்கள் நாள்தோறும் இறைவன் பெயர்பாடி பூசைகள் செய்வதை,

> நாவால் நாதன் நாமம் ஓதி நாள்தோறும்
> பூவால் நீரால் பூசுரர் போற்றும் புத்தூரே (2.190.2)

என்றும்,

> நாமம் நூறாயிரம் சொல்லிவா னோர்தொழும் நாதன்
> (3.265.5)
> (3.280.9; 3.307.3; 3.311.7; 3.325.6; 3.378.8)

என்றும் குறிக்கப்படுகின்றன.

இதுவரை கூட்டு வழிபாடாக அமைந்ததைப் பார்த்தோம். இனிமேல் ஞானம் வந்த நல்லடியர்ர் தனிப்படச் செய்த வழிபாட்டு முறைகளைக் காணலாம்.

சிவஞானம் கைவரப்பெற்ற அடியார்கள் 'நுண் அறிவால் வழிபாடு செய்யும் கழல் உடையான்' *(1.5.4)* என்றும் 'தேவார் சிந்தை அந்தணாளர் சீரால் அடிபோற்ற' *(1.72.5)* என்றும் வழிபாடு செய்வதைப்பார்க்கிறோம். இதுபற்றி *1.9.8; 1.16.2; 1.17.9; 1.66.10; 1.84.6; 2.153.10* போன்ற பாடல்களில் மேலும் விளக்கம் காணலாம்.

இவ்வாறு வழிபடுவோரின் இயல்புகள், நிலைகள் பல பாடல்களில் சித்திரம்போல தீட்டப்பட்டுள்ளன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அன்பு பிரிவைப் பொறுக்கமாட்டாமல் அல்லல் உறும் தன்மையுடையது. பிரிவு என்ற நினைப்பே அன்புடைய உள்ளங்களை உருக்கிவிடும். அதனால்தான் போலும் அன்பினுடைய ஆழத்தையும் தீவிரத்தையும் பிரிவில் நம்மால் நன்கு உணர்ந்து கொள்ள முடிகிறது. இறைவனும் அந்த அழுகைக்கு இரங்கி விடுகிறார். மாணிக்கவாசகர், 'அழுதால் உன்னைப் பெறலாமே' என்று (திருவாசகம், திருச்சதகம், 90) கூறுவதைக் காண்கிறோம்.

அன்பால் கனிந்து அழும்பொழுது உள்ளம் ஆண்டவனை நெருங்கி விடுகிறது. திருவீழிமிழலையில் தொண்டர்கள் அழுது தொழுது தோத்திரம் செய்வதை,

அழவல் லவர் ஆடியும்பாடி
எழுவல் லவர்எந் தைஅடிமேல்
விழவல் லவர்வீ ழிம்மிழலை
தொழவல் லவர்நல் லவர் தொண்டே (1.35.3)

என்று பாடுகிறார் சம்பந்தர். மேலும் அடியார்கள்

தொழுதுபொழுது தோத்திரங்கள் சொல்லித் துதித்துநின்று
அழுது நக்கும் அன்புசெய்வார் (1.73.11)

என்பார். மேலும் 2.156.1; 2.188.7; 2.197.4; 3.307.1 ஆகிய பதிகங்கள் பார்க்க. (நக்கும் = சிரித்தும்).

இது வெறும் உணர்ச்சி வெளிப்பாடு இல்லை. அவர்கள் கனிந்த ஞானிகள். அவர்களது உள்ளம் தீபம் போல் ஞானத்தால் பிரகாசிக்கிறது; ('தீப மனத்தார்' 1.86.8). அவர்தம் சிந்தை சிவத்திலே ஒன்றி ஒன்றாகி விடுகிறது. (ஏகமனத்தார் 1.80.8) 'மெய்யராகிப் பொய்யை நீக்கி வேதனையைத் துறந்து செய்யரானார்...'' (1.50.4) என்று அவர்களது நிலை பேசப்படுகிறது. 1.50.1. 2.167.1, 3.237.4 போன்ற பாடல்களையும் பார்க்க வேண்டும்.

சம்பந்தர், 'பத்தர் சித்தர்' என்ற தொடரை அடிக்கடிக் குறிப்பிடுவது வழக்கம். பத்தர் என்ற பக்தர்கள் அன்பால் இறைவனைக்காண முயல்பவர்கள். சித்தர்கள் கண்டு தெளிந்தவர்கள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தொண்டர், பழைய தொண்டர், அடியார், சிறுத் தொண்டர், ஒருக்கும் மனத்தன்பர், உருத்திரர், உருத்திர பல் கணத்தார், ஆளானார், தவத்தார், விரதிகள், நிருத்தகீதர், பித்தர், சித்தர்கள், தொழிலினார், சிட்டப்பட்டார் போன்றவை அடியார்களைக் குறிப்பதாகப் பதிகங்களில் இடம் பெறுகின்றன.

குறிப்புகள்

1. S. Radhakrishnan, *The Reign of Religion in Contemporary Philosophy,* Macmillan and Co. Ltd., London, 1920, p. 5
2. C. Kerenyi, *'Essays on a Science of Mythology, Prolegomena'*, (Tr.) R.F.C. Hull, Bolingen Series, XXII, Princeton University Press, Princeton, 1969, p. 3 .
3. Cf., Fred W. Clothy, Mircea Eliade, *'Man's Imaging of the Sacred'*, Indian Philosophical Annual, Vol. VII, University of Madras, Madras, 1971, p. 149.
4. *Myths and Ritual in Christianity,*
5. In the *Essays on a Science of Mythology* (p. 4)

   Jung quotes Bronislaw Malinowski who did field work in mythology in Torbriand Island. Even his study "Myth in Primitive Psychology." "The Myth in a primitive society, i.e., in its original form, is not a mere tale told but a reality lived... For the natives on the contrary they are the assertion of an original, greater and more important reality through which the present life, fate and work of mankind are governed.
6. *Op.cit.*, Book I, Vol. II, pp. 304, 305. also see செந்திநாத அய்யரின் **தேவாரம் வேதசாரம்** *பக். 242-250.*
7. Ananda K. Coomaraswamy, *'The Dance of Śhiva'*, Sagar Publication, New Delhi, 1968, p. 77

   "... it may not be out of place to call attention to the grandeour of this conception itself as a synthesis of science, religion and art. How amazing the range of thought and sympathy of those rishi-artists who just conceived such a type as this, affording an image of reality a key to the complex tissue of life, a theory of nature, not merely satisfactory to a single

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

clique or race, nor acceptable to the thinkers of one century only, but universal in its appeal to the philosopher, the lovers and the artist of all ages and all countries."

He continues

"Now to surmise the whole interpretation we find that the Essential significance of Shiva's Dance is three fold: First it is the image of his Rhythemic Play as the Source of all Movement within the cosmos, which is represented by the Arch; Secondly the Purpose of his Dance is to Release the countless souls from the snare of Illusion; Thirdly the place of the Dance, Chidambaram, the centre of the universe, is within the Heart."

8. தேவாரம் வேதசாரம், *பக். 237, 238.*
9. Mircea Eliade, "Methodological Remarks on the Study of Religious Symbolism, *"History of Religious Essays in Mythology"*, University of Chicago Press, 1959, pp. 98, 99.
10. Devasenapathy, "It would seem" - *(polusm) Saiva Siddhanta*, Vol. XIV, July-Sept., No.3, The Saiva Siddhanta Mahasamajam, Madras, p. iii.
11. மதுரைக்காஞ்சி, *வரி 427, உரை அடிக்குறிப்பு, பக். 385,*
12. திருமுருகாற்றுப்படை, *வரி 244,* புறநானூறு, *6.*
13. Dr. C. Minakshi, *Administration and Social life under Pallavas*, University of Madras, Madras, 1977, p. 159.
14. 'தாருர்த்வம் க்ரந்த பாஷாத்யயிர் கானம் தாபாந்தம் ஆசரேத் ஊர்த்வம் த்ராவிடபாஷாங்கம் கானம் ந்ரித்யயுதாம் துவா' காமிகாகமம், *பகுதி* I, *தக்ஷிணபாரத அர்ச்சக சங்கம், 1977, அத்.* IV, அர்ச்சனாவிதி ஸ்லோகம், *438.*
15. S.I.I. Vol. III, Part I, 43; and also see 423/1908; 624/1909; 129/1914; 349/1918 etc., of Epigraphical Reports of Madras.
16. Sir John Woodroffe, *Sakti and Sākta*, Ganesh & Co; Madras Private Ltd., Madras-17, p. 12.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

5

சம்பந்தரின் சமுதாய நோக்கு

5.1. சம்பந்தரது சமுதாய நோக்கின் அடிப்படை

சம்பந்தரைப் பொறுத்தவரையில் இந்த உலகம் - இங்குள்ள உயிர்கள் - எல்லாம் உள்ள பொருள்களேயாம். அவருடைய பாடல்களில் இவ்வுலகம் இறைவனின் பேரழகுப் பெட்டகமாகவே தோன்றுகிறது. வறுமை (நல்குரவு) கூட அவன் வடிவம்தான் (2.165.7). உலகச் சிந்தனை சம்பந்தருக்கு உடன்பாடுதான். தன்னைச் சுற்றியுள்ள உயிர்களிடத்தே அவர் இரங்கிப் பரிவு கொள்கிறார்; அதனால் மக்களுக்குத் தொண்டாற்ற வேண்டும் என்ற கரிசனமும் கருத்தும் அவரிடம் நிரம்ப இருப்பதைப் பார்க்கின்றோம்.

சம்பந்தர் ஊர் ஊராகச் சென்றார். அந்த ஊர்களிலுள்ள ஆலயங்களை வணங்குவதற்காகமட்டிலும் அவர் அவ்வாறு செய்யவில்லை. ஒவ்வொரு ஊரிலுமுள்ள மக்களையும் அவர் சந்தித்தார். அவர்கள் தூய ஒழுக்க நிலையும் இறைவனிடம் அன்பும் கொண்டு ஈடேற வேண்டும் என்பதுதான் அவரது ஆசை.

மக்களோடு ஒன்றிப்பழகித் தன் எண்ணங்களைச் சொல்வதற்காக, மக்கள் பேசும் மொழியிலேயே அவர் பேசினார்; பாடினார். அவர் பிறப்பில் ஓர் இருக்குவேதி. 'இருக்கு மொழிப் பிள்ளையார்' என்று சேக்கிழார் குறிப்பதைக் காண்கிறோம் (புராணம். 1983). வேத வேள்வி நெறிகளிலே ஊன்றியவர் அவர். தன்னை 'மறை ஞான சம்பந்தன்' (1.12.11) என்றும் 'நான்மறை கற்றவன்' (3.280.11) என்றும், 'மாமறை நான்கினொடு அங்கம் ஆறும் வல்லவன்'

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(3.358.11) என்றும் கூறிக்கொள்கிறார். 'வேதம், வேதாந்தம், அங்கம், சுருதி, சுருதிசிரம், மறை, கேள்வி' என்ற சொற்கள் அவர் வேதங்களைக் குறித்துச் சொல்வதாக உள்ளன. 'தழங்கு எரி மூன்று ஓம்பும் தொழில் தமிழ்ஞான சம்பந்தன்' (1.131.11) என்று தானே வேள்வித் தொழிலில் ஈடுபட்டிருந்ததைக் குறிப்பிடுகிறார்.

ஏறத்தாழ 478 பாடல்களில் திருமறை பேசப்படுகிறது.

தமிழும் வட சொல்லும் இறைவனுடைய இரண்டு பாத நிழல்களாக உள்ளன. ('தமிழ்ச் சொலும் வட சொலும் தாள் நிழல் சேர' - 1.77.4). தான், 'நற்றமிழ்க்கு இன்துணை' (1.76.11) என்று கூறிப் பெருமிதமடைகிறார்.

இறைவன் அன்பை இவ்வுலகம் முழுதும் பரப்ப சம்பந்தர் தேர்ந்தெடுத்த கருவிகள் தமிழும் இசையும். மக்களையும் விலங்கு, பறவை, மீன் போன்றவற்றையும்கூட அவர் உற்று நோக்குகிறார். தென்குடித்திட்டையில் கால்வாய் வழியாக நீந்திவரும் கயல், வாளை போன்ற மீன்களோடு பொன் போன்ற மூக்கினை உடைய ஒரு மீனைக் 'கனக மூக்கு' (3.293.8) என்று அவர் அன்போடு அழைத்து வருணிக்கிறார்.

சேக்கிழாருடைய பெரியபுராணத்தின் வழியாகப் பார்க்கும்போது சம்பந்தர் அந்தக் காலத்திலேயே சில சமுதாயப் புதுமைகளையும் செய்திருப்பதை அறிந்து வியக்கின்றோம். அவர் தான் வாழ்ந்த காலத்திருந்த சமணர், புத்தர்களில் ஒரு சாராரை ஏற்றுக்கொள்ளாததற்கும் அன்றைய சமுதாயப் பிரச்சினைகள் காரணமாக இருந்திருக்கலாம் என்று தோன்றுகிறது. அவருக்கு எல்லாம் கடவுள் அருள். எவ்வுயிரும் அவ்வருளின் நிழலிலேதான் தழைக்கிறது. அவருடைய யாவும் தழுவிய பார்வை இந்தத் தத்துவத்தின் அடிப்படையில்தான் தோன்றுகிறது.

5.2 இசை பெற்ற மேன்மை

முன்பே சொன்னவாறு மிகச் சிறந்த சிந்தனைகளை இசையினால் மட்டும்தான் வெளிப்படுத்த முடியும். சம்பந்தர்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தாம் பாடிய பாடல்கள் எல்லாம் இசை உணர்வோடுதான் சொல்லப்பட்டவை என்கிறார். ('பண்மதியால் சொன்ன பாடல்' – 3.360.11). அதுமட்டிலுமல்ல, உயர்நூல்களை யெல்லாம் ஓதிவந்தவர்களாயிருந்தாலும் கீதத்தின் வாயிலாகத்தான் மெய்ப்பொருளை உணர முடியுமென்றும் அவர் நம்புகிறார் ('கீதம் வந்த வாய்மையால் கிளர் தருக்கினார்க்கலால், ஓதி வந்த வாய்மையால் உணர்த்துரைக் கலாகுமே' – 3.310.7). உண்மையில் சம்பந்தரது பாடலில் திகழும் உணர்வுகளைப் புரிந்துகொள்ள வேண்டுமென்றால் அவற்றை இசையறிவோடும் இசை உணர்வோடும் படிக்க வேண்டும்.

'கானத்தின் எழு பிறப்பு' என்று சேக்கிழார் சம்பந்தரை மெய் உணர்ந்து அழைக்கிறார். நம்பி ஆரூரர் அவரை 'நல்லிசை ஞானசம்பந்தன்' (7.67.5) என்பார். 'சந்தம் மிகு ஞானம் உணர் பந்தன்' (2.170.11) 'தமிழ்க்கிளவி (வேதம்) இன்னிசை செய் ஞானசம்பந்தன்' (3.337.11) என்பவை சம்பந்தரே கூறிக்கொள்பவை.

திருஞானசம்பந்தர் தம் கவிதையைத் தன் இசை ஞானத்தால் பாடி அளித்துள்ளார் என்பதை, 'ஞான சம்பந்தன் நல்லதன் இசையால் சொன்ன மாலை பத்தும்' (1.5.11) என்ற அவரது திருவாய்ச் சொற்களாலேயே அறிந்துகொள்கிறோம். தன் இசையைத் தன் வாயாலே பாடி மகிழ்ந்ததை 'ஞானசம்பந்தன் வாய்ப் பன்னு பாடல்' (3.303.11; 3.259.11; 3.295.10) என்று அவர் குறிப்பிட்டிருக்கிறார். தந்தையின் மீது அமர்ந்து பறைகள் ஒலிக்க இசையோடு பாடியதை 'இருபறை ஒன்ற அத்தர் (தகப்பனார்) பியல் மேல் (தோள்மேல்) இருந்து இன்னிசையால் உரைத்த பனுவல்' (2.220.11) என்று அவர் கூறுவதால் அறிகிறோம். தன் உடன் வந்தவர்களும் அவ்வாறே இசையால் தன் பாடலைப் பாடியதைக் கண்டு அவர்களை மகிழ்ந்து ஆசீர்வதிக்கிறார். 'பத்தும் ஏத்தி இன்னிசையால் பாடவல்லார் இருநிலத்தில் ஈசன் எனும் இயல்பினரே' (1.132.11); 'பண்ணினால் பாடுவார்க்கு இல்லையாம் பாவமே' (3.292.11) என்பவை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அவரது திருவுள்ளக் கிடக்கையை வெளிப்படுத்துகின்றன அல்லவா?

இறைவன் அருளால்தான் அவ்வாறு பாட முடிந்தது என்பதை 'வேந்தன் அருளாலே விரித்த பாடல்' *(1.45.12)* என்றும், அப்பாடல்கள் பக்தியில் விளைந்தவை 'பத்தியில் வருவன' *(1.124.11)* என்றும் அவர் ஆழ்ந்து உணர்கிறார்.

சம்பந்தர் இசைக்கு அளித்த உயர்ந்த பீடத்தை அவரது சொற்களால் தெரிந்து கொண்டோம். இனி, சம்பந்தரது பதிகங்களில் காணப்படும் பண்களின் நிலையையும் வளர்ச்சியையும்பற்றிச் சிறிது பார்க்கலாம்.

பொதுவாகத் தேவாரப் பாடல்கள் எல்லாமே, குறிப்பாகச் சம்பந்தரின் பாடல்கள் இசையோடு அமைந்தவை. 'தெய்வம் சுட்டிய வாரப்பாடல்' அல்லது 'பெரும் தேவபாணி' என்ற இசை மரபைச் சார்ந்த தெய்வப் பாடல்கள் அவை.

இசைப் பாடல்களை இருவகைகளாகக் கொள்வார்கள். இசையை அடிப்படையாகக் கொண்ட, அதற்குத் தகுந்தாற் போன்ற சொற்களை அமைத்துப் பாடுவது ஒருவகை. இதை 'இசைப்பா' என்பார்கள். பாடலை இயற்றி அதற்குத் தகுந்தபடி பண்ணை அமைத்துக்கொள்ளும் மற்றொரு வகைக்கு 'இசை அளவு பா' என்று பெயர். சம்பந்தரது பாடல்கள் எல்லாமே இசை வடிவங்களிலே பிறக்கும் சொற்களால் தொடுக்கப்பட்டு அமைந்த 'இசைப்பா' வகையைச் சார்ந்தவை. *('ஏழின்னிசை மாலை' – 2.173.11; 'பண் பொலி செந்தமிழ் மாலை' – 2.184.11)*. கவிதையோடு இசைந்து ஒலிப்பது இசையாகிறது. இந்த இசை என்னும் இனிய ஒலியை 'a concord of sweet sounds' என்பார் ஷேக்ஸ்பியர். இந்த இனிய ஓசை 'இசைகள்' கூடிப் 'பண்' என்ற இசை வடிவத்தை உருவாக்குகின்றன. பண்ணினை இராகம் என்றும் கருதுவார்கள். பண் பிறப்பதற்கு எட்டு வகையான செயல்கள் நிகழவேண்டும்; அந்தச் செயல்களுக்கு மார்பு, கண்டம், நாக்கு, மூக்கு, அண்ணம், உதடுகள், பற்கள், தலை ஆகிய உடல் உறுப்புகள் தளங்களாக அமைந்து உதவுகின்றன.[1]

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சம்பந்தரது இசை அறிவு - ஞானம் - மிகவும் ஆழமானது; நுட்பமானது; தேர்ந்த கலைத்திறன் உள்ளது.

பண்டையத் தமிழ் இசை மரபின்படி மனித உடலின் நீளம் 96 விரல் அளவாகும். இதில் மேல் பகுதியில் 47½ விரல் அளவுகள்; கீழ்ப்பகுதியில் 47½ விரல் அளவுகள். இடையில் உள்ள ஒரு விரல் நீளத்தை 'மூலாதாரம்' என்பார்கள். அந்த மூலாதாரத்திலிருந்து எழும்பும் ஒலி 'ஆளத்தி' எனப்படும். ஆளத்தியில் 'ம், ந், த்' என்ற மெய்யொலிகள் உள்ளன. 'ம்' எனும் ஒலிதான், இசைக்கு ஆதார ஒலி; அதுதான் ஒலிக்கே ஆதாரமானது. அதை அடிப்படையாகக் கொண்டுதான் இசையே பிறக்கிறது.[2]

சம்பந்தர் இந்த இசை நுட்பத்தை வண்டுகளின் ஒலியிலேயே கண்டு உணர்ந்தவர். 'மும் மென்று இசை முரல் வண்டுகள்' (1.11.3) என்று அவைகளின் இசையைச் செவியார்ந்து மகிழ்கிறார்.

'ஆளத்தி' இசைக்கும் பொழுது அது, 'தென்ன' என்றும், 'தேன' என்றும், 'தென்னத்தேன' என்றும் சில வாய்பாடு களாக வெளிவருகிறது. வண்டினங்கள் இந்த வாய்பாடுகளை முழங்குகின்றனவாம். 'தென்னென வண்டினங்கள்' (2.106.10) என்றும், 'தென்ன என்று வரிவண்டுகள் இசை செய்' – (2.143.1) என்றும் 'தெத்தென இசைமுரல்' – (3.343.3) என்றும் சம்பந்தரது பாடல்களில் ஒலிப்பதைக் காண்கிறோம்.

மூலாதாரத்திலிருந்து எழுந்துவரும் ஆளத்தியே இசை களையும் பண்களையும் உருவாக்குகின்றன. முன் சொன்னபடி எட்டு வகையான செயல்பாடுகளால் இசை பண்ணாக அமைகிறது. அந்தச் செயல்பாடுகள் எவை எவை என்றால் (1) எடுத்தல், (2) படுத்தல், (3) நலிதல், (4) கம்பிதம், (5) குடிலம் (6) ஒலி, (7) உருட்டுதல், (8) தாக்குதல் என்ற செயல்களே ஆகும்.

இசைகள் (சுரங்கள்) ஏழு. அவை: குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்னும் ஏழு இசைகள். இவற்றின் வெவ்வேறு வகையான சேர்க்கையால் பண் (இராகம்) தோன்றுகிறது. நான்கு பெரும் பண்கள்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உள்ளன. அவை பாலை, குறிஞ்சி, மருதம், செவ்வழி என்ற நான்கு பெரும் பண்கள். சிறு பண்கள் 21 (திறன்கள்) உள்ளன. இதனை, 'ஈறு இரு பண்ணும் எழு மூன்று திறனும்' என்று பிங்கலந்தை என்னும் நிகண்டு (1380) கூறுகிறது. அந்த 21 திறன்களும் கீழ்க்கண்டவாறு அமைகின்றன.

பாலைப் பண்ணிற்கு 5 திறன்கள்; குறிஞ்சிப் பண்ணிற்கு 8 திறன்கள்; மருதத்திற்கு 4 திறன்கள்; செவ்வழிப் பண்ணிற்கு 4 திறன்கள். ஆக 21 திறன்கள். ஆனால் விபுலானந்த அடிகள் என்னும் இசைமேதை தம்முடைய யாழ்நூல் என்னும் ஆராய்ச்சியில் சம்பந்தரைப் பொறுத்தவரையில் திறன்கள் வேறு வகையாக அமைகின்றன என்று எடுத்துச் சொல்லு கிறார்.

திருக்கழுமலப் பதிகத்தில் சம்பந்தர் 'ஏழே ஏழே நாலே மூன்று இயல் இசை' (1.126.11) என்று குறிப்பிடுவதைத்தான் அடிகள் அவ்வாறு கூறுகிறார். இதன்படிப் பாலை, குறிஞ்சிப் பண்கள் ஒவ்வொன்றிற்கும் ஏழு திறன்கள் என்றும் மருதத்திற்கு நான்கும் செவ்வழிக்கு மூன்றுமாகத் திறன்கள் அமைந்துள்ளன.[3]

ஒரு மரபுப்படி நான்கு பண்களில் ஒவ்வொரு பண்ணும் ஒவ்வொரு திறனும் நந்நான்கு வகைகளாகப் பெருகுகின்றன. 'அகநிலை,' 'புறநிலை,' 'அருகியல்,' 'பெருகியல்' என்பவையே அந்த நான்கு வகைகள். 4×4 = 16 + (21×4 = 84) என்று மொத்தம் 100 பண்கள் தோன்றுகின்றன. இவற்றோடு 'தாரப்பண் திறம்,' 'பைய்யுள்காஞ்சி,' 'படுமலை' என்று மூன்று பண்களும் சேர்ந்து மொத்தம் 103 பண்கள் கிடைக்கின்றன. இவற்றின் விவரங்களை அட்டவணையில் காணலாம். பண்ணும் திறனும் பொதுவாகப் பண்ணென்றே அழைக்கப்படுகின்றன. இந்த மரபு சிலப்பதிகார உரை ஆசிரியர்களான அரும்பத உரை ஆசிரியர்க்கும் அடியார்க்கு நல்லாருக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் வழக்கில் இருந்தது தெரிகிறது.[4] ஆனால் அடியார்க்கு நல்லார் வேறு ஒரு மரபினைக் குறிப்பிடுகிறார். அதன்படி 103 பண்களும் 'ஏழ்பெரும் பண்' என்னும் பாலைப்பண்ணிலிருந்தும் அதன் வகைகளிலிருந்துமே தோன்றியவை ஆகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அட்டவணை

I. பெரும் பண்களும், அவற்றின் நான்கு முக்கிய வேறுபட்ட நிலைகளும்

பண்கள்	அகநிலை	புறநிலை	அருகியல்	பெருகியல்
பாலையாழ்	1. பாலையாழ்	2. தேவ தாளி	3. நிருபதுங்கராகம்	4. நாகராகம்
குறிஞ்சியாழ்	5. குறிஞ்சியாழ்	6. செந்து	7. மண்டலியாழ்	8. அரி
மருதயாழ்	9. மருதயாழ்	10. ஆகரி	11. சாயவேளர் கொல்லி	12. கிண்ணரம்
செவ்வழியாழ்	13. செவ்வழியாழ்	14. வேளாவளி	15. சீராகம்	16. சந்தி

II. பாலையாழ்ப் பண்ணின் திறன்களும், அவற்றின் வேறுபட்ட நான்கு நிலைகளும்

திறம்	அகநிலை	புறநிலை	அருகியல்	பெருகியல்
அராகம்	17. தக்கராகம்	18. அந்தாளி பாடை	19. அந்தி	20. மன்றல்
நேர்திறம்	21. நேர்திறம்	22. வராடி	23. பெரியவராடி	24, சாயரி
உறுப்பு	25. பஞ்சமம்	26. திராடம்	27. அழுங்கு	28. தனாசி
குறுங்கலி	29. சோமராகம்	30. மேகராகம்	31. துக்கராகம்	32. கொல்லிவராடி
ஆசான்	33. காந்தாரம்	34. சிகண்டி	35. திசாக்கிரி	36. சுருதி காந்தாரம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

III. குறிஞ்சியாழ்ப் பண்ணின் திறன்களும், அவற்றின் வேறுபட்ட நான்கு நிலைகளும்

திறம்	அகநிலை	புறநிலை	அருகியல்	பெருகியல்
நைவளம்	37. நட்ட பாடை	38. அந்தாளி	39. மலகரி	40. விபஞ்சி
காந்தாரம்	41. காந்தாரம்	42. செருந்தி	43. கௌடி	44. உதயகிரி
பஞ்சுரம்	45. பஞ்சுரம்	46. பழம்பஞ்சுரம்	47. மேகராகக் குறிஞ்சி	48. கேதடிக்குறிஞ்சி
படுமலை	49. கௌவாணம்	50. பாடை	51. சூர்துங்கராகம்	52. நாகம்
மருள்	53. மருள்	54. பழந்தக்கராகம்	55. திவ்வியவராடி	56. முதிர்ந்த இந்தளம்
அயிர்ப்பு	57. அனுத்திரபஞ்சமம்	58. குச்சரி	59. அருட்புரி	60. நாராயணி
அரற்று	61. குறிஞ்சி	62. நட்டராகம்	63. இராமக்கிரி	64. வியாழக்குறிஞ்சி
செந்திறம்	65. செந்திறம்	66. தக்கணாதி	67. சாவகக் குறிஞ்சி	68. ஆனந்தை

IV. மருதயாழ்ப் பண்ணின் திறன்களும், அவற்றின் நான்கு வேறுபட்ட நிலைகளும்

திறம்	அகநிலை	புறநிலை	அருகியல்	பெருகியல்
நவிர்	69. தக்கேசி	70. கொல்லி	71. ஆரிய குச்சரி	72. நாகதொனி
வடுகு	73. இந்தளம்	74. சாதாளி	75. தமிழ் வேளர்கொல்லி	76. காந்தார பஞ்சமம்
வஞ்சி	77. பாக்கழி	78. தத்தள பஞ்சமம்	79. மாதுங்கராகம்	80. கௌசிகம்
செய்திறம்	81. பியந்தை	82. சீகாமரம்	83. சாரல்	84. சாங்கிமம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

V. செவ்வழியாழ் அல்லது முல்லையாழ்ப் பண்ணின் திறன்களும் அவற்றின் நான்கு வேறுபட்ட நிலைகளும்

திறம்	அகநிலை	புறநிலை	அருகியல்	பெருகியல்
நோதிறம்	85. குறண்டி	86. ஆரிய வேளர் கொல்லி	87. தனுக்காஞ்சு	88. வியந்தம்
பெயர் திறம்	89. யாழ்பதம்	90. தாளி	91. கொண்டைக்கிரி	92. சீவானி
யாமை	93. யாமை	94. சாளர்பாணி	95. நாத்தம்	96. தாணு
முல்லை	97. முல்லை	98. சாதாரி	99. பைரவம்	100. காஞ்சி

குறிப்பு:– இந்த நூறு பண்களுடன், தாரப்பண்திறம், பையுள்காஞ்சி, படுமலை ஆகியவற்றையும் சேர்த்து 103 பண்களாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நூறு பண்களில் 23 பண்கள் தேவார ஆசிரியர்களால் கையாளப்பட்டிருக்கின்றன. அவை என்னென்ன என்று கீழே குறிக்கப்பட்டிருக்கின்றது. ஒவ்வொரு பண்ணிற்கும் வரிசை எண் அடைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.

செவ்வழி (13)
தக்கராகம் (17)
நேர்திறம் (புறநீர்மை) (21)
பஞ்சமம் (25)
காந்தாரம் (33, 41)
பழந்தக்கராகம் (54)
குறிஞ்சி (61)
நட்டராகம் (62)
வியாழக் குறிஞ்சி (64)
செந்திறம் (செந்துருத்தி) (65)
தக்கேசி (69)
கொல்லி (70)
நட்டபாடை (37)
அந்தாளிக்குறிஞ்சி (38)
பழம்பஞ்சுரம் (46)
மேகராகக் குறிஞ்சி (47)
கொல்லிக் கௌவாணம் (49)
இந்தளம் (73)
காந்தார பஞ்சமம் (76)
கௌசிகம் (80)
பியந்தைக் காந்தாரம் (81)
சீகாமரம் (82)
சாதாரி (98)

இந்த 23 பண்களில் 'செந்துருத்தி' அல்லது 'செந்திறம்' எனப்படும் பண்ணைத்தவிர மற்ற 22 பண்களும் இப்பொழுது கிடைக்கும் சம்பந்தர் பதிகங்களில் கையாளப் பட்டுள்ளன. திருநாவுக்கரசரது பதிகங்களில் பத்துப் பண்களும் சுந்தரரது பதிகங்களில் பதினேழு பண்களும் அமைந்துள்ளன.

எனவே தேவார மூவரில் அதிகமாகப் பண்களை எடுத்தாண்ட பெருமை சம்பந்தர்க்கே உரியதாகியிருப்பதைக் காணலாம். சம்பந்தரின் மூன்று திருமுறைப் பதிகங்களுக்கும் பண்கள் அமைந்த நிலை முன்பாக அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது.

திருவாவடுதுறைத் திருமடத்தில் கிடைத்த ஏட்டுச் சுவடிகளிலிருந்து பொன் ஓதுவா மூர்த்தி என்ற அறிஞர், காலத்தின் அடிப்படையில் பண்கள் அமைந்த வகையினை எடுத்துக்காட்டியிருக்கிறார். சில பண்களைப் பகலிலும், சிலவற்றை இரவிலும் சிலவற்றைப் பொதுவாகப் பாடும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முறையை - மரபினை இதன்வழியாகத் தெரிந்து கொள் கிறோம். கீழ்க்காணும் அட்டவணை இதனை விளக்குகிறது.

பகல் பண்கள்

நாழிகை (24 மணித்துளிகள்) அடிப்படையில் நேரம்	பண்	அதைக் குறிக்கும் இராகம்
0–3	புறநீர்மை	ஸ்ரீ கந்தி
3–6	காந்தாரம், பியந்தை	இச்சிச்சி
6–9	கௌசிகம்	பைரவி
9–12	இந்தளம், திருக்குறுந்தொகை	நௌித பஞ்சமி
12–15	தக்கேசி	காம்போதி
15–18	நட்டராகம், சாதாரி	பந்துவராளி
18–21	நட்டபாடை	நாட்டக்குறிஞ்சி
21–24	பழம்பஞ்சுரம்	சங்கராபரணம்
24–27	காந்தார பஞ்சமம்	கேதாரகௌளை
27–30	பஞ்சமம்	ஆகிரி

இரவுப் பண்கள்

நேரம்	பண்	அதைக் குறிக்கும் இராகம்
30–33¾	தக்கராகம்	கன்னடகாம்போதி
33¾–37½	பழந்தக்கராகம்	சுத்த சாவேரி
37½–41¼	சீகாமரம்	நாதநாமக்கிரியை
41¼–45	கொல்லி, கொல்லிக் கௌவாணம், திருநேரிசை, திருவிருத்தம்	சிந்து கன்னடம்
45–48¾	வியாழக்குறிஞ்சி	சௌராஷ்டிரம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

48¾-52½	மேகராகக் குறிஞ்சி	நீலாம்பரி
52½-56¼	குறிஞ்சி	மலஹரி
56¼-60	அந்தாளிக் குறிஞ்சி	சைலதேசாட்சி

பொதுவாகப் பாடப்படும் பண்கள்

செவ்வழி – யதுகுல காம்போதி
செந்துருத்தி – மத்தியமாவதி
திருத்தாண்டகம் – பியாகடை

திருஞானசம்பந்தரின் இசை அறிவு மிகவும் நுணுக்க மானது; கூர்மையானது. எழில் பொங்கும் இயற்கையில் இயல்பாக எழும் இன்னிசை ஓசைகளையெல்லாம் அவரது செவிப்புலன் துல்லியமாக உணர்ந்து திளைக்கிறது. வண்ண மலர்களின்மீது தேனைப் பருக வந்த வண்டினங்களின் ரீங்கார ஒலியில் பல்வேறு பண்ணின் வடிவங்களைத் தெரிந்து உணர்ந்தவர் சம்பந்தர். 'மருள்' *(1.66.8)*; 'முல்லையாழ்' *(1.63.7)*; 'நேரிசை' *(1.75.3; 2.189.10)*; 'செவ்வழி' *(1.99.10; 1.132.7)*; 'பாலையாழ்' *(1.108.10)*; 'பஞ்சுரம்' *(3.272.3; 3.362.4)*, 'செந்து' *(2.144.4; 2.218.9: 3.305.11)*; 'செந்திசை' *(1.101.2; 1.114.11)*; 'காமரம்' *(1.47.3)* போன்று தாம் செவியால் கேட்டுணர்ந்த வண்டுகளின் ஒலிகளில் பண்களின் வடிவங்களை உற்றுணர்ந்து பாடுகிறார் சம்பந்தர்; அவ்வடிவங்களுக்கு மேற்சொன்னவாறு பெயரிட்டழைக்கிறார். அதில் எவ்வளவு இசை நுணுக்கங்களைத் தெரிந்துகொள்கிறோம்!

'மருள்' என்பது குறிஞ்சிப்பண்ணின் ஒரு வகையான திறன்; அகநிலைத் திறனாகவும் அமைந்துள்ளது. 'முல்லை' அல்லது 'முல்லையாழ்' என்பது செவ்வழிப் பண்ணின் திறனாகவும் அகநிலைத்திறனாகவும் அமைந்துள்ளது. 'நேரிசை' 103 பண்களில் ஒன்றாகக் காட்டப்பெறவில்லை. ஆனால் சம்பந்தரது காலத்தில் நேரிசையும் ஒரு பண்ணாகப் பாடப்பட்டிருக்கலாம்.[5] நேரிசை என்ற பாவகையும் உண்டு. நாவுக்கரசரின் நான்காம் திருமுறையில், 22 முதல் 79 முடிய உள்ள பதிகங்கள் 'திருநேரிசைப் பதிகங்கள்' என்றே

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அழைக்கப்படுகின்றன. ஒரு மரபுப்படிக் 'கொல்லிப்பண்' என்று வரும் 'நேரிசைக் கொல்லி' என்ற பண்தான் மேற்சொன்ன 'திருநேரிசைப் பதிகங்'களின் பண் என்று அமைக்கப்பட்டுள்ளது. அதனால் நேரிசையை ஒரு வகையான 'கொல்லிப்பண்' என்றே எடுத்துக்கொள்ளலாம்.

'செந்து' என்பது குறிஞ்சிப் பண்ணின் புறநிலையாகும். பதிகம் 1.101.2-இன் அடிக்குறிப்பில் 'செந்திசை' என்பது 'செவ்வழிப்பண்' என்றே குறிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் மேற்படி வரிசையில் அது அவ்வாறு குறிப்பிடப்படவில்லை. 'காமரம்' என்பது சீகாமரப் பண்தான். சம்பந்தர் திருவையாற்றில் இசை தேர்ந்த பெண்கள் 'காந்தாரம் இசை அமைத்து காரிகையார் பண்பாட' (1.130.6) என்று 'காந்தாரம்' என்ற இசை நரம்பினை மீட்டிக் காந்தாரப் பண்ணைப் பாடுகிறார்கள் என்று குறிப்பிடுவது நோக்கத்தக்கது.[6]

பண்களின் மெய்யான வடிவத்தைச் சோதித்துத் தெரிந்துகொள்ளப் பதினேழு முறைகள் இருப்பதாகச் சிலப்பதிகாரம் 'அரங்கேற்றுக்காதை' உரையில் அடியார்க்கு நல்லார் குறிப்பிடுகிறார். அந்த முறைகள் வருமாறு: முதல், முறை, முடிவு, நிறைவு, குறை, கிழமை, வலிவு, மெலிவு, சமன், வரையறை, நீர்மை என்பவை.

வடமொழி மரபின்படிப் பத்து முறைகள் காட்டப் படுகின்றன. அவை: கிருஹம், அம்சம், மந்தரம், தாரம், நியாசம், அபன்யாசம், சன்யாசம், வின்யாசம், பகுத்வம், அல்பத்துவம் என்பவை.

ஆனால் சம்பந்தரோ ஒரு பண்ணிற்குள்ள இயல்புகள் ஒன்பதுதான் என்கிறார். ('பண்ணிடை ஒன்பது' – 1.79.3). அதே பதிகத்தில் 'ஏழிசை எட்டிரும் கலை சேர் பண்' என்று அவர் கூறுவதில் 'எட்டு' என்பது எட்டு வகையான செயல் பாடுகளைத்தான். விபுலானந்த அடிகள் தமது யாழ்நூலில் (பக். 153), 'எட்டிரும்' என்பது எட்டு × இரண்டு 16 செயல்கள் என்று குறிப்பிட்டிருப்பது நோக்கத்தக்கது.

ஏழு இசைகள் (ஸ்வரங்கள்) வைத்து ஓர் இசை வடிவம் பெறுவது 'பண்' எனப்படும். ஆறு ஸ்வரங்களைக் கொண்டு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வருவது 'பண் இயல்' எனப்படும். ஐந்தைக் கொண்டுவருவது 'திறம்' என்றும் நான்கானால் 'திறத்திறம்' என்றும் வழங்கும். மேற்சொன்ன மூன்றின் தொகுதிதான் 'திறத்திறம்' என்பதாகும். இவைகளை வடமொழியில் 'சம்பூரணம்,' 'சாதவம்,' 'ஔதுவம்,' 'சதுர்த்தம்' என்பார்கள்.

ஏழு இசைகளோடு (ஸ்வரத்தோடு) கூடிய பண்ணின் ஒவ்வொரு இசையும் 'மெலிவு,' 'சமன்,' 'வலிவு' என்று நிலைகளில் ('ஸ்தாயிகளில்') வைத்து இசைக்கப்படும்பொழுது அந்தப் பண் அல்லது இராகம் 21 இசைகளைப் (ஸ்வரத்தைப்) பெற்றுவிடுகிறது. சங்க நூலாகிய புறநானூறு (152) இதனை 'மூ ஏழ் துறை' (3×7) என்று குறிப்பிடுவதைக் காண்கிறோம். சம்பந்தரும் தமது திருக்கழுமலம் 'திருத்தாளச்சதி' என்னும் பதிகத்தில் 11 ஆவது பாடலில் 'ஏழே ஏழே நாலே மூன்று இயல் இசை இசை இயல்பா' என்ற தன்னுடைய பதிகப் பாடல்கள் (7+7+4+3 = 21) 21 இசைகளைக் கொண்டு இயற்றப்பட்டதாகக் குறிப்பிடுகிறார்.

ஆடலும் பாடலும் இணைந்து இயங்குபவை. ஆடலை, 'ஆடல்' என்றும், 'ஆட்டம்' என்றும் 'நிருத்தம்' என்றும் 'நடம்' என்றும் 'நட்டம்' என்றும் சம்பந்தரது பாடல்கள் குறிப்பிடு கின்றன. முன்பே குறித்தபடி திருக்கழுமலப் பதிகம் ஒன்று (1.126). 'திருத்தாளச்சதி' என்றே அழைக்கப்படுகிறது. 'சதி' என்பது ஆடலில் தாள அளவு. சம்பந்தருடைய இந்தப் பதிகம் பாடலோடு ஆடிக் காட்டுவதாக அமைந்துள்ளது. இசையில் 'சந்தக் குழிப்பு' பயன்படுவதுபோல ஆட்டத்திற்கு 'தந்த, திந்த' (2.141.4), 'தேந்தாம்' (1.130.6) என்ற வாய்பாட்டு முறைகள் பயன்படுகின்றன. சம்பந்தருக்கு இசையைப் போலவே ஆடலும் புனிதமானதாகும். 'பாடி ஆடக் கெடும் பாவமே' (3.266.11) என்று இரண்டு நுண்கலைகளும் நம்முடைய மனமாசுகளைக் களைந்து பாவங்கள் சேராத வண்ணம் உதவுகின்றன. சம்பந்தரே ஆடிப்பாடி அண்ணலைப் பரவியிருக்கிறார்.

நம்பியாண்டார் நம்பி தம்முடைய ஆளுடைய பிள்ளையார் திருமும்மணிக்கோவையில் 19ஆவது பாடலில்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஞானக்குழந்தை சம்பந்தர் கையில் தாளத்தோடு கை அசைத்து ஆடும் கோலத்தைச் சொல் சித்திரமாகத் தீட்டியிருக்கிறார்.

சில்பரல் கரந்த இளிகுரல் கிங்கிணி
சேவடி புல்லிச் சில்குரல் இயற்றி
அமுதுஉண் செவ்வாய் அருவிதூங்கத்
தாளம் பிரியாத் தடக்கை அசைத்துச்
சிறுகூத்து இயற்றிச் சிவன்அருள் பெற்ற
நற்றமிழ் விரகன்

என்ற அவரது சொல்லோவியத்தில் கிண்கிணிச் சலங்கை செவ்வடிகளைச் சேர்ந்து ஒலிக்க ஆடியும் ஞானப் பாலமுதை உண்ட வாயிலிருந்து அமுது ஒழுகவும் கைகளில் ஏந்திய தாளங்கள் பிரியாது ஒலிக்கவும் சிவன் அருள்பெற்ற திருஞானசம்பந்தன் சிறு கூத்து (ஆடல்) நிகழ்த்தும் கோலத்தைக் காண்கிறோம். இந்தப் புத்தகத்தின் அட்டைப் படம் இந்த அற்புதக் காட்சியைச் சித்திரிக்கிறது. தமிழகப் பழங்கோயில்கள் பலவற்றில் செப்பு மேனிகளாய் இக் காட்சியில் சம்பந்தர் தோன்றுவதைக் காணலாம். சம்பந்தரது இந்த் ஆடல் கோலம் அனைவரையும் பரவசப்படுத்தி யிருக்கிறது.

ஆடலுக்கும் பாடலுக்கும் துணையாகப் பல்வேறு இசைக் கருவிகள் பயன்படுத்தப்பட்டிருந்ததை பதிகங்களில் காண்கிறோம். 'குழல்,' 'யாழ்,' 'வீணை,' 'பறை,' 'சங்கு,' 'முழவு,' 'மொந்தை,' 'முழா,' 'குடமுழா,' 'தக்கை,' 'கொக்கரை,' 'கல்லவடம்,' 'கொடுகொட்டி,' 'பனிலம்,' 'படகம்,' 'கத்திரிகை,' 'துத்திரி,' 'துடி,' 'இடக்கை,' 'சல்லரி' போன்று எத்தனை எத்தனை இசைக்கருவிகள்!

ஏழிசைகளில் குரல் (சட்ஜம்), இளி (பஞ்சமம்) என்ற இரண்டும் நீங்கலாகத் துத்தம் (ரிஷபம்), கைக்கிளை (காந்தாரம்), உழை (மத்யமம்), விளரி (தைவதம்), தாரம் (நிஷாதம்) என்ற ஐந்தும் இரண்டு வகைகளில் அடங்கும். ஒரு பண்ணில் பொதுவாக ஒரு வகைதான் பயன்படுத்தப்படும். இரண்டு வகைகளையும் ஒரு பண்ணில் பயன்படுத்தினால்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அப்பண்ணை 'பாஷாங்கம்' என்பார்கள். கௌசிகம், தக்கேசி, வியாழக்குறிஞ்சி, மேகராகக் குறிஞ்சி ஆகியவை தேவாரத்தில் உள்ளன. அவைகள் 'பாஷாங்க ராகங்கள்' எனப்படும்.

கருநாடக இசையில் 'பல்லவி,' 'அனுபல்லவி,' 'சரணம்' என்று பல பகுதிகள் உள்ளன. ஆனால் தேவாரப் பாடல்களில் அவ்வாறு இல்லை. பொதுவாகத் தேவாரப் பாடலில் நான்கு வரிகள் உண்டு. முதல் இரண்டு வரிகளில் என்ன இசை வடிவம் அமைந்திருக்கிறதோ அதே வடிவம் அடுத்த இரண்டு வரிகளுக்கும் அமைகிறது.

ஆனால் சம்பந்தர் இங்கு ஒரு புதுமையைப் புகுத்தி யிருப்பதாக அறிஞர்கள் உணர்கிறார்கள். ஒரே பாட்டில் இசை மாறி வேறுபடுகிறது. அவ்வாறு அமையும் பதிகங்களை 'நாலடி மேல்வைப்பு' *(3.261.1–11; 3.262.1–11; 3.361.1–10)* என்றும் 'ஈரடி மேல்வைப்பு' *(3.263.11; 3.264.1–11)* என்றும் அழைக்கிறோம்.

நாலடி மேல்வைப்பில் ஒவ்வொரு பாடலிலும் ஏற்கனவே உள்ள நான்கு வரிகளுக்கும் மேலாக இரண்டு வரிகள் அதிகமாக, தனியாக அமைந்திருக்கும். இந்தத் தனி இரண்டு வரிகளும் ஒவ்வொரு பாடலிலும் திரும்பத் திரும்பச் சேர்ந்திருக்கும். ஈரடி மேல்வைப்புப் பாடல் ஒவ்வொன்றி லும் ஏற்கனவே உள்ள இரண்டு அடிகளுக்கு மேலும் இரண்டு அடிகள் சேர்ந்திருக்கும். ஒவ்வொரு பாடலிலும் இவ்வாறே வரும். இந்த முறையால் இசை வேறுபாடு – மாற்றம் நிகழ்கிறது.

இதனை ஒரு முன்னோடியான புதுமை முறை என்கிறார் எஸ். இராமநாதன் அவர்கள். இந்த முறையைப் பின்னால் தோன்றிய இசை வல்லுநர்கள் பின்பற்றியிருக் கிறார்கள். முத்துசுவாமி தீட்சதர் தமது 'மத்திம கால சாகித்யங்களில்' இந்த முறையைக் கையாண்டுள்ளார். தியாகராஜரும் 'யோசன கமல லோசனா' என்ற கீர்த்தனை யிலும், 'தாரிநிதெலிசி கோண்டி' என்ற கீர்த்தனையிலும் இந்த முறையைக் கையாண்டிருக்கிறார் என்பார். (தேவாரப் பண்ணிசை, பக். XVII).

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இசையில் கால வரையறை செய்வதற்குக் கால அளவாக இருப்பது தாளம்; சம்பந்தரது பாடல்களில் அமைந்துள்ள தாளங்கள் 'ஆதி,' 'ரூபகம்,' 'ஜம்பை,' 'திரிபுடை' ஆகியவை. இன்றைக்கும் பல பாடல்களுக்கு இதே தாளங்கள் தாம் அமைந்திருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கதாகும். ஒவ்வொரு தாளத்தின் அளவும் அதன் காலவரையில் கை ஒற்றுகள் எத்தனை என்பதைப் பொருத்ததாகும். எடுத்துக் காட்டாக ஆதிதாளத்திற்குக் குறிப்பிட்ட கால அளவில் எட்டு கை ஒற்று உண்டு. ஒவ்வொரு எண்ணிக்கையிலும் 'தக்கதிமி' என்ற நான்கு எழுத்துகள் வருமென்றால் அதனை 'ஒரு கலைச் சவுக்கம்' என்பார்கள். அது இரட்டிக்கு மென்றால் 'இரண்டு கலைச் சவுக்கமென்றும்,' மூன்றானால் 'மூன்று கலைச் சவுக்கம்' என்றும், நான்கு மடங்கானால் 'நான்கு கலைச் சவுக்கம்' என்றும் பெயர் விளங்க அமையும். நான்கு கலைச் சவுக்கத்தில் அமைந்த பாடலும் பண்ணும் மிக நீண்டதாக இருக்கும். இதற்கு எடுத்துக்காட்டாகச் சம்பந்தரது 'காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி' என்று தொடங்கும் பாடலைச் சொல்லலாம்.

பண்கள் பல உணர்வுகளையும், மனநிலைகளையும் அறிவிக்க வல்லவை. (யாழ்நூல், பாயிர இயல், பக்.11) இந்த 'உள் நின்ற சுவை'யை (1.11.4) சம்பந்தர் குறிப்பிடுகிறார்.

திருமுறை கண்ட புராணம், நீலகண்ட யாழ்ப்பாணரின் வழியில் வந்த ஒருவர் தேவாரப் பதிகங்களுக்குப் பண் வகுத்ததாகக் கூறுகிறது. சேக்கிழார் தம்முடைய ஆனாய நாயனார் புராணத்தில் பல பண்களின் வடிவங்களை அப்படியே கட்டிக் காத்து வைத்திருக்கிறார்.

சாரங்க தேவர் என்பவர் தமிழகத்தின் பல பகுதிகளுக்கும் சென்று வந்தவர். அவர் தமிழ்ப் பண்களாகிய 'நட்டராகம்,' 'பஞ்சமம்,' 'தக்கராகம்,' 'சாதாரி' ஆகியவை களைக் கேட்டுச் சுவைத்து புகழ்ந்து பாராட்டியிருக்கிறார். **தேவார வர்த்தினி** என்ற ஓர் இராகத்தைத் தம்முடைய **சங்கீத ரத்னாகரம்** என்னும் நூலில் குறித்துச் சொல்கிறார். (யாழ்நூல், பாயிரவியல், பக். 269)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சம்பந்தர் தமிழினிடத்திலும் இசையினிடத்திலும் மீளாக் காதல் உடையவர். அதற்குக் காரணம் தமிழ், இசை ஆகியவற்றைப்பற்றி அவர் கொண்டிருந்த தத்துவ ஞானம்தான். தமிழும் இசையும் இறைவனின் அன்பு அழகு வடிவங்கள்.

பண்ணும்பதம் ஏழும்பல ஓசைத்தமிழ வையும்
உண்ணின்றதொர் சுவையும் உறுதாளத்துஒலி பலவும்
மண்ணும்புனல் உயிரும்வரு காற்றும்சுடர் மூன்றும்
விண்ணும்முழுது ஆனான்இடம் வீழிம்மிழ லையே

(1.11.4)

என்று பண்ணும், ஏழு சுரங்களும், பல்வேறு ஓசை நயங்களை யுடைய தமிழும், இவற்றையெல்லாம் அனுபவிக்கும் பொழுது உள்ளத்தின் உள்ளே பிறக்கும் சுவையும் பலவேறு தாள ஒலிகளும், தீ, சூரியன், சந்திரன் என்ற முச்சுடரும் விண்ணும் முதலாகிய எவையும் இறைவனின் எழிலார்ந்த வடிவங்களே என்று சம்பந்தர் பாடுகின்றார்.

5.3. சம்பந்தரும் தமிழும்

'பல ஓசைத் தமிழை'ப் பரமனின் வடிவமாகவே மதித்துப் போற்றியவர் திருஞானசம்பந்தர். அவரது தமிழ் பக்தியை, தமிழுக்கு ஆற்றிய பெருந்தொண்டினை 'நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தன்' என்று சுந்தரர் போற்றிப் பரவுவதைக் காட்டிலும் வேறு யாரால் எடுத்துச்சொல்ல முடியும்? நம்பியாண்டார் நம்பியும் சம்பந்தரைத் 'தமிழ் விரகன்' என்று துதிக்கின்றார்.

தமிழோடு தாம் கலந்த இன்ப நிலையைச் சம்பந்தரே பலவாறு குறிப்பிடுகிறார்: 'தமிழ்ஞான சம்பந்தன்' என்று 40 பாடல்களிலும் 'தமிழ் விரகன்' (தமிழைக் காப்பவன்) என்று எட்டு இடங்களிலும், 'தமிழ்நாதன்' என்று ஒரு *(3.297.11)* பாடலிலும், 'நற்றமிழ்க்கு இன்துணை' என்று ஒரு பாட்டிலும் *(1.76.11)*, 'முத்தமிழ் விரகன்' என்று *3.373.11* ஆவது பாட்டிலும், 'தமிழ்க்கிளவி (வேதம்) ஞானன்' *(2.166.11)* என்றும் சம்பந்தர் கூறுவதைக் காண்கிறோம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிவன் என்னும் செம்மேனிப் பெருமான் குமிழ மலர் போன்ற தன் வண்ணத்தைக் காட்டி, 'தமிழின் நீர்மை பேசி வருவான்' (1.73.8) என்று ஓர் இடத்தில் சம்பந்தர் கூறுவதைப் பார்க்கிறோம். தமிழும் வடமொழியும் இறைவனது திருவடி நிழலில் அவனது கருணையாய் விளங்குபவை. 'தமிழ்ச் சொலும் வடசொலும் தாள் நிழற்சேர' (1.77.4) என்று அச்சிறுபாக்கப் பதிகத்தில் காணலாம்.

திருஞானசம்பந்தர் தமிழிலும் இசையிலும் பல புதுமைகளை நிகழ்த்தியவர். இருப்பினும் அவற்றில் இலக்கண மரபுகள் பொருந்தி அமைந்திருக்கின்றன. அவரது தேவாரப் பாடல்கள் கலிப்பாவின் 'கொச்சக ஒருபோகு' என்ற யாப்பு முறையைக் கொண்டு திகழ்பவை.[7] சம்பந்தரே தம் பாடல்களைக் 'கலிக்கோவை' என்று குறிப்பிடுகிறார். அவரது பாடல்கள் பழந்தமிழ் இசை இலக்கணப்படி 'தேவபாணி' என்ற வகையைச் சார்ந்தவை. அடியார்க்கு நல்லார் 'தேவபாணி'ப் பாடல்கள் இசை நுணுக்கம் என்ற இசை இலக்கண நூலின்படி பத்து வகையால் அமைந்துள்ள 'இசைப்பா' வகையைச் சார்ந்தவை என்றும் பஞ்சமரபு என்னும் நூலின்படி ஒன்பது வகையானவை என்றும் குறிப்பிடுகிறார்.[8]

அந்தப் பத்துவகை எவை எவை என்றால், 'செந்துறை,' 'வெண்துறை,' 'பெருந்தேவபாணி,' 'சிறுதேவபாணி,' 'முத்தகம்,' 'வண்ணம்,' 'ஆற்றுவரி,' 'கானல்வரி,' 'விரிமுறன்,' 'மண்டிலம்' என்பவை. ஒரு மனிதனின் இயற்கையான இயல்புகளை விளக்குவது 'செந்துறை,' 'வெண்துறை' உயர்வு நவிற்சியாக வருவது. 'முத்தகம்' என்பது தனிப் பாட்டாக வந்து பாட்டின் பொருள் நிறைவோடு அமைவதாகும். எல்லாத் தனிப்பாடல் களையும் இந்த வகையில் கொள்ளலாம். 'வண்ணம்' என்பது சந்த வேறுபாட்டைக் காட்டுவது. 'வண்ணம்' என்பதும் 'பெரு வண்ணம்,' இடை வண்ணம்,' 'வனப்பு வண்ணம்' என்று மூன்று வகைகளாய் வரும்.

சம்பந்தர் தமது பாடல்கள் மூன்றுவகை வண்ணங் களிலும் பாடப்படுவதாகக் குறிப்பிடுகிறார், 'வண்ண மூன்றும் தமிழில் தெரிந்து இசைபாடுவார்' (2.211.11).

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

'ஆற்றுவரி' என்பது ஆறுகளின் அழகையும் மேன்மையையும் குறித்துப் பாடப்படுவது (3.341.1–6; 8–10) 'கானல்வரி கடல்பாட்டு' (3.324.4). இவ்வாறாகச் சம்பந்தர் அவர் காலத்தில் வழங்கிய இலக்கிய இலக்கண மரபுகளைப் பின்பற்றியிருப்பதை அறிந்து மகிழ்கிறோம். மரபுகளைப் பின்பற்றிப் பாடுவதோடு அல்லாமல் யாப்பு முறையிலும் இசை மரபுகளிலும் மிகச்சிறந்த புதுமைகளை இயற்றிப் பேருதவி செய்தவர் சம்பந்தர். நம்பியாண்டாரும் சேக்கிழாரும் சம்பந்தர் தோற்றுவித்த புதுமைத் தமிழ், இசை வடிவங்களைக் குறித்து விரிவாகக் கூறியிருக்கிறார்கள்.

திரு. வீரபத்திர முதலியார் என்னும் ஆராய்ச்சியாளர் நூறு ஆண்டுகளுக்கு முன்பாக, சித்தாந்த தீபிகை என்ற ஆராய்ச்சி இதழில் சம்பந்தரின் சாதனைகளைக் குறித்து விரிவாக எழுதியிருக்கிறார். அந்தக் கட்டுரையில் ஒரு பகுதியைக் கீழே காண்போம்:

கட்டுரை ஆங்கிலத்தில் உள்ளது. *Lord Sambandha and an unknown Tamilian Prosody* என்பது அந்தக் கட்டுரையின் பெயர். கட்டுரையின் திரண்ட பொருள் இங்கே தமிழில் தரப்பட்டுள்ளது.

> திருஞானசம்பந்தரின் இணையில்லாத தேவார நூலில் சில பக்கங்களைத் திறந்து பார்த்தாலே போதும். அவரது காலத்தில் நிலவிய தமிழ்க் கவிதையின் பெருவளத்தைப் புரிந்து கொள்ளலாம். அவரது கவிதையில் நூறு வகையான புதுப்புது யாப்பு முறைகளை நம்மால் கண்டு தெரிந்துகொள்ள முடியும். வானில் திகழும் இறையருளைப் புகழ்ந்து அடங்காத தாகத்துடன், மடை திறந்ததுபோல் பற்பல யாப்பு முறைகளில் ஏறத்தாழ நூறு யாப்பு வகைகளை இவ்வளவு நேர்த்தியாக பாடிச் சென்றுள்ள புலவர்கள், வடமொழி உள்பட உலகில் வேறு எங்கேயும் இருந்திருக்கிறார்களா என்று கேட்கத் தோன்றுகிறது. அந்த யாப்பு வேறுபாடுகள் வடமொழியில் இருப்பதைப் போன்ற சாதாரண வேறுபாடுகள் இல்லை; ஒரு மொழியில் வழங்கும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

> மிகப்பெரும் யாப்பு முறைகளைப்போல் வேறுபட்டு நிற்பவை. இவற்றில் கால வெள்ளத்தில் காணாமற் போனவைகளைச் சேர்த்துக்கொள்ளவில்லை. சம்பந்தர் கவிதைகளின் வளமும் நேர்த்தியும் தமிழகமெங்கும் வெள்ளம் எனப் பாய்ந்து ஒப்புமை காட்ட முடியாத யாப்பு வகைகள் எங்கும் பரவி யிருக்கின்றன. அவற்றில் நேர்த்திக்கும் அழகிற்கும் இணை ஏதுமில்லை. அந்தக் கவிதைப் பொழி வினால் நாம் எவ்வளவு பயன் அடைந்திருக்கிறோம் என்று நினைத்து மகிழ்கிறோம். இன்று கிடைப்பவை அந்தப் பெருவெள்ளம் விட்டுச் சென்ற குளத்து நீர்போல் தோன்றுகின்றன. இவற்றைக்கொண்டே சம்பந்தர் பொழிந்த கவிதைப் பெருமழையின் வேகத்தையும் வளத்தையும் நம்மால் ஓரளவு உணர்ந்துகொள்ள முடியும். அவரது புராணத்தைப் பாட வந்த, அவரிடம் மாளாத அன்பும் பக்தியும் கொண்டுள்ள சேக்கிழார்கூடச் சம்பந்தரது இணையற்ற கவிதையின் மாண்பை விரிவாக எடுத்துச் சொல்லவில்லை.[9]

நம்பியாண்டார் தம்முடைய ஆளுடைய பிள்ளையார் திருஉலா மாலையில் (கண்ணிகள் 83–85), சம்பந்தர் 'இராகம்', 'இருக்குக்குறள்,' 'பாசுரம்,' 'பல்பத்து,' 'யாழ்மூரி,' 'சக்கரமாற்று,' 'ஈரடி முக்கால்' என்ற புதுமையான யாப்புகளை உருவாக்கிய தாகக் கூறுகிறார். ஆனால் சேக்கிழாரின் பட்டியல் மேலும் நீண்டதாக உள்ளது. அந்தப் புதுமை யாப்பு முறைகளை அவர் 'மூல இலக்கியம்' என்று அழைக்கிறார். அவைதாம் பிற்காலத்தில் வேறு பல நூல்களைப் படைப்பதற்கு முன்னோடியாக விளங்குகின்றன. அந்த 'மூல இலக்கியங்கள்' வருமாறு: 'மொழிமாற்று,' 'மாலை மாற்று,' 'வழிமொழி,' 'மடக்கு,' 'இயமகம்,' 'ஏகபாதம்,' 'இருக்குக்குறள்,' 'எழுகூற்றிருக்கை,' 'ஈரடி,' 'ஈரடி வைப்பு,' 'ஈரடி மேல் வைப்பு,' 'நாலடி மேல் வைப்பு,' 'அராகம்,' 'சக்கரம்' ஆகியவை (புராணம். 276, 277).

இவற்றைச் 'சித்திரக்கவி' அல்லது 'மிறைக்கவி' என்பார்கள். இவற்றைப் பற்றிய சிறு விளக்கம்:

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மொழிமாற்று: இங்கு வரிகளில் சொற்கள் அமைந்தவகை, பாடலின் பொருளைத் தரும்படியாக இருக்காது. அச்சொற்களைத் தக்கவாறு மாற்றி அமைத்துக் கொள்வதன் மூலமாகவே பாட்டின் பொருள் விளங்கும் *(1.117).*

மாலைமாற்று: இரு ஒருவகையான சித்திரக்கவி. இங்கே முதல் வரியில் உள்ள எழுத்துக்களைப் பின்னாலிருந்து படித்தால் அது அடுத்த வரியாக அமையும். அவ்வாறே பின் வரியைப் படித்தால் முன் வரியின் பொருளைக் கொடுக்கும். *(3.375)*

வழிமொழி: முதல் அடியில் உள்ள முதல் சீரின் இரண்டாம் எழுத்து எல்லா அடிகளிலும் உள்ள சீர்களிலும் வரும்படியாக அமையும் *(3.325).*

மடக்கு: இங்கு முதல் அடியில் உள்ள சீர்களே அடுத்த அடிகளிலும் வரும். *(3.352;* to *367).*

இயமகம்: ஓர் அடியில் வரும் சொல்லோ சொற்றொடரோ ஒரு குறிப்பிட்ட பொருளில் வந்து அடுத்த அடிகளில் அவை வேறு பொருளைக் குறிக்குமாறு அமைவதாகும். *(3.371 – 374)*

இருக்குக்குறள்: 'இருக்கு' என்பது வடமொழியில் வழங்கும் 'ரிக்' என்பதைக் குறிக்கும். குறள் என்பது ஈரடியால் அமையும். ஒவ்வொரு அடியிலும் இரண்டு சீர்களே இருக்கும். இப்பாடல்கள் வடிவத்திலும் பொருளிலும் வேதங்களைப் போல் இருப்பதால் இவைகள் திருஇருக்குக் குறள் எனப்படும். *(1.90* to *96; 348; 349).*

ஏகபாதம்: ஏகம் என்றால் ஒன்று; பாதம் என்றால் அடி. ஓர் அடியே வெவ்வேறு பொருள்களில் நான்கு முறை மடித்து வந்து ஒரு பாடலாக அமைகிறது. *(1.127).*

திருஎழுகூற்றிருக்கை: இது ஒருவகையான சித்திரக்கவி. திருமங்கையாழ்வாரும், நக்கீரதேவநாயனாரும், அருண கிரியாரும் இந்த யாப்பு முறையில் பாடியிருக்கிறார்கள்.

ஒன்று இரண்டு ஒன்று, ஒன்று இரண்டு மூன்று இரண்டு ஒன்று என இவ்வாறு ஏழு என்ற எண் முடியப் படிப்படியாக

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஒவ்வொன்றையும் ஏற்றியும் இறக்கியும் ஏழு கூறுகளிலும் எண்களை அமைத்துப் பாடுவதற்கு 'எழுகூற்றிருக்கை' என்று பெயர்.

பகுதிகளாக அறைகளை அமைக்கும்பொழுது முதற் பகுதியில் மூன்று அறைகளும், இரண்டாவதில் ஐந்து அறைகளும், மூன்றாவது பகுதியில் ஏழு அறைகளும், நான்காவது பகுதியில் ஒன்பது அறைகளும் ஐந்தாவது பகுதியில் பதினொரு அறைகளும், ஆறாம் பகுதியில் பதின்மூன்று அறைகளும், ஏழாம் பகுதியில் அவ்வாறு பதின்மூன்று அறைகளும் அமைத்து அவ்வறைகளில் முறையே

1 – 2 – 1
1 – 2 – 3 – 2 – 1
1 – 2 – 3 – 4 – 3 – 2 – 1
1 – 2 – 3 – 4 – 5 – 4 – 3 – 2 – 1
1 – 2 – 3 – 4 – 5 – 6 – 5 – 4 – 3 – 2 – 1
1 – 2 – 3 – 4 – 5 – 6 – 7 – 6 – 5 – 4 – 3 – 2 – 1
1 – 2 – 3 – 4 – 5 – 6 – 7 – 6 – 5 – 4 – 3 – 2 – 1

என்ற எண்களைக் குறிக்கும் சொற்றொடர்கள் பொருந்தி இருக்கும்படியாக இயற்றப்படும் செய்யுள் ஆனதால் இதனை 'எழு கூற்றிருக்கை' என்று அழைக்கிறார்கள்.

பாட்டின் தொடக்கத்தில் வரும் எண் முதலாக இறுதி முடிய அமைந்த எண் வரிசைப்படி ஏழு பகுதிகளாக (கூறுகளாக) எழுதி அந்த வரிசைகள் தேர் ஒன்றின் மேற்பரப்பாகவும், பாட்டின் இறுதி எண் முதல் தொடக்க எண் வரை அமைந்த எண்களை அவ்வாறே ஏழு வரிசை களாக எழுதி அவ்வேழினையும் தேரின் அடிப்பரப்பாகவும் கொண்டு 'தேர்ப்பந்தம்' ('ரதபந்தம்') என்னும் தேர்ச் சித்திரமாக அமைத்துக் காட்டலாம்.

திருஞானசம்பந்தர் இயற்றிய 'திருவெழுகூற்றிருக்கை' என்ற 47 அடிகளால் ஆன பாடல் 'இணைக்குறள் ஆசிரியப்பா' என்ற யாப்பில் அமைந்து திகழ்கின்றது. இது ஒரு 'மூல இலக்கியம்' என்பார் சேக்கிழார் (புராணம், 276). (வரைபடம் கொடுக்கப்பட்டுள்ளது).

In Public domain. Digitization Muthulakshmi Research Academy


ஓருரு வாயினை
மானாங்காரத்து ஈரியல்பாய்
ஒரு விண்முதல் பூதலம்
ஒன்றிய
இருசுடர் உம்பர்கள் பிறவும்
படைத்தளித்தழிப்ப மும்மூர்த்திகளாயினை
இருவரோடு
ஒருவனாகி நின்றனை
ஓர் ஆல் நீழல்
ஒண் கழல் இரண்டும்
முப்பொழுது ஏத்திய
நால்வர்க்கு ஒளி நெறி காட்டினை
நாட்டம் மூன்றாகக் கோட்டினை
இருநதி அரவமோடு
ஒரு மதி சூடினை
ஒரு தாள்
ஈர் அயில்
மூவிலைச் சூலம்
நாற்கால் மான்மறி
ஐந்தலை அரவம் ஏந்தினை
காய்ந்த நால்வாய்
மும்மதத்து
இருகோட்டு
ஒருபிறை உரித்தனை
ஒரு தனு
இரு கால் வளைய வாங்கி
முப்புரத்தோடு
நானிலம்
அஞ்சக் கொன்று தலத்துற
அவுணரை அறுத்தனை
ஐம்புலம்
நாலாம் அந்தக் கரணம்
முக்குணம்
இருவளி
ஒருங்கிய வானோர் ஏத்த நின்றனை
ஒருங்கிய மனத்தோடு
இருபிறப்பு ஓர்ந்து
முப்பொழுது குறை முடித்து
நான்மறை ஓதி
ஐவகை வேள்வி அமைத்து
ஆறங்க முதல் எழுத்தோதி
வரன்முறை பயின்று எழுவான்தனை வளர்க்கும் பிரமபுரம் பேணினை
அறுபதம் முரலும் வேணுபுரம் விரும்பினை
இகலிய மைந்துணர் புகலி அமர்ந்தனை
பொங்கு நாற்கடல் சூழ் வெங்குரு விளங்கினை
பாணி மூவுலகும் புதைய மேல் மிதந்த தோணிபுரத்து உறைந்தனை
தொலைவிலா இருநிதி வாய்ந்த பூந்தராய் ஏய்ந்தனை
வரபுரம் ஒன்றுணர் சிரபுரத்து உறைந்தனை
ஒருமலையெடுத்த
இருதிறல் அரக்கன் விறல் கெடுத்தருளினை புறவம் புரிந்தனை
முந்நீர்த் துயின்றோன்
நான்முகன் அறியாப் பண்பொடு நின்றனை சண்பை அமர்ந்தனை
ஐயுறும் அமணரும்
அறுவகைத் தேரரும் ஊழியும் உணராக் காழி அமர்ந்தனை
எச்சன் ஏழிசையோன் கொச்சையை மேவினை
ஆறுபதமும்
ஐந்தமர் கல்வியும்
மறைமுதல் நான்கும்
மூன்று காலமும் தோன்ற நின்றனை
இருமையின் ஒருமையும்
ஒருமையின் பெருமையும்
மறுவிலா மறையோர்
கழுமல முதுபதிக் கவுணியன் கட்டுரை
கழுமல முதுபதிக் கவுணியன் அறியும்
அனைய தன்மையை யாதலின் நின்னை
நினைய வல்லவர் இல்லைநீள் நிலத்தே.
திருவெழுகூற்றிருக்கை

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஈரடி மேல்வைப்பு, நாலடி மேல்வைப்பு: இவை இரண்டும் பற்றி '5.2'இல் விரிவாக விவரிக்கப்பட்டிருக்கிறது.

அராகம்: இந்தச் செய்யுள் வகையில் நெடில் எழுத்துகள் விரவி வராமல் 'குறில்' எழுத்துகளே வரும். இந்த முறையால் ஒருவகை 'உருட்டல்' இன்னிசை தோன்றும். அதனால் இது தொல்காப்பியத்தில் 'உருட்டு வண்ணம்' என்று பேசப்படுகிறது. ('பொருளதிகாரம்', 'செய்யுளியல்', 232) தேவாரத்தில் இது 'திருவராகம்' என்று அழைக்கப்படுகிறது. 'திருவராகத்தின்' ஒரு மாற்றம் இது. (3.326–346).

சக்கரமாற்று: இதுவும் சித்திரக் கவியுள் ஒருவகை. சம்பந்தரின் இரண்டு பதிகங்கள் (2.206, 209). இந்த வகையைச் சார்ந்தவை.

முதல் பதிகத்தில் சீர்காழியின் பன்னிரண்டு பெயர்கள் முதல் பாட்டில் கீழ்க்கண்டவாறு கொடுக்கப்பட்டுள்ளன. அவை (1) பிரமனூர், (2) வேணுபுரம், (3) புகலி, (4) வெங்குரு, (5) தோணிபுரம், (6) பூந்தராய், (7) சிரபுரம், (8) புறவம், (9) சண்பை, (10) காழி, (11) கொச்சைவயம், (12) கழுமலம் என்பவை. இந்த வரிசையில் முறையாக வரும் ஒவ்வொரு பெயரும் முதல் பாடலிலிருந்து 12ஆம் பாடல் முடிய ஒவ்வொரு பாட்டிலும் முதல் பெயராக வரும். இவ்வாறு ஒரு சக்கரம் அமைக்கப் படுகிறது. சம்பந்தரின் பதிகம் 206இல் இவ்வாறு பெயர்கள் அமைந்திருப்பதைக் காணலாம்.

பதிகம் 209இல் வேறு ஓர் அமைப்பு வருகிறது. இங்கும் பன்னிரண்டு பெயர்களும் முன் குறிப்பிட்ட பதிகத்தில் (206) வருவதைப் போல்தான் வருகின்றன. ஆனால் இங்கு முதல் பாடலில் முடிவாக வரும் பெயர் அடுத்த பாடலின் முதல் பெயராக அமைகிறது. இவ்வாறு இறுதியாக வரும் பெயர் அடுத்த பாடலில் முதல் பெயராக வருகிறது. இங்கும் ஒரு சக்கரம் தோன்றுவதைக் காணலாம்.

வழிமடக்கு மாவின் பாய்ச்சல்: சம்பந்தருடைய பதிகம் (2.210) 'கோமூத்ரி' என்ற தலைப்பில் தரப்பட்டுள்ளது. ஒரு பசு வேகமாகச் செல்லும் பொழுது அதனுடைய மூத்திரதாரை தரையில் கோலமிடுவதைப் போன்று அமைவது 'கோமூத்ரி'

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

என்ற யாப்பு வகை. ஆனால் சம்பந்தரது மேற்சொன்ன பதிகம் இந்த வகையில் அமையவில்லை. அவரே தன் பதிகத்திற்கு 'வழி முடக்கு மாவின் பாய்ச்சல்' என்று பெயரிட்டிருக்கிறார். ஒரு பசு நேரே செல்லாமல் குறுக்கும் நெடுக்குமாகப் பாய்ந்து செல்வதைப் போன்று இந்த வகைப் பதிகச் செய்யுள்கள் அமைந்திருக்கும்.

இந்தப் பதிகமும் சீர்காழியின் பன்னிரண்டு பெயர் களைக் கூறுகிறது. முதல் பாட்டில் வரும் கடைசிப் பெயர் அடுத்த பாட்டில் முதலாவதாக வரும். இது ஓர் அந்தாதிச் செய்யுள். தருமபுரம் பதிப்பில் இதற்கு 'திருக்கோ மூத்ரி அந்தாதி' என்றே பெயர் இடப்பட்டுள்ளது.

கூட சதுக்கம்: 'மண்ணது உண்டரி' (3.367) என்று தொடங்கும் சம்பந்தரது பதிகத்தைக் 'கூட சதுக்கம்' என்றழைக்கிறார்கள். நான்கு சாலைகள் சந்திக்கும் இடமே சதுக்கமாகும். மதுரைக் கூடலில் இந்தப் பதிகம் பாடப் பட்டது. அப்பொழுது மயேந்திரம், கயிலாயம், ஆரூர், ஆனைக்கா ஆகிய தலங்களில் எழுந்தருளியிருக்கும் ஈசனை ஒரு சேர வைத்துத் துதித்துப் பாடப்பட்டிருக்கிறது. கூடல் மையத்தலமாகத் திகழ்கிறது. அதனால்தான் இதனைக் 'கூட சதுக்கம்' அல்லது 'கூடல் சதுக்கம்' என்பார்கள். இவைகளைத் தவிர மேலும் இரண்டு வகைகளான முறைகளும் கையாளப்பட்டிருக்கின்றன. அவை 'திருமுக்கால்' எனவும் 'ஈரடி' என்றும் வழங்கப்பெறுகின்றன. முதல் வகையில் அச்செய்யுளில் நான்கு வரிகள் உள்ளன. முதல் வரியிலும் மூன்றாம் வரியிலும் நான்கு சீர்கள் இருக்கின்றன. இரண்டாவது, நான்காவது வரிகளில் மூன்று சீர்களே இருக்கின்றன. (3.352 – 3.357) இரண்டாவது வரியும் நான்காவது வரியும் முக்கால் வரியாக (மூன்று சீர்களைப்) பெற்று வருவதனால் இந்த வகைச் செய்யுள் 'திருமுக்கால்' எனப்படுகிறது. 'ஈரடி'ச் செய்யுளுள் இரண்டே வரிகள் உள்ளன. அதனால் அதற்கு 'ஈரடி' என்றே பெயர். (3.368 to 3.370).

எல்லாவற்றிற்கும் மேலாகச் சம்பந்தர் தமிழுக்கும் இசைக்கும் மகத்தான தொண்டு ஒன்றினைப் புரிந்துள்ளார்.

Public domain. Digitization Muthulakshmi Research Academy

அது என்ன என்றால் தமிழையும் இசையையும் ஒரு மகோன்னதமான, தெய்விக நிலைக்கு ஏற்றம் பெறச் செய்திருக்கிறார். மக்களும் மன்னர்களும் தமிழையும் இசையையும் தெய்வமாகவே மதிக்கத் தலைப்பட்டனர். அதற்கு முன்னால் இசையை மக்கள் ரசித்தாலும் மதிக்கவில்லை. சமணர் போன்றோரின் போதனைகளின் தாக்கத்தால் இசை ஏற்றம் பெற்றிருக்கவில்லை; இழிவாகவே கருதப்பட்டது. சீவகசிந்தாமணி, காமத்தை 'வீணைச் செல்வம்' என்றே குறிக்கின்றது (411). அதற்கு உரை எழுதிய நச்சினார்க்கினியர், 'இசை நாடகம் காமத்தை விளைத்தலின் அவற்றால் பிறக்கும் காமத்தை, வீணைச் செல்வம் என்றார்' என்று விளக்கவுரை கூறியிருக்கிறார். இதைப் பற்றிப் பேராசிரியர் தெ.பொ. மீனாட்சிசுந்தரனார் கூறுகின்ற கருத்தைச் சற்று கவனிப்போம்.

> சமணர்களும் பௌத்தர்களும் கவிஞர்களாகவும், தத்துவ ஞானிகளாகவும், கலைஞர்களாகவும், கலைகளைப் பேணி வளர்ப்பவர்களாகவும் விளங்கி யிருக்கிறார்கள். எனினும் கலைகள் மனிதனின் சபல புத்திக்கும் வீழ்ச்சிக்கும் காரணமாயிருப்பதாக அவர்கள் கருதினார்கள். அவற்றை (கலைகளை)ச் சமய வளர்ச்சிக்கும் பயன்படுத்தலாம் என்றாலும் தகுந்த முறையில் பாதுகாக்கப்படாவிட்டால் உண்மையில், அடிப்படையில் அவை லௌகிக மானவைகளே. (திருத்தக்கதேவர் என்னும்) ஒரு சமணப் புலவர் வீணையைக் 'காமம்' என்ற கருத்திலேயே குறித்திருக்கிறார். சமணர்களில் தலைசிறந்த புலவர்களின் ஊக்கமும் தூண்டுதலும் அவர்களுக்குப் பின்னால் வறண்டு மறைந்து விட்டன. மக்களின் மனப்பான்மை எதிலும் நல்லதில்லை என்ற எதிர்மறைப் போக்கிலேயே செல்லத் தலைப்பட்டது. உள்ளார்ந்த ஆன்ம உணர்வு மலரவில்லை; கூட்டுக்குள் முடங்கிக் கிடக்கும் ஒழுக்க முறையே மேலோங்கியது. ஆன்மாவும் இதயமும் வறண்டு விட்டன; முடக்கப் பட்டு விட்டன; அடக்கப்பட்டன. அவர்களைப்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

> பொருத்தவரையில் உலகம் என்பது நாம் விட்டு நீங்கி விலகிப் போகவேண்டிய ஒன்றாகிவிட்டது.[10]
>
> பத்தி இலக்கியப் பாவலர்களின் பாடல்கள் சாதாரண மக்களைத் தூண்டி இழுத்தன. பேச்சு மொழி, சந்த வகைகள்பற்றிய எண்ணங்கள் சங்க காலத்தினின்றும் மாறுபடத் தொடங்கிவிட்டன. சம்பந்தர் அந்த மாறுபட்ட சந்தத்தில் பாடினார்... பொதுமக்களும் அவர்களது மன்னர்களும் அந்த இசைக்கும் கவிதைக்கும் மன நெகிழ்ச்சியுற்றார்கள். வளர்ந்து வந்த ஆலய வழிபாட்டு நெறிக்கு அந்த இசையும் தமிழும் இதயமாகவும் ஆன்மாவாகவும் விளங்கித் திகழ்ந்தன.[11]

திரு வீரபத்திர முதலியார் தெலுங்கு, கன்னட மொழியில் உள்ள யாப்பியல்பற்றி மிகச் செறிவுள்ள ஆழ்ந்த ஒப்பியல் ஆராய்ச்சியைச் செய்திருக்கிறார். அவர் கருத்துப் படித் தெலுங்கு, கன்னட யாப்பியலில் உள்ள கொள்கை களைக் கொண்டு சம்பந்தருடைய பாடல்களையும் யாப்பு அமைதிகளையும் ஆராய்ந்தால் அவரது பாடல்கள் மிகவும் நன்றாகப் புரிந்துகொள்ளும்படியாகவும் அறிவியல் அடிப் படையில் அமைந்துள்ளதாகவும் இருப்பது விளங்கும்.[12]

தற்காலத்தில் இசைபற்றிய ஆராய்ச்சி ஆழமாகவும் நுண்மையாகவும் நடைபெற்று வருகிறது. தேவாரப் பண்களுக்குப் பொருந்திய இன்றைய கருநாடக இசை இராகங்கள் இனம் காணப்பட்டு வருகின்றன. எஸ். இராமநாதன் போன்ற இசை அறிஞர்கள், ஜெயதேவர், தன்னுடைய இராகம் ஒன்றிற்குப் 'பழம் பஞ்சுரம்' என்னும் பண்ணின் பெயரை வைத்த அன்னமாசார்யர் என்ற தெலுங்கு இசைமேதை, புரந்தரதாசர், நாராயண தீர்த்தர், க்ஷேத்திரக்ஞர், தியாகராஜர், சியாமா சாஸ்திரி, முத்துசுவாமி தீட்சிதர், சுவாதித் திருநாள், பொன்னையாப் பிள்ளை, லட்சுமண பிள்ளை போன்றவர்கள் தேவாரப் பாடல் களையும் பண்களையும் கேட்டு அறிந்து அவைகளால் தூண்டுதலைப் பெற்றிருக்கிறார்கள் என்று குறிப்பிட்டிருக் கிறார். மேலும் தியாகராஜ சுவாமிகள் திருவையாற்றுக்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கோவிலில் பாடப்பட்ட தேவார இன்னிசையைச் செவி மடுத்து அவற்றில் ஈடுபட்டிருப்பார் என்றே கொள்ளலாம்.[13]

வளர்ந்துவரும் இசை ஆராய்ச்சியில் தேவார இசையின் மேன்மை நலன்களெல்லாம் தெளிவாக விளங்கும்.

5.4 உயிர்களிடத்தில் சம்பந்தர் கொண்ட கருணை

"வருந்தி நைபவர்கள் (என்னால்) ஆசீர்வதிக்கப் பட்டவர்கள்; ஏனென்றால் அவர்களுக்கு ஆறுதல் அளிக்க வேண்டும்" (Blessed are they that mourn; for they shall be comforted) என்று ஏசு பெருமான் கூறுகிறார்.[14]

திருஞானசம்பந்தரோ இறைவன் வாழும் இடம் எது என்று கேட்டால் அவன் 'நோவுளார் வாய் உளன்' (1.61.6) என்று உறுதியாகச் சொல்கிறார். பிறர் நோவதைக் கண்டு சம்பந்தர் வாடியிருப்பதைக் காண்கிறோம். பாம்பு கடித்து மாண்ட ஓர் இளைஞனுக்கு வாழ்வு வழங்கி அவனுக்குத் திருமணமும் செய்துவைத்த அருட்செயல் சேக்கிழாராலும், நாட்டு வழக்கிலும் நன்கு உணர்த்தப்படுகின்றது. 'சடையாய் எனுமால் சரண் நீ எனுமால்' என்று தொடங்கும் அவரது திருமருகல் பதிகம் இந்த உண்மையை உணர்ச்சி பூர்வமாக வெளியிடுகிறது.

பாச்சிலாச்சிராமத்தில் 'முயலகன்' நோயால் பீடிக்கப் பட்டு வருந்திய அரசிளங்குமரியை நோய் நீக்கி வாழ வைத்த கருணைத் திறத்தையும் காண்கிறோம். கொடிமாடச் செங்குன்றத்தில் அடியார்களை வாட்டிய சுர நோயைத் திருநீலகண்டப் பதிகம்பாடி தீர்த்துவைத்தருளியிருக்கிறார் சம்பந்தர்.

மதுரை மன்னன் சமணர்களுடன் சேர்ந்துகொண்டு அடியார்கள் தங்கியிருந்த திருமடத்திற்கு சமணர்கள் தீவைத்ததற்கு ஆதரவாக இருந்தபோது அவனைத் தண்டிக்க வேண்டிய நிலை ஏற்பட்டபோதும் 'பையவே சென்று பாண்டியர்க்காகவே' என்று தீயை ஏவி, ஆனால் அத் அவனைப் பொசுக்கிவிடாமல் காத்தருளியிருக்கிறார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருமயிலையில் எலும்பும் சாம்பலுமுமாகிவிட்ட பூம்பாவையைப் பொன் மேனியோடு மீண்டும் உயிர்ப் பித்தார்.

இவைகளெல்லாம் மாயமந்திர ஜாலங்கள் என்று சிலர் நினைக்கலாம்; அற்புதச் செயல்கள் என்றும் சொல்லலாம். ஆனால் சம்பந்தருக்கோ இச்செயல்கள் எல்லாமே இறைவ னுடைய திருவருட் செயல்கள்தாம். இச்செயல்களிலெல் லாம் சம்பந்தருடைய பரிவையும் கருணையையும் காண முடிகிறது. பிற உயிர்கள் படும் வேதனைகளை உணராமல் மரத்துப்போன மனத்தை உடையவர் அல்லர் அவர்.

ஆற்றுவார் ஆற்றல் பசிஆற்றல் அப்பசியை
மாற்றுவார் ஆற்றலின் பின் (குறள். 225)

என்பார் திருவள்ளுவர். தம்முடைய பசியைப் பொறுத்துக் கொள்பவரின் ஆற்றலைக் காட்டிலும் தாமும் பசி பொறுத்துத் தம் பசியைப் பொறுக்கமாட்டாத மற்றவர்களின் பசியைப் போக்க முயல்பவர்களின் ஆற்றல் மிகப் பெரியதாகும் என்பது வள்ளுவரின் கருத்து.

திருஞானசம்பந்தர் பிறர் பசியைக் கண்டு நெஞ்சு பதைத்தவராகவே தோன்றுகிறார். மக்கள் பசியாலும் பஞ்சத்தாலும் வருந்தும்பொழுது அவர்களது நிலைக்கு இரங்கிப் பசியைக் களைவதற்கு முன் வந்த கருணை வாய்ந்த வள்ளல்களை இருபத்திரண்டு பாடல்களில் சம்பந்தர் மனமாரப் போற்றுகிறார். அத்தகையவர்களை, 'வரக் கருணையாளர்' (2.168.8) என்று உயர்த்திப் பேசுகிறார்.

வையம்விலை மாறிடினும் ஏறுபுகழ் மிக்குஇழிவிலாத
வகையார்
வெய்யமொழி தண்புலவ ருக்குரைசெய் யாதஅவர்
வேதிகுடியே
(3.336.6)

என்று இந்த வரக்கருணையாளர்கள் 'உலகில் பஞ்சத்தால் பண்டங்களின் விலை ஏறிப்போன காலத்திலும் தங்களது ஏறுகின்ற புகழ் மேலும் ஓங்கி விளங்கும்படியாக அறம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

செய்பவர்கள்; வாழ்விற்கு தண்மையான நன்மைகளைச் சொல்லும் புலவர்களிடத்தில் வெம்மையான கடுஞ் சொற்களைப் பேசாதவர்கள். அத்தகையோர் வாழும் இடம்தான் வேதிகுடி என்ற தலம்.

பிறர் துன்பத்தைக் கண்டு கசியாத மனமுடையவர் களின் வீடுகளில் காலெடுத்து வைப்பதும் தீது என்று நெஞ்சுக்கு உணர்த்துகிறார் ('கரவலாளர் தம்மனைக் கடைகள்தோறும் கால் நிமிர்த்து இரவலாழி நெஞ்சமே' 2.236.2) திருஆமாத்தூரில் அடியார்கள் பசித்திருந்ததைக் கண்ட சம்பந்தர் 'அவர் உண்டியால் வருந்த இரங்காதது என்னை கொலாம்' (2.186.5) என்று இறைவனையே ஆத்திரத்துடனும் வேதனையுடனும் கேட்கிறார்.

திருவீழிமிழலையில் பஞ்சப்பிணியால் மக்கள் படுதுயர் உற்றபோது சம்பந்தரும் நாவுக்கரசரும் இறைவனிடம் பொற்காசு பெற்று மக்களுக்கு உணவு படைத்த அறச்செயல் ஏற்கனவே குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்விரு அருளாளர்களது கருணையால் உலகோர் அழியாமல் வாழ முடிந்தது என்ற கருத்தில், 'ஞானசம்பந்தன்... நாவுக்கரசோடு எழில்மிழலைக் கூடிய கூட்டத்தினால் உளதாய்த்திக் குவலயமே!' – (ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி – 80) என்று சொல்லி வியக்கிறார் நம்பியாண்டார்.

வேத வேள்வியைக் கண்ணெனெ ஓம்பியவர் சம்பந்தர். அதற்குக் காரணம் வேள்வி செய்வதால் 'வானம் இருள் கூர்ந்து' மழை பொழிந்து மக்கள் பசிப்பிணி இன்றி வாழ்வார்கள் என்பது அவருடைய நம்பிக்கை. தில்லைவாழ் அந்தணர்களைக் 'கற்றாங்கு எரி ஓம்பி கலியை வாராமே செற்றார்' (1.80.1) என்று போற்றுகிறார். திருப்பாசுரம் 'வாழ்க அந்தணர் வாழ்க ஆனினம்' என்று வாழ்த்துவதும் ஒரு சமுதாய நோக்குடன்தான்.

'திருந்தடி மறந்திடாது' வாழ்ந்த பிள்ளையார் சமுதாய நலன்களையும் மறக்கவில்லை.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

5.5 சம்பந்தர் ஆற்றிய சமுதாயப் புதுமை

சில மூடப்பழக்கங்களும் வேண்டாத வழக்கங்களும் எப்படியோ சமுதாயத்தில் புகுந்துவிடுகின்றன. அதனால் சமுதாய வாழ்வில் ஒரு புரையோட்டம் நிகழ்ந்துவிடுகிறது. ஆனால் நல்ல வேளையாக அவ்வப்போது உலகில் சில மகான்கள் தோன்றுகிறார்கள். அவர்களது வருகையால், வழிகாட்டலால், சமுதாயம் அழிந்துவிடாமல் காக்கப் படுகிறது. அவர்கள் வாழ்ந்து காட்டிய நல்ல வழிகளில் மக்கள் நடந்து சென்று ஈடேறுகிறார்கள்.

மக்களைக் குறைத்துச் சிறுமை செய்யும் ஒரு வழக்கம் தான் தீண்டாமை என்பது. இதனை விலக்கித் துடைப்பதற்கு இன்றைய அரசியலில் முயற்சிகள் பல ஏற்பட்டுவிட்டன. சட்டங்கள் தீட்டப்பட்டிருக்கின்றன. சிறைச்சாலைகள் திறக்கப்பட்டுள்ளன. ஆனால் சமுதாயத்தில் களைகளாக இருக்கும் இத்தகைய தீமைகள் ஒழிந்தபாடில்லை. வேதனை தொடரத்தான் செய்கிறது. அதற்கு முக்கியமான காரணம் மனிதனின் மனம் மாறவில்லை. செய்வதில் நம்பிக்கை ஊன்றவில்லை.

திருஞானசம்பந்தரின் காலமான பக்தி இயக்கக் காலத்தில் அவரைப்போன்ற சமயத் தலைவர்கள், சமயங்கள் உணர்த்திய நன்னெறிகளைச் சமுதாய முன்னேற்றத்திற்குப் பயன்படுத்தியிருக்கிறார்கள். உலகில் உள்ள சராசரங்கள் எல்லாம் ஆண்டவனின் படைப்பே. எனவே கடவுள் அன்பு என்பது அவன் படைத்த உயிர்களிடத்தில் கொள்ளும் அன்புதான். சம்பந்தருடைய பாடல்கள் உணர்த்தும் ஒரே நெறி இந்த அன்பு நெறிதான். அங்கு வேற்றுமைகளைக் கடந்து எல்லோருமே அவனைச் சார்ந்தவர்கள் என்ற பொதுப்பண்பு ஒன்றே தலைதூக்கி நிற்கிறது. பெரியாழ்வார் நாராயணனின் அன்பர்கள் யாவரும் ஒரு குலத்தவரே ('தொண்டக் குலம்') என்று பறைசாற்றினார்.

தொண்டக் குலத்துள்ளீர்வந் தடிதொழுது
ஆயிரம் நாமம் சொல்லி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பண்டைக் குலத்தைத் தவிர்ந்துபல் லாண்டுபல்
லாயிரத் தாண் டென்மினே (திருப்பல்லாண்டு – 5)

மேல் வகுப்பினரைக் கண்டால் ஒதுங்கிக் கொள்ளும் பழக்கம் பண்டைத் தமிழ் நாட்டில் நிலவி வந்தது. மதுரை வீதியில் பெருங்குடி வணிகனான கோவலனைக் கண்ட பொற்கொல்லன் ஒதுங்கிச் செல்வதைச் சிலப்பதிகாரம் கொலைக்களக் காதையில் 'விலங்கு நடைச் செலவின்' (107) என்று குறிப்பிடுகிறது. அடியார்க்கு நல்லார் 'மேன்மக்களைக் கண்டு ஒதுங்கி நடத்தல்' என்ற அந்தச் சொற்றொடருக்கு உரை கூறுகிறார்.

வைணவ ஆழ்வார் திருப்பாணாழ்வாரைத் திருக்குலத்தவர் என்றும் தீண்டத்தகாதவர் என்றும் தெரிந்து கொள்கிறோம். அதுபோல திருநீலகண்ட யாழ்ப்பாணர் அந்தக் குலத்தில் உதித்தவர்தாம். ஆனால் அவரும் சம்பந்தரும் முதன்முதலில் சந்தித்தபோது சம்பந்தர் அவரை நெஞ்சாரத் தழுவிக் கொண்டார்; மேலும் அவரை ஆலயத்திற்கும் அழைத்துச் சென்றார்; தன் பதிகத்தைப் பாணரின் யாழில் கூட்டி வாசிக்கச் செய்தார்; அவர் வேண்டிக் கொண்டபடி என்றும் அவருடனேயே இருக்கச் செய்து, ஆலயங்களில் 'பாடு இன்னிசைப் பாடி' மகிழ்ந்தார் என்றெல்லாம் பெரியபுராணத்தின் வழியாக அறிகிறோம் (134).

எல்லாவற்றிற்கும் மேலாகத் திருச்சாத்தமங்கையில் நிகழ்ந்த அருஞ்செயலை நாம் நினைந்து உருகவேண்டும். அவ்வூரில் வாழ்ந்த நீலநக்கர் என்ற மறையவர் திலகம், சம்பந்தர் வேண்டிக் கொண்டபடி, பாணர் மக்களான திருநீலகண்டருக்கும் அவர் துணைவியார் மதங்க சூளாமணி யாருக்கும் தம் இல்லத்தில் இருந்த யாகசாலையிலேயே தங்குவதற்கு இடம் அமைத்துக் கொடுத்திருக்கிறார். அந்தணர் இல்லங்களில் மிகவும் புனிதமாகப் போற்றப் படுவது யாகசாலை. பாணர் தம்பதியர்க்கு அங்கே இடம் அமைத்து கொடுத்த நீலநக்கரும் அவரை வழிநடத்திய ஞானசம்பந்தரும் நிகழ்ச்சிய அந்த அருஞ்செயல் எவ்வளவு புதுநோக்குச் செயல் என்று எண்ணிப்பார்த்து அதிசயிப்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பார்கள் அன்பர்கள். இந்தப் புதுமை இயக்கத்திற்குப் பின்புலமாக இருப்பது 'ஈசன்பால் அன்பு,' 'அவன் அடியவர் பால் கொண்ட நேயம்.'

5.6 சமணர், பௌத்தர்: சம்பந்தரின் நிலை

சம்பந்தர் பாடல்களில் ஒரு சிறப்பு என்னவென்றால் ஒவ்வொரு பதிகத்திலும் எட்டாவது பாட்டில் சம்பந்தர், அவர் காலத்தில் வாழ்ந்த சமணர் பௌத்தர்களைக் குறித்துப் பேசத் தவறுவதில்லை; சில இடங்களில் அவர்களது கொள்கை முதலியவற்றில் உள்ள குறைகளைச் சுட்டிக் காட்டுகிறார்; சில இடங்களில் அவர்களது போக்கில் உள்ள ஒவ்வாத பழக்கங்களைக் கண்டிக்கின்றார்; சில இடங்களில் அவர்களது நிலைப்பாட்டிற்கு இரங்கி வருந்துகிறார்.[15] சம்பந்தரின் காலத்தவரான அப்பரும் அவரைப்போலவே இதுபற்றிப் பேசுவதைப் பார்க்கிறோம். ஆனால் அவர்களது காலத்திற்கு முந்தியவர்களான திருமூலரோ, காரைக்கால் அம்மையாரோ சமண பௌத்தர்களை அவ்வளவு தாக்க வில்லை. பின்னால் தோன்றிய நம்பியாரூரரும் அப்படித் தான்.

இதனால் என்ன தெரிகிறது என்றால் சம்பந்தருக்கும் அப்பருக்கும் சமண பௌத்தர்களை எதிர்க்க வேண்டிய ஒரு வரலாற்றுத் தேவையும் கட்டாயமும் இருந்திருக்க வேண்டும். அப்படிப்பட்ட வரலாற்றுக் கட்டாயம் என்ன என்று பார்ப்போம். இந்தக் கேள்வியை எடுத்து ஆராய்வதற்கு முன் ஒன்றைத் தெளிவுபடுத்த வேண்டும். சம்பந்தர் ஓர் இடத்தில் கூடச் சமண, பௌத்த சமயங்களைப் பின்பற்றும் பொதுமக்களைக் குறித்துக் குறைவாகப் பேசவேயில்லை. துறவிகளில் சில பேர்களை மட்டும்தான் எடுத்துப் பேசியிருக்கிறார்.

ஏசுவின் தோற்றத்திற்குச் சில நூற்றாண்டுகளுக்கு முன்னதாகவே சமண, பௌத்தர்கள் தென் இந்தியாவி னோடு தொடர்பு கொண்டிருந்தார்கள். தமிழகத்தில் **தொல்காப்பியத்தில்** சமணக் கருத்துகளும் கோட்பாடுகளும் இடம்பெற்றுள்ளதாகக் கருதப்படுகிறது. சங்க இலக்கியங்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

களிலும் திருக்குறளிலும் சமணக் கொள்கைகளின் சாயல்கள் உள்ளன. 'உலோச்சு' என்ற சடங்கு சமணத் துறவிகள் தங்கள் தலைமயிரை மழித்துக்கொள்ளும் பொழுது செய்யப்படும் சடங்காகும். சங்க நூல்களில் 'உலோச்சனார்' என்ற புலவரின் பெயர் காணப்படுகிறது. இருபத்திரண்டு சங்கப் பாடல்களை அவர் பாடியிருக்கிறார். நிகண்டன் தலைக்கோட்டுத் தண்டனார் என்ற வேறு ஒரு புலவரும் இருக்கிறார். நிகண்டன் என்பது சமணத் துறவியைக் குறிக்கும். சிலப்பதிகாரத்தை இயற்றிய இளங்கோவடிகளும் ஒரு சமணர் என்றே கருதப்படுகிறார். சீத்தலைச் சாத்தனார் என்பவர் ஒரு பௌத்தப் புலவர்.

பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் பலவற்றின் ஆசிரியர்கள் சமணராகவோ பௌத்தராகவோ இருக் கிறார்கள். தமிழ் இலக்கியத்திற்கும் இலக்கணத்திற்கும் யாப்பியலுக்கும் தர்க்கத்திற்கும் அவர்கள் ஆற்றிய தொண்டு மிகவும் மகத்தானது. அதனால் அவர்களுடைய செல்வாக்கு தமிழகமெங்கும் பரவி நின்றது. சமண பௌத்தச் சிலைகள் பல இன்றும் நம் நாட்டின் வயல்வெளிகளிலும் குளக் கரைகளிலும் நின்று அவர்களது தாக்கத்தைக் காட்டி நிற்கின்றன. பல ஊர்கள் அமணப்பாக்கம், அருகத்துறை, நமண சமுத்திரம், ஜினாலயம், அமண்குடி, சமணர் திடல், அருகமங்கலம் என்ற பெயர்களைப் பெற்றுள்ளன. 'பள்ளி' என்று முடியும் பல ஊர்கள் பொதுமக்களிடையே அந்தச் சமயத்தாருக்கிருக்கும் செல்வாக்கினைப் பறைசாற்றிக் கொண்டிருக்கின்றன.

சங்க காலத்திலும் சிலப்பதிகார காலத்திலும் எல்லாச் சமயத்தாரும் கூடி வாழ்ந்த சமரச நிலையைக் காண்லாம். சேரன் செங்குட்டுவன் என்ற மிகச்சிறந்த சிவபக்தன் இளங்கோவடிகளின் அண்ணன். ('கால்கோள்காதை' – 63, 66; 'வரந்தரு காதை' 141). இளங்கோ அடிகளே 'காட்சிக் காதை'யில் (66) சாத்தனாரைப் புகழ்ந்து பேசுகிறார்.

வைதிக (இந்து) சமயங்களுக்கும் சமணர்களுக்கும் இடையே நிலவியிருந்த இணக்கத்தை இளங்கோ அடிகள்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மிகத் தெளிவாகக் காட்டியிருக்கிறார். ‘காடுகாண் காதையில்’ (வரிகள் 30–161) கண்ணகியும் கோவலனும் சமணத் துறவி கவுந்தி அடிகளுடன் காட்டுவழியே சென்று கொண் டிருக்கும்போது எதிரே மாங்காட்டு மறையோன் என்ற வேதியனைச் சந்திக்கிறார்கள். மதுரைக்குச் செல்லும் வழியைப் பற்றி அவனிடம் கேட்ட பொழுது அவன் மூன்று வழிகளைச் சொல்கிறான். ‘நெடுமால் குன்றம்’ என்ற அழகர் திருமலை போன்ற தடங்களைச் சொல்லித் தன் சமயச் சார்புள்ள கொள்கைகளையும் தெய்வங்களையும் குறிப்பிடு கின்றான் மறையவன். அவற்றைப் பொறுமையாகக் கேட்டுக் கொள்கிறார் கவுந்தி அடிகள். பின்பு ‘மறையவனே நீ உன் தெய்வங்களை வணங்கிவிட்டு உன் வழியில் செல்; நாங்கள் எங்கள் வழியில் செல்கிறோம்’ என்று மறையவனிடம் சொல்லிவிட்டுக் கோவலன் கண்ணகியுடன் மதுரைக்குப் புறப்பட்டுச் செல்கிறார் கவுந்தியடிகள்.

இளங்கோ அடிகள் இதன் மூலம் சமயங்களிடையே நிலவ வேண்டிய பொறுமையை, இணக்கத்தை, வற்புறுத்து வதைக் காண்கிறோம்.

கோவலன் கொலையுண்ட பிறகு மகனை இழந்த வேதனையில் தவித்த அவனது தந்தை மாசாத்துவான் பௌத்த சமயத்தைத் தழுவுகிறான். கண்ணகியின் தந்தை மாநாயகன் ஆசீவக சமயத்தைச் சென்றடைகிறான். மாதவியும் அவள் மகள் மணிமேகலையும் பௌத்தத்தைச் சாருகிறார்கள். இப்படிப்பட்ட சமயக் காழ்ப்பற்ற சமய உரிமையுள்ள ஒரு சமுதாயத்தை நமக்கு உருவாக்கிக் காட்டுகிறார் இளங்கோ அடிகள். ஓர் இடத்தில்கூட சமணர்கள் வேதத்தைப் பழிப்பதாகச் சிலப்பதிகாரத்தில், ஏன், சங்க இலக்கியத்தில் இல்லை.

ஆனால் சம்பந்தரது காலத்தில் நிலவிய நிலை வேறு. இக்காலக்கட்டத்தில் சமணர்களின் மனப்போக்கும், செயல்பாடுகளும் முற்றிலும் மாறிவிட்டதாகவே தோன்று கின்றன. சம்பந்தரது சொற்களின்படி ‘வேத வேள்வியை நிந்தனை செய்துழல்... அமணொடு தேரர்’ (3.366.1) என்று

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அமணர்கள் போன்றவர்கள் பிற சமயங்களைத் தூற்றித் திரிந்ததாகப் பேசப்படுகிறது. பல்வேறு பாடல்களில், சிவனையும் சைவத்தையும் ஒன்று திரண்டு அவர்கள் சாடுவதைச் சம்பந்தர் வேதனையோடு குறிப்பிடுகிறார். 'புத்தரொடு பொறியில் சமணும் புறங்கூற நெறி நில்லா ஒத்த சொல்ல' (1.1.10) என்று அவர்கள் சிவனையும் சைவத்தையும் பழிப்பதில் மாத்திரம் ஒன்று சேர்ந்துகொண்டு தாக்குவதாகக் கூறுகிறார். (1.3.10; 1.4.10; 1.14.10; 1.32.10; 1.86.10; 2.257.10 ஆகிய பாடல்களையும் பார்க்கவும்.)

சம்பந்தரை எதிர்ப்பட்ட சமணர்கள் சங்கச் சான்றோர் களைப்போல் கல்வி கேள்விகளின் சிறந்தவர்களாக இல்லை. புலமைப் பண்புகளையும் நெறிகளையும் இகழ்ந்து புலவோர்களையும் இழித்துப் பேசியதாக, 'பொங்கு நூல்வழி அன்றியே புலவோர்களைப் பழிக்கும்' (3.297.10) தன்மை உடையவர்கள் என்று சம்பந்தர் மனம் நோகின்றார். 'ஆகமத்தொடு மந்திரங்கள் அமைந்த சங்கத' (சமஸ்கிருத) (3.297.2) மொழியைப் பங்கப்படுத்திக் கொச்சையாய்ப் பேசுபவர்கள். 'ஆரியத்தொடு செந்தமிழ்ப் பயன் அறிகில்லா அந்தகர்கள்' (3.297.4) என்ற வடசொல்லையும் தமிழ்ச் சொல்லையும் அவற்றின் உண்மையான நோக்கத்தையும் அறிந்துகொள்ளாமல் அவற்றைத் திரித்துப் பேசிப் பாழ் செய்கிறார்களே என்பது சம்பந்தரது வேதனை. இத்தகைய சமணர்கள் தமிழ்ப் பண்பாட்டை அறியாதவர்கள். வெளியிலிருந்து வந்த குடியேறிகள் என்பது ஆராய்ச்சி யாளர்கள் சிலரது கருத்து.

இந்தப் புதிதாக வந்த சமணர்களைப்பற்றி சி.வி. நாராயண அய்யர் என்ற வரலாற்றுப் பேராசிரியர் கூறுவதன் கருத்தைப் பார்க்கலாம்:

> ஆறாம் நூற்றாண்டைச் சார்ந்த சமணர்கள் இந்துக்களை விரும்பாதவர்கள்... சம்பந்தரது சொற்களை நம்புவோமேயானால் அவர்கள் வேதங்களை நம்பாதவர்கள்; தமிழ் இலக்கியத்தை அறியாதவர்கள்... அதனால் அவர்கள் இந்தக்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

காலக்கட்டத்தில் புதியவர்களாய்த் தமிழகத்திற்கு வந்தவர்களே என்று முடிவு செய்யலாம்.[16]

அப்படியென்றால் அவர்கள் எங்கிருந்து தமிழகத்திற்கு வந்தார்கள் என்ற கேள்வி எழுகின்றது.

திரு. அய்யர், பேராசிரியர் தெ.பொ.மீ போன்ற அறிஞர்கள் இதுபற்றி ஆராய்ந்து இவர்கள் கடம்ப நாட்டிலிருந்தும் கருநாடகத்திலிருந்தும் களப்பிரர்களோடு வந்து குடியேறியவர்களே என்ற கருத்தை வெளியிட்டிருக்கிறார்கள்.[17]

மேலும் ஒன்றைக் குறிப்பிட வேண்டும். அவர் காலத்தை சார்ந்த சமணர்களின் பெயர்களைச் சம்பந்தர் ஒரு வரிசையாகக் குறிப்பிட்டுள்ளார் (3.297.4, 6). ஆனால் இந்தப் பெயர்களில் ஒன்று கூடப் பழந்தமிழ்ச் சமணர்களின் பெயர்களை ஒத்திருக்கவில்லை. எடுத்துக்காட்டாக, உலோச்சனார், நிக்கந்தனார், இளங்கோ, கவுந்தி போன்றவை பழந்தமிழ்ச் சமணர் பெயர்கள். மூன்றாம் நான்காம் நூற்றாண்டுகளில் கூட கல்வெட்டுகளில் (M.E.R. 238 of 1904). தமிழ்ப்படுத்தப்பட்ட 'சந்திர நந்தி', 'இளைய படாரம்' போன்ற பெயர்கள்தாம் காணப்படுகின்றன.

கன்னட நாட்டில் கிடைக்கப்பெற்ற சில கல்வெட்டுகளில் சமணத் துறவிகளின் அமைப்பு நான்கு கூட்டங்களாக (சங்கங்கள்) அமைந்திருந்தது தெரியவருகிறது. அவை: 'தேவசங்கம்,' 'நந்திசங்கம்,' 'சிம்மசங்கம்,' 'சேன சங்கம்' என்ற நான்கு.[18] அவைகள் 'கணங்கள்' என்றழைக்கப்பட்டன.

இங்கு சம்பந்தர் குறிப்பிட்ட சமணர்கள் 'நந்தி கணங்களையும்' 'சேன கணங்களையும்' சார்ந்தவர்கள். இந்த கணத்தார் மிகுந்த அரசியல் செல்வாக்கைத் தேடிக் கொண்டார்கள். பொருள் வளமும் மிகுந்தது. அதன் பயனாக அவர்களது வாழ்க்கை நெறியிலும் ஆன்ம வளர்ச்சியிலும் பின்னடைவு ஏற்பட்டுவிட்டது - என்று அய்யர் அவர்கள் குறிப்பிடுகிறார்கள். (பக்.299-303). அதனால்தான் போலும் அவர்கள் பிற சமயங்களைப் பொறுத்துக்கொள்ள முடியாதவர்களாகிவிட்டனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருநீறு தரித்த சைவர்களின் காற்றுப்பட்டாலே அவர்களுக்குத் தாங்க முடியாது என்று சம்பந்தர் சுட்டிக்காட்டுகிறார். 'நீற்று மேனியார் ஆயினர் மேல் உற்ற காற்றுக் கொள்ளவும் நில்லா அமணர்' (3.366.8) என்பது சம்பந்தரது வேதனை. நாவுக்கரசரின் பழையாறை வடதளிப் பதிகம் (5.58.1) எவ்வாறு அந்தச் சிவன் கோயில் மறைக்கப்பட்டுச் சிதைக்கப்பட்டது என்ற செய்தியைச் சொல்கிறது.

சிவனைப் 'பேய்! பேய்!' என்று எள்ளி நகையாடு வார்களாம் தேரரும் அமணர்களும். ('தேரர் அமணர் பேய்ப் பேய் என்ன' - 2.216.10). பிற சமயத்தாரைத் தீ எனக் கொதித்துப் பேசுவார்களாம் (2.257.10). மதுரையில் அவரது மடத்திற்குத் தீ வைத்த செயலைப்பற்றி அவர் கூறியதை முன்பே சொல்லியிருக்கிறோம் (3.309.1-10).

இவற்றுக்கு மேலாக மூர்த்தி நாயனார், தண்டியடிகள் போன்ற சிவனடியார்கள் சமணர்களிடம் பட்ட பாட்டைச் சேக்கிழார் விரிவாகக் கூறியிருக்கிறார். சமணர்களின் பொறுக்கமாட்டாமையும், காழ்ப்பு உணர்வும் பற்றி இச்செய்திகள் நமக்குத் தெளிவாக உணர்த்துகின்றன. அப்பர் வாழ்வும் வாக்கும் இதனை மேலும் உறுதி செய்கின்றன.

இச்செய்திகளையெல்லாம் பார்க்கும்பொழுது சம்பந்தர் எதிர்கொண்ட சமணர்கள் தமிழ்ப் பண் பாட்டிற்கும் சமய நெறிக்கும் அப்பாற்பட்டு வெளி நாடுகளிலிருந்து வந்தவர்கள் என்பது மட்டுமல்ல, அவர்கள் பல்வேறு செல்வாக்குகளைப் பெற்று விட்டவர்கள் என்பதும் புரிகிறது. குறிப்பாக அரசியல் அதிகாரத்தை அவர்கள் கைக்கொண்டு விட்டார்கள்.

நீலகேசி என்ற சமணக் காப்பியம் புத்த சமயத்தைச் சார்ந்த குண்டலகேசிக்கு எதிராக, அதன் விளைவாகத் தோன்றியது என்பார்கள். இரண்டு நூல்களுமே அந்த இரண்டு சமயங்களுக்கிடையே ஏற்பட்ட வலுவான பூசலை வெளிப்படுத்தியிருக்கின்றன. இரண்டு நூல்களும் யாப்பருங்கலவிருத்தி என்ற கி.பி. பத்தாம் நூற்றாண்டு நூலில்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

குறிக்கப்பட்டிருப்பதால் அவைகளின் காலம் அதற்குப் பிந்தியிருக்க முடியாது. சக்கரவர்த்தி நயினார் என்ற அறிஞர் அவைகளின் காலத்தைக் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டு என்று குறிப்பிட்டுச் சொல்கிறார். (**சமணத் தமிழ் இலக்கிய வரலாறு**, *பக். 90*).

இந்த நூல்கள் இரண்டும் சம்பந்தரது கால நிலையை ஓரளவு உணர்த்தக் கூடும் என்று எதிர்பார்க்கலாம். அவைகள் சமண பௌத்த சமயங்களுக்கிடையே நிலவிய உறவு முறைகளையும் பிணக்குகளையும் குறிப்பிடுகின்றன. முதலாம் மகேந்திரவர்மன் (*கி.பி. 600-630*) எழுதிய **மத்தவிலாச பிரகசனம்** என்னும் கேளிக்கை நாடகமும் நமக்குச் சில உண்மைகளைக் கூறுகிறது. **நீலகேசி** சமணர்கள் எவ்வாறு பெருநிதியங்களைப் பெற்றுச் செல்வத்தில் திளைத்தார்கள் என்றும் அந்தச் செல்வங்களை அவர்கள் கடல் கடந்த நாடுகளிலிருந்து பெற்றார்கள் என்றும் விவரிக்கின்றது. ‘கடல்கடந்து கலம் தந்த நலம்’ - (*268*) என்று அந்நூல் குறிப்பிடுகிறது. அரசியல் செல்வாக்கு இல்லாமல் இத்தகைய செல்வங்களைச் சமணர்கள் பெற்றிருக்க முடியாது என்பது மறுக்கமுடியாத உண்மை.

இவ்வாறு பௌத்தமும், சமணமும், ஆசீவகர்களும் ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக் கொண்டிருந்தாலும் ஒன்றில் மட்டும் அவர்கள் எல்லோரும் ஒன்றுபட்டிருந் தார்கள். அதுதான் அவர்கள் சைவ வைணவ சமயங்களின் மீது கொண்டிருந்த காழ்ப்பு. அதனால் சம்பந்தர் சமணரோடு அல்லாமல் பௌத்தர், ஆசீவகர் போன்றவர்களையும் தடுத்துச் சமாளிக்க வேண்டிய நிலைக்கு ஆளானார்.

மணிமேகலைக்குப் பிறகு **குண்டலகேசி, நீலகேசி** போன்ற காவியங்கள் தோன்றின. காவியங்கள் என்றாலும் உண்மையில் அவை தருக்க நூல்களேயாகும். நாட்டில் சமயவாதிகள் தங்கள் தங்கள் சமயம்தான் உயர்ந்தது என்பதைச் சாதிக்க வாதப் போர்கள் நிகழ்த்தினார்கள். இந்தப் போக்கு நாளுக்கு நாள் வலிமை அடைந்தது. மக்களும் மன்னர்களும் அதன் கவர்ச்சியில் சிக்குண்டார்கள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சம்பந்தர் காலகட்டத்தில் சமண, பௌத்தர்கள் தருக்க சாத்திரத்தில் வல்லவர்களாகத் திகழ்ந்தார்கள். சம்பந்தர் அவர்களைத் 'தர்க்க சாத்திரத்தவர்' (1.62.10) என்றே அழைக்கிறார். அவர்கள், குறிப்பாகச் சமணர், கல்வியிலும் சிறந்திருந்ததால் அவர்களைக் 'கற்றமணர்' (2.162.10) என்றும் கூறுகிறார். இந்திர ஜாலத்தை ஒத்தது அவர்களது பேச்சுத்திறன் என்ற கருத்தில் 'இந்திர ஞால மொழி' (1.105.10) என்கிறார். அவர்கள் பேச்சிலும் வலிமை இருந்தது. ('மொழிவல்லன – 1.37.10) இத்தகைய பேச்சுத் திறனும் வாத வலிமையும் கொண்ட அவர்களது பின்னால் ஓடிக் கூடுபவர்களை, 'பேய்த்தேர்ப்பின் குடம் கொண்டு நீர்க்குச் செல்வார்' (1.118.10) என்று ஒப்பிடுகிறார் சம்பந்தர்.

அவ்வாறு திறமையோடு வாதிட்டுப் பேசுவதில் தவறேதுமில்லை; ஆனால் அது 'மெய்யை' நிலைநாட்டுவதற் காக இருக்க வேண்டும்; மக்களுக்குப் பொதுவான நன்மைகளைப் பெற்றுத் தருவதற்காக இருக்க வேண்டும். உண்மையில் அப்படி நன்மை செய்வோர்களை, அவர்கள் சமணர்களாக இருந்தாலும், சம்பந்தர் பாராட்டுகிறார்; அவர்களில் 'நல்லோர் அறம் சொல்ல' (1.84.10) என்று குறிப்பிடுகிறார். தங்கள் கல்வி ஆற்றல்களை உண்மைக்கு மாறுபட்டும் சிதைத்தும் திரித்தும் பேசி மக்களை ஏமாற்றுகின்ற கபட நாடக வேலைகளில் ஈடுபடுவோரையே அவர் கண்டிக்கின்றார். சம்பந்தருக்கு இறைவனே மெய்ப்பொருள். இந்த மெய்ப்பொருளை ஒப்புக்கொள்ள மறுக்கும் சமண, பௌத்தர்களைக் கண்டு அவர் மனம் நைகிறார். மெய்ப்பொருள் என்பது அநாதியாக வருவது; என்றும் மாறாதது; மறக்க முடியாதது; உணர்வில் நின்று ஒளிர்வது; அதுவே கடவுள் என்பது. அத்தகைய மெய்ப் பொருளை அறிய முனையாத சமணர் போன்றவர்கள் அறியாதவர்களே. ('நெறியில்வரு பேராவகை நினையா நினைவு ஒன்றை அறிவில் சமண்...' 1.i8.10) – என்பது சம்பந்தரின் திண்ணமான எண்ணம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மெய்ப்பொருளை அறியமாட்டாமல் அவர்கள் மயங்கிவிட்டார்கள் என்ற கருத்தில் அவர்களைப் 'பிராண்டர்' (1.127.10) என்கிறார். 'மாபதம் அறியாதவர் (2.141.10) என்றும் கூறுகிறார். உண்மையைச் சந்தேகிக்கும் அவர்களை 'ஐயுறும் அமணர்' (1.128, வரி. 36) என்றும் 'தெற்றென்று தெய்வம் தெளியார்' (3.312.11) என்றும் குறிப்பிடுகிறார். அவ்வாறு தெளியாத காரணத்தால்தான் 'அத்தகு பொருள் (இறைவன்) உண்டும் இல்லையும்' (3.297.3) என்று கூறித் தடுமாறுகிறார்கள். 'அத்தி; நாத்தி' என்று வழங்கும் 'சியாத்வாதத்தை' இங்கு சம்பந்தர் குறிப்பிடுவதைப் பார்க்கிறோம். பொருள் கணப்பொழுதே இருந்து மறையும் என்ற க்ஷணிக வாதத்தை பௌத்தர்கள் மேற் கொண்டிருந்தனர். அதை அறிந்து கொண்டவர் சம்பந்தர், 'கருத்தா வேண்டாம், செயலே பயன்தரும்' என்ற கருத்தில் 'முயன்றனபடும்' (3.335.10) என்ற கொள்கையையும் அவர் மறுக்கின்றார். இறைவனை, 'நீதி பலவும், தன்னஉரு வாம்என மிகுத்தவன்' (3.329.4) என்று வினைப்பயனை வழங்குபவர் அவனே என்று உணர்த்துகிறார்.

அதுபோல் 'ஆரம்பவாதம்' என்று சமணர்களும் வைபாஷிகளும் சொல்வதை மறுத்த சம்பந்தர் அவர்களை 'ஆரம்பர்' என்று குறிப்பிடுகிறார். 'ஆரம்பர் உரை கொள்ளன்மின்' (1.10.10) என்று அவர்களது வாதத்தை ஏற்றுக்கொள்ள வேண்டாம் என்று மக்களுக்கு அறிவுரை கூறுகிறார்.

இறைவன் 'அந்தம் முதலாகி நடுவாய பெருமான்' (2.165.11) என்பது சம்பந்தரது கொள்கை. 'சுடர் விட்டுளன்' என்பது அவரது அனுபவம். மிக்குச் சோதித்து அவனை அறிந்துகொள்ளமுடியாது. (3.312.5). ஆனால் சமணர்கள் முதலியவர்கள் மெய்ப்பொருளை வெறுமையான வாதங்களால் தேட முயன்று தோல்வியுறுகின்றனர்; சாகும் வரை இந்தத் தருக்க ஆராய்ச்சி பேச்சாகப் பொழிகிறது. அப்படிப்பட்டவர்களைச் 'சாவாயும் வாது செய் சாவகர் சாக்கியர்' (2.147.9). என்று குறிப்பிடுகிறார் சம்பந்தர்;

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

'பேச்சினால் உமக்கு ஆவது என்' (2.145.2) என்றும் கேட்கிறார். அவர்களிடத்தில் 'நீதிகள் சொல்லியும் நினைய நிற்கிலார்' (2.273.10) என்று அவர்களது போக்கிற்காக வருந்துகிறார்.

மேலும் 'மெய்ப்பொருளை' ஏற்காத பிறசமயத்தார் நூல்களைப் 'பொய்நூல்' (1.107.10; 2.148.10) என்றே குறிப்பிடுகிறார். அந்தப் பொய்நூல் பேசுவோரைப் 'பொய்யர்' (1.88.10) என்றும் அவர்கள் கூறுவதைப் 'பொய்கள்' (1.51.10; 1.89.10; 2.146.10) என்றும் சாடுகிறார் சம்பந்தர். அவர்கள் ஆற்றிய பொய்த்தவத்தால் பயன் ஏதுமில்லை என்றும் உணர்த்துகிறார்.

சமணர், சாக்கியர் பேச்சில் ஒரு வகை முரட்டுத்தனம் ('மிண்டு') உண்டென்றும் அந்த மிண்டர்கள் பேசும் மிரட்டல்களைப் பொருட்படுத்தவேண்டாம் என்றும் அடியார்களைக் கேட்டுக்கொள்கிறார். (1.33.10; 1.42.10; 1.100.10; 2.143.10; 3.323.10). அவர்களது, வஞ்சனைச் செயலால் அவர்கள் 'நஞ்சினும் கொடியாரே' (3.275.10; 3.285.10) என்று எச்சரிக்கிறார் தமது அடியார்களை.

'சமணத் துறவிகளுக்கு ஏழு துறவுநெறி வழக்கங்கள் உண்டு. அவைகள் 'உலோச்சு' என்ற தலையை மழித்துக் கொள்ளுதல், திகம்பரமாய் — நிருவாணமாயிருத்தல், குளிக்காதிருத்தல், பல் துலக்காமை, படுக்கையைத் துறந்து வெறும் தரைமீது படுத்தல், நின்று கொண்டே உண்ணுதல் - சம்பந்தர் இந்தப் பழக்கங்களைக் குறிப்பிடுகிறார்.

மனத்தூய்மையைப் பெறுவதற்கு இந்தப் பழக்கங்கள் உதவும் என்று சமணர்கள் நம்பினார்கள். ஆனால் மனம் கோணலின்று இருந்தால்தான் இவை பயன்படும். மனம் மாசுபட்டிருந்தால் இந்தப் பழக்கங்களால் சமுதாயத்தில் அச்சமும் கூச்சமுமே தோன்றுவதற்கு வாய்ப்பாகிவிடும்.

யுவான்சுவாங் என்ற சீன யாத்திரிகர் இந்தக் காலக் கட்டத்தில் தமிழ்நாட்டில் நெடுகப் பயணம் செய்தவர். அப்பொழுது தமிழ்நாட்டில் இருந்த புத்தப் பள்ளிகள் பெரும்பாலும் புறக்கணிக்கப்பட்டிருந்த நிலையை அவர் கண்டிருக்கிறார். அங்கிருந்த துறவிகளும் இழிவான செயல்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

களில் ஈடுபட்டிருந்தார்களாம். சமணர்களோ ஆடை நீத்த திகம்பரத் துறவிகளாக நடமாடினார்கள்.[19]

ஆடையையும் துறந்து விடுவது என்பது ஒரு துறவிக்குப் பற்றற்ற செயலாக இருக்கலாம். ஆனால் அதுவே அறமாகி விடாது. 'ஆடை தவிர்த்து அறம் காட்டுவார்' (2.204.10) என்று அத்துறவிகள் அதை ஒன்றைத்தான் அறமாகக் கொண்டு நடக்கிறார்கள் என்று வருந்துகிறார் சம்பந்தர்.

தெரு வீதிகளில் அவர்களைக் கண்டவர்கள் நாணமுற்றுக் கூசுவார்கள் ('கண்டார் நாணும்படி' – 2.198.10). அவர்களைக் கண்டாலே பெண்கள் அஞ்சிக் கூசுவார்கள் என்று நாவுக்கரசரும் குறிப்பிடுகிறார் (4.5.8; 5.58.5). அவர்களோ 'நாணாது உடை நீத்தோர்கள்' (1.98.10). சிலர் சிறிது வெட்கமுற்று பனை ஓலைத் தடுக்கினால் மானத்தை மறைத்துக் கொள்வார்களாம். (1.101.10; 2.255.11)

வேறொரு செயலையும் சம்பந்தர் ஒப்புக் கொள்வதில்லை. அது சமணத்துறவிகள் உணவு விஷயத்தில் கொண்டிருந்த இரட்டை நிலை. சமணர் பௌத்தர் இருவருமே ஒருவேளை தான் உணவருந்த வேண்டும் என்பது அவர்களது விதி. அதில் பௌத்தர்கள் நாளின் முன் கூற்றிலும் (முற்பகல்) சமணர் பின் கூற்றிலும் உணவு கொள்வார்கள். (2.207.10). ஆனால் இதில் மன உறுதி இருந்ததில்லை.

உணவின் மீது தெவிட்டாத ஆசை; வரம்புமீறி வயிறு புடைக்க உண்ணுதல் ஆகிய பழக்கங்களால் மனம் எவ்வாறு தூய்மையுறும்? காலை விடிந்தவுடன் 'கண்தான் கழுவா முன்னே ஓடிக் கலவைக் கஞ்சியர் உண்டு' (1.67.6) திளைப்பார் களாம்.

இந்த நிலையிலே பௌத்த சமணர்களுக்கிடையே ஆட்டிறைச்சியை உண்பது நல்லதா கெடுதலா என்ற விவாதம் வேறு எழுந்துவிடும். பௌத்தர்களோ தாம் கொல்லவில்லை; ஆனால் பிறர் கொன்று தந்ததை உண்டால் தவறில்லை என்று வாதிடுவார்கள். சமணர்கள் அதனையும் பாவம் என்று ஒதுக்குவார்கள். ஆனால் பௌத்தர்கள்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கள்ளத்தனமாகப் பிறர் அறியாத வகையிலே தங்கள் பள்ளிகளுக்கு அருகில் இருந்த நீர் நிலைகளில் மீனைப் பிடித்து உண்பார்களாம்.

கழிக்க ரைப்படு மீன்கவர் வார் (3.305.10)

கழி அருகு பள்ளியிட மாகஅரு மீன்கள் கவர் 'வாரும் (3.340.10)

சமணர்களோ வெளிப்புறத்தில் 'பல் அறம் காட்டி வரும் ஆடெலாம் கவர்கையர்' *(3.297.5)* என்று தங்கள் பள்ளிக்கருகில் மேயவரும் ஆடுகளைக் கவர்ந்து விடுவார்கள் என்கிறார் சம்பந்தர்.

சமணப் பெண் துறவிகளைக் 'குரத்திகள்' என்பார்கள். ஆண்கள் அவர்களை நன்கு நடத்தவில்லை என்பது சம்பந்தருடைய மற்றொரு குற்றச்சாட்டு. 'நாளும் குரத்திகள் பேணார்' *(1.72.10)* என்கிறார். சமணர்களின் கொள்கைப்படிப் பெண்ணாய்ப் பிறந்தவர்கள் நேரடியாக நிர்வாணமடைய முடியாது. நோற்றுத் தவமிமிருந்து ஆணாகப் பிறந்த பின்தான் நல்லகதி அடையமுடியும். இதுபற்றிச் சமண பௌத்தர்களுக்கிடையே எழுந்த சச்சரவுகளை நீலகேசி *(244, 245, 323)* விவரிப்பதைக் காண்கிறோம்.

மேலும் சமணரும் பௌத்தரும் தங்களது உடம்பினைக் கடுமையாக வருத்திக் கொண்டு செய்யும் தவத்தால்மட்டும் பயனில்லை என்பது சம்பந்தரின் கருத்து. 'வேர் (வியர்வை) வந்துற மாசு ஊர்தர வெயில் நின்று உழல்வாரும்' *(1.10.1.0);* என்றும் 'வேழம்' என்றும் நோய் வரும்வரையில் 'வெயிலே துற்றித் திரிவாரும்' *(1.45.11)* என்றும் அவர்களது வருத்தும் செயல்களைச் சம்பந்தர் குறிப்பிடுகிறார். இப்படியெல்லாம் செய்யும் தவச் செயல்களை அவர் 'பொய்த்தவம்' *(1.39.10)* என்றே கொள்கிறார்.

இத்தகைய பௌத்த சமணர்கள் தங்கள் சமயங்களின் அடிப்படையான நெறிமுறைகளை மறந்து விட்டார்கள். அரசியல் அதிகார பலம் தரும் போதையால் மனம் பேதலித்துத் தங்கள் கொள்கைகளுக்கே கெட்ட பெயரைத்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தேடித் தந்தார்கள். சம்பந்தர் இவர்களோடுதான் மாறுபட வேண்டியதாயிற்று.

எல்லாம் கடவுள் செயல்; சமணரும் பௌத்தமும் தோன்றியதுகூட இறைவனின் திருவுள்ளம் போலும் என்று அவர் நினைத்தார். ஏதோ ஒரு காரணத்திற்காகத்தான் அவர்களும் படைக்கப்பட்டிருக்கிறார்கள். அதனால்தான் அவர்கள் உண்மையைத் தெளியாமல் மயங்குகிறார்கள். 'தன்னை நன்று அறியா வகை மயக்கி' (1.132.10) அவர்களைத் தடுமாறச் செய்தவனும் இறைவனே.

> விதியிலாதார் வெஞ்சமணர் சாக்கியர் என்றிவர்கள்,
> மதியிலாதார் என் செய்வாரோ வலிவலம் மேயவனே (1.50.10)

என்று அவர்களது நிலைக்கு இரங்குகிறார். நல்ல பாக்கியம் செய்யாத அவர்கள் இம்மை இன்பத்தையும் நுகராமல் தங்களை வருத்திக் கொள்கிறார்கள். மறுமை இன்பமும் கிடைக்க வழியில்லை. 'பாக்கியம் இன்றி இருதலைப் போகமும் பற்றும் விட்டார்' (1.116.10) என்கிறார்.

அவ்வாறு அவர்களது நிலைக்கு இரங்கும் சம்பந்தர் தன் அடியார்களை நோக்கிக் - கோபித்துக் கொள்ளாதீர்கள் ('வெகுளேண்மின்' - 2.147.9) என்றும் அவர்களைத் துன்புறுத்த வேண்டாம் ('வாதியா வம்மின்' - 2.148.10) என்றும் வற்புறுத்துகிறார். ஏனென்றால் அவர்களும் கடவுளின் படைப்பே. அதனால்தான் மதுரையில் அவர்களோடு வாதிடுவதற்குச் செல்வதற்கு முன்னால் ஆலவாய்ப் பெருமானிடம் 'வாதில் வெல்லத் திருவுளமே' (3.366-1-10) என்று வேண்டிக் கேட்டுக் கொள்கிறார் சம்பந்தர்.[20]

இந்தப் பகுதி நிறைவடைவதற்கு முன்னால் ஒன்றைத் தெளிவுபடுத்தவேண்டும். மதுரையில் வாதத்தில் தோற்றுப் போன சமணர்கள் கழுவேறினார்கள் என்று ஒரு நிகழ்ச்சி கூறப்படுகிறது. சம்பந்தர் ஓரிடத்தில்கூட அதைப் பற்றிக் குறிப்பாகக்கூடச் சொல்லவில்லை. சுந்தரரும் கூறவில்லை. நம்பியாண்டார்தான் இதுபற்றி முதலாகப் பேசுகிறார்.

ஆனால் சேக்கிழார் சம்பந்தர்தான் சமணர் கழுவேறு வதற்குப் பொறுப்பானவர் என்று சொல்லவேயில்லை. அவர்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சம்பந்தரது பாடல்களில் தோய்ந்தவர்; அவரது ஆழ்ந் திருக்கும் கவியுள்ளத்தை நேராகத் தெரிந்து கொண்டவர். சம்பந்தரது அன்பு உள்ளத்தை அறிந்து கொண்டே சேக்கிழார் சமணர்கள் கழுவேறியற்குச் சம்பந்தரை நேரடியாகப் பொறுப்பேற்கச் செய்ய அவரது மனம் ஒப்புக் கொள்ளவில்லை. அந்தக் கொடுமையான நிகழ்ச்சி நடந் திருக்குமேயானால் யுவான் சுவாங் அதுபற்றி உறுதியாகக் கேள்விப்பட்டிருப்பார்; தன் நூலில் குறிப்பிட்டிருப்பார். ஆனால் அவர் அவ்வாறு குறிக்கவில்லை.

ஒட்டக்கூத்தர் (12ஆம் நூற்றாண்டு) எழுதிய **தக்கயாகப் பரணியில்** கழுவேறுதல் நிகழ்ச்சி பற்றி 53 பாடல்களில் விரிவாகக் கூறுகிறார். இந்தப் பகுதிக்கு அவர் இட்டபெயர் "அமணர் கழுமிசை கொள்வது" (170) என்பதாகும். பழைய உரை ஆசிரியர் இதற்கு எழுதிய உரையில் சமணர்கள் தாமாகவே முன்வந்து கழுவில் ஏறினார்கள் என்று கூறுகிறார். மேலும் பிள்ளையார் சமணர்களைக் கொல்லவில்லை எனவும் தாங்கள் அவருடைய வாதத்தில் தோற்று போனதைப் பொறுக்க மாட்டாமலும், தாங்கள் ஏற்கனவே செய்த சபதத்தாலும் தாமாகவே வந்து கழுவில் ஏறினார்கள் என்றும் உரைகாரர் கூறுகிறார்.

சேக்கிழார் இந்தக் கட்டத்தில் மேலும் ஒன்றை உறுதியாகச் சொல்கிறார். அதன்படிச் சம்பந்தருக்குச் சமணர்களிடம் எந்த வெறுப்பும் இல்லை ('இகல் இலர்') (புராணம் 854). ஆனால் அதே தருணத்தில் அரசநீதியில் அவர் தலையிட விரும்பவில்லை. சமணர்கள் அடியார்கள் தங்கியிருந்த மடத்திற்குத் தீ வைத்துக் கொல்ல முயன்றிருக் கிறார்கள். நீதிக்குப் புறம்பான அந்தச் செயலுக்கு அரசன் நீதி வழங்கினான். அதில் சம்பந்தரது தூண்டுதலோ தலையீடோ பொறுப்போ ஏதுமில்லை என்பது தெளிவாகிறது.

பின் வந்த நூற்றாண்டுகளில் சமயக் காழ்ப்புணர்ச்சி யினால் மாறுபட்ட கருத்துடையவர்களைத் துன்புறுத்தும் வழக்கம் நம் நாட்டில் மட்டுமல்ல உலகில் பிற இடங்களிலும் புகுந்து விட்டது. ஒருவருக்கொருவர் பகைத்துத் தீமை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

விளைவிப்பதை யாரும் தீங்கென்று நினைக்கவில்லை. இயல்பானதுதான் என்று ஏற்றுப் பழக்கிக் கொண்டார்கள். இத்தகைய கால கட்டத்தில் தான் சமணர்களைக் கழுவில் ஏற்றிக் கொன்றுவிட்டார்கள் என்ற கதை பரப்பப்பட்டிருக்க வேண்டும்.

5.7 சம்பந்தரின் உலகளாவிய பார்வை

சம்பந்தரின் அகன்ற பார்வையில் அண்ட சராசரங்கள் எல்லாம் அன்பில் நெகிழ்ந்து இறைவனை உணர்கின்றன. 'சராசரங்களையெல்லாம் சிவம் பெருக்கும் பிள்ளையார்' என்று சேக்கிழார் கூறுவது இதனைத்தான். எங்கேயும் யாதாகிப் பிறந்திடினும் தன்னிடம் அன்பு கொண்டவர்களை இங்கே என வந்து ஆதரிப்பவன் இறைவன்.

அவருடைய பாடல்களில் மனிதர்கள் மட்டுமல்ல விலங்குகளும் பறவைகளும் கூட அவனது அன்பு வட்டத்தில் வந்து ஆட்கொள்ளப்படுவதைப் பார்க்கிறோம். ஆறுகள் கூட வந்து அவன் அடி வருடுவதைக் காண்கிறோம். முத்தாறு ஓர் அடியாராகச் சம்பந்தருக்குக் காட்சி தருகிறது.

கொத்தார் மலர் குளிர்ந்து அகில் ஒளிர் குங்குமம் கொண்டு
முத்தாறு வந்து அடிவீழ்தரும் முதுகுன்று... (1.12.1)

என்று பாடுகிறார் சம்பந்தர்.

இந்த உலகளாவிய உணர்வு வந்து வாய்ப்பதற்கு வேற்றுமைகளும் மாறுபாடுகளும் அகன்றுவிட்ட மனநிலை ஏற்படவேண்டும். அதற்கு அடிப்படை இறைவன்மீது கொண்ட ஈடில்லாத அன்பு. சம்பந்தருக்குத் தமிழும் வட சொல்லும் இசையும் தாளமும் மிகவும் நெஞ்சிற்குகந்தவை. ஏனெனில் அவற்றைக் கடவுளின் வடிவமாகவே கண்டு களித்திருக்கிறார் அவர். அதனால்தான் அவரது மனம் குறுகவில்லை; அகன்று அகன்று அப்பாலுக்கு அப்பாலாய்ச் சென்று திளைக்கின்றது.

இறைவனைத் துதித்துணருவதற்கு எல்லா மொழி களுக்கும் தகுதியுண்டு என்பது அவரது கருத்து.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பொதுவாக, வடமொழியைத் தேவர்கள் உகந்த மொழியாகக் கருதுவதுண்டு. ஆனால் சம்பந்தர் அதே தேவர்கள் எல்லா மொழிகளிலும் பாடி இறைவனைத் துதிக்கின்ற பாங்கினைக் காட்டுகிறார். 'எல்லா மொழியாலும் இமையவர் தொழுது ஏத்த' (1.85.1) என்பது அவரது திருமொழி.

வேதவனத்தில் பெண்கள் இன்தமிழ் பாட வேறு வேறு திசைகளிலிருந்து வந்த ஆடவர்கள் அவர்களோடு சேர்ந்து கொண்டு பாட்டையும் தமிழையும் அனுபவிக்கிறார்களாம்.

'ஊறுபொருள் இன்தமிழ் இயற்கிளவி
தேரும்மட மாதருடன்ஆர்
வேறுதிசை ஆடவர்கள் கூறஇசை
தேரும்எழில் வேதவனமே' (3.334.4)

திருப்புகலூரில் தென் சொல், வட சொல்லில் தேர்ந்தவர்கள் இசைபாடித் தங்கள் நெஞ்சத்திருளை நீக்கிக் கொள்கிறார்கள் என்பதை

தென்சொல் விஞ்சமர் வடசொல் திசைமொழி
எழில்நரம்பு எடுத்துத்
துஞ்சு நெஞ்சிருள் நீங்கத் தொழுதெழு தொல் புகலூர்...
(2.228.7)

என்று விவரிக்கிறார்.

தான் வணங்கும் இறைவனைப்போல உலகில் வேறுபட்ட சமயங்களில் உள்ளவர்களும் தொழுகிறார்கள் என்று சம்பந்தர் திண்ணமாக நம்புகிறார். 'நாடிய தேவரெல்லாம் நயந்தேத்தும் நன்னலத்தான்' (3.317.10) 'தேடிய தேவர் தம்மால் இறைஞ்சப்படும் தேவர்பிரான்' (3.318.10) என்று தம்மிறைவனைக் காட்டுகிறார்.

குறிப்புகள்

1. சிலப்பதிகாரம், 'கடலாடுகாதை' வரி. 35. அடியார்க்கு நல்லார் உரை, பக். 188
2. மேற்படி, 'அரங்கேற்றுக் காதை', அடியார்க்கு நல்லார் உரை, பக். 105
3. 'யாழ்நூல்', 'பண்ணியல்', பக்கம், 154.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

4. மேற்படி பக். *152*

5. 'நேரிசை' ஆளத்தியாக, தாளக் கட்டில்லாமல் 'சுதாங்கமாக'ப் பாடப்படுவது வழக்கம். எஸ். ராமநாதன், **தேவாரப் பண்ணிசை**, கலைமகள் இசைக்கல்லூரி, சென்னை, *1970*, பக். XI.

6. காஞ்சிபுரம் நயனாப் பிள்ளை இங்கு குறிப்பிடப்படும் 'காந்தாரம்' என்பது 'காந்தாரம் ஸ்வரம்' என்பதுதான் என்றும் பண் 'காந்தாரப் பண்' தான் என்றும் குறிப்பிட்டிருப்பதாக எஸ். இராமநாதன் கூறுகிறார், **தேவாரப் பண்ணிசை**, பக். XIV.

7. க. வெள்ளை வாரணன், **'பன்னிரு திருமுறை வரலாறு'**, முதற் பகுதி, பக். *480*.

8. **சிலப்பதிகாரம்**, "கடலாடு காதை", அடியார்க்கு நல்லார் உரை, பக். *188*.

9. T. Virabadra Mudaliar, "Lord Sambandha and An unknown Tamilian Poetry", **The Light of Truth** or Siddhanta Deepika, monthly journal, Vol. II, no. 5, Madras, September 1898, p. 114.

10. T.P. Meenakshi Sundaran, **'A History of Tamil Literature'**, Annamalai University, 1966, pp. 74-75

11. **Ibid**; p. 25

12. **சித்தாந்த தீபிகை**, Vol. II, III and IV

13. **The Hindu**, Madras, 27.12.1978

14. **The Holy Bible**, New Testament, St. Mathew, Chapter 5.

15. சமணர்கள் 'ஸ்ரவணர்' எனப்படுபவர்கள். இந்தச் சொல்லிலிருந்துதான் 'சமணர்', 'அமணர்' என்ற தமிழ்ச் சொற்கள் தோன்றியிருக்கின்றன. சமணர்களைப் 'பிண்டியர்' என்றும் சொல்வதுண்டு. மகாவீரர் இருந்து தவம் செய்த மரம் தான் பிண்டி என்பது. பௌத்தர்கள் பெரும்பாலும் 'பௌத்தர்கள்' என்றும் 'போதியார்' என்றும் அழைக்கப்படுவார்கள். 'போதி' என்பது 'போதி மரத்தைக் குறிப்பது. தேரவாத புத்தர்கள் 'தேரர்' எனப்படுவார்கள். புத்தரது போதனைகளை மலர்க் கூடைகளாக, பிடகங்களாகக் கொள்வதுண்டு. எனவே

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பௌத்தர்களுக்குப் 'பிடகர்' என்ற பெயரும் இருக்கிறது. அவர்களைச் 'சாக்கியர்' என்றும் அழைப்பதுண்டு.

16. C.V. Narayana Ayyar, **Origin and Early History of Saivism in South India**, p.p. 286,287.

17. **Ibid**; pp287-30, T.P. Meenakshi Sundaran, **Camaṇat tamiḻ, Ilakkiya Varalāṛu**, Kalaikkatir Publication, Coimbatore, Feb. 1961, p. 9

18. E.C. 11, No. 254, p. 111; No. 258, p. 117.

19. U.S.V. Raghavan, **Yuan - Chwang**, *மாணிக்கவாசகர் நூலகம், மதுரை, ஜன: 1978, பக். 171.*

20. பெரிய புராணத்தின் வடமொழி பெயர்ப்பாக **உபமன்யு பக்த விலாசம்** என்ற நூல் கி.பி. 1532 இல் தோன்றி யிருக்கிறது. இந்த நூல் ஓர் அரிய நிகழ்ச்சியைக் கூறுகிறது. அதன்படி ஞானசம்பந்தர் திருக்கோயிலூர் வீரட்டா னேச்சுவரரை வணங்கிய பிறகு பெண்ணை ஆற்றங் கரையிலே ஓர் ஆலயத்தைக் காண்கிறார். அதனைச் சிவாலயம் என்றே உணர்ந்து வணங்குகிறார். ஆனால் அது ஓர் சமண ஆலயம் என்று மக்கள் குறிப்பிட்டார்கள். இருந்தாலும் அதனையும் சம்பந்தர் வணங்கினாராம். அதன் பின்னால் அந்த அருகர் சிலை லிங்கமாகத் தோற்றம் தந்தது. இந்தச் செய்தி தற்பொழுது பெரிய புராணத்தில் காணப்படவில்லை என்றாலும் உபமன்யு பக்த விலாசம் இதனை எடுத்துக் கூறுகிறது. சம்பந்தரின் கண்களில் நிலவிய சமபாவம் ஜீனரையும் சிவனாகக் கண்டுணர்ந்தது என்ற நாம் கருதலாம் அல்லவா?
சான்று : டாக்டர் இரா. நாகசாமி, **பொய்யிலிமாலை**, பிருகதீஷ் பதிப்பகம், சென்னை, 1996.



In Public domain. Digitization Muthulakshmi Research Academy

6

நிறை மங்கலம்

திருஞானசம்பந்தர் ஒரு மாபெரும் கடலாக நம் முன் காட்சி தருகிறார். தமிழ், வடசொல், வேதம், வேதாந்தம், ஆகமம், சித்தாந்தம், புராணம், இசை, நாடகம், கலை போன்ற புண்ணிய நதிகள் அந்தப் பெருங்கடலில் கலக்கின்றன. அந்த ஆழ்கடலில் சிவஞான அலைகள் தோன்றிச் சராசரங்களை யெல்லாம் சிவமயமாகத் திகழச் செய்கின்றன.

சேக்கிழாரின் சொற்படிப் 'புண்ணியப் பதினாறு ஆண்டுகளே' இந்த மண்ணில் நல்ல வண்ணம் வாழ்ந்த அவரது வாழ்க்கை வானவில்லைக் காட்டிலும் வண்ணப் பொலிவோடு திகழ்ந்திருக்கிறது.

தேனிசையோடு கலந்த தெய்வக் கவிதைகளைப் பாடிய கலைஞர் சம்பந்தர். அந்தப் பாடல்களையே ஆதாரமாகக் கொண்டு பார்க்கையில் அவர் அருள் பழுத்த சமயத் தலைவர்; சிவம் கனிந்த தத்துவ நாயகர்; சமுதாய நலன் கருதிய சீர்திருத்தக்காரர்; வையகமெங்கும் அன்பும் அமைதியும் தழைத்து ஓங்கத் தோன்றிய தெய்வத்தின் திருவருளாளர்; 'திருந்தடியை மறக்குமாறு இல்லாத' உணர்வு நிறைந்தவர் என்றெல்லாம் அவரது பல வண்ணங்களைக் கண்டு வியக்கின்றோம்.

ஒவ்வொரு பொருளும் ஒவ்வொரு செயலும் இறைவனின் திருவருள் என்பதை அனுபவ பூர்வமாகக் கண்ட சம்பந்தர் 'வயஞானம்' பெற்றவராய் இசையாலும் கவிதையாலும் இறைவனைத் துதித்தார்; அதுவே அவருக்கு 'உயர் ஞானம்' அளித்தது. அவனின்றித் தானில்லை என்று

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தன் ஒளிமிக்கு உயர்ந்தவராய்த் 'தன் இயல்பு இல்லாதவராய்' வாழ்ந்தவர்.

தான் 'பதிஞான ஞான முனிவனாக' விளங்குவதைச் சம்பந்தர் நன்கு உணர்ந்தவர். இருப்பினும் உலகு, உயிர்களை அவர் ஒதுக்கவில்லை. அவற்றை 'அட்ட மூர்த்தமாக' உணர்ந்து மதித்து ஏற்றுக் கொண்டார்.

முழுமுதற்பொருள் என்றும் மாறாதது ('மாறிலி'); என்றும் அழியாதது ('கேடிலி'). அம்மெய்ப்பொருள் தன் 'சக்தி'யோடு கூடி உலகு உயிர்களைத் தோற்றுவிக்கிறது. அது வெறும் விளையாட்டில்லை; அருள்தான் அடிப்படைக் காரணம். 'அருள் காரணங்கள் வருவான்' என்று தன் அசைக்கமுடியாத நம்பிக்கையை ஆணித்தரமாகச் சொல்கிறார் சம்பந்தர்.

உயிர்கள் பல. ('பல்லுயிர்'). அவை மலத்தால் மறைக்கப்பட்டு அணுவாகக் குறுகி நின்று பதியாகிய இறைவனோடு இணையமுடியாமல் தவிக்கின்றன. அம்மலம் ஓர் 'ஊனத்து இருள்;' அனாதியாக உயிர்கள் அதனைப் பற்றியிருப்பது, 'பாச வல்வினை.' அதனால் 'பிணிபடு கடல் பிறவிகள்' கரையற்றுக் காரண காரியத் தொடர்பாகி வருகின்றன. உயிர்கள் தங்களைத் தங்களது உடம்பாகவே கருதிக் கொள்கின்றன. கடவுளையும் காணவில்லை. அப்பொழுதுதான் இறைவனது அருள் வந்து வாய்க்கின்றது. அதன் பயனாய் 'தாம் உடம்பில்லை' என்று தன் உண்மை நிலையை உயிர்கள் உணர்கின்றன. இறைவனையும் உணரத் தலைப்படுகின்றன. சரியை, கிரியை, யோகம், ஞானம் போன்ற நெறிகள் அதற்குத் துணை செய்கின்றன.

'ஆடல் நெறி,' 'பாடல் நெறி,' 'வேட நெறி' என்ற முப்பெரும் நெறிகளையும் சம்பந்தர் நமக்கு எடுத்துக் கூறுகிறார். தம்முடைய திருக்கடைக் காப்புச் செய்யுள்கள் வழியாகத் தம் பாடல்களைப் - பதிகங்களைப் படிப்பதும் ஒரு நெறி என்றும் அதனால் பல்வேறு ஆன்ம வளர்ச்சிகள் ஏற்படுகின்றன என்றும் சம்பந்தர் தெளிவாக எடுத்துரைக் கிறார். நம்பியாண்டார் 'பதிகப் பெருவழி காட்டினான்'

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

என்று சம்பந்தரைப் போற்றித் துதிக்கிறார். இந்த நூலில் அதுபற்றிய விரிவான விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

கயிலை மலையைப் பெயர்க்க முயன்ற இராவணன் கதையும் மண்ணைப் பிளந்தும் விண்ணில் பறந்தும் மாலும் மலரவனான பிரமனும் இறைவனுடைய திருவடியையும் திருமுடியையும் காண மாட்டாமல் தள்ளாடிய கதையையும், இறைவனை முனைப்பினால் அறியமுடியாது - அன்பின் கசிவினால்தான் அடையமுடியும் என்ற கருத்தையும் சம்பந்தர் பதிகம்தோறும் எடுத்துச் சொல்கிறார்.

சம்பந்தரது இறைஅன்பு வெறும் உணர்ச்சி ஆரவாரம் இல்லை. உயர் ஞானத்தால் வயப்பட்டது அந்த அன்பு. இறைவனை ஞானத்தால் உணர்ந்ததால் தன்னை 'ஞானன்' என்றே அழைத்துக் கொள்கிறார் அவர். ஆனால் ஞான மயமான இறைவன் அன்பாகவும் அழகாகவும் விளங்குகிறான். அவனை அன்பால் தொழலாம்; அவனது அழகை ஆறப் பருகலாம். சம்பந்தருடைய அகத்துறைப் பாட்டுகள் அந்த நிலையின் வெளிப்பாடுகளேயாம்.

உயர்ந்த மெய்ஞ்ஞான உண்மைகளைச் சம்பந்தர் புராணக் கவிதைகளைக்கொண்டே விளக்குகிறார். பேசமுடியாத ஒன்றை வெளிப்படுத்துவதற்குப் புராணக் கதைகளே எளிமையான சாதனங்களாகி விடுகின்றன.

அவரது வாழ்வே ஒரு சமயமாக விளங்குகிறது எனலாம். ஊர் ஊராகச் சென்று கோயில்களில் பாடி மக்களோடு மக்களாகக் கலந்து விடுவதே அவரது சமயநெறி. உலகபந்தம் நீங்காதவர்களுக்கு உய்தி (விமோசனம்) இல்லை என்று வருந்தவேண்டாம்; இல்லறத்தில் இருந்துகொண்டே இறைவனது ஆரூர் தொழுது உய்யலாம். 'அஞ்சாதே நெஞ்சே' என்ற கருத்து விளங்க 'தந்தைதாய் தன்னுடன் தோன்றினார் புத்திரர் தாரம் என்னும், பந்தம் நீங்காதவர்க்கு உய்ந்து போக்கு இல்லென்ப் பற்றினாயே, ...எந்தை ஆரூர் தொழுது உய்யலாம் மையல் கொண்டு அஞ்சல் நெஞ்சே' என்று உறுதி அளிக்கிறார். அந்த அடிப்படையில் ஆலயவழிபாடு ஏற்றம் பெற்றது. இசையும் தமிழும் தெய்வநிலை பெற்றன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கோயில்கள் வளர்ச்சியுற்றன. அவை மக்களின் சமய சமுதாய நலனுக்காக மிகப் பெரிய தொண்டினை ஆற்றின.

உலகம் இறைவனது வடிவம் என்று சம்பந்தர் உணர்ந்ததால் உலகு, உயிர்கள் அவரது அன்பு வட்டத்துள் இடம் பெற்றன. மாறுபட்ட சில பௌத்த, சமணத்தாரும் இறைவனுடைய படைப்பே என்று கருதி அவர்கள்மீதும் அன்பும் இரக்கமும் கொண்டார் சம்பந்தர்.

ஒரு சில குறிப்பிட்ட சமயக் கோட்பாடுகளுக்குள் மட்டும் சம்பந்தரைச் சிறைப்படுத்த முடியாது. அவருடைய பாடல்கள் பல கோட்பாடுகளுக்கு ஊக்கமும் உரமும் தருகின்றன. நம்பியாண்டார் நம்பி தமது திருத்தொகையில் *(29)* சம்பந்தரைப் 'பெருவார்த்தை தானுடைய பிள்ளை' என்று மிகப் பெரிய வார்த்தையால் அவரது மேலான நிலையை எடுத்துக் கூறுகிறார்.

சிவஞானமுனிவர் தம்முடைய மாபாடியத்தின் பாயிரத்தில் *(பக்.5)*, 'பெரும்பெயர்,' 'ஒரு வார்த்தை' என்ற சொற்றொடர்களை மகா வாக்கியங்களோடு ஒப்பிடுகிறார். 'எனவே நம்பியாண்டார் 'பெரு வார்த்தை' என்று கூறுவதும் மகா வாக்கியத்தை ஒத்தது அது என்று கொள்வதும் பொருத்தமானதேயாகும்.

மேலும் 'தத்வமசி,' 'அகம் பிரும்மாஸ்மி' போன்ற மகா வாக்கியங்களுக்கு வைதிக சமயத்தார்கள் தங்கள் தங்கள் கோட்பாடுகளுக்கு ஏற்றாற்போல விளக்கம் கண்டிருக் கிறார்கள்; அதுபோல பல கோட்பாடுகளுக்கும், குறிப்பாக 'வேதாந்தம்,' 'சித்தாந்தம்' ஆகியவற்றுக்கும் சம்பந்தரது பாடல்களில் விளக்கம் காண முடியும்.

எல்லையறு பரம்பொருளைச் 'சிவன் எம் இறை' என்று ஏற்றித் துதிப்பவர் சம்பந்தர். அந்த அளவில் அவரது சமயத்தைச் 'சைவம்' என்றே எடுத்துக் கொள்ளலாம். ஆனால் அதற்குள்ளே இருக்கும் வேறுபாடுகளை அவர் பொருட் படுத்துவதில்லை. சிவனைத் தொழுபவர்கள் எல்லோரையும் அவர் தழுவிச் செல்கிறார். சம்பந்தருடைய சிவன், சமயத்தின் கடவுள் மட்டுமல்ல; அவரது மெய்ஞ்ஞானத்தின் முழுமுதற்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பொருளும் ஆவான். அவரைப் பொறுத்தவரையில் சிவனும் முழுமுதலும் ஒன்றேதான்; மெய்ம்மையின் இரு பக்கங்கள் தான். சிவம் என்பது அன்பு; அந்த அன்பு அன்னையோடு இணைந்த அப்பனாக எங்கும் நீக்கமற நிறைகிறது. அந்த அன்பின் இணையை ஏற்றுத் துதிப்பதில் மனிதனின் பெருவாழ்வும் பேருலக வாழ்வும் அடங்கியுள்ளன.

மண்ணின் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணின் நல்ல கதிக்கு யாதும் ஓர் குறைவில்லை
கண்ணில்நல் லஃதுறும் கழுமல வளநகர்ப்
பெண்ணில்நல் லாளொடும் பெருந்தகை இருந்ததே. (3.282.1)

சம்பந்தரின் இந்த வாய்மொழி வையத்தை வாழ வைக்கும் மந்திரமாகவும் மறைப்பொருளாகவும் விளங்கு கிறது.



In Public domain. Digitization Muthulakshmi Research Academy

துணை நின்ற நூல்கள்

(i) தேவாரப் பதிப்புகள்

சபாபதி முதலியார்:

(1) திருஞானசம்பந்தர் அருளிய தேவாரம் – நிரஞ்சன விலாசம் பிரஸ், சென்னை. *1863.*

(2) தேவாரப் பதிகங்கள், பாஸ்டர் & கோ, சென்னை, *1877*

திருசிற்றம்பலஞானியார், திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரப்பதிகத் திருமுறைகள், சென்னை, *1879*

ஞானசம்பந்த பிள்ளை, மூவர் அருளிய தேவாரம், திருப்பனந்தாள் மடம், கலா ரத்னாகர பிரஸ், *1881*

செந்தில்வேலு முதலியார், தேவாரம், திருப்பனந்தாள் மடம், சென்னை, *1893*

அப்புப்பிள்ளை, தேவாரம், மெட்ராஸ் திராவிட புத்தக டிப்போ, சென்னை, *1907*

சுவாமிநாத பண்டிதர், மூவர் அருளிய தேவாரத் திருமுறை, சைவ வித்யா பானு பிரஸ், சென்னை, *1911*

சண்முக முதலியார், சுந்தரமூர்த்தி தேவாரப் பதிகங்கள், சென்னை, *1913*

நமசிவாய முதலியார், V., மூவர் தேவாரத் திருப்பதிகங்கள், நிரஞ்சன விலாசம் பிரஸ், சென்னை, *1917*

கயப்பாக்கம் சதாசிவ செட்டியார்:-

(i) தேவாரப் பதிகங்கள்:– I, II, III திருமுறைகள், தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, *1917.*

(ii) திராவிட வேதத்திரட்டு:– அல்லயன்ஸ் கம்பெனி, சென்னை, *1927.*

(iii) தேவாரப் பதிகங்கள், IV, V, VI திருமுறைகள், கழகம், *1927, 1971.*

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சைவ சித்தாந்த சமாஜம்:-

(i) தேவாரம், IV, V, VI திருமுறைகள், சென்னை *1930, 1941*

(ii) தேவாரப் பதிகங்கள், (திருஞானசம்பந்த சுவாமிகள்) சென்னை, *1931, 1950.*

பழனியப்பப் பிள்ளை, தேவாரத் திருமுறைகள், அண்ணாமலை பல்கலைக்கழகம், அண்ணாமலை நகர், *1943, 44.*

வினாயக முதலியார் A., தேவாரத் திருப்பதிகங்கள் முதல் பகுதி, காசி மடம், திருப்பனந்தாள், *1943.*

இளமுருகனார், தேவாரம் அடங்கல் முறை, I & II பகுதிகள், திருவருளகம், சென்னை, *1953.*

குமரகுருபரன் பிள்ளை, T.M., திருஞானசம்பந்தர் தேவாரம், திருப்பனந்தாள் மடம், ஸ்ரீவைகுண்டம், *1961, 1968.*

திருவாவடுதுறை ஆதீனம், தேவாரம், IV, V, VI திருமுறைகள், *1982.*

கோபால அய்யர் T.V. & de Francois Gros:

(i) தேவாரம் – ஞானசம்பந்தர், De, L' Institut Francais de Indologie No. 68-1; பாண்டிச்சேரி, *1984.*

(ii) தேவாரம் – அப்பரும் சுந்தரரும், No. 68-2, பாண்டிச்சேரி, *1985.*

சைவ சித்தாந்த பெரு மன்றம், திருஞானசம்பந்த சுவாமிகள் இயற்றிய தேவாரம், முதல் திருமுறை, சென்னை, ஜூலை *1985.*

காசிமடம் வெளியீடு, திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரம் (தலமுறை) திருப்பனந்தாள், *1996.*

கா்சிமடம் வெளியீடு, திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம் (தலமுறை) திருப்பனந்தாள், *1995.*

(ii) தமிழ் நூல்கள்

ஐயடிகள் காடவர்கோன், க்ஷேத்திரத் திருவெண்பா, பதினோராம் திருமுறை, திருப்பனந்தாள் மடம், திருப்பனந்தாள், *1950*

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அண்ணா சுப்பிரமணிய அய்யர் (ஆசிரியர்), நாரத பக்தி சூத்திரங்கள், ஸ்ரீ இராமகிருஷ்ண மடம், சென்னை, 1977.

அப்பாசாமி ஓதுவாமூர்த்தி, தேவாரப் பண் – சுர அமைப்பு, கான வித்யா பிரஸ், ஸ்ரீவைகுண்டம், 1928.

அருள்நந்தி சிவாசாரியர், 'சிவஞான சித்தியார்', மெய்கண்ட சாத்திரம் பதினான்கு, பகுதி I, கழகம், சென்னை, 1969,

சேக்கிழார்:–

(i) திருத்தொண்டர் புராணம் அல்லது பெரிய புராணம் Vol. IV & V (V.K. சுப்ரமணிய முதலியார் உரையுடன்); கோவைத் தமிழ்ச்சங்கம், கோயம்புத்தூர், 1949 & 1950.

(ii) பெரிய புராணம் அல்லது திருத்தொண்டர் புராணம் குமரகுருபரன் பிள்ளை (பதிப்பு); ஸ்ரீ வைகுண்டம், 1964.

இரத்தின சபாபதி V.:–

(i) திருஞானசம்பந்தர் – ஓர் ஆய்வு – பகுதிகள் I & II, சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை, 1981, 1982.

(ii) சுந்தரர் – ஓர் ஆய்வு – பகுதி I, சென்னைப் பல்கலைக்கழகம், 1986.

காரைக்கால் அம்மையார், (அவரது எல்லாப் பாடல்களும்) பதினோராம் திருமுறை, திருப்பனந்தாள் மடம், திருப்பனந்தாள் 1950.

மாங்குடி மருதனார், "மதுரைக்காஞ்சி" – பத்துப்பாட்டு உ.வே. சுவாமிநாத அய்யர் (பதிப்பு), சென்னை, 1950.

மெய்கண்டார், "சிவஞானபோதம்" – சிவஞான முனிவர் பேருரையுடன், – 'மெய்கண்ட சாத்திரம் பதினான்கு' – பகுதி I, கழகம், சென்னை, 1968.

முருகவேள் – "தமிழ்ஞான சம்பந்தர்" – திருவள்ளுவர் செந்தமிழ் நெறிக் கழகம், சென்னை, 1955.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நம்பியாண்டார் நம்பி, (அவரது அனைத்துப் பாடல்களும்) பதினோராம் திருமுறை, திருப்பனந்தாள் மடம், திருப்பனந்தாள், 1950.

நம்மாழ்வார், "திருவாய்மொழி", 'நாலாயிர திவ்வியப் பிரபந்தம்' - V.N. தேவநாதன் (பதிப்பு), சென்னை, 1971.

இளவழக்கனார், "சம்பந்தரும் சமணரும்" - செந்தமிழ்ச்செல்வி, சிலம்பு 6, சென்னை, 1928-29, பக்கம் 419.

ஒட்டக்கூத்தர், 'தக்கயாகப்பரணி', மூலமும் உவே. சுவாமிநாத ஐயர் பழைய பேருரையுடன் (பதிப்பு), உ.வே.சா. அய்யர் நூலகம், சென்னை, 1960.

பட்டினத்துப் பிள்ளையார், "திருக்கழுமல மும்மணிக் கோவை" - பதினோராம் திருமுறை - திருப்பனந்தாள், 1950.

பெருந்தேவனார் (பாரதம் பாடிய):-

(i) புறநானூற்றுப் பாயிரப்பாடல், (உ.வே.சா. அய்யர் (பதிப்பு), சென்னை, 1935.

(ii) அகநானூற்றுப் பாயிரப்பாடல், S. ராஜம், சென்னை, 1957.

(iii) பதிற்றுப்பத்துப் பாயிரப்பாடல், S. ராஜம், சென்னை, 1957.

(iv) ஐங்குறுநூறு - பாயிரப்பாடல், S. ராஜம், சென்னை, 1957.

பெருங்கௌசிகனார், "மலைபடுகடாம்", பத்துப்பாட்டு, உ.வே.சா. ஐயர் (பதிப்பு), சென்னை, 1950.

பெரியாழ்வார், "திருப்பல்லாண்டு" - நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் - V.N. தேவநாதன் (பதிப்பு), சென்னை, 1971.

பொய்கையாழ்வார், "முதல் திருவந்தாதி" - நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம், V.N. தேவநாதன் (பதிப்பு), சென்னை, 1971.

ராதா தியாகராஜன், 'திருவாசகத்தில் அருளியல்' வானதி பதிப்பகம், சென்னை, 1983.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சதாசிவ செட்டியார், கயப்பாக்கம் (பதிப்பு), அகத்தியர் தேவாரத் திரட்டு, கழகம், சென்னை, 1976.

சமயதிவாகர வாமன முனிவர், 'நீலகேசி'யின் பேருரை, கழகம் (பதிப்பு), சென்னை, 1964.

செங்கல்வராய பிள்ளை; V.S.:

(i) தேவார ஒளிநெறி, பகுதிகள் I & II, கழகம், 1963.

(ii) "சம்பந்தர் தேவாரம்", செந்தமிழ்ச் செல்வி, சிலம்பு 23, கழகம், சென்னை, 1944–45.

சிங்காரவேலன், S.:

(i) திருஞானசம்பந்தர் வரலாற்றாராய்ச்சியும், தேவாரத் திறனாய்வும், கழகம், சென்னை, 1969.

(ii) மூவர் தமிழ், மணிவாசகர் நூலகம், மதுரை, 1966.

சோமசுந்தர நாயகர், சித்தாந்த ரத்னாகரம், அப்பாவு செட்டியார் (பதிப்பு), சென்னை, 1907.

சுப்ரமணிய பிள்ளை, K.:

(i) திருஞானசம்பந்த சுவாமிகள் சரித்திரம், கழகம், சென்னை, 1927.

(ii) திருஞானசம்பந்தர் தேவாரம் – இயற்கைப் பொருளழகு, /செந்தமிழ்ச் செல்வி, சிலம்பு 2, 1924–25. பக்கங்கள் 146, 189, 233, 291, 321, 371.

திருமூலர், திருமந்திரம், பகுதிகள் I & II, கழகம் (பதிப்பு) சென்னை, 1969.

திருத்தக்க தேவர், சீவக் சிந்தாமணி, உ.வே.சா. அய்யர் (பதிப்பு), சென்னை, 1957.

திருவள்ளுவர், திருக்குறள், ஸ்ரீ இராமகிருஷ்ணா மிஷன் வித்யாலயா, சென்னை, 1963.

தொல்காப்பியர், தொல்காப்பியம், S. ராஜம், சென்னை, 1960.

உமாபதி சிவாசாரியார்:-

(i) சிவப்பிரகாசம், கழகம், சென்னை, 1969.

(ii) திருவருட்பயன், கழகம், சென்னை, 1969.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(iii) சங்கற்ப நிராகரணம், கழகம், சென்னை, *1969.*

(iv) திருமுறை கண்ட புராணம், குமரகுருபரன் பிள்ளை *(பதிப்பு), ஸ்ரீ வைகுண்டம், 1964.*

(v) இருபா இருபஃது, *கழகம், சென்னை, 1969.*

உமாபதி சிவம், தேவார அருள்முறை திரட்டு, கழகம், சென்னை, *1933.*

உருத்திரங்கண்ணனார், "பட்டினப்பாலை", பத்துப்பாட்டு, உ.வே.சா. ஐயர் (பதிப்பு), சென்னை, *1950.*

திருவியலூர் உய்யவந்த தேவர், திருவுந்தியார், கழகம், சென்னை, *1967.*

திருக்கடவூர் உய்யவந்த தேவர், திருக்களிற்றுப்பாடியார், கழகம், சென்னை, *1967.*

சீனி வெங்கட்டசாமி, மகேந்திரவர்மன், கழகம், சென்னை, *1959.*

வெங்கட்டசாமி நாட்டார், N.M., "ஆளுடைய பிள்ளையார்", 'செந்தமிழ்ச்செல்வி', சிலம்பு, 4, சென்னை, 1926-27, பக்கங்கள் 433, 483, 529.

நாகசாமி, இரா. டாக்டர். பொய்யிலிமாலை, பிருகதீஷ் பதிப்பகம், சென்னை, *1996.*

நாகசாமி, இரா. டாக்டர். சொல்மாலை, தமிழ் ஆர்ட்ஸ் அகாடெமி, சென்னை, *2000.*

சிவகுருநாதப்பிள்ளை, மா. வித்துவான், தவமுதல்வர் சம்பந்தர், திருவரசு புத்தக நிலையம், சென்னை-17, *2003.*

(iii) ஆங்கில நூல்கள்

Balasubramanian, V.T., *A Study of Tirunāvukkarasar's Tevaram,* unpublished Thesis approved for M.Litt. degree, University of Madras, Madras, 1963-64.

Balakrishnan, G.R. "Is Andal a Bridal Mystic?" in *Sri Andal, Her Contribution to Literature, Philosophy, Religion and Art,* Sri Ramanuja Vedanta Centre, Madras, 1985.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

Devasenapathi, V.A., "Nāyanmārs", *Devotional Poets and Mystics,* Part I, Publication Division, Government of India, New Delhi, 1983, pp. 17-25.

Hardy, Friedhelm, *Viraha-Bhakti,* The Early History of Kṛṣṇa Devotion in South India, Delhi, Oxford University Press, Oxford, New York, 1983.

Indira Peterson, *Poems to Śiva*, Princeton Library of Asian Translations, Princeton University Press, 1989.

Inge, W. Ralph, *Christian Mysticism,* The Bampton Lectures, 1899, Methuen and Co., Ltd., 1893, 1912.

Keats, J., "Ode to Nightingale", *The Golden Treasury of the Best Songs, etc.,* Book IV, Oxford University Press, Madras, 1933.

Kingsbury, E. and Philips, K.E., *Hymns of the Tamil Saivite Saints,* Association Press, Calcutta, 1921.

Nilakanta Sastri, K.A., *A History of South India,* II Ed., Oxford University Press, Madras, 1958.

Nirmala Ramachandran, "Classical Dance of the Ancient Tamils", *Proceedings of the First International conference Seminar of Tamil Studies,* International Association of Tamil Research, Kulalumpur, April 1966, pp. 379-388.

Raghavan, A.S., "Alwars", *Devotional Poets and Mystics,* Part I, Publication Division, New Delhi, 1983.

Rajalakshmi, S., *A Critical Study of St. Nanasambandar's Tevaram,* unpublished thesis approved for M. Litt., degree, University of Madras, Madras, 1962-63.

Raman, V.P., "The Music of the Ancient Tamils", *Proceedings of the First International Conference Seminar of Tamil Studies,*

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

Vol. II, International Association of Tamil Research, Kulalumpur, April 1966, pp. 389-402.

Sabaratna Mudaliar, S., *Life of Thiru Gnana Sambanthar* (Tr. from the *Periyapurāṇam* with introduction and notes), C.V. Jambulingam Pillai, Madras, 1920.

Shelley, P.B., "Ode to the west Wind", and "To a Skylark", *The Golden Treasury of the Best Songs,* Book IV, Oxford University Press, Madras, 1933.

Singaravelu, S., "Theevaram Verses in Pallava - Chola Grantha Script", *Proceedings of the Second International Conference Seminar of Tamil Studies,* Vol. II., International Association of Tamil Research, Madras, 1968, pp. 70-79.

Srinivasa Raghavan, A., *Nammalvar,* Sahitya Akademy, New Delhi, second printing, 1983.

Subramanian, V.I., "Landmarks in the History of Tamil Literature", *Proceedings of the Second International Conference Seminar of Tamil Studies,* Vol. II., International Association of Tamil Research, Madras, 1968.



In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இந்த நூலின் ஆசிரியர் பேராசிரியர் சோமசுந்தரம் மதுரையில் 1932ஆம் ஆண்டில் பிறந்தவர்; சென்னை மாநிலக் கல்லூரியில் படித்து எம்.ஏ. பட்டம் பெற்றவர்; சென்னைப் பல்கலைக் கழகத்தில் பிஎச்.டி. பட்டமும் மானிடவியல் துறையில் டிப்ளமோவும் பெற்றவர்.

சென்னை வைணவக் கல்லூரியிலும், சி.டி.எம். கலை, அறிவியல் கல்லூரியிலும் முதல்வராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர்.

தமிழ் இலக்கிய வரலாறு, மனோன்மணீயம் - திறனாய்வு, Tirujnana Sambandhar Philosophy and Religion போன்ற நூல்களைப் படைத்திருக்கிறார். 'ஜெயேந்திரர் இலக்கிய விருது' முதலாவதாக அவருக்கு வழங்கப்பட்டது.

தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம் அவருடைய ஆங்கில நூலுக்கு முதற்பரிசும் கேடயமும் வழங்கிப் பெருமைப் படுத்தியிருக்கிறது.

தமிழக ஆளுனரால் சென்னைப் பல்கலைக்கழக 'அகாடெமிக்' குழுவின் உறுப்பினராகவும் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் செனெட் உறுப்பினராகவும் நியமிக்கப்பட்டவர்.

பல அனைத்துலக, அனைத் திந்தியக் கருத்தரங்குகளில் கலந்து கொண்டு ஆராய்ச்சிக் கட்டுரைகளை வழங்கியிருக்கிறார்.

பல இலக்கிய, ஆன்மிக இதழ்களில் அவருடைய கட்டுரைகளும் தொடர் கட்டுரைகளும் வெளிவந்துள்ளன.

தருமை ஆதீனம் சென்னையில் நடத்திய சைவசித்தாந்த வகுப்புகளில் இரண்டாண்டுகள் பாடம் சொல்லி யிருக்கிறார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

'பெண்ணின் நல்லாளொடு
பெருந்தகை இருந்ததே'